# கவிக்கோவில் ஒன்று

ஆசிரியர்

**வித்வான் ல. சண்முகசுந்தரம்**

*வெளியீடு :*

**சண்முகம் பதிப்பகம்**

5/52, இரண்டாவது தெரு, என்.ஜி.ஓ. காலனி,
சென்னை - 600 044.
தொலைபேசி எண்: 22235891

முதல் பதிப்பு
நவம்பர் - 2004
பதிப்புரிமை - ஆசிரியருக்கே

## *விலை :* ரூ. 100/-

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | கவிக்கோவில் ஒன்று |
| ஆசிரியர் | – | வித்வான் ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பகம் | – | சண்முகம் பதிப்பகம்<br>52/1, இரண்டாவது தெரு,<br>என்.ஜி.ஓ. காலனி,<br>குரோம்பேட்டை, சென்னை - 44. |
| பதிப்பாண்டு | - | நவம்பர், 2004 |
| மொழி | - | தமிழ் |
| பொருள் | - | இலக்கியம், கவி இன்பம் |
| பக்கம் | - | 358 + 6 = 364 |
| விலை | - | ரூ. 100/- (நூறு ரூபாய்) |
| தாள் | - | மைசூர் கிரீம் வோவ் |
| நூல் அளவு | - | 1/8 டெம்மி |
| அச்சு | - | 11 பாயிண்ட் |
| கட்டுமானம் | - | செக்ஷன் |
| அட்டை | - | லாமினேசன் |
| ஒளி அச்சு | - | சாவித்திரி லேசர் பிரிண்டர்ஸ் |
| அச்சகம் | - | **சக்தி பிரிண்டர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ்**<br>தண்டையார்பேட்டை, சென்னை - 21. |

# பொருளடக்கம்


| | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அடித்தது யோகம் கிடைத்தது பக்தி | .... | 1 |
| 2. | உண்மையின் எதிரொலிதான் இன்மை | .... | 43 |
| 3. | கைதட்டிக் கூப்பிடுகிறான் பெருமாள் | .... | 54 |
| 4. | உண்மையைப் பார்ப்பதில் கடவுளுக்கே உத்சாகம் | .... | 57 |
| 5. | அன்பு ஒன்றுபோதும் அதுதான் இறைவனுக்குத் தேவை | .... | 60 |
| 6. | அடடா என்ன ஆனந்தம் | .... | 70 |
| 7. | கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார் கடவுள்.. | | 75 |
| 8. | பொல்லாத ஆள்தான் காஞ்சி வெள்ளைக்கம்பர்.. | | 97 |
| 9. | குடும்ப சகிதம் வந்து உறவாடுவான் | .... | 100 |
| 10. | சும்மா இருக்கமாட்டார் திருவாய்மூர்நாதர் | .... | 112 |
| 11. | அவன் வேண்டுவது அன்பு ஒன்றுதான் | .... | 129 |
| 12. | எப்படி மறக்க முடியும் | .... | 145 |
| 13. | நாமாவது அவனாவது | .... | 153 |
| 14. | உணர்ச்சிதானே சொல்லாக வருகிறது | .... | 164 |
| 15. | வருமுன் காப்பதே வழி | .... | 175 |
| 16. | பக்தி தான் காதல் | .... | 186 |
| 17. | என்ன பேதைமை இது | .... | 193 |

| | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 18. | காதலே பக்தி மயந்தான் | .... | 199 |
| 19. | கடவுளே மாப்பிள்ளைதான் | .... | 225 |
| 20. | அடையாளத்தின் ஆதிக்கம் | .... | 238 |
| 21. | கிளியே சொல்லமாட்டாயா | .... | 244 |
| 22. | கண்ணைத் திறந்து பார்க்கவேண்டாமா | .... | 246 |
| 23. | அன்னங்காள் அன்றில்காள் உங்களைத்தான் நம்பி இருக்கிறேன் | .... | 262 |
| 24. | சும்மாவா கிடைத்தது கண் | .... | 267 |
| 25. | அழியாத செல்வம் அல்லவா இறைவன் | .... | 273 |
| 26. | எனக்குள்தானே இருக்கிறீர் | .... | 278 |
| 27. | இப்பொழுதுதான் வழி தெரிந்ததா | .... | 284 |
| 28. | என்ன தெரியும் எனக்கு | .... | 288 |
| 29. | எப்படி மறக்கும் நா | .... | 299 |
| 30. | வேறு வேலை இல்லையா உங்களுக்கு | .... | 309 |
| 31. | என்னைத் தெரியவில்லையா உமக்கு | .... | 314 |
| 32. | எனக்காகத் தானே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறீர் | .... | 317 |
| 33. | மரணம் உறுதி என்று தெரிந்தால் போதும் மரணபயம் ஓடிவிடும் | .... | 328 |
| 34. | உண்மைதான் உணர்ச்சி, அதுதான் கடவுள் | .... | 333 |
| 35. | பின் குறிப்பு | .... | 349 |
| 36. | பாட்டு முதற்குறிப்பு | .... | 353 |

# காணிக்கை

கோவிலுக்குப் போகிறவழி நெடுகிலும் இரண்டு பக்கமும் கடைகள். கோவிலுக்கு உள்ளும் கடைகள். பூ வியாபாரம், வளையல் வியாபாரம், மஞ்சள், குங்குமம், சாந்து வியாபாரம் என்று மண்டபத்தின் இரண்டு பக்கமும் கடைகள். சுவாமி தரிசனம் செய்தவர்கள், தரிசனம் செய்யப் போகிறவர்கள், ஆடவர், பெண்டிர், குழந்தைகள் என்று கடைகளை மொய்த்திருக்கிறது கூட்டம்.

பக்தர் ஒருவர் கோவிலுக்குப் போகிறார். கடைகள் கூட்டம் எல்லாம் பக்தரின் கண்ணில் விழவே செய்கிறது. கடை இரைச்சல் சந்தை இரைச்சல் மாதிரி காதில் விழுகிறது. ஆனாலும் சந்நிதானத்தை நோக்கியே போகிறார் பக்தர். மனம் அதிலேயே தோய்ந்திருக்கிறது. மூர்த்தி, வழிபாடு இவையே கண்ணில் நிற்கிறது. அடியார்களின் பக்தி, பரவசம், பாடல்கள் இவையே காதில் விழுகிறது. பக்தரின் உள்ளம் ஆனந்தமயமாகிறது. அமைதியாய், நிம்மதியாய் நிறைந்திருக்கிறது மனம். பக்தரின் மனம்தான். காரணம் அங்கே இங்கே என்று அலைப்புண்டு போகிறதில்லை பக்தரின் மனம். இது ஒரு அதிசயம் தானே.

அப்படியே இன்னும் ஒரு அதிசயம். ரசிகமணி டி.கே.சி. (டி.கே. சிதம்பரநாத முதலியார்) அவர்கள் இகலோக வாழ்க்கையில் அழகாய், இனிமையாய் வாழ்ந்தபடியே கவி மூலமாகவும், கலை மூலமாகவும் பரம்பொருளோடு ஒன்றி இருந்தார்கள். கவி, கலை, உண்மை, ஆனந்தம் இவை தவிர வேறு எதன் பின்னும் அவர்கள் உள்ளம் போனதில்லை. அப்படி ஒரு மாசற்ற காட்சி அவர்கள் கண்ட காட்சி.

அந்த மாசற்ற காட்சியில் நம்மையும் திளைக்க வைத்தார்கள்.

கண்கண்ட ஞானியாக இருந்த ரசிகமணி டி.கே.சி. அவர்களுக்கு, ‘கவிக்கோவில் ஒன்று’ என்னும் இந்நூலை காணிக்கையாகப் படைக்கிறேன். அதில் எனக்கு எவ்வளவோ நிம்மதி.

*ஆடல் புரிந்தான்*
*அரன் எனறும், மூவர் தமிழ்ப்*
*பாடல் உகந்தான்*
*பரன்என்றும் - கூடலிலே*
*நன்னரிவா சிக்கு*
*நடைபயிற்றி னான் என்றும்*
*கின்னரிவா சிக்கும்*
*கிளி.*

ஆடல் - திருநடனம். அரன் - சிவபெருமான். உகந்தான் - அனுபவித்து ஆனந்தத்தில் திளைக்கிறான். பரன் - இறைவன். கூடல் - மதுரை. நல்நரிவா சிக்கு - நரியைக் குதிரை ஆக்கி அப்படி ஆக்கிய குதிரைக்கே ஒட்டம் (ரேஷ்) நடைகளைக் கற்பித்தான் இறைவன் என்று ஒரு வரலாறு. கின்னரி - வீணை.

உ

திருவருள் துணை

# அடித்தது யோகம் கிடைத்தது பக்தி

*தவளத் தாமரை*
*தாதார் கோயில்*
*அவளைப் போற்றுதும்*
*அருந்தமிழ் குறித்தே*

புத்தகத்திலோ பள்ளிக்கூடத்திலோ படித்தால் மட்டும் வருமா காதல்! வராது. பக்தியும் அப்படித்தான். படித்தோ, உபதேசம் பெற்றோ வருவதில்லை. மலரில் மணம் சேர்ந்திருக்கிறது. அப்படி இயல்பாகவே மனிதனிடம் சேர்ந்திருக்கிறது பக்தி. காதலும் அப்படித்தான். மனிதனோடு மனிதன்ாய்ச் சேர்ந்து கிடக்கும் பக்திக்கு சமுதாயமும் அதன் பழக்க வழக்கமும் உயிர் கொடுக்கிறது. மூர்த்தி, கோவில், உத்ஸவம் அருளாளர் பாடல் எல்லாம் சேர்ந்து பக்திக்கு உருவம் கொடுக்கிறது.

உயிரோடு ஒட்டிப் பிறந்தவை பசியும், காதலும். எறும்பிலிருந்து யானை வரை, புழுப் பூச்சியிலிருந்து மனிதன் வரை எல்லா உயிர்களுக்கும் பசியும் காதலும் பொது.

ஆனால் மனிதனைப் பொறுத்தவரை பசியும் காதலும் எப்படியோ அப்படியே பக்தியும் உடன்பிறந்த உண்மையாகும்.

மனிதன் வளர வளர - மனிதனுக்கே உரிய வாழ்க்கை உயர உயர பக்தியும் வளர்கிறது, மேலே மேலே உயர்ந்து கொண்டே போகிறது பக்தி.

மனிதனைத் தவிர வேறு எந்தப் பிராணிக்கும் வளர்ச்சி இல்லை, உயர்ச்சி இல்லை. வாழ்க்கை என்பது இல்லை, ஏதோ உயிர் வாழ்தல் தான் உண்டே தவிர வாழ்க்கை என்பது இல்லை.

உற்று, உணர்ந்து, யோசித்து, அனுபவித்து, அனுபவத்தை வெளிப்படுத்தி, ஆனந்தப்பட்டு செயல்படுகிறான் மனிதன். அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம் என்று எதை எதையோ

உண்டாக்குகின்றான். குடும்பம், சமுதாயம் என்று நிர்மாணிக்கிறான். நிர்மாணிக்கிறதைப் பாதுகாக்கிறான். மேலும் மேலும் வளர்க்கிறான்.

மனிதன் என்னும் அற்புதம் இருப்பதே இவற்றில் தான். சிந்தனை, செயல் என்னும் இரண்டில் தான் மனித ரகஸ்யம்.

மனம் என்பது ஒளி ஊற்று, தெய்வ ஒளி ஊற்று. யோசனையும், உணர்ச்சியும் ஊறும் ஞான ஊற்றுத் தான் மனம். பேரண்டம் முழுவதும் கடவுள்தான். கடவுள்த் தத்துவம் என்னும் ஒன்றே ஒன்றுதான்.

சக்திமயமாக இருக்கிறது. கடவுள்த் தத்துவம் அதாவது உணர்ச்சி மயமாகவே இருக்கிறது. மனம் என்கிற உணர்ச்சி மயமாகவே இருக்கிறது கடவுள்த் தத்துவம்.

அந்தப் பேருள்ளத்திலிருந்துதான் - கற்பனையிலிருந்து தான், பிரபஞ்சம் உண்டானது.

அந்த மாமனத்தின் நேர்சாயல்தான் மனிதன். மனித மனம்.

மனிதன்தான், மனிதனின் உள்ளந்தான் கடவுள் கொலு வீற்றிருக்கும் கோவில்.

அப்பர் சுவாமிகள் நேருக்கு நேராகப் பார்க்கிறார் கடவுளை. எப்படி,

''மனத் தகத்தான்'' என்று.

எறும்பு முதல் நட்சத்திரம் வரை எல்லாம் கடவுள் என்றாலும் மனத்தை நோக்குகிறபொழுது அது கடவுளின் தனி அற்புதமாக அல்லவா இருக்கிறது.

அந்த மனந்தான் யோசனையாக - சிந்தனையாக - பகுத்தறிவாக, செயல்படுகிறது.

உச்சி முதல் உள்ளங்கால் வரை மனிதனிடம் நிறைந்திருக்கிறது மனம். அது இல்லாத இடமே இல்லை. தேகம் முழுவதும், உணர்ச்சி முழுவதுமே மனந்தான். அந்த மனந்தான் பார்க்கிறது. கேட்கிறது, பேசுகிறது, நுகர்கிறது, உணர்கிறது. இவ்வளவுக்கும் மேலே ஒவ்வொன்றையும் அது என்ன? இது என்ன? என்று யோசிக்கிறது.

யோசிக்கிறது மனந்தான். அந்த மனத்துக்கோ ஒரு கருவியாக இருக்கிறது மூளை.

உடம்பில் எத்தனையோ தத்துவங்கள். ஆயிரம் ஆயிரம் என்று தத்துவங்கள். பார்க்கிறது, கேட்கிறது, பேசுகிறது, உண்கிறது, உறங்குகிறது, ஜீரணிக்கிறது, நடக்கிறது, நிற்கிறது என்று எத்தனையோ காரியங்கள். அத்தனைக்கும் கண், காது, கை, கால் என்று இருக்கின்றன. ரத்தம், எலும்பு, ஊன் என்றும் இருக்கின்றன.

சரி, இத்தனையையும் கட்டி மேய்க்க - ஒழுங்குபடுத்த - அதனதன் காரியத்தை அது அது நெறிமுறை பிசகாமல் செய்ய மூளை என்று ஒன்றை வைத்திருக்கிறது மனம்.

கடவுளின் கொலு மண்டபம் மனம் மட்டுமல்ல. மனத்தின் பிரதிபலிப்பாகிய மூளையுந்தான்.

அப்பர் சுவாமிகள் கண்ணுக்கு அப்படி எல்லாம் காட்சி கொடுக்கிறது கடவுள்த் தத்துவம்

'மனத் தகத்தான் தலைமேலான்'

தலைமேலான் என்றால் மண்டைக்குள் இருக்கிற மூளை. அந்த மூளையும் இறைவன்தான். மூளை செய்கிற அதிசயம் அதிசயமான அற்புதங்கள் எல்லாம் இறைவன்தான்.

மூளையாக உருவெடுக்கிறதோடு நின்றுவிடவில்லை மனம். யோசித்ததை, சிந்தித்ததை, உணர்ந்து அனுபவித்ததை எல்லாம் வெளிப்படுத்துகிற வார்த்தையாகவும் உருவெடுப்பதும் மனந்தான். அதே மனந்தான்.

அப்படியானால் வாக்கும் கடவுள்தான்.

*மனத்தகத்தான் தலைமேலான்*
*வாக்கின்உள் ளான்*

ஒவ்வொரு சொல்லும் கடவுளின் மணிமண்டபந்தான். இறைவன் கொலுவிருக்கும் கோயில்தான். மொத்தத்தில் கடவுளேதான்.

வார்த்தை அதாவது மொழி என்று ஒன்றில்லை என்றால் பேச்சேது, எழுத்தேது? கவி, இலக்கியம், நாடகம், இசை, நடனம், கலை எல்லாம் மொழியை வைத்தே - மொழியிலிருந்தே விளைகின்றன.

அது மட்டுமல்ல மனிதர் ஒருவரோடு ஒருவர் பழகுவதற்கும், உறவாடுவதற்கும் மொழிதான். கருவி. குடும்பம், சமுதாயம், அரசு, வாழ்க்கை, நெறிமுறை இவற்றுக்கெல்லாம் மொழியே கருவியாக இருக்கிறது.

குடும்பம், சமுதாயம், ஊர், நாடு என்று மனிதன் சேர்ந்து வாழ்ந்தால் தானே வணிகம், தொழில், அரசியல், சட்டம் ஒழுங்கு, முயற்சி, முன்னேற்றம் எல்லாம் பிறக்க முடியும்.

மருத்துவம், பொறிஇயல், கணக்கு, விஞ்ஞானம், மெய்ஞ் ஞானம் எல்லாம் மனிதன் சேர்ந்து வாழ்வதன் மூலந்தான்.

சேர்ந்து வாழ்வதற்கு உற்ற சாதனம் மொழி.

*******

படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறான் மனிதன். மனம், அறிவு, மொழி (கலை, பண்பாடு, வாழ்க்கை) என்றெல்லாம் எழுந்து நிமிர்ந்து வந்திருக்கிறான் மனிதன்.

மாமனிதன்தான் மனிதன். மனம் என்கிற அரிய பெரிய ரத்தினம் அல்லவா, மனிதனோடு மனிதனாகச் சேர்ந்திருக்கிறது. கடவுளும் அந்த மனத்தின் கையில்தான்.

*மனத்தகத்தான், தலைமேலான்,*
*வாக்கின்உள் ளான்,*
*வாயாரத் தன்னடியே*
*பாடும்தொண் டர்*
*இனத்தகத்தான், இமையவர்தம்*
*சிரத்தின்உள் ளான்,*
*ஏழ்அண்டத்(து) அப்பாலான்,*
*இப்பால்செம் பொன்*
*புனத்தகத்தான் நறுங்கொன்றைப்*
*பூவின்உள் ளான்,*
*பொருப்பிடையான் நெருப்பிடையான்*
*காற்றின்உள் ளான்*
*கனத்தகத்தான் கயிலாயத்(து)*
*உச்சிமே லான்*
*காளத்தியான் அவனென்*
*கண்ணுள்ளா னே*

பூமி, வானம், எல்லாம் நிறைந்திருக்கிறவன் தான் இறைவன். ஆனாலும் என் கண்ணை விட்டு அகல்வதில்லை அவன். பார்த்துக் கொண்டே இருக்கிறேன் அவனை.

*'அவன் என் கண்ணுள்ளானே'*

ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர் திருநாவுக்கரசர். சோழநாடு, தொண்டை மண்டலம் இவற்றுக்கு இடைப்பட்ட பகுதி நடுநாடு. இன்றைய விழுப்புரம், கடலூரை ஒட்டிய பகுதி. இந்த நடு நாட்டில் திருமுனைப்பாடி வட்டம் திருவாமூரில்ப் பிறந்து வளர்ந்தவர் திருநாவுக்கரசர்.

இப்பொழுது இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் அமெரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ இருக்கிற ஒருவர் இந்தப் பாடலை 'மனத்தகத்தான் தலைமேலான்' என்னும் பாடலைப் படிக்கிறார். அனுபவித்து பொருளுணர்ந்து படிக்கிறார். படிக்கப் படிக்க அவரை விட்டு அமெரிக்கா கழன்று விடும். அப்பர் சுவாமிகள் காலத்திலிருந்து எத்தனை வருஷங்கள் ஏறி அமர்ந்து அடை சேர்ந்திருக்கின்றன. அத்தனை வருஷங் களும் அப்படி அப்படியே கழன்று விடும்.

காலம், இடம் என்கிற இரண்டையும் - இரண்டு திரைகளையுமே விலக்கிவிட்டு அப்பர் சுவாமிகள் பாடிய பாடலை அனுபவிக்கிறவர் மூன்றும் ஒன்றாகி விடுகிறார்கள். ஏன் கடவுள்த் தத்துவத்தோடேயே ஒன்றாகிவிட முடிகிறது பாடலால்.

காலம் காலமாய் பல்வேறு இடங்களில் உள்ளவர்களையும் ஒருவரோடொருவரை உறவாடவைக்கிறது மொழி. மனிதனை விலங்குபோல் அலையவிடாமல் குடும்பம், சமுதாயம், வாழ்க்கை, ஊர், நாடு என்று சேர்த்து வைக்கிறது மொழி.

மொழிக்கு முதலாக இருக்கிற அறிவும், அறிவுக்கு முதலாக இருக்கிற மனமும் சேர்ந்து மனிதனை உருவாக்குகின்றன.

*******

மனிதனிடமிருந்து மனம் என்பது என்று முளைத்ததோ, அறிவு என்பது என்று தளிர்த்துத் துளிர்த்ததோ அப்பொழுதிருந்தே - அதாவது மொழி என்பது பிறப்பதற்கு

முன்பே செயலில் இறங்கிவிட்டான் மனிதன். தனக்கு வேண்டிய உணவை - தவசதானியங்களை உற்பத்தி பண்ண ஆரம்பித்து விட்டான். உடுத்துவதற்கு ஆடையையும் உண்டாக்கிக் கொண்டான்.

ஒன்றைப் போட்டால் - பூமியில்தான் அந்த ஒன்று பத்தாக, நூறாக அதற்கும் மேலாகவே வருகிறது. அது எப்படி என்று அதிசயப்பட்டான் மனிதன்.

ஒரு சின்னஞ்சிறிய விதையை மண்ணில் ஊன்றி வைத்தால் எவ்வளவு பெரிய மரம் பூமிக்குள்ளிருந்து வருகிறது என்று வியப்புற்றான் மனிதன். அப்படியே தனித்திருப்பதை விட்டுவிட்டு மனைவி என்று ஒரு பெண்ணோடு சேர்ந்து வாழ ஆரம்பித்துவிட்டான்.

ஆணும், பெண்ணும் கணவனென்றும் மனைவி என்றும் சேர்ந்து வாழ குழந்தை, பிறகு குடும்பம், பல குடும்பங்கள் சேர்ந்து வாழும் ஊர், சமூகம், சமுதாயம் என்று படிப்படியாய் உருவாயின.

★★★★★★★

நிலத்தில் விளைகிற மாதிரியே வீட்டிலும் விளைகிறதே என்று அதிசயப்பட்டான் மனிதன். குழந்தை, குழந்தைக்குக் குழந்தை என்று பெருகுகிற விந்தையைப் பார்த்தான் மனிதன்.

அதுமட்டுமல்ல ஒருவர் மேல் ஒருவருக்கு பிரியம் உண்டாகிறது. ஒருவரை ஒருவர் அடித்து விரட்டுகிற உணர்ச்சி இப்பொழுது இல்லை. அப்படியே மூர்க்கத்தனமும் ஓடிவிடுகிறது. ஒருவர் மேல் ஒருவருக்கு அன்பே உண்டாகிறது. அது ஊறுகிறது, பெருகுகிறது. அதனால் பொறுமை பிறக்கிறது. கொடுமைக்குப் பதிலாக கருணையே பிறக்கிறது. கடுகடுப்பில்லை, வெறுப்பில்லை. அருவருப்பில்லை, அவற்றுக்குப் பதில் இன்சொல், அரவணைப்பு, ஆதரவு என்று வந்து செயல்படுகின்றன. வேற்றுமை விலகி ஒற்றுமை வருகிறது. இவை எல்லாம் எங்கிருந்தன. குடும்பம் உண்டானதிலிருந்தல்லவா ஒவ்வொன்றாய் முளைத்து வருகின்றன என்று அதிசயப்பட்டான் மனிதன்.

★★★★★★★

மண்ணுக்குள்ளிருந்து பச்சைப் பசேலென பயிர் முளைத்து வருவது போலல்லவா உறவும், நட்பும், வருகின்றன குடும்ப வாழ்க்கையிலிருந்து என்று அதிசயப்பட்டான் மனிதன்.

மனிதனை இப்படித் தனித்து ஒதுக்கிக் கொண்டுவந்தது, உணவும், உடையுந்தான். உணவையும் உடையையும் உற்பத்தி செய்யும் செயல் திறன்தான் உயர்வுக்குக் காரணம் என்று தெரியவந்தது மனிதனுக்கு.

யோசித்துப் பார்த்திருக்கிறான் மனிதன். கிட்டத்தட்ட எல்லோருக்குமே இந்த நினைப்பு வந்திருக்கிறது. முன்னே பின்னே வந்திருக்கலாம் நினைப்பு. ஆனால் எல்லோரிடத்திலும் யோசிக்கிற பழக்கம் வந்திருக்கிறது.

யோசிக்க யோசிக்க அதிசயம் பெருகி இருக்கிறது. ஆனந்த பரவசத்தையே உண்டாக்கி இருக்கிறது அதிசயம்.

பக்தி என்பது அதுதான். அதிசயமும், ஆனந்தமும் சேர்ந்தது தான்.

பக்தி என்பது ஏதோ வானத்திலிருந்து குதித்து வந்ததில்லை. இந்த மண்ணுலகில் வாழும் மக்களிடமிருந்துதான் வந்தது. அதுவும் மக்களுடையட வாழ்க்கையிலிருந்து - குடும்ப வாழ்க்கையிலிருந்து பிறந்தது பக்தி. சும்மா வந்து விடவில்லை பக்தி. பின்னங்கால்களை தரையில் நன்றாக ஊன்றி முன்னங்கால்களைக் கைகளாக உதறிவீசி அங்கே இங்கே என்று நடந்து, மண்டைக்குள் ஏற்பட்ட பரபரப்பால் தலையைச் சொரிந்து உழவு, தவசம், பருத்தி, கால் நடை (பசு, காளை) என்று எல்லாவற்றோடும் பழகி, செயல்பட்டு மனமும் யோசனையும் வளர வளரத் தான் பிறந்தது பக்தி.

நிலத்தில் உறவாடியது போலவே குடும்பத்திலும், சமூகத்திலும் உறவாட உறவா'டத்தான் வந்தது பக்தி.

எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகள், பல பல ஆயிரம் ஆண்டுகளாகவே அனுபவம் ஒளி கொடுக்க ஒளி கொடுக்க பக்தி பிறந்தது.

அதிசயத்திலிருந்தும் ஆனந்தத்திலிருந்துந்தான் பக்தி பிறந்தது, வளர்ந்தது, அச்சத்திலிருந்தோ, துன்ப துயரத்தி லிருந்தோ பிறக்கவில்லை பக்தி.

அறியாமையை வென்று, சோம்பலை வென்று, பயத்தை வென்று, துன்ப துயரங்களை வென்று வாழ வழிகாட்டுகிற ஒளியையே கடவுள் என்று வழிபட்டு வந்திருக்கிறார்கள் மக்கள்.

எங்காவது பயத்துக்கோ, அவநம்பிக்கைக்கோ, துன்பதுயரத்துக்கோ கோவில் கட்டி வழிபாடு நடத்துகிறதுண்டா உலகில்?

படிப்படியாக, மெள்ள மெள்ளத்தான் மனிதன் முன்னேறி வந்திருக்கிறான். பல ஆயிரம் வருடங்களாகத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது முன்னேற்றம். இன்னும் முன்னேறிக் கொண்டே இருக்கிறான் மனிதன். கொஞ்சம் கொஞ்சமாக - அடிமேல் அடி எடுத்துவைத்தே ஓங்கி உயர்கிறது முன்னேற்றம்.

மனிதன் முன்னேறுகிறான் என்றால் மனம் அதாவது சிந்தனை, யோசனை உயர்கின்றன. அறிவு விரிவடைகிறது. உணர்ச்சிகளும் புதுப்புது ஒளிபெற்று மிளிர்கின்றன. ஏன் மனிதனுடைய தேகமே தோற்றத்திலும், செயலிலும் திருந்தித் திருந்தி மேன்மை பெற்றே வருகிறது. பண்பாடு, கல்வி, கலை, சமயம், வழிபாடு, எல்லாமே தெளிவு பெற்று உறுதி அடையவே செய்கின்றன.

பக்தியும் அப்படியே நாளும் பொழுதும் அடிமேல் அடிவைத்து வளர்ந்தே வருகிறது, வந்திருக்கிறது. மனித வளர்ச்சியோடு சேர்ந்தே வளருகிறது பக்தியும்.

★★★★★★★

இன்னதென்று தெரிய முடியாதபடி ஒன்று இருக்கிறது என்றுதான் முதலில் நினைத்தான் மனிதன். அதுதான் பூமிக்குள்ளிருந்து தவசங்களாய் விளைகிறது. வானிலிருந்து மழையாய்க் கொட்டுகிறது. பசுவிலிருந்து பாலாய்ச் சொரிகிறது. பெண்ணின் வயிற்றிலிருந்து குழந்தையாய் வருகிறது என்று நினைத்தான் மனிதன். நம்பவே செய்தான்.

அந்த நம்பிக்கை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் முட்டியும், மோதியும், பம்மியும், பாய்ந்தும், வளைந்தும், நெளிந்தும், நிமிர்ந்தும், பணிந்தும் செம்மை பெற்றிருக்கின்றது. திருந்தித் திருந்தி உருப்பெற்றிருக்கிறது. இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு முன்பே தனிக்கென்று ஒரு

தெளிவான உறுதியான வடிவத்தையே பெற்றிருக்கிறது தமிழ்நாட்டில் பக்தி.

ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள். அவர் காலத்திலேயே பக்திக்கு அழியாத்தன்மை - தெய்வ உருவமே கிடைத்துவிட்டது.

கடவுள் ஒருவர். அவரே எங்கும் நிறைந்திருக்கிறார். அணுவிலிருந்து அண்டம், அகண்டம் எல்லாம் அவர்தான். கடவுள்தான் பிரபஞ்சமாக - பிரபஞ்சத்தில் உள்ள கோடான கோடி தத்துவமாக விளைந்திருக்கிறார். சமுத்திரத்தில் அலை உண்டாவது போல் கடவுளிடத்திலேயே எல்லாம் உண்டாகின்றன. சமுத்திரத்திலேயே அலை ஒடுங்கி விடுவதுபோல் கடவுளிடமே எல்லாம் ஒடுங்கி விடுகின்றன.

நான் என்பதும், எனது என்பதும் அறியாமைதான். இறைவன் ஒருவனே உண்மை'' இப்படிப் பழுத்துக் கனிந்து ஒளி வீசிவிட்டது உண்மை. அதுதான் பக்திக்கு உருவம்.

இதோ அப்பர் சுவாமிகளின் திருவாக்கு.

*நின்னாவார் பிறர் இன்றி*
*நீயே ஆ னாய்,*
*நினைப்பவர்தம் மனத்துக்கோர்*
*வித்தும்ஆ னாய்,*
*மன்ஆனாய் மன்னவர்க்கோர்*
*அமுதம்ஆ னாய்,*
*மறைநான்கும் ஆனாய் ஆ(று)*
*அங்கம்ஆ னாய்,*
*பொன்னானாய் மணிஆனாய்*
*போகம்ஆ னாய்,*
*பூமிமேல் புகழ்தக்க*
*பொருளேஉன் னை*
*என்னானாய் என்னானாய்*
*என்னில்அல் லால்*
*ஏழையேன் என்சொல்லி*
*ஏத்துகே னே.*

பாடலைப் பாடப்பாட பக்தியின் உருவம் கண்முன் வந்து நிற்கும். தெள்ளத் தெளிந்த உண்மையின் தெளிவே வயிரம் பாய்ந்து தகதக என்று பிரகாசிக்கிறது பாடலில். அந்த ஒளிதானே பக்தியின் உருவம்.

இப்படி ஒரு பழுத்த அனுபவம் தமிழ்நாட்டில் தான். வேறு எங்கும் இப்படி இருப்பதாகத் தெரியவில்லை. என்ன தெளிவு, என்ன நிச்சயம், அப்படி எல்லாம் தெளிவும் நிச்சயமும் உண்டானால் தானே எளிமை வரும்.

★★★★★★★

## குடும்ப வாழ்க்கையே தவம், யோகம், ஞானம் எல்லாம்

உண்மையை, பேருண்மையைப் பார்க்கவும், அதனோடு பழகவும், பழகிப்பழகி அனுபவிக்கவும் கொடுத்து வைத்தவர்கள் முன்னோர்கள். அதாவது தமிழ் மக்கள். யாதொரு சிரமமும் இல்லாமல் இயல்பாகவே உண்மையைப் பார்த்து உணர்ந்தவர்கள் அவர்கள்.

காட்டுக்குப் போய்த் தவம் இருக்கவில்லை அவர்கள். சடை முடி வளர்க்கிறேன், தாடி வளர்க்கிறேன், ஹடயோகம் பண்ணுகிறேன், கண்ணை மூடுகிறேன், காதைப் பொத்துகிறேன். தீயை வளர்க்கிறேன். நீரில் நின்றபடியே மந்திரங்களை உச்சரிக்கிறேன். மௌனவிரதம், உண்ணாநோன்பு, துறவு, கடுந்தவம் என்று எதிலும் சிக்கவில்லை அவர்கள்.

வீட்டிலிருந்து கொண்டே, உழுது பயிரிட்டு, உண்டு களித்து உல்லாசமாய் வாழ்ந்து கொண்டே, அன்போடும் ஆதரவோடும் கணவனும் மனைவியுமாய் மங்கலவாழ்வு வாழ்ந்து கொண்டே தாய், தந்தையர், குழந்தை, உற்றார், உறவினர், ஆன்றோர், சான்றோர், பசு, நந்தவனம் என்று பேணி உபசரித்துக் கொண்டே சிரித்து, மகிழ்ந்து நிம்மதியாக வாழ்ந்தபடியே உண்மையைக் கண்டவர்கள் முன்னோர்.

★★★★★★★★

உலகம், ஆன்மா என்று விளைந்தால் (படைத்தால்) மாத்திரம் போதாது கடவுள்த் தத்துவம். படைத்தவற்றைக் காப்பாற்ற வேண்டும். கண்ணும் கருத்துமாய் இருந்து காப்பாற்ற

வேண்டும், அதற்குக் கருணை வேண்டும், எல்லையற்ற அருளும் நீதியும் நிறைந்த அன்பு பொங்க வேண்டும்.

இவ்வளவும் எங்கிருந்து வரும். சூனியத்திலிருந்து வருவதில்லை ஒன்றும். கணவன், மனைவி, குழந்தை என்று குடும்ப வாழ்க்கையே வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான், இல்லறம் என்னும் நல்லறத்தைக் கைப்பிடித்து வாழ்ந்தால்தான் அன்பு, பொறுமை, தியாகம் எல்லாம் வரும்.

கடவுள் அப்படியே கணவன் மனைவியாய் உமையொரு பாகனாய் வாழ்கிறார்.

குடும்பந்தான் கோயில். அன்பும் பண்புந்தான் கடவுள். குடும்பம் இல்லை. எல்லாம் சந்நியாச மயம் என்றால் ஒன்று உலகம் பாலைவனம் ஆகும். இல்லை என்றால் அனாதை இல்லங்களாகவே இருக்கும் மனித இனம்.

மனிதப் பண்புள்ள மனிதர்களே இல்லை என்றால் பிறகு கோயிலேது, குளம் ஏது, சாமி ஏது, பூதம் எது?

உண்மையாவது, பொய்யாவது, ஞானம், அஞ்ஞானம் ஒன்றுமே இல்லைதான்.

மங்கலம் பொங்க எல்லாம் நிறைந்து உலகம் இருக்க வேண்டும் என்றால் உயிரினம் வாழையடி வாழையாக தொடர்ந்து வர வேண்டும். எப்படி ஆணென்றும், பெண்ணென்றும் தனித்தனியே ஒதுங்கிப் போய்விடாமல் கணவன் மனைவியாய் குடும்பம் குடும்பமாய் கூடி மகிழ வேண்டும். அதில் ஆனந்தம் பெற வேண்டும்.

ஆறறிவு படைத்த மனிதனோ இன்பம் பெறுவதோடு நின்று விடாமல் குடும்ப வாழ்க்கையே நடத்த வேண்டும். இனி, ஏதோ அவசியத்தை முன்னிட்டு ஒருவர் இருவர் சந்நியாசத்தை மேற்கொள்ளலாம்.

அதுவும் மற்றவர்கள் - இல்லறத்தார் நிம்மதியாக அமைதியோடு வாழ வேண்டும் என்பதற்குத்தான்.

பொது நலன் கருதி தன்னலத்தை விட்டுக் கொடுக்கும் வீரம் அது.

அதற்காக எல்லோரும் சந்நியாசம் வாங்கிவிடக் கூடாது. பிறகு சந்நியாசத்துக்குப் பொருளே இருக்காது. எல்லாம் விபரீதம் ஆகிவிடும்.

★★★★★★★

உண்மை என்றால் மேலே காட்டிய உண்மைதான்.

கடவுளே மனைவி மக்களோடு குடும்பம் நடத்துகிறார் என்றனர் நம் முன்னோர். அதற்காகவே கோயில் கட்டினார்கள். கடவுளுக்குக் கல்யாணம் திருக்கல்யாணம் பண்ணி வைத்தார்கள். ஊஞ்சல், நலுங்கு, ஊடல், தூது, கூடல், பள்ளியறை, திருப்பள்ளி எழுச்சி என்றெல்லாம் விழா நடத்தி இருக்கிறார்கள்.

கோமாளித்தனமாக அதை இதைப் படித்துவிட்டு துறவறந்தான் பேரின்பம். இறைவனை அடைய அதுதான் வழி என்று சமுதாயத்தையே குழப்பி விடுவார்கள் சிலர். அதனால் பெருங்கேட்டுக்கு உள்ளாகும் சமுதாயம். இந்த அவலம் ஏற்படக் கூடாது என்பதற்காக கடவுளே இல்லற மகிமையை எடுத்துக்காட்டுவதாக ஒரு நம்பிக்கையை உண்டு பண்ணி வைத்திருக்கிறது. எது? கோவிலும், கோவிலில் நடக்கும் திருக்கல்யாணமும்! எல்லாம் வல்ல இறைவனே - சிவபெருமானே நம்மைப் பார்த்து ''அன்பர்களே'' குடும்ப வாழ்க்கை தான் வாழ்க்கை. அதுதான் பக்தி. அதுதான் ஆனந்தம். அதில் தான் பேரின்பம் அதாவது வீடுபேறு என்பதே அதுதான். என்கிறார்''. மேலும் அவரே சொல்கிறார்,

''இல்லறம் சிற்றின்பம். துறவறந்தான் பேரின்பம் என்று கிறுக்குக்கு ஆளாகி விடாதீர்கள். என்னையே பாருங்கள். என்னோடு சேர்ந்திருக்கும் தேவியைப் பாருங்கள். அருமை மனைவியோடு, இணைபிரியாமல் ஒன்றாகவே இருக்கிறோம் யாம்! மாதொருபாகனாய், அம்மையப்பனாய் சேர்ந்தே இருக்கிறோம்''

இப்படி நமக்கு அவர் வழிகாட்டி நம்மை வாழ வைக்கிறார் கருணாமூர்த்தியாகிய கடவுள். விழாக்கள் எடுத்தே கோயிலில், வழிபாட்டில் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம் இந்த உண்மையை. வருமுன் காப்போனாய் முன் கூட்டியே வாழும் நெறியை வகுத்து வைத்திருக்கிறோம். இவ்வளவு கட்டுக்கோப்பும் தமிழ்நாட்டில் தான். ஆம், தமிழர்களாகிய நம்மிடந்தான்.

இனி, திருஞானசம்பந்தப் பெருமானோ "எங்கே இருக்கிறார்? கடவுள் என்றால். "இதோ இந்தத் திருவை யாறிலேயும் அவர் இருக்கிறார்" என்று பதில் சொல்கிறார். 'எப்படி இருக்கிறார் அவர்' என்று திருப்பிக் கேட்டால் "எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறார். அம்மையப்பனாய், மாதொருபாகனாய் நம்மைப் போலவே குடும்ப வாழ்க்கை யனாய் இருக்கிறார் கடவுள்" என்கிறார் சம்பந்தப் பெருமான். யாராவது வழிதவறிப் போனால் தன்னையே காட்டுகிறார். உமையொரு பாகனான திருக்கோலத்தையே (விகிர்தன்) "இதோ பார், இதுதான் உண்மை" என்று காட்டுகிறார்.

"இயல்பான மனிதர் (மண்ணவர்) ஆனாலும் சரி பூசை, புனஸ்காரம், மந்திரம், தந்திரம் என்று அலைகிறவர் (வானவர்) ஆனாலும் சரி. யாராக இருந்தாலும் அவர்கள் வழி பிசகிப் போகக் கூடாது. தப்பித் தவறி ஒருவரோ, இருவரோ வழிதவறிப் போகிறார் என்றால் அந்த வழியை மறித்துவிடுவார். பெருமான். மறித்ததோடு நிற்கமாட்டார் பெருமான். "ஒழுங்காக வாழ். என்னைப்போல் வாழ். உண்மையோடு ஒத்துவாழ். கற்பனையில் மிதக்காதே" என்று தன்னையே காட்டி தடுத்தாட் கொள்வார்.

இப்படி விளக்கமாகவே சொல்கிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

இதோ ஞானசம்பந்தரின் திருவாக்கு

*வேந்தாகி விண்ணவர்க்கும்*
*மண்ணவர்க்கும் நெறிகாட்டும்*
*விகிர்தன்ஆ கி,*
*பூந்தாம நறும்கொன்றை*
*சடைக்கணிந்த புண்ணியனார்*
*நண்ணும்கோ யில்:-*
*காந்தாரம் இசைஅமைத்துக்*
*காரிகையார் பண்பாடக்*
*கவினார்வீ தி*
*தேம்தாம்என்(று) அரங்கேறிச்*
*சேயிழையார் நடம்ஆடும்*
*திருவையா றே*

மேளதாள முழக்கத்தோடு ஆடலும் பாடலுமாய் ஆனந்தத்தில் மிதக்கிறது திருவையாறு. ஏன் இத்தனை உத்சாகம் என்றால் இறைவனின் திருமண விழாதான். விழாவை அனுபவிக்கிற ஆனந்தம் தான்.

திருவையாறு போலவே தமிழகம் முழுவதும் பட்டி தொட்டி, பேரூர், நகர் எங்குமே, கோயில்தோறும் புதுமாப்பிள்ளையும் புதுப் பெண்ணுமாய் காட்சி கொடுக்கிறான் இறைவன். மாதொரு பாகனாய், அம்மையப்பனாய் (விகிர்தன் ஆகி) குடும்பம் நடத்துகிறான் பெருமான்.

எவ்வளவு கருணை இறைவனிடம். அவ்வளவு கருணையையும் எங்கிருந்து பார்த்தார்கள் நம்மவர். பூமியிலருந்தும், பூமியில் விளைகிற விளைச்சலிலிருந்தும் பார்த்தார்கள். மனைவி, மக்கள் என்று நடத்துகிற குடும்ப வாழ்க்கையிலிருந்தும் பார்த்தார்கள்.

கண்ணை மூடிக் கொண்டு காட்டுக்குள் அமர்ந்து தவம் செய்து பார்க்கவில்லை. மனிதவாடையே உதவாதென்று ஓடி ஒளிந்து பார்க்கவில்லை. மனிதர்களாக இருந்தே, மனிதர்களோடு இருந்தே, வாழ்க்கையோடு உருண்டு புரண்டு கண்டெடுத்த மாணிக்கங்கள்தான் அத்தனையும்.

★★★★★★★

## வேளாண்மையில் இருக்கிறது விளைச்சல்

உலகில் முதல் முதல் உண்டான மனிதன் யாரென்று நமக்குத் தெரியாது. ஆதிக்கும் ஆதியாய் உண்டானவன் தமிழனா, மங்கோலியனா, ஆப்பிரிக்கனா என்று கேட்டால் இன்னார்தான் என்று அதற்குப் பதில் சொல்ல நம்மால் முடியாது. ஆனால் முதல் முதல் நிலத்தை உழுது பயிரிட்டவர் யார். தானிய தவசங்களை உற்பத்தி பண்ணியவர் யார். பருத்தியைப் பயிரிட்டு பருத்தியிலிருந்து ஆடையை உண்டாக்கிக் கட்டியவர் யார். ஆடு, மாடுகளைப் பேணி அவற்றை அன்போடு மதித்து வளர்த்தது யார். பால், தயிர், நெய் என்று பசுவிலிருந்து படைத்து அவற்றை உயிருக்குயிரான சத்தாக முதல் முதல் உணவில்ச் சேர்த்துக் கொண்டவர் யார். பசு, காளை, ஆடு இவைகளின் சாணத்தையும் கோமயத்தையும் நிலத்துக்கு உரமாக - அன்னை பூமாதேவிக்கு

உணவாகக் கொடுத்தது யார். அதன் மூலம் விளைச்சலை விருத்தி பண்ணியவர் யார். அது காரணமாகவே சாணம், கோமயம் இவற்றைப் புனிதமாக மதித்தவர் யார். பால், தயிர், நெய், சாணம், கோமயம் என்கிற ஐந்தையும் கொடுக்கும் பசுவை தெய்வமாக மதித்து வழிபட்டவர் யார், காளையையும் அப்படியே மதித்துப் போற்றியவர் யார் என்று வரிசையாக எத்தனை கேள்வி கேட்டாலும் அத்தனைக்கும் நம்மால் பதில் சொல்ல முடியும். ஒரே ஒரு பதில் மூலமாகவே அத்தனை கேள்விகளுக்கும் விடையளிக்க முடியும். அப்படி அது என்ன பதில் என்கிறீர்களா?

''எல்லாம் தமிழன். அவ்வளவும் தமிழனே'' என்பதுதான் அந்தப் பதில்.

உழவு என்பதை முதல் முதல் கண்டவன் தமிழன். உழவின் மூலம் தானிய தவச விளைச்சலை உண்டாக்கியவனும் தமிழன். தானிய தவசங்களைச் சமைத்து முதல் முதல் உண்டு ருசி பார்த்தவனும் தமிழன்.

உழவையே தொழிலாக அதையே வாழ்வாகக் கொண்டான் தமிழன். அந்த உழவுதான் குடும்ப வாழ்க்கையை உண்டாக்கியது.

குடும்பம், சமூகம், சமுதாயம் இவ்வளவும் முதல் முதல் உருவானது தமிழ் மக்களிடந்தான்.

குடும்பம் உருவாவதற்கு மட்டும் மூல நாயகனாக இருக்கவில்லை தமிழன். தானிய உணவு மூலம் உணவில் சைவ முறை ஒன்றையே உருவாக்கி உலகுக்கு வழங்கிவயனும் தமிழன்தான்.

உணவு, உடை, குடும்பம், சைவம் எல்லாம் சேர்ந்து பக்தியை வளர்த்திருக்கிறது. ஒரு பண்பாடாகவே, கலையாகவே பக்தியை உருவாக்கியிருக்கிறது சைவம்.

பசுவை வெறும் கால்நடையாகவா பார்க்கிறது சைவம். சிவபெருமானாகவே பார்க்கிறது. சிவபெருமானையே பசுவின் மடிக்குள் வைத்துத் திருமஞ்சனம் ஆடும் ஞானக் கொழுந்தாகப் பார்க்கிறது சைவம். காளையையோ ஞானமாகவே பார்க்கிறது சைவம். சகல சக்திகளுக்கும் ஆதாரமாகிய மனமாகவே - மாமனமாகவே காளையைப் பார்த்துப் பரசப்படுகிறது சைவம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல் ஒன்றைப் பார்க்கலாம்.

எல்லாம் வல்ல இறைவனை என்ன சொல்லிக் குறிப்பிடுகிறார்.

'மங்கை பங்கினன்' என்றே குறிப்பிடுகிறார் சுந்தரர். இறைவனோடு இறைவனாய்ப் பங்கு கொண்டு அமர்ந்திருக்கும் மங்கை எப்பேர்ப்பட்டவள். அவள் வாய் திறந்து பேசினால் அது இசையாகவே இருக்கும். ஒவ்வொரு சொல்லும் தோடி, வசந்தா, சங்கராபரணம் என்னும் ராகங்கள் தான். மதுரம் சொட்டச் சொட்ட நெளிந்தும் வளைந்தும் வரும் புதிது புதிதான பண்கள் தான் மங்கையின் சொல்.

*"பண்ணின் நேர் மொழி*
*மங் கை*
*பங்கினன்"*

மங்கையைப் பங்காக வைத்திருக்கும் பெருமான் தான் பசுவுள், அதன் மடியுள் ஏன் பால், தயிர், நெய், சாணம், கோமயம் எல்லாவற்றிலும் அமர்ந்திருக்கிறான். உகந்து புகுந்து பசுவோடு பசுவாய்க் கொலுவிருக்கிறான் பெருமான்.

*"பசு உகந்(து) ஏறி"*

இனிப் பாடலை முழு உருவில் பார்க்கலாம்.

*விண்ணின் மாமதி*
*சூ டி*
*விலையில் கலன் அணி*
*விம லன்,*
*பண்ணின் நேர்மொழி*
*மங் கை*
*பங்கினன், பசுஉகந்*
*தே றி,*
*அண்ணல் ஆகிய*
*ஆ னைக்*
*காவுடை ஆதியை*
*நா ளும்*
*எண்ணும் ஆறுவல்*
*லார் கள்*
*எம்மையும் ஆளுடை*
*யார் ரே*

பசுவையும் காளையையும் தெய்வமாகவே - முழு முதல்க் கடவுளாகவே பார்த்திருக்கிறார்க் தமிழர்கள். பசுவும் காளையும் இல்லை என்றால் உழவேது, விளைச்சலேது? உணவுக்கு எங்கே போவது, உடைக்கு எங்கே போவது? பால், தயிர், நெய் எங்கிருந்து வரும். இவை இல்லை என்றால் வாழ்வேது, வாழ்க்கை ஏது? நினைத்துப் பார்க்க முடியுமா அந்த அந்தகார இருளை?

பசுவும் காளையும் வாழ்க்கையோடு வாழ்க்கையாய், தமிழர்களின் ஆன்ம தத்துவத்தோடேயே உணர்ச்சிமயமாக நிறைந்திருக்கின்றன.

ஆதியில் பசு, காளை இரண்டையும் தெய்வமாக வணங்கி வழிபட்டார்கள் தமிழர்கள். ஆன்மாவையே பசு(ஆ) என்று தானே சொல்லி இருக்கிறார்கள். ஆவுடை நாயகம், ஆவுடையப்பன் என்றெல்லாம் பெயர் இறைவனுக்கு. ஆ என்பது பசு. அதாவது ஆன்மா.

'ஆ' என்பதுதான் 'கோ' என்று உருமாறியது, மகாவிஷ்ணுவை கோபாலன் என்றும் அவனே கண்ணனாக அவதாரம் எடுத்து பசுவை மேய்க்கிறான் என்றும் அழகாகச் சொல்லி இருக்கிறார்கள் முன்னோர்.

ஆவுடையார் என்பது போல ஆவுடை நாயகி, கோமதி என்றெல்லாம் இறைவியின் திருநாமம்.

★★★★★★★

வாழ்க்கையையே, வாழ்க்கையில் நிறைந்திருக்கும் உண்மையையே, பக்தியாகச் சமைத்திருக்கிறார்கள் தமிழர்கள்.

இல்லை என்றால் பசுவையும், காளையையும் கடவுளாக வழிபட முடியுமா.

கோயில்தோறும் கொடி மரத்தை ஒட்டி இறைவனைப் பார்த்தவண்ணமாகக் காளை (நந்தி) இருக்கும். அது மட்டுமா? கோயிலின் மதில்ச் சுவர், நந்தா விளக்கு, கண்டாமணி ஒவ்வொன்றிலும் நந்தி ஏறி அமர்ந்திருக்கும். பெரிய பெரிய கோயில்களும் சரி, சிறிய கோயில்களும் சரி நந்தி இருக்கும். இல்லை என்றால் (சிவன்) கோவில் இல்லை. வழிபாடில்லை.

★★★★★★★

இனி, வாழ்க்கை தானே செல்வம். நிம்மதியான, அமைதியான வாழ்க்கை தான் ஆனந்தம். அந்த ஆனந்தந்தான் தெய்வகடாட்சம். பெரும் பேறு என்பது அதுதான்.

இனி, இறைவனோ செல்வத்தில் எல்லாம் மேலான பெருஞ்செல்வம். உண்மையான தொண்டனுக்கு, பக்தனுக்கு இறைவனை விட வேறு எதுதான் செல்வமாக இருக்கமுடியும். செல்வத்துள்ச் செல்வம் என்றால் இறைவன் தான் பக்தனுக்கு.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நனிபள்ளி என்னும் கோயிலுக்கு வந்தார். சுவாமியைப் பார்த்தார்.

பார்க்கப் பார்க்க உள்ளம் கரைந்து உருகியது சுந்தரருக்கு. புதுப்பிறவியே கிடைத்துவிட்டது சுந்தரருக்கு.

எங்கும் பரந்து நிறைந்த இறைவனே தன்னுள் வந்து கலந்ததாக இருக்கிறது. அந்த ஆனந்தக் களிப்பில் ''என்னுடைய பாக்கியம் (நான் பெற்றபேறு) என்னுடைய செல்வம், இதோ, இதோ என்று கூவுகிறார் சுந்தரர்.

'நானுடை மாடு எம்பிரான்' என்றே சொல்கிறார். காளை, பசு என்னும் பொருள்தானே மாடு என்பது. அந்த மாடு என்னும் சொல்லால்தான் தான் பெற்ற பெரும்பேற்றைக் குறிப்பிடுகிறார். அதுமட்டுமா ஆனிடை ஐந்து அமர்ந்தான் என்றே குறிப்பிடுகிறார் எல்லாம் வல்ல இறைவனை.

*வானுடை யான்பெரி*
*யான், மனத் தானும்*
*நினைப்பரி யான்,*
*ஆனிடை ஐந்தமர்ந்*
*தான், அணு வாகி ஓர்*
*தீயுருக் கொண்(டு)*
*ஊனுடை இவ்உட*
*லம்ஒடுங் கிப்புகுந்*
*தான், பரந் தான்;*
*நானுடை மாடெம்பி*
*ரான்நண்ணும் ஊர்நனிப்*
*பள்ளிய தே.*

நானுடை மாடு என்றால் என்ன பொருள்? என்னுடைய செல்வம் என்று தானே பொருள். அதாவது 'நான் பெற்ற பேறு' என்பதுதான் கருத்து.

★★★★★★★

## முதல்க் கோவில் காடும் மரமுந்தான்

ஆதியில் தமிழகம் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளும், ஏன் உலகில் இருக்கும் நாடுகள் அவ்வளவும் காடுகளாகத்தான் இருந்தன. உலகைச் சுற்றி சமுத்திரம். அப்படியே நாடுபூராவும் காடு காடாகவேதான் இருந்தது நாடு. ஓங்கி உயர்ந்த மலை, மலைச் சரிவிலிருந்து காடுகள், ஒரே வன வனாந்திரங்கள். இடை இடையே கொஞ்சம் புன்செய் நிலம், பள்ளத்தாக்கு. அவற்றையும் தாண்டினால் பழையபடி காடு, கடற்கரை வரை ஒரே காடுதான்.

மனிதனுக்கு அறிவு முளைக்கிறவரை காட்டின் அருமை, அழகு, அற்புதம் ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை. மனம் என்கிற ஒன்று உடலிலிருந்து தோன்றி அறிவு சுடர்விடச் சுடர்விட காடு, மரம், கொடி, புஷ்பம், இலை எல்லாம் அழகழகாய்த் தெரிந்தன. ஒவ்வொன்றையும் தெய்வமாகவே மதித்தான் மனிதன். அற்புதம் அற்புதம் என்றே மதித்தான் மனிதன்.

முதல் முதல் காடுகளில் தான் குடி இருந்தான் மனிதன். அங்குதான் பயிரிட்டான். மாடு கன்றுகளை வைத்து வளர்த்தான். கோவில் கட்ட சாமி கும்பிட்டதும் அங்குதான். காட்டில்தான்.

கோவில் என்றால் இப்பொழுது நாம் பார்க்கிறோமே மயிலாப்பூர் கபாலீஷ்வரர் கோவில், காஞ்சீபுரம் வைகுண்டப் பெருமாள்கோவில், பழனி முருகன் கோவில், கன்யாகுமரியில் அம்மன் கோவில் என்று இவைபோல் பெரிய அளவிலான கோவில் என்று நினைக்கக் கூடாது.

நம் முன்னோர் காட்டில் கட்டி வழிப்பட்ட கோயில் ஒவ்வொன்றும் சின்னச் சின்னக் கோயில்தான். ஒரே ஒரு அறை (மணிமண்டபந்தான்). அதுதான் கருவறை, அதுதான் மகா மண்டபம், மணிமண்டபம், நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபம் எல்லாம் கொண்ட கோவில். வெளிமதில், உள்மதில்,

கோபுரம், தெப்பக்குளம் (தீர்த்தம்) எல்லாம் அந்த ஒரே மண்டபந்தான். அதில் ஒரு பீடம் - சிறுபீடம் அமைத்து அதில் அம்மனையோ, சுவாமியையோ பிரதிஷ்டை பண்ணி இருக்கும். குளித்து முழுகி ஆணும் பெண்ணுமாய் பக்தர்கள் வருவார்கள். பக்தி ஆவேசத்தோடேயே வருவார்கெள். மூர்த்தியைத் திருமஞ்சனம் ஆட்டுவார்கள். பூவம் இலையும் சார்த்துவார்கள். கண்குளிரக் காண்பார்கள். ஆடுவார்கள், பாடுவார்கள். உள்ளம் உருகி வணங்குவார்கள். வழிபடுவார்கள்.

நேர்த்திக் கடன் உள்ளவர்கள் பொங்கலிடுவார்கள். குலவை போடுவார்கள். கோவிலைச் சுற்றிச் சற்றி வருவார்கள். விழுந்து வழுந்து கும்பிடுவார்கள்.

மண்டபம் (கோவில்) மண்ணால்தான் கட்டி இருக்கும். மண்டபத்துக்கு நிலை, கதவு என்று ஒன்றும் கிடையாது. பூட்டு, சாவி, காவல்க்காரன் எதுவும் இல்லைதான்.

மண்ணால் மறித்துக் கோவில் கட்டி இருப்பது கூட ஒன்றிரண்டு இடங்களில் தான். பல இடங்களில் காட்டில் ஒரு சிறு இடத்தை வளைத்து ஒரு மரத்தின் அடியில்தான் பீடம் வைத்திருக்கும். சாமி இருக்கும்.

ஆனாலும் பக்தியோ எல்லையில்லாததாய் வானுக்கும் பூமிக்குமாய் நிறைந்திருக்கும்.

இது சம்பந்தமாக ஒரு பாட்டு. பழம் பாட்டுத்தான். மிகமிகப் பூர்வமான பாட்டு. அந்தப் பாட்டும், பாட்டுக்கு ரசிகமணி, டி.கே.சி. கொடுக்கும் விளக்கமும் இதோ வருகிறது.

''வேடர்கள் காட்டுக்குள் பராசக்தியை வழிபடுவதற்காக ஒரு கோயில் அமைத்திருக்கிறார்கள். சிறிய இடத்தை வளைத்துத்தான் கோயில். கோயிலுக்குள் காணும் காட்சிகளை ஆனந்தத்தோடு அனுபவிக்கிறார் பக்தர்.

''புன்னை மரம் (நாகம்) இருக்கிறது. வாசனையோடு கூடிய நாரத்தை மரம் இருக்கிறது. கருங்காலி மரம், சந்தனமரம் எல்லாம் அழகாய் நிற்கின்றன. கோயிலுக்குள்க் காளைகளும் பசுக்களும் நிறைந்து உலாவி வருகின்றன. (பலிபீடத்தைச் சுற்றித்தான் இத்தனையும்) பக்தியோடு கூடிய கண்ணுக்கு அழகாய் இருக்கிறது எல்லாம்.

*நாகம், நாறும்*
*நரந்தை நிரந்தன;*
*ஆவும், ஆரமும்*
*ஓங்கின எங்கணும்;*
*சேவும், ஆவும்*
*செறிந்தன- கண்ணுதல்*
*பாகம் ஆளுடை*
*யாள்பலி முன்றிலே.*

''நாகம் - புன்னை, நாறும் நரந்தை நிரந்தன - வாசனையோடு கூடிய நாரத்தை மரங்கள் வரிசையாய் நிற்கின்றன. ஆவும் ஆரமும் - கருங்காலி மரமும் சந்தன மரமும். ஓங்கின எங்கணும் - நாலா பக்கமும் வளர்ந்து வளமாய் நிற்கின்றன. சேவும் ஆவும் செறித்தன - காளைகளும் பசுக்களும் ஊடாடி மேய்கின்றன. கணணுதல் பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே - நெற்றிக் கண்ணோடு கூடி சிவபெருமானது வலது பாகத்தைத் தனக்காகக் கொண்ட பராசக்தி தேவியது கோயிலின் முற்றமெங்கும்.

''அழகாக அமைந்த பாடல். பக்தியில் இருந்து எழுந்தது என்பதும் தெளிவாய்த் தெரிகிறது''.

★★★★★★★

ரசிகமணி, டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் விளக்கத்தையும் பாடலையும் மாறிமாறிப் பார்க்க வேண்டும். படிப்படியாகக் கோயில் வளர்ந்து வந்திருக்கிற விபரம் தெரியும். காடுதான் ஆதி கோவில் என்பது தெரியும். மனிதனும் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்திருக்கிறான். வாழ்க்கையும் அப்படித்தான். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து மேலே மேலே உயர்ந்து வந்திருக்கிறது.

வாழ்க்கையின் வளர்ச்சியோடு, கோயிலின் வளர்ச்சி சேர்ந்து வந்திருக்கிறது. மனிதன், வாழ்க்கை, பக்தி (கோயில் வழிபாடு) மூன்றுக்கும் அப்படி ஒரு உறவு.

டி.கே.சி. எடுத்துக்காட்டிய 'நாகம் நாறும் நரந்தை' என்னும் பாட்டு யார் பாடிய பாட்டு என்று தெரியவில்லை. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளே இந்தப் பாட்டை கண்ணில் வைத்து ஒத்துகிறார். சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி

என்று ஒரு பகுதியை அமைத்து அதில் இந்தப் பாடலை எடுத்து வைத்துப் பார்க்கிறார். பார்த்துப் பார்த்து அதிசயிக்கிறார். இந்தப் பாடலுக்காகவே வேட்டுவ வரி என்று ஒன்றை உருவாக்கினாரோ இளங்கோவடிகள் என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.

பாட்டின் அமைப்பையும் உள்ளடக்கத்தையும் பார்த்தால் இரண்டாயிரத்தைந்நூறு, மூவாயிரம் ஆண்டுப் பழமை உடையது என்று தெரிகிறது.

சங்க காலத்துக்கும் முந்திய காலப் பாடலாகவே தோன்றுகிறது.

இனி, இதுபோல முருகப்பெருமான் சந்நதி பற்றி ஒருபாடல். அதுவம் பழம் பாடல்தான். ஆசிரியர் பெயர் இல்லாத பாடல் தான். பாடலையும், பாடலுக்கு ரசிகமணி, டி.கே.சி. கொடுக்கும் விளக்கத்தையும் ஒருசேரப் பார்ப்போம்.

*******

''முருகன் எழுந்தருளியுள்ளது அனேகமாய்க் குன்றுகளில் தான். சமுத்திரக்கரை ஓரத்திலும் நன்செய் நிலத்துக்கு ஊடேயும் இருக்கமாட்டார் என்று சொல்லவில்லை. ஆனாலும் முருகனுக்கு உகந்த இடம் மலைப்பக்கம் தான்''.

முருகன் எழுந்தருளியிருக்கிற காரணத்தினாலேயே மலைக்குரிய விஷயங்கள் மனசை ரொம்பவும் கவர்கின்றன. அந்த விஷயங்களிலேயே திளைத்து நிற்கிறது மனசு.

மலைப் பிரதேசத்தில் குற்றாலம் போன்ற பிரதேசத்தில் பங்குனி சித்திரை மாதங்களில் எங்கே போனாலும் ஒரு சுகமான வாசனை. காட்டுச்செடியான வன மல்லிகை (மௌவல்) எல்லா இடங்களிலும் நெருங்கி உண்டாகி இருக்கும். சாயங்கால நேரம் வந்ததும் மொட்டுகள் விரிந்து வாசனையைக் காடெங்கும் பரப்பிவிடும்.

காலையில்த் தடாகங்களைப் பார்த்தோமானால் நீலோத் பல மலர்கள் ஆங்காங்கு விரிந்து நிற்கும்.

இன்னொரு காட்சி. மேலே ஒரு மேகப் படலம் அசைவற்று நிற்கிறது. அந்த மேல்ப் பரப்பில் காற்று அடைப்பு. அதனால்க்

காற்று இல்லை. ஆனால்க் கீழ்ச் சரிவில்க் காற்று அடித்துக் கொண்டு இருக்கிறது. உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கும் மூங்கில் ஒன்றை முன்னும் பின்னுமாக அசைத்துக் கொண்டிருக்கிறது காற்று. அப்படி அசையும் மூங்கில் என்ன வேலை செய்கிறது.

கொஞ்சம் தள்ளி அசைவற்றும் வேறு ஒரு மூங்கில் வான் முகட்டை அளாவி நிற்கிறது.

மேலே குறிப்பிட்ட வன மல்லிகை (மௌவல்) நீலோத் பலம் (குவளை) மேகப்படலம் (அந்தண்புயல்) எல்லா வற்றையும் மனசில் வைத்துக் கொண்டு பாடலைப் பார்க்கலாம்.

*மாலை மணங்கம ழ*
*மௌவல் முகைவிரி யும்*
*எந் தைகுன் றம்;*
*காலை மணிக்குவ ளை*
*காதலர் போல்விழிக் கும்*
*எந் தைகுன் றம்;*
*ஆடு கழைகிழிக் கும்*
*அந்தண் புயலிற் றே*
*எந் தைகுன் றம்;*
*நீடு கழைமேல் நி*
*லாமதியம் நிற்கு மே*
*எந் தைகுன் றம்!*

நிலா மதியத்தை எவ்வளவு அழகாய்த் தூக்கி வைத்துக் காட்டுகிறது பாருங்கள்.

''அழகான காட்சிகளை பக்தியோடு வைத்துப் பாடியிருக்கிறது. வியப்பு. பக்தி, எக்களிப்பு ஆகிய ரஸங்கள் தெளிவாய்த் துலங்குகின்றன கவியில். பழமையான இசைக்காக அமைந்த ஒரு அருமையான பாடல்.

★★★★★★★

ரசிகமணி டி.கே.சி யின் விளக்கத்தோடு பாடலைப் பாடப்பாட என்ன தெரிகிறது? முருகப் பெருமானுக்கு மலைதான் கோயில் என்று தெரிகிறது. பச்சைப் பசுங்காடே முருகன் கொலுவிருக்கும் கோயில் என்று தெரிகிறது.

மலை, காடு, மரம், மலர் இவை எல்லாமே முருகப் பெருமான்தான். அவனுடைய திருமேனி தான் என்றே தெரிகிறது.

*******

காடுதான் ஆதியில் கோயில். காட்டின் மரமும் மரத்து அடியுமே ஆதியில் கோயில். பிறகுதான் அங்கங்கே காட்டை வளைத்து சிறு இடத்தில் பீடம் அமைத்தார்கள். அம்மன் - சாமியை எழுந்தருளப் பண்ணினார்கள். அதன் பிறகுதான் மண்டபம், சிறு மண்டபமாக எழுந்தது கோயில். சின்னஞ்சிறு மண்டபமாக இருந்த கோவிலே கொடிமரம், நந்தி என்று வளர்ந்து, மதில், கோபுரம் என்றெல்லாம் விரிந்தது. உள்சுற்று, வெளிச்சுற்று என்றெல்லாம் வளர்ந்தோங்கியது.

நாட்டில் உள்ள எல்லாக் கோயில்களுமே முதலில் கருவறை என்கிற ஒரே மண்டபத்தில் மூலக் கோயிலாக இருந்தவைதான். மதுரை, சிதம்பரம், ராமேஸ்வரம், திருவரங்கம், காஞ்சிபுரம், எல்லாக் கோயில்களும் அப்படித்தான். கோவில் சிறிதென்றாலும் பக்தி பெரிதாகவே இருந்தது மக்களிடம்.

மக்களின் பக்திப் பெருக்கை மதித்த அரசர்கள் பாண்டியர், சோழர், குறுநில மன்னர்கள் எல்லோரும் வாழையடி வாழையாக வந்து கோயில்களை விருத்தி செய்தார்கள்.

பல்லவர்கள், நாயக்க மன்னர்கள், மராட்டிய அரசர்களும் கோயில்களை விருத்தி பண்ணினார்கள்.

ஜமீன்தார்கள், பெருநிலக் கிழார்கள், வணிகர்கள், பெருந்தனக்காரர்கள், அடியார்கள், எல்லோரும் கோயில் விருத்திக்கு எவ்வளவோ உதவி இருக்கிறார்கள்.

மக்களின் பக்திதான் மன்னர்களை செல்வந்தர்களை அப்படி எல்லாம் தூண்டியது.

ஆயிரம் வருடம், இரண்டாயிரம் வருடமாகத் தொடர்ந்து பல திறப்பட்டவர்களின் ஈடுபாட்டிலும், அர்ப்பணிப்பிலும் பெருகிப் பெருகி உயர்ந்தோங்கி நிற்கின்றன கோயில்கள். சிறிய கடுகு ஒன்று பெரிய மலையானது போன்று மரத்தடியில் பீடமாக இருந்த கோயில் வானளாவிய கோபுரம் என்ன, மதிலென்ன,

மண்டபங்கள் என்ன, பிரகாரங்கள் என்ன, இசை, நடனம், சிற்பம், ஓவியம் என்ன, தேவார, திருவாசக, பிரபந்தப் பாடல்கள் என்ன என்று மேலே மேலே விரிந்தன. இப்படி ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு நாடு போலவே, ராஜங்க தோரணையோடு விளங்குகின்றன என்றால் அதுவல்லவா அதிசயம்.

*******

## இறைவனின் சந்நிதானம் தாவரந்தான்

அதிசயத்திலும் அதிசயம் கோயில்கள் எவ்வளவுதான் விருத்தியடைந்தாலும் ஆதிக் கோயிலை அதாவது, மரத்தை மறந்து விடவில்லை. ஷ்தல மரம் என்று வைத்திருக்கிறோம் கோயில் தோறும். குற்றாலத்தில் பலா, திருநெல்வேலியில் மூங்கில், திருவரங்கத்தில் புன்னை, திருவிடமருதூரில் மருது இப்படி ஷ்தல விருட்சம் இருக்கிறது. காளையும், பசுவும் எப்படிக் கோயிலை விடவில்லையோ அப்படியே மரமும் கோயிலை விடவில்லை.

சுவாமிக்கு வழிபாடு நடப்பது போலவே ஷ்தல விருச்சத்துக்கும் வழிபாடு நடக்கும்.

ஒவ்வொரு கோயிலிலும் தல விருட்சம் இருக்கிறது. தலவிருட்சம் என்பது மரந்தான். மா, பலா, வாழை, செண்பகம், மகிழம் முதலிய மரம்தான். ஆனாலும் அந்த மரத்துக்கு பூசை நடக்கிறது. வழிபாடு நடக்கிறது. இறைவனை வணங்கி வழிபடுவது போல் தலவிருட்சத்தையும் வணங்கி வழிபடுகிறார்கள் பக்தர்கள். புஷ்பம், தேர், தேர்வடம், கோபுரம், மூர்த்தி என்று வழிபடுவது போலவே தலவிருட்சத்தையும் வணங்கி வழிபடுகிறார்கள்.

வாழ்க்கையை, கலையை, பண்பாட்டை எவ்வளவு மதித்திருந்தால் இப்படி ஒரு பக்தி வரும் என்பதைப் பார்க்க வேண்டும். யோசிக்க யோசிக்க அதிசயமாக இருக்கும். ஆனந்தமாகவே இருக்கும் நம் முன்னோர் கண்ட உண்மை.

*******

எழுபது வருஷங்களுக்கு முன் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஒரு விழா. ரசிகமணி, டி.கே.சி. அக்கல்லூரியின் பழைய மாணவர். அந்த விழாவில் கலந்து கொண்டார்கள் டி.கே.சி.

ஸ்காட்லாந்து தேசத்துப் பாதிரியார் ஒருவர், அவர் பேராசிரியரும் கூட. பாதிரியார் டி.கே.சியிடம் கேட்டார். ''எங்களுக்கு மரங்கள் என்றால் ஒரே பிரியம். மிக்க அன்புடையவர்கள் மரங்களிடத்து நாங்கள். உங்களிடம் அப்படி ஒரு அன்பு மரங்களிடத்து உண்டா'' என்று. பாதிரியார் கேள்விக்கு எப்படி வந்தது ரசிகமணியிடமிருந்து பதில்.

''உங்களைப் போல மரங்களிடத்து அன்பு இல்லை எங்களுக்கு. ஆனால் பக்தியே உண்டு மரங்களிடம் எங்களுக்கு. கோயில் தோறும் தலவிருட்சம் என்று மரத்தை வைத்திருக்கிறோம். தலவிருட்சத்தைச் சுற்றி வந்து வணங்குவோம். இறைவனை வழிபடுவது போன்றே மரத்தையும் வணங்கி வழிபடுவோம். புஷ்பம் என்றால் அதைக் கண்ணில் ஒற்றி அதற்குத் தலை வணங்குவோம். ஒரு அருகம்புல்லை பிடி சாணத்தில் சொருகி வைத்தால் போதும். அதன் காலடியில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து கும்பிடுவோம். துளசி இலை, வில்வ இலை போதும். அவை ஒவ்வொன்றும் கடவுளாக இருக்கும் எங்களுக்கு. தாவரங்களிடம் பக்தி உடையவர்கள் நாங்கள். எங்களைப் போல் பக்தி செலுத்த முடியாது உங்களால்.

இப்படி விளக்கம் கொடுத்தார்கள் ரசிகமணி; டி.கே.சி. அசந்து போனார் ஸ்காட்லாண்ட் துரை. இதுவரை காணாத உண்மையைக் கண்டு கொண்டதாக திருப்தியே கிடைத்து விட்டது அவருக்கு.

*******

மரங்கள் இத்தனை, செடி, கொடிகள் இத்தனை என்று கணக்கிட முடியுமா? எத்தனை எத்தனையோ அவை. இனி பலா மரம் ஒன்றைப் பார்ப்போம். பலாவின் வேர், தூர், கிளை, இலை எல்லாம் அதிசயந்தான். ஒரு இலைக்குள் நடக்கிற காரியமே போதும். அறிய அறிய அடடா, என்ன அற்புதம், என்ன அற்புதம் என்னும் வியப்பை உண்டாக்கும்.

பலாப்பழத்தை எடுத்துக் கொண்டால் அதில் ஐம்பது, நூறு, நூற்றைம்பது என்று சுளைகள். ஒவ்வொரு சுளையையும் அடுக்கி வைத்து சிப்பங்கட்டி இருக்கிறது. அதைப் பார்த்தால் ''என்ன மாயம் இது? என்ன மர்மம் இது'' என்று மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டியதுதான்.

கண் கண்ணாக அறைகள். அதனுள் சுளையை வைத்திருக்கிறது. சுளையிலுள்ள மதுரமும், மணமும் வீண் போய் விடாதபடி வைக்கோலை வைத்துப் பொதிந்தது போல் நார்க் கொடிகளைக் கொண்டு பின்னி வைத்திருக்கிறது.

சுளைக்குள்ளே வித்து. குல விருத்தி அதில்தானே. அதனால் அதை எவ்வளவு பக்குவமாய் மறைத்து வைத்திருக்கிறது. இனி பலாப்பழத்தை முரட்டுச் சாக்கு ஒன்று கொண்டே மூடி பொட்டலம் கட்டி இருக்கிறது. அதைப் பார்த்தால் என்ன தெரியும்? நம்முடைய பொறி இயல் (இஞ்சினீயரிங்) நுட்பத்துக்கு எட்டாத காரியம். பலாப்பழத்தில் உள்ள ஒவ்வொரு அம்சமும் என்றே தெரியும்.

முரட்டுத் தோலால் மூடி அதற்கும் மேலே முள்ளு முள்ளாகக் குத்தி வைத்திருக்கிறது பலாப்பழத்தை. கூரிய முரட்டு ஆணி போலத் தான் ஒவ்வொரு முள்ளும்.

பலாப்பழத்தைப் பார்க்கிறவர்கள் அதிசயப்படாமல் இருக்க முடியுமா? முன்னோர்களும் பலாப்பழத்தைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். ''இந்தப் பழம் போலவே அந்தப் பழத்திலும் இருக்கிறதே? இப்படி எல்லாப் பழத்திலும் ஞாபகம் பிசகாமல் கட்டி வைப்பது யார்? என்று அதிசயப்பட்டார்கள். மேலும், போன வருஷத்துப் பலாப்பழமும் இப்படித்தான் கட்டி வைத்திருந்தது. இந்த வருஷத்துப் பழமும் அப்படியே கட்டி வைத்திருக்கிறது. இப்படி யார் செய்கிறது'' என்றெல்லாம் அதிசயப்பட்டிருக்கிறார்கள் முன்னோர்கள்.

'கடவுள்தான், கடவுளைத் தவிர வேறு யார்'' என்று தெளிந்திருக்கிறார்கள். தெளிவையே உறுதியோடு பரவசத்தோடு நம்பி வழிபட்டிருக்கிறார்கள்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் நம்பிக்கையை சமயப் பண்பாட்டைக் குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் எப்படி எடுத்துக் காட்டுகிறார் என்று பாருங்கள்.

*கிளைகளாய்க் கிளைத்தபல*
*கொப்பெலாம் சிவலிங்கம்;*
*கிளைகள்ஈன் ற*
*களை எலாம் சிவலிங்கம்;*
*கனிஎலாம் சிவலிங்கம்;*
*கனியுள்வந் த*
*சுளைஎல்லாம் சிவலிங்கம்;*
*வித்தெலாம் சிவலிங்க*
*சொரூபம் ஆ க*
*விளையும் ஒரு குறும்பலவின்*
*முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை*
*வேண்டுவோ மே.*

கோயில், மூர்த்தி, வழிபாடு, பக்தி எல்லாம் உண்மையோடு, உண்மையாய் உணர்ச்சியோடு உணர்ச்சியாய் எழுந்து வந்திருக்கிறது தமிழ்நாட்டில். அறியாமைக்கோ, குழப்பத்திற்கோ, இருட்டிப்புக்கோ அணுவளவு கூட இடமில்லை தமிழர்களின் பக்தியில். அப்படி ஒரு தெளிவு, அப்படி ஒரு உறுதி. அப்படி ஒரு நம்பிக்கை சமய வழிப்பாட்டில் தமிழர்களிடம்.

*******

தமிழகம் முழுவதும் மேலே குறிப்பிட்ட ஞானந்தான். தெள்ளத் தெளிந்த ஞானஒளிதான்.

பண்பட்ட வாழ்க்கை, அனுபவம், நிம்மதி, அமைதி எல்லாம் ஒன்றுபட்டு ஆழ்ந்த தியானமாகவே, ஞானமாகவே அமைந்தது தமிழர்களிடம் சமயப் பண்பாடு. தன்னையும் தன்னை ஒட்டி உள்ளவற்றையும் ஊருவிப் பார்க்கச் செய்தது. கண்டு தெளிந்தவை வீண் போகவில்லை. கோயில், மூர்த்தி, கோபுரம், தேர் திருவிழா, அடியார் கூட்டம், ஆனந்தம் என்றெல்லாம் உருவெடுத்து நிற்கிறது தெள்ளத் தெளிந்த பண்பு.

தமிழகம் முழுவதும் கோயில் தான். ஒவ்வொரு கோயிலையும் ஒவ்வொரு உலகம் என்றே சொல்லலாம். கண்ணுக்குத் தெரியாத - நாம் விரும்பிக் கற்பனை காண்கிற புதுப்புது உலகமாகவே இருக்கின்றன ஒவ்வொரு கோயிலும்.

உயர்ந்த கோபுரங்கள். பெரிய பெரிய மண்டபங்கள், பொன் வேய்ந்த கூரைகள், வளர்ந்தோங்கிய மதில்கள், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிற்பங்கள், சித்திரங்கள், முற்றங்கள், இசை, நடன அரங்குகள், விழாக்கள், தேர்கள், புண்ணிய தீர்த்தங்கள், நந்தவனம், பசுமடம், தலவிருட்சம், மூர்த்தி, வழிபாடு, அபிஷேகம், அலங்காரம், ஆராதனை என்று ஒவ்வொன்றையும் நோக்க நோக்க நம்மை மறந்து விடுவோம் நாம். கலைக்களஞ்சியமாய், பண்பாட்டு ஊற்றாய், வாழ்க்கைக் கண்ணாடியாய்த் திகழ்கின்றன தமிழ்நாட்டுக் கோயில்கள்.

திருவண்ணாமலை, சிதம்பரம், திருத்தணிகை, மதுரை, ராமேஸ்வரம், திருவரங்கம், பழனி, திருவில்லிபுத்தூர், திருநெல்வேலி, கன்யாகுமரி, குற்றாலம், மன்னார்குடி, திருக்கோவிலூர், கொடுமுடி, தஞ்சை, கருவூர், திருச்செந்தூர் என்று பல கோயில்கள். எல்லாம் பெரிய பெரிய கோயில்கள். வருஷம் முழுவதும் உத்சவங்கள், பக்தர் கூட்டங்கள், வழிபாடுகள். ஏன் ஆனந்தத்தை நாடியே கூட்டம் கூட்டமாய் வருகிறார்கள் பக்தர்கள்.

*******

## தாய் வழிபாடு

மூர்த்தி, வழிபாடு, பக்தி என்னும் சமயப் பண்பாட்டை மேலும் யோசனை பண்ணிப் பார்த்தால். கருப்பன், சுடலை, மாடன், சங்கிலி, ஆண்டி, சாத்தன் என்னும் (ஆண் பால்) கடவுளர்க்கு முன்பே பெண்ணை (தாயை)யே தெய்வமாக வைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரியும்.

கொற்றவை என்று பெயர் ஆதிக் கடவுளுக்கு. பழையோள் என்றும் அத்தெய்வத்துக்குப் பெயர்.

பெண் என்றால் தாய்தானே. கண்கண்ட தெய்வம் தாய்தான். தாயையே வழிபடு தெய்வமாகச் சமைத்து அமைத்தது இயல்பான ஒன்றுதான். தாயை விட்டு விட்டு வேறு எதைத் தெய்வமாக வைத்து வணங்க?

எத்தனை பெரிய கோயிலானாலும் அங்கு அம்மன் கோயில், தாயார் சந்நிதி இருக்கவே செய்யும்.

இவ்வளவுக்கும் மேலே சக்தியாய் இறைவனுடன் சரிபாதியாய் இருக்கிறாள் தாய். சிவபெருமான் என்றால் உமையாள் பாகன்தான். அம்மையப்பனே தான்.

லட்சுமி நாராயணனாய் இருக்கத்தானே செய்கிறார் திருமாலும்.

பிரம்மாவைப் பற்றிக் கேட்கவே வேண்டும். பிரம்மாவின் மனதிலிருந்து, வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் பாட்டோ, இசையோ, உரைநடையோ எல்லாம் சரஸ்வதி மயந்தான். அதாவது தாயின் அருள்தான். இவை எல்லாம் தாய் வழிபாடே ஆதியில் என்பதைத் தானே காட்டுகிறது.

இவ்வளவும் போக இன்னும் பேச்சியம்மன், செல்லம்மன், மாரியம்மன், காளி, துர்க்கை என்றெல்லாம் கோயிலும் வழிபாடும் நாடெங்கும் நிறைந்தே இருக்கிறது.

இவை பற்றி எல்லாம் அறிஞர்கள் ஆராய வேண்டும். பக்தியின் வண்ணமும் வனப்பும் நன்றாக வெளிப்படும் அப்பொழுது.

★★★★★★★

## எளிமையும் தூய்மையும்

மாடசாமி கோயில், ஐயனார் கோயில், மாரியம்மன் கோயில், செல்லியம்மன் கோயில், ஏன் பிள்ளையார் கோவில் இவை எல்லாம் சிறிய வடிவில் இருக்கலாம். சாதாரணம் என்று கூடப் பலர் நினைக்கலாம். ஆனால் இந்தச் சின்னஞ்சிறு கோயில்களில் வழிபடும் மக்களிடம் பக்தி ஒன்றே இருக்கும். பக்திமயமாகவே இருக்கும் வழிபாடு.

பெரிய கோயில்களிலாவது சிற்பம், சித்திரம், மண்டபம், கோபுரம், பிரகாரம், திருச்சுற்று என்று மனசு ஓடும். அபிஷேகம், அலங்காரம் என்று இவற்றைப் பார்ப்பதிலேயே காத்துக் கிடக்கும் மனசு. ஆராதனையோடு சரி. பிரசாதத்தை வாங்க வேண்டியதுதான். வாங்கியதும் வீட்டை நோக்கி ஓட ஆரம்பிக்கும் மனசு. பக்தி ஒன்றிலேயே காலூன்றி நிலைத்து நிற்பதில்லை (பல சந்தர்ப்பங்களில்) மனசு. ஆனால் சிறிய கோயில்களில் வழிபடுகிறவர்களின் மனசு அப்படியே

மூர்த்தியோடு கடவுளோடேயே ஒன்றி விடுகிறது. வேறு எந்த நினைப்புக்கும் இடம் இல்லாதபடி அப்படியே ஒன்றி விடுகிறது.

'நான்' என்பது அங்குதானே கழலும். ஆன்மாவை விட்டு ஓரளவாவது விலகி ஒதுங்க வேண்டும் ஆணவம் என்றால் ஈடுபாடு உண்மையாக இருக்க வேண்டும். தன்னை மறக்க வேண்டும் ஈடுபாட்டில்.

பெரிய கோயிலில் அது இல்லை என்று சொல்லவில்லை. சிறிய, கோயிலில் பக்தியின் வேகம் அதிகம். பெரிய பெரிய கோவில்களை விட அதிகந்தான். இது சம்பந்தமாக ரசிகமணி, டி.கே.சி. சொல்கிறார்கள்.

எப்படி என்று பார்க்கலாம்.

''கன்யாகுமரியில் தெற்கு மூலையை ஒட்டியே இருக்கிறது குமரி அம்மன் கோயில். அதாவது மூன்று புறமும் கடல் சூழ்ந்திருக்கிறது. கோயில் என்னவோ பெரிய கோயில்தான். சமுத்திரத்துக்குள்ளிருந்தே எழுந்து நிற்பதாகத் தோன்றும் பட்டை போட்ட மதில்கள்.

ஆனாலும் கன்யாகுமரி ஊருக்குள் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. ஒரு பக்தரது வீட்டோடு ஒட்டிய கோயில். மதிலெல்லாம் நாலடி மண் சுவர்தான். உள்ளே சுவரை ஒட்டிச் சில மரங்கள். தங்க அரளி நாலு. நந்தியாவட்டை ஐந்து. திருவாத்தி மூன்று. அவ்வளவுதான்.

ஒரு கல் பீடத்தின் மீது பிள்ளையாரை எழுந்தருளச் செய்திருக்கிறது. இடத்தை வெகு துப்புரவாக வைத்திருக்கிறது. காலை ஐந்து மணிக்கே பெருக்கித் தண்ணீர் தெளித்து அழகாக வைத்து விடுவார் பக்தர்.

புஷ்பமாலை ஒன்று அழகாய் கட்டி நந்தியாவட்டை, தங்க அரளி, திருவாத்தி, அறுகம்புல் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிச் சுவாமிக்குச் சார்த்தி விடுவார்.

இத்தனை அழகான கைங்கர்யத்தையும் சத்திரத்தின் மாடி வராந்தாவில் நின்று தினம் தினம் அனுபவிப்பேன்.

காலையோ, நண்பகலோ, மாலையோ எந்த நேரம் வராந்தாவுக்குப் போக நேர்ந்தாலும் கோவில் பக்கம் போய் விடும் கண். கோவிலுக்குள் நின்று அனுபவிக்கும்.

★★★★★★★

பக்தி என்கிற ஆனந்த உணர்ச்சி மிகவும் உயர்ந்த மனப்பாங்கைக் கொண்டது. அந்த பக்தி கன்யாகுமரி அம்மன் கோவில் மண்டபத்துக்குள் அதிகமாக உண்டாகுமா, பிள்ளையார் கோவிலில் உண்டாகுமா என்று கேட்கலாம். பிள்ளையார் கோவிலில் தான் அதிகமாக உண்டாகும் என்று சொன்னால் குற்றம் இல்லை கம்பர் அபிப்ராயமும் அப்படித்தான். 'வனத்துள் வைகுவாள்'' என்கிறார் கம்பர். (இறைவனை)''

*******

பக்தியின் ஆன்மாவை - உண்மையை கையில் எடுத்துக் காட்டுவது போல் காட்டுகிறது ரசிகமணி டி.கே.சி. யின் அனுபவம்.

*******

ஊரென்று ஒன்று தமிழ்நாட்டில் இருந்தால் அதில் கோயில் இருக்கும். ஒன்று மட்டும் இல்லை, இரண்டு, மூன்று என்று பல கோயில்களே இருக்கும்.

நம்மைப் போலவே, நம்வாழ்க்கையைப் போலவே கோவிலும் வளர்ந்து வந்துள்ளது. பிரம்மாண்டமான கோவில்களாகவே எழுந்து வந்து நிற்கின்றன தமிழ்நாட்டில்.

உலகமே பார்த்தப் பார்த்து அதிசயிக்கிறது நம் கோயில்களை. கோயில்களை மட்டுமா கோயிலோடு ஒட்டிய வழிபாடு, பண்பாடு, கலை, கவி, பக்தி எல்லாவற்றையுமே அதிசயிக்கிறது உலகம்.

எங்கும் இல்லாதபடி தமிழ்நாட்டில் மட்டும் ஓங்கி உயர்ந்திருக்கிறது பக்தி. மூர்த்தி, கோயில், தீர்த்தம், கலை, பண்பாடு என்கிற வழிபாட்டு முறை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே - மூவாயிரம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பக்திக்கு தனித்த உருவம் கொடுத்திருக்கிறது.

ஆனாலும் அடிக்கடி சோதனை ஏற்பட்டது பக்திக்கு - அதாவது கோவில், வழிபாடு என்னும் சமயப்பண்பாட்டுக்கு நேர்ந்தது சோதனை. வேதனை மிக்க சோதனை தான் ஒவ்வொன்றும்.

*******

## வேதனையை வென்ற சாதனை

அரசியல் மாற்றம், அதாவது களப்பிறர், பல்லவர் என்று தமிழ்நாட்டில் அயலார் ஆதிக்கம் ஏற்பட்டதில் எத்தனையோ தொல்லைகள் சமயப் பண்பாட்டுக்கு. கோயில், வழிபாடு, திருவிழா எல்லாம் அடக்கி ஒடுக்கப்பட்டன. இந்த அரசியல் மாற்றம் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியைவிட பல மடங்கு சமண, பௌத்தபுறச் சமயங்களால் ஏற்பட்ட நெருக்கடி.

''சமயப் பண்பாடு அடியோடு தொலைந்து போன காரியந்தான்'' என்கிற மீளாத்துயரத்துக்கே ஆளாகி இருந்தனர் தமிழ் மக்கள்.

இந்த இன்னலிலிருந்து விடுதலை பெறுவது எப்பொழுது என்று தமிழகமே மறுகியது. ''நம்முடைய கோவில்களையும், வழிபாட்டையும், மொத்தத்தில் நம் பண்பாடு, கலை எல்லாவற்றையுமே நாசமாக்கும் கொடியவர்களுக்கு முடிவே இல்லையா'' என்று மக்கள் எல்லோரும் உள்ளுக்குள் சபித்துக் கொண்டிருந்தார்கள்.

வேதனை மிக்க சோதனை. சோதனைக்கு மேல் சோதனை ஒன்றா, இரண்டா? இருண்டகாலம் என்னும் அக்கொடுங்காலம் ஒரு ஆண்டா, இரண்டாண்டா?

விடிவே இல்லையா என்று தவித்துக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையே கையில் ஒளிவிளக்கு ஏந்தி வந்து வழிகாட்டியவர்கள் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார் முதலிய அருளாளர்கள்.

அச்சத்தையே ஆசாரமாக வைத்து பண்பாடின்றி, கலை உணர்வு இன்றி, பக்தி இன்றி, வாழ்ந்து கொண்டிருந்த லட்சோபம் லட்சம் மக்களைத் தட்டி எழுப்பியவர்கள் இவர்கள்.

மனிதனாகவும் இல்லாமல், விலங்காகவும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட அபூர்வப் பிராணிகளாக நடமாடிய தமிழ்மக்களை ஒன்று திரட்டி ''நாம் எல்லாம் மனிதர்கள்'' என்று தெளிய வைத்தார்கள் இந்தத் தியாக மூர்த்திகள்.

மனிதர்களிடம் குடிகொண்டிருந்த அச்சத்தை அடித்து விரட்டினார்கள். சோம்பலையும் விரட்டி அடித்தார்கள்.

உண்மையைப் பார்க்க, பழக, உறவாட உதவினார்கள். ஒவ்வொரு அம்சத்திலும் உண்மையானது செறிந்து, நிறைந்து நிற்பதைக் காட்டினார்கள். உள்ளமே உணர்ச்சிமயமாய் உருகும்படியாகவே 'இதோபார் உண்மையை' என்று காட்டினார்கள்.

காணக்காண காண்பவர்களின் கண்களுக்கு எங்கும் நிறைந்த கடவுளே காட்சி கொடுத்தார். கடவுள்த் தத்துவம் என்கிற விஷ்வரூபத்தையே ஒவ்வொன்றிலும் நேருக்கு நேராகப் பார்த்தார்கள் மக்கள்.

அவ்வளவுதான் மனுசர் ஆகிவிட்டார்கள் எல்லோரும். உணர்ச்சியே ஊற ஆரம்பித்துவிட்டது உள்ளத்தில். வாழ வேண்டும், நன்றாக வாழ வேண்டும். எல்லோரும் வாழ வேண்டும் என்கிற வேகமே வந்துவிட்டது அவர்களிடம்.

எல்லோரும் அன்பாய், ஒருவருக்கொருவர் ஆதரவாய், அழகாய், ஆனந்தமாய் வாழ வேண்டும். எல்லோருக்கும் இறைவன்தான் தாயும் தந்தையும். நாமும் அப்படியே தந்தை தாயரோடு சேர்ந்து ஒரு குடும்பமாகவே வாழ வேண்டும். அப்படி வாழ்வது தான் வாழ்க்கை என்பது தெரிந்துவிட்டது அவர்களுக்கு.

உணர்ச்சி இருந்தால்ப் போதும். அது வந்துவிட்டால் போதும். வேறு என்ன வேண்டும். வாழ்க்கையே பூத்து மணக்கும்.

கோயில், மூர்த்தி, தீர்த்தம், வழிபாடு, உத்சவம், அடியார்குழாம், கவி, கலை, பக்தி எல்லாம் வந்துவிடும். வாழ்க்கையோடு வாழ்க்கையாகவே சேர்ந்து வந்துவிடும் அன்பு, பொறுமை, கருணை, நீதி, வீரம், தியாகம், அடக்கம், பணிவு அத்தனையும் சேர்ந்தே இருக்கும். சேர்ந்து கிடப்பது மட்டுமல்ல அவை ஒவ்வொன்றின் மேலும் ஆசை வரும். மோகமே உண்டாகிவிடும். ருசி தெரியும். ஒரே ஆனந்தந்தான் வாழ்க்கை.

அப்பர், சம்பந்தர் முதலிய அருளாளர்களாலும், அவர்களுடைய தெய்வப் பாசுரங்களாலும் உணர்ச்சி உடையவர்களாகி விட்டார்கள் தமிழர்கள். உண்மைத் தமிழர்களே ஆகிவிட்டார்கள்.

★★★★★★★

கோவில் கோவிலாகப் போகவேண்டியதுதான். போக வில்லை என்றால் கோவிலே தேடி வரும். கையை பற்றிக் கொண்டு அழைத்துப் போகும். சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்கா, மதுரை, குற்றாலம் என்றெல்லாம் கூட்டிக் கொண்டேபோகும். மூர்த்தியும் அப்படியே வா வா என்று அழைத்துப் போவார். வழிபாடு, பக்தர் குழாம், உத்ஸவம், பாடல், ஆடல், அலங்காரம், அபிஷேகம் எல்லாம் சேர்ந்து வந்து கூட்டிக் கொண்டுபோகும்.

அருளாளர்களின் பாடல்கள் அப்படிச் செய்தன பக்தர்களை.

★★★★★★★

செங்கல், சுண்ணாம்பு, கருங்கல் இவைகளைக் கொண்டு மாத்திரம் நிர்மாணிக்கவில்லை கோயிலை, தமிழ்நாட்டில் உள்ள கோயிலை. பக்தி, ஆனந்தம், தியாகம், கலை என்று வாழ்க்கையையே வைத்துக் கட்டியது கோயில். அதாவது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக லட்சோப லட்சம் ஆடவர்களும் பெண்டிரும் கண்ட அனுபவமும், ஆனந்தமும் சேர்ந்து உருவான உணர்ச்சிப் பெருக்கே கோவில்.

அப்படிப்பட்ட கோயிலைப் பழுது பார்க்க வேண்டும். பழையபடி விளக்கேற்றி வைக்கவேண்டும். பக்தர்கள் வழிபட வேண்டும். பரவசப்பட வேண்டும். பக்தியில் தோய்ந்து கரைய வேண்டும் என்றால் வெறும் கல்லையும் சுண்ணாம்பையும் வைத்து செப்பனிட்டால் மட்டும் போதுமா? ஆர்வம், பக்தி, தியாகம், உண்மை உணர்ச்சி எல்லாம் வேண்டும். அவை மட்டும் போதா. ஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் முதலிய அருளாளர்கள் வேண்டும். அவர்களுடைய தியாகம், தொண்டு, கருணை, அனுபவம், ஆனந்தம் எல்லாம் வந்து உதவ வேண்டும். பாடல்களாக பக்திப் பாடல்களாகவே வந்து உதவ வேண்டும். இசையும், தமிழும், உணர்ச்சியும் சேர்ந்து கவிகளாக - தெய்வ சிருஷ்டிகளாகவே வந்து உதவ வேண்டும்.

அப்பர், ஞானசம்பந்தர் போன்று எத்தனை எத்தனையோ அடியார்கள் அருளாளர்கள். சமுதாய நலனுக்காக - தங்களையே அர்ப்பணித்தவர்கள். அவர்களுடைய மாசற்ற ஞானமும் பக்தியும் கவிகளுமே சமயப்பண்பாட்டை, கோயிலைக் காத்து நிற்கின்றன.

அப்பர், ஞானசம்பந்தர் முதலிய அருளாளர்கள் பெரும் புரட்சியாளர்கள். ஞானவீரர்கள். அழிவை எதிர்த்துப் போராடி அதை நிர்மூலம் ஆக்கி ஆக்கத்தைத் தோற்றுவித்த அருளாளர்கள் அவர்கள்.

அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றால் அவர்கள் பாடி அருளிய தெய்வப் பாசுரங்களிலேயே இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தத் தெய்வப் பாடல்கள் தான் சமயப் பண்பாட்டையும் கலைகளையும், தமிழர்களையும் காப்பாற்றுகின்றன. தமிழர்களின் பண்பாடு, கலை, பக்தி, ஆனந்தம் எல்லாம் அந்தப் பாசுரங்களோடு சேர்ந்தே கிடக்கின்றன.

அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் முதலிய அருளாளர் பாடல்களை உயிருக்குயிராக மதித்து முன்னோர்கள் அனுபவித்திருக்கிறார்கள். இன்னமும் அந்த அனுபவம் அப்படியே இருக்கிறது தமிழர்களிடம்.

கோவிலை, மூர்த்தியை எப்படி அனுபவிக்கிறோமோ அப்படியே அருளாளர்களின் பாடல்களையும் அனுபவிக் கிறோம் தமிழர்களாகிய நாம்.

★★★★★★★

அப்பர் சுவாமிகள் பாடிய தேவாரப் பாசுரத்தை அனுபவித்த அடியாரின் ஆனந்தம் எப்படி வருகிறது என்று பாருங்கள்.

அப்பர் சுவாமிகள் பாட்டில் ஒன்றுபோதும் ஒரு அடிபோதும். அதைப் பார்த்தால் போதும். நேரம் போய்விடும். தங்கத் தண்டவாளத்தில் வெள்ளிச் சக்கரம் பூட்டிய ரயில் போல ஓடிவிடும் நேரம். பொழுதுபோவது தானே கஷ்டம் மனிதனுக்கு. கஷ்டத்தில் கஷ்டம் அதுதான். அது போய் விட்டால் வேறு என்ன வேண்டும். ஒரே ஆனந்தந்தான்.

★★★★★★★

என் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பதாக ஒரு பழமொழி. சிரசு என்றால் தலை, மேலும் முடி, உச்சி என்றெல்லாம் பெயர் அதற்கு.

மண்டை என்பதும் அதற்குரிய பெயர் தான்.

மண்டைக்கு உள்ளே மூளை இருக்கிறது. உடம்பு முழுவதும் ஒரு மாளிகை அல்லது வீடு என்றால், வீட்டுக்கு வெளிச்சம் கொடுக்கும் விளக்குத் தான் மூளை. ஒளிவிளக்கு அது.

நேராக ஒழுங்காக இருக்க வேண்டும் மூளை. அப்படி இருந்தால்தான் மேனி (உடம்பு) மேனியாக இருக்கும். புலன்கள், பொறிகள், மனம் எல்லாம் நெறிமுறை பிறழாமல் செயல்பட மூளைதான் ஆதாரம். வயிற்றுக்குள் எத்தனை தத்துவங்கள் ஒன்றுக் கொன்று ஆதரவாய் இருந்து செயல்படுகின்றன. உணவு ரத்தம் ஆவதற்கு எத்தனை ரசங்கள், எத்தனை உப்புகள், எத்தனை காரங்கள்? புளிப்பில் தான் எத்தனை அத்தனையும் உண்டாவதற்கு மூளைதான் காரணம்.

மூளையில் சிறு பிசிறு ஏற்பட்டாலும் தேகம் உலைந்து விடும். உணர்ச்சியும் தாறுமாறாய் ஓடும். அப்படியும் இப்படியுமாக ஆடும் மனிதத் தராசு.

★★★★★★★

இதை எல்லாம் மனதில் வைத்தே மூளைக்கு வலுவான கோட்டைச் சுவர் கட்டி, மேலேயும் உறுதியான காங்கிரீட் தளம் போட்டு மிக்க பாதுகாப்புக் கொடுத்திருக்கிறது.

மண்டை ஓடு, அதற்கும் மேலே தலை முடி இப்படி வைத்து கருங்கல்க் கோவிலே கட்டி இருக்கிறது மூளைக்கு.

இனி உள்ளங்காலிலிருந்து மண்டை வரை தேகத்தில் எத்தனை தத்துவங்கள். அத்தனை தத்துவங்களுக்கும் ரத்தம் போகிறது. உயிர்ச்சத்தை ஊட்டுகிறது. அப்படித் தேகம் முழுவதும் ஓடியாடும் ரத்தம் உச்சியில் இருக்கும் மூளைக்கு வருகிறது. மூளையை அபிஷேகம் பண்ணுகிறது.

அதனால் கொழு கொழு என்றும் குளுகுளு என்றும் இருக்கிறது மூளை.

★★★★★★★

இத்தனை பாதுகாவலுக்குள் இத்தனை ஒய்யாரத்தில் இருக்கும் மூளையையே தொல்லை, கவலை, துன்பம் என்று வந்து தாக்கிவிடுகின்றன. அதனால் கலங்கிவிடுகிறது மூளை. கலக்கம், பயம், குழப்பம் இவை காரணமாக அழுகிப் போய்விடுகிறது மூளை. அமிர்தமாக இருந்த மூளை கொடிய நஞ்சாகி விடுகிறது.

ரத்தக் கொதிப்பு, படபடப்பு, நீரழிவு, இருமல் என்று நைந்து போகிறது தேகம். சோர்வுக்கும் தளர்ச்சிக்கும் ஆளாகிறது உணர்ச்சி. வாழ்க்கையே கசந்து விடுகிறது மூளைக் காய்ச்சலால்.

இந்த ரணத்தைக் குணப்படுத்த மருந்தும் இல்லை வைத்தியரும் இல்லை. ஆனால் அப்பர் சுவாமி இருக்கிறார். அவர் பாசுரத்தில் ஒன்றுபோதும். ஒரு அடிபோதும். உணர்ந்து அனுபவிக்க அனுபவிக்க விஷம் முறிந்துவிடும். தேவாமிர்த மாய் இருக்கும் மூளை.

*தலையின் நஞ்சமுது*
*ஆகவி ளையுமே.*

மூளை - சிந்தனை. அது நேர்பட்டுவிட்டால் படபடப்பு ஏது, கசப்பு ஏது, வஞ்சனை ஏது. உணர்ச்சியைக் கசக்கிப் பிழியும் ஆங்காரமே ஓடிப் போய்விடும். தாமரைத் தடாகமே ஆகிவிடும் உணர்ச்சி.

*தழல்கொள் நீறு*
*தடாகம(து) ஆகுமே*

கூடவே இருந்து குழிபறிக்கும் ஆணவம் (மதயானை) கூட சொன்னபடி கேட்கும். நில் என்றால் நிற்கும். சப்பணம் போட்டு உட்கார் என்றால் உட்காரும்.

*கொலைசெய் யானை*
*குனிந்து பணியுமே*

ஆங்காரம் போய்விட்டால் வெறுப்புக்கு ஏது இடம். எரிச்சல் (கருநாகம்) எங்கிருக்கும். இருந்தாலும் விஷப்பல் பிடுங்கப்பட்ட பொக்குவாய்ப் பூச்சியாகத்தான் இருக்கும்.

*கோள்அ ரவின்*
*கொடுவிடம் தீருமே*

இனி, கலை உணர்வு, கலை ஞானம் என்பது பளிங்கு போன்றது. தெளிந்த நீரோடை போன்றது. ஆனால் வித்வத் சிரோமணிகள் என்ன செய்தார்கள்? ஆராய்ச்சி வியாக்யானம் என்று சேறும், சகதியுமாக அதில் கொட்டிவிட்டார்கள். ஆயிரக் கணக்கான வருஷமாகவே தொடர்ந்து கொட்டியதால் கால்வைக்க முடியாதபடி ஆகிவிட்டது கலை உலகம். ஒரே கறையாகிவிட்டது. அது காரணமாக கலை உலகம் மக்கள் நட முடியாத வனம் - காடே ஆகிவிட்டது.

அழகிய அரண்மனை போன்ற மாளிகையை சாளரங்களை அடைத்து கதவைப் பூட்டி மூடிவிட்டால் பாழடைந்து தானே போகும். அப்படிப் போய்விட்டது கலை உலகம். அதன் கதவு திறக்க வேண்டும். அப்பர் சுவாமிகள் பாட்டு ஒன்று போதும். ஒரு வரி போதும். பாடின மாத்திரத்திலேயே கதவு ஜன்னல் எல்லாம் திறக்கும்.

*கலைகொள் வேத*
*வனம்பதி தன்னிலே*
*கதவு தானும்*
*கடுகத் திறக்குமே*

இனி, எழுந்து நடமாட முடியாதபடி பொய்யானது மூடி மறைத்திருக்கிறது மனிதனை. மனிதனைக் கல்லோடு கட்டி சமுத்திரத்துள் போட்டது போலத்தான் பொய்யின் காரியம்.

எப்படி வெளியே வர, உண்மை என்கிற கரை சேர மனிதன். அப்பர் சுவாமிகள் பாசுரந்தான் வழி. இனிப்பாடலின் முழு உருவம்.

*தலைகொள் நஞ்சமு(து)*
*ஆக விளையுமே:-*
*தழல்கொள் நீறு*
*தடாகம தாகுமே:-*
*கொலைசெய் ஆனை*
*குனிந்துப ணியுமே*
*கோள்அ ராவின்*
*கொடுவிடம் தீருமே*
*கலைகொள் வேத*
*வனம்பதி தன்னிலே*
*கதவு தானும்*
*கடுகத்தி றக்குமே;*
*அலைகொள் வாரியில்க்*
*கல்லும்மி தக்குமே*
*அப்பர் செப்பும்*
*அருந்தமிழ்ப் பாடலே*

நஞ்சு - ஆணவம். அமுதாக - ஆனந்தமாக. தழல்கொள் நீறு - ஆங்காரம், வெறி என்கிற அக்கினி. தழல் - தீ. நீறு - தணல். கொலை செய்

அப்பர் சுவாமிகள் பாசுரங்களை அனுபவித்தது போல சம்பந்தர், சுந்தரர் முதலிய அருளாளர் பாசுரங்களையும் அனுபவித்து ஆனந்தபரவசம் அடைந்திருக்கிறார்கள் நம்மவர்கள்.

★★★★★★★

அப்பர் சுவாமிகள், திருஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் இவர்கள் பாசுரம் மொத்தம் ஏழாயிரம் வரை என்று தேவாரத்தைத் தொகுத்து வைத்துள்ளனர்.

ஏழாயிரம் பாசுரங்களையும் பொருளுணர்ந்து பாடி அனுபவிக்க முடியவில்லை என்னால். கிட்டத்தட்ட நூற்றுப் பதினான்கு பாசுரங்களைத் தான் உணர்ந்து அனுபவிக்க முடிந்தது என்னால். இப்பாசுரங்கள் வரை. உள்ள அனுபவம் விடமாட்டேன் என்கிறது என்னை.

இன்னமும் காலம் காலமாக இப்பாசுரங்களை அனுபவிக்கவே செய்கிறேன்.

அப்படி அனுபவித்த பாசுரங்களை இங்கே கொடுத் திருக்கிறது.

ஒரு சில பாசுரங்களை முழுமையாக உணர்ந்து அனுபவிக்க முடியவில்லை. அவற்றில் இரண்டு மூன்று அடிகளையே அனுபவிக்க முடிந்தது. அனுபவித்த பகுதியையே இங்கே கொடுத்திருக்கிறது.

பாசுரங்களை அனுபவித்த அனுபவத்தை வைத்தே பாசுரங்களுக்கு விளக்கமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விளக்கத்தைப் பார்க்க வேண்டும் பார்த்ததும் தள்ளிவிட வேண்டும். பாசுரத்தை அப்படி விட்டு விடக்கூடாது. பாடிப்பாடி அனுபவிக்க வேண்டும். பாசுரம் தான் உயிர். கலை, பண்பாடு, பக்தி ஆனந்தம் எல்லாம் பாடலில்தான். பாடப் பாட நாமே பாசுரமாகத்தான் இருக்கிறோம் என்பது தெரியும். எல்லாம் வல்ல இறைவனே பாசுரத்தில் தான் கோயில் கொண்டு அமர்ந்திருக்கிறார் என்பதும் தெரியும். அது தெரிந்தால் போதும். வேறென்ன வேண்டும்.

*வித்வான். ல. சண்முகசுந்தரம்.*

---

ஆனை - கூடவே இருந்து குழி பறிக்கும் மதயானை போன்றது தான் ஆணவம். ஆனை - ஆணவம். கோள் அரா - வெறுப்பு, எரிச்சல் என்கிற விஷப் பாம்பு. வேதவனம் - கலையை மூடி மறைக்கிற வெற்றுரை. வாரி - கடல்.

# திருநாவுக்கரசு சுவாமிகள்

உ
ஓம்

# உண்மையின் எதிரொலி தான் இன்மை

1. 'இறைவனுடைய செயல்தான் எல்லாம்' என்கிற நம்பிக்கை உடையவர்கள் கூட 'கடவுள் என்று ஒன்று இருக்கிறதா? இருந்தால் அது எப்படி இருக்கும்? எங்கே இருக்கும் அது' என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

யோசனை அடிக்கடி வரும். ஆனால் நிலை கொண்டு நிற்காது. வந்தது போலவே போய்விடும் யோசனை.

★★★★★★★

வேண்டாத விருந்தாளி போல வந்த யோசனையைப் பார்க்கப் பார்க்க வெட்கமாக இருக்கிறது மனிதனுக்கு, பிறகு அதைக் கண்டு பயப்படவே செய்கிறான் மனிதன். அதை உதறி எறிவதற்காக அப்படியும் இப்படியுமாக நெளிகிறான் மனிதன்.

வரவேற்போ மரியாதையோ இல்லை. அதனால் நழுவி ஒதுங்கிப் போய் விடுகிறது யோசனை.

★★★★★★★

உண்டு என்று சொல்வதற்கு எத்தனையோ காரணங்களைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறான். இல்லை என்று சொல்வதற்கும் அப்படியே கண்டுபிடித்து வைத்திருக்கிறான். பொல்லாத ஆள்தான் மனிதன்.

★★★★★★★

எண் சாண் உடம்போடு மட்டுமல்ல. 'அது என்ன? இது என்ன? ஏன்? எப்படி?' என்றெல்லாம் சிந்திக்கும் சிந்தனையோடும் சேர்ந்து பிறந்தவன் மனிதன். அதனால் 'நான்' என்கிற நினைப்பு - நினைப்பென்ன நினைப்பு? முனைப்பேதான் அது. அந்த முனைப்புமயமாக இருக்கிறான் மனிதன்.

'நான்' என்பதே பொய். முழுப்பொய், சைபர், பூஜ்யம்! அந்தப் பொய்யையே கருவியாக வைத்து அளந்தால் உருப்படுமா?

'நான்' என்னும் பொய்யையே அளவு கோலாக வைத்துத்தான் மனிதர்களாகிய நாம் அளந்து பார்க்கிறோம். அதனால் ஒன்றும் நேராகத் தெரிகிறதில்லை. எல்லாம் தலைகீழாகவே தெரிகின்றன.

உண்டு என்றும் சொல்லத் தோன்றுகிறது. இல்லை என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

கடவுளைப் பற்றித்தான் இப்படித் தடுமாற்றம் மனிதனிடம். 'நான்' என்பது பற்றித் தளரா உறுதியோடுதான் இருக்கிறான் மனிதன்.

★★★★★★★

ஒரு வீட்டை (குடும்பத்தை) எடுத்துக் கொண்டால் அதில் பலர் இருக்கிறார்கள். தேன் கூட்டில் தேனீ மொய்த்துக் கிடப்பதுபோல் இருக்கிறார்கள்.

எல்லோருமே ஒருவரை வைத்து ஒருவர்தான். யாரும் தனியாக இல்லை. அந்தக் குடும்பத்துத் தலைவனையே எடுத்துக் கொள்ளலாம். அவனுக்குத் தாய் உண்டு, தந்தை உண்டு, மனைவி உண்டு, மக்கள் உண்டு, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை என்று உண்டு. இன்னும் உற்றார் உறவினர் பலர். இவ்வளவு பேரையும் வைத்துத்தான் அவன். அவ்வளவு பேர் நிலையும் அப்படி அப்படித்தான்.

'நான்' என்கிற பேதைமைக்கு எங்கே இருக்கிறது இடம்.

இனி, குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றவர்கள் ஆதாரமாக இருப்பதுபோல தெருக்காரர், ஊர்க்காரர், நாட்டார், உலகத்தார் எல்லோருமே ஒருவருக் கொருவர் ஆதாரந்தான்.

யாரும் தனி இல்லை. எல்லோரும் அண்ட பிண்ட சராசரம் எல்லாமுமே அப்படித்தான். ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. எல்லாம் ஒன்றுதான். வேறுவேறல்ல. 'நான்' என்பது இல்லவே இல்லை.

கண், மூக்கு, நெற்றி, புருவம், கை, கால் என்று பலவாறு தோன்றலாம். அத்தனையும் உடம்புதான். உடம்பு என்கிற ஒன்றேதான்.

எலும்பு, ரத்தம், நிணம், தோல் என்று வேறுவேறாகத் தெரிந்தாலும் அத்தனையும் உடம்புதான் இனி, மனதில் எத்தனையோ எண்ணங்கள் முளைக்கின்றன. நீரில் குமிழிகள் முளைப்பதைப் போல முளைக்கின்றன மனதில் எண்ணங்கள். குட்டையாகவும் இருக்கும். நெட்டையாகவும் இருக்கும் எண்ணங்கள். இயல்பாகவும் இருக்கும். விசித்திரமாகவும் இருக்கும் அவை. வெளியில் சொல்லக் கூடியதாகவும் இருக்கும். ஒளித்து மறைத்து வைக்கக் கூடியதாகவும் இருக்கும் அவை. எண்ணங்கள் எத்தனையானாலும் அத்தனையும் மனம் என்கிற ஒன்றுதான்.

மனமும் உடலும் ஒன்றாய் நின்றால் மனிதன். அப்படியே மனிதர் எல்லோரும் ஒன்றுதான். அண்டபிண்ட சராசரம் அவ்வளவும் ஒன்றே.

அப்படியானால் 'நான்' என்பது இல்லைதானே. அது இல்லை என்று ஆனபிறகு. அது ஒழிந்தபின் புல்லிலிருந்து நட்சத்திரம் வரை, சிற்றெறும்பிலிருந்து யானைவரை, பேரண்டம் முழுவதும் அணுவுக்குள் அணுவிலிருந்து பேரண்ட முழுவதும் தகதக என்று ஜொலிக்கும். ஒரே ஜோதி மயமாக காட்சி தரும். உணர்ச்சிமயமாய், ஞான மயமாய், ஆனந்த மயமாய் உண்மையானது பிரகாசிக்கும்.

கோடி சூரியப் பிரகாசம் என்ன, கோடான கோடி சூரியப் பிரகாசமாகவே காட்சி தரும் உண்மை.

துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை.

★★★★★★★

சின்னஞ்சிறிய புல் - பசும்புல் ஒன்று போதும். அதனுள் நடக்கிற காரியம் நம் மூளையைச் சிதறடித்துவிடும்.

காற்றிலிருந்தும், மண்ணிலிருந்தும் சூரிய வெளிச்சத்தி லிருந்தும் ஆகாரத்தை எடுக்கிற அதன் பாங்கு, அற்புதத்திலும், அற்புதம்.

சின்னம் சிறியதுதான் புல். ஆனாலும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் தன் நிறத்தை - பசுமையை - குளுமையைப் பாதுகாத்து வருகிறது.

இவ்வளவையும் புல்லா செய்கிறது? அந்தப் புல்லுக்கே தெரியாது அதனுள் நடைபெறும் இந்த விந்தை.

அந்த விந்தையை (நம்) கண்ணிலும் பார்க்கலாம். ஊசி நுழைய முடியாத சிறிய ஓட்டைக்கு உள்ளே கூடி பெரிய பெரிய மலைகள், கடல்கள், ஏன் வானமே நுழைந்து போகின்றதே/ இதெல்லாம் எப்படி?

பசுவின் மடிக்குள்ளும் அந்த அற்புதந்தான். பக்கா பக்காவாக நாள்தோறும் ஊறுகிறதே பால் - அமிர்தம் அது எப்படி?

வானம், பூமி எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறது இந்த அற்புதம். இது ஒன்றே நிறைந்திருக்கிறது. எண்ணற்ற கோள்களையும் நட்சத்திரங்களையும் இயக்குகிறது இந்த அற்புதம். அதுதான் அண்டபிண்ட சராசரம் அவ்வளவும்.

ஒரு வாழையை எடுத்துக் கொண்டால் அதனுள் நடைபெறும் விந்தை எத்தனை. பச்சைப்பசேல் என்று நீள நீளமாய் அகன்ற இலைகள் வந்துக்கொண்டே இருக்கின்றன. எல்லாம் வாழையிலிருந்துதான். அது மட்டுமா? பூவென்ன, காய் எத்தனை இவ்வளவும் எங்கிருந்து வருகின்றன, எப்படி வருகின்றன. நமக்கும் தெரியாது. வாழைக்கும் தெரியாது.

நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை.

★★★★★★★

வாழையில் நடக்கும் அற்புதத்துக்கு அதிகாரி நாம் அல்ல. வாழையும் அல்ல. நமக்குள் நடக்கும் காரியங்களுக்கும் அப்படித்தான் அண்டபிண்ட சராசரங்களில் நடக்கும் காரியங் களுக்கும் அப்படித்தான்.

நாம் இல்லை என்பதுதான். உண்மை எல்லாவற்றுக்கு மூலமாய் ஒன்று இருக்கிறது, அது ஒன்றுதான் இருக்கிறது. அந்த ஒன்றுதான் அத்தனையுமாக வெளிப்படுகிறது.

கடவுள் என்றால் அதுதான். அந்த உண்மைதான்.

கடவுள் இருக்கிறார். அவர் ஒருவரே இருக்கிறார். சகல தத்துவங்(வஸ்துக்)களாகவும் இருக்கிறார். ஆனால் நம்மைப் போல (நான் இன்னார் என்று விலாசம் போட்டுக் கொண்டு) தனியாக இல்லை கடவுள்.

*அணுவும் அவர்தான், பரமாணுவும் அவர்தான். அண்டமும் அவர்தான், பேரண்டமும் அவர்தான். ஆனால் குறிப்பிட்ட ஒரு வஸ்துவாகத் தனித்து இல்லை.*

★★★★★★★

*சிறு குட்டையிலிருந்து பெரிய சமுத்திரம் வரை, யானையிலிருந்து பூனைவரை, புல்லிலிருந்து கற்பக விருட்சம் வரை, மனிதனிலிருந்து புழுவரை எல்லாவற்றிலும் ஒரே உண்மையைக் காண்பதுதான் காட்சி. கடவுள்க் காட்சி என்றால் அதுதான்.*

*அப்படிப் பார்த்துவிட்டால் போதும். அந்தக் காட்சி மனசைவிட்டு அகலாது. ஞானப்பிரகாசமாய் ஜொலிக்கும். பகலிலும் ஜொலிக்கும். இரவிலும் ஜொலிக்கும்.*

*உணர்ச்சி மயமாய் நெஞ்சில் ஊறி நிறைந்து நிற்கும் அந்த ஜோதி. அப்படியிருக்கும் ஒளி நம் பார்வையைவிட்டு எப்படி மறையும். அப்பா சுவாமிகள் கண்ட அனுபவம் இது.*

*தான தான*
*தன்னை தானன.*

*துஞ்சும் போதும்*
*சுடர்விடும் சோதியை,*
*நெஞ்சுள் நின்று*
*நினைப்பிக்கும் நீதியை,*
*நஞ்சு கண்டத்(து)*
*அடக்கிய நம்பனை:-*
*வஞ்ச னேன் இனி*
*யும்மறக் கிற்பனோ!* (1)

**துஞ்சும்போதும் - உறங்கும்பொழுதும், கண்டத்து - தொண்டையுள், மறக்கிற்பனோ - மறப்பேனா? மறக்க முடியுமா. இறந்த பின்பும் வாழ முடியும். புகழோடு வாழ முடியும். ஆனால் அனுபவத்தை மறந்து வாழ முடியாது.**

2. தங்கம், இரும்பு, மலை, கடல் என்று தனித்தனியாகத் தெரிகின்றன. யோசித்துப் பார்த்தால் எல்லாம் ஒன்றுதான்.

யோசிக்க யோசிக்க எல்லாம் அணுவாய்ப் போய் விடுகின்றன. அணுவில் தங்கம் என்றோ, இரும்பு என்றோ இல்லை. எல்லாம் ஒரே அணுத்தான்.

அந்த அணுவும் தேய்ந்து விடுகிறது. பிறகும் தேய்கிறது. அதன்பிறகும் தேய்கிறது. இறுதியில்லாதபடி தேய்ந்து தேய்ந்து ஒரே வஷ்துவாகிறது. அதுவே எங்குமாய் எல்லாமாய் நிறைந்து நிற்கிறது.

அந்த ஒன்றுதான் கோடான கோடி உருவங்களில் மரம் என்றும், பசு என்றும், உலகம் என்றும், அண்டம் என்றும், பிரபஞ்சம் என்றும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. வெளிப்பட்டுத் தோன்றுவதைப் படைப்பு என்றும், வெளிப் பட்டவை அப்படியும் இப்படியும் நடமாடுகின்றனவே. அந்த நடமாட்டத்தை இருப்பு என்றும், நடமாடினபடியே மறைந்தும் விடுகின்றன அவை. அப்படி மறைவதை மறைப்பு என்றும் வைத்திருக்கிறோம்.

இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்த ஒரே வஷ்துவைக் கடவுள் என்கிறோம். படைப்பு, காப்பு, மறைப்பு மூன்றையும் கடவுளுடைய விளையாட்டென்கிறோம்.

இந்த விளையாட்டு இறுதி இல்லாதபடி எங்கும் ஒரே தன்மைத்தாய் - ஒரே தொடர்ச்சியாய் நடந்து கொண்டிருக்கிறது.

★★★★★★★

''ஒரே ஒரு வஷ்துதான். அதுதான் எங்குமாய் எல்லாமாய் இருக்கிறது'' இது உண்மை. ஆனால் இந்த உண்மை நம் மனதில் நிற்க வேண்டும். அந்த உண்மையையே கடவுள் என்று பார்க்க வேண்டும். அந்தக் கடவுளோடு நமக்கு உறவு ஏற்பட வேண்டும். அப்படியானால் கடவுளை நம்போல் ஒரு ஆளாகப்பாவிக்க வேண்டும். உருவகப்படுத்த வேண்டும். கடவுளுக்கு வீடு (கோயில்), வாசல் (கோபுரம்), மனைவி, மக்கள் என்றெல்லாம் குடும்ப வாழ்க்கையை வகுத்துக் கொடுக்கவேண்டும். தேர், திருவிழா என்று உற்சவம் நடத்த வேண்டும்.

இவ்வளவும் இருந்தால் தான் கடவுள்த் தத்துவம் ஆன்மதத்துவத்தோடு சேர்ந்து பரிமளிக்கும்.

கடவுள் தத்துவம் ஆன்மதத்துவம் பற்றித் தெள்ளத்தெளிந்த ஒரு நிலையைக் கண்டவர்கள் நம் முன்னோர். சமயப்பண்பு, உருவ வழிபாடு, பக்தி எல்லாம் வாழ்க்கையில் கலந்து மருவ - ஒளிவீசச் செய்தவர்கள் முன்னோர். கலை உணர்வோடு - கலை அனுபவத்தோடு பக்தியும் வாழ்க்கையும் இரண்டறக் கரைந்து ஒருருவெடுக்க வைத்தவர்கள் அவர்கள்.

★★★★★★★

திருவாரூரில் புற்றிடம் கொண்ட பெருமானாக தியாகராஜப் பெருமானாகப் பரம்பொருளை எழுந்தருளச் செய்து கண்குளிரக் கண்டு மனம் உருகித் திளைக்கிறார்கள்.

அப்பர் சுவாமியும் பெருமானைக் கண்டு உருகிக் கரைகிறார்.

திருவடி என்றால் திருவருள். அதாவது சிருஷ்டி. ஆயிரம் ஆயிரமாய் விளையும் விளைச்சல்.

தோள் என்றால் ஆற்றல். வெளிப்பட்டவற்றை நிற்கவைக்கும் சக்தி.

முடி (தலை) என்றால் சிருஷ்டி தத்துவம் தொடர்ந்து நடக்க நிற்பவற்றை ஒதுக்கி மறைக்கும் அருள்நோக்கு.

தோற்றத்துக்குத் தாமரை, நிற்றலுக்கு மலை (வரை) மறைதலுக்கு (சூரியப்) பேரொளி. மூன்றும் அடையாளமாய் வருகின்றன. எப்படி என்று பாடலில்ப் பார்க்கலாம்.

*தானன தானன தான*
*தானன தானன தான*

*ஆயிரம் தாமரைபோ லும்*
*ஆயிரம் சேவடியா னும்,*
*ஆயிரம் பொன்வரைபோ லும்*
*ஆயிரம் தோளுடையா னும்,*
*ஆயிரம் ஞாயிறுபோ லும்,*
*ஆயிரம் நீண்முடியா னும்,*
*ஆயிரம் பேருகந்தா னும்*
*ஆரூர் அமர்ந்தஅம் மானே!* *(2)*

**3.** கையில் இருக்கிறது வெண்ணெய், ஆனால் நெய்யைத் தேடி ஆராய்ச்சி பண்ணுகிறோம்.

நம்முடைய செயல் என்று ஒன்றும் இல்லை. எல்லாம் இறைவனுடைய செயல்தான். நாம் என்பதும் அப்படித்தான்.

நாமும் நம்முடைய செயலும் இறைவன் மயம். இறைவனுக்குள் அடக்கம். உலகும் அப்படியே. அண்டம், பேரண்டம் எல்லாம் இறைவனுக்குள்தான்.

*******

புல்லிலிருந்து நட்சத்திரம் வரை எல்லாவற்றிலும் இறைவன்தான். எல்லாவற்றிலும் ஜோதிமயமாய்ப் பிரகாசிக்கிறான். ஆனாலும் கடவுளைக் காணோமே என்று திகைக்கிறோம். எங்கே இருக்கிறார் கடவுள் என்று தடபுடல் பண்ணுகிறோம்.

*******

கடவுளின் காரியம் விநோதமானது தான். எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்து நின்றும் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்து கொள்கிறார் என்றால் அது விநோதந்தானே.

---

**சேவடி - குறை ஒன்றும் இல்லாது நிறைந்த திருவருள். வரை - மலை. ஞாயிறு - சூரியன். அற்புதமான பாடல். பாடப்பாட மனம் திருந்தும். அமைதி பெறும். ஆனந்தம் நிறையும்.**

அதனால்தான் இறைவனுக்கு மாயன் என்றே பெயர். நமக்குத் தெரியாமலே நமக்குள் இருப்பது - நாமாக இருப்பது திருட்டுத்தனம் தானே. பொல்லாத திருடன்தான் இறைவன் என்கிற பொருளில் கடவுளைக் கள்வன் என்றே சொல்கிறார்கள் பக்தர்கள்.

எல்லாம் இறைவன்தான். அவனுடைய அருள்தான் என்கிற உண்மை உணர்ச்சிமயமாய் எழுந்து வந்துவிட்டால் கையும் களவுமாகப் பிடித்துவிடலாம் இறைவனை.

*******

திரை ஒன்று இறைவனை மறைத்துக் கொண்டு தொங்குகிறது. திரையை மெள்ள ஒதுக்கினால் போதும். இறைவன் கண்முன் நிற்பான். கையால் தொட்டுப் பார்க்கும்படி ஒட்டி நிற்பான்.

பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து நிற்கிற மணவறைக் கோலந்தான்.

இது சம்பந்தமாக திருஉந்தியார் என்னும் நூலில் உள்ள பாட்டு ஒன்று.

*கள்ளரோ(டு) இல்லம்*
*உடையார் கலந்திடின்*
*வெள்ள வெளியாம் என்(று)*
*உந்தீ பற;*
*வீடும் எளிதாம்என்(று)*
*உந்தீ பற.*

*******

உண்மையோடு ஒன்றித் திளைக்க வேண்டும். ஆனந்த பரவசம் பொங்க வேண்டும் என்றால் தத்துவம், ஆராய்ச்சி, வனவாசம், மூச்சுப் பயிற்சி முதலியன பிரயோசனப்படா.

---

இல்லம் உடையார் - ஆன்மதத்துவம். வெள்ள வெளி - ஆனந்தம். வீடு - விடுதலை. நான் என்பதிலிருந்து விடுபடும் விடுதலை. நான் அற்றுத் தானாய் நின்று விடல்.

பக்தி, வழிபாடு, மூர்த்தி, கோவில், தேர், திருவிழாதான் வழி. அன்பர் (அடியார்) கூட்டம், தொண்டு, ஆட்டம், பாட்டம் எல்லாம் வேண்டும்.

அப்பர் சுவாமிகளிடம் இவை எல்லாம் இருந்தன. மக்களிடம் இயல்பாகவே இந்தப் பண்பு இருக்கிறது. அது இது என்று கண்டபடி படித்து ஆராய்ச்சியில் இறங்கினால்தான் இயல்பு - அதாவது மக்கட்பண்பு மறையும். அப்படி எல்லாம் சேற்றுக்குள் காலைவிட்டு இறங்காதவரை பண்பு இருக்கும். அந்தப் பண்பை கோவில், மூர்த்தி, வழிபாடு மூன்றும் தூண்டிக் கொண்டே இருக்கும்.

★★★★★★★

கோவில் என்றால் மூர்த்தி என்றால், வழிபாடென்றால் அப்பர் சுவாமிகளுக்கு உயிர். எங்குமாய் எல்லாமாய் இருக்கிற கடவுள்த் தத்துவம் அப்படியே கண்முன் நிற்கிறது அப்பர் சுவாமிகளுக்கு. அதற்கு வழிவிட்டுக் காட்டுகிறது மூர்த்தி. அந்த ஆனந்தம் எப்படி வருகிறது எழுந்து

*தெள்ளத் தேறித்*
*தெளிந்து துதிப்பதோர்*
*உள்ளத் தேறல்,*
*அமுத ஒளிவெளி;*
*கள்ளத் தேன்கடி*
*யேன்கவ லைக்கடல்*
*வெள்ளத் தேனுக்(கு) எவ்*
*வாறு விளைந்ததே!* (3)

---

தெள்ளத்தேறி தெளிந்து - பார்த்துப் பார்த்து தெளிந்து ஒரு முடிவுக்கு வந்து, அதன்பிறகும் அனுபவங்களின் மூலம் கழிய வேண்டியன கழிந்து ஒரு லட்சியமாக எழுந்து, 'எல்லாம் அவன் செயலே. நம் செயல் ஒன்றும் இல்லை' என்கிற அர்ப்பணிப்பில் துதிப்பது - நீயே தஞ்சம் என்று வாழ்த்தி வணங்கப்படுவது எது? அதுதான் பரம்பொருள். கடவுள் தத்துவம் என்கிற உண்மை. அது எப்படி இருக்கிறது? எங்கே இருக்கிறது.

உள்ளத் தேறல் - எனக்குள்ளேயே இருக்கிறது. நானாகவே இருக்கிறது. பார்க்கப் பார்க்கத் தேனாய்த் தித்திக்கிறது. தேறல் - தேன். அமுத ஒளிவெளி - என்னுள் நானாக நிறைந்திருப்பது போலவே எல்லாவற்றிலும்

அது அதுவாக இருக்கிறது எங்கும், ஒரே ஒளிமயமாய் மிக்க பிரகாசமாய் ஜொலிக்கிறது. உணர உணர ஆனந்தமாக இருக்கிறது. உண்ண உண்ணத் தெவிட்டாத ஆனந்தமாக இருக்கிறது. பிறவிக் குருடனுக்குப் பார்வை கிடைத்தமாதிரி இருக்கிறது.

எத்தனை எளிதில் கிடைத்துவிட்டது எனக்கு இந்த அற்புதம்! அது இது என்று நான் படிக்கவில்லை. ஆராய்ச்சி செய்யவில்லை. அதற்கென்று ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கவில்லை. தவமோ, யோகமோ எதிலும் ஈடுபடவில்லை நான். ஆனாலும் என்னைத் தேடி வலிய வந்து கோயிலில் மூர்த்தியாய் எழுந்தருளி ''வா வா'' என்று கூவி அழைத்து எனக்குத் தன்னையே காட்டிவிட்டார் பெருமான்.

எத்தனை காலமாக எத்தனை பித்தலாட்டங்களைச் செய்தவன் நான். எத்தனை பொய்கள், எத்தனை கொடுமைகள் செய்தவன் நான்.

நீதிக்குப்புறம்பான காரியங்களைச் செய்வதையே வாழ்க்கையாக நடத்தி **வந்தவன்** நான்.

ஒருநாளும் நிம்மதியாக **நான்** இருந்ததில்லை. ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய். ஒரு திருட்டை மறைக்க இன்னொரு திருட்டு, இப்படியே தேடித் தேடி அல்லல் பட்டவன் நான்.

அப்படி இருந்தும் தேடி வந்துவிட்டான். என்னை பெருமாள், திருவாரூர், சிதம்பரம், திருக்காளத்தி, மதுரை, திருக்குற்றாலம் என்றெல்லாம் எனக்காகக் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான் பெருமாள்.

*''கள்ளத்; தேன் கடி, யேன்கவ, லைக்கடல்*
*வெள்ளத் தேனுக்(கு) எவ் வாறு விளைந்ததே.*

★★★★★★★

# கைதட்டிக் கூப்பிடுகிறான் பெருமான்

4. எத்தனையோ அரிய பெரிய செயல்களில் ஈடுபடுகிறான் மனிதன். திருத்தமாக அவற்றைச் செய்தும் முடித்து விடுகிறான்.

கடலைத் தூர்த்து அணை கட்டி விடுகிறான். மலையைக் குடைந்து வாய்க்கால் கட்டி விடுகிறான். வானம், பூமி இவற்றை அளந்து கணக்குப் போடுகிறான். ஆன்ம தத்துவம், கடவுள் தத்துவம் பற்றி எல்லாம் கிண்டிப் பார்க்கிறான். கிளறிப் பார்க்கிறான்.

வானத்தையே வில்லாக வளைத்துக் காட்டுவேன் என்கிறான். மணலைக் கயிறாகத் திரித்துவிடுவேன் என்கிறான். முயன்றும் பார்க்கிறான். அதிலொருபகுதி இதிலொரு பகுதி என்று வெற்றி விழாவும் கொண்டாடுகிறான்.

செயற்கரிய செய்பவனாகத் தான் தோன்றுகிறான் மனிதன்.

ஆனால் ஒன்றுமட்டும் முடிகிறதில்லை மனிதனால். நான் என்கிறதை விட்டுத் தொலைக்க முடிகிறதில்லை. அதை ஒழித்துக் கட்டிவிட்டால் எல்லாம் கடவுள் மயமாக இருக்கும். எங்கும் ஒளி வெள்ளந்தான். ஒரே ஆனந்த ஒளி வெள்ளந்தான்.

★★★★★★★

அப்பர் சுவாமிகள் திருக்காளத்திக்குப் போனார். கோவிலுக்குள் போனார். சுவாமி தரிசனம் செய்தார். அம்பாளையும் வணங்கி வழிபட்டார்.

பண்ணோடு கூடிய பாடல்கள், மேளதாள முழக்கம், அலங்காரம், அபிஷேகம், அடியார்களின் பக்தி எல்லாம் சேர்ந்து அப்பரைப் பரவசப்படுத்திவிட்டார் பெருமான். மூர்த்தியாக இருந்துதான். கோயிலில் அமர்ந்தபடிதான்.

புதிய பிறவியே கிடைத்துவிட்டது அப்பருக்கு / மூர்த்திக்கும் அப்படியே!! பரமாணுவிலிருந்து போண்டம்வரை ஒரே ஜோதியாய் - ஆனந்தமாய் - கடவுள் தத்வமாய்ப் பிரகாசிக்கிறது மூர்த்தி. பரம் பொருளின் அடையாளமாகவே.

பரவசத்தில் திளைத்து உருகுகிறார் அப்பர் சுவாமிகள். எப்படி?

அடடா! எனக்கு தன்னை அப்படியே காட்டுவதற்காக வல்லவா திருக்காளத்தி வந்து அமர்ந்திருக்கிறான் பெருமான்! என்னை எதிர்பார்த்து எனக்கு முன்னமேயே மூர்த்தி வடிவில் வந்தல்லவா அமர்ந்திருக்கிறான். அப்படி அமர்ந்தபடியே.

வானம், பூமி, தங்கம், மண், வாக்கு, மனம் எல்லாம் தானே என்பதை எப்படி எப்படி லகுவாய்க் காட்டிவிட்டான் எம்பெருமான்? அவன் கருணையே கருணை!

*தானனன தானனன*
*தன்னனன தன்*

*மனத்தகத்தான், தலை மேலான்,*
*வாக்கினுள் ளான்;*
*வாயாரத் தன் னடியே*
*பாடும் தொண் டர்*
*இனத்தகத்தான், இமையவர்தம்*
*சிரத்தின்மே லான்,*
*ஏழண்டத்(து) அப்பாலான்,*
*இப்பால் செம் பொன்*
*புனத்தகத்தான்; நறும்கொன்றைப்*
*போதின்உள் ளான்.*
*பொருப்பிடையான், நெருப்பிடையான்*
*காற்றின்உள் ளான்*
*கனத்தகத்தான்; கயிலாயத்(து)*
*உச்சிஉள் ளான்*
*காளத்தி யான்; அவன் என்*
*கண்ணுளா னே.* (4)

---

மனத்து அகத்தான் - மனம் முழுவதும் நிறைந்திருக்கிறான் பெருமான். மனமே அவன். மனம் என்றால் அது ஒளி ஊற்று. அற்புதமான தெய்வ ஒளி ஊற்று. சிந்தனைகளும், செயல்களும் காட்சிகளும் ஒளிமயமாய் ஊறுகின்ற ஊற்று. அவை எல்லாம் நிறைந்திருக்கும் களஞ்சியம்.

வயதான அம்மா ஒருத்தி காரில் வந்து இறங்கினாள். கடையை நோக்கி நடந்தாள். வழியில் கிடந்த வாழைப்பழத் தோலை மிதித்துவிட்டாள். வழுக்கி விழுந்துவிட்டாள். விழும்போது அவள் வயிரத்தோடும், நெக்களசும், மாணிக்க வளையல்களும் டால் அடித்தன. ஆண்களும், பெண்களும் ஓடோடி வந்தார்கள். பெண்ணைத் தூக்கிவிட்டார்கள். எழுந்த பெண் வெட்கப்பட்டுப் பரக்கப் பரக்கப் பார்த்தாள்.

ஐம்பது வருஷங்களுக்கு முன் இது நடந்தது. இன்றும் அந்தக்காட்சி அப்படியே நம் கண்முன் வந்து நிற்கிறது. கடைத்தெரு, கார், வாழைப்பழத் தோல், சறுக்கி விழுதல், வயிர நகை, கூட்டம், வெட்கம், சோர்வு, திகைப்பு எல்லாம் அப்படி அப்படியே வந்து நிற்கின்றன. இவ்வளவு அற்புதத்துக்கும் நாமா காரணம். இறைவன்தான் செய்கிறான். தலை - மூளை. உடம்பில் எத்தனையோ தத்துவங்கள். அத்தனையும் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருந்து செயல்பட வைக்கிறது மூளை. இறைவன் மூளையாக இருந்து செயல்படுகிறான் என்பது பொருள். வாக்கு - சொல். ஒவ்வொரு சொல்லும் அருள்வாக்குத்தான். வெறும் மூச்சுக்காற்று ஒலியாகிறது. சொல்லாகிறது. பொருள் தருகிறது சமுதாயத்தையே சேர்த்து வைக்கிறது. வாழ வைக்கிறது. காற்றா இவ்வளவும் செய்கிறது. கடவுளின் காரியந்தான். ''மனத்தகத்தான் தலை மேலான் வாக்கில் உள்ளான்'' வாயார ..... இனத்தகத்தான் ஆழ்வார்கள் மூவர். ஒரு சிறு இடத்தில் மழைக்கு ஒதுங்கினார்கள். வாடை நடுக்குகிறது. இறைவனை நோக்கிப் பாடினார்கள். வாடை போய்விட்டாது. புழுக்கம், நெருக்கம் உண்டானது. பாட்டை நிறுத்தினார்கள். குளிரும் வாடையும் முன்போல் நடுக்கியது. பாட்டைக் கேட்க பெருமாளே வந்து புகுந்தார். அதனால் ஏற்பட்ட நெருக்கடி. என்று தெரிகிறது அவர்களுக்கு. செம்பொன்புனம் - தங்கச் சுரங்கம். கனம் - மேகம். எல்லாம் இறைவன் என்பது சூத்திரம். அது மனசோடு எளிதில் ஒட்டாது. கோவிலுக்கப் போய் மூர்த்தியை வழிபட வழிபட அது மனசோடு ஒட்டும். நம்முள் இருப்பது தெரியும். நாமே அது என்றும் தெரியும்.

# உண்மையைப் பார்ப்பதில் கடவுளுக்கே உத்சாகம்

5. பக்தி இருந்தால் போதும். புத்தி வந்துவிடும். ஞானம் வந்துவிடும். பண்பாடு, ஒழுக்கம் வந்துவிடும். எளிமை, இனிமை, பொறுமை எல்லாம் பக்தியைத் தேடிவரும்.

உண்மையும் அதில் ஈடுபாடுமே பக்தி. உண்மையில் ஈடுபட ஈடுபட உணர்ச்சி பெருகும். உடல் பொருள், ஆவி எல்லா வற்றையும் தத்தம் செய்ய வைக்கும் உணர்ச்சி.

தூய்மை என்பது அதுதான். ஒளி என்பதும் அதுதான். தவம், யோகம், ஞானம் என்று சொல்வது பக்தியைத் தான். உண்மை யான உணர்ச்சிபூர்வமான ஈடுபாட்டைத் தான்.

★★★★★★★

எங்கும் நிறைந்திருக்கிறான் இறைவன். எல்லாம் இறைவன் திருவருள்தான். அந்த இறைவனே பக்தனின் பக்தியைத் தேடி வருவான். பக்தன் விரும்பும் வடிவில் பக்தன் முன்வந்து நிற்பான்.

அவ்வளவு காதல் இறைவனுக்கு பக்தியின்மேல். சாஷ்திரங் களைப் படிக்கவில்லையே பக்தன். தர்க்கம், வியாகரணம், ஆராய்ச்சி இவற்றில் ஆழம் காணாதே. பக்தனுக்கு சொற்பொழிவாற்றும் திறமையோ, நூல் பல எழுதும் புலமையோ இல்லையே பக்தனிடம் என்றெல்லாம் குழப்பம் வராது இறைவனுக்கு.

உண்மை இருந்தால் போதும். இறைவன்தான் உண்மை என்கிற உணர்ச்சி இருந்தால் போதும். தேடி வருவான் இறைவன். வந்து தன்னையே (திருவருளையே - திருவடியையே) ஒப்படைத்துவிடுவான் பெருமான். காதல் செய்யின் குருடர்க்கு முன்னே குடிகொண்டு இருப்பன.

★★★★★★★

செல்வம் இருக்கிறது. பதவி இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. ஞானம் பொங்கி வழிகிறது. ஆனால் பக்தி இல்லை என்றால் அவன் மன்னாதி மன்னனாக இருந்தாலும் சரி, ஏன் உலகையே பாதுகாக்கும் திருமாலே ஆனாலும் சரி அவன்கிட்ட வர மாட்டான் பெருமாள்.

*கருடத் தனிப்பாகன்*
*காண்டற்(கு) அரியன;*
*காதல்செய் யின்*
*குருடர்க்கு முன்னே*
*குடிகொண்(டு) இருப்பன;*

கருடத் தனிப்பாகன் - கருடனை வாகனமாகக் கொண்ட திருமால். கருடன்மேல் ஏறிச் சவாரி செய்து உலகையே வலம் வருகிறவர் திருமால். அந்தத் திருமாலே கடவுள் தத்துவத்தோடு ஒன்ற வேண்டும் என்று முயற்சி பண்ணினார். நடக்கவில்லை காரியம். பிறகு பூமிக்கு வந்தார். சாதாரண மக்களோடு பழகினார். கள்ளம் கபடம் இல்லாத அவர்களுடைய நம்பிக்கையைப் பார்த்து அதிசயப்பட்டார். ஆடம்பரம், படாடோபம் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டார். எல்லாம் இறைவனுடைய செயல்தான். நமக்கென்று செயல் இல்லை என்று தெரியவந்தது. அப்பொழுதே இறைவனுடைய திருவருளும் கிடைத்தது.

இப்படி ஒரு அற்புதம் நடந்த இடத்துக்கு 'திருமாற்பேறு' என்றே பெயர் (மால்+பேறு=மாற்பேறு).

பேறு பெற்றஇடம் என்றால் என்ன பொருள். அணுவுள் அணுவாய் அண்டத்துள் அண்டமாய் பிரபஞ்சம் முழுவதும் ஆனந்த நடனமாடும் இறைவனுடைய திருவருள் அதாவது திருவடி திருமாலுக்குக் கிடைத்தது என்பதுதான்.

சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பேறா அது. எப்படி இருக்கும் அந்த அரிய பெரும்பேறு கிடைத்தவுடன்.

விழுந்து விழுந்து கும்பிட வைக்கும். தொட்டுத் தொட்டுக் கண்ணில் ஒற்றவைக்கும்.

திருமாலும் ஆனந்த பரவசத்தோடு மலரினும் மெல்லிய நடன பாதத்தை வணங்கினார்; கையால் வருடினார். கண்ணில்

வைத்து ஒற்றினார். கையால் வருட வருடப் பவளம் போல் சிவப்பேறியது பெருமானின் ஆடியபாதம். எங்கே இருக்கிறான் பக்தன் என்று தேடி வருகிறது அந்த மலரினும் மெல்லிய நடனபாதம். இனிப் பாடலின் முழு உருவம்.

*கருடத் தனிப்பாகன்*
*காண்டற்(கு), அரியன;*
*காதல்செய் யின்*
*குருடர்க்கு முன்னே*
*குடிகொண்(டு) இருப்பன;*
*கோலம்மல் கு*
*செருடக் கடிமலர்ச்*
*செவ்விதழ்ச் செங்கம*
*லக்கரத் தால்*
*வருடச் சிவப்பன*
*மாற்(பேறு) உடையான்*
*மலரடி யே* *(5)*

---

*திருமாலின் நிறம் சிவப்பில்லை. நீருண்ட மழைமேகம் போல் மினு மினு என்று ஒளிர்கிற நீல நிறம்தான். கருமையும் ஒரளவு கலந்த ஒருமாதிரி நீல நிறந்தான். ஆனாலும் அவர்கை - உள்ளங்கை சிவப்பு. செந்தாமரை மலர் போல் செக்கச் சிவந்த சிவப்பு. உயிர் வர்க்கம் முழுவதும் பசி இன்றி உயிர்வாழ உணவைக் குழைத்தும் பிசைந்தும் ஊட்டுகிற கை அந்தக்கை. அன்னத்தைப் பிசைந்து பிசைந்து சிவப்பேறிவிட்டது திருமாலின் கை. அந்தக் கை பட்ட இடம் சிவக்கத்தானே செய்யும். ''செவ்விதழ்ச் செங்கரத்தால் வருடச் சிவந்தன ... மலரடியே)*

# அன்பு ஒன்று போதும். அதுதான் இறைவனுக்குத் தேவை

6. படை பட்டாளம், அடிதடி எதற்கும் ஒத்துவராத தடித்தளம் கூட இரண்டு சொட்டுக் கண்ணீரைப் பார்த்தால் போதும். அப்படியே சரணாகதி ஆகிவிடும். தனக்கு உகந்தவர்கள் - தன்மேல் அன்பு வைத்திருக்கிறவர்கள் இவர்களில் ஒருவர் தனக்காகக் கண்ணீர் விடுகிறதைப் பார்த்தால் கல்மனமும் கரைந்து விடும்.

உயிரையே தத்தம் பண்ணச் செய்துவிடும் அன்புடையாரின் கண்ணீர். அப்பேர்ப்பட்ட அன்பின் வீரர்களைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறார். வியந்திருக்கிறார்.

குறளாசிரியரின் வியப்பு

*புரந்தார்கண் நீர்மல்க*
*சாகிற்பின் :- சாக்காடு*
*இரந்துகோள்த் தக்க(து)*
*உடைத்து - என்று*

குறளாய் எழுந்து வருகிறது.

அன்பர்களின் கண்ணீர் காரணமாக ஒருவர் உயிரையே தத்தம் பண்ணுகிறார் என்றால் அதுதான் நிலைபெற்ற வாழ்வு. அழியா வாழ்வு. தவம் செய்து பெறவேண்டும். அந்தப் புனித வாழ்வை - அதாவது 'வீரமரணத்தை' என்கிறார் குறளாசிரியர். அன்பின் திருஉருவமல்லவா அது.

★★★★★★★

இனி வேண்டியவர்கள், அன்புடையவர்கள் நம்முடைய நலன்களைப் பார்க்கிறார்கள். பெருமிதம் கொள்கிறார்கள். பெருமிதத்தில் ஆனந்தக் கண்ணீர் விடுகிறார்கள்.

அந்தக் கண்ணீர் ஒரு சொட்டு - ஒரு துளிபோதும். நம்மைப் புனிதப்படுத்தி விடும். ஆனந்தத்தில் கரைந்துவிடுவோம்.

புதிய பிறவியே கிடைத்துவிடும் நமக்கு. அன்பின் வியாபகம் கண்ணீர்த் துளியில் அப்படிக் கொலு வீற்றிருக்கிறது.

★★★★★★★

எல்லாம் வல்ல இறைவனுக்கும் அப்படியே. உண்மை யான தொண்டர்கள் ஆனந்தமாய்த் திரண்டு இறைவனை - அவனையே எண்ணி எண்ணி உருகுகிறார்கள். ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கரைகிறார்கள் என்றால், அதைப்பார்த்துப் பார்த்துப் பரவசப்படத்தானே செய்வான் பெருமான். எந்த மூலை முடுக்கில் அவர்கள் கூடினாலும் அவர்களைத் தேடி ஓடோடி வந்து விடுவான். அதற்காகவே கோயில் கொண்டு அங்கங்கே தமிழகம் முழுவதும் எழுந்தருளி இருக்கிறான் பெருமான்.

திருவையாறு ஒரு அருமையான இடம். அடியார்கள் பலர் கூடி ஆனந்த பரவசத்தோடு ஆடிப்பாடி இறைவனை வாழ்த்து வார்கள். ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டும் அப்பொழுது. அவ்வளவுதான், அப்படியே பாய்ந்தோடி வந்து விடுவான் இறைவன் அங்கு. அப்பர் சுவாமியும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான். அவரே சொல்கிறார், அன்பர்களின் ஆனந்தக் கண்ணீர் தான் இறைவன் பெறுகிற பெரும்பேறு என்று.

*துன்பிலாத் தொண்டர் கூட் டம்*
*தொழுதழு(து) ஏத்தும் உள் ளத்(து)*
*அன்பலால் பொருளும் இல் லை*
*ஐயன்ஐ யாறனார்க் கே*

வைரம் வைடூர்யம், கெம்பு, சிவப்பு முதலிய எதுவும் இந்தச் செல்வத்துக்கு இணை ஆகுமா? செல்வத்தில் செல்வம் அன்புதான். உண்மையான அன்புதான்.

★★★★★★★

அன்பு ஒன்றுதான் ஆணவத்தை நிர்மூலமாக்கும்.

'எனக்கு நிகர் யார்' என்கிற திமிர் இருந்தால் கண் குருடாகி விடும். மனமும் குருடாகிவிடும். வீட்டுக்கு விளக்காக இருந்து ஒளிவீசுகிறாளே மனையாள் அவளுடைய கருணையோ பொறுமையோ கண்ணில்படுமா ஆணவம் நிறைந்த கணவனிடம்? தாயின் தியாகமும் தெரியாது. குழந்தைகளின் அருமையும் தெரியாது.

ஆன்றோர் சான்றோரெல்லாம் தூசி மாத்திரம் ஆணவக் காரனுக்கு.

மனைவி மக்களையே உணர முடியவில்லை. ஆணவம் காரணமாக என்றால் கடவுளைப் பற்றி என்ன தெரிய முடியும் அவனால்.

உண்மை தெரிய வேண்டும் என்றால், ஆணவம் வெந்து சாம்பலாகிவிட வேண்டும். அது வெந்து நீறானால் தான் அன்பு. உண்மையான அன்பு.

எலும்பு, சாம்பல் பொடி (நீறு), சுடுகாடு மூன்றும் ஆணவம் நீங்கியவை. அதனால் பெருமானுக்கு உகந்தவை.

*தானன தன்னன தன்ன*
*தானன தன்னன தன்ன*

*என்பலால்க் கலனும் இல் லை*
*ஏறலால் ஏறல்இல் லை*
*புன்புலால் தீயும்காட் டில்*
*பொடியலால்ச் சாந்தும்இல் லை;*
*துன்பிலாத் தொண்டர்கூட் டம்*
*தொழுதழு(து) ஏத்தும்உள் ளத்(து)*
*அன்பலால்ப் பொருளும்இல் லை*
*ஐயன்ஐ யாறனார்க் கே* (6)

7. உள்ளன்போடு இறைவனை நினைத்தால் போதும். இதயம் தூய்மை பெற்றுவிடும். பளிங்கு போலச்சுத்தமாகிவிடும் உள்ளம்.

உச்சிமுதல் உள்ளங்கால் வரை கருணையாய், நீதியாய் தருமப்பிரகாசமாய் ஜொலிக்கிறது இறைவனுடைய காட்சி. ஒளிவெள்ளம் (ஆறு) தான் அவர்.

அவரைவிட்டுப் பிரியாமல் சேர்ந்தே இருக்கும் உமையம்மை போல் ஒரு பெண்ணுண்டா? எப்பேர்ப்பட்ட மாதரசி அவள்?

---

என்பு - எலும்பு. கலன் - ஆபரணம், புன்புலால் தீயும் காடு - திமிர் பிடித்துக் கொழுத்த ஊன் தசையானது வெந்து நீறாகும் சுடுகாடு. பொடி - சாம்பல், சாந்து - சந்தனம். ஏறு - காளை. ஏறல் - சவாரி, யானை, குதிரை தேர் ஒன்றும் இல்லை. சவாரிக்குக் காளைதான். அவர் தேடி அலைவது - வேண்டுவது பக்தி ஒன்றையே.

*துள்ளிப் பாயும் காளை (ஏறு) போன்றவர் பெருமாள். பசுங்கிளி போன்ற இளம் பெண்ணை (உமையம்மையை)யும் கூட்டிக் கொண்டு காளை வாகனத்தில் சவாரி செய்கிறார். சுற்றிச்சுற்றி வருகிறார்.*

*பிறைமதி சடையில் மின்ன, கங்கை துளும்ப அத்தனை வேகத்தோடு நடனமும் ஆடுகிறார்.*

*செம்பவளம் போன்ற மேனி முழுவதும் திருநீறு பூசி ஆடுகிறார். ஆட்டத்தில் வேகம் கூடக்கூட திருநீறு மறைகிறது. தீப்பிழம்பாய் ஒளிர்கிறார் பெருமான்.*

*சின்னஞ்சிறு பேதையாகிய உமையம்மைக்கு பயம் வராதா? அந்த நினைப்பே இல்லாமல் ஆனந்தமாய் ஆடிக் கொண்டிருக்கிறார் பெருமான்.*

*மூர்த்தியை உள்ளன்போடு வழிபடுகிறவர் கண்ணுக்கு ஆனந்தத் தாண்டவம் கண் முன் வந்து அப்படிக் காட்சி கொடுக்கிறது.*

*அப்பர் சுவாமிகளுக்கு எப்பொழுதும் இப்படிக் காட்சி கொடுப்பார் பெருமான்.*

*ஏறனார் ஏறுமே வி,*
*இளநிலா எறிக்கும் சென் னி,*
*ஆறனார் ஆறுசூ டி,*
*ஆயிழை யாள்ஓர்பா கம்;*
*நாறுபூங் கோலத்தில் லை*
*நவின்றசிற் றம்பலத் தே*
*நீறுமெய் பூசிநின் று*
*நீண்டெரி ஆடுமா றே!* (7)

ஏறனார் - இளங்காளை போன்ற மிடுக்குடையவர். ஏறுமேவி - சகல சக்திகளுக்கும் ஆதாரமான காளையில் அமர்ந்து. சென்னி - தலை, சடை. ஆறனார் - கருணைக் கடல். ஆறுசூடி - கங்கையை வைத்துக்கொண்டு. ஆயிழையாள் - உமாதேவி. நாறுபூஞ்சோலை - பூவாசம் வீசும் நந்தவனங்கள். நவின்ற - ஞானிகள் போற்றும். நீறுமெய்பூசி - சாம்பலை உடல் முழுவதும் பூசி. நீண்டெரி ஆடும் - கொழுந்துவிட்டெரியும் சுடர் போல அசைந்தாடுகிறார் பெருமான். ஆறே - பேஷ் பேஷ்! ரொம்ப ரொம்ப அழகு. பெண்ணைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இப்படியா ஆடுவது. கொஞ்சம் கூட வெட்கம் இல்லை பெருமானுக்கு.

8\. எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம் நீக்கமற நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம்.

புல்லில் புல்லாக இருக்கிறது. மலரில் மலராகவும், நெருப்பில் நெருப்பாகவும், நீரில் நீராகவும் நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம்.

கோடான கோடி வடிவங்களில், வண்ணங்களில் குணங்களில், செயல்களில் வேறு வேறாகத் தோன்றினாலும் அவ்வளவினும் குடி கொண்டிருப்பது ஒன்றுதான். அவ்வளவும் ஒன்றே ஒன்றுதான்.

*******

சிறியதும் பெரியதுமாக ஊர்கள் பல. கடலை ஒட்டி, மலையை அடுத்து, வயல் வெளியில், காட்டில், மேட்டில், ஏன் வறண்ட பாலைவனம் போன்ற பகுதிகளில் கூட உள்ளன ஊர்கள். மனிதர்கள். வீடு வாசல்கள், ஆடுமாடுகள், பயிர் பச்சைகள். இவை மட்டுமா? கோயில்கள், மூர்த்திகள், வழிபாடுகள், உத்சவங்கள் எல்லாந்தான்.

ஒவ்வொரு வஷ்துவிலும் ஒவ்வொரு கோலத்தில் இறைவன் காட்சி கொடுப்பது போலவே ஒவ்வொரு ஊரிலும் தனித் தனி வளமையோடு காட்சி கொடுக்கிறான் பெருமான்.

மதுரையில் சொக்கர், சிதம்பரத்தில் நடராஜர், திருவாரூரில் புற்றிடங் கொண்டார், திருக்காளத்தியில் காளத்தியப்பர் என்று ஒரு மூர்த்தியே பல மூர்த்திகளாக உலா வருகிறான் இறைவன். எல்லாம் பக்தரின் உள்ளத்தில் அமர்ந்தபடிதான்!

வேற்றுமையில் ஒற்றுமை அப்படி வெளிப்படுகிறது அற்புதந்தான்.

அப்பர் சுவாமிகள் அனுபவம் இது, அவர் கண்ட உண்மை இது.

இந்த உண்மை கவியாய் எழுந்து வருகிறதே, அதுதான் திருவருள்.

*தான தன்ன தன்*
*தான தன்ன தன்*
*பற்றற் றவர் சேர்*
*பழம்பதி யை,*
*பாசூர் நிலாய*
*பவளத் தை,*
*சிற்றம் பலத்தெம்*
*திகழ்கனி யைத்,*
*தீண்டற் கரிய*
*திருவிளக் கை,*
*வெற்றி யூரில்*
*விரிசுட ரை,*
*விமலர் கோனைத்*
*திரை சூழ்ந் த*
*ஒற்றி யூர் எம்*
*உத்தம னை*
*உள்ளத் துள்ளே*
*வைத்தே னே* *(8)*

9. தடுக்கி விழுந்தால் கடவுள்மேல் தான் விழ வேண்டும். அவர் இல்லாத இடமே இல்லை. எங்கும் அவர் தான்.

நான் என்கிற நாமே அவர்தான். நமக்குள் அவர்தான். நம்முடைய கண், மூக்கு, கை, கால் எல்லாம் அவர்தான். மனம், வாக்கு, குணம் எல்லாம் கடவுள்தான்.

நமக்கு உள்ளும் வெளியும் கடவுள் மயந்தான்.

அப்படி இருந்தும், நம்மையே தோழமை கொண்டு உறவாடுகிற கடவுளை நம்மால் நினைக்க முடியவில்லை. ஆர அமர, ஆனந்தமாக நினைத்துப் பார்த்தால் அற்புதமாக இருக்கும். வானத்துக்கும் பூமிக்குமாய் அற்புதமாகவே இருக்கும். பார்க்கப் பார்க்க அதிசயந்தான். அந்த அதிசயத்தில் நம்மை மறந்து விடுவோம். நம்மை இழந்தே விடுவோம்.

---

பழம்பதி - ஆனந்தவெளி. பாசூர் - சென்னை திருவள்ளூர் பக்கம் உள்ளது. வெற்றியூர் - உடையார் பாளையம் தாலுகாவில் உள்ளது.

குறிப்பு : என் இதயத்தில் இருக்கிற பரம்பொருள் எப்படி எல்லாம் காட்சி கொடுக்கிறாள் என்கிற அதிசயம் அதன் உருவமே கவி.

நான் என்பதைக் கரைத்து நம்மைத் தன் வயமாக்கிவிடும் அந்த அற்புதம்.

சமுத்திரக் கரையை ஒட்டி ஒரு குட்டம், சிறு குட்டம். பல வருடங்களாய் நான் என்கிற நினைப்பிலேயே இருந்தது குட்டம்.

ஒரு சமயம் சமுத்திரம் பொங்கி எழுந்தது. கரையைத் தாண்டி குட்டத்தைச் சேர்த்துக் கொண்டது. இப்பொழுது குட்டம் இல்லை. அது சமுத்திரமாகிவிட்டது. உலகம் முழுவதையும் தன் மடிக்குள் வைத்துத் தாலாட்டுகிற மாபெரும் சமுத்திரத் தாயாகிவிட்டது. வானத்தோடு இப்பொழுது அது கொஞ்சி விளையாடுகிறது. கலிபோர்னியாவிலிருந்து கன்யாகுமரி வரை ஒரே சமுத்திரமாய்க் கும்மாளிப் போடுகிறது சின்னஞ்சிறு குட்டம்.

பக்தியோடு பார்த்தால் கடவுளோடு ஒன்றலாம். பிறகு பயம் போய்விடும். ஆனந்தமயந்தான். மண்ணைப் பொன்னாக்கிவிடுகிறது பக்தி. ஆனால் அப்படிப் பார்க்க முடிகிறதா?

*சிந்திப் பரியன,*
*சிந்திப் பவர்க்குச்*
*சிறந்துசெந் தேன்*
*முந்திப் பொழிவன,*
*சிந்தை நிறைந்திட;*
*மொய்த்திருண் டு*
*பந்தித்து நின்ற*
*பழவினை தீர்ப்பன,*
*பாம்புசுற் றி*
*அந்திப் பிறையணிந்(து)*
*ஆடும்ஐ யாறன்*
*அடித்தல மே* (9)

பந்தித்து நின்ற - முடுச்சுப் போட்டு கட்டி வைத்திருக்கிற

*10. நினைத்த மாத்திரத்தில் கண் முன் வந்து நிற்கிறான் இறைவன். அப்படியானால் அவன் மனதிலேயே குடிகொண்டு வாழ்கிறவனாகத்தான் இருக்க வேண்டும். நம் உணர்ச்சியோடு உணர்ச்சியாய்ச் சேர்ந்தே இருக்க வேண்டும் அவன்.*

*எத்தனையோ பிறவிகளில் - கருவுற்ற நான் முதலாகவே உறவும் பழக்கமும் இருப்பதனால்தான் உணர்ச்சியோடு உணர்ச்சி யாய் ஒட்ட முடிகிறது.*

*இறைவனுடைய உறவு பழமைக்கும் பழமையானது. ஆனால் புதுமைக்கும் புதுமையாக இருக்கும் அது. கண்டதும் காதல் என்பது அந்த உறவை வைத்துத்தான்.*

*கோயிலுக்குப் போய் மூர்த்தியைப் பார்த்தஉடனேயே வசம் அழிந்துப் போகிறது. பரவச நிலை வருகிறது. அதுதானே காதல். கண்டதும் காதல் என்றால் வேறென்ன?*

★★★★★★★

*மூர்த்தி, வழிபாடு, பரவசம் - அதாவது தன்னை இழந்தநிலை பெருகப் பெருக நான் என்பது ஒழிந்து போகிறது. அவன் மயம் ஆகிறது. இறைவனிடம் ஒப்பாக ஒப்புவித்து விடுகிறோம் நம்மை. அதுதான் பக்தி. அதுதான் காதலாய்க் கசிந்துருகும் பக்தி.*

★★★★★★★

*கடவுள் தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கிறவர் அப்பர் சுவாமிகள். வேறு நினைப்பே இல்லாமல் ஒரே நினைப்பில் நிற்கிறவர் அப்பர் சுவாமிகள்.*

*சமாதி நிலை - ஒழிவில் ஒடுக்கம் என்னும் பேரானந்த நிலை. பக்திநிலை என்பது. அதுதான் கோவிலில் மூர்த்தியை வழிபடும்போது அதற்கு சூடு பிடிக்கும். மின்சாரம் பாய்ந்தது போலக் கிளர்ச்சி உண்டாகும். பரபரப்பு ஏற்படும்.*

*தன்னை அர்ப்பணிக்கும் பக்தியே காதலாய்க் கனியும் நிலை அது.*

*காதல் வயப்பட்டுக் கழிப்பாலை இறைவனிடம் கரைகிறாள் பெண். பெண்ணின் நிலைகண்டு செவிலித்தாய் சொல்வதாக விஷயம்.*

*தானான தானனதன்*
*தானனதன் தானனதன்*
*தானதன் ன*

*பழிஇலான் புகழுடையான்*
*பால்நீற்றன் ஆனேற்றன்*
*என்கின் றாளால்,*
*விழிஉலாம் பெருந்தடங்கண்*
*இரண்டல்ல மூன்றுளவே*
*என்கின்றா ளால்,*
*சுழிஉலா வருகங்கை*
*தோய்ந்தச டையவனே*
*என்கின்றா ளால்;*
*கழிஉலாம் சூழ்ந்த*
*கழிப்பாலை சேர்வானைக்*
*கண்டாள்கொல் லோ!* (10)

*11.* இறைவனைப் பற்றிய, இறைவனுடைய திருவருளைப் பற்றிய நினைப்பிலேயே இருப்பார்கள் பக்தர்கள். அவர்கள் தவசீலர்கள். தவயோகிகள். அவர்களுடைய மனந்தான் இறைவனுக்குக் கோயில். அவர்களுடைய வாக்கு, செயல் எல்லாம் இறைவனுடைய சந்நிதானங்களே.

★★★★★★★

பழிகிலான் - தர்மப்பிரபு, அருளாளன். பால்நீறு - திரு(வெண்) நீறு. ஆனேறு - காளை, ஆன். பசு. ஆன்ம தத்துவத்தின் அடையாளப் பெயர் பசு. விழிஉலாம் - அகலவிரித்து அப்படியும், இப்படியும் பார்க்கும். சுழிஉலா - சுழிசுழியாக சுழல்விட்டு. கழிஉலாம் சூழ்ந்த - உப்பங் கழிகள் உல்லாசமாகச் சுற்றி சுற்றி வரும். கழிப்பாலை இது சிதம்பரத்துக்கு தென் கிழக்கே மூன்றரைமைல் தொலைவில் உள்ளது. கழிப்பாலை என்று பெயரில்லை இப்பொழுது இந்த ஊருக்கு. கோவிலும் அங்கு இல்லை.

குறிப்பு: சாமி கும்பிட்டுவிட்டு வருகிறேன் என்றுதான் கோயிலுக்குப் போனாள் பெண். போன இடத்தில் பெருமானையே பார்த்துவிட்டான். ஈடுபாடும் வந்துவிட்டது. மனசையே பறிகொடுத்து விட்டாள் என் பெண். இனி நான் என்ன செய்ய என்று சொல்லித் தாய் கையை நெறிக்கிறதாக விஷயம். அதுதான் செய்யுளுக்குத் துறை. தாயின் தவிப்பை எப்படி கையில் எடுத்துக் காட்டுகிறது தமிழ். அதுதான் கவி.

இறைவனும் பக்தரும் சேர்ந்து இருக்கிறார்கள். அப்படிச் சேர்ந்தே இருப்பதால் - வேற்றுமை இன்றி ஒன்றாகவே இருப்ப தால் மனம் மறந்துவிடும். மறந்ததோடு நிற்காது மனம். வேண்டும் என்றே இறைவன் தன்னைவிட்டு எங்கோ போய் விட்டதாகவும், அவனைத் தேடி எங்கெங்கோ - திருவொற்றியூர், திருவாலங்காடு, மதுரை என்றெல்லாம் போய்த் தேடுவதாகவும், வேதனைப் படுவதாகவும் கனவு காண்கும் மனம்.

''கொஞ்சம்கூட இரக்கம் இல்லையா உம்மிடம் பெருமானே! இருந்தால் இப்படியா தவிக்க விடுவீர் என்னை'' என்றெல்லாம் மறுகவைக்கும். அந்தப் பொல்லாத மனம்.

இது ஒரு அபூர்வமான மனநிலை.

அப்பர் சுவாமிகளும் அப்படி எல்லாம் அனுபவப் பட்டவர்தான். அனுபவத்துக்குத் தமிழ் கவி உருவம் கொடுக்கிறது. அற்புதமாகவே கொடுக்கிறது.

*கருவுற்ற நாள்முத*
*லாக உன் பாதமே*
*காண்பதற் கு*
*உருகிற்றென் உள்ளமும்;*
*நானும் கிடந்தழிந்(து)*
*எய்த்தொழிந் தேன்;*
*திருவுற்றி யூரா!*
*திருவால வாயா!*
*திருவாரூ ரா!*
*ஒருபற்றி லாமையும்*
*கண்டிரங்! காய்கச்சி*
*ஏகம்ப னே! (11)*

---

கருவுற்ற நாள் முதலாக - 'நான் இன்னான்' என்கிற அடையாளத்தில் உருப்படியாக வெளிப்பட நீ என்று திருவுளம் கொண்டாயோ, அன்றுமுதல் எய்த்தொழிந்தேன் - தவித்துப் போனேன்.

குறிப்பு: எங்கெங்கோ போய் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் காஞ்சி ஏகாம்பரரிடம் வந்து முறையிடுகிறார். இப்பொழு தாவது உன் முகத்தைக் காட்டு என்று. கண்ணில் போட்டிருக்கிற கண்ணாடியை அங்கே இங்கே என்று தேடுகிற ஆத்திரந்தான். ஆர்வப் பெருக்குத்தான்.

# அடடா! என்ன ஆனந்தம்

**12.** ஒரு பொருள் மறைந்து மறைந்து தோன்றினால் அதற்கு அழகு அதிகம். நேருக்கு நேர் நின்று தோன்றுவதைவிட பத்து மடங்கு இருபது மடங்கு அழகு பெருகித் தோன்றும். அழகு மட்டுமல்ல சிறப்பும் பல மடங்கு பெருகும். அது காரணமாக அதனிடம் ஆசை அதிகமாக உண்டாகும். காதல் வெறியே உண்டாகிவிடும் அதனிடம்.

அடியார்கள் கூடவே இருக்கிறார் பெருமான். நன்றாக அனுபவிக்கிறார்கள் பெருமானை அடியார்கள். கொஞ்சம் மறைந்தும் ஒதுங்குகிறார் பெருமான். விளையாட்டாகத்தான் கொஞ்சம் மறைந்து ஒளிகிறார். அவ்வளவு தான் பிரிவாற்றா மையில் தவிக்கிறார்கள் அடியார்கள். ஏங்கிக் கதறுகிறார்கள். பிறகு வந்து ஒட்டுகிறார்.

மறைந்து தோன்றுகிறார் பெருமான். அப்பொழுது அடியார்கள் பெறுகிற ஆனந்தத்துக்கு எல்லை உண்டா?

எப்படி எப்படி எல்லாமோ இருக்கும் அந்த அனுபவமும் ஆனந்தமும். அந்த ஆனந்தத்தையே கவியாக வடித்துக் கொடுக்கிறது தமிழ்.

*தான தன்னன*
*தான தன்னன*

*மாசில் வீணையும்,*
*மாலை மதியமும்,*
*வீசு தென்றலும்,*
*வீங்கிள வேனிலும்,*
*மூசு வண்டறைப்*
*பொய்கையும் போன்றதே:-*
*ஈசன் எந்தை*
*இணையடி நீழலே!* (12)

13. எங்கும் நிறைந்திருக்கிறது மின்சாரம். ஆனாலும் எங்கும் நிற்காமல் ஓடிக்கொண்டே இருப்பதாகவே தோன்றுகிறது. இறைவன் திருவருளும் அப்படியே. அங்கிங்கெனாதபடி எங்கும் பூரணமாய் நிறைந்திருக்கிறது அருள். ஆனால் எங்கோ போவது போலவும் திரும்ப வருவது போலவும் தெரிகிறது. அதில் ஒரு தனி இன்பம் இருக்கத்தானே செய்கிறது. வீணைக்குள்ளும் மதிக்குள்ளும் புகுந்து புகுந்து வந்தது என்று சொல்வதில் தவறு ஒன்றும் இல்லைதானே.

வீணை அதன் நாதம், இசை எல்லாம் இனிமைதான். சுகந்தான். ஆனால் இறைவனுடைய அருள் எங்கே, வீணை எங்கே. 'சுண்ணாம்பு போலத் தூயவெள்ளை வெண்ணெய்' என்றால் வெண்ணெயும் சுண்ணாம்பும் ஒத்துப்போகுமா?

கடவுளும் கடவுளின் திருவருளும் தனி. அதற்கு இணை அதுதான். அதை அனுபவிக்கிறவர்களுக்குத் தான் தெரியும். ஒப்பற்றது அது என்பது.

★★★★★★★

அனுபவத்தையும் ஆனந்தத்தையும் ஒரளவாவது மற்றவர் களுக்குச் சொல்ல வேண்டுமே. அதற்காக வீணை, நிலா, தென்றல், வேனில், பொய்கை என்றெல்லாம் சொல்ல வேண்டி இருக்கிறது.

---

மாசில் - குற்றமற்ற, திருத்தமான, தெளிந்த பண்பாடும் வீணை. வீங்கிளவேனில் - மெத்தென்று இதமான இளவேனில் காலம், தென்றல் வீசும் பருவம். மூசு வண்டு அறைப்பொய்கை - சுதியோடு ரீங்காரம் பண்ணியபடியே பூவில் வந்துமோதும் வண்டு, அப்படி வந்து வண்டு மோத வசதியாக மலர்களை விரித்து வைத்திருக்கிறது தாமரைக் குளம், இணைஅடி - திருவடிகள். அதாவது திருவருள். நீழல் - நிழல். உலகம் எல்லாம் உதிக்கிறதும் அங்குதான், அடைக்கலம் புகுவதும் அங்குதான். திருவருளாகிய திருவடி நிழலில் தான்.

குறிப்பு: ஒட்டி நின்று பார்ப்பதைவிட எட்டி (பிரிந்து) நின்று பார்க்கிறபொழுது ஒரு பொருளின் அருமையும் பெருமையும் தெளிவாய்த் தெரியும். ''ஈசன் கழலருமை வெவ் வினையில் காண்மின்'' எவ்வளவு பெரிய உண்மை அனுபவம் இது.

ஆனாலும் உண்மையை மறைக்கக் கூடாது. விளங்கினாலும் சரி, விளங்கவில்லை என்றாலும் சரி சொல்லிவிட வேண்டும் உண்மையை என்று ஆத்திரம் வருகிறது அப்பர் சுவாமிகளுக்கு.

இறைவனுக்கு நிகர் இறைவன் தான். வேறு ஒன்றும் இல்லை என்றே அடித்துச் சொல்கிறார். அடித்துச் சொல்வதிலும் ஒரு பக்குவம், கனிவு, பரிவு.

★★★★★★★

கணவன், குழந்தை, குடும்பம், பண்பாடு, நீதி இவற்றைப் பேணி உபசரிப்பதே - உயர்த்துவதே பெண்ணின் லட்சியம். அதற்காகத் தன்னையே அர்ப்பணிக்கிறாள் பெண்.

பெண்ணின் பொறுமையும் கருணையும் தியாகமும் உன்னதமானவை. அதைப் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பெருகும்.

*"பனிமலர்க் குழல் பாவைநல்லார்"*

இனி அரசனோ, குறிப்பிட்ட ஒரு குடும்பத்தை மட்டுமல்ல நாட்டையே, நாட்டின் குடிமக்கள் எல்லோரையுமே பாதுகாக்கிறான். நாட்டின் நலம், மக்களின் நலம் இவற்றுக்காகவே பதவியில் இருக்கிறான். நெருக்கடி பலவற்றுக்கும் ஆளாகிறான். ஆனால் லட்சியத்தை விடுவதில்லை அரசன்.

அரசனுடைய லட்சியத்தைப் பார்க்கிறதிலும் ஆனந்தந்தான்.

*"தனிமுடி கவித்(து) ஆளும் அரசு"*

★★★★★★★

இறைவனுடைய திருவருளுக்கு முன்னால் பெண்ணின் லட்சியம், அரசின் லட்சியம் எல்லாம் சாதாரணம். இறைவனுடைய திருவருளும் அதன் இனிமையும் தனி. அதற்கு ஈடு அதுதான். திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமானிடமே இதைச் சொல்கிறார் அப்பர் பெருமான்.

*கனியி னும், கட்டி*
*பட்ட கரும்பினும்,*
*பனிம லர்க்குழல்*
*பாவைநல் லாரினும்,*
*தனிமு டிகவித்(து)*
*ஆளும் அரசினும்*
*இனயன் தன் அடைந்*
*தார்க்கிடை மருதனே* *(13)*

*14.* என்ன இருக்கிறது இருட்டில். ஒன்றும் இல்லை. இலையில் போட்ட சாதமும் இல்லை. சாம்பாரும் இல்லை, அவியல் பொரியலும் இல்லை.

பக்குவமாகப் பரிமாறிய மனையாளையும் காணவழி இல்லை. பக்கத்திலிருந்து சாப்பிடுகிற மக்களையும் பார்க்க முடியவில்லை.

எல்லாம் உண்டுதான். ஆனால் பிரயோசனம் இல்லை. ஒன்றுக்கொன்று உறவே இல்லாமல் போய்விட்டது.

இருட்டு ஒன்றுதான் மிச்சம். அதைப் பிடித்தே எல்லோரும் தொங்கினார்கள். அப்பொழுது ஒரு பொறியைத் தட்டினர் உடனேயே.

வெளிச்சம் வந்தது. எல்லாம் வந்துவிட்டன. கண்ணுக்கு முன்னாலேயே வந்து விட்டன. கண்ணுக்கு உள்ளேயும் புகுந்து விட்டன. மனையாள், மக்கள், இலை, சாதம் அவ்வளவும்.

---

கனி - மாம்பழம், பலாப்பழம் முதலியன. கட்டிபட்ட கரும்பு - கல் கண்டு, வெல்லம் என்று தருகிற கருப்பஞ்சாறு. பாவை நல்லார் - பொறுமை பூத்துக் குலுங்கும் பெண். தனிமுடி - பேரரசு.

குறிப்பு: இறைவனைத் தஞ்சம் என்று அடைகிறவர்கள் இளைஞர்களாகவும் இருக்கலாம். வயதான முதியவர்களாகவும் இருக்கலாம், குழவி - பாலன் என்கிற பருவம் உடையவர்களாகவும் இருக்கலாம். மாம்பழம், பலாச்சுளை முதலியன அத்தனை பருவத்தார்க்கும் ஒத்து வருமா? வராது. இறைவனுடைய அருளோ எல்லாப் பருவத்தார்க்கும் ஒத்துவரும். இன்பம் பயக்கும். நன்றாகப் பொருந்தி நிற்கும். ''கனியனும்---இனியன்'' தாள் திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமாள்.

எங்கும் நிறைந்திருக்கிறது மின்சாரம். அது ஒரு பொறியின் கையில் சிக்கி, இருக்கிறது. பொறியின் கையில் நம் கையை வைக்க யாதொரு சிரமமும் இல்லை. வைத்த உடனே வெளிச்சம்.

இறைவனை - அவனுடைய திருவருளை உணர்வது எளிதினும் எளிது. பொறியைத் தட்டுவதை விட எளிது.

உண்மையை உணர்ந்த மாத்திரத்திலேயே வெளிச்சம். கடவுளே கண் முன் வந்து நிற்பார். நம்மையே கண்கொட்டாமல் பார்ப்பார். ஆசையோடு பார்ப்பார். காதல் பைத்தியம் போல ஏங்கி ஏங்கி பார்ப்பார். நமக்கும் அந்தப் பைத்தியம் காதல் பைத்தியம் வரத்தானே செய்யும். பக்திப் பெருக்கோடு வரத்தானே செய்யும்.

காட்டுக்குப் போய் தவம் செய்யவோ, ஹடயோகம் பண்ணவோ தேவை இல்லை. குருகுலவாசம் செய்து தத்துவப் பாடம் பயின்று வேதாந்தி சிந்தாந்தி என்று பட்டம் பெறவும் வேண்டியதில்லை. உணர்ச்சி இருந்தால் போதும். வந்து கொண்டே இருக்கும் நினைப்பு.

அப்பர் சுவாமிகளுக்கு அடிக்கடி அந்த நினைப்பு வரும். அவரே சொல்கிறார்.

*பித்த னைப், பெரும்*
*தேவர்தொ ழப்படும்*
*அத்த னை, அணி*
*ஆமாத்தூர் மேவிய*
*முத்தி னை அடி*
*யேன்உள் முயல்தலும்*
*பத்தி வெள்ளம்*
*பரந்து சுரந்ததே* *(14)*

---

*(அணி)* ஆமாத்தூர் - விழுப்புரத்துக்கு வடமேற்கே நான்கு கல் தொலைவில் உள்ளது. சுவாமியின் பெயர் அழகர். அம்பாளின் பெயர் முத்தை வென்ற முறுவலாள். பித்தன் - ஆசைப் பெருக்கில் பைத்தியம் ஆனவன், இறைவன்.

# கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார் கடவுள்

*15. நினைத்த உடன் எதிரில் வருகிறான். விழுங்கி விடுவது போலப் பார்க்கிறான். ஆசையோடு பார்க்கிறான். பார்த்துக் கொண்டே இருக்கிறான். எங்கும் நிறைந்த இறைவன் தான்.*

*பார்த்தால் ஒரு மாதிரி வித்தியாசமாக இருக்கிறதே; ஒருவகையில் சுபாவமோ (பித்துப் பிடித்த ஆசாமியோ) என்று எண்ணிவிடக் கூடாது இறைவனை.*

*விபரம் தெரிந்தவர் அவர், யார் யார் எப்படி எப்படி என்பதில் அவருக்கு அத்துபடி. தன்னை நினைக்கிறவர்கள், புகழ்கிறவர்கள், வழிபடுகிறவர்களில் உண்மையானவர்கள் யார் யார்? தன்னலவெறியர்கள் யார் யார் என்பதைத் துல்லியமாகக் கணக்கெடுத்து விடுவார்.*

*அவர் பார்க்கிற பார்வையிலேயே ஒரு தராசு இருக்கிறது. தங்கத்தராசு அது, விலை மதிப்பற்ற வயிரவயிடூரியங்களையும் அதில் வைத்து நிறுக்கலாம். ஓட்டை உடைசல், ஈயம், பித்தளை என்று இவற்றைப் போட்டும் நிறுக்கலாம்.*

*தட்டில் எதைப் போட்டு நிறுத்தாலும் தராசின் நாக்கு (முனை) அங்கே இங்கே என்று தடுமாறாது. மஞ்சாடி பிசகாமல் எடையைக் காட்டிவிடும் அந்தத் தங்கத்தராசு.*

*எப்பொழுதும் அவரிடம் பேரேடும் இருக்கும், குறிப்பும் இருக்கும். அவர் மனதிலேயே அந்தக் கணக்குப் புத்தகங்கள் இருக்கும். உடனுக்குடன் எடையை அவற்றில் ஏற்றி (குறித்து) விடுவார் பெருமான்.*

*இவனை நம்பலாம், இவனை நம்பக் கூடாது என்கிற விபரம் குறிப்பிலும் பதிவாகிவிடும். பேரேட்டிலும் ஏறிவிடும். ஒருவராலும் ஏமாற்ற முடியாது இறைவனை.*

*தொழுது தூ மலர்*
*தூவித் துதித்து நின்(று)*
*அழுது காமுற்(று)*
*அரற்றுகின் றாரையும்;*
*பொழுது போக்கிப்*
*புறக்கணிப் பாரையும்*
*எழுதும் கீழ்க்கணக்(கு)*
*இன்னம்பர் ஈசனே!* *15)*

*16.* கண்ணை மறைப்பது ஆணவந்தான். அது இருக்கும் வரை இருட்டுத்தான். குருட்டுக் கண்ணுக்கு எப்படி உண்மை தெரியும்?

அக்னி சொரூபியாகிய (தீவண்ணனாகிய) இறைவனோ கையிலும் அக்கினியை வைத்திருக்கிறான். 'உன்னிடம் இருக்கிறது ஆணவம். அதை என் கையில் நீ போடு. நெருப்பில் வெந்து சாம்பலாகிவிடும் ஆணவம்' என்று அன்பர்களிடம் கேட்கிறான் இறைவன். பிச்சை கேட்பதுபோல் கெஞ்சிக் கூத்தாடி நயந்துக் கேட்கிறான் பெருமான், இரவாடும் பெருமான்.

*'அங்கையினில் அனல் ஏந்தி*
*இரவாடும் பெருமான்'*

இரவாடும் பெருமான் - பிச்சைக் கேட்கிறான் பெருமான். இரவு - யாசகம்.

''இதோ, அக்கினியில் ஆணவத்தைப் போட வருகிறார்கள். ஆணவம் அற்றபின் உற்றதுணை ஆவார்கள் நமக்கு என்று'' இறைவனுக்கு ஒரே ஆனந்தம். ஆனந்தக் கனவு.

---

தூமலர் - பார்ப்பவரின் உள்ளத்தைத் தூய்மையாக்கும் புஷ்பம். அழுது - ஆனந்தக் கண்ணீர் பெருக. காமுற்று - ஆசை பொங்க, அரற்றுகின்றார். ஆடலரசே, அம்பரலத்தரசே, அம்மையப்பா என்று கூவி அழைக்கிற மெய்யடியார்கள்; பொழுதுபோக்கி புறக்கணிப்பார் - ஊர்வம்பு பேசிக் காலம் கழிக்கிறவர்கள்.

ஆனந்தத்தில் ஆட்டமே வந்து விடுகிறது. பேயாட்டமே ஆடிவிடுகிறார் பெருமான். தலையில் - சடையை முடித்திருக்கிற அரவு பதறித் துள்ள, முடிச்சு அவிழ்ந்ததால் சடைமுடி நாலாபக்கமும் சிதறி ஓட ஆடிக் கொண்டே வருகிறார். அன்பர்களின் வீட்டு வாசலுக்கே வந்து கேட்கிறார் யாசகம். போடு, ஆணவத்தைப் போடு என்றே கேட்கிறார்.

*'அரவாடச் சடை தாழ*
*அங்கையினில் அனல் ஏந்தி*
*இரவாடும் பெருமான்*

கேட்டவுடன் இறைவன் கையில் ஆணவத்தை எடுத்துப் போட்டுவிட வேண்டும். இல்லையென்றால் தொலைந்தோம். கரவு என்றால் ஆணவம். திருட்டுத் தனமாக நம்முள் வந்து உட்கார்ந்து கொண்டது ஆணவம். உட்கார்ந்தது மட்டுமல்ல நம்மை ஆட்டிப் படைக்கிறது. அதன் வாலை நறுக்கிட வேண்டும் என்று சில சமயம் தோன்றும். ஆயத்தமும் ஆவோம். ஆனால் அது கண்ணில்ப் படாது. மறைந்து கொள்ளும். ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவிப் புகுந்து கொள்ளும்.

உள்ளுக்குள் இருந்தபடியே இதயத்தைக் கல்லாக்கிவிடும் ஆணவம். கல்லிலிருந்து எப்படி ஊறும் உணர்ச்சி.

அன்பில்லை, ஆர்வம் இல்லை, உணர்ச்சியே இல்லை நம்மிடம் என்றால் என்ன செய்வார் பாவம் கடவுள். சிவனே என்று கன்னத்தில் கையை ஊன்றி ஒடுங்கிவிடுவார். அப்புறம் என்ன நம்மை சட்டடியாய் ஒடுக்கிவிடும் ஆணவம்.

அது (ஆணவம்) தொலைந்தால் போதும், இறைவன் எழுந்தருளி நிற்பார். நம்மோடு கலந்து மருவுவார். நீரும் நீரும் கலப்பதுபோல இரண்டறக் கலந்து விடுவார். விரவிக் கலந்துவிடுவான். நம்மோடு இறைவன்.

*தானான தானான*
*தானான தானனதன்*

*கரவாடும் வன்நெஞ்சர்க்(கு)*
*அரியானைக், கரவிலார்பால்*
*விரவாடும் பெருமானை*
*விடைஏறும் வித்தகனை*
*அரவாடச் சடைதாழ*
*அங்கையினில் அனல்ஏந்தி*
*இரவாடும் எம்மானை*
*என்மனத்தே வைத்தேனே.* *(16)*

நம்மோடுதான் இருக்கிறார் கடவுள். நாமாகவே இருக்கிறார் கடவுள். அணுவுள் அணுவாக நிறைந்திருக்கிறார். பேரண்டம் முழுவதும் அவர்தான். அவரில்லாமல் ஒன்று இல்லை.

நாம் அவரைப் பார்த்துவிடாதபடி திரை போட்டு மறைத்துவிட்டது ஆணவம்.

ஆணவத்தை வேரறக் களைந்து நிர்மூலம் ஆக்கிவிட்டால் தகதக என்று பிரகாசிக்கிறார் கடவுள். அவர்தான் நாம். நாமாகவே இருக்கிறார் அவர் என்று தெரிகிறது.

இதுவரை தெரியவில்லைதான் அது. இப்பொழுது தெரிகிறது. தெரியாதது தெரிந்தால் ஆனந்தந்தானே. ஆனந்த வெறிதானே? அந்த ஆனந்தவெறிதான் ''எம்மானை என் மனத்தேவைத் தேனே'' என்று துள்ளி விளையாடுகிறது. ''இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே'' என்றெல்லாம் கைகொட்டி ஆட வைக்கிறது.

அற்புதமான பாடல். அப்பர் சுவாமிகளின் உள்ளுணர்ச்சியும் அதன் வேகமும் பாடலாய் எழுந்து வருகிறது. கவி உருவம் என்பது அதுதான்.

---

விடை ஏறும் வித்தகன் - பேரண்டம் முழுவதும் நிறைந்த பரதத்துவத்தில் நிறைந்து நிற்கும் சக்தி. அதுதான் விடை. அதாவது காளை. அரவு - பாம்பு. திசைகள் தாம் சடை. நட்சத்திரக் கூட்டமாகிய (ஆகாய கங்கை) பால்வெளிதாள்பாம்பு.

17. "கடவுள் இருக்கிறார். அவர் ஒருவரே இருக்கிறார். அவரைத் தவிர வேறு ஒன்றும் இல்லை" என்று தெரிய வேண்டும். அப்படித் தெரிவது தான் உண்மை. அந்த உண்மை மனதில் நிற்க வேண்டும். அக்கம்பக்கம் நழுவிப்போய்விடக் கூடாது உண்மை.

உண்மையானது உணர்ச்சிமயமாய் உள்ளத்தில் இருக்கவேண்டும். ஒளிவிட்டபடியே எப்பொழுதும் இருக்கவேண்டும்.

★★★★★★★

நெருப்பு (உஷ்ணம்) என்பது எங்கும் இருக்கிறது. எல்லாவற்றிலும் இருக்கிறது. சிக்கிமுக்கிக் கல்லிலும் தீப்பெட்டியிலும் மட்டுமல்ல பூமியில் இருக்கிறது. நீரிலும் இருக்கிறது. விறகுக்குள் எப்படி நிறைந்திருக்கிறதோ அப்படியே சகல வஷ்துக்களுக்குள்ளும் நிறைந்திருக்கிறது தீ.

கடவுள் மாதிரித்தான் நெருப்பும். அதாவது உஷ்ணமும், கடவுளும் அப்படித்தானே? அணுவுக்குள் அணுவுக்குள் அணுவுக்குள் என்று நிறைந்து அண்டம், அகண்டம், பேரண்டம் எங்கும் ஒரே தன்மைத்தாய் நிறைந்து தானே இருக்கிறார்.

*'விறகில்த் தீயினன்'*

இனி வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோ இனத்தாரிடம் போய் பசுவை பற்றிச் சொன்னால் விளங்காது. அவர்களுக்கு பாலைப் பற்றியும் தெரியாது, நெய்யைப் பற்றியும் தெரியாது. அப்படியிருக்க ஒரு குவளைப் பாலைக் காட்டி "இந்தப் பாலுக்குள் தான் அதோ இருக்கிறதே நெய் அது இருந்தது" என்று சொன்னால் எடுபடுமா நம் சொல்.

உண்மை என்னவென்றால் பாலுக்குள்ளேதான் இருந்தது நெய். கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்தது நெய்.

கடவுளும் அப்படியே எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறார். கண்ணைத் திறந்து பார்க்கிறவர்களுக்கு ஜெகஜோதியாகவே அவர் தெரிவார். சிற்றெறும்பிலிருந்து நட்சத்திரம் வரை எல்லாவற்றிலும் அவர் இருக்கிறது தெரியும்.

பார்க்க முடியாதவர்களுக்கு?

*விறகில் தீயினன்*
*பாலில்படு நெய்போல்*
*மறைய நின்றுளான்*
*மாமணிச் சோதியான்.*

எங்கும் கடவுள்தான். எல்லாவற்றிலும் கடவுள்தான். ஆனாலும் தலை மறைவாகத்தான் இருக்கிறான்.

தாராளமாக வந்து நடமாடுகிறார் கடவுள் என்றால் சும்மா இருப்பானா மனிதன். அவரையே பினாமியாகப் போட்டு சொத்தை வாங்கிக் குவித்து விடுவான் மனிதன். அதோடு விடுவானா மனிதன்? அவரையே அடமானம் வைப்பான். அடமானத்தை 'மேடோபர்' போட்டு, கிரையம் வேறு பண்ணி பணத்தை வாங்கிக் கொண்டு போய் விடுவான் மனிதன்.

என்ன செய்வார் அப்பாவிக் கடவுள்? அன்னை உமையாளு(சக்தி)க்குப் பதில் சொல்ல வேண்டாமா அவர்?

அதனால் பம்மிப்பம்மி ஒவ்வொன்றிலும் மறைந்து மறைந்து ஒளிர்கிறார்.

''மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்'' எப்படி மறைந்து நெளிந்தாலும் பக்தர்கள் கண்டுகொள்கிறார்கள் பெருமானை.

தத்துவ ஆராய்ச்சியை வைத்தல்ல. எல்லாம் அவள் செயல் என்கிற உணர்ச்சியின் மூலமாகத்தான் கண்டு தெளிகிறார்கள்.

கோயிலுக்குப் போகிறார்கள். கோபுரத்தைக் கும்பிடு கிறார்கள். மண்டபம், ஓவியம், கொடிக்கம்பம், நந்தி எல்லா வற்றையும் அனுபவிக்கிறார்கள். மூர்த்தியை வழிபடுகிறார்கள். அபிஷேகம், அலங்காரம் எல்லாம் உள்ளத்தை உருக்கி விடுகின்றன அவர்களுக்கு.

பாடல்கள், அடியார் கூட்டம், உத்சவம், மேளம், நடனம் என்று எல்லாம் இதயத்தைப் பிசைந்து விடுகின்றன.

கோயிலோடும், மூர்த்தியோடும், வழிபாட்டோடும் உறவே ஏற்பட்டுவிடுகிறது. திருமணம், குழந்தைப்பேறு, காதுகுத்து, புதுமனை, கல்வி, விதைப்பு, அறுவடை, வருஷப் பிறப்பு, பசு, நந்தவனம் என்று வாழ்க்கையின் ஒவ்வொரு

துறையிலும் விழா என்கிற பெயரில் கடவுளை வைத்து அவரோடு உறவைப் பெருக்கிக் கொள்கிறோம். உணர்ச்சியான உறவை ஒவ்வொரு செயலிலும் வைத்து அழுத்த அழுத்த ஒளி பிறக்கிறது. பார்வை கிடைக்கிறது. கண்ணைத் திறந்து பார்த்தாலோ அவர் ஒருவர்தான். வேறு ஒன்றும் இல்லை.

*விறகில்த் தீயினன்,*
*பாலில்படு நெய்போல்*
*மறைய நின்றுளான்*
*மாமணிச் சோதியான்;*
*உறவு கோல்நட்டு*
*உணர்வு கயிற்றினால்*
*முறுக வாங்கிக்*
*கடையமுன் நிற்குமே* *(17)*

18. கோயில், மூர்த்தி, பாட்டு, உத்சவம் தேர், அடியார் கூட்டம், எல்லாம் இயல்பானவைதான். மனசோடு ஒட்டும் லகுவான விஷயங்களே.

கல்மனசையும் உருக்கிவிடம். மேலே குறிப்பிட்ட மூர்த்தி, வழிபாடு முதலிய சமயப் பண்புகள்.

இத்தனை எளிதான காரியங்கள் கையில் இருக்க அவற்றை உதறி எறிந்துவிட்டு தத்துவம், ஆராய்ச்சி, தர்க்கம் என்று ஏன் சிரமப்பட வேண்டும்.

அதுதான் மனுசனுடைய தலைஎழுத்து.

*பேதைமை என்ப(து) ஒன்று*
*யாதெனில்? - ஏதம்கொண்டு*
*ஊதியம் போக*
*விடல்.*

மனுசனையும் அவன் ஜாதகத்தையும் எப்படிப் பரிவோடு பார்க்கிறார் குறளாசிரியர். அப்படிப் பார்க்கிறதுதான் பார்வை.

---

கோல் - மத்து. கயிறு - தாம்புக்கயிறு. முறுகவாங்கி - நுங்கும் நுரையுமாக மோரானது பொங்கப் பொங்கக் கடைந்து.

ஏதம் என்றால் துன்பம். ஊதியம் என்றால் இன்பம். கையில் இருக்கிற வயிரத்தை எறிவான்; கண்ணாடிக் குண்டுகளைப் பொறுக்குவான்.

சரியான பேதையடா மனுசன்.

★★★★★★★

நன்றாகக் குளித்து முழுகி திருநீறிட்டு சந்தனம் பூசி, தேவார திருவாசகங்களைப்பாடி மனைவி மக்களோடு கோவிலுக்குப் போய் சாமிதரிசனம் செய்வது எவ்வளவு ஆனந்தம். அதை விட்டுவிட்டு காவி கட்டுகிறேன். தாடி வளர்க்கிறேன். நாசியைப் பார்க்கிறேன். வாசியை அடக்குகிறேன் என்றால் பேதமை தானே. மனைவியும் வேண்டாம், மக்களும் வேண்டாம் என்றால் அது வக்கிரம் தானே.

இதை எல்லாம் பார்க்கிறார் பெருமான். பார்த்து என்ன செய்கிறார்.

நெக்கு நெக்கு
　நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்
　ஆர்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர்
　பூவும்நீ ரும்கண்டு
நக்கு நிற்பன்
　அவர்தமை நாணியே! 18)

---

பொக்கம் மிக்கவர். போலியான மனிதப்பதர்கள். மனசச்சாட்சி இல்லாதவனுக்கு வெட்கம் ஏது? அவனுக்காக இறைவனே வெட்கப்படுகிறார். வெட்கத்தில் ஒரு அபூர்வமான சிரிப்பே நெளிந்து குழைகிறது பெருமானுடைய முகத்தில். நக்கு - சிரித்து.

குறிப்பு: உண்மைதான் தேவை. அது ஒன்றிருந்தால் போதும். ஜவஹர்லால் நேருவின் நடைமுறை வாழ்க்கை காந்தீயத்துக்கு முரண்பட்டதுதான். பட்டேல், ராஜன்பாபு, ராஜாஜி எல்லோரும் காந்தீயத்தை ஒட்டி வாழ்கிறவர்கள். நேரு அப்படி இல்லை. ஆனாலும் என்னுடைய வாரிசு நேருதான், நேரு ஒருவர்தான் என்றார் மகாத்மா. ஏன்? காந்தி கண்ட உண்மையை - ஜனங்களைப் பற்றிய உண்மையை தெளிவாகக் கண்டு ஏற்றவர் நேரு.

*19. பெண்களுக்கு இயல்பாக நாணம் உண்டு. அடாத செயலை யாரோ ஒருவர் செய்துவிடுவார். அதற்காக பெண் வர்க்கமே வெட்கப்படும். கடவுளும் பெண் போலத்தான்.*

*நக்கு நிற்பன் அவர் தமை நாணியே.*

*கடவுள் உண்மையாக (சத்திய சொரூபியாக) இருக்கிறார் என்ற பொருளில் 'கடவுள்தான் உண்மை' என்று சொன்னார் மகாத்மா காந்தி.*

*'கடவுள்தான் உண்மை' என்பதை மந்திரம் போலத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார். பல ஆண்டுகளாக விடாமல் தொடர்ந்து சொன்னார் காந்தி.*

*அப்படிச் சொன்ன மகாத்மா திடுதிப்பென்று மாற்றி - அதாவது கடவுள்தான் உண்மை என்பதை மாற்றி ''உண்மைதான் கடவுள்'' என்றார்.*

*ஏன் பாபுஜி இப்படித் திருப்பிப் போட்டீர்கள் என்று திருமதி சரோஜினி நாயுடு, ஆச்சார்யா கிருபாஸினி போன்றவர்கள் கேட்டார்கள்.*

*அதற்கு என்ன சொன்னார் மகாத்மா?*

*''கடவுள் நம்பிக்கை பலருக்கு இல்லை. அதனால் கடவுள் என்கிற சொல் அவர்களுக்கு வெறுப்பைக் கொடுக்கும். அந்த வெறுப்பில் உண்மையைக் கைவிட்டுவிடக் கூடாது அவர்கள்.*

*இனி, உண்மை என்னும் சொல்லில் ஒருவருக்கும் வெறுப்பில்லை. உண்மைதான் கடவுள் என்றால் உண்மையை யாரும் எதிர்க்க மாட்டார்கள். அது காரணமாக கடவுளையும் எதிர்த்துச் சண்டைப் போடமாட்டார்கள்'' இப்படிச் சொன்னார். சொன்னது காந்தி மகான் தான். வேறு யார் சொல்ல அப்படி.*

*கடவுளுக்குச் செய்கிற கைங்கர்யங்களில் இதைவிடப் பெரிய கைங்கர்யம் வேறு எது? மெய்த்தொண்டு என்றால் இதுதான்.*

★★★★★★★

*இறைவனுடைய செயல்தான் நம் செயல் என்கிற அர்ப்பணிப்போடு செயல்படுகிறவர்கள் கடவுளுக்கு உற்ற துணை. அவர்களுடன் உறவாடிக் கொண்டே இருப்பான் இறைவன். ''மெய்த்தவன் காண் மெய்த்தவத்தின் நிற்போர்க்கு''*

ஆசை இல்லாமல், ஆர்வம் இல்லாமல், உண்மையும் உணர்ச்சியும் இல்லாமல் எதை எதையோ செய்கிறார்கள் பலர். கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் கூடப் பண்ணுவார்கள் அவர்கள். அவர்களோடு அப்படி எல்லாம் உறவாட மாட்டார் பெருமான்.

எல்லாவற்றிலும் அவர்கள் தங்களையே பார்ப்பார்கள். கடவுளைப் பார்க்கவேண்டும் என்கிற நினைப்பே அவர்களிடம் இல்லை.

கோவிலிலும் அவர்கள் தங்களையே பார்ப்பார்கள். கும்பாபிஷேகத்திலும் அப்படியே. பிறகு எப்படி வருவார் கடவுள் அவர்களிடம்.

*தானனன தானனன*
*தானனன தன்*

*மெய்த்தவன் காண் மெய்த்தவத்தில்*
*நிற்பார்க்கெல் லாம்;*
*விருப்பிலா இருப்புமன*
*வினையர்க் கெல்லாம்*
*பொய்த்தவன்காண்; புத்தன்*
*மறவாதோ டி*
*எறிசல்லிப் புதுமலர்கள்*
*ஆக்கினான் காண்*
*உய்த்தவன்காண் உயர்கதிக்கு*
*உள்கினா ரை;*
*உலகனைத்தும் ஒளித்தழித்திட்(டு)*
*உய்யச்செய் யும்*
*வித்தகன் காண் வித்தர்தாம்*
*விரும்பிஏத் தும்*
*விண்ணிழிதண் வீழி*
*மிழலையா னே* *(19)*

---

மெய்த்தவன் - உண்மையாக - உணர்ச்சிமயமாகப் பழகி உறவாடுவான். யாரிடம்? பக்தர்களிடம். பொய்த்தவள் - பணத்தைக் காட்டி, பதவியைக் காட்டி, அதிகாரம், புகழ், ஆடம்பரம் இவைகளைக் காட்டி இவற்றையே கட்டி அழு என்று சொல்லி அப்படியே ஒதுங்கிவிடுவான். யாரிடம் பித்தலாட்டக்காரர்களிடம்.

20. ஒரு ஊரோ, வட்டாரமோ, நாடோ சந்தோசமாக இருக்க வேண்டும் என்றால் அங்கே மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். அப்படியானால் கலைவளம், பண்பாட்டு நலம், ஈகை, கொடை, பக்தி, வீரம், கருணை, தியாகம், நீதி எல்லாம் செழிப்பாக இருக்கும் அங்கு.

இவ்வளவுக்கும் ஆதாரம் குடும்பம். மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார் எனச் சுற்றமும் நட்புமாய்ச் சூழ வாழ்கிறது தான். ஒருவரை ஒருவர் மதித்தும் உபசரித்தும் வாழ்கிற வாழ்க்கைதான்.

★★★★★★★

உழைப்பு, உற்சாகம், சோம்பலின்மை, சுறுசுறுப்பு என்று இருக்க வேண்டும் மக்கள். தேகவளம், மனநலம், கட்டுக்கோப்பு, உறுதி எல்லாம் சேர்ந்து பரிமளிக்க வேண்டும் அவர்களிடம்.

---

புத்தன் எறிசல்லி புதுமலர்கள் ஆக்கினான் - சாக்கியநாயனார் பௌத்தத்தைத் தழுவினார். கொஞ்சநாளில் அது புளித்துப் போய்விட்டது. பழையபடி சைவத்தை நாடினார். ஆனால் பௌத்தர்களை எண்ணிக் கலங்கினார். பழிபாவத்துக்கு அஞ்சாத கொடியவர்கள் அவர்கள் எது வேண்டுமானாலும் செய்வார்கள் என்று பதறினார். அதனால் சைவத்தை வெறுப்பதுபோல அவர்களுக்குப் போக்குக் காட்டி உண்மையில் சிவபெருமானை நினைத்தே உருகினார். பௌத்தர்களை ஏமாற்ற கோயில் வாசலில் நின்று கல்லை எடுத்து கோயில்மேல் சாமியைக் குறிவைத்தே எறிந்தார். சாக்கியநாயனாரின் (மெய்யன்பரின்) பக்தியை ஏற்று அங்கீகரித்தார் பெருமான். எப்படி ஏற்றார்? அவர் எறிந்த ஒவ்வொரு கல்லையும் ஒவ்வொரு புஷ்பமாக மலர்ந்து மணங்கமழ அணிந்து அங்கீகரித்தார். ஒளிந்து - மறைந்து நின்று

குறிப்பு: திருவீதிமிழலை மாயவரம் வட்டத்தில் கோனேரி ராஜபுரம் பக்கம் உள்ள சிவஷ்தலம். ஊரின் செழிப்பையும், மக்களின் ஆனந்தத்தையும் பார்த்தால் வானிலிருந்து சிவராஜதானியே இறங்கிவந்து திருவீதிமிழலை என்று அமைந்துவிட்டதோ என்று நினைக்கத் தோன்றும் பண்பாடு கலை, கோவில், உத்சவம், சமய வழிபாடு விருந்தோம்பல், கருணை, இவைதான் மக்களாகவும் வாழ்க்கையாகவும் அங்கு உருவெடுத்துள்ளன.

மக்கள் எல்லோரும் வானவர் (ஞானி) களாகவும் - அருளாளர்)களாகவும் இருக்கிறார்கள். பார்க்கப் பார்க்கக் கண்ணுக்குக் குளுமை, மனதுக்கும் குளுமை. ''விண்ணிழிதண் வீழிமிழிலை''

இவ்வளவுக்கும் அடிப்படை நீர்வளமும் நிலவளமும் சேர்ந்த பூமிதான். நீர்வளம் நிலவளம் இருந்தால் மட்டும் போதாது. இரண்டையும் இணைத்துப் பண்படுத்தி உபயோகப்படுத்த வேண்டும்.

நிலமும் நீரும் இணைந்து விவசாயம் பெருகிவிட்டால் தொழில் புதிது புதிதாக உருவாகும். மக்கள் சேர்ந்து வாழ்வார்கள். அங்கே பண்பாடு இருக்கும். கலை வளரும். சமயம், வழிபாடு, பக்தி எல்லாம் மேலே மேலே உயரும். வாழ்க்கையில் - குடும்ப வாழ்க்கையில் பண்பாடும், கலையும் பக்தியும் சேர்ந்து கலந்து ஒன்றாய் நிமிர்ந்து நிற்கும்.

அதில்தான் அழகு. அதில்தான் ஒளி. அங்குதான் உயிர் இருக்கும். உணர்ச்சி இருக்கும்.

★★★★★★★

திருவீழிமிழலை என்னும் பதி - திருப்பதி அப்படி இருக்கிறது. ஆயிரக்கணக்கான வருஷமாய் பண்படுத்தி உருவாக்கி இருக்கிறார்கள் திருவீழிமிழலையை மக்கள்/

இப்படி ஒரு இடம் கிடைத்தால் அதை விடுவாரா இறைவன். அன்னை உமா தேவியோடு சேர்ந்து குடித்தனம் நடத்துகிறார் அங்கு. இதுதான் மனதுக்கு உகந்த இடம் என்று பூரிக்கிறார் பெருமான். பூரிப்பில் ஆட்டமே வந்துவிடுகிறது இறைவனுக்கு.

*தானான தன்னனன*
*தானான தன்னனன*
*தன்னனன தன்*
*"ஆறாடு சடைமுடியன்,*
*அனலாடு அங்கையன்,*
*இமையப்பா வை*

---

ஆறு - கங்கை. உலகைக் காப்பாற்றும் நீர். அது உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறது. அப்படி என்றால் இறைவனுடைய சடையில் தலையில் இருக்கிறது என்று பொருள். அனல் தீ. ஆணவத்தைச் சுட்டெரிக்கும் தீ. அதுவும் அப்படியே, உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. ஆனாலும் இறைவனுடைய கையில் ஒரு பந்து மாதிரித்தான். இமயப்பாவை - உமை. மலையரசனாகிய இமயமலையின் புதல்வி என்பது ஐதீகம். குளிரும்கோயில் - விரும்பி அமர்ந்த இடம். செவ்வழி நல்பண் - தோடி போன்ற ஒரு ராகம்.

*கூறாடு திருஉருவன்,*
*கூத்தாடு குணமுடையோன்*
*குளிரும்கோ யில்:-*
*சேறாடு செங்கழுநீர்த்*
*தாதாடும் மது உண்டு*
*சிவந்த வண்டு*
*வேறாய உருவாகிச்*
*செவ்வழிநற் பண்பாடும்*
*மிழலையா மே"* *(20)*

*21. கடவுளுக்கு லட்சியம் மனிதன்தான். மனிதன் என்றால் அவனுடைய உணர்ச்சிதான். உணர்ச்சியின் உருவம் அதாவது கலை, பண்பாடு, நட்பு, தயை, கொடை மொத்தத்தில் அவனுடைய நன்றி உணர்வு, அதில் அவன் பெறுகிற திருப்தி, நிம்மதி இவைகள் தான் கடவுளுக்கு லட்சியம்.*

*இப்படி எல்லாம் உணர்ச்சிப் பெருக்கோடு இருக்கவேண்டும் என்றுதான் உயிரைக் கொடுத்திருக்கிறார். உயிரானது உணர்ச்சியாய் விளைய உணவு வேண்டும் உடை வேண்டும் அதாவது தானியம், பருத்தி, வயல், வேளாண்மை, மழை, பசு வேண்டும் இவற்றை உபயோகிக்கும் அறிவும் வேண்டும் எல்லாவற்றையும் வாரி வாரி வழங்கி இருக்கிறார் பெருமான். அதுமட்டுமா மனைவி, மக்கள், பெற்றோர், உறவினர், நண்பர், கலைஞர், ஆன்றோர் என்றெல்லாம் வகுத்து வைக்கிறார் பெருமான் கருணைக் கடலல்லவா அவர்.*

---

*சேறும் சகதியுமாய்த் தத்தளிக்கிறது வயல். செக்கச்சிவந்து மலர்களாய்ப் பூத்துக் குலுங்குகிறது ஆம்பல். வண்டு கருநிறந்தான். தேனை அருந்த வேண்டும் என்கிற ஆர்வத்தில் பூவில் விழுந்து விழுந்து புரள்கிறது வண்டு. புரளப் புரள வண்டின் நிறம் மாறிவிட்டது. சிவப்பாகிவிட்டாது வண்டு. இது கருவண்டு இல்லை. வேறு என்னவோ என்று பார்க்கிறவர்கள் திகைக்கிறார்கள். அப்படி ஒரு புதுப்பிறவியைக் கொடுத்துவிட்டது செவ்வாம்பல் மலர் வண்டுக்கு.*

*தேனுண்ட களிப்பில் சுதி சுத்தமாய்ப் பாடி ரீங்காரம் வேறு பண்ணுகிறது வண்டு.*

*இப்படி ஒரு இடம். அதை நோக்கி நாலா திசைகளிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். இறைவனும் அப்படியா என்று தேடி வருகிறான் அங்கு. அப்படியே தங்கியும் விடுகிறான். ரொம்ப திருப்தி இறைவனுக்கு.*

சிந்திக்க மனம், செயல்படக் கை, உணர்ச்சிக்கு உருக்கொடுத்து வெளிப்படுத்த (வாழ்த்த) வாய், வணங்கத் தலை என்று மேலும் மேலும் கொடுக்கிறான் பெருமான்.

நாயகியின் அன்புக்காக நாயகன் அது இது என்று எதை எதையோ செய்வான். அடியார்களுக்காக இறைவனும் அப்படியே செய்கிறான்.

இறைவனுக்கு லட்சியம் மனிதன். மனிதனுக்காகவே பலபல அவதாரங்கள் எடுக்கிறான் இறைவன். அதில் ஒன்று திருவீதிமிழலை மூர்த்தி. வலிவலத்திலும் அப்படியே.

இனி, வலிவலத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறான் பெருமான்.

*ஊனவன்காண், ஊன்தனக்கோர்*
*உயிரானான் காண்,*
*உள்ளவன் காண், இல்லவன் காண்,*
*உமையாட்(டு)என் றும்*
*மானவன்காண் வானவர்கள்*
*வணங்கிஏத் தும்*
*வலிவலத்தான் காண்அவன் என்*
*மனத்துளா னே.* (21)

**22.** இளைஞன் ஒருவன். பருவமங்கை ஒரு பெண். அவள்மேல் அன்பு வைக்கிறான். காதலே கொள்கிறான்.

பெண்ணுக்கும் இளைஞன் மேல் ஆசைதான். மிக்க பிரியத்தோடுதான் பழகுகிறாள் பெண்.

---

**ஊன்** - மாமிசம், உடல், ஜடம். உள்ளவன் - வெளிப்படையாகவும் தெரிவான். இல்லவன் - மறைந்தும் ஒளிர்வான். மானவன் லட்சியப் புருஷன் (HERO)

குறிப்பு: என் இதயத்தில் வந்து அமர்வதுதான் அவனுக்கு லட்சியம். அதற்காகவே இத்தனை காரியங்கள்.

*வலிவலத்தான் காண்அவன் என்*
*மனத்துளா னே*

*ஆனாலும் அவள் அருள் முறுவல் உடனே கிடைத்துவிடவா செய்யும். அதற்கு எவ்வளவோ பொறுமை வேண்டும். தொடர்ந்து பழக வேண்டும். நம்பிக்கையோடு பழக வேண்டும். நம்பிக்கையில் அசையாத உறுதியே வேண்டும்.*

*அருள் கிடைக்குமோ கிடைக்காதோ என்கிற சந்தேகத்துக்கு இடம் கொடுத்தாலே ஒழிந்தது காரியம். மடத்தனம் என்றால் அதுதான்.*

*அதையும்விட படுமோசமான மடத்தனம் - ''அவள் நல்லவள், இவள் போல வாட்டி வாட்டி வறுக்கமாட்டாள்'' என்று தடுமாறுவது. அதாவது புத்தி பேதலிப்பது.*

★★★★★★★

*காதல்துறை மாதிரிதான் பக்தித்துறையும் அதிலும் தடுமாறக் கூடாது. அது அப்படி இது எப்படி என்று ஆராய்ச்சி பண்ணக்கூடாது. லாபமோ, நஷ்டமோ அவன்தான் கதி என்று அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் நம்மை அதுதான் பக்தி.*

*இவர்தேவர் அவர் தேவர்*
*என்று சொல் லி,*
*இரண்டாட்டா(து) ஒழிந்தீசன்*
*திறமேபே சிக்*
*கவராதே தொழும் அடியார்*
*நெஞ்சின்உள் ளே*
*கன்றாப்பூர் நடுதறியைக்*
*காணலா மே* *(22)*

இவர்தேவர் --- ஒழிந்து --

*இதுதான் உண்மை அதுதான் உண்மை என்று ஆணவ வெறியில் பேயாட்டம் ஆடாமல், ஈசன் திறம்பேசி தொழும் அன்பர் - ஆணவம் கரைய கடவுள்த் தத்துவத்தை உணர்ந்து ஈடுபடும் பக்தர். கவராது - உண்மையாக.*

*குறிப்பு: காசுதாண்டா கடவுள் என்கிறவர் சிலர். கல்விதான் கண்கண்ட தெய்வம், மானம் ஒன்றே தெய்வம், வீரம் ஒன்றே தெய்வம், பதவி, புகழ் இவையே தெய்வம் என்று அது இது என்று சொல்கிறார்கள் சிலர். கல்வி, செல்வம் ஒவ்வொன்றும் தெய்வாம்சம் உள்ளவைதான். ஆனால் இவற்றில்*

23. பக்தி வேண்டும். உறுதி வேண்டும். நம்மை இறைவனிடம் ஒப்படைத்து விடவேண்டும். அவன் அங்கீகாரம் கிடைக்குமா, கிடைக்காதா என்கிற நினைப்பே வரக்கூடாது.

நம்முடைய காரியம் நம்மை அவனிடம் கொடுத்து விடுவது. அதோடு தீர்ந்தது நம் செயல். பிறகு அவனுடைய காரியத்தைப் பற்றி நாம் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்.

அப்பர் சுவாமிகள் திருப்புகலூர் வந்தார். சுவாமியைக் கும்பிட்டார். கும்பிட்ட கையோடு இதையே சொன்னார். அப்படியே திருவலஞ்சுழிக்கு வந்தார். சாமி தரிசனத்தோடேயே சொல்லிவிட்டார். ''என்னால் முடிந்தது இவ்வளவுதான். என்னை உன் கையில் கொடுப்பதுதான். சிந்தாமல் சிதறாமல் கொடுத்து விடவேண்டுமே உன்னிடம் என்னை? அது பற்றித்தான் யோசனை. அது சம்பந்தமாகத்தான் மேலும் கீழுமாய் வருகிறது யோசனை.

உன்னுடைய காரியம் எதுவோ? என்னைப் பற்றிய நினைப்பே உனக்கு இல்லை என்றாலும் சரி. அது உன் பரம். எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

வெறும் வாய்ச் சொல்லாகவா வருகிறது அப்பர் சுவாமிகளின் முடிவு. கவியாகவல்லவா வருகிறது.

---

ஒன்றை மாத்திரம் பற்றியபடி இதுதான் தெய்வம் என்றால் மற்றவை மட்டம் என்று ஆகின்றன. நமக்கு உகந்ததைத் தவிர மற்றவற்றை வெறுக்கவைக்கும் அந்தப்போக்கு. ஆணவம் தடிப்பதற்கு அதுதான் காரணம். இனி கல்வி, செல்வம், மானம், வீரம் எல்லாம் மனிதனுக்குக் கண் போன்றவை. உயிர் போன்றவை. மனிதனுக்கு வாழ்க்கையே அவைதான். ஆகவே எல்லாம் மனிதனுக்கு வேண்டும். அதற்கு வழி, ஒரேவழி எல்லாம் இறைவன் மயம் என்று நம்மை இறைவனிடம் ஒப்படைத்து விடுவதுதான். அதுதான் பக்தி.

கன்றாப்பூர் திருவாரூருக்குப் பக்கம் உள்ளது. கன்றை முளையில் கட்டியது போல பக்தரை இறைவனோடு சேர்த்து வைக்கும் புண்ணிய பூமி கன்றாப்பூர் என்பது ஐதிகம்.

*தானன தானன*
*தானன தானன*
*தானன தன்*

*பொன்னுள வார்சடைக்*
*கொன்றையி னாய்,புக*
*லூர்அர சே!*
*மன்னுள தேவர்கள்*
*தேடும்ம ருந்தே*
*வலஞ்சுழி யாய்!*
*என்அள வே உனக்(கு)*
*ஆள்ப்பட்(டு) அடைக்கலம்*
*என்றுழல் வ(து):-*
*உன்அள வேஎனக்(கு)*
*ஒன்றும்இ ரங்காத(து)*
*உத்தம னே* *(23)*

*24.* நான் என்பது தொலைய வேண்டும். அதை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும். அது தொலைந்தால் போதும், இறைவனோடு சேர்ந்து விடுவோம். இறைவனும் நாமும் ஒன்றாய் விடுவோம்.

நான் என்பதே ஒழிந்து போனபிறகு நமது செயல் என்று ஒன்று இருக்கவா செய்யும். செயலே இல்லை என்று ஆனபிறகு பாவமாவது புண்ணியமாவது?

மனதைப் பார்த்துச் சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

---

*பொன்னுளவார்சடை - பொன்போலும் நீண்ட செஞ்சடை. மன்னுளதேவர்கள் - நிலைத்து நின்று செயல்படும் தத்துவங்கள். ஏற்றுக் கொள்வதும் கைவிடுவதும் உன் காரியம். அது உன் திருவுளப் பாங்கு.*

*நதியின் காரியம் கடலில் போய்க் கலப்பது. கலந்துவிட்ட தன்னை கடல் அங்கீகரிக்குமா, அங்கீகரிக்காதா / என்றெல்லாம் யோசனை பண்ணுவது வீண்.*

*கடலோடு கடலான பிறகு யார் யாரை உபசரிப்பது?*

''மனமே! என்ன செய்ய வேண்டும் நீ? திருவாரூர் அப்பனே! நீதான் கதி. என்னை ஏற்றுக்கொள் என்று நெஞ்சாண்கிடையாய் அவன் காலில் விழுந்துவிடு. கை கொடுத்து அவன் தூக்கிவிடுவான். அதுவரை எழுந்துவிடாதே! அது போதும், மற்றதைப் பற்றி நீன் ஏன் கவலைப்படுகிறாய்.

*தானனன தானனன*
*தானனன தன்*

*பற்றி நின்ற பாவங்கள்*
*பாற்றவேண் டின்,*
*பரகதிக்குச் செல்வதொரு*
*பரிசுவேண் டின்,*
*சுற்றிநின்ற சூழ்வினைகள்*
*வீழ்த்தவேண் டின்*
*சொல்லுகேன் கேள் நெஞ்சே!*
*துஞ்சாயா கி:-*
*உற்றவரும் உறுதுணையும்*
*நீயேஎன் றும்,*
*உனையல்லா(து) ஒருதெய்வம்*
*உன்கேன்என் றும்,*
*புற்றரவக் கச்சார்ந்த*
*புனிதாஎன் றும்*
*பொழில்ஆரூ ராஎன்றும்*
*போற்றிநில் லே!* *(24)*

25. உண்மை ஒன்றைக் கண்டுவிட்டால் உண்மைதான் அது (கண்டது) என்று தெரிந்துவிட்டால் உலகம் முழுவதுக்கும் அதைத் தெரிவித்து விடவேண்டும் என்று ஆத்திரம் வரும். அதற்காக உயிரையே தத்தம் செய்வதும் சுகமாக இருக்கும்.

பாற்ற - வெந்தொழிய, பரகதி - எங்கும் நிறைந்த கடவுள் தத்துவம். பரிசு - சாதனம். சூழ்வினைகள் - தொடர்ந்து வரும் வினைப்பயன்களை. சொல்லுகேன் - இதோ விளக்கமாக எடுத்துச் சொல்லுகிறேன். உன்கேன் - நினைக்கமாட்டேன். அரவக்கச்சு - பாம்பாகிய கச்சம். பொழில் சூழ்ஆரூர் - நந்தவனங்கள் நிறைந்த திருவாரூர்.

உண்மையை மறைப்பதுதான் கஷ்டம். வெளிப்படுத்துவது சுகம்.

பட்டிதொட்டி, நாடு நகரம், தேர்த்திருவிழா, சந்து பொந்து எல்லா இடங்களிலும் போய்ச் சொல்ல வைக்கும் உண்மை.

அப்பர் சுவாமிகள் தாம் கண்ட உண்மையை எப்படி மேடை ஏறிப் பிரகடனப்படுத்துகிறார் என்று பாருங்கள்.

*******

நான் என்பது இப்பொழுது என்னிடம் இல்லை. அதை இறைவனுடைய திருவடிகளில் வைத்துவிட்டேன். காணிக்கையாகவே வைத்துவிட்டேன். என்னுடைய செயல் எல்லாம் இறைவன் செயல்தான். பிறகு லாபமாவது நஷ்டமாவது எனக்கு? நோயாவது, துன்பமாவது?

ஒன்றும் இல்லாதவன் நான். அடடா, எப்படி இருக்கிறது அந்த ஆனந்தம்?

*அல்லல் என்செயும்*
*அருவினை என் செயும்,*
*தொல்லை வல்வினைத்*
*தொந்தந்தான் என் செயும்,*
*தில்லை மாநகர்ச்*
*சிற்றம் பலவருக்(கு)*
*எல்லை இல்லதோர்*
*அடிமைபூண் டேனுக்கே (25)*

26. நான் என்பதை விடுவது - விட்டுத் தொலைப்பது கடினம். ஆனாலும் எளிதில் சாதிக்க வழி ஒன்று இருக்கிறது. அது என்ன?

---

அல்லல் - உடலால் வரும் துன்பம், வேண்டாத பழக்க வழக்கம், தடித்தனமான செயல் இவை உடல் மூலந்தான் துன்புறுத்தும். அருவினை - உணர்ச்சியின்மூலம் உண்டாகிற வேதனை. வஞ்சகம், கொடுமை, புண்படுத்தல், ஏமாற்று முதலிய செயல்கள் நேரம் பார்த்து காலம் பார்த்து மனதைப் பிசையும். அப்பொழுது புத்தி தடுமாறும். அதனால் ரத்தம் கொதிக்கும். கைகால் முடங்கும். மூச்சு முட்டும். வாழ்க்கையே கசக்கும். ரொம்பவும் கொடுமைதான். தொல்லைவல்வினை - பாக்கியாகக் கணக்கில் இருக்கிற தண்டனை. அவையும் நேரம் பார்த்துத்தான் பாயும்.

உண்மையில் நான் என்பது இல்லை. பொய்தான் அது. ஆனால் அந்தப் பொய்தான் குடுமியைப் பிடித்து ஆட்டுகிறது என்பது விளங்கினால் போதும். தானாகவே கழலும் பொய், நான் என்னும் பொய்.

உண்மை விளங்கவேண்டும் என்றால் கோவிலுக்குப் போகவேண்டும். ஆர்வத்தோடு போகவேண்டும். அதே நினைப்பில் போகவேண்டும். மூர்த்தியை வழிபட வேண்டும்.

மூர்த்திக்குச் சார்த்திய பூவும், அபிஷேகம் பண்ணிய நீரும் ''என்னை இட்டுக் கொள்ளுங்களேன்'' என்கின்றன நம்மைப் பார்த்து அவற்றைக் கையில் வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொள்ளவேண்டியது தான்.

பூவை அணிய வேண்டியதுதான், அபிஷேக நீரைப் பருக வேண்டியதுதான்.

நாவும் வாயும் பாட வேண்டியதுதான். எல்லாம் தோதாக இருக்கத்தானே செய்கின்றன. மனமே நீயும் இருக்கிறாய், கடவுளும் இருக்கிறார். பிறகு எப்படி இருக்கும் நான் என்பது தனியாக? ஓடிவிடும் நம்மை விட்டு. அப்படியானால் எமன் கூட எட்டிப் பார்க்கமாட்டான் நம்மை. அவன் கோபிக்கிறதாவது, நாம் பயப்படுகிறதாவது?

*கற்றுக் கொள்வன*
*வாயுள நாவுள;*
*இட்டுக் கொள்வன*
*பூவுள நீர்உள;*
*கற்றைச் செஞ்சடை*
*யான்உளன் நாமுளோம்*
*எற்றுக் கோநம*
*னால்முனி உண்பதே!* (26)

கற்றுக்கொள்வன - இறைவனைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லல். திரும்பத் திரும்பச் சொல்வதால் அது மந்திரமாகிறது. கற்க வேண்டிய கல்வி அதுதான். கற்றைச் செஞ்சடையான் - இறைவன், சிவபெருமான். நாம் - மனமே நீயும் நானும் இருவரும். நமன் - எமன். முனிவு உண்பது - எமன் கோபித்துக் கொள்வான் என்று பயப்டுவது. எற்றுக்கு - ஏன்? தேவையில்லை பயம்.

27. நான் என்னும் ஆணவம் கரைய வேண்டும். அது கரைந்தால்தான் இறைவனோடு சேர முடியும். அல்லாதபட்சம் அது ஒரு மாதிரி விலக்கந்தான் என்று கடவுள் விலகிவிடுவார்.

ஆணவத்தைக் கரைப்பதற்காகவே மனிதனுக்குக் கையைக் கொடுத்தார் கடவுள். மூளையையும் கொடுத்தார். வேலை செய்து கொண்டிருந்தால் மனம் அதிலேயே போகும். ஆர்வம் பெருகும். ஈடுபாடு உண்டாகும். பக்தியே வந்துவிடும். அதனால் ஆணவம் மெள்ள மெள்ளத் தேயும் என்பது அவர் போட்ட கணக்கு.

ஆனால் என்ன நடந்தது? ''இது நான் கட்டிய வீடு'', ''இது நான் வைத்த தென்னை'', இது நான் எழுதிய கவி'' என்று வீங்க ஆரம்பித்துவிட்டது ஆணவம்.

அவ்வளவுதான் ஒரே ஏமாற்றந்தான் கடவுளுக்கு.

ஆனாலும் தளரவில்லை பெருமான். ''மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், நண்பர் என்று கொடுத்துப் பார்ப்போம் மனிதனுக்கு. குடும்பமாய்ச் சேர்ந்து வாழட்டும். சேர்ந்து வாழ்ந்தால் அன்பு பெருகும். ஆர்வம் பெருகும். நன்றி உணர்ச்சி வரும். அன்பிலும் ஆர்வத்திலும் கரையத்தானே செய்யும் ஆணவம்'' என்று முடிவு பண்ணினார்.

முடிவு பண்ணியபடியே குடும்பம், தெரு, ஊர், உலகம் என்று சேர்ந்துவாழ வைத்தார் மனிதனை.

''எப்படிக் கரைகிறது ஆணவம் என்று'' ஆவலோடு பார்த்துக் கொண்டேயிருந்தார் கடவுள்.

என்ன விபரீதம்? அதிலும் தோல்வி கடவுளுக்கு, தன்னையே தியாகம் பண்ணிய மனைவியிடமே ''யாரென்று நினைத்தாய் என்னை'' என்கிறான் மனிதன். உள்ளத்தை உருக்கும் குழந்தைகளிடம் ''என்னிடமா விளையாடுகிறீர்கள். தொலைத்துக் கட்டிவிடுவேன் என்கிறான்''. ''உங்களுக்கு என்ன தெரியும் என்றே கேட்கிறான் பெற்றோர்களைப் பார்த்து, எவன் தயவு எனக்குத் தேவை'' என்கிறான் சமுதாயத்தை நோக்கி.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய்ப் போய்விட்டது கடவுளுக்கு. அடடா! மதுரமான பலாப்பழத்தைக் கொடுத்தாலும் சுளையை எறிந்துவிட்டுக் கொட்டையைக் கடிக்கிறானே மனிதன் என்று பரிதாபப்படுகிறார் கடவுள். அப்பர் சுவாமிகளுக்கும் அப்படித்தான் வருகிறது பரிவு.

*மனிதர் காள்! இங்கே*
*வம் ஒன்று சொல்லுகேன்:-*
*கனிதந் தால்க்கனி*
*உண்ணவும் வல்லிரோ?*
*புனிதன் பொற்கழல்*
*ஈசன்எ னுங்கனி*
*இனிது சாலவும்*
*ஏசற்ற வர்கட்கே* (27)

---

வம் - வாருங்கள். பொற்கழல் ஈசன் - அருளே உருவான இறைவன். கழல் - திருவருள். ஏசற்றவர் - ஆணவம் நீங்கிய உத்தமர். ஈசன் எனும் கனி - இறைவனுடைய எளிமையையும் இனிமையையும் பார்த்தால் அவனுக்கு உவமையாக எதைச் சொல்ல. எடுத்துச் சொல்ல எதுவும் இல்லை. உடலோடும் உணர்ச்சியோடும் எளிதில் கலந்து மருவும் தேன் சொட்டும் கனியை வேண்டுமானால் ஒப்புக்குச் சொல்லலாம். சரி கனிந்த கனியாக இருக்கிறான் இறைவன். இருந்து என்ன பலன்? அவனை அனுபவிக்க முடியவில்லையே. திராட்சைப் பழத்தைக் கொடுத்தாலும் அதை வாயில் போட்டுச் சாப்பிடத் தெரியவில்லை மனிதனுக்கு என்றால் என்னென்று சொல்வது அதை. ''கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ''

# பொல்லாத ஆள்தான் காஞ்சி வெள்ளைக்கம்பர்

28. சமயம் சம்பந்தமாகப் பேச்சு வந்தால் சிற்றுரையோ, பேருரையோ ஏன் வழக்காடு மன்றமே ஆனாலும் சில சொற்கள் குறுக்கும் நெடுக்குமாய் வந்துவிழும். அப்படி விழும் சொற்களில் தவம், யோகம், அருள், தியாகம் (சரணாகதி) தன்னலம் (ஆணவம்) இன்மை, பக்தி என்னும் சொற்கள் முக்கியம். மாறி மாறி வந்து விழும் சொற்கள் இவை.

பொருளைப் பற்றிய யோசனை வேண்டாம். தவம், யோகம் முதலிய வார்த்தைகளே போதும். சக்கையை (வைக்கோலை) மென்று குதப்புவதுபோல் அந்தச் சொற்களை மென்று அசைபோட்டால் போதும். இந்த நிலையை உண்டாக்கிவிட்டது அந்தச் சொற்கள். எல்லாம் சமயப் பேருரை நிகழ்த்தும் பிரசங்க பூஷணங்கள் மூலமாகத்தான்.

★★★★★★★

வீரத்துக்காகவும், மானத்துக்காகவும், அறத்துக்காகவும் அங்கங்கே உயிரையே கொடுக்கிறார்கள் பலர். கொடுமையை எதிர்த்தும் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். நாட்டு நலன் - பொதுநலன் என்று அதில் குதித்து உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தத்தம் செய்கிறார்கள்.

இங்கெல்லாம் தியாகம் என்பதின் சாயல்களைப் பார்க்கிறோம். ஆனாலும் அதன் (தியாகத்தின்) முழு உருவமும் வெளிப்படுவதில்லை.

★★★★★★★

கணவன், குழந்தை, குடும்பம், குடும்பநலன் இவற்றுக்காக ஒரு பெண் தன்னை அர்ப்பணிக்கிறாள். தன் வாழ்க்கையையே அர்ப்பணிக்கிறாள். அர்ப்பணித்துக் கொள்கிறாள். அதுதான் பெண்ணின் வாழ்க்கை.

சரணாகதி என்றால் தியாகம் என்றால் அது பெண்தான். தியாகத்தை நேருக்கு நேராகப் பார்க்கவேண்டும் என்றால் பெண்ணைப் பார்த்தால் போதும். தர்மதேவதையே பெண்ணின்

மனச்சாட்சியாக இருக்கிறது. ஒவ்வொன்றையும் பொறுப்பாகச் செய்கிறாள் பெண். திருத்தமாகச் செய்கிறாள். செம்மையாகச் செய்கிறாள். அதனால் வீடு ஒளிவீசுகிறது. குடும்பம் ஒளி வீசுகிறது. குடும்ப வாழ்க்கைக்கே தீபமாய் இருக்கிறாள் பெண்.

எத்தனை கஷ்டங்களை அனுபவிக்கிறாள் பெண். எவ்வளவு பொறுமை. அந்தப் பொறுமை தான் தவம். குடும்ப நலன் ஒன்றுக்காக அவள் ஆற்றும் செயல்தான் யோகம். பெண்ணின் தியாகத்திலும் தவத்திலுந்தான் ஆணவம் கரைகிறது. அன்பும் அருளும் கைகோர்த்து விளையாடுவது அங்குதான்.

பக்தியின் திருஉருவம் பெண்.

★★★★★★★

பெண்ணின் பெருமையை - தெய்வாம்சத்தைப் பார்த்து உள்ளம் உருகி இருக்கிறார்கள் முன்னோர். ஞானிகளும் அடியார்களும் தங்களைப் பெண்ணாகவே பாவித்துப் பக்தியை வளர்த்திருக்கிறார்கள்.

★★★★★★★

''பெண்ணின் தியாகமும் கருணையும் நமக்கு வேண்டும். பெண்ணின் உணர்ச்சிக்குள் கூடுவிட்டுக் கூடு பாய வேண்டும். ஆணவம் தேய அதுதான் எளிதான வழி. அப்பொழுதுதான் விடுதலை, ஆனந்தம். பேரானந்தம்'' என்கிற இந்தத் தெளிவுக்கும் உறுதிப் பாட்டுக்கும் ஞானிகள் ஆளானார்கள்.

★★★★★★★

அப்பர் சுவாமிகள் அந்த நிலையில் நின்று சொல்கிறார். அருள்பெற்ற நாயகியாகவே பேசுகிறார். தோழியிடம் சொல்வதாக விஷயம்.

''படுக்கையறையில் படுத்திருந்தேன், உள்ளே புகுந்து வந்துவிட்டார். 'யார் இருக்கிறது உள்ளே' என்று கேட்டுக் கொண்டே வந்துவிட்டார்.''

★★★★★★★

''பதறிப்போனேன். உடம்பெல்லாம் வேர்த்துவிட்டது. ஒரே நடுக்கம். பதற்றத்தில் ஒன்றும் ஓடவில்லை எனக்கு. 'யார் நீர், ஏன் வந்தீர்? என்ன திருட வந்தீர்' என்றெல்லாம் கேட்டுவிட்டேன்.''

''கொஞ்சம் கூட அவர் கலங்கவில்லை. என்ன அமைதி. என்ன பார்வை அவர் முகத்தில். 'ஏகாம்பரநாதர்' சன்னதியில் வெள்ளைக் கம்பம் உடையார் என்று கேள்விப்பட்டதுண்டா, அவர் தான் நான். என்னைத் தெரியவில்லையா உனக்கு'' என்றார். அப்படியே என்னைத் தழுவி அணைத்தபடியே 'ஏன் பயப்படுகிறாய்' என்று புன்முறுவல் பூத்தார். யார்? கங்கையை வைத்த சடையில் சந்திரனையும் சேர்த்து வைத்துக் கட்டி இருக்கிறாரே அவர் தான்.

*தானான தானான தன்*
*தன்னான தன்னான தன்*

*வெள்ளநீர்ச் சடையனார்தாம்*
*வினவுவார் போலவந்(து) என்*
*உள்ளுளே புகுந்துநின் றார்;*
*உறங்குநான் புடைகள்போந் து*
*கள்ளரோ புகுந்தீர் என் னக்:-*
*கலந்தெனை நோக்கிநக் கு*
*வெள்ளரோம் என்று நின் றார்*
*விளங்கிளம் பிறையினா ரே* (28)

வெள்ளநீர் - கங்கை. வினவுவார்போல - யார் உள்ளே என்று விசாரிக்கிற தோரணையில். உள்உளே புகுந்து நின்றார் - படுக்கை அறைக்கு உள்ளேயே வந்துவிட்டார். புடைகள்போந்து - பயத்தினால் இப்படியும் அப்படியுமாகப் போய். நக்கு - சிரித்து. நின்றார். ராஜதோரணையோடு நின்றார்.

குறிப்பு: ஆன்ம தத்துவம் கடவுள்த் தத்துவம் எல்லாம் மனிதர்களுக்காக உண்டானதுதான். மனிதர்களால்தான் உண்டானது. குடும்பந்தான் கோயில். குடும்பத்தின் தீபம் பெண். பெண்ணின் லட்சியத்திலும், தியாகத்திலும் இருக்கிறது பக்தி. இந்த அரிய உண்மையை தமிழ் அப்படி அப்படியே எடுத்து விநியோகம் செய்கிறது. இசையிலும் தாளத்திலும் வைத்தே விநியோகம் செய்கிறது. நாயகி பாவம் என்னும் துறையை வகுத்துக் கொள்கிறது தமிழ் அதற்காக.

# குடும்ப சகிதம் வந்து உறவாடுவாள்

29. உரிமை என்பதாக ஒன்று. அன்பிலிருந்து பிறப்பது. அதுவும் ஒத்த அன்பிலிருந்து பிறப்பது. அப்படி பிறக்கிற உரிமைக்குத் தான் அழகு. பருகப்பருக அதாவது பார்க்கப் பார்க்க ரஸமாக இருக்கும் அந்த உரிமை.

அன்பில்லாத இடத்திலிருந்தும் உரிமை பிறக்கலாம். அது அழகாய் இருக்காது. ரஸமாகவும் இருக்காது.

உமா பத்தாம் வகுப்புப் படிக்கிற பெண் திண்ணையில் உட்கார்ந்து ஒரு கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறாள். உமாவின் தந்தை மாடியில் இருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன் வந்த ஒரு வார இதழ். அதில் உமா படிக்கும் பள்ளியைப் பற்றி ஒருவர் எழுதி இருக்கிறார். உமாவுக்கு இப்பொழுது பாடம் நடத்தும் ஆசிரியர்கள் பற்றியும் எழுதி இருக்கிறார்.

கட்டுரையைப் படித்த உமாவின் தந்தைக்கு ஒரே வியப்பு. அதை உமாவிடம் காட்ட வேண்டும் என்று உமாவை அழைக்கிறார். மாடியிலிருந்தபடியே சத்தம்போட்டு - கத்தியே அழைக்கிறார்.

''மாடிக்கு வா, ஒரு விஷயம்'' என்றே அழைக்கிறார்.

'நான் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறேன். நீ வந்து சொல் விஷயத்தை' என்கிறாள் உமா.

'என்னால் முடியாது. நீதான் வரவேண்டும்' என்கிறார் தந்தை. என்னாலும் வரமுடியாது. வேண்டும் என்றால் நீ வா. இல்லை என்றால் ஆளைவிடு என்கிறாள் உமா?

''சரி சரி, முடியாதாக்கும்'' என்று முனகுகிறார் தந்தை. 'ஆமாப்பா, இப்ப முடியாதுதான்'' என்கிறாள் உமா.

முனகிக் கொண்டே வார இதழோடு இறங்கி வருகிறார் தந்தை. உமா அதைப் பார்க்கிறாள். ஒரே ஆனந்தம். தந்தை, தாய், உமா, தம்பி, தங்கை எல்லோருக்குமே ஆனந்தம் கரைபுரண்டோடுகிறது.

நமக்குந்தான் ஆனந்தமாக இருக்கிறது. தந்தை மகளிடம் காட்டும் உரிமை. மகள் தந்தையிடம் காட்டும் உரிமை. இருவர் உரிமையும் அன்பு மயமானவை. அன்போடு கூடிய உரிமை யாரைத்தான் பரவசப்படுத்தாது.

கணவன் மனைவியரிடத்தும் இப்படி உரிமை - அன்பின் உரிமை உண்டு.

முன் கட்டில் இருந்து பூக்களை மாலையாகத் தொடுத்துக் கட்டிக் கொண்டிருப்பாள் மனைவி. உள்க்கட்டில் ஏதோ ஒன்றைத் தேடுவார் கணவன். மனைவியைக் கூப்பிடுவார். என்ன என்பாள் மனைவி. வா சொல்கிறேன் என்பார் கணவர் சொல்லுங்கள் வருகிறேன் என்பாள் மனைவி.

பீரோச் சாவியை எங்கு வைத்தேன் என்று தெரியவில்லை என்பார் கணவர். வைத்த சாவி எங்கே போகும். தேடிப் பாருங்கள் வைத்த இடத்தில் என்பாள் மனைவி.

சாவியைத் தேடி எடுத்த கையோடு மனையாளிடம் உல்லாசமாக வருவார் கணவர். புது மாப்பிள்ளை போலவே வருவார். மனையாளும் புதுப் பெண் போலவே புன்முறுவல் பூப்பாள்.

உரிமை என்பதும், நீயா நானா என்று அதில் நிமிர்ந்து நிற்பதும், அது ஆனந்தத்தில் கரைவதும் அன்பின் விளையாட்டு. அதுதான் காதல் விளையாட்டு. பக்தியின் விளையாட்டு என்பதும் அதுதான்.

கடவுளுக்கும், பக்தனுக்கும் இடையிலும் அப்படி ஒரு விளையாட்டு நடக்கும்.

அதுபற்றி என்ன சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

*என்னை ஏதும்*
*அறிந்திலன் எம்பிரான்;*
*தன்னை நானும்முன்*
*ஏதும் அறிந்திலேன்;*
*என்னைத் தன்அடி*
*யான்என்(று) அறிதலும்*
*தன்னை நானும்*
*பிரான்என்(று) அறிந்தேனே!* (29)

*30.* பசித்தால் சாப்பிடுவேன். தூக்கம் வந்தால் தூங்குவேன். கோவிலுக்குப் போகவேண்டும் என்று நினைப்பு வந்தால் கோவிலுக்குப் போவேன். அவ்வளவுதான் நான் தெரிந்தது.

அவர் பழக்கம் ஏற்பட்ட பிறகோ, கோவில் முற்றத்தைப் பெருக்குவேன். உள்கட்டையும் பெருக்குவேன். நீர் விட்டு அலம்புவேன். சாணம் கரைத்து மெழுகுவேன். சாமியைக் குளிப்பாட்டுவேன். நந்தவனத்தில் பூக்களைப் பறிப்பேன். சாமிமேல் மலர்களைச் சாத்துவேன். அப்பொழுது பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும். சந்தோஷமாக இருக்கும். சிரிப்பு வரும் எனக்கு. நான் சிரிப்பேன், அவரும் சிரித்துவிடுவார்.

வேறு என்ன தெரியும் எனக்கு "என் கடன் பணி செய்து கிடப்பதே".

★★★★★★★

அவருக்கும் அப்படியே. என்னைப்போலத்தான் அவரும். வானம் இருந்தால் நல்லது என்று நினைப்பு வந்தால் வானத்தைக்

---

ஏதும் அறிந்திலன் - என்னைப் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ளவில்லை இறைவன். தெரிந்திருந்தால் நிச்சயம் வந்திருப்பான் என்னிடம். தன்னை - இறைவனைப் பற்றி. முன் அறிந்திலன் - என்னிடம் வந்து நான் இன்னார் என்று அவர் அறிமுகப்படுத்திய பின்தான் எனக்கும் அவரைப் பற்றித் தெரிய வந்தது. அடடா என்ன கருணை அவரிடம்? என் மனநிலை தெரிந்து தன் அடியார் என்று என்னை கொண்டான் காலம் கழித்துத்தான் இது நடந்தது. நானும் வீண்பொழுது போக்கி எங்கெங்கோ சுற்றித் திரிந்தபிறகு தான் அவரை நம்மவர் - அவரே நம்மவர் என்று அறிந்தேன். எவ்வளவு காலம் வீணாகிவிட்டது? எனக்கு என்ன தெரியும். ஒன்றும் தெரியாது எனக்கு.

குறிப்பு : கிண்டலும் கேலியுமாய் வருகிறது எக்களிப்பு. பக்தியின் தொனி அதுதான்.

காட்டுவார். தன்னையே அப்படிக் காட்டுவார். பூமி வேண்டும் என்று நினைப்பு வந்தால் இதோபார் பூமியை என்று காட்டுவார். மரம், செடி, கொடி, மனிதர், பறவை, விலங்கு, மலை, கடல் என்று நினைப்பு வரும் அவருக்கு. வரவர அப்படி அப்படியே தோன்றும் அவரிடம்!

உணவு வேண்டும் என்று கேட்டால் உணவு கொடுப்பார். உறங்கினால் நல்லது என்றால் உறக்கத்தைக் கொடுப்பார். பழகுவதற்கு இரண்டுபேர் வேண்டுமென்றால் நண்பர்களைக் கொடுப்பார். சண்டைபோட இரண்டு பேர் வேண்டும் என்றால் அவர்களையும் கொடுப்பார்.

எல்லோருக்கும் செய்கிறதைத்தான் எனக்கும் சேர்த்துச் செய்கிறார். என்னை மட்டும் ஒதுக்கிவைக்க முடியுமா அவரால், முடியாது. அதனால் அவர்களைக் கவனிப்பதுபோலவே என்னையும் கவனித்துக் கொள்கிறார்.

அவ்வளவுதான், அதற்குமேல் என்ன தெரியும் என்னைப் பற்றி?. என்னைப் போலத்தான் அவரும்! தன் கடமையைத் தவறாது செய்கிறார்.

*"தன் கடன் அடி*
*யேனையும் தாங்கலே".*

என்னைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி சொன்னாலே போதும்.

நமக்கு உகந்த அன்பனாகிய முருகப்பெருமானை - கடம்பன் என்கிற குமரனை மகனாகப் பெற்றவள் உமை. அந்த உமையம்மையையே ஒரு பாகத்தில் வைத்து அலங்கரிக்கிற பெருமான்தான் அவர்.

கடம்பை - தென்கடம்பை என்னும் ஊரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார் அவர்.

இனிப் பாடலின் முழு உருவம்

என்க டன் பணி
செய்து கிடப்பதே;
நம்க டம்பனைப்
பெற்றவள் பங்கினன்,
தென்க டம்பைத்
திருக்கரக் கோயிலான்
தன்க டன் அடி
யேனையும் தாங்கலே! (30)

31. மண்ணைப் பொன்னாக்குகிறவர்கள் குடியானவர்கள். மழையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் அவர்கள்.

மழைக்காலம் வந்துவிட்டது மழையும் வந்துவிட்ட தென்றால், ஏர்க் கலப்பையை எடுப்பார்கள். உழுவார்கள். வரப்பு வெட்டுவார்கள். குழை மிதிப்பார்கள். விதைப் பெட்டியைத் தூக்குவார்கள். விதைப்பார்கள்.

உரம் போடுவார்கள். தண்ணீர் விடுவார்கள். களை பறிப்பார்கள்.

அறுவடை, களம், தானியம், களஞ்சியம் என்று மளமளவென்று நடக்கும் வேலை.

மழை பெய்த உடனேயே வயல், ஏர், எருது இவற்றைத் தான் தேடுவார்கள். புத்தகத்தைத் தேட மாட்டார்கள்.

---

கடம்பன் - கடம்ப மலர் மாலை அணியும் முருகன். பெற்றவள் - மகனாகப் பெற்றவள். வயிற்றில் வைத்துச் சுமந்து பெறவில்லைதான். ஆனாலும் முருகப் பெருமானுக்குத் தாய் என்கிற பெரும்பேறு கிடைத்துவிட்டதே உமையம்மைக்கு. அப்படி ஒரு திருப் பெயர் பெற்ற உமை. பங்கினன் - உமையை ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமான். தென் கடம்பை - காட்டு மன்னார் கோவிலிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது. கோயில்.

குறிப்பு: எனக்குத் தெரிந்ததை நான் செய்கிறேன். அவருக்குத் தெரிந்ததை அவர் செய்கிறார். இதில் எதுமேல், எது கீழ், எல்லாம் ஒன்றுதான். பிரித்துப் பார்ப்பதற்கு இடம் இல்லை.

சிரிப்பும், கும்மாளியுமே பாடலுக்கு உருவம் கொடுக்கிறது.

பயிரியல், மண்ணியல், கால் நடையியல், நீரியல், உரஇயல், உழவியல் என்பன பற்றிய நூல்களை - சாஷ்திரங் களையா படித்துக் கொண்டிருப்பார்கள். எப்படி உழவேண்டும். எப்படி உழக் கூடாது என்று தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்க மாட்டார்கள் உழவர்கள்.

தத்துவம், சாஸ்திரம், தர்க்கம், ஆராய்ச்சி எல்லாம் சோம்பேறிகளாய்த் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சௌடால்த்தனம் பண்ணுகிறவர்களுக்குத் தான்.

செயல்படுகிறவர்கள், படைக்கிற (உண்டாக்குகிற)வர்கள், நாலு பேருக்கு பயன்படும் நல்ல காரியம் செய்கிறவர்கள். வேலையைப் பார்ப்பார்கள். சாஸ்திரங்களைப் புரட்டி வெட்டிப் பொழுதுபோக்க மாட்டார்கள்.

அவர்களுக்குத் தெரியும் ''பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது'' என்று. இன்னும் கொஞ்சம் அதிகமாகவே தெரியும் ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்பதும்.

★★★★★★★

உண்மை உணர்ச்சி உடையவர்களும் அப்படித்தான். எது செய்யவேண்டுமோ அதைச் செய்வார்கள். சாஷ்திரங்களையும், மேற்கோள்களையும் கட்டிப் புரண்டு குஷ்திபோட மாட்டார்கள்.

★★★★★★★

பக்தர்கள் உண்மை உணர்ச்சி உள்ளவர்கள். அவர்களுக்கு வேண்டியது என்ன? பக்தி. எல்லாம் அவன் செயலே என்கிற உண்மை உணர்வு. வேண்டியது அதுதான்.

நம் செயல் ஒன்றும் இல்லை. நாம் என்பதும் இல்லை. எல்லாம் இறைவன்தான் என்பது விளங்கவேண்டும். உணர்ச்சிமயமாய் விளங்கவேண்டும். அப்படி விளங்க விளங்க அதாவது உண்மை உணர்ச்சி அழுத்த அழுத்த 'நமசிவாய' என்பது உதிக்கும். மனதில் உதிக்கும். மனமே அதாவது உணர்ச்சியே நமசிவாய என்று உருவெடுக்கும்.

பிறகு மறக்குமா மனம், நாவும் வாயுந்தான் மறக்குமா? வந்து கொண்டே இருக்கும் நம(ச்)சிவாய என்னும் மந்திரம்.

சொல்லச் சொல்ல இறைவனுடைய திருவருள் இதழ் இதழாக விரியும். அப்படி உண்மை வெளிப்பட வெளிப்பட சொல்லுக்குள் ஒளி ஏறும். நவநவமாக உண்மையே உணர்ச்சிமயமாய் ஏறும்.

பிறகு சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியது தான். சொல்லிக் கொண்டே இருப்பதால் மந்திரமாகிறது சொல்.

★★★★★★★

இதற்கு எதற்குப் பள்ளிக்கூடம், பாடம், புத்தகம், பரீட்சை, தேர்ச்சி எல்லாம்.

நினைத்தால் கூப்பிட வேண்டியதுதான். கூப்பிட்டால் வந்துவிடுவான் பெருமான். பக்தியின் வரலாறு இது. அப்பர் சுவாமிகளின் அனுபவமும் இதுதான். எப்படி வருகிறது வரலாறும் அனுபவமும்.

*ஏதும் ஒன்றும்*
*அறிவில ராயினும்*
*ஓதி அஞ்செழுத்-*
*தும்உணர் வார்கட்குப்*
*பேதம் இன்றி*
*அவரவர் உள்ளத்து*
*மாதும் தாமும்*
*மகிழ்வர்மாற் பேறரே* *(31)*

---

**அஞ்செழுத்து - நமசிவாய. ஓதிஉணர்வார் - சொல்லிச் சொல்லி அதன் உண்மையை அனுபவிக்கிற பக்தர். பேதம் இன்றி - ஜாதி பேதம் இன்றி. மாதும் தாமும் - குடும்ப சகிதமாக வந்து. மாற் பேறு - திருமாற் பேறு என்னும் ஷ்தலம்.**

**குறிப்பு: பக்தி இருந்தால் போதும். ஏழை, பணக்காரன், ஞானி, முட்டாள், ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்றெல்லாம் பேதம் பார்க்க மாட்டான் இறைவன். பக்தர்களின் உணர்வில் தாயாகவும், தந்தையாகவும் வந்தமர்ந்து ஆனந்தம் அடைவான் இறைவன். வீட்டில் (உள்ளே) தாயாகவும், வெளியே தந்தையாகவும் இருந்து அருள் பாலிப்பான்.**

*32. பக்தி என்றால் உண்மையின் மேல் வைக்கிற நம்பிக்கை உணர்ச்சிதான்.*

*நான் என்பது இல்லை. உடல், உயிர், உணர்ச்சி எல்லாம் கடவுள்தான். இவற்றை நான் நான் என்று நினைக்கிற மயக்கமும் கடவுளின் திருவிளையாடலே.*

*இதைத் தெரியத் தெரிய உண்மை பிரகாசிக்கும். உணர்ச்சி மயமாகவே பிரகாசிக்கும்.*

*ஆனால் நான் என்கிற ஆணவம் பொல்லாதது. உண்மையைத் தெரியவிடாது அது. யானை குறுக்கே வந்து வழியை மறிக்கிற மாதிரி ஆணவம் தடுக்கும். அதுவும் மதயானை. காமம், குரோதம் லோபம் என்ற மூன்று மதங்களோடு கூடிய மதயானையே வந்து வழியை மறிக்கிறது என்றால் அதை எப்படிச் சமாளிப்பது. ஆனாலும் இறைவ னுடைய அருள் இருந்தால் அது முடியும்.*

*மதயானையை வகிர்ந்து அதன் தோலை உரித்தவன் அவன். அதாவது ஆணவத்தை வெளுவெளு என்று வெளுத்துக் கட்டியவன் இறைவன்.*

*இறைவன் அருள்பெற்று ஆணவத்தை வென்றுவிட்டால் இறைவனோடு ஒன்றுபட்டு விடுவோம். இறைவனே நம்மிடம் வந்து ஐக்கியம் ஆவான். அவனுக்கு அடைக்கலம் நாம்தான்.*

*ஆணவம் போய்விட்டால் பிறகு இறைவனைப் பற்றித்தானே - எல்லாம் இறைவன்மயம் என்கிற உண்மையைத் தானே எண்ணி எண்ணிப் பார்க்கும் மனம்.*

*இறைவனை பிரதிஷ்டை பண்ணிவைக்கிறதுதானே நினைப்பு. ஒரே நினைப்பு. அப்படிக் கோயில் கொண்டிருக்கிறவனை எப்படி மறக்க முடியும். மறந்தால் எப்படி வாழமுடியும்.*

*பனைக்கை மும்மத*
*வேழம் உரித்தவன்,*
*நினைப்ப வர்மனம்*
*கோயிலாக் கொண்டவன்,*
*அனைத்து வேடமாம்*
*அம்பலக் கூத்தனைத்*
*தினைத்த னைப்பொழு*
*தும் மறந்(து) உய்வனோ?* (32)

அப்பர் சுவாமிகள் சொல்கிறதைப் பார்த்தால் பக்தி என்பது இயல்பான காரியந்தான் என்று தெரிகிறது. அதற்காக ஒன்றும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்றும் தெரிகிறது.

எல்லாம் இறைவன் செயல்தான் என்று தெரிவதற்கு பட்டப் படிப்பா தேவை? ஒரு பிடி நெல் போதாதா? நம்முடையது ஒன்றும் இல்லை. இறைவனுடைய திருவருள்தான் இந்த நெல் என்பதற்கு. அப்படியே ஒரு சுளைப் பருத்தி போதுமே? அவனுடைய அருட்கொடைதான் இது. பருத்தியில் அணுவளவு கூட நாம் உண்டாக்கவில்லை என்பதற்கு.

இப்படிப் பார்க்கப் பார்க்க உண்மை நிமிர்ந்து நிற்கும். பொய் (ஆணவம்) நழுவி ஓடிவிடும். அவ்வளவுதான் இறைவன் மேல் ஆசை வந்துவிடும்.

இதில் ஒன்றும் கஷ்டம் இல்லைதான். ஆனாலும் வேண்டாததை எல்லாம் படித்துத் தொலைத்துவிட்டோம். அந்த அபத்தங்கள் எல்லாம் மண்டைக்குள் போய்விட்டன. மூளையைச் சுற்றி ஒரு கோட்டையையே - கல் கோட்டையையே கட்டிவிட்டது அபத்தம்.

அதனால் மயக்கம் ஆணவம் விட்டபாடில்லை. இறைவன் நினைப்பு வருகிறபோது தெளிவாக இருக்கிறது. உடனே படித்த பாடமும் ஆராய்ச்சியும் வருகின்றன. அவை வந்ததும் ஆணவம் வந்து பேயாட்டம் ஆடுகிறது.

---

பனைக்கை - வயிரம் பாய்ந்த பனைமரம் போன்று வலுவான நீண்ட கையுடைய. வேழம் - யானை. அனைத்து வேடம் ஆம் அம்பலக்கூத்தன் - எல்லாம் இறைவன்தான். நீர், நெருப்பு, தங்கம், இரும்பு, பசு, புலி அத்தனையும் இறைவன் போடுகிற வேஷம்தான். தினைத்தனை - தினை அளவு. மறந்துஉய்வனோ - நானே அவன். அப்படி இருக்க எப்படி விட முடியும் அவனை. மறந்தால் வாழ்வு ஏது?

யாரைக் கேட்டு இதை உள்ளேவிட்டாய் என்று அதட்டவே செய்கிறது ஆணவம். இப்படியாக மயக்கத்துக்கும், தெளிவுக்கும் மத்தியில் கிடந்து சிக்கித் தவிக்கிறான் மனிதன். எத்தனை மனிதர்கள்? கிட்டத்தட்ட அத்தனை பேருந்தான்.

''மயல்தீர் மனிதர்காள்'' என்றே கைதட்டி கூப்பிடுகிறார் அப்பர் சுவாமிகள். அவர்களைப் பார்த்து ''மயக்கத்திலும் அதைத் தீர்த்துக்கட்டுகிற சண்டையிலுமாகப் பொழுதைக் கழிக்கிற மனிதர்களே! வாருங்கள் என்னிடம்'' என்று கூப்பிடுகிறார். அப்பர் சுவாமிகள் எப்படிக் கூப்பிட்டு எப்படி இதமாய்ச் சொல்கிறார் என்று பாருங்கள்.

*வந்து கேண்மின்*
*மயல்தீர் மனிதர்காள்!*
*வெந்த நீற்றன்,*
*விசயமங் கைப்பிரான்;*
*சிந்தை யால்நினை*
*வார்களைச் சிக்கெனப்*
*பந்து வாக்கி*
*உயக்கொளும் காண்மினே!* (33)

34. உண்மையாகவே உணர்வு வந்துவிட்டது. மெய்யுணர்வு வந்துவிட்டது. அதாவது எல்லாம் கடவுளின் திருவிளையாடல் (திருவருள்) தான் என்று தெளிந்துவிட்டதென்றால் வேறு என்ன வேண்டும்.

அப்படித் தெளிந்தவன் எல்லாம் உடையவன். அவனிடம் இல்லாதது இல்லை. தெளிவு பெறாதவனோ ஒன்றும் இல்லாதவன். அவனிடம் புத்தியும் இல்லை. யோசனையும் இல்லை. நிம்மதியும் இருக்காது. அமைதியும் இருக்காது அவனிடம்.

---

கேண்மின் - நான் சொல்வதைக் காதுக் கொடுத்து கேளுங்கள். வெந்த நீற்றன் - வெந்து நீறிய சுடலைப் பொடியையே சாந்தாகக் குழைத்துப் பூசிய இறைவன். சிந்தையால் நினைவார் - மனசோடு நினைக்கிறவர் யாராக இருந்தாலும். பந்துவாக்கி - உற்ற உறவுமுறை கொண்டாடி. உயக்கொளும் - உண்மையான உயிருள்ள வாழ்க்கையைக் கொடுப்பான். ஆனால் நினைக்கிற நினைப்பு தடுமாறக் கூடாது. அப்படி இப்படி என்று அலைபாயக் கூடாது நினைப்பு விசய மங்கை கும்பகோணம் பக்கம் இருக்கிறது. உடையார் பாளையம் வட்டம்.

திருமருகல் என்னும் ஷ்தலத்துக்கு வந்தார். அப்பர் சுவாமிகள் கோயிலுக்கு வந்தார். இறைவனைக் கண் குளிரக் கண்டார். உள்ளம் உருகினார். தன்னையும் மறந்து - தன்னையே இழந்து வழிபட்டார் அப்பர் சுவாமிகள். அம்பாளையும் வணங்கி வழிபட்டார்.

எங்கும் இல்லாத ஆனந்தபரவசம் அப்பர் சுவாமிக்கு. எல்லாம் இறைவன் மயமாகவே தெரிகிறது அப்பருக்கு. சரி கொஞ்சம் கண்ணை மூடிப் பார்ப்போம் என்று மூடிக் கொண்டார். அப்பொழுதும் அந்தக் காட்சி முன்னிலும் மிக்க பிரகாசத்தோடு தெரிகிறது.

அப்படியே இறைவனோடு இறைவனாய் ஆனந்தமயமாய் - உணர்ச்சிமயமாய் ஒன்றுகிறார்.

நான் என்பதே போய்விட்டது. தூய பளிங்காய் இருக்கிறது மனம். பேதம் இன்றி எங்கும் நிறைந்ததாய் அமைதியாய் நிறைகிறது ஆனந்தபரவசம்.

இப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டால் அதைத் தாழ்ப்பாள் போட்டு மறைக்க முடியுமா? ஊரறிய உலகறியச் சொன்னால் தானே தவிப்பு நீங்கும். எப்படி வருகிறது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு.

*பெருக லாம்தவம்,*
*பேதைமை தீரலாம்,*
*திருக லாகிய*
*சிந்தை திருந்தலாம்,*
*பருக லாம்பரம்*
*ஆயதோர் ஆனந்தம்;*
*மருக லான்அடி*
*வாழ்த்திவ ணங்கவே.* *(34)*

பேதமை தீரலாம் அறியாமை விலக, இருள் அகல, ஆணவம் கழல அது (திரு மருகல்) ஒன்று தான் வழி. திருகலாகிய சிந்தை - குண்டும் குழியுமாய், முண்டும் முடுச்சுமாய் இருக்கிற மனம். பரம் ஆயதோர் ஆனந்தம் - எங்கும் நிறைந்த பேரின்பம். பருகப் பருகத் தெவிட்டாத ஆனந்தம்.

மாயவரம் பேரளம் ரயில் வழியில் நன்னிலத்திலிருந்து ஏழு மைல் கிழக்கில் இருக்கிறது திருமருகல். சுவாமி பெயர் மாணிக்கவண்ணர். அம்பாள் பெயர் வண்டுவார் குழலி. தலவிருட்சம் வாழை. கல்யாண வீடாகவல்லவா இருக்கிறது கோவில்! திருமருகல் போகவேண்டும் சுவாமி தரிசனம் அம்பாள் தரிசனம் செய்யவேண்டும். பெருகலாம் தவம் என்னும் பாட்டை அவர்கள் காது கேட்கப் பாட வேண்டும். மாப்பிள்ளையும் பண்ணுமாய் இருக்கிற அவர்கள் அம்மையப்பனாய் மாறி நம்மை அரவணைப்பார்கள்.

திருமருகனுக்கு அருகில் வைப்பூர் என்று ஒரு சிற்றூர். அதில் ஒரு வணிகன். அவனுக்கு ஏழு பெண் குழந்தைகள். தன் தங்கை மகனுக்குத் தருகிறேன் பெண்ணை என்று சொல்லிச் சொல் ஏமாற்றினான். ஆறு பெண்களையும் வேறு (ஆறு) மாப்பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டான் வணிகன். தந்தையின் பித்தலாட்டம் ஏழாவது பெண்ணுக்குப் பிடிக்கவில்லை. அவள் அத்தை மகனோடு திருமருகனுக்கே ஓடி வந்துவிட்டாள். வந்த இடத்தில் பையனைப் பாம்பு கடித்தது. இறந்து போனான். கதறி அழுதாள் பெண். ஞானசம்பந்தர் பாசுரம் பாடி பையனை உயிர் பெறவைத்தார். அவனுக்கு அவளைத் திருமணமும் செய்வித்தார். அப்படி எல்லாம் அல்லவா செய்து வைக்கிறது திருமருகல்.

# சும்மா இருக்கமாட்டார் திருவாய்மூர் நாதர்

35. எல்லாவளங்களும் நிறைந்திருக்கிறது உலகில். உயிரினம் முழுவதுக்கும் வேண்டிய அளவக்கு சகலமும் இருக்கின்றன. ஒருகுறையும் இல்லை உலகில்.

மனிதர்களும் அப்படியே. உணவு, உடை, வீடு வாசல், மனைவி, மக்கள், கல்வி, புகழ், வாழ்க்கை ஒன்றுக்கும் குறைவில்லை மனிதர்களிடம்.

எத்தனை உண்டோ அத்தனையும் வைத்திருக்கிறான் மனிதன். ஆனால் அத்தனைக்கும் அடிமையாய் இருக்கிறான் மனிதன். விடுதலை பெற முடியவில்லை மனிதனால்.

எல்லாம் இருந்தும் மனிதனிடம் புத்தி இல்லை. யோசிக்கிற பழக்கம் இல்லை. அதனால் மனதில் ஒரே இருட்டு, கும்மிருட்டு. தடவித் தடவித்தான் பார்க்கிறான். நேராக எதையும் பார்க்க முடியவில்லை.

''இறைவனுடைய செயல்தான் எல்லாம். நாம், நம்முடைய காரியம் எல்லாம் இறைவனில் தான்'' என்பதுதான் உண்மை.

ஒளிமயமானதுதான் உண்மை. இருட்டிலேயே பழகிப் பழகி ஒளியைப் பார்க்கக் கூசுகிறது கண். அதைப்பார்க்க இன்னொரு தனி ஒளி - புத்தம் புதிய ஒளி வேண்டும். அதுதான் இறைவனுடைய அருள். அதை 'நவமாய செஞ்சுடர்' என்கிறார் மாணிக்கவாசகர்.

★★★★★★★

''அது இது என்று நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் தத்துவங்களோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தேன். வழிகாட்டுவதுப்போல என்னை மயக்கி, குழியில் தள்ள ஆரம்பித்தன அந்தத் தத்துவங்கள். இறைவனுடைய அருளோ என்னைக் குழியில் விழாதபடி தடுத்துக் காத்தது.

*அவமாய தேவர்*
*அவகதியில் அழுந்தாமே*
*பவமாயம் காத்தென்னை*
*ஆண்டுகொண்ட பரஞ்சோதி*
*நவமாய செஞ்சுடர் ஒன்(று)*
*நல்குதலும்; நாம்ஒழிந்து*
*சிவமான வாபாடித்*
*தெள்ளேணம் கொட்டாமோ!*

இறைவனே நேரில் வந்து 'வா என்னோடு, கலந்துவிடு என்னுடன்' என்று அழைத்தாலும் கலங்குகிறான் மனிதன். என்னுடைய டர்பன் என்னாவது, கோட் என்னாவது, கோட் ஸ்டாண்ட் என்னாவது என்று மயங்குகிறான்.

ஆண்களை விடப் பெண்கள் இதில் கொஞ்சம் தெளிவாகவே இருக்கிறார்கள். தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, தோழிமார், வீடு வாசல் எல்லோரையும் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் கணவன் பின்னால் வந்துவிடுகிறாள் பெண். எவ்வளவு உல்லாசமாய் வருகிறாள் அவள். எப்படிக் கழற்றிவிடுகிறாள் உடைமைகளை.

★★★★★★★

உடல்த் தத்துவத்தில் பெண்ணுக்கும், ஆடவனுக்கும் வேறுபாடு ஓரளவுதான். ஆனால் உணர்ச்சித் தத்துவத்தில்

---

அவமாய தேவர் - படு மட்டமான தத்துவங்கள். தத்துவங்களுக்குத் தேவர் என்று பெயர். கண் ஒரு தத்துவம், மூக்கொருதத்துவம், கண்ணுக் குள்ளேயே பல பல தத்துவம். இவ்வளவையும் சேர்த்து வைத்திருக்கிற உடம்பு ஒரு தத்துவம். இத்தனையும் மனிதனுடன் தான் இருக்கின்றது. மனிதனுக்கு உண்மையைக் காட்ட வேண்டும் அவை. அப்படிச் செய்யாமல் பொய்யின் பக்கமே இழுத்துக்கொண்டு போகின்றன தத்துவங்கள்.

''சோதிமயமான இறைவனிடமிருந்து ஒரு கீற்று - மின்வெட்டுப்போல விழுந்தது என்மேல். அவ்வளவுதான், நான் என்பது பொய்யென்று தெரிந்தது. எங்கும் நிறைந்த பரம் பொருளோடு சேர்ந்துவிட்டேன்''

சொந்த அனுபவத்தைச் சொல்லிவிட்டார் மாணிக்கவாசகர். அப்படியே அருளாளர்கள் பலரும் சொல்லி இருக்கிறார்கள்.

நூற்றுக்கு நூறு வேறுபாடு இருபாலர்க்கும். சுயநலம் இல்லாதவள் பெண். சுயநலமே உருவானவன் ஆடவன்.

இந்த உண்மையை முன்னோர்கள் ரொம்ப ரொம்ப மதித்திருக்கிறார்கள். ஆணவத்திலிருந்து விடுபட்டு இறைவனிடம் ஐக்கியமாவதற்குப் பெண்களை வைத்தே சொல்கிறார்கள்.

இப்படிச் சொல்வதற்கு காதல்துறையில் நாயக நாயகிபாவம் என்று பெயர்.

*******

ஒரு பெண் தோழியிடம் சொல்வதாகப் பாடல்

''நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன். படுக்கையறைக்கே வந்துவிட்டார். யார் என்று பதறிப்போய்க் கேட்டேன். உடனே, ஏன் பயப்படுகிறாய்? உன்னைக் கூட்டிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறேன் என்றார். அவ்வளவுதான் ஒன்றுமே விளங்கவில்லை. என்னை மறந்து வியந்து நின்றேன். அப்படியே கை கொடுத்தார். ஒரே பாய்ச்சல் ஒரே ஓட்டம். கூட்டிக்கொண்டே போய்விட்டார்''. யார்? திருவாய்மூர்நாதரே தான்.

அப்பர் சுவாமிகளின் அனுபவம் இப்படி பாடலாய் வருகிறது.

*தான தன்னை*
*தன்னை தன்னை*
*தஞ்சே கண்டேன்*
*தரிக்கிலா(து) யாரென்றேன்;*
*அஞ்சேல் உன்னை*
*அழைக்கவந் தேன் என்றார்;*
*உஞ்சேன் என்றுகந்*
*தேஎழுந்(து) ஓட்டந்தேன்;*
*வஞ்சே! வல்லரே*
*வாய்மூர் அடிகளே* (35)

தஞ்சே கண்டேன் - அரவம் கேட்டு, திடுக்கிட்டுப பார்த்தேன். தரிக்கிலாது - சட்டென்று. அஞ்சேல் - பயப்படாதே. உஞ்சேன் என்று - அடித்தது

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்பது பழமொழி. அதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, பாலினும் இனிய இன்மொழி யாள் என்பதைப் பாலினும் இனிய நன்மொழியாள் என்று ஒரு புண்ணியவான் எழுதிவிட்டார்.

எழுத்தில் ஏறிவிட்டால் அதை விடுவார்களா ''முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா'' என்னும் பழமொழி இருக்கத் தானே செய்கிறது. இன்றளவும் நன்மொழியாள் என்றே எழுதி வருகிறார்கள்.

*******

அப்பர் சுவாமிகள் அடிக்கடி திருவாய்மூர் வருவார், சுவாமியை (மூர்த்தியை) வணங்கி வழிபடுவார். உள்ளம் உருகுவார். பக்தியில் கரைந்துவிடுவார்.

பக்தியும் பரவசமும் சேர்ந்து அழகிய பாசுரங்களாய் அவதாரம் எடுத்துவரும். அப்படி வந்த பாசுரங்களில் நமக்குக் கிடைத்தவை இரண்டு. அதில் ஒன்றுதான் ''தஞ்சே கண்டேன்'' என்னும் திருப்பாசுரம்.

தஞ்சேகண்டேன் என்னும் பாசுரத்தைப் பாடினால், அனுபவித்துப் பாடினால், பொய் (ஆணவம்) தொலையும். ''நான் சொல்கிறேன்; நான் சொன்னால் சொன்னதுதான்! என்னையா பார்க்கிறாய்; இது என்னுடைய பூமி, இது என்னுடைய பொன்'' என்றெல்லாம் புதுப்புது அவதாரம்

---

யோகம், கிடைத்தது வாழ்வு என்று. உகந்து - எக்களிப்போடு. ஓட்டந்தேன் - அவர் கையைப் பிடித்தபடியே பின் தொடர்ந்தேன். வஞ்சே - வல்லிக்கொடிப் போன்ற தோழிப் பெண்ணே. வல்லர் - வெகு தந்திரமாய் என்னைக் கூட்டிக் கொண்டுபோய்விட்டார். பலே ஆள்தான். யார்? வாய்மூர் அடிகளே! திருவாய் மூர்ப் பெருமான்தான்.

குறிப்பு:- சோழவள நாட்டில் திருக்குவளை என்று வழங்கும் ஊருக்கு திருக்கோளிலி என்று பெயர். வளமான பிரதேசம்.

திருக்கோளிலிக்கு தென்கிழக்கே மூன்றரை மைல் தொலைவில் இருக்கிறது திருவாய்மூர். அழகான ஷ்தலம். அருமையான கோயில். இறைவன் பெயர் திருவாய்மூர் அடிகள் (நாதர்) அம்பாள் பெயர் பாலினும் இனிய இன்மொழியாள். தலவிருட்சம் பலா.

பாலும் பழமும் சேர்ந்த பஞ்சாமிர்தந்தான் அம்மனும் சுவாமியும்.

எடுக்குமே ஆணவம். அதற்குப் 'பவமாயம்' என்று பெயர். அந்தப் பவமாயமே வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்ந்தொழியும். உள்ளம் உணர்ச்சி மயமாகப் பெருகும். உண்மை ஜெகஜோதியாய் பிரகாசிக்கும். பாடிப்பாடி பாசுரத்தை அனுபவிக்கிறவர்களுக்குத்தான்.

எங்கும் இறைவன், எல்லாம் இறைவன். நாமும் நம் செயலும் இறைவனுக்குள் என்று தெரியும். அப்படியே ஐக்கியமாகிவிடுவோம் இறைவனுடன். அதாவது உண்மையுடன்.

அப்படியானால் எப்படித் தோன்றும் அந்தக் காட்சி. தூங்கிக் கொண்டிருந்த நம்மை இறைவனே தேடிவந்து தட்டி எழுப்புவதாகவும், நம் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவதாகவுமே தெரியும், நம்மை தம்மில் ஏற்றும், தம்மை நம்மிடம் வழங்கியும் இரண்டறக் கலந்து ஒன்றாவதாகவுமே தெரியும்.

ஆயிரக்கணக்கான அன்பர்கள் இந்தப் பாசுரத்தைப் பாடிப்பாடி அனுபவித்திருக்கிறார்கள், இறைவன் வந்து அழைப்பது போலவும் அவன் பின் போவது போலவும், போய் பேரானந்தத்தில் திளைப்பது போலவும் அனுபவித்திருக் கிறார்கள்.

அனுபவமும் ஆனந்தமும் அழகிய கதையாக உருவெடுத்தது. எப்படி? திருமறைக்காட்டில் ஞானசம்பதரும், அப்பரும் தங்கி இருக்கிறார்கள். மறைக்காட்டு மணாளர் கொலுவிருக்கும் கோவிலையே பூட்டி சீல் வைத்துவிட்டார்கள் சமணர்கள். இது தெரிந்தது இருவருக்கும்.

சமணர்களின் கொடுமையை நினைந்து உள்ளம் உருகிப் பாடினார் அப்பர் சுவாமிகள். பாட்டைப் பாடிக்கொண்டே கதவில் கை வைத்தார். அவ்வளவுதான், கோயில் கதவு திறந்தது. இருவரும் சாமி தரிசனம் செய்தார்கள். வெளியில் வந்தார்கள்.

ஊர் மக்களுக்கெல்லாம் ஒரே பயம். கோவிலைத் திறந்த விஷயம் சமணர்கள் காதுக்கு எட்டினால் என்னாகுமோ நம் கதி என்று.

மக்களின் பயம் நீங்கக் கதவை உடனடியாகச் சார்த்த வேண்டும். அதன்பிறகு தான். வேறு காரியம்.

என்ன செய்தார் ஞான சம்பந்தர். அவரும் சமணர்களின் அட்டூழியத்தை எண்ணி உள்ளம் உருகிப் பாடினார். பாடிக்கொண்டே கதவை இழுத்தார். மளமளவென்று வந்த கதவு சார்த்திக் கொண்டது. வைத்த முத்திரை (சீல்) கலையவில்லை.

★★★★★★★

காலையும் மாலையும் கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து சாமி தரிசனம் செய்ய வேண்டும் இக்கோயிலில். அதற்கு என்னென்னன செய்யவேண்டும் என்று ஒரு சத்திரத்தில் தங்கி இருந்து இருவரும் யோசித்தார்கள்.

இரவு தூங்கினார்கள். தூங்கிக் கொண்டிருந்த அப்பரைத் தட்டி எழுப்பினார் வாய்மூர்நாதர். 'வா என்னோடு, வாய்மூருக்கே' என்று முன்னே நடந்தார். அப்பர் அவரைப் பின்தொடர்ந்து வந்தார். சம்பந்தர் திடுக்கிட்டு விழித்து அவரும் அப்பரின் பின்னே ஓடிவந்தார்.

வாய்மூர்க் கோவிலின் பக்கம் வந்தவுடன் இறைவன் அந்தர்யாமியாய் (மறைந்து) விட்டான்.

அப்பொழுது பாடினார் அப்பர். ''தஞ்சே கண்டேன்'' என்று.

இப்படி வந்தது கதை. ரசமான கதைதான். அனுபவிக்க வேண்டிய கதைதான். ஆனால் பாடலின் உள்ளக் கிடக்கையைக் கதைக்காகத் தாரைவார்த்து விடக் கூடாது.

★★★★★★★

எல்லாம் பாடலை அனுபவித்த ஆனந்தத்தின் விளையாட்டு. திருவிளையாடல். என்பது ஞாபகத்தில் இருக்க வேண்டும்.

''எனக்காக இல்லை என்றாலும் ஞான சம்பந்தருக்காக வேனும் பெருமானே, நீர் காட்சி கொடுக்க வேண்டாமா'' என்று வேண்டிப் பாடியதாகவும் கதையை வளர்த்துவிடுவார்கள். அப்படி எல்லாம் ஞானசம்பந்தரை இழுத்திருக்கவே வேண்டாம்.

எழுத்தும் படிப்பும் படுத்துகிற பாடுதான்!

★★★★★★★

36. இனி முகத்தில் இருக்கிற கண்களின் மூலம் அந்தக் கண்களினால் மட்டும் மூர்த்தியைப் பார்த்தால் மூர்த்தி ஒன்றுதான் தெரியும். கல்லிலோ உலோகத்திலோ வடித்த ஓவியம் மட்டுமே தெரியும்.

கடவுளைப் பார்க்க முடியாது. கடவுளைப் பார்க்க வேண்டும் என்றால் முகக் கண்ணோடு அகக் கண்ணும் சேர வேண்டும். பக்தியையே கண்ணாக வைத்துப் பார்க்க வேண்டும்.

*******

திருவாய்மூர் நாதரைப் பக்தியோடு பார்க்கிறவர்களின். ஊனுருகும், உள்ளமும் உருகும், உணர்ச்சி விம்மும். ஆனந்த பரவசமோ நான் என்கிற தனிமையையே தேய்த்துக் கசக்கிவிடும்.

மூர்த்தியின் வழியாகப் பரம்பொருளே காட்சிதரும். கண் கொள்ளாக் காட்சி அது. அதை எப்படிச் சொல்ல? வார்த்தைகளுக்குள் அடைபடுமா அந்த அற்புதம்?

அடையாளங்களைக் கொடுத்துத்தான் சொல்லமுடியும். விரிந்துபரந்த ஆகாயத்தையே சடை என்றும், நட்சத்திர வட்டத்தை (பால்வெளி)யே அரவு என்றும், சகல சக்திகளையும் உள்ளடக்கிய பேராற்றலையே காளை என்றும், குறியீடு கொடுத்துத்தான் சொல்ல முடியும்.

*******

உள்ளம் கசிந்து அப்பர் சுவாமிகள் திருவாய்மூர் நாதரை வழிபடுகிறார். திருவாய்மூரிலிருந்துதான் வழிபடுகிறார். திருவாய்மூர் சிவபுரமாகவே தோன்றுகிறது. மூர்த்திக்குப் பின்னே பரம்பொருளே தெரிகிறது.

சிவபுரத்தில் அடியார்கள் ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் சித்திதான். அரவம், பிறை எல்லாம் சடைக்குள் மறைகின்றன. அவ்வளவு விஷ்தாரம் சடை.

அப்படி இருந்தும் அவனுக்கு என்று ஒன்றும் இல்லை வெறும் கோவணாண்டிதான் எல்லாம் வல்ல இறைவன்.

*தானான தானான*
*தானான தன்*
*அடியார் சிலம்பொலிகள்*
*ஆர்ப்பக்கண் டேன்*
*அவ்வவர்க்கே ஈந்த*
*கருணைகண் டேன்*
*முடியார் சடைமேல்*
*அரவம் சூழ் க*
*சூரிப் பிறைபோய்*
*மறையக் கண் டேன்.*
*கொடியார் அதன்மேல்*
*இடபம்கண் டேன்*
*கோவணமும் ஞாணும்*
*குலாவக்கண் டேன்*
*வடியாரும் மூவிலைவேல்*
*கையில்கண் டேன்*
*வாய்மூர் அடிகளை நான்*
*கண்டஆ மூற* *(36)*

சூரிப்பிறை - மிக்க பிரகாசத்தோடு கூடிய பிறைச் சந்திரன். கொடியார் - வணங்கத்தக்க கொடி. இடபம் - காளை. ஞாண் - அரை ஞாண் கயிறு. வடியாரும் - வடித்தெடுத்த. மூவிலைவேல் - முத்தலைச் சூலம்.

குறிப்பு:- பேயாழ்வார் புண்ணிய ஷ்தலம்தோறும் போவார். மூர்த்தியை வழிபடுவார். மகா விஷ்ணுவின் அவதாரமாகவே - அர்ச்சாவதாரமாகவே மூர்த்தியைப் பார்ப்பார். மூர்த்தியும் வழிவிடும். மகாவிஷ்ணுவே பேயாழ்வார் கண்முன் நிற்பார். பார்தநுப் பரவசப்படும் ஆழ்வார் சொல்கிறார்.

வெண்பா

*திருக்கண்டேன் பொன்மேனி*
*கண்டேன்; திகழும்*
*அருக்கன் அணிநிறமும்*
*கண்டேன்; திருக்கிளரும்*
*பொன்ஆழி கண்டேன்*
*புரிசங்கம் கைக்கண்டேன்*
*என்ஆழி வண்ணன்பால்*
*இன்று.*

ஒன்றாகக் காண்பதுவே காட்சி. எங்கும் அவன்தான் எல்லாம் அவன் தான்.

37. உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறது நீர். பூமி முழுவதும் சமுத்திரம். வானம் முழுவதும் மழை அதாவது அப்பு. இனி ஆறு, குளம், அருவி எல்லாம் நீர்தான். சிறிய புல்லிலிருந்து பெரிய பெரிய மரம் வரை அவ்வளவிலும் நீர்தான். வேரிலிருந்து உச்சி முடிய தாவரம் முழுதும் தண்ணீர் மயம். நம்முடைய உடம்பு முழுதும் ஓடி ஓடிச் சுற்றுகிற ரத்தமும் தண்ணீர்தான். கண்ணீரும் தண்ணீர் தான்.

பசுவுக்குள் பால், தயிர், நெய், கோமயம் எல்லாம் நீர். கனியில் சாறாகவும், புஷ்பத்தில் பன்னீராகவும் நிறைந்திருக்கிறது நீர்.

எங்கே போனாலும் நீர்தான். அதாவது ஈசன் அருள்தான். அப்பார்சடையப்பன்தான். அவன் அருள்தான்.

* * * * * * *

எங்கும் ஈசன்தான் என்பது மனதில் நிற்கவேண்டும். உறுதியாய் நிற்க வேண்டும். பக்தியாய் நிற்க வேண்டும்.

பக்தி இருந்தால்போதம் கங்கையும் ஈசன் அருள்தான். காவிரியும் அப்படித்தான். பக்தி இல்லை என்றால் கங்கையாலும் புண்ணியம் இலலை. காவிரியாலும் புண்ணியம் இல்லை.

கங்கை ஆடில் என்,
 காவிரி ஆடில் என்,
கொங்கு தண்கும
 ரித்துறை ஆடில்என்?
ஓங்கு மாகடல்
 ஓதநீர் ஆடில்என்?
எங்கும் ஈசன்
 எனாதவர்க்(கு) இல்லையே! (37)

ஆடல் - நீராடல். கொங்கு தண் - குளிர்ந்த சோலைகளும் தோப்புகளும் நிறைந்த. குமரித்துறை - கன்யாகுமரியில் கடலிலேதான். துறை - நீராடுவதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற நீர்த்துறை. ஓங்கு மாகடல் - மேலே எவ்வியும் மடங்கியும் அப்படியும் இப்படியுமாக நெளிந்து புரளும் கடல். ஓதநீர் - அலையோடு அலையாய் குதித்தும் மூழ்கியும் குளிக்கும்

38. தண்ணீர் மட்டுமா ஈசன் அருள். பேரண்டம் முழுவதும் அவன் அருள்தான். அந்த அருள் ஒன்றைத் தவிர வேறு எதுவும் இல்லை.

ஒவ்வொரு துளி மண்ணும் அவன். ஒவ்வொரு துளிநீரும் அவன்தான். தானிய தவசங்களின் ஒவ்வொரு மணியும் அவன்தான்.

உணவும் அவன்தான். உணவை ஜீரணிக்கச் செய்து ரத்தம் ஆக்குகிறவனும் அவனே. ரத்தம் ஓட ஓட நடமாடும் ஊனும் அவன்தான். உயிரும் அவனே தான்.

இது ஒரு சாதாரண விஷயம். அதாவது ஒரு விபரம். இந்த விபரத்தை அறிந்து கொள்வதில் சிரமம் இல்லை. எளிதுதான். எல்லோருக்குமே எளிது தான்.

இனி, விபரம் உணர்ச்சிமயமாக - உண்மையான உணர்ச்சிமயமாகப் பிரகாசிப்பது அரிது. அரிதினும் அரிது அது.

அப்படிப் பிரகாசிக்கும் உண்மை உணர்ச்சி கவியாக உருவெடுப்பதோ அற்புதம். அது தெய்வ கடாட்சம்.

அப்பர் சுவாமிகள் தெய்வகடாட்சம் பெற்றவர். அவர் வாக்கு அருள்வாக்கு.

எப்படி வருகிறது அந்த வாக்கு.

---

கடல் நீர். சமுத்திர தீர்த்தம். ஓங்கு என்பதுதான் ஒங்கு என ஓசை குறைந்து வந்துள்ளது.

குறிப்பு: தாயாக இருக்கிறாள் பெண். தெய்வமாக இருக்கிறது குழந்தை அப்படி இருப்பதற்குக் காரணம் உணர்ச்சிதான். உணர்ச்சி இல்லை என்றால் முயல் குட்டி, பூனைக் குட்டிதான் குழந்தை. பெண்ணும் (குழந்தைக்குப்) பால் கொடுக்கும் மாடு, ஆடுதான்.

உணர்ச்சி இருந்தால் கடலோ, ஆறோ, அருவியோ, எல்லாம் அருள் மயந்தான். அது இல்லை என்றால் வெறும் காவிரிதான், கங்கைதான், கடல் தான்.

*பாரவன் காண்! பாரதனில்*
*பயிரானான் காண்!*
*பயிர்வளர்க்கும் துளியவன்காண்!*
*துளியில்நின் ற*
*நீரவன்காண்! நீரசடைமேல்*
*நிகழ்வித்தான் காண்!* (38)

---

*சிவனவன் காண் சிவபுரத்தெம்*
*செல்வந்தா னே*

39. குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சுகிறாள் தாய். மடியில் இருக்கிற குழந்தை ஒன்றுதான். ஆனாலும் அந்த ஒரு குழந்தையைத் தானே கண்ணே என்கிறாள், கண்மணியே என்கிறாள், கரும்பே என்கிறாள், கனியே என்கிறாள், தேனே என்கிறாள், பொன்னே என்கிறாள், பூவே என்கிறாள், முத்தே என்கிறாள், மணியே என்கிறாள், வயிரமே என்கிறாள், மாணிக்கமே என்கிறாள்.

---

பார் - பூமி, மண். வெறும் நெருப்புக் கோளந்தான் பூமி. அது சூடுணிந்து பாறையாகியது. பிறகு மணலாக உதிர்ந்தது. அதன் பிறகு மண்ணாகியது. வண்டலோடு கூடிய உர மண்ணாகவே ஆகிவிட்டது. தானியம், தவசம், பருத்தி, கரும்பு, வாழை, காய், கனி, புஷ்பம், புல், மரம், இஞ்சி, மஞ்சள் எல்லாம் விளையும் நன்செய், புன்செய் என்று விளை நிலமாகவே ஆகிவிட்டது.

என்ன அதிசயம் இப்படி எல்லாம் ஆகியது எது? இறைவன்தான். அவனுடைய அருள்தான். அதுதான் திருவிளையாடல். துளி - மழைத்துளி. துளியில் நின்ற நீர் - ஆவி உருவில் வான் முழுவதும் நிறைந்திருக்கும் அப்பு, நீரின் நீர்மை. (வேப்பர்)

குறிப்பு: அற்புதமான பாசுரம். அப்பர் சுவாமிகளின் முத்திரை பதித்த பாசுரம். ஆனால் முழுமையாகக் கிடைக்கவில்லை. எப்படியோ பிய்ந்து பிதிர்ந்திருக்கிறது பாசுரம். பிதிர்ந்து போனதுக்கு ஒட்டுப் போட்டிருக்கிறார்கள் சிலர். ஆனால் அதில் அப்பர் சுவாமிகள் இல்லை, குறைய இருந்தாலும் குற்றம் இல்லை என்று அப்பர் சுவாமிகளை மட்டும் இங்கே கொடுத்திருக்கிறது. அனுபவித்துப் பாடிப் பார்க்க வேண்டும். பாடினால் பிறகு விடாது. பாடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். தொடர்ந்து பாடப்பாடப் பாட்டு மந்திரம் ஆகிவிடும். அது நம்மைப் புனிதப்படுத்தும்.

*38. ''குழந்தை ஒன்றுதானே அதற்கா இத்தனை பெயர்'' என்று நாம் வியக்கிறோம்.*

*அதோடு விட்டாளா தாய், ''சிரிப்பைப் பாரு - போக்கிரி'' என்கிறாள் குந்தையைப் பார்த்து. அதற்கும் மேலே ''திருட்டுப் பயலே'' என்கிறாள் குழந்தையை.*

*பிறகு உச்சி மோக்கிறாள் குழந்தையை. அதன் கன்னத்தில் முத்துகிறாள். முதுகைத் தடவிக் கொடுக்கிறாள். குழந்தையின் கையைப் பிடிக்கிறான். அப்படியே கண்ணில் வைத்து ஒற்றுகிறாள் கையை. அப்படியே காலை தூக்கி எடுத்து அதன் பாதத்துக்கு முத்தம் கொடுக்கிறாள். அதன் பிறகும் ஆசை அடங்கமாட்டேன் என்கிறது தாய்க்கு.*

*******

*குழந்தை அழகாக இருக்கிறது. அழகென்றால் பூரண அழகு. முட்டித் ததும்பி நிற்கிறது அழகு குழந்தையிடம். அப்படி நிறைந்து பூரித்து விம்மி நிற்பதால் புதுப்புதுச் சாயல்களில் வெளிப்படுகிறது அழகு.*

*ஒவ்வொரு சாயலையும் ஒவ்வொரு தினுசில், அனுபவிக்கிறாள் தாய், ஒவ்வொரு அனுபவத்துக்கும் ஒவ்வொரு பெயர் வருகிறது. கண்ணே, முத்தே என்று.*

*******

*கடவுள் தத்துவமும் பூரணமானது, பரிபூரணம் என்றால் அதுதான். அதுவும் கோடான கோடி வடிவில் வெளிப்படுகிறது. ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும் தனித்தனிப் பெயர்தான். எப்படி வருகிறது பெயர்.*

*தானனான தானனான*
*தானதனான தன்*

*நின்னாவார் பிறர் இன்றி*
*நீயேஆ னாய்;*
*நினைப்பவர்கள் மனத்துக்கோர்*
*வித்தும்ஆ னாய்;*
*மன்னானாய் மன்னவர்க்கோர்*
*அமுதம் ஆ னாய்;*
*மறைநான்கும் ஆனாய் ஆ(று)*
*அங்கம் ஆ னாய்;*
*பொன்னானாய் மணியானாய்*
*போகம் ஆ னாய்*
*பூமிமேல் புகழ்தக்க*
*பொருளே உன் னை*
*என்னானாய் என்னானாய்*
*என்னின்அல் லால்*
*ஏழையேன் என்சொல்லி*
*ஏத்துகே னே!* *38)*

*39.* நான் என்பதை விட்டவர்கள் கடவுள் தத்துவத்தோடு கலந்து விடுகிறார்கள். கடவுள் வேறு இவர்கள் வேறு என்னும் பேதம் இல்லாமல் ஒன்றாகிவிடுகிறார்கள்.

கடவுளுக்குள் இவர்கள் என்றால் இவர்களுக்குள் கடவுள் என்பதும், பேரண்டம் முழுவதும் கடவுள் மயம் என்பதுபோல் இவர்கள் மயம் பேரண்டம் (இறைவன்) என்பதும் உண்மை.

நான் என்பது அற்பமானது, அற்பத்திலும், அற்பமானது.

---

நின் ஆவார் பிறர் இன்றி நீயே ஆளாய் - உன்னிடமிருந்து மனிதர், தேவர் எல்லோரும் வந்தார்கள் என்பது கூட இல்லாமல் நீயே எல்லாம் ஆனாய். மன்ஆனாய் - ஞானிகள் ஆனாய். மன்னவர்க்கு - ஞானிகளாகிய பக்தர்களுக்கு, புகழ்தக்க பொருளே - மெய்ப் பொருளாகிய பெருமானே. நினைப்பரிய நினைப்பு - ஆணவம் இல்லாமல் உண்மையை உணர்ந்து நினைப்பது. அது எளிதல்ல. அரிதினும் அரிது அது. அதுதான் உண்மை. உணர்ச்சிமயமான உண்மைக்கு. வித்து - மூலமேதான்.

*அது ஒழிந்தால் நாமே எல்லாம் என்றாகிவிடுகிறது. காரணம் இறைவனும் நாமும் ஒருமயமானதால்.*

*"பிரிவிலா அடியார்க்கென்றும்*
*வாராத செல்வம் வருவிப் பானை"*

*தனித்தும் விடுகிறான். நான் வேறு நீ வேறு என்று. பிறகு சேர்த்தும் வைக்கிறான். துன்பமும் தருகிறான். இன்பமும் அருள்கிறான்.*

*எல்லாம் இறைவனுடைய அருள். அப்படியானால் ஒரு சொல்லால் ஒரு பெயரால் அவனைச் சுட்டிக் காட்டமுடியுமா?*

*பேர்ஆ யிரம்பரவி*
*விண்ணோர்ஏத் தும்*
*பெம்மானைப், பிரிவிலா*
*அடியார்க்கென் றும்*
*வாராத செல்வம்*
*வருவிப்பா னை,*
*மந்திரமும் தந்திரமும்*
*மருந்துமா கித்*
*தீராநோய் தீர்த்தருள*
*வல்லான்தன் னை,*
*திரிபுரங்கள் தீயெழத்திண்*
*சிலைக்கை கொண் ட*
*போரானைப், புள்ளிருக்கும்*
*வேளூரா னைப்*
*போற்றாதே ஆற்றநாள்*
*போக்கினே னே.* *(39)*

*தீரா நோய் - எளிதில் கழற்றிவிட முடியாத நோய். அதாவது ஆணவம். அதைத் தீர்த்துக் கட்டுவது இறைவன்தான். மருந்தாகவும் மருத்துவ மாகவும், அதன் பலனாகவும் தோன்றுகிறான். தோன்றி நோயைக் களைந்தெறிகிறான். திரிபுரம் - ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று ஆகாயக்கோட்டை. திண்சிலை - மலையையே வில்லாகக் கையில் எடுத்து. புள்ளிருக்கும் வேளூர் - வைத்தீஸ்வரன் கோயில். ஆற்றநாள் - பலநாள்.*

*குறிப்பு:- காலம் எல்லாம் வீணாய்ப் போய்விட்டதே என்று கலங்குகிறார் அப்பர் சுவாமிகள் கலக்கம் நன்றாகத் தெரிகிறது செய்யுளின் ஓசையில்.*

40. இரும்புத்துண்டையோ தங்கக் குண்டையோ ஒரு இடத்தில் வைக்கிறோம். எத்தனை வருஷம் ஆனாலும் அது அது அந்தந்த இடத்திலேயே இருக்கும். வேறொரு சக்தி வந்து தாக்கினாலொழிய அக்கம் பக்கம் நகராது. இரும்புக் குண்டும் நகராது. தங்கக் குண்டும் நகராது.

திடப்பொருளின் இயல்பு இதுதான். இனி திரவப் பொருளோ வைத்த இடத்தில் இருப்பதுபோல் இருக்கும். ஆனால் ஓடிப்பரவும். வேறொரு சக்தி வந்து அதைத் தடுத்தால் அல்லாது ஓடிக்கொண்டே இருக்கும்.

சுற்றிச்சுற்றி ஆர்ப்பரிக்கிறது கடல். வான் வெளியில் ஓடியபடியே இருக்கிறது மழை. அருவி கொட்டுகிறது. நதி நீரும் போய்க் கொண்டுதான் இருக்கிறது.

உலகம் முழுவதும் ஓடியாடிப் பரவுவதுதான் நீரின் (திரவப் பொருளின்) இயல். கடலுக்குப் பரவை என்று பெயர் வந்தது அதனால்தானே.

★★★★★★★

உயிருக்குயிரான தண்ணீர் என்னும் அந்தத் தத்துவம் (முழுவதும்) இறைவனின் ஆணையில் கட்டுண்டு நிற்கிறது. அதன் அடையாளந்தான் சடையும் கங்கையும்.

''நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தான்''

★★★★★★★

இரும்பு, பொன் முதலியவைகளின் நிலை, நீரின் நிலை இருக்கட்டும் அப்படி. இனி உலகின் நிலை - அதாவது மக்கள், வாழ்க்கை, பண்பாடு, கலை இவைகளின் நிலை என்ன?

உழவர், தச்சர், கொல்லர், குயவர், நெய்கிறவர், மீன் பிடிக்கிறவர், உப்புக் காய்ச்சுகிறவர், ஆடு, மாடு மேய்ப்பவர் முதலியவர்களை வைத்துத்தான் உலகம். இவர்கள் இல்லை என்றால் ஒன்றும் இல்லை.

அறிஞர் என்றால் இவர்கள் தாம். ஞானிகள் என்று தான் சொல்ல வேண்டும். இவர்களை எது நல்லது, எது கெட்டது, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பது இவர்களுக்குத் தெரியும். இயல்பாகவே தெரியும்.

எது தேவை, எது தேவை இல்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். இவர்கள் சாதாரண மக்கள். ஏழை எளியவர்கள். பள்ளிக்கூடம் போய்ப் பாடம் படிக்காதவர்கள். பட்டம் வாங்காதாவர்கள். ஆனால் ஞானிகள், திருப்தியானவர்கள். நிம்மதியோடு இருப்பவர்கள் இவர்கள்.

கல்லாத கலை என்று சொல்லுகிறாரே கம்பர். தெய்வமாக்கவி கம்பர். அந்தக் கல்லாத கலைக்கு உரியவர்கள் இவர்கள்தான். சாதாரணமானவர்கள் என்று பிறர் கருதுகிற இவர்கள்தான் அதன் நாயகர்கள்.

கலை, பண்பாடு, ஒழுக்கம், உழைப்பு, கருணை, தியாகம், நீதி எல்லாம் நிறைந்தவர்கள் இவர்கள். அதுமட்டுமா பக்தியே இவர்களிடம் தான். கடவுளிட்ட கட்டளைப்படிதான் எல்லாம். நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை. என்கிற மெய்யுணர்வு இயல்பாகவே இவர்களிடம் இருக்கிறது. அவர்களுடைய உணர்ச்சியோடு உணர்ச்சியாய், ரத்தத்தோடு ரத்தமாய் சேர்ந்திருக்கிறது பக்தி.

சாதாரண மக்கள் இல்லை என்றால் பக்தி இல்லை. உண்மையான உணர்ச்சிபூர்வமான பக்தி இல்லவே இல்லை.

*******

அந்தராத்மா என்று சொல்கிறோமே மனச்சாட்சி, அது சாதாரண மக்களிடந்தான்.

பெண்களும் (தாய்மார்களும்) அப்படித்தான். அவர்களுடைய கருணையும், தியாகமுமே உலகைப் பாதுகாக்கும் அரண். பக்திக்குத் தாயகம் அவர்கள். மனச்சாட்சி உடையவர்கள் பெண்கள்.

சாதாரண மக்கள், பெண்கள் இவர்களை வழி நடத்திச் செல்வது அவர்களுடைய மனச்சாட்சிதான். அதன் குரல்தான் தெய்வத்தின் குரல்.

*******

அருளாளர்கள், மெய்யடியார்கள் ஞானிகள் எல்லோரும் சாதாரண மக்களையும் தாய்மார்களையும் பார்த்து அதிசயித்திருக்கிறார்கள். அவர்களையே குருவாக மதித்திருக்கிறார்கள்.

தங்களைச் சாதாரண மக்களாகவும் பெண்ணாகவும் பாவித்துப் பக்தி செலுத்தி இருக்கிறார்கள் அருளாளர்கள்.

அப்பர் சுவாமிகளும் அப்படியே இறைவனைக் காண்கிறார். ஒன்றும் தெரியாதவன், நான் என்றும் ஒன்றும் இல்லாத சாதாரணன் நான். என்றும் அழுத்தம் திருத்தமாகவே சொல்கிறார். அவன்தான் எல்லாவற்றையும் எனக்குக் காட்டினான், கொடுத்தான் என்கிறார்.

அப்பர் வாக்கை எப்படி எடுத்துக் கொடுக்கிறது தமிழ்.

*நில்லாத நீர்சடைமேல்*
*நிற்பித்தா னை,*
*நினையாஎன் நெஞ்சை*
*நினைவித்தா னைக்,*
*கல்லா தன எல்லாம்*
*கற்பித்தா னை,*
*காணா தனவெல்லாம்*
*காட்டினா னைச்,*
*சொல்லா தனஎல்லாம்*
*சொல்லினா னைத்*
*தொடக்கறுத்(து) எளியேனை*
*ஆளாக்கொண் டு*
*பொல்லாநோய் தீர்த்தருளும்*
*புனிதன்தன் னைப்*
*புண்ணியனைப் பூந்துருத்திக்*
*கண்டேன்நா னே.* (40)

---

தொடக்கு அறுத்து - என் ஆணவத்தை அறுத்தெறிந்து. ஆளாக்கொண்டு - அடியவனாக என்னை ஏற்று. பொல்லாநோய் தீர்த்தருளும் புனிதன் - ஆணவ மயக்கமாகிய புற்றுநோயிலிருந்து என்னை மீட்டு வாழ்வளித்த அருளாளன். பூந்துருந்தி - திருப்பூந்துருத்தி. இது திருவையாறை ஒட்டி இருக்கிற புண்ணிய ஷ்தலம், திருவையாறோடு சேர்ந்த ஏழு ஷ்தலங்களில் ஒன்று.

# அவன் வேண்டுவது அன்பு ஒன்றையே

*41. படுக்கையில் குழந்தையைப் பக்கத்தில் போட்டு உறக்காட்டுவாள் தாய். குழந்தை தூங்கிய பிறகு தான் தாய் தூங்குவாள்.*

*அயர்ந்து தூங்கினாலும் அடிக்கடி விழிப்பு வரும் தாய்க்கு. விழிக்கும் பொழுதெல்லாம் குழந்தையைத் தடவிப் பார்ப்பாள் தாய்.*

*படுத்து உறங்குகிறது குழந்தை. எங்கும் போய்விடவில்லை என்பதில் ஒரு திருப்தி தாய்க்கு.*

★★★★★★★

*தொட்டிலில் போட்டு உறக்காட்டிய குழந்தையைக் கூட விழிக்கும் பொழுதெல்லாம் எழுந்து போய்ப் பார்ப்பாள் தாய். தொட்டில்ச் சேலையை விலக்கி நன்றாகப் பார்த்தபிறகு தான் அவளுக்குத் திருப்தி.*

*இதைவிட வேடிக்கை. அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருப்பாள் தாய். தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தை. சமையல் முடிவதற்குள் இரண்டு மூன்று தடவை தொட்டில் பக்கம் வருவாள் தாய். தொட்டில் கம்பைப் பிடித்துப் பார்ப்பாள் குழந்தையை.*

*படுத்துத்தான் இருக்கிறது குழந்தை. தொட்டிலை விட்டு இறங்கித் தெருவுக்குப் போகவில்லை குழந்தை என்பதில் தாய்க்குத் திருப்தி.*

★★★★★★★

*கூடவே சேர்ந்து இருக்கிறது குழந்தை. அதனால் வரும் சந்தேகம், பயமும் கூடத்தான். இரண்டு மூன்று வருடம் கழித்து அதே குழந்தை பள்ளிக்கூடம் போகிறது. தாய் அங்கே போய் - அடிக்கடி போய் குழந்தை இருக்கிறதா என்று பார்த்து வரவா செய்வாள்.*

*கூடவே ஒட்டி இருக்கிறபொழுதுதான் அப்படி எல்லாம் நினைப்பு வரும்.*

கடவுள் கூடவே இருக்கிறார் பக்தர்களிடம். குழந்தை போலவே ஒட்டி இருக்கிறார். உணர்ச்சிமயமாக நிறைந் திருக்கிறார் கடவுள். அப்படி இருப்பதன் காரணமாகவே எங்கும் போய் விட்டானோ இறைவன் என்கிற சந்தேகம் வரும் அடியார்களுக்கு.

தேடிப் பார்க்கவே வைத்துவிடும். ஏங்கி நினைக்கவும், கதறி அழைக்கவம் வைத்துவிடும்.

*******

அப்பர் சுவாமிகளும் அடிக்கடி இறைவனை அப்படி எல்லாம் தேடுகிறவர்தான். தேடி அழைக்கிறவர்தான். இதோ

*சங்கொத்த மேனிச்செல் வா!*
*சாகும்நாள் நாயேன்உன் னை*
*"எங்குற்றாய்" என்றபோழ் தில்*
*இங்குற்றேன் என்கண்டா யே!* (41)

42. நாம் நிம்மதியாக இருக்கவேண்டும் என்றால் மற்றவர்களை நிம்மதியாக இருக்கவிட வேண்டும் நாம். அப்படி இருக்க நாம் செயல்பட வேண்டும்.

மகிழ்ச்சி என்பது மற்றவர்களை மகிழ்விப்பதிலும் அவர்கள் மகிழ்ச்சியைப் பார்ப்பதிலும் இருக்கிறது.

மற்றவர்களை நாம் நினைத்தால் நம்மை மற்றவர்கள் நினைப்பார்கள்.

*******

இதில் ஒரு கஷ்டமும் இல்லை. இயல்பான காரியந்தான். மனந்தான் வேண்டும். லகுவாக முடிந்துவிடும் காரியம். எல்லோருக்குமே எளிதானதுதான் இது.

---

சங்கு ஒத்தமேனி - இறைவனுடைய திருவுருவம் செம்மேனி தான். தீவண்ணந்தான் ஆனாலும் மேனி முழுவதும் வெண்ணீற்றுப்பூச்சு. அது நெருப்பை மறைத்து பால் போல் சங்குபோல் வெள்ளை வெளேர் என்று ஒளிர்கிறது. என் கண்டாய் - என்று சொல்ல வேண்டும். மறந்து விடக்கூடாது. ஞாபகம், நீதான் கதி, உன்னைத்தான் நம்பி இருக்கிறேன். ஞாபகம், மறந்துவிடாதே.

ஆனால் மனம் கைவசம் இல்லையே. யாருக்குமே அது சிக்குவதாக இல்லை. கொப்புக்குக் கொப்பு தாவிக் கொண்டே இருக்கிறது மனம்.

நம்மால் அதை வசப்படுத்த முடியவில்லை. வசப்படுத்தி விட்டால். பூரண ஒத்துழைப்பு கொடுக்கிறது மனம் ஒருவருக்கு. சொன்னபடி கேட்கிறது அவருக்கு அந்த மனம்.

இறைவனைப் பற்றி நினைக்க முடிகிறது. அதிலேயே நிற்க முடிகிறது. வேறு எண்ணம் வந்து கலைப்பதில்லை அவர் நினைப்பை.

ஆனால் நம் போலியர்களுக்கு அப்படி இல்லையே. நம்மைப் பார்த்து பரிவு கொள்கிறார் அப்பர் சுவாமிகள்.

நம்மேல் கொண்ட பரிவினால் நம்முடைய அறியா மையைத் தன் தலைமேல் போட்டுக் கொண்டு மனத்தைப் பார்த்து வேண்டுகிறார். புத்தி சொல்கிறார். நயந்து தாஜாப் பண்ணியே சொல்கிறார். எப்படி?

*வானம் சேர்மதி*
*சூ டிய மைந்தனை*
*நீநெஞ் சே/கெடு*
*வாய்நினை கிற்கிலை;*
*ஆல்நஞ் சாடியை*
*அன்பிலா லந்துறைக்*
*கோன்எம் செல்வனைக்*
*கூறிடகி ற்றியே* (42)

வானம் சேர்மதி சூடிய மைந்தன் - இறைவன், சிவபெருமான். தலைமேல் பிறைச் சந்திரனைச் சூடி இருக்கிறார் பெருமான். போகப்போக மேலே மேலே போய்க் கொண்டிருக்கும். எல்லை இல்லாதது வானம். அந்த வானமே நெற்றியில் சந்திரனைச் சூடி இருக்கிறது. அதன் அடையாளந்தான் இறைவன் சடையில் சந்திரனை வைத்திருக்கிறான் என்பது. ஆகாயந்தானே அவன் திருமேனி. மைந்தன் - தந்தையும் அவன்தான், மைந்தனும் அவன்தான், நாமும் அவன்தான். அவனும் அவன்தான். எல்லாம் இறைவன்தான். நீ நெஞ்சே - மனமே, உனக்கு எவ்வளவு கொழுப்பு? நினைகிற்றிலை - அவன் நினைப்பே இல்லையே உன்னிடம். ஆல் நஞ்சு ஆடி - ஆல கால விஷயத்தை உண்டு அடக்கியவன். கூறிடகிற்றி - சொல், சொல்லிக் கொண்டே இரு.

43. இறைவனைப்பற்றி நினைப்பு இருந்தால் வாய் (அதாவது) 'நா' அவனைச் சொல்லிக் கொண்டே இருக்கும். உட்காரும் போதும் சொல்லும், எழுந்திருக்கும்போதும் சொல்லும், நிற்கும்போதும் சொல்லும், நடக்கும்போதும் சொல்லும் நா.

சிவ சிவ என்று சொல்கிறதென்றால் சிவா, சிவா என்று அழைக்கிறதுதான்.

நினைத்துக் கூப்பிட்டால் 'என்ன' என்று உடனே கேட்பான் இறைவன். அதற்குப் பதில் என்ன சொல்கிறோமோ அது அதற்கு வழி காட்டுவான் பெருமான்.

★★★★★★★

நினைப்பும் அழைப்பும் உண்மையாக இருக்க வேண்டும். அதாவது உணர்ச்சியோடு இருக்கவேண்டும். உணர்ச்சியோ உண்மையோ இல்லாமல் ஜம்பத்துக்கு தியானம் பண்ணுகிறதும், உள்ளம் உருகி அழைப்பதுபோல நடிப்பதும் திருட்டுத்தனம்.

★★★★★★★

திருட்டுத்தனம் இல்லை என்றால் நான் என்கிற ஆணவம் போய்விடும். அது ஒழிந்து போனால் சும்மா இருக்குமா பக்தி - உணர்ச்சி. நந்தவனத்துக்கு ஓடச் சொல்லும், பூவைப் பறிக்கச் சொல்லும், மாலை கட்டச் சொல்லும், கோவிலுக்கு ஓடிவந்து மாலையைப் பெருமானின் திருமேனியில் சார்த்தி அழகையும் ஒய்யாரத்தையும் பார்க்கச் சொல்லும் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட வைக்கும்.

★★★★★★★

நான் யார், என் அந்தஷ்து என்ன? நானா பூவைப் போய்ச் செடியில் பறிக்கிறது என்று திமிராகச் சொல்லாது பக்தி.

வேலைக்காரனை விட்டுப் பறிக்கவும், மாலை கட்டவும், கோவில் வரை - சந்நிதானம் வரை அவனையே மாலையை எடுத்து வரவும் ஜம்பம் பண்ணாது பக்தி.

சந்நிதானம் வந்ததும் வேலைக்காரனிடமிருந்து மாலையை வாங்கி, பூசாரியிடம் கொடுத்து ''சாமிக்குச் சார்த்தும் மாலையை'' என்று அதிகாரம் பண்ணுமா பக்தி.

பாவம்! அதிகாரம் பண்ணி அதிகாரம் பண்ணி அநாதையாய்ப் போய்விட்டார்கள் மனிதர்கள்.

எத்தனை பரிதாபத்துக்கு ஆளாகிவிட்டார்கள் அவர்கள்.

*"காக்கைக் கே இரை ஆகிக் கழிவரே"*

பூவைக் கூடத் தொடமுடியாத உடம்பு எப்படிப் போகிறது அலங்கோலமாக

*பூக்கைக் கொண்டரன்*
*பொன்னடி போற்றிலார்,*
*நாக்கைக் கொண்டரன்*
*நாமம் நவில்கிலார்,*
*ஆக்கைக் கேஇரை*
*தேடி அலமந்து*
*காக்கைக் கேஇரை*
*ஆகிக் கழிவரே* (43)

அருமையான பாடல். பாடப் பாட நாவுக்கு ருசி, மணமும் கூடத்தான்.

44. வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை நாடு (பாரததேசம்) பூராவும் கோவில்கள் தான். உத்சவங்கள் தான், பக்தர்கள்தான்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று பக்தி மயந்தான். எத்தனை சந்நிதானங்கள், எத்தனை மடங்கள், ஆஸ்ரமங்கள்தான் எத்தனை எத்தனை? தடுக்கி விழுந்தால் கோயில்தான். ஆஸ்ரமங்கள்தான். சாமியார்தான்.

அருளாளர், ஆன்றோர், சான்றோர் சித்தர், நாயன்மார், ஆள்வார் இவர்கள் அன்று முதல் இன்றுவரை எத்தனைபேர் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியுமா? கணக்கு வழக்கை யெல்லாம் தாண்டிய பெருங்கூட்டம் ஆன்மீகச் செல்வர்கள் கூட்டம்.

இத்தனைபேரும் உபதேசம் பண்ணி இருக்கிறார்கள். பாடி இருக்கிறார்கள். சாத்திரம், தோத்திரம் என்று நூல்கள் எழுதிக் குவித்திருக்கிறார்கள்.

இவர்கள் மட்டுமா? திருவள்ளுவர், நாலடியார், ஔவையார், குமரகுருபரர், ஏன், பாரதியார் வரை

நூற்றுக்கணக்கான கவிஞர்கள் பாடித்தான் இருக்கிறார்கள். கருணை, நீதி, ஒழுக்கம், பொறுமை, ஈகை, ஒற்றுமை, பணிவு, அடக்கம் பற்றி எல்லாம் பாடல்களாகப் பாடி ஒவ்வொரு பாடலையும் கலைக்கோயிலாகவே படைத்திருக்கிறார்கள்.

கம்பர், ஜயங்கொண்டார், பெருந்தேவனார், திரிகூடராஜப் பக்கவிராயர் போன்ற மகான்கள் அத்தனைபேரும் வீரம், தியாகம், நேர்மை, மனிதநேயம், அன்பு, நட்பு இவைகளுக்கு உயிர் கொடுத்து, உருவமும் கொடுத்து கவிகளாய் நடமாடவிட்டிருக்கத் தானே செய்கிறார்கள்.

★★★★★★★

அருளாளர், நீதிமான்கள், கவிஞர், கலைஞர் எல்லோருமே மனிதர்களுக்காகத்தான் சொல்லி இருக்கிறார்கள். ஆடு, மாடுகளுக்கோ, புழுப்பூச்சிகளுக்கோ சொல்லவில்லை. மனிதர்களுக்குத்தான் சொல்லி இருக்கிறார்கள். எப்படி வாழவேண்டும், எப்படி வாழக் கூடாது. என்பதைத் தான் சொல்லி இருக்கிறார்கள்.

ஊரோடு உலகத்தோடு சேர்ந்துதான் வாழவேண்டும். விலகிப் போகக் கூடாது. ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள்.

கவிஞர்கள், அருளாளர்கள் மட்டுமல்ல சாதாரண மக்களிலிருந்து எல்லோருமே அதைத்தான் சொல்கிறார்கள். ஒருவருக்கொருவர் அதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்வது அதைத்தான். ஆசிரியர்கள் மாணாக்கர்களிடம் சொல்வதும் அதைத்தான்.

சொல்லிக் கொண்டே இருக்கிறது உலகம். கேட்டுக் கொண்டே இருக்கிறது அதே உலகம்.

★★★★★★★

ஆச்சார்யர்களுக்கும் பஞ்சம் இல்லை. சிஷ்ய கோடிகளுக்கும் பஞ்சம் இல்லை. ஆனால் மஞ்சாடி அளவாவது திருந்தி இருக்கிறதா நாடு - உணர்ந்து நடக்கிறார்களா மக்கள். அதுதான் இல்லை.

இனி ஞான நூல்களைப் படிக்காதவர்கள், நீதி நூல்களைக் கற்காதவர்கள் எல்லோருமே இயல்பாகவே நல்லவர் களாகத்தான் இருக்கிறார்கள். அதாவது மனிதர்களாகவே இருக்கிறார்கள். எப்படி என்றால் மற்றவர்களையும் மனிதர்களாகவே நினைக்கிறார்கள். மனிதர்கள் என்றே மதிக்கிறார்கள். மிக்க பிரியத்தோடு உறவாடுகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் மனிதர்கள்தான் அவர்களுக்குச் செல்வம். லட்சியமே மனிதர்கள்தான்.

*******

ஆனால் ஆணவம் பிடித்தவர்கள் அப்படி இல்லை.

பணம் எப்படிச் சம்பாதிக்கிறது என்பது தெரியவே படிக்கிறார்கள். படிப்பும் அதையே சொல்லிக் கொடுக்கிறது. படிப்பை வைத்து பலவழிகளில் சம்பாதிக்கிறார்கள் பணத்தை. அறிவு, ஞானம், நுட்பம், ஆராய்ச்சி எல்லாமே பணம் காய்ச்சி மரம் என்றால் பிறகு உணர்ச்சி எங்கிருந்து வரும். உண்மை எங்கிருந்து வரும்.

*******

படிப்பும் பணமும் மனிதர்களைப் பிரித்து வைக்கிறது. ஜாதி, மத, இனவேற்றுமையை விட படிப்பும், பணமும் படுத்துகிற வேற்றுமைதான் கொடியது. ஆணவமானது தடித்துக் கொழுப்பதற்குக் காரணம் படிப்பும் பணமும்தான்.

*******

பணத்தைக் காட்டியே மனிதனை இழுத்துக் கொண்டு போகிறது ஆணவம் மற்றவர்களை ஒதுக்கிவிட்டு இழுத்துக் கொண்டு போகிறது அந்த வெறி. பிறகு அவன் புத்தியைக் கெடுக்கிறது. அதன்பிறகு அவனைச் சோம்பேறி ஆக்குகிறது. சோம்பலை வளர்க்கவே பல கருவிகளை உற்பத்தி செய்கிறது. புத்தியைக் கெடுத்தது போல மனிதனுடைய உழைப்பையும் கெடுத்துவிடுகிறது. ஆணவம். மனிதஉறவு, ஆனந்தம், உண்மை, மரியாதை எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறது ஆணவம்.

*******

பிற மனிதர்களைத் தம்மவராகப் பார்க்க முடியவில்லை. அவர்களும் நாமும் ஒன்றுதான். அவர்கள் வேறு, நாம்வேறு என்பது மாயை, பொய், ஆணவம் என்று ஒருவனுக்குத் தெரியவில்லை என்றால் அவனிடம் புத்தி எப்படி இருக்கும். பக்தி எப்படி இருக்கும்.

அண்ட பிண்ட சராசரம் எல்லாம் ஒன்று; எல்லாம் கடவுள் மயம் என்று சொல்கிறவன் உண்மையாகவே சொல்கிறான், என்றால் உணர்ச்சியோடு சொல்கிறான் என்றால் ''அவன் கீழ் நான் மேல்'' என்று நினைப்பானா?

தங்கமும் ஒன்று இரும்பும் ஒன்று என்று உபதேசம் பண்ணிக் கொண்டே நான் அறிஞன் அவன் பாமரன், நான் மாடி வீட்டுக்காரன், அவன் குடிசைவாசி, நான் வேறு, அவன் வேறு என்று ஒதுங்கினால் அவனிடம் பக்தி ஏது.

தன்னொத்த மனிதனோடேயே - தன் உடன்பிறப்போடேயே உறவாட முடியாதவன் கடவுளோடு எப்படி உறவாட முடியும்?

ஆணவம் விலகவேண்டும். விலகினால்தான் பக்தி வரும். பக்தி வந்துவிட்டால் அன்பு, தொண்டு, பொறுமை, இன்சொல், தியாகம், நீதி எல்லாம் தானாக வரும். அதன் மூலந்தான் தெய்வ உறவு வரும்.

மனிதனை மதிக்கமாட்டேன். தெய்வத்துக்குத்தான் என் தொண்டு என்றால் அவனுடைய பூஜை, புனஸ்காரம், ஆசாரம் அனுஷ்டானம், தவம், யோகம் ஒன்றும் பிரயோசனப்படாது.

*******

அப்பர் சுவாமிகள் கடவுளை மனிதர்கள் மூலம் பார்த்தவர். சாதாரண மனிதர், சக மனிதர், தாய்மார், குழந்தைகள் மூலம் பார்த்தவர். அவர்களோடு சேர்ந்து (ஒன்றி) இருந்தே கடவுளைக் கண்டவர்.

தம் அனுபவத்தைப் பரிவோடு எடுத்துக் சொல்கிறார், நமக்கு. எப்படி? ''ஒன்றி இருந்து நினைமின்கள் உம் தமக்(கு) ஊனம் இல்லை'' இதைவிட எப்படி விளக்கமாகச் சொல்ல முடியும்.

*ஒன்றி இருந்து*
*நினைமின்கள் உம்தமக்(கு)*
*ஊனம்இல் லை;*
*கன்றிய காலனைக்*
*காலால் தடிந்தான்*
*அடியவர்க் கா:-*
*சென்று தொழுமின்கள்*
*தில்லையுள்ச் சிற்றம்*
*பலத்துநட் டம்:-*
*'என்றுவந் தாய்' என்னும்*
*எம்பெரு மான்தன்*
*திருக்குறிப் பே (44)*

45. எண்ணம், சொல், செயல் மூன்றும் வெளிப்படையாக இருக்க வேண்டும். கள்ளம், கபடம் இல்லாமல் இருக்க வேண்டும். மேலும் எண்ணம் முதலிய மூன்றும் வேறு வேறாக இல்லாமல் ஒன்றாக (ஒன்றி) இருக்க வேண்டும். அதுதான் உண்மை. ஆணவம் இல்லாத நிலை என்றால் அதுதான் அப்படிப்பட்ட நிலைக்குத்தான் பக்தி என்று பெயர்.

---

ஒன்றி இருந்து நினைமின்கள் - மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், ஊரார், உலகத்தார் எல்லோருடனும் சேர்ந்திருங்கள். பிரிந்து போக வேண்டாம். மனிதர்களுக்காகவே மனிதர்களோடு மனிதர்களாய் இருங்கள். அப்படிச் சேர்ந்து ஒன்றாய் ஒரு தன்மைத்தாய் நின்று இறைவன் திருவருளை உணர்ந்து பாருங்கள். ஊனம் இல்லை - அதில் நஷ்டம் இல்லை. லாபந்தான். பேத உணர்வு இல்லாமல் வழிபட்டால்தான் அவன் உங்களை நம்மவன் என்று ஏற்றுக் கொள்வான். அப்படி ஏற்றுக் கொண்டபின் என்ன உதவியும் செய்வான். எமனையே அடித்து விரட்டுவான். மார்கண்டனுக்காக எமனை எட்டி உதைத்து விரட்ட வில்லையா இறைவன். கன்றிய காலன் - மூர்க்கத் தனத்தோடு வந்த எமன். அப்படி ஒரு பக்தி வரவேண்டும். வந்தபின் சும்மா இருக்க முடியாது. கோவில்தோறும் போவீர்கள். உங்களை வரவேற்று உபசரிப்பான் பெருமான். எப்படி? ''என்று வந்தாய் என்னும் எம் பெருமான் தன் திருக்குறிப்பே.''

குறிப்பு: உயிருள்ள ஓவியம் என்றால் ஏற்கனவே நாம் பார்த்துப் பழகியது போலவே அது தோன்றும். நாமும் அதற்கு அப்படியே தோன்றுவோம். நம்மை வரவேற்று உபசரிக்கிற மாதிரியே அது தோன்றும். ''என்று வந்தாய்'' என்னும் எம் பெருமான் தன் திருக்குறிப்பே.''

பக்தி என்றால் கருணைதான். நீதிதான். நீதிமயமாகவும் கருணை மயமாகவும் பக்தி பெருகும்.

குடும்பத்தில் உள்ளவர்கள், தெருவில் இருக்கிறவர்கள், ஊரில் இருக்கிறவர்கள் நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் மக்கள்தான். நாமும் அவர்களும் ஒன்றுதான். என் சாண் உடம்புதான் வேறு வேறாகத் தெரிகிறதே ஒழிய மற்றப்படி எல்லா மக்களும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைதான், உடன் பிறப்புக்கள்தான்.

''நான் தனி இல்லை. நானும் மற்றவர்களும் ஒன்றுதான்'' இதுதான் மெய்யுணர்வு. இந்த மெய்யுணர்வில் நிற்பது தான் நீதி.

மக்கள் எல்லோரும் ஒன்று. ஒரே உண்மை. ஒரே தத்துவம். ஒரே பொருள் என்று ஆனபிறகு, நான் மட்டும் சௌகர்யமாக இருப்பேன். மற்றவர் அசௌகர்யம் மற்றவர்களோடு. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று எண்ணம் வருமா? வராது.

இன்னொருவர் பட்டிளி கிடந்தால் தானே பட்டினி கிடக்கிற மாதிரி இருக்கும். இன்னொருவர் ஆடையில்லாமல் வருந்துகிறார் என்றால் அந்த வருத்தம் நம்மையும் தாக்கும். அப்படித் தாக்கினால்தான் அருள் (கருணை)

*******

தமிழ்நாட்டில் ஒரு பகுதியில் மழை இல்லை. பயிர் பச்சை எல்லாம் கருகிவிட்டன. உணவு தானியம் இல்லை. குடி தண்ணீருக்கே பஞ்சம். ஆடு, மாடுகள் கஷ்டப்படுகின்றன. அதை விடக் கஷ்டம் மனிதர்களுக்கு.

என்ன செய்கிறது என்கிற துயரம் எல்லோரையும் பிடித்து ஆட்டுகிறது.

சமயப் பண்பாட்டிலும், வழிபாட்டிலும், பக்தியிலும் சிறந்த ஒரு சிவ பக்தர். பஞ்சம் படுத்துகிற பாட்டைப் பார்த்தார்.

கண் கலங்கிவிட்டது பக்தருக்கு. தாங்கமுடியவில்லை வேதனையை அவரால். அத்தனை பேருடைய கஷ்டமும் சேர்ந்து அவர் உள்ளத்தை கசக்கி முறுக்கியது.

''மேகங்களே மழையை கொட்டுங்கள் என்று கை எடுத்துக் கும்பிட்டு வேண்டுகிறார் மழையை. எப்படி வருகிறது வேண்டுதல்.

*சைவ சமயம்*
*சமயம் எனில், அச்சமயத்*
*தெய்வம் பிறைசூடும்*
*தெய்வம் எனில் - ஐவரைவென்(று)*
*ஆனந்தா காரத்(து)*
*அழுந்துவதே முக்திஎனில்*
*வானங்காள் பெய்க*
*மழை*

பாடலைப் பாடி முடித்தாரோ இல்லையோ, மழையும் கொட்டிவிட்டது. எல்லோரும் ஆனந்த வெள்ளத்தில் நீந்தினார்கள். சிவபக்தரும் ஆனந்தத்தில் திளைத்தார்.

திருவாடுதுறை ஆதீன கர்த்தர் பாடிய பாடல் என்று ஒரு வரலாறு உண்டு.

★★★★★★★

1947-ம் வருடம் சுதந்திர நாடானது இந்தியா. அதற்கு முன் இந்தியாவை இந்தியர்களிடம் (அதிகாரப் பரிமாற்றமாக) ஒப்படைக்க பிரிட்டிசார் இந்தியத் தலைவர்களிடம் பேச்சு நடத்தினார்கள்.

★★★★★★★

அதில் முக்கியமான பேச்சு 1946-ல் சிம்லாவில் வைசிராய் மாளிகையில் நடந்தது. சர், ஷ்டாப் போர்ட கிரிப்ஸ், தலைமையில் பெதிக் லாரன்ஸ், அலெக்ஸாண்டர் என்னும் இருவரும் ஆக மூன்றுபேரும் பிரிட்டிஷ் குழுவினராகப் பேச்சு நடத்தினர்.

மூவரும் பிரிட்டிஸ் அமைச்சர்கள் தான். இந்தியத்தரப்பில் மகாத்மா காந்தி, நேரு, ஆசாத், மகமடலி ஜின்னா, அம்பேத்கார் என்று பலர் கலந்து கொண்டனர்.

தினந்தோறும் மாலை 5 மணிக்கு பேச்சு ஆரம்பமாகும். 4.50-க்கு மகாத்மா வந்துவிடுவார்.

ஒருநாள் ஐந்து மணியாகியும் அவர் வரவில்லை. எல்லோருக்கும் ஒரே பரபரப்பு. மணி ஐந்து, ஐந்து பத்து, ஐந்து பதினைந்து என்று நேரம் ஆக ஆக செய்வதறியாது திகைத்துப் போனார்கள் எல்லோரும்.

நேருவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. முற்றத்துக்கு வருவார். உள்ளே போவார். உட்காருவார். எழுந்திருப்பார், நிற்பார், நடப்பார்.

மாலை ஐந்து மணி பதினெட்டு நிமிடம். ஒரு பழைய காரில் வந்து சேர்ந்தார் மகாத்மா. அவசரம் அவசரமாகக் கதவைத் திறந்தார் நேரு. திறந்து கொண்டே ''ஏன் தாமதம், பாபு'' என்றார் நேரு. கேள்வியில் கொஞ்சம் காரம் இருக்கவே செய்தது.

''நான் ஒன்றும் தாமதம் இல்லை. எப்பொழுதும் போல் புறப்படும் நேரத்தில்தான் புறப்பட்டேன்'' என்றார் காந்தி. நேருவுக்கு இன்னும் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. ''மணி என்னவென்று பாருங்கள்'' என்று கையில் கட்டிய கடிகாரத்தைக் காட்டியபடியே 'இது தாமதம் இல்லையா' என்றார்.

நான் புறப்பட்டது சரியான நேரத்தில்தான். காரில் ஏறும்போது ஒரு விதவைப் பெண் வந்தாள் என்றார் காந்தி. மூட நம்பிக்கை உங்களுக்கும் உண்டா என்றார் நேரு.

''அப்படி ஒன்றும் இல்லை, மூன்று பெண்கள் (கல்யாண வயது வந்தவர்கள்) அந்த அம்மாவுக்கு. யாருக்கும் திருமணம் ஆகவில்லை. எல்லாம் வரதட்சணை, பண்ணுகிற அக்கிரமம். வசதி இல்லை அவளிடம். அவள் குறையை எடுத்துச் சொன்னாள். ஆறுதல் சொல்லி அவளைத் தேற்றினேன். அதனால் ஆகி இருக்கிறது நேரம்'' இப்படிச் சொன்னார் மகாத்மா. புன்முறுவல் பூத்தபடியே சொன்னார் மகாத்மா.

'அதற்கு இதுதான் நேரமா' என்று சீறினார் நேரு. உடனே சொன்னார் மகாத்மா.

''இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்பதே இந்த அபலைகளின் துயர் துடைக்கத்தானே. தடபுடலோடும் வசதியோடும் வாழ்கிறவர்களுக்காவா போரிடுகிறோம். இந்த நாட்டில் கஷ்டப்படுகிறவர்கள் எல்லோரும் - தாழ்ந்தவர்கள், வீழ்ந்தவர்கள், ஆதரவற்றவர்கள், அநாதைகள் எல்லோரும் வாழ வேண்டும். நன்றாக வாழவேண்டும். அதற்காகத்தான் பாடுபடுகிறோம்.

இவர்கள் மனிதர்கள் இல்லையா, இந்த நாட்டுக்கு உரியவர்கள் இல்லையா? இவர்களை ஒதுக்கிவிட்டு வேறு யாருக்கு வாங்குகிறோம் சுதந்திரம்'' இப்படிச் சொன்னார் மகாத்மா.

ஜவஹர்லாலின் உள்ளம் உருகிவிட்டது. ''பாபு, இன்றுதான் ஜனநாயகம் என்றால் என்ன, விடுதலை என்றால் என்ன என்பதைத் தெரிந்தேன்'' என்றார் நேரு.

வாய்ப்பான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு காந்தி, நேரு என்னும் அரிய பாத்திரங்களின் மூலம் தரிசனம் கொடுத்து விட்டது பக்தி.

மேலும் ஒருமுறை பக்தியைக் கண்டு தரிசிக்கலாம்.

★★★★★★★

மேல் நாட்டு அறிஞர் ஒருவர் மகாத்மா காந்தியின் ஆஸ்ரமத்துக்கு வந்தார். காந்தியோடு தங்கி - உரையாடி உண்மையை உணர்வதற்காகவே வந்தார்.

ஒருநாள் காந்தியிடம் கேட்டார், ''அடடா! என்ன அநியாயம் இது என்று நொந்து வருந்தித் துன்புறுவது மனித வாழ்வில் உண்டு. நீங்கள் அப்படி வேதனைப்பட்டது உண்டா? எதற்காக? யோசித்து ஒன்றிரண்டு சொல்லுங்கள்'' என்று.

''நான் அப்படித் துயருற்றது இல்லையே'' என்றார் மகாத்மா? உடனே அறிஞர் சொன்னார். ''உங்களுக்காக நீங்கள் துன்புறாதிருக்கலாம். ஆனால் பிறருக்காகத் துன்புற்றிருப்பீர்கள். மனிதனாகப் பிறந்தால் ஒரு தடவையேனும் துன்புறாமல் யாரும் இருக்க முடியாது. தெய்வமே மனிதனாகப் பிறந்தாலும் துன்புற்றுத்தான் ஆகவேண்டும். ஆகவே நீங்களும் நிச்சயம் வேதனைப்பட்டிருப்பீர்கள். ஞாபகப்படுத்திப் பாருங்கள். நிச்சயம் தெரியும்'' என்றார்.

சரி என்று ஒப்புக் கொண்டார் காந்தி. ஒப்புக் கொண்ட மறுநாளே அறிஞரை வரவழைத்தார். ''நீங்கள் சொல்லியது உண்மை. இரண்டு காரியங்கள் என்னை வேதனைப்படுத்தி உள்ளன. இன்றும் அவற்றை நினைத்தால் வேதனைதான்.

ஒன்று என்னுடைய சகோதரர்கள் ஏழை எளியவர்கள் ஆயிரக்கணக்கில் - லட்சக்கணக்கில் அரை வயிறும் குறை வயிறுமாய் பட்டினி கிடக்கிறார்கள். நானோ வேளா வேளைக்குச் சாப்பிடுகிறேன். இது கொடுமை. இந்தக் கொடுமையை நீக்க முடியவில்லையே என்கிற நினைப்பு வரும்பொழுது துன்புறுகிறேன். அவர்கள் துயரை நீக்க முடியாத நான் எப்படி வாழலாம் என்று கூட வேதனைப்படுகிறேன்.

இன்னொன்று, இந்தியாவில் படித்தவர்கள் தன்னலத்துக் காகப் படித்தவர்கள் பற்றி. இவர்களுக்கு தாய் நாடு பற்றித் தெரியாது. தாய் மொழி பற்றித் தெரியாது. லட்சோபலட்சம் மக்களைப் பற்றி - தங்கள் சகோதரர்கள் பற்றி ஒன்றும் தெரியாது.

''இந்த நாட்டில் ஒன்றும் இல்லை. மட்டமான படு மோசமான நாடு இது. தாய்மொழி எதற்கும் உதவாது. மக்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள்'' என்று நினைக்கிறார்கள் இவர்கள்.

பண்பாடு, கலை, அறநெறி, பக்தி, பொதுநல உணர்வு எல்லாவற்றையும் நாசம் செய்கிறார்கள் இவர்கள். அன்பு, பொறுமை, இன்சொல், நீதி, கருணை ஒன்றும் இல்லை இங்கு என்கிறார்கள் இவர்கள்.

தங்களுக்குத்தான் இந்த நாடே. இந்த நாட்டில் உள்ள சகலமும் தங்களுக்குத்தான் என்று நினைக்கிறார்கள். மற்றவர்கள் தங்களுக்குச் சேவகம் செய்யத்தான் என்பது அவர்களது முடிவு.

உணர்ச்சியே இல்லாதவர்கள் இவர்கள். உண்மைக்கும் இவர்களுக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது.

எலும்பையும், சதையையும் இரத்தத்தையும் மூடி மறைத்திருப்பது இவர்களுக்கு ஸ்கின் (தோல்) இல்லை. லெதர் அதுவும் செத்த எருமை மாட்டு லெதர்'' என்கிறார் காந்திஜி.

மேலும் சொன்னார். ''படித்தவர்கள் தொகை இப்பொழுது குறைவுதான். இந்தியா விடுதலை பெற்றபின் கல்வி நிலையங்கள் பெருகும். தன்னலப் படிப்பாளிகள் பெருகுவார்கள்.

குறைந்த எண்ணிக்கையில் இருக்கும்போதே இப்படிப் பொறுப்பற்று அலையும் கும்பல், அதிகமாய்ப் பெருகும் போது என்னென்ன கொடுமை செய்யும். அப்பொழுது இந்தியா என்ன பாடுபடும்.

என்னுடைய சகோதரர்கள் பலர் இப்படி தன்னுணர்வில்லாமல் இருக்கிறார்களே என்கிற நினைப்பு வந்தால் என்னால் தூங்க முடியவில்லை. என்னை வறுத்தெடுத்துவிடுகிறது அந்த நினைப்பு'' இப்படி முடித்தார் மகாத்மா.

தேசப் பக்தி, தெய்வ பக்தியை ஊட்டும் கல்வி இப்பொழுது இல்லையே என்று வருந்தினார் காந்திஜி.

★★★★★★★

பக்தி என்றால் ஒன்றுதான். தேசபக்தியானாலும் பக்திதான். தெய்வ பக்தியானாலும் பக்திதான். பக்தியின் அவதாரமாக விளங்கினார் காந்தி.

நாம் மனிதர் என்கிற உணர்வு, மற்றவர்களும் மனிதர் என்கிற உணர்வு, எல்லோரும் மனிதர் என்கிற உணர்வு இருந்தால் உறவு ஏற்படத்தானே செய்யும். நாம் எல்லோரும் ஒன்று என்னும் உணர்வுதான் ''எல்லாமே நம்மைப் போலத்தான். நம்மோடு சேர்ந்தவைதான்'' என்னும் உண்மையை உணர்த்தும்.

எல்லாம் ஒன்று. பேதம் இல்லை என்று தெரியத் தெரிய ஆணவம் கரையும். 'நான்' என்பது தேயும்.

அதற்கு வேண்டியது உண்மைதான். உணர்ச்சிதான். அன்பு, பரிவு முதலிய உணர்ச்சிதான்.

உண்மை இல்லை, உணர்ச்சி இல்லை என்றால் ஏமாத்துக்கச் சவடந்தான். வேஷந்தான். போலி வேஷந்தான். அதை 'கூட வேடம்' என்கிறார் எப்பர் சுவாமிகள்.

*தான தானதன்*
*தான தான தன்*
*கூட வேடத்தர்*
*ஆகிக் குழுவில்என்?*
*வாடி ஊனை*
*வருத்தித் திரியில் என்?*
*ஆடல் வேடத்தான்*
*அம்பலக் கூத்தனைப்*
*பாட லாளர்க்கல்-*
*லால்பரன் இல்லையே* (45)

கூடவேடத்தர் - தாடி, சடை, காவி, ருத்திராட்சம், விபூதிப்பூச்சு, சந்தனப் பொட்டு அதற்கும் மேலே குங்குமப்பொட்டு என்று சின்னங்களை மேலே மேலே போட்டுக் கொண்டு அலையும் வேஷதாரிகள். ஒரு இடத்தில் கூட்டம் போட்டுக் கூடி 'அரகர மகாதேவா' என்று இவர்கள் கத்துவதால் ஏதாவது பிரயோசனம் உண்டா?. கூடவேடம் - பொய்வேடம்.

வாடி ஊனை வருத்தித் திரியில் என் - பட்டினி, விரதம், தவம், ஹடயோகம் என்று உடம்பை இம்சைக்கு ஆளாக்கி உணர்ச்சியே இல்லாமல் அங்கே இங்கே என்று திரிவதில்தான் பிரயோசனம் உண்டா?.

ஊன் - உடம்பு. வருத்தி - கொடுமைப்படுத்தி. ஆடல் வேடமாம் அம்பலக்கூத்தன் - இறைவன். பரமாணுவிலிருந்து பேரண்டம் முடிய எல்லாம் அவன்தான். எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் ஒரே வஷ்து இறைவன்தான்.

அவனுடைய விருப்பம், கனவு, ஆனந்தக் கற்பனையே சகலமும். அதுதான் அவன் திருவிளையாடல். அந்தத் திருவிளையாடல் தான் அணு, பரமாணு, அண்டம், பேரண்டம் என்னும் தோற்றம். பல்வேறு தோற்றங்களும் அவன் போடுகிற பல்வேறு வேடம். நாடக வேடம். திருவிளையாடலே.

இது உண்மை. இந்த உண்மை தெரிந்தால் உணர்ச்சி ஊறும். உடம்பில் ரத்தம் ஊறுவதுபோல் உள்ளத்தில் உணர்ச்சி ஊறும்.

அந்த உணர்ச்சியே பாடலாக வரும். ஆடலாக வரும். அப்படி ஆனந்தத்தில் வருகிற பாடல்களும் ஆடல்களுமே கடவுளைக் காட்டும்.

குறிப்பு: உண்மையைக் கண்டவர்கள் பக்தர்கள். ஆணவத்திலிருந்து விடுபட்டவர்கள் அவர்கள். ஆணவமோ பொல்லாதது அழியாது. எதனாலும் அழிக்க முடியாது. கோவிலுக்குப் போக வேண்டும். மூர்த்தியை வழிபட வேண்டும். பாடல்களில் உள்ளம் கரைய வேண்டும். ஆடல்களிலும் கரைய வேண்டும். ஆணவத்தின் வேகத்தை அடக்க வழி இதுதான்.

# எப்படி மறக்க முடியும்?

46. வானத்தைப் படைத்தார் கடவுள். மண்ணையும் அதாவது உலகத்தையும் அவர்தான் படைத்தார். வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் கோள்கள் எல்லாம் அவர் படைத்தவையே.

ஜீவராசிகள் அத்தனையும் - மனிதர்கள் எல்லோரும் கடவுளின் குழந்தைகளே. மனிதர்களிலிருந்து புழுப்பூச்சிவரை உயிரினம் முழுவதற்கும் தந்தையும் அவரே தாயும் அவரே.

அவரே கடவுள். நாம் எல்லோரும் அவருடைய குழந்தைகள். உலகில் எங்கு போனாலும் எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள்.

நமக்கெல்லாம் கடவுள்தான் தலைவர் என்றால், நாம் எல்லோரும் அவருடைய தொண்டர் என்றால் நாம் எல்லோரும் ஒற்றுமையாய், அமைதியாய், ஆனந்தமாய்த்தானே இருக்க வேண்டும். அதுதானே முறை.

ஆனால் நாம் என்ன செய்கிறோம். ஒவ்வொரு கூட்டமாய்ப் பிரிகிறோம். பிரிந்து கொண்டு இந்தப் பிரிவுக்கப் பெயர் இன்ன மதம். இந்த மதத்துக்குக் கடவுள் இன்னார் என்று சண்டை போடுகிறோம்.

பிறகு ஒருவரை ஒருவர் எதிர்க்கிறோம். நாம் அவர்களை முட்டாள் என்கிறோம். நம்மை அவர்கள் சொல்கிறார்கள் முட்டாள் என்று.

அதோடு போகவில்லை. நீங்கள் வணங்கும் கடவுள் உண்மையில் கடவுள் இல்லை. அது ஒரு பேய், பிசாசு, கிறுக்கு, என்றெல்லாம கடவுளையே தாக்குகிறோம். ஒவ்வொரு கூட்டமும் மற்றக் கூட்டத்துத் தெய்வத்தை இப்படியே தாக்குகிறது.

வசவு வாங்காத கடவுளே இல்லை. வசவு வாங்காத மதமும் இல்லை. பக்தர்களும் இல்லை. மனிதர்களும் இல்லை.

★★★★★★★

மேட்டர் லிங்க் என்பவர் உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர். டென்மார்க் நாட்டுக்காரர்.

பெர்னாட்ஷாவும், மேட்டர்லிங்கும் சந்தித்து அளவளாவினார்கள். அப்பொழுது மேட்டர்லிங்கிடம் ஷா கேட்டார். ''நீங்கள் மிக மிக அதிகமான ஆனந்தத்தில் இருந்தது எப்பொழுது? எந்த சந்தர்ப்பத்தில்'' என்று. டக்கென்று உடனே பதில் சொன்னார் மேட்டர்லிங். எப்படி,

''புரட்சிக்காரர்கள் ஆக்ரோஷமாகச் சத்தம் போட்டுக் கொண்டு கடைகளையும் வீடுகளையும் தாக்கினர். சூறையாடினர். அப்படித் தாக்கிச் சூறையாடப்பட்ட வீடுகளில் என்னுடைய வீடும் ஒன்று. இதைப் பார்த்து அளவற்ற ஆனந்தம் அடைந்தேன்'' என்று.

''அதெப்படி? உங்கள் வீடு சூறையாடப்படும்போது நீங்கள் எப்படி ஆனந்தமாக இருக்கமுடியும்'' என்று கேட்டார் ஷா.

''நான் எழுதிய என்னுடைய பாடலைப் பாடியபடிதான் அவர்கள் புரட்சி செய்தார்கள். நகரையே தாக்கித் தரைமட்டம் ஆக்கும்வரை அவர்கள் பாடியது என் பாடலைத்தான்.

என் பாடலுக்கு அவ்வளவு சக்தி இருப்பதை அன்றுதான் கண்டேன்'' என்றார் மேட்டர்லிங்.

மேட்டர்லிங் பாடலைப் பாடியபடியே மேட்டர்லிங் வீட்டைக் கொள்ளையடித்தவர்கள் எப்படியோ, அப்படித்தான் கடவுளை வணங்குகிறேன் என்று சொல்லிக் கொண்டே கடவுளை வைகிறவர்கள்.

மக்களுக்கு வழிகாட்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டே மக்களைக் கெடுக்கிறவர்கள் இவர்கள்.

★★★★★★★

இவர்களை எப்படிப் பக்தர்கள் என்று சொல்லமுடியும்.

உலகம் எல்லாம், உலகத்தில் உள்ளவை எல்லாம், மனிதர்கள் எல்லோருமே கடவுள்தான் என்றால், எல்லா மதங்களும் கடவுள் தானே. எல்லா மதத்தார்களும் கடவுள்தானே. கடவுளைக் கண்ட, காணும், உறவாடும் அடியார்கள் தானே எல்லோரும். அப்படி இருக்க ஒன்றை ஒன்று

ஏன் கேவலமாகப் பேச வேண்டும். எதிர்க்க வேண்டும். சண்டை போடவேண்டும்.

அடியார், பக்தர் என்று சொல்லித் திரிகிறவர்கள் எல்லோருமே இந்த இழி தொழில்தான் செய்கிறார்கள். அதாவது பொய்யையே விதைக்கிறார்கள். பொய்யையே அறுவடை செய்கிறார்கள்.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மதத்தை மதிக்க வேண்டும். அந்த மதம் கடவுளுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறதோ அந்தப் பெயரைச் சொல்லிக் கடவுளை வாழ்த்த வேண்டும் வணங்க வேண்டும். மிச்சம் கிச்சம் வைக்காமல் உத்சாகத்தோடு வாழ்த்தி வணங்க வேண்டும். எக்களிப்போடு வாழ்த்தி வழிபட வேண்டும்.

அது ஞாயம். ஒழுங்கு, ஆனால் இன்னொரு மதத்தை ஏன் இழிவாகப் பேசவேண்டும். அந்த மதம் பெயர் சூட்டி அழைக்கிற கடவுளை ஏன் திட்ட வேண்டும்.

★★★★★★★

மனிதனாக அவதாரம் எடுப்பதும் கடவுள்தான். பசுவாக அவதாரம் எடுப்பதும் அவர்தான். புலியாக அவதாரம் எடுப்பதும் அவரேதான்.

பல்வேறு வஷ்துக்களாய் (தத்துவங்களாய்) உருவெடுக்கிற கடவுள் தான் பல்வேறு மதங்களாகவும் தோற்றம் அளிக்கிறார்.

அதுதான் கடவுள். அதனால்தான் கடவுளை மிக்கான் (அப்பாலுக்கப்பால் - மேலே மேலே உயர்ந்தவன்) என்கிறோம். குறைவற நிறைந்தவன் கடவுள்.

கடவுள் தத்துவத்தை உணராதவர்கள் குறைவுடையார். அவர்களிடம் கண்ணிருக்கும் பார்வை இருக்காது. வாய் இருக்கும் பேச்சு வராது. மூளை இருக்கும் யோசிக்க வராது. மனம் இருக்கும் மனச்சாட்சி இருக்காது.

அவர்களால் எப்படி நெருங்க முடியும் இறைவனை? இந்த வேடிக்கையை - முரண்பாட்டை, கோமாளித் தனத்தை இயல்பான இசையிலும், இயல்பான தாளத்திலும் வைத்து அற்புதமாய் கவிரூபம் எடுத்துக்காட்டுகிறது தமிழ்.

*மிக்கானைக், குறைந்தடைந்தார்*
*மேவலா னை,*
*வெவ்வேறாய் இருமூன்று*
*சமயம்ஆ கிப்*
*புக்கானை, எப்பொருட்கும்*
*பொது ஆனா னைப்,*
*பொன்னுலகத் தவர் போற்றும்*
*பொருளுக்கெல் லாம்*
*தக்கானைத் தானன்றி*
*வேறொன்றில் லாத்*
*தத்துவனைத், தடவரையை*
*வளைவு செய்த,*
*திக்கானைத், திருவீழி*
*மிழலையா னை*
*சேராதார் தீநெறிக்கே*
*சேர்கின்றா ரெ* *(46)*

*47.* எத்தனை நாள் ஒளிந்து மறைந்து திருட்டுத்தனம் பண்ணினாலும் மனதுக்கு அது தெரியாமலா இருக்கும். நிச்சயம் தெரியும் மனதுக்கு. மனச்சாட்சிக்கும் நன்றாகத் தெரியும் அது. யாராலும் மறைக்கமுடியாது.

மனதுக்குத் தெரிகிறது மனச்சாட்சிக்குத் தெரிகிறதென்றால் கடவுளுக்குத் தெரியாமலா போய்விடும். எல்லாம் தெரியும் கடவுளுக்கு. எது பொய், எது மெய் என்று அவருக்குத் தெரியும். பித்தலாட்டம் செய்கிறவனையும் அவருக்குத் தெரியும். ஒழுங்கானவனையும் தெரியும் அவருக்கு.

*******

நமக்கு உள்ளேயே இருக்கிறார் கடவுள். அவர் நம் கூடவே இருக்கிறார். நாமாகவே இருக்கிறார். எல்லாம் அவருக்குத்

---

மேவலான் - ஒட்டாதவன். உறவாட மாட்டான் குணம் கெட்டவர்களுடன்

தெரியும். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பது உண்மை.

இந்த உண்மை விளங்கினால் போதும். விளக்கம் மனசைவிட்டு அகலக் கூடாது. உணர்ச்சியோடு உணர்ச்சியாய்க் கலந்துவிட வேண்டும் விளக்கம்.

அதுபோதும், மனுசன் மனுசன் ஆகிவிடுவான் நல்லது செய்யப் பிரியப்படுவான். கெட்டது செய்யக் கூசுவான். வெட்கப்படுவான் அதற்கு.

*******

தொடர்ந்து தவறு செய்த ஒருவன் எப்படியோ திருந்தி தான் செய்த தவறுகளை எண்ணிப் பார்க்கிறான். வெட்கமாக இருக்கிறது அவனுக்கு. இவ்வளவும் செய்தபிறகும், அணுஅளவு கூடக் கலங்காமல் தைரியமாக நடமாட முடிகிறதே - யோக்யன் போலவே நடமாட முடிகிறதே - சரியான ஜன்மமடா இந்த மானுட ஜென்மம் என்கிற நாணமே வந்துவிடுகிறது அவனுக்கு.

அவ்வளவுதான் வெட்கமே ஒரே சிரிப்பாய் வந்து விடுகிறது. மனுசனாவதற்கு வாய்ப்பான சிரிப்புத்தான் அது.

அப்படிச் சிரித்துத் திருந்தும் மனிதர்களைப் பார்க்கிறார் அப்பர் சுவாமிகள். அவர்களாகவே தம்மைப் பாவிக்கிறார். பாடலாகவே ஆகிவிடுகிறார் அப்பர் எப்பர்.

*உள்குவார் உள்கிற்றெல் லாம்*
*உடனிருந் தறிதிஎன் று*
*வெள்கினேன் வெள்கிநா னும்*
*விலாஇறச் சிரித்திட்டே னே* (47)

48. கருணையே வடிவானவன் கடவுள். அந்தக் கருணைக் குள்தான் எவ்வளவு வேகம். எவ்வளவு ஆற்றல். எவ்வளவு கனிவு. எவ்வளவு கசிவு. யாரால் அளவிட முடியும் அதை.

*******

எத்தனை வகையான உயிர்கள். எத்தனை எத்தனை உயிர். அவ்வளவுக்கும் வேளா வேளைக்கு உணவு கொடுத்து - உணவை ஊட்டியே காக்கிறாள் அன்னை உமையம்மை.

பேரண்டம் முழுவதுக்கும் அன்னம் ஊட்டிக் காக்கும் அன்னபூரணி - உமையம்மையை தன்னோடு தனது இடப் பாகத்தையே கொடுத்து சேர்த்து வைத்திருக்கிறான் இறைவன்.

எல்லா உயிரினமும் இன்பமாய் வாழ்வதற்காகவே அப்படி இடம் கொடுத்து அருள் பாலிக்கிறார் பெருமான்.

★★★★★★★

உணவுக்குத் தானிய தவசம் வேண்டும் தானிய தவசம் விளைய உழவு வேண்டும், உரம் வேண்டும், இரண்டுக்கும் அதிதேவதை காளை. சக்தியின் - பேராற்றலின் அடையாளம் காளை. அந்தக் காளை தான் பெருமானின் வாகனம். அவர் ஏறிச் சவாரி செய்யும் வாகனம். அந்த வாகனம் அதாவது வேளாண்மை என்கிற உணவுக் களஞ்சியம் பெருமானின் கையில்தான்.

★★★★★★★

உழவும், உரமும் மண்ணுக்கு உயிர் கொடுக்க வேண்டும். மண்ணை உயிர்ச்சத்தாக உழவும் உரமும் ஆக்க வேண்டும் என்றால் நீர் வேண்டும் - தண்ணீர் வேண்டும்.

அந்த நீரோ கங்கையாக, தீர்த்தமாக பெருமானின் சடையில் நிறைந்திருக்கிறது. ''தீர்த்தனைச் சிவனை''.

★★★★★★★

சர்வ வியாபகமாய் கருணையே உருவாய் இருக்கிறான் பெருமான். கண்ணைத் திறந்து பார்த்தால் போதும், கருணையின் அற்புதம் தெரியும். ஒளி மயமாக ஒரே ஜோதிமயமாக இருக்கிறது இறைவனின் அருள், அதாவது கருணை.

ஒரு தடவை பார்த்தால் போதும். பிறகு தூங்கும்போதும் தெரியும். கண்ணை மூடிக் கொண்டாலும் மூடிய கண்ணுள் வந்து முன்னிற்கும். அப்பொழுது இன்னும் அதிக பிரகாசத்தோடு தெரியும் அந்த ஒளி, அருள் ஒளி.

அந்த ஒளியைப் பார்த்துப் பரவசப்பட்டவர் அப்பர் பெருமான். பரவசத்தில் உருகுகிறார். அந்த உருக்கம் எப்படி வருகிறது. தமிழில் தான்.

இதோ பாருங்கள்.

*தீர்த்த னைச்சிவ*
*னைச்சிவ லோகனை*
*மூர்த்தி யைமுத*
*லாயஒ ருவனை*

தீர்த்தன் - உலகைக் காக்கும் தண்ணீரைத் தலையில் வைத்துச் சுமந்து கொண்டிருக்கும் அருளாளன் - எத்தகைய கருணை அது? மூர்த்தியை - கோயில்தோறும் மூர்த்தியாய் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளி இருக்கிறான் பெருமாள். கங்கையைச் சுமந்து கொண்டே வருகிறான். ஓடி வருகிறான். பாய்ந்தோடி வருகிறான். வந்து தரிசனம் கொடுக்கிறான். அர்ச்சாவதாரமாய் - மூர்த்தியாய் நின்று கொடுக்கிறான் தரிசனம்.

உணவும் உடையும் மாத்திரம் போதா. உயிரினம் ஆனந்தமாகவும் இருக்க வேண்டும் என்றல்லவா மூர்த்தியாய் எழுந்தருளி நிற்கிறான் பெருமான்.

* * * * * * *

கருணை மயமாக இருக்கிறான் பெருமான். அவன் கருணைக்குக் காரணம் யாதொன்றும் இல்லை. கருணைதான் கருணைக்குக் காரணம்.

வேண்டியவர் வேண்டாதவர் என்கிற வேறுபாடு இல்லாதது அந்தக் கருணை.

உள்ளம் உருகிக் கண்ணீராய்க் கரைகிறவர்களையும் ஆதரிக்கிறது அந்தக் கருணை. அப்படி இல்லாமல் எதிர்த்துப் பேசுகிறவர் - திட்டுகிறவர்களையும் ஆதரிக்கிறது அந்தக் கருணை.

ஜாதி, மத, இன வேறுபாடு இல்லை அந்தக் கருணையில். படித்தவன், முட்டாள், ஏழை, பணக்காரன், குழந்தை, வாலிபன், முதியோர் எல்லோரையும் காப்பாற்றுகிறது இறையருள். வில்லால் அடித்த அர்ச்சுனனுக்கும் - பார்த்தனுக்கும் அருள் பாலித்தது தானே அந்தக் கருணை.

இனி பாடலின் முழு உருவம்.

*தான தன்னன*
*தன்ன தன்ன தன்*

*தீர்த்த னைச்,சிவ*
*னைச்,சிவ லோகனை,*
*மூர்த்தி யை,முத*
*லாயொ ருவனைப்,*
*பார்த்த னுக்கருள்*
*செய்தசிற் றம்பலக்*
*கூத்த னைக்கொடி*
*யேன்மறந் துய்வனோ* (48)

அம்பலக்கூத்தன் - அணு, பரமாணு, அண்டம், அகண்டம், பேரண்டம் எல்லாம் இறைவன்தான். ஆனாலும் எல்லாவற்றையும் ஒன்று கூட பாக்கி இல்லாமல் அவ்வளவையும் நான், நான் என்று ஆட வைக்கிறான். இந்தப் பொம்மலாட்டத்தைப் பார்த்து ஒரே உற்சாகம் இறைவனுக்கு. ஆட்டம் வந்து விடுகிறது அவனுக்கு. திம் திம் என்று கூத்தாடுகிறான். கூத்தாடிக் கொண்டே இருக்கிறான். உய்வனோ - உயிரோடு இருக்க முடியுமா மறந்து என்னால்.

குறிப்பு: தீர்த்தனை, சிவனை, சிவலோகனை என்று படிக்கக்கூடாது. அப்படிப் படித்தால், படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்கிற கணக்குத்தான். பாட்டைப் பாட வேண்டும். பிரித்துக் கொடுத்திருக்கிறபடி பாட வேண்டும். பாடப்பாட. ஆட்டமே வந்துவிடும்.

# நாமாவது அவனாவது

49. மண்ணில் ஒரு குச்சியை - ரோஜா குச்சியை ஊன்றி வைக்கிறோம். நீர் ஊற்றுகிறோம். மெள்ள மெள்ளத் தளிர் எடுக்கிறது, துளிர்க்கிறது கொழுந்து விடுகிறது.

அப்படியே அரும்பெடுக்கிறது. புற இதழ்கள் என்கிற இலைகள் மூடி, அக இதழ்கள் குவிந்து மொட்டாய் வருகிறது. கடைசியில் ஒவ்வொரு இதழ்களாய் விரிய - அகன்றுவிரிய ரோஜா மலர் வருகிறது. 'ஜம்' என்று ராஜதோரணையோடு ஒய்யாரமாய் வருகிறது ரோஜா மலர்.

எப்பேர்ப்பட்ட அழகு ரோஜா மலரில். அதன் நிறம், அதில் உள்ள ஒளி, தூய்மை எல்லாம் எங்கிருந்து வந்தன ரோஜா மலரிடம்.

*******

இனி, தூக்கம் கலைந்து கண்களை அகல விரித்துத் தாயைப் பார்க்கும் குழந்தை. அப்படிப் பார்க்கிறது ரோஜா மலர். தாயைப் பார்த்துச் சிரித்து மகிழும் குழந்தை. ரோஜாப் பூவும் பார்த்துப் பார்த்துச் சிரித்துச் சிரித்து மகிழ்கிறது.

என்ன அழகு, என்ன குளுமை, என்ன மென்மை, என்ன மணம் இவ்வளவும் எப்படி உண்டாயின என்பது ரோஜா மலருக்குத் தெரியுமா? தெரியாது. ரோஜா குச்சிக்குத்தான் தெரியுமா? தெரியாது. காற்றுக்கும் தெரியாது. சூரிய ஒளிக்கும் தெரியாது. தண்ணீருக்கும் தெரியாது, மண்ணுக்கும் தெரியாது. உரத்துக்கோ, உப்புக்கோ எதற்குமே தெரியாது.

தோட்டக்காரனுக்கும் தெரியாது. பயிரிடுகிறவனுக்கும் தெரியாது. நமக்கும் தெரியாது. யாருக்குமே தெரியாது.

கடவுளுக்குத் தான் தெரியும். அவர் ஒருவருக்கே தெரியும். அவர்தான் ரோஜாப்பூவாக வந்தார். மண், நீர், காற்று, குப்பை, கூளம், வெப்பம், ஒளி என்றும் அவரே வந்தார். நிலம், நீர், மண் முதலியவற்றைக் கூட்டிக்கழித்து மலராக வருகிறார். வந்து நடனமே ஆடுகிறார் பெருமாள்.

கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சொல்வதென்றால் ரோஜா மலரை உண்டாக்கியவர் இறைவன். அதை நான் நான் என்று ஆட வைக்கிறதும் இறைவனே.

ரோஜா மலர் போலத்தான் நாமும் உலகமும் எல்லாமும். நான், நான் என்று ஆடுவதில்!

*ஆட்டுவித்தால் ஆர்ஒருவர்*
*ஆடாதா ரே*

இருபத்து நான்கு மணிநேரம், இல்லை நாற்பத்தெட்டு மணிநேரம் ஆடவிடுகிறார் ரோஜா மலரை. பிறகு 'நான், நான்' என்று இறுமாந்த ரோஜா மலரின் ஆட்டம் குளோஸ். முடிந்தது 'நான்' என்கிற நாடகம்.

*அடக்குவித்தால் ஆர்ஒருவர்*
*அடங்கா தாரே*

இனி, சூரியன் ஒரு நட்சத்திரம். பூமியைவிடப் பல லட்சம் மடங்கு பெரியது சூரியன்.

சூரியனில் ஒரு இறுக்கம் ஏற்பட்டது. குமுறல் உண்டானது. சூரியனிலிருந்து சில பகுதிகள் வெடித்துச் சிதறின. பிய்ந்த பகுதிகளை வீசி எறிந்தது சூரியன். செவ்வாய், புதன், வெள்ளி, பூமி என்று தலைதெறிக்க ஓடின அவை. சூரியனை விட்டு நெடுந்தூரம் ஓடி வந்துவிட்டன பூமி முதலியன.

அதற்கு மேல் அவைகளை ஓட விடவில்லை சூரியன். பரிவே உண்டாகிவிட்டது அவற்றின்மேல் சூரியனுக்கு. அந்தந்த இடத்திலிருந்தே பூமி முதலிய கிரகங்கள் சூரியனைச் சுற்றிவர ஏற்பாடாகிவிட்டது. பூமி முதலியவற்றுக்கும் சூரியனை விட்டுப் போக முடியவில்லை. பரிவும் பாசமும் அப்படி அப்படி.

★★★★★★★

ஒரே வஷ்துவிலிருந்துதான் எல்லாம் தோன்றின. நான் நான் என்று ஒவ்வொன்றும் விலகப் பார்த்தன. விலகிப் போக முடியவில்லை ஒன்றாய் இணைவதற்கு அவ்வளவும் துடிக்கின்றன. எல்லாம் இறைவனுடைய திருவிளை யாடல்தான்.

*ஓட்டுவித்தால் ஆர்ஒருவர்*
*ஓடா தாரே*
*உருகுவித்தால் ஆர்ஒருவர்*
*உருகா தாரே*

உண்மையைத் தெரிவது அரிய அனுபவம். அனுபவம் எல்லா நிலைகளிலும் உண்டு. எல்லா இடங்களிலும் உண்டு. அவர் இவர் என்று வேற்றுமை இல்லை. எல்லோருக்கும் உரியதுதான் அனுபவம்.

ஆனால் அனுபவம் கவியாய் விளைகிறதே அது அற்புதம். இறைவனுடைய திருவருள் தான். இறைவனே தான் பாடலாய் வருகிறான். அவனே பாடலாய் நம்முள் வந்து பாடு பாடு என்று வற்புறுத்தினால் பாட வேண்டியதுதான். மாட்டேன் என்று சொல்ல வழி இல்லை.

*பாட்டுவித்தால் ஆர் ஒருவர்*
*பாடா தாரே*

அப்பர் சுவாமிகள் பாடுகிறார். பாடலைக் கேட்கிறவர்கள் உருகுகிறார்கள். உருகிக் கரைகிறார்கள். அப்படியே அம்மையப்பா, நமச்சிவாயா என்று தங்களை ஒப்படைத்து விடுகிறார்கள். அவர்களை யார் தடுப்பது?

*பணிவித்தால் ஆர்ஒருவர்*
*பணியாதா ரே*

அப்பர் சவாமிகளா பணிய வைக்கிறார். பாட்டல்லவா பணிய வைக்கிறது. இறைவன் தான் பாட்டாக வந்து பணிய வைக்கிறான். அருளாசி வழங்குகிறான்.

★★★★★★★

ரோஜாவும் கடவுள்தான். ஒன்றாய் - ஒன்றே ஒன்றாக இருப்பதும் கடவுள்தான். பல பலவாக விளைந்து பெருகுவதும் கடவுள்தான். அவை கூடி மகிழ்ந்து துடித்து உருகுவதும் கடவுள்தான். இது உண்மை.

உண்மை அனுபவம் பாட்டாக வருவதும் கடவுள்தான். பாட்டின் மூலம் ஆணவம் கரைகிறது. அதுவும் அவருடைய அருள்தான்.

இவ்வளவும் ஒளிவு மறைவில்லாமல் எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது. மனசோடு இதைப் பார்க்க வேண்டும். மனத்தையே கண்ணாகக் கொண்டு பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பதுதான் கண்ணுதல். மூளையே (நுதலே) கண்ணாகிப் பார்ப்பதற்கு அவன் அருள் வேண்டும். அவனே தன்னைக் காட்ட வேண்டும்.

இது அப்பர் சுவாமிகள் கண்ட காட்சி. இனிப் பாடலின் முழு உருவம்.

*தானான தானான*
*தானான தன்*

*ஆட்டுவித்தால் ஆர் ஒருவர்*
*ஆடாதா ரே*
*அடக்குவித்தால் ஆர் ஒருவர்*
*அடங்காதா ரே*
*ஓட்டுவித்தால் ஆர் ஒருவர்*
*ஓடாதா ரே*
*உருகுவித்தால் ஆர் ஒருவர்*
*உருகாதா ரே*
*பாட்டுவித்தால் ஆர் ஒருவர்*
*பாடாதா ரே*
*பணிவித்தால் ஆர் ஒருவர்*
*பணியாதா ரே*
*காட்டுவித்தால் ஆர் ஒருவர்*
*காணாதா ரே*
*காண்பார்ஆர் கண்ணுதலாம்*
*காட்டாக்கா லே* *(49)*

*50.* மலை, கடல், நாடு, நகரம், மக்கள், புல்பூண்டு, சூரியன், சந்திரன், பூமி, நட்சத்திரம் எல்லாம் ஒன்று தான். கடவுள் தத்துவந்தான். கடவுளின் பல்வேறு தோற்றங்கள்தான் இது, அது என்கிற எல்லாம்.

★★★★★★★

இந்த அற்புதத்தைப் படம் எழுதி தொங்கப்போட்டது போல இருக்கிறது இறைவன் திருமேனி. பிரபஞ்சக் காட்சி, விஷ்வ ரூபம் என்பது அதுதான்.

சமுத்திரம் ஒன்றுதான் அலைகள் ஆயிரம் ஆயிரமாய் எழுந்து தோன்றும் சமுத்திரத்தில். ஒரு அலைகூடச் சமுத்திரத்தை விட்டு விலகிப் போக முடியாது. சமுத்திரமே அலைகளாக - பல பல அலைகளாக எழுந்து மடங்குகிறது. மடங்கி ஒடுங்குகிறது அதுபோலவே ஒரே பரம்பொருள் கோடான கோடி வஷ்துக்களாய்த் தோன்றி, நிமிர்ந்து, அடங்குகின்றன.

*******

உலகமே - அண்டம், பேரண்டம் முழுவதுமே இறைவனின் விஷ்வ ரூபக் காட்சிதான். பார்ப்பதற்கு எளிதாகத்தான் இருக்கும். ஆனால் புரிந்து கொள்வது கடினம். உண்மையானது மனதில் நிற்பது அரிதினும் அரிது.

சாமான்யப்பட்ட நம் போலியர்களுக்கு மட்டுமல்ல தேவர்கள், முனிவர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள், யோகிகளுக்கே கஷ்டம் உண்மையை உள்ளத்தில் பிரதிஷ்டை பண்ணுவது. பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்கும் அது சிரமம் என்றால் வேறு என்ன சொல்ல அது பற்றி.

ஆனாலும் ஒரு அறுகம்புல் போதும். அதனுள் நடக்கிற அற்புதத்தைப் பார்த்தால் போதும். எளிதில் தெளிவாகிவிடும் பரதத்துவ உண்மை. அப்படியே ஒருபிடி சாணம் போதும். அது செய்கிற விந்தையைக் கண்டால் போதும். உண்மை விளங்கிவிடும்.

மெத்தப் படித்த மேதைகளோ அறுகம் புல்லை ஒரு வஷ்துவாக மதிக்கமாட்டார்கள். பசும் சாணத்தையும் அப்படியே. ஆனால் பக்தர்கள் அவற்றை மதிப்பார்கள். மதித்துப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். அப்பர் சுவாமிகள் அப்படி மதித்துப் பார்க்கிறவர்.

பார்த்தார், மதித்தப் பார்த்தார். இறைவனின் விஷ்வரூப தரிசனமே புல்லில் தெரிகிறது. சாணத்திலும் தெரிகிறது. கண்டு கொண்டார்.

தேவாதி தேவர்களுக்கும் கிடைக்காத காட்சி கிடைத்தது என்றால் ஆனந்தம் விம்மிப் புடைக்கத்தானே செய்யும். எப்படி விம்முகிறது ஆனந்தம்.

*தேடிக் கண்டுகொண் டேன்-திரு*
*மாலொடு நான்முக னும்*
*தேடி தேடொ ணாத்*
*தேவ னை என்னு ளே*
*தேடிக் கண்டுகொண் டேன்!* *(50)*

51) இனி பண்பாடும், போதுமான அளவுக்கு வசதியும் உடையவர் ஒருவர். மனைவி, மக்கள் என்று குடும்பத்தில் ஐந்து பேர்தான். ஆனால் நன்செயிலிருந்து பூவுக்கு (ஆறு மாதத்திற்கு ஒருமுறை) இரண்டு வண்டிநெல் - கிட்டத்தட்ட முப்பது மூட்டை நெல்வரும். அப்படியே, தேங்காய், மாங்காய் என்று காய்கனிகள் தோப்பிலிருந்து வரும். புன்செயிலிருந்து உளுந்து, துவரை, வரகு, சாமை என்று வரும். வீட்டிலிருக்கும் பசுவின் மூலம் பால், தயிர், மோர், நெய் எல்லாம் ஊற்றுப் பெருக்காய் வரும்.

குடும்பத்துக்குப் போக மீதம் உள்ள ஒரு பகுதியைக் கோவிலுக்குக் கொடுப்பார். உத்சவம், மகேஸ்வர பூஜை என்று கொடுப்பார். இன்னொரு பகுதியைச் சத்திரம் அன்னதானம் என்று கொடுப்பார்.

வீடு பெரிய விசாலமான வீடு. அதைவிட விசாலம் அவருடைய மனம். மனைவி, மக்களும் அவர் போலவே தயாள குணம் உடையவர்கள்.

தினந்தோறும் விருந்தினர்கள் வருவார்கள். சொந்தவீடு போலப் பாவித்துத் தங்குவார்கள். உண்டு மகிழ்ந்து உத்சாகமாக இருப்பார்கள். எப்பொழுதும் திருவிழாக் கூட்டம்போல இருக்கும் வீடு.

உற்றார், உறவினர், நண்பர், புலவர், கலைஞர், அடியார் என்று வந்த வண்ணமும், தங்கும் வண்ணமும் விடைபெற்றுப் போகும் வண்ணமுமாக இருக்கும் வீடு.

பக்கத்து ஊருக்கு வருகிறவர்கள் கூட - திருவிழாவுக்கோ, திருமணம் போன்ற சடங்குகளுக்கோ வருகிறவர்கள் கூட இங்கே வருவார்கள் இரண்டு மூன்று நாட்கள் தங்குவார்கள்.

இனி, இவருடைய வீட்டில் சிறுவிசேஷம் நடந்தாலும் சரி உறவினர்களும் நண்பர்களும் திரண்டுவிடுவார்கள். தேனடையில் தேனீக்கள் மொய்ப்பதுபோல் மொய்த்துவிடுவார்கள்.

காசி, ராமேஸ்வரம் என்று யாத்திரை போவார் அன்பர். பல ஊர்களிலிருந்தும் அன்பர்களும், நண்பர்களும் வந்து கூடிவிடுவார்கள் வீட்டில். ஒரு வாரம் பத்து நாட்களுக்கு முன்பே வந்து குழுமி விடுவார்கள். யாத்திரையில்கூட ஓரளவு தூரம் துணையாய்ப் போய் வருவார்கள்.

ஒரே மனதில், ஒரே சந்தோசத்தில், ஒரே எக்களிப்பில் அத்தனை பேரும் வேற்றுமை இன்றிச் சேர்ந்திருப்பார்கள் அன்பர் வீட்டில்.

அப்படி ஒரு கோவிலாக - சந்நிதானமாகவே திகழ்ந்தது அன்பர் வீடு.

*******

எதிர்பாராத விதமாக அன்பருக்குக் கஷ்டம் வந்தது. கஷ்டத்துக்குமேல் கஷ்டம். மழை பெய்யவில்லை. தொடர்ந்து இரண்டு மூன்று வருடமாக ஏமாற்றிவிட்டது மழை. பஞ்சம், அதற்கும் மேலே வைத்தியச் செலவு, எல்லாவற்றுக்கும் மேலே திருமணம் முதலிய காரியங்களைத் தடபுடலாக நடத்தியது. இப்படிப் பல வழிகளிலும் செலவு பெருகியது. வருமானம் இல்லை. அதனால் சொத்து சுகம் எல்லாம் போய்விட்டது. வறுமை, ஏழ்மை இவை காரணமாக வரும் இன்னல் தாங்க முடியாத இன்னல் (ஏலா இடர்)

என்ன செய்வார் பாவம். ஒடுங்கிப் போனார். கூட்டம் கூட்டமாய் வந்து தங்கியவர்கள் பலர். அவர்களில் ஒருவர் கூட இப்பொழுது இந்தப் பக்கம் தலை காட்டுவதில்லை. எட்டிக் கூடப் பார்ப்பதில்லை. இவர் குடியிருக்கும் தெரு வழியே கூட ஒருவரும் வருவதில்லை.

உலகம் அப்படித்தான். உலகம் முழுவதும் இந்தக் காட்சிதான். வசதி உள்ளவனைச் சுற்றி சுற்றி வருவார்கள் பலர். ''எனக்கு அந்த முறையில் உறவு, இந்த முறையில் உறவு'' என்றே சுற்றிச் சுற்றி வருவார்கள். அவரிடம் இருந்த வசதி அவரை விட்டுப் போய்விட்டால்? இதோ சொல்கிறார் நாலடியார்.

*காலாடு போழ்தின்*
*கழிகிளைஞர் வானத்து*
*மேலாடு மீனில்ப்*
*பலராவர் - ஏலா*
*இடர்ஒருவர் உற்றக்கால்,*
*ஈர்ங்குன்ற நாட!*
*தொடர்புடையேம் என்பார்*
*சிலர்!*

தாயாய், பிள்ளையாய் உறவாடுகிறவர்கள் உற்றார் உறவினர். அவர்கள் லட்சணமே இப்படி.

பணவசதி இருக்கும்வரை தான் உறவு. அது போய்விட்டால் அவளைப் பார்க்கவே பயப்படுவார்கள். மனிதனாகவே தெரியமாட்டான் பொருளற்றவன். சண்டாளனாகவோ, பாவியாகவோ தெரிவான் பிறர் கண்ணுக்கு. பிறகு அவனோடு யார் பேசுவார்கள். யார் பழகுவார்கள்.

உயிரோடு வாழும் நிலையிலேயே இப்படி என்றால் உயிரைவிட்டு - ஒன்றுமே இல்லாமல் வெந்து நீறாகப் போகும் காலத்தில் யார் வருவார் துணைக்கு.

ஆனாலும் ஒருவன் உண்டு துணை. உற்ற துணை அவன்தான். அவன் யார் என்று அப்பர் சுவாமிகளே சொல்லட்டும்.

---

காலாடுபோழ்தில் - மரக்கால் வைத்து மூட்டை மூட்டையாய் நெல்லை அளக்கிற வசதியான காலத்தில். கழிகிளைஞர் - ஏராளமான பேர் உறவினர் என்று சொல்லிக் கொண்டு. மீனில் பலர் ஆவார் - நட்சத்திரக் கூட்டம்போல் கூடுவார்கள். ஏலா இடர் ஒருவர் உற்றக்கால் - தரித்திரம் வந்து அவரே சிரமப்பட்டால். தொடர்பு உடையேம் என்பார் சிலர் - ஒன்றிரண்டுபேர் - அதுவும் ஏனோ தானோ என்று சொல்வார்கள். எப்படி? ''அவரா? கொஞ்சம் பழக்கம் அவருடன். எங்கள் முப்பாட்டனாரும் அவரது முப்பாட்டனாரும் நண்பர்கள்'' என்று இழுத்தபடியே சொல்வார்கள்.

*உற்றார் ஆருள ரே - உயிர்*
*கொண்டு போம் பொழுது*
*குற்றா லத்துறை*
*கூத்தன் அல் லால் நமக் (கு)*
*உற்றார் ஆர் உள ரே (51)*

52. உற்றார் உறவினர் என்று கூடிக் குலாவியவர்கள் வரமாட்டார்கள். வழிக்குத் துணை இவர்கள் இல்லை. ஆனாலும் கடவுள் இருக்கிறார். இதோ நான் இருக்கிறேன் என்று அபயம் கொடுக்கிறார். துணைக்குத் துணையாய்ச் சேர்ந்தே இருக்கிறார் கடவுள்.

எப்படிப் பார்த்தாலும் கடவுள் கடவுள்தான். அவர் ஒருவர்தான். அவரைத் தவிர வேறு இல்லை. அவர் ஒருவரேதான்.

*******

'நான்' என்பதன் விஷப் பல்லைப் பிடுங்கியவர்களுக்குக் கடவுள் தான் உண்மை. நாம் என்பதும் நம் செயல் என்பதும் மயக்கந்தான் என்பது அவர்கள் காணும் காட்சி.

எல்லாம் கடவுளின் திருவருள் என்று ஆனபின் துணையைப் பற்றிய நினைப்புக்கு ஏதுஇடம்.

இனி நான் என்பதை விட முடியாதவர்களும் கடவுள் தத்துவத்தோடுதான் இருக்கிறார்கள். சேர்ந்தே இருக்கிறார்கள் கடவுளுடன்.

தாயாக இருந்து சாதத்தைப் பிசைந்து கொடுக்கிறார் கடவுள். ஆடையைக் கூட கட்டிவிடுகிறார். தந்தையாக இருந்து கல்வி, பயிற்சி என்று உதவுகிறார். தூங்க வைக்கிறார். எழுப்பி விடுகிறார். மனைவி, மக்கள், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை என்று சேர்த்து வைக்கிறார். அதில் எத்தனையோ அனுபவங்களையும் காட்டுகிறார். உண்மையை ஊட்டவே செய்கிறார்.

இன்னும் என்னென்னவோ செய்கிறார். உடனிருந்தே - உள்ளும் புறமுமாய் ஒன்றி இருந்தே செய்கிறார்.

கடவுள்தான் இவ்வளவும் செய்கிறார், என்பது தெரியாமலே போய்விடுகிறது. என்னுடைய தாய், என் தந்தை, என் மனைவி, என் மக்கள் செய்கிற காரியம் என்றே படுகிறது.

கடைசியில் இந்த எண் சாண் உடம்பை உதறி எறிந்து விட்டுப் போகிறதொழுதே 'நான்' என்பது கழல்கிறது. அதுவரை உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருந்த நான் என்பது படத்தைக் கீழே போட்டுவிடுகிறது. செத்த சவமாய் விழுந்து விடுகிறது நான் என்பது.

துணை ஏது அங்கே? ஒட்டும் இல்லை, உறவும் இல்லை ஒன்றுமே இல்லை என்கிற நிலையில் கடவுள் இருக்கிறார். நான் இருக்கிறேன் துணைக்கு என்கிறார் கடவுள்.

எல்லா நிலைகளிலும் உடனிருந்து உதவும் இறைவனைப் பார்க்க வேண்டாமா? அனுபவிக்க வேண்டாமா நீதான் கதி என்று ஒன்றி விட வேண்டாமா?

ஆனால் முடியவில்லை. ஆறறிவு படைத்த மனிதனால் முடியவில்லை. ஏழறிவு எட்டறிவு என்று அறிவையே பார்க்கிறான் மனிதன். உண்மையைப் பார்க்கமாட்டேன் என்கிறான்.

உண்மையும் ஒளியும் இல்லாமல் தான்தோன்றித் தனமாகப்போகும் அறிவோ வெற்றறிவு அது மண்டைக்குள் போய் உட்கார்ந்துவிடுகிறது.

மண்டைக்குள் வந்துவிடுகிறது. கழுத்து வீங்கிவிடுகிறது. அக்கம் பக்கம் திரும்ப முடியவில்லை. திருப்ப முடியவில்லை கழுத்தை. பிறகு எப்படிக் குனியும் தலை.

★★★★★★★

தலைக்கனம் ஏறியவர்களை அப்பர் சுவாமிகள் பார்க்கிறார். ஏன் இப்படி வீணாய்த் திரிகிறார்கள் என்று பரிவு உண்டாகிறது அப்பர் சுவாமிகளுக்கு. பரிவு காரணமாக அவர்கள் நினைப்பி லேயே இருக்கிறார். தன்னை மறந்து அவர்களுக்காக அவர்கள் மயமாக ஆகிவிடுகிறார்.

தானே இறைவனை மறந்துவிட்டதாக நினைக்கிறார். பதறுகிறார்.

பதற்றமும் வேகமும் பாடலாய் உருவெடுக்கிறது. எப்படி,

*தலையே! நீவணங் காய் - தலை*
*மாலைத லைக்கணிந் து*
*தலையா லேபலி*
*தேடும்த லைவனைத்*
*தலையே! நீவணங் காய்* (52)

---

*தலை மாலை தலைக்கு அணிந்து - அறிவுத் தத்துவத்துக்கு அடையாளமொழி தலை. அறிவுத் தத்துவத்தையே - விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், ஆன்ம தத்துவம், தேக தத்துவம், உணர்ச்சி தத்துவம் என்ற அறிவையே ஒவ்வொரு புஷ்பமாகக் தொடுத்து பரிவட்டம் கட்டியதுபோல் தலையில் தொங்கவிட்டிருக்கிறான் இறைவன். இறைவனுடைய திருவருளின் ஒரு அம்சந்தான் அறிவுத் தத்துவம்.*

*தலையால் பலி தேடும் தலைவன் - சிவபெருமானுக்கு தலை ஐந்து. அப்படியே ஐந்தாக இருந்தது பிரம்மனுக்கும் தலை. இது பல குழப்பங்களை உண்டுபண்ணி விட்டது. பார்த்தார் சிவபெருமான். பிரம்மாவின் தலையில் ஒன்றை கிள்ளி எடுத்தார். கிள்ளி எடுத்த அந்த மண்டை ஓட்டையே திருவோடாக ஆக்கி அதில் தானே பிச்சை வாங்கினார்.*

*புராணக்கதை இப்படி. கதையில் அரிய உண்மை ஒன்று இருக்கிறது. குழப்பம் ஒழிந்தால்தான் நிம்மதி, ஆனந்தம். அமைதியே வடிவான ஆனந்தத்தில் தான் ஆணவம் கரையும். இதை உணர்த்துகிறது புராணக்கதை. வேண்டாத அறிவுதான் குழப்பத்துக்குக் காரணம்.*

*குறிப்பு: மற்றவர்களின் அறியாமை, தவறு இவைகளைத் தம்முடையதாக ஏற்று, அதைக் களைய தங்களை அர்ப்பணிக்கிறவர்கள் இன்றும் இருக்கிறார்கள். மற்றவர்களின் தவறுகளைத் தம்முடையதாக ஏற்று அதற்காக மகாத்மா உண்ணாவிரதம் இருந்ததை நாம் பார்க்கத்தானே செய்தோம். அப்பர் சுவாமிகள், காந்தியடிகள் இவர்கள் தியாக மூர்த்திகள். அவர்கள் எல்லாக் காலத்திலும் இருப்பார்கள். அவர்கள் இல்லை என்றால் உலகமும் இல்லைதான்.*

# உணர்ச்சிதானே சொல்லாக வருகிறது

53. தமிழர்களாகிய நாம் கடிதமோ, கணக்கோ, பாடமோ, கதையோ, கவியோ எழுதுகிறபொழுது 'திருவருள் துணை' என்று தொடங்குகிறோம். அதை எழுதிவிட்டுத்தான் எழுத வேண்டிய விஷயத்தை எழுதுவோம்.

அதேபோல பேச ஆரம்பித்தால் - எதுபற்றிப் பேச ஆரம்பித்தாலும் 'நமச்சிவாய' என்பதை முதலில் சொல்லுவோம். அதன்பிறகே பேச வேண்டியதைப் பேசுவோம். பேச்சிலும் எழுத்திலும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி, தொடங்குவதும் உண்டு. திருச்சிற்றம்பலம் என்று முடிப்பதும் உண்டு.

இனி, வைஷ்ணவர்கள் எழுத்தில் ஸ்ரீ என்று தொடங்குவார்கள் - திருவடிகளே சரணம் என்று முடிப்பார்கள்.

பக்தியை ஏதாவது ஒரு வகையில் குறிப்பிடவே செய்வார்கள். அப்படிக் குறிப்பிடாமல் எதையும் செய்ய மாட்டார்கள். இது இன்று நேற்று உண்டானதில்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. திருவருள் துணை, நமச்சிவாய, திருச்சிற்றம்பலம் முதலியவையும் அப்படியே.

★★★★★★★

வேதம், வேதாந்தம், சாஷ்திரம், சித்தாந்தம், ஆகமம் என்று ஒன்றிலும் மாட்டிக் கொள்ளாத சாதாரண மக்கள், பொதுமக்கள் அதவாது ஏழை எளிய மக்களின் பக்திதான் - உண்மையான பக்திதான் திருவருள் துணை என்று வந்திருக்கிறது. கல்விக் கடலை நீந்திக் கரைகண்ட மேதாவிகள் ஒன்று கூடி ஆராய்ச்சி செய்து உண்டாக்கவில்லை திருவருள் துணை என்று.

எல்லாம் ஈசன்தான். அவன் செயல்தான் அத்தனையும் என்பதை நேருக்கு நேராகப் பார்த்தார்கள் சாதாரண மக்கள். ஒன்றுக்குப் பத்தாய் நூறாய் தானியம் மண்ணிலிருந்து வருவதைப் பார்த்தார்கள். பச்சைப் பசேல் என்று புல் முளைப்பதையும் பார்த்தார்கள். அது பசுவுக்குள் போய்ப்

பாலாய்ச் சொரிகிறதையும் பார்த்தார்கள். உலகம் முழுவதையும், ஏன் எட்டாத தூரத்திலுள்ள நட்சத்திரத்தையே சின்னஞ்சிறிய மனதில் வைத்துப் பார்க்கிறது. இனம் காண்கிறது. இது இது என்று நிச்சயம் பண்ணுகிறது என்கிறதையும் கண்டார்கள். இந்த எண் சாண் உடம்புக்குள்ளிருந்து என்னென்ன நினைப்புகள் முளைத்து வருகின்றன என்று அதிசயித்தார்கள். உணர்ச்சிகள் பிறக்கிறதையும் சமுத்திர அலைகள்போல் அவை எவ்வி உயர்கிறதையும் அன்பாய், அருளாய் அவை மலர்கிறதையும் பொறுமையாய், இன் சொல்லாய், ஆதரவாய், தியாகமாய் அவை மணம் கமழ்வதையும் பார்த்துப் பார்த்து உருகினார்கள்.

இவ்வளவும் - உலகம் முழுவதுமே - நம் கூடவே இருக்கிறது, நமக்கு உற்ற துணையாகவே இருக்கிறது. தாயாய், தந்தையாய், மழையாய், தெய்வமாய் நம்முடனேயே இருக்கிறது. நமக்காகவே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார்கள் சாதாரண மக்களே தான்.

தெரிந்த மாத்திரத்தில் திருவருள் துணை என்றுதானே சொல்ல முடியும். வாழையையும் அது குலை தள்ளி நிற்கிறதையும் பார்த்தால் கை எடுத்துக் கும்பிட வைக்கும். அப்படியே ஈசன் செயல், திருவருள் மயம் என்று சொல்ல வைக்கும்.

ஏதாவது எழுத நேர்ந்தால் முதலில் திருவருள் துணை என்று எழுத வைக்கும். அப்படி இல்லாமல் மச்சான் துணை, மாமன் துணை என்று எழுதத் தோன்றவா செய்யும்.

*******

மக்களின் இயல்பான நிலையே உண்மை. படிப்பு, ஆராய்ச்சி, விதண்டாவாதம் என்று வந்து கெடுக்காத வரை உண்மை உணர்ச்சியே - மனச்சாட்சியே வழிநடத்தும். அதன் குரல் நன்றாகக் காதில் விழும்.

வெற்றரை, நான் என்னும் அகம்பாவம் இல்லை என்றால் இறைவனைப் பார்க்கலாம். அவனோடு பேசலாம். நம்முடன் சேர்ந்திருக்கும் - நாமாகவே இருக்கும் இறைவனை இந்த ஆணவந்தான் மறைத்துவிடுகிறது. இறைவன் நம்முடன் இருக்கிறான் என்னும் நினைப்பே வராதபடி மாற்றிவிடுகிறது ஆணவம்.

அது ஒழிந்தால் அவன் நம்முடன் இருப்பது நமக்குத் தெரியும். எதை எதைச் செய்ய வேண்டுமோ அதை அதை உடனுக்குடன் செய்வோம்.

இது சம்பந்தமாக ஒரு கதை - புராணக் கதை தான்.

யானை ஒன்று. முரட்டு யானை. ''என்னிடம் யாரும் வாலாட்ட முடியாது. ஆட்டினால் ஒட்ட நறுக்கி எறிந்துவிடுவேன் அதன் வாலை'' என்னும் திமிர் யானைக்கு. அப்படித் தலைக்கனம் பிடித்து அலைந்தது யானை.

பெரிய குளம் (ஏரி) அதில் நிறைந்து அலைமோதியது நீர். தாகம் கண்டயானை நீர் அருந்த குளத்தில் இறங்கியது. அப்பொழுது முதலை ஒன்று யானையின் காலைப் பற்றிக் கவ்வியது.

உதறி எறிந்துவிடலாம் முதலையை என்ற நினைப்பில் காலை ஒரு சுண்டு சுண்டியது யானை. பிடியை விடவில்லை முதலை. பலம் முழுவதையும் சேர்த்துக் கொண்டுதான் உதறிப் பார்த்தது யானை. பிடித்த முதலையின் பிடி அப்படியேதான் இருந்தது.

அவமானமாய்ப் போய்விட்டது யானைக்கு. அடங்காத வெறியே - கோப வெறியே வந்துவிட்டது யானைக்கு. முதலையை இழுத்துக் கொண்டு கரைக்கு வரவேண்டும் - கரையில் போட்டு மிதி மிதி என்று மிதிக்க வேண்டும் முதலையை என்கிற மூர்க்கத்தனமான வெறியே வந்துவிட்டது யானைக்கு.

பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தது முதலையை யானை. பிரயோசனம் இல்லை. மேலும் முண்டி இழுத்தது. அதற்குமேலும் முண்டி இழுத்தது. விடவே இல்லை யானையை முதலை.

உண்டா இல்லையா என்று பார்த்து விடவேண்டியதுதான் என்று பலம் முழுவதையும் ஒன்று சேர்த்து உன்னி இழுத்தது யானை.

முதலைதான் தண்ணீருக்குள் இழுத்துப் போகிறது யானையை. யானையால் முதலையை அசைக்கக் கூட முடியவில்லை.

அப்பொழுது தெரிந்தது யானைக்கு ''நம்மிடம் ஒன்றும் இல்லை, நாமே இல்லை, நாம் வெறும் பூஜ்யம்'' என்று.

இறைவன் தான் எல்லாம் என்று பட்ட மாத்திரத்திலேயே ஆதிமூலமே (வேத முதலே) நீர்தான் தஞ்சம் என்று அழைத்தது யானை.

அப்பொழுதே அங்கு பிரசன்னமானார் பெருமாள். சக்கரத்தால் முதலையைக் கண்ட துண்டமாக்கினார். ஏரியே ரத்த மயமாகிவிட்டது.

யானைக்கு வந்த சந்தோசத்தை இப்படி அப்படி என்று சொல்லமுடியுமா.

★★★★★★★

எங்கும் நிறைந்த பரம்பொருளை எங்கும் பார்க்கலாம். நாமோ அவனை ஆணவத்துக்குள் தேடிப் பார்க்கிறோம். இதுதான் கதை சொல்லும் பொருள்.

இனி, யானையின் அனுபவம் பற்றி பூர்வமான பாடல்.

*மூலப் பழமறைக்கு*
*முன்னேயும் காணலாம்,*
*காலிக்குப் பின்னேயும்*
*காணலாம், - மால்யானை*
*முந்தருளும் வேத*
*முதலே என அழைப்ப*
*வந்தருளும் செந்தா*
*மரை.*

---

மூலப்பழமறைக்கு முன்னேயும் காணலாம் - இறைவனைப் பார்க்க வேண்டும். அதற்காக சாஷ்திரங்களில் தத்துவங்களில் வியாக்யானங்களில் புகுந்து அலசக்கூடாது. அடிப்படையான விபரங்கள் பற்றி ஆராயும் அந்நூல்களே 'ஐயா, ஐயா. என இறைவனைத் தேடி அவன்பின்னே ஓடுகின்றன. ஆனால் பார்த்தது இல்லை சாஸ்திரங்கள். காலி - பசு. பசுவுக்குள் ஒளிரும் அற்புதத்தை உணர்ந்து பார்த்தால்போதும், அப்படியே நம் முன் எழுந்தருளி நிற்பான் இறைவன். ஏன் பசுவைத் திரட்டி மேய்ச்சல் காட்டுக்கு அழைத்து அதன்பின்னே இறைவன் நடந்து போவதும் தெரியும்.

மடியில் கனம் இருந்தால் வழி எல்லாம் பயந்தான் மடியை அவிழ்த்து உதறி எறிந்துவிட வேண்டும். எதை? ஆணவத்தை - கனத்தை.

அது திருட்டுப் பொருள். அதனால் கனத்துத்தான் இருக்கும். அது இல்லை என்றால் போகிற வழி எல்லாம் இறைன்தான் அவனது துணை தான்.

நமச்சிவாய என்றால் போதும் - என்ன என்று கேட்பான். நினைத்தாலே போதும் 'நமச்சிவாய' என்று; இதோ என்று கையைப் பிடிப்பான்.

உண்மையோடு - உணர்ச்சியோடு பார்க்கிறவர்களுக்கு நமச்சிவாய என்னும் வார்த்தைக்கு உள்ளேயே அவன் இருப்பது தெரியும்.

நமச்சிவாய என்னும் சொல்லுக்கு எது துணை, நமச்சிவாயனே துணை, உற்ற துணை அவன் ஒருவனே!

அப்பர் பெருமான் பார்த்துவிட்டார் இதை. தாங்கமுடியவில்லை ஆனந்தத்தை. எப்படிக் குதித்தோடி வருகிறது ஆனந்தம் என்று பாருங்கள்.

---

"காலிக்குப் பின்னேயும் காணலாம்"

மால் யானை - கம்பீரமான கொம்பன் யானை - கஜேந்திரன். முந்தருளும் - ஓடிவாரும், உதவும். உமக்கே அடைக்கலம். செந்தாமரை - தாமரை மலர்போன்ற திருவடி. அதாவது திருவருள்.

*தானன தானன*
*தான தன்னன*

*சொற்றுணை வேதியன்,*
*சோதி வானவன்,*
*பொற்றுணைத் திருந்தடி*
*பொருந்தக் கைதொழீர்!*
*கற்றுணைப் பூட்டிஓர்*
*கடலிற் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது*
*நமச்சி வாயவே* (53)

---

சொல் துணைவேதியன் - சொல்லுக்குத் துணையாக - மெய்ப் பொருளாகவே இருக்கிறான் இறைவன். வானம், பூமி, மலை, கடல் என்று இறைவன் வெளிப்படுகிறான். அப்படியே சொல்லாகவும் வெளிப்படுகிறான். நமச்சிவாய என்றால் அந்தச் சொல்லே நமச்சிவாயன் (இறைவன்) தான். மனிதர்களாகிய நாமும் அப்படித்தான். ஆனால் ஒரு வித்தியாசம். நாம் இறைவன் மயம் என்பது உணர்வோடு ஒட்டி நிற்பதில்லை 'நாம்' நாமேதான் என்று பல்டி அடித்து விடுகிறோம். ஆனால் நமச்சிவாய என்கிற சொல்லோ. நான் வேறு - இறைவன் வேறு என்று நினைப்பதில்லை. நமச்சிவாயனே தான் நான் என்கிற மாறாத ஒருநிலையிலேயே நிற்கிறது சொல். வேதியன் - எல்லாவற்றுக்கும் வித்தாக விளங்குபவன். பொன்துணை திருந்தடி - தங்கத்துக்குத் தங்கமாய் தகதகவென்று பிரகாசிக்கும் திருவருள். எல்லாவற்றையும் திருத்தமாக வெளிப்படுத்தும் திருவருள். பொருந்தக் கைதொழில் - எல்லாம் உன் அருளே என்று அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வது போல் உணர்ந்து அனுபவிக்க வேண்டும். திருந்தடி - செம்மைநலம் சான்ற திருவருளை. நண்பர்களே, பெரியோர்களே, தாய்மார்களே அப்படி உணர்ந்து அனுபவித்தால் நல்துணையாவது நமச்சிவாய - உங்களுக்குத் துணைக்குத் துணையாக இருப்பான் இறைவன் நமச்சிவாயன். தொழுவீர் என்பது தொழீர் என வந்தது.

கல்துணை பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை நமச்சிவாய. கல்லோடு சேர்த்துக் கட்டி நடுக்கடலில் தள்ளிவிட்டால் கதி ஏது? - அதோ கதிதானே. அப்படிப்பட்ட இடரிலிருந்தும் மீட்டு விடுவித்து விடுவான் நமச்சிவாயன். அவன் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் மந்திரம் விடுவித்து விடும். நம்பிக்கை வேண்டும். பக்தி வேண்டும்.

54. இனி, இருபது வருடங்களுக்கு முன் உயர்நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் திருமணம். திருமண விழாவுக்கு பெரிய தொழிலதிபர் - இந்தியாவிலே பெரிய தொழிலதிபர்கள் சிலர் என்றால் அதில் ஒருவர் வந்தார். அவரை வரவேற்ற நீதிபதி தன்பக்கம் இருந்த சிறு தொழிலதிபரை அறிமுகப்படுத்தினார் பெருந்தொழிலதிபருக்கு. அவரோ அதைக் கண்டு கொள்ளவே இல்லை. நீதிபதி சொல்வதைக் காது கொடுத்தே கேட்கவில்லை. வேண்டும் என்றே வேறு ஒருவரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார் பெருந்தொழிலதிபர்.

நீதிபதிக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. உடனே உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் ஒருவரின் பெயரைச் சொல்லி அவருடைய சகோதரர் இவர் என்று மறுபடி அறிமுகப்படுத்தினார். அவ்வளவுதான், சிறுதொழிலதிபரின் கையைப் பிடித்தார். அவரிடம் தன் பல்லைக் காட்டினார். தோள்மேல் கை போட்டார். நெளிந்தார், குழைந்தார். நல்ல வேளை கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்கவில்லை பெருந்தொழிலதிபர். இத்தனைக்கும் உலகப் பொருளாதார நிபுணர் அங்கு இல்லை. அவர் பெயர் - வெறும் சொல்தான் அங்கு வந்தது. அந்தச் சொல்லுக்கல்லவா, அத்தனை ஆற்றல். காற்று, நீர், மண், தீ இவைகளுக்குள் இருக்கும் ஆற்றலைவிட வார்த்தையில் இருக்கிறது ஆற்றல்.

வீட்டில் உட்கட்டில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறோம். யானை, யானை என்று தெருவில் ஒரே சத்தம். சிறுவர்கள் கத்திக் கொண்டு போகிறார்கள்.

---

குறிப்பு: சமயப் பண்பாட்டின் நுட்பம், ஆழம், நம்பிக்கை, உறுதிப்பாடு எல்லாம் சேர்ந்து கவி உருவம் எடுத்திருக்கிறது. அப்பர் சுவாமிகள் கண்ட அனுபவம் ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறது செய்யுளில். அப்பர் சுவாமிகளின் இதயத்துடிப்பே எதுகையிலும், மோனையிலும், இசையிலுமாய் நின்று தாளம் போடுகின்றது.

அருமையான பாடல். பாடல் தான் மந்திரம். பாடலைத்தானே தொடர்ந்து பாடிப்பாடிப் பார்க்க முடியும். காதல் கடிதத்தைக் கூட (வசனத்தை) அப்படிப் போற போற இடம் எல்லாம் சொல்லி விளம்பரப்படுத்த முடியுமா?

மந்திரம் என்றால் பாடல்தான். தமிழ்ப் பாட்டுத் தான் வசனம் இல்லை.

யானை என்கிற சொல் காதில் விழுந்த உடனேயே பிரமாண்டமான யானையே கண்ணெதிர் நிற்கிறதுபோல் தெரிகிறது. அப்படியே தும்பிகையை உயர்த்தியபடி முறம் போன்ற செவிகளை நிமிர்த்தியபடி காற்றினும் கடும் வேகத்தில் யானை பாய்ந்து வருவது போலவும் தெரிகிறது. யானையின் மத்தகமும், வயிறும், காலும், கம்பீரமும், பிளிறலும் அப்படி அப்படியே தெரிகின்றன.

அரைக்கால் அங்குல நீளம் கூட இல்லாத இரண்டே இரண்டு எழுத்துக்குள் யானை என்னும் சின்னஞ்சிறு சொல்லுக்குள் பிரமாண்டமான இவ்வளவு பெரிய யானை எப்படி நிற்கிறது, எப்படி உட்கார்ந்திருக்கிறது. எப்படி எழுந்து நடக்கிறது.

நம் யோசனைக்கு எட்டாத விஷயந்தான். இனி யானை என்னும் வார்த்தையில் யானை இருக்கிறது. அப்படியானால் ராமர் என்னும் சொல்லுக்குள் ராமர் ஏன் இருக்கமாட்டார். நமச்சிவாய என்னும் வார்த்தைக்குள் நமச்சிவாயப் பெருமான் ஏன் அமர்ந்து அருள் பாலிக்கமாட்டார்.

★★★★★★★

யானை, குதிரை, பந்து, பாம்பு, முறுக்கு, சீடை என்று சொல்லில் பொருள் இருக்கிறது. அதுபோலவே சொல்லில் மனிதனும் இருக்கிறான்.

★★★★★★★

ஒருவர் சொற்பொழிவாற்றுகிறார் அல்லது அறிவுரை கூறுகிறார். புத்திமதி சொல்லுகிறார் என்றால் அவர் பேச்சில் அவரே இருக்கிறார். அவர் தகுதி எவ்வளவோ அவ்வளவுக் குத்தான் அவர் வார்த்தை பலன் தரும்.

ஐந்து வயது மகனைப் பார்த்து ஏண்டா சட்டைப் பையிலிருந்து காசை எடுத்தாய், இனிமேல் எடுத்தால் கண்விழியைப் பிடுங்கிவிடுவேன், ஜாக்கிரதை.. என்று அதட்டுகிறார் தந்தை.

கல்லுளி மங்கன் மாதிரி அப்படியே நிற்கிறான் பையன். அவன் நிலையிலிருந்து அணுவளவுகூட நகரவில்லை, அவனை. நகர்த்த முடியவில்லை அவர் உபதேசம் தர்மோபதேசம்.

காரணம் வேறொன்றும் இல்லை. தந்தையின் யோக்யதை அப்படி. அந்த அளவுக்குத்தானே வேலை செய்யும் அது.

*******

சொல்லில் பொருள் இருக்கிறது. மனிதனும் இருக்கிறான். மூன்றாவதாக கடவுளும் - அதாவது கடவுள்த் தத்துவமும் இருக்கிறது.

ராமன் என்ற வார்த்தையில் கருணை, நீதி, சீலம், பக்தி, தியாகம் இவையெல்லாம் சேர்ந்து நிறைந்துதானே இருக்கின்றன.

இவைகளைப் பார்த்தால் கல் நெஞ்சமும் கரையும். அப்படியே ஒன்றுபடும் அவற்றோடு. எத்தனை எத்தனைபேர் உருகிக் கரைந்து அவற்றோடு ஒன்றி இருக்கிறார்கள் ராம என்னும் மந்திரத்தில்.

நமக்குத் தெரிய காந்தி மகான் ராம மந்திரத்தில் ஒன்றித் திளைத்தார்.

ராமனையே பார்த்துக் கொண்டிருந்தார் அந்த மந்திரத்தில் காந்தி. ராமனும் காந்தியைப் பார்த்தவண்ணமாகவே இருந்தான். இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் சேர்ந்தே இருந்தார்கள்.

நேருக்கு நேராக நின்று சுடுகிறான் ஒரு கொடியவன். துப்பாக்கிக் குண்டு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று நெஞ்சைத் தகர்த்து ஊடுருவுகின்றன.

ஒவ்வொரு குண்டுக்கும் அவருடைய பதில் ராம், ராம் என்பதுதான்.

ஐயா என்றோ அப்பா என்றோ அலறவில்லை அவர்.

அப்படியானால் தசரதனின் புதல்வன் என்கிற பொருளை மட்டுமா காட்டியது ராமன் என்னும் சொல் மெய்ப் பொருளையே காட்டியது காந்தி மகாத்மாவுக்கு.

சொல்லில் இருக்கிற மெய்ப் பொருளைப் பார்க்கத் தகுதி வேண்டும்.

*பக்தி - உண்மையான பக்திதான் தகுதி.*

★★★★★★★

*சொல்லுக்குள்ளேயே இப்படியெல்லாம் மனித அறிவுக்கு எட்டாத விஷயம் ஒட்டி இருந்தால் அந்தச் சொற்களே இசை யோடும் தாளத்தோடும் சேர்ந்து உருவெடுக்கிற கவியில் எப்படி எப்படி இருக்கும் உண்மை, உணர்ச்சிமயமான பேருண்மை.*

*மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் என்று எல்லோரும் சேர்ந்து குடும்பத்தோடு சேர்ந்திருந்து அனுபவிக்கக் கூடிய செல்வம் அல்லவா கவி. எல்லோருக்கும் வெளிச்சம் கொடுக்கும் விளக்கு அதுதான்.*

*இல்லக விளக்கது*
*இருள்கெ டுப்பது.*

*பாடலும் அதுதான். பாடலை உதவும் அறிஞனும் அதுதான். நமசிவாய என்னும் மந்திரமே தான்.*

*சொல்லக விளக்கது*
*சோதி உள்ளது.*

*பல கலைகளாய் சமயம் வழிபாடு, பக்தி, இசை, நடனம், கோயில், கோபுரம் என்று உருவெடுத்து எல்லோரையும் பரவசப்படுத்துகிறது. 'நமச்சிவாய' என்னும் மந்திரம்.*

*பல்லக விளக்கது*
*பலரும் காண்பது*

*பாரத்தை இறக்கி வைத்து மனதைப் பளிங்குபோல் தூய்மைப்படுத்தி அதில் விளக்கேற்றி வைக்கிறது நமச்சிவாய எனும் மந்திரம். மந்திர மயமான பாடல்.*

*இல்லக விளக்கது*
*இருள்கெ டுப்பது,*
*சொல்லக விளக்கது,*
*சோதி உள்ளது,*
*பல்லக விளக்கது,*
*பலரும் காண்பது,*
*நல்லக விளக்கது*
*நமச்சி வாயவே* (54)

---

இல்லகம் - வீடு, குடும்பம், சொல்லகம் - பாடல், கவிஞர், அறிஞர். பல்லகம் - பல்கலை, நல்லகம் - மனம்.

குறிப்பு: கவி கலை, முதலியவற்றை குடும்பத்தோடு சேர்ந்து அனுபவிக்க வேண்டும். யாருக்கும் அதில் பங்கில்லை என்று மறுக்கக் கூடாது. பக்தியும் அப்படியே. கலை, பக்தி, கவி ஆகியவை குடும்பத்தோடு சேர்ந்து ஒளிவிட்டால் - குடும்பம் குடும்பமாகச் சேர்ந்து ஒளிவிட்டால் நாட்டுக்கே சேமம். உலகுக்கே அது நல்லது. வீட்டுக்குத் தீபம் போல நாட்டுக்கே உலகுக்கே அது ஒளி கொடுக்கும் தீபம்.

*பல்லக விளக்கது*
*பலரும் காண்பது*

அப்பர் சுவாமிகளுக்கு நமச்சிவாய என்னும் மந்திரம் நமச்சிவாய மூர்த்தியாகவே தெரிகிறது. கலை, கவி, மக்கள், வாழ்க்கை, உண்மை, உணர்ச்சி எல்லாம் அதில் சேர்ந்தே தெரிகிறது. அப்படிக் கண்டு அனுபவித்த அனுபவந்தான்,

***இல்லக விளக்கது***
***இருள்கெ டுப்பது***
***சொல்லக விளக்கது***
***சோதி உள்ளது***
***பல்லக விளக்கது***
***பலரும் காண்பது***
***நல்லக விளக்கது***
***நமச்சி வாயவே***

**என்று கவியாய் வருகிறது.**

# வருமுன் காப்பதே வழி

55. பானையில் ஓட்டை ஒன்று இருந்தால் போதும். ஒரு சொட்டுத் தண்ணீர் கூடப் பானையில் இருக்காது. நீரெல்லாம் ஒழுகி ஓடிவிடும்.

இனி மனிதனை எடுத்துக் கொண்டால் - மனிதன் கொலுவீற்றிருக்கும் உடம்பை எடுத்துக் கொண்டால் ஓட்டை ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்பது ஓட்டை.

இத்தனை ஓட்டை இருந்தும் மூச்சுக் காற்று இருக்கிறது. சூடு (வெப்பம்) இருக்கிறது. ரத்தமும் இருக்கிறது. அதில் சூடு, சொரணை எல்லாம் இருக்கிறது. ஒன்றும் ஓடிப்போய் விடவில்லை ஓட்டைகளின் வழி.

இது அதிசயந்தான்.

கடவுளுடைய கருணைதான். ஒரு நாளா, இரு நாளா, பல வருஷங்களுக்கு, பேரன் பேத்தி எடுக்கிறவரை இந்த ஒன்பது வாய்க் குடத்துக்குள்ளே இவ்வளவையும் வைத்துக் காப்பாற்றுகிறார் கடவுள்.

★★★★★★★

எதற்கும் ஒரு எல்லை உண்டு. கணக்கு முடியப் போகிறதென்றால், மணியை அடிப்பான் காலன். காலில் முடக்கம், கையில் முடக்கம், வாயில் கோணல், காதில் மந்தம், பார்வை கம்மி இப்படி ஒவ்வொன்றாய் எச்சரிக்கை விடுவான் தூதன். உள்ளே வந்துவிடுவான் எமன். மளமளவென்று வந்து விடுவான். உடம்பின் கதவு, ஜன்னல் எல்லாவற்றையும் சார்த்திவிடுவான். அப்படியே அழைத்துக் கொண்டுபோய் விடுவான்.

எல்லாம் இறைவனின் திருவுளப்பாங்கின்படி ஒரு கணக்கில் - நியதியில் நடக்கிறது. விவகாரம் பண்ணுவதற்கு ஏது இடம் அங்கே.

சரி, இப்படி எல்லாம் வலிய வந்து கூட்டிக் கொண்டு போகிறானே எமன். அப்பொழுது அதைப்பார், இதைப் பார்

என்று எதையாவது காட்டுவானா? அவன் தான் கதவை அடைத்துவிட்டானே.

ஒன்றுமே தெரியாது நமக்கு அப்பொழுது. எதுவும் நினைவில் நிற்காது. அதனால் சௌகர்யமாக இருக்கும் போதே அடிக்கடி இறைவனைப் பார்க்க வேண்டும். அவனைப் பற்றிப் பேச வேண்டும். அவனுடைய அருமை பெருமைகளை எண்ணி எண்ணி உருகவேண்டும். கரைய வேண்டும்.

அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்றால் ஒழிந்தது காரியம்.

அப்பர் சுவாமிகள் அதில் ரொம்ப ரொம்ப உஷார். மிச்சம் கிச்சம் வைக்கவில்லை அவர். கடைசி விண்ணப்பமே எவ்வளவு தெளிவாய் வருகிறது அவரிடமிருந்து என்று பாருங்கள்.

*ஒண்ணுளே ஒன்பது*
*வாசல்வைத் தாய்,*
*ஒக்கஅ டைக்கும் போ(து)*
*உணரமாட் டேன்;*
*புண்ணியா உன் அடிக்கே*
*போதுகின் றேன்*
*பூம்புகலூர் மேவிய*
*புண்ணிய னே!*

மரணம் என்று ஒன்று உண்டு. அது எல்லோருக்கும் பொது. எல்லாவற்றுக்கும் பொது மரணத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. எதுவும் தப்ப முடியாது.

இது கண் கண்ட உண்மை. ஆனாலும் மனிதனுக்கு மரணத்தைப் பற்றி நினைப்பே இல்லையே. அப்படி ஒன்று இருக்கிறது என்பதையே மறந்துவிட்டான் மனிதன்.

''நிரந்தரமாக இங்கேயே இருக்கப்போகிறோம். இன்னும் பல வீடு கட்டப்போகிறோம். நன்செய், புன்செய், தோப்பு என்று மேலும் மேலும் வாங்கப் போகிறோம். பேரும், புகழும், பதவியும், அதிகாரமும் மேலே மேலே நம்மிடம் வந்து குவியும். நாமும் இருப்போம். அவையும் இருக்கும்''. இப்படியே நினைத்துக் கொண்டிருக்கிறான் மனிதன்.

*மரணத்தையே நினைக்காதவன் கடவுளை எப்படி நினைப்பான்.*

*ஆனால் ஞானிகள் மரணத்தை மறக்கமாட்டார்கள். கடவுளையும் மறக்கமாட்டார்கள்.*

'வீடு, வாசல், சொத்து, சுகம் எதுவும் நம்மவை அல்ல, மரணம் ஒன்று தான் நம்மது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு கடவுளோடு சேர மரணம் ஒன்றுதான் வழி' இப்படித் தெளிந்து கண்டவர்கள் ஞானிகள்.

*ஞானிகளுக்கெல்லாம் வழிகாட்டும் பரமஞானி அப்பர் சுவாமிகள். அவர் என்ன சொல்கிறார்? பாடலிலேயே பார்க்கலாம்.*

*எண்ணுகேன் என் சொல்லி*
*எண்ணுகே னோ?*
*எம்பெருமான் திருவடியே*
*எண்ணில்அல் லால்;*
*கண்இலேன் மற்றோர்*
*களைகண்இல் லேன்*
*கழலடியே கைதொழுது*
*காணில்அல் லால்;*
*ஒண்ணுளே ஒன்பது*
*வாசல்வைத் தாய்*
*ஒக்க அ டைக்கும்போ(து)*
*உணரமாட் டேன்*
*புண்ணியா உன் அடிக்கே*
*போதுகின் றேன்*
*பூம்புகலூர் மேவிய*
*புண்ணிய னே.* (55)

56. படைப்பு, இருப்பு, மறைப்பு மூன்று நிகழ்ச்சிகள், தத்துவங்கள். மூன்றும் தொடர்ந்து நடக்கின்றன. உலகம் முழுவதும் ஒரே தொடர்ச்சியாய் நடக்கின்றன.

படைப்பு, இருப்பு ஆகிய இரண்டும் நாடக காட்சிகள். பொருளற்ற நாடகந்தான் இரண்டும்.

பிறப்பு, இருப்பு என்னும் இரண்டு நாடகம் காரணமாகவே மறைப்பு என்பதும் ஒரு காட்சி போலத் தெரிகிறது.

மறைப்பு என்பதை இழப்பு (இழவு) அல்லது மரணம் என்று சொல்கிறோம். ஐயையோ, போய்விட்டதே.. என்று புலம்புகிறோம்.

பிறந்ததனாலும், வளர்ந்ததனாலும் அதுவும் நான் என்கிற தோரணையில் பிறந்து வளர்ந்ததனால்தான் மரணம் பயமுறுத்துகிறது. ஐயோ, என்று அலறுகிறோம்.

உண்மையில் பிறந்தது நாம் அல்ல கடவுள்தான். கடவுள் தான் பல பல கோலங்களில் தோன்றுகிறார். நடமாடுகிறார். அதாவது பலபல வேஷம் போடுகிறார். அந்தந்த வேஷத்தை ஒட்டி நடக்கிறார். பிறகு கலைத்துக் கொள்கிறார் வேஷத்தை.

இப்படி வேஷம் போட்டு ஆடுவதில் அவருக்கு ஒரே ஆனந்தம். அவரைப் பற்றிய நினைப்பே இல்லாமல் 'நான், நான்' என்று ஆட்டம் போடுகின்றன வேஷங்கள். அதைப் பார்ப்பதிலும் அவருக்கு ஒரே உற்சாகம்.

*******

எது எப்படியானாலும் சரி மரணம் ஒன்றே நிச்சயம்.

மரணத்தைப் பற்றிய நினைப்பு இருந்தால் போதும். வெறும் பொம்மலாட்டந்தான் வாழ்வு என்று விளங்கிவிடும்.

அது (ஒன்று) விளங்கினால்போதும். எல்லாம் விளங்கிவிடும். இந்தஜென்மம் எடுத்ததில் தெரிய வேண்டியவை எல்லாம் தெரிந்துவிடும்.

கோளாறு என்னவென்றால் எதைத்தெரிய வேண்டுமோ அதை தெரியவிடாதபடி செய்துவிடுகிறது ஆணவம்.

மரணம் நிச்சயம். என்பது தெரிய வேண்டாமா மனிதனுக்கு? அதைத் தெரியாமல் 'வாழ்வு தான் நிச்சயம், அது ஒன்றே நிச்சயம்' என்றல்லவா தலைகீழாக தொங்குகிறான் மனிதன்.

*******

மரணத்தின் மூலம் ஆணவம் ஒழிகிறது. அது ஒன்றே ஒழிகிறது. 'நான்' என்கிற ஆணவத்தைத் தவிர இழப்பதற்கு வேறு என்ன இருக்கிறது மனிதனிடம்.

★★★★★★★

அடடா! எங்கும் ஒரே ஜோதிமயமாய் இருக்கிறது உண்மை. ஆனாலும் கதவைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து, சாளரங்களையும் சார்த்திவிட்டு ஒரு மூலையில் கிடந்து பொய்யைக் கட்டி அழுகிறானே மனிதன் என்று இரக்கப்படுகிறார் அப்பர் சுவாமிகள். சுவாமிகளின் மனசைக் குழைத்துப் பிசைகிறது கருணை. அதனால் கொஞ்சம் காரசாரமாகவே வருகிறது பரிவு.

*நடலை வாழ்வு கொண்(டு)*
*என் செய்தீர் நாண்இலீர்?*

கொஞ்சம் கூட வெட்கம் இல்லையே உங்களிடம். வெறும் பொய்யை - நடிப்பை, வேஷத்தை உண்மை என்று நம்பி அதன் பின்னே ஓடுகிறீர்களே. இதுதான் வாழ்வு என்று ஒரு கூத்தா அடிக்கிறீர்கள்?

'எல்லாவற்றையும் விட்டு விட்டு பிடிசாம்பலாய் - மண்ணோடு மண்ணாய் - காற்றோடு காற்றாய் போகவேண்டியதுதான். அப்படிப் போவதற்கு, சுடுகாடுதான் வழி - ராஜப்பட்டை... ஒப்புக்குச் சொல்கிற சொல் அல்ல. உண்மை. நூற்றுக்கு நூறு உண்மை.

*சுடலை சேர்வது*
*சொற்பிர மாணமே*

எல்லாம் இறைவனின் திருவருள்தான். எங்கும் அதுதான். எப்பேர்பட்ட அதிசயம் இந்த உடம்பு. எப்படித் தொடுகிறது. எப்படிப் பற்றுகிறது. இறுக்குகிறது. பிறகு விடுகிறது. எத்தனை அரிய பெரிய செயல்களைச் செய்துகாட்டுகிறது இந்தச் சின்னஞ்சிறிய கை.

கையைப் போல எத்தனை தத்துவங்கள் இந்த உடம்பில். ஆயிரம் என்று சொல்லவா, பதினாயிரம் என்று சொல்லவா, அதைப் பத்தால் பெருக்கி நூறாயிரம் என்று சொல்லவா.

லட்சோபலட்சம் தத்துவங்கள் ஒன்றாய் நின்று, ஒன்றை ஒன்று அனுசரித்து ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கும் தங்கச் சுரங்கம் இது. வயிரச் சுரங்கம் உடம்பு, நவரத்தினக் களஞ்சியமே தான் இந்த அற்புத உடம்பு.

இனி, கையினுடைய காரியம் கைக்கே இன்னதென்று தெரியுமா? இல்லை, எப்படிப் பார்க்கிறோம். எப்படித் தெளிகிறோம். எப்படி அதனோடு ஒட்டுகிறோம் என்கிற விஷயம் கண்ணுக்குத்தான் தெரியுமா.

கையா மூடுகிறது. விரிகிறது. கண்ணாபார்க்கிறது. உணர்ச்சியை ஊற்றுப் பெருக்கெடுக்க வைக்கிறது. கண்ணீராய்க் கொட்டுகிறது?

எல்லாம் இறைவன் செயல். அவன் திருவருள். இறைவன் அருள் இருக்கும்வரை, அவன் விளையாடுகிறவரை உடம்பு உடம்புதான். தங்கக் கட்டிதான். நவரத்தினங்கள் பதித்த வளையல், மூக்குத்தி, ஒட்டியாணம்,பதக்கம் என்கிற பொன்னாபரணந்தான் உடம்பு.

இறைவனுடைய திருவிளையாடல் முடிந்த உடனே அது உடைந்த மண்சட்டிதான். நடக்கிறவர்கள் எப்படிக் காலால் எற்றி எறிவார்கள் வரை ஓட்டை அதாவது உடைந்த சட்டி பானையை - அப்படி வீடே ஒதுக்கி வைக்கும், ஊரே ஒதிக்கி வைக்கும். உதவாகரைதான் மனிதன். அவனைத்தாங்கி நின்ற உடம்பு.

*தான தான*
*தானன தானதன்*

*நடலை வாழ்வு கொண்(டு)*
*என் செய்தீர் நாண் இலீர்!*
*சுடலை சேர்வது*
*சொற்பிர மாணமே?*
*கடலின் நஞ்சமு(து)*
*உண்டவர் கைவிட்டால்*
*உடலி னாரும்ஓர்*
*ஊர்முனி பாண்டமே* (56)

57. ஆணவம் (பொய்) ஒழிந்த பின்தான் இறையருள் வருமா? இறையருள் (மெய்யுணர்வு) பெற்ற பின்தான் ஆணவம் ஒழியுமா? இப்படி ஒரு கேள்வி - கேள்வி என்ன கேள்வி மனிதனின் யோசனையே அதுதான்.

பல நூல்களையும் படித்த பண்டிதர்கள், வித்வான்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சாஷ்திரிகள், சிரோன் மணிகள் எல்லோருமே இதை வைத்தே இந்தக் கேள்வியை வைத்தே அபாரமாய் விளையாடுகிறார்கள்.

ஆணவம் அகன்றால் தான் மெய்யுணர்வு. பரம்பொருள் நாட்டம். இல்லை என்றால் இல்லை. இப்படி அடித்துச் சொல்கிறவர்கள் பலர். இனி, மெய்யுணர்வு பெற்றால்தான்

---

நடலை வாழ்வு கொண்டு - வேஷம் போடுவதையே தொழிலாகக் கொண்டு. என் செய்தீர் - என்னென்ன ஆட்டம் போடுகிறீர்கள். நாண் இலீர் - உணர்ச்சியே இல்லாத ஜென்மங்களே. சுடலை - சுடுகாடு. சொல் பிரமாணமோ - சுடலை என்பது வெறும் சொல் மட்டுமல்ல, உண்மை. பேருண்மை அது. கடலின் நஞ்சு அமுது உண்டவர் - இறைவன. 'சிவபெருமான். கடலைக் கடைகிறபொது அமுதம் வந்தது. கூடவே நஞ்சும் வந்தது. நஞ்சைப் பார்த்து எல்லோரும் ஓடிவிட்டார்கள். அமுதத்துக்காக அரும்பாடுபட்டுக் கடைந்தவர்களே ஓடினார்கள். அவர்களுக்காக இரங்கி நஞ்சை எடுத்து வாயில் போட்டார் பெருமான். அது வயிற்றுக்குள் போய்விடக் கூடாதே என்று கழுத்தைப்பிடித்து அதில் நிற்க வைத்துவிட்டார் உமா தேவியார்'' என்பது புராணம்.

ஆணவம் என்பது அநாதியான தத்துவம். கடவுளைப் போல அதுவும் அநாதியானது. பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு ஜீவனையும் பிடித்து ஆட்டுகிறது. மனிதனை அது ஆட்டுகிற ஆட்டு இப்படி அப்படி என்று சொல்ல முடியாது. ஆணவத்தின் அட்டகாசத்தால் எத்தனையோ தவறுகள். தொல்லைகள். அத்தனையையும் கடவுளே எடுத்துச் சுமக்கிறார். அவ்வளவு கருணை அவருக்கு. இப்படி இறைவனின் எல்லையற்ற பொறுமையையும், கருணையையும் விளக்குகிறது புராணம்.

உடலினார் - உடம்பு. ஆர் போட்டுச் சொல்வது கிண்டல். ஊர் முனிபாண்டம் - பார்க்கிறவர்களுக்கு வெறுப்பைக் கொடுக்கும் உடைந்த மண் சட்டி, ஓடு.

ஆணவம் அகலும். அது பெறாத வரை. ஆணவத்திலிருந்து விடுபட முடியாது. மெய்யுணர்வு பெற அவனருள் வேண்டும். 'அவனருளாலே அவன்தான் வணங்கி' என்பது மாணிக்க வாசக சுவாமிகளின் திருவாக்கு. இப்படி ஓங்கி ஒரே போடாய் - செம்போடாய்ப் போடுகிறவர்களும் பலர்.

எல்லோருக்குமே - இருதிறத்தார்க்குமே ஒரே கொண்டாட்டம். கிடைத்ததடா வேட்டை - கிடாய் வேட்டை என்கிற எக்களிப்பில் போட்டுக் கொண்டே இருப்பார்கள் வாதப் பிரதி வாதங்களை.

*******

ஆணவம் இருக்கத்தான் செய்யும். அது பாட்டுக்கு இருந்துவிட்டுப் போகிறது. நாம் ஏன் அதனிடம் போய் மோதவேண்டும்.

கோவில் இருக்கிறது. மூர்த்தி இருக்கிறார். நாம் இருக்கிறோம். பாடல் இருக்கிறது. கோவிலுக்குப் போய்ச் சாமிக் கும்பிடவேண்டியது தானே. பக்திமயமான பாடல்களைப் பாடி அவனை வாழ்த்த வேண்டியதுதானே.

ஒழுங்காகக் கோயிலுக்குப் போய் மூர்த்தியை வழிபட்டால் போதும். இரண்டு பாடல்களைப் பாடினால் போதும். புத்தி தெளியும். எல்லாம் அவனருளே என்று தெளியும். மனசோடு ஒட்டிக் கொள்ளும் அது.

வசதி இவ்வளவு இருந்தும் நான் சண்டைதான் போடுவேன். விவகாரந்தான் பண்ணுவேன். வாழ்க்கையையே விவகாரத்தில்தான் கரைப்பேன் என்றால் புத்தி எப்படித் தெளியும். ஆணவந்தான் தடிக்கும். இதை அறிந்தவர் அப்பர் சுவாமிகள்.

*வாழ்த்த வாயும்,*
*நினைக்கம டநெஞ்சும்,*
*தாழ்த்தச் சென்னியும்*
*தந்த தலைவனை*
*சூழ்த்த மாமலர்*
*தூவித் துதியாதே*
*வீழ்த்த வாவினை*
*யேன்நெடும் காலமே* (57)

58. இதயத்தைப் பார்த்து ''உள்ளமே! இறைவனை நீ நினைப்பாயாக'' என்று வேண்டுகோள் விட வேண்டியதில்லை. கட்டளையிடவும் வேண்டாம். தானாகவே நினைக்கும் இறைவனை மனம். எத்தனையோ யோசனைகள் மனசில் வரும் போகும். அதில் இறைவனைப் பற்றிய நினைப்பும் உண்டு.

அப்படி ஒரு நினைப்பு உள்ளத்தில் தோன்றுகிறபொழுது அதை விட்டுவிடக் கூடாது. பற்ற வேண்டும். இறுகப் பற்ற வேண்டும். பற்றிய மாத்திரத்தில் - உணர்ச்சியால் தொட்ட மாத்திரத்திலேயே நாவில் சுவை (ரசம்) ஊறும். சிவ சிவ என்று உச்சரிக்கும்.

அதன் சுவையை அனுபவித்து நெருங்க நெருங்க - உறவாட உறவாட வினைகெடும். 'நான், என் காரியம்' என்கிற மயக்கம் விலகும்.

பிறகு எப்படி விட முடியும் இறைவனை.

---

மட நெஞ்சும் - இலக்கண இலக்கியப் பயிற்சி இல்லை தான். கூச்சமும் நாணமும் கொண்டதுதான் மனம். ஆனாலும் இறைவனை மறக்காமல் நினைக்கிறது. அதுதானே நன்றி மறவாமை. அது ஒன்று போதாதா? அதைப் பிடித்துக் கொண்டு ஏறலாம் உச்சிவரை. இறைவனையே தொட்டு உறவாடலாம். சூழ்த்த - அக இதழ்களும், புற இதழ்களும் சூழ்ந்து செறிந்த. விளையேன் - பலே, பலே, கெட்டிக்காரன் தான் நான்.

''வாழ்நாளை எப்படி எல்லாம் வீழ் நாளாக்கி விட்டேன்'' என்னும் தவிப்பு பாட்டின் இறுதி அடியில் கிடக்கிறது.

*உள்ளம் உள்கி,*
*உகந்துசி வன் என்று*
*மெள்ள உள்க*
*வினைகெடும் மெய்ம்மையே;*
*புள்ளி னார்பணி*
*புள்ளிருக் கும்வேளூர்*
*வள்ளல் பாதம்*
*வணங்கித் தொழுமினே* (58)

59. ஒருவர் மேல் அன்பு உண்டாகிறது. உடனே ஆர்வம் பெருகுகிறது அப்படியானால் அவர் அழகாகத் தெரிவார். அதுமட்டுமல்ல, யார்மேல் ஈடுபாடு உண்டாகிறதோ அவரைச் சேர்ந்த பொருள் எல்லாம் அவராகவே படும். அத்தனையும் அழகாக இருக்கும். உயர்ந்ததாக இருக்கும். எங்கும் இல்லாத அழகும் சிறப்பும் அவற்றிடம் இருப்பதாகத் தெரியும்.

நமக்கு வேண்டியவர் ஒருவர். அவர் வீடு ஓலைக் குடிசைதான். ஆனால் நமக்கோ அது கோவில் போலவே, அரண்மனை போலவே தெரியும். ஈடுபாடு என்றால் அப்படித்தான். நம்பிக்கை என்பது அதுதான்.

அன்பிலாலந்துறை என்று ஒரு சிறுஊர். சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். அங்கு அப்பர் சுவாமிகள் போனார். மூர்த்தியைப் பார்த்தார். அப்படியே சொக்கிப் போனார். அவ்வளவு ஈடுபாடு.

மூர்த்தியை விட்டுப் பிரிய முடியவில்லை. பிரிந்து வந்தாலும் ஒரு இடத்தில் தங்கி இருக்க முடியவில்லை. மறுபடி மறுபடி வருகிறார். கோவிலைக் கும்பிடுகிறார். கோபுரத்தைக் கும்பிடுகிறார். மூர்த்தியை விழுந்து கும்பிடுகிறார். மனதில் உள்ளதை எல்லாம் மூர்த்தியிடம் சொல்கிறார்.

---

உகந்து - ரசித்து அனுபவித்து. மெள்ள உள்க - பரபரப்போ படபடப்போ இல்லாமல் ஆனந்தத்தோடு அனுபவித்துப் பார்க்கிறது மனம். அப்படிப் பார்ப்பதால் நிம்மதி கிடைக்கிறது - 'வினைகெடும்'.

புள்ளினார் பணி - சம்பாவதி சடாயு, என்னும் பறவைகள் வழிபட்ட தலம். புள்ளிருக்கும் வேளூர் - வைத்தீஸ்வரன் கோவில். வள்ளல் - சிவபெருமான், இறைவன். தொழுமின் - வணங்கி வழிபடுங்கள்.

தான் சொல்வதை இறைவன் செவி கொடுத்துக் கேட்பதாக வும். வேண்டியதை வேண்டியபடி நிறைவேற்றுவதாகவும் நம்பிக்கை. எங்குபோனாலும் எங்கிருந்தாலும் எண்ணம்பூராவும் அன்பிலாலந்துறை பற்றித்தான். அப்பர் சுவாமிகளுக்குத் தான்.

*வெள்ளம் உள்ள*
*விரிசடை நந்தியை,*
*கள்ளம் உள்ள*
*மனத்தவர் காண்கிலார்;*
*அள்ளல் ஆர்வயல்*
*அன்பிலா லந்துறை*
*உள்ள வாறறி*
*யார்அவர் ஊமரே* *(59)*

---

வெள்ளம் - கங்கை. நந்தி - சிவபெருமான். சிவபெருமானை நந்தி என்று சொல்வது மரபு. கள்ளம் உள்ள மனத்தவர் - நம்பிக்கை இல்லாதவர். ஆர்வம் இல்லாதவர். காண்கிலார் - பார்க்க முடியாது. சிலை தெரியும். ஆனால் பெருமான் இவர்கள் முகத்தில் விழிக்க வெட்கப்படுவார். அள்ளல் ஆர்வயல் அன்பில் ஆலந்துறை - சேறும் சகதியுமாய் சதசத என்று கிடக்கும் வயல் நிறைந்த அன்பில் என்னும் கோயில் கொண்ட ஆலந்துறை ஊர். உள்ளவாறு அறியார் - பெருமானையே பார்க்காதவர்களுக்கு அவன் சந்நிதானத்தின் சிறப்பு விளங்கவா செய்யும். பாவம் அவர்கள் என்ன சொல்வார்கள்? ''வழி எல்லாம் நொசு நொசு என்றிருக்கிறது. நடக்கவே முடியாது. வயல்வரப்பில்தான் கால்வைத்து நடக்க வேண்டும்''. இப்படித்தான் பேசுவார்கள். வேறு பேச்சு வராது அவர்கள் வாயிலிருந்து. பாவம் அவர்கள் ஊமர்.

# பக்தி தான் காதல்

60. 'கடவுள் எங்கே இருக்கிறார்' இப்படி ஒரு கேள்வி - இந்தக் கேள்வியில் அதிகாரதொனி இருக்கலாம், அசட்டுத்தனம் இருக்கலாம். 'என்னைத் தவிர வேறு யார் இருக்க முடியும் என்கிற கள்ளத்தனம் இருக்கலாம். பொய் இருக்கலாம். ஆனால் அதில் (அந்தக் கேள்வியில்) உண்மை இல்லை. அர்த்தம் அர்த்தம் என்று சொல்கிறோமே பொருள் அது இல்லவே இல்லை.

★★★★★★★

எங்கே இல்லை கடவுள்? எங்குந்தான் அவர் இருக்கிறார். அவர்தானே இருக்கிறார். அவரைத் தவிர்த்து வேறு என்ன இருக்கிறது. அவரில்லாத ஒரு இடத்தைச் சொல்ல முடியுமா. உண்மை இப்படி இருக்க கடவுள் எங்கே இருக்கிறார் என்பது கொழுப்புத்தானே. எந்த ரசாயனத்துக்கும் கரையாது அந்தக் கொழுப்பு.

★★★★★★★

இனி, எப்படி இருப்பார் கடவுள் என்பதோ படுமட்டமான கேள்வி, போக்கிரித்தனமான கேள்வியும் கூட.

வானும் கடவுள், மண்ணும் கடவுள். பூவும் கடவுள். பொன்னும் கடவுள், இரும்பும் கடவுள் என்று ஆனபிறகு இப்படித்தான் இருப்பார் கடவுள் என்று எப்படிச் சொல்வது? இதுதான் கடவுளின் வடிவம் என்று எழுதிக்காட்டுவது எப்படி.

ஏதாவது ஒன்றாக இருந்தால் அல்லவா அவர் இப்படி, அவர் நிறம் இப்படி, முகம் இப்படி, உயரம் இப்படி, கனம் இப்படி, உருவம் இப்படி என்று ஜாடை மாடையாகவாவது சொல்லமுடியும். படம் போட்டாவது காட்ட முடியும். புழுப்பூச்சியிலிருந்து நட்சத்திரம், மனிதர், விலங்கு, பறவை, செடி, கொடி, அண்டம், அகண்டம் எல்லாமே கடவுள் என்ற பிறகு அவர் எப்படி இருப்பார் என்று கேட்பது விநோதந்தான்.

பொதுவாக மக்கள் யாரும் இப்படிக் கேட்பதில்லை. கேட்கவும் மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை கடவுள். அதோடு உறவாட வேண்டும் என்று அவர்களுக்கு ஆசை, வெறிப்பிடித்த ஆசை அவ்வளவுதான்.

ஆசை காரணமாக ஒரு உருவத்தை உண்டுபண்ணிக் கொள்கிறாக்கள். பிரதிஷ்டை பண்ணி வைக்கிறார்கள். கோயில் கட்டுகிறார்கள் விழுந்து விழுந்து கும்பிடுகிறார்கள்.

அவர்கள் மனிதர்கள். மனிதர்களாகவே இருக்கிறார்கள். அப்படியே வாழ்கிறார்கள். மனிதர்களோடு சேர்ந்தே - மனிதர்களை விட்டுப் பிரியாமல் சேர்ந்தே இருக்கிறார்கள்.

மனிதர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று ஆசைப்படுவது போலவே கடவுளோடும் சேர்ந்து வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆசைப்பட்ட மாதிரியே கடவுளை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

★★★★★★★

வெள்ளைக்காரன் வெள்ளைக்காரனைப் போல் கடவுளை உருவாக்கிக் கொள்கிறான். நீக்ரோ நீக்ரோ போல உருவாக்கிக் கொள்கிறான். சீனாக்காரன் சீனாக்காரனைப் போலவும், இந்தியன் இந்தியனைப் போலவும் உருவாக்கிக் கொள்கிறான் கடவுளை.

குழந்தை குழந்தை போல உருவாக்கிக் கொள்ளும். வீரன் வீரனைப் போல் உருவாக்கிக் கொள்ளுவாள், பெண்கள் பெண் போலவும், ஞானிகள் ஞானி போலவும், காதலர்கள் மாப்பிள்ளை பெண்ணாகவும் உருவாக்கிக் கொள்ளுவார்கள்.

சிலர் மனசுக்குள்ளேயே உருவாக்கிக் கொள்ளுவர். சிலர் மனசுக்குள் உருவாக்கிய மாதிரியே படம், சிலை முதலியவற்றிலும் உருவாக்கிக் கொள்வார்கள்.

யானைக்கு ஞாபகம் வந்துவிட்டது கடவுளைப் பார்க்க வேண்டும் என்றால், அதுவும் அடங்காத தாகத்தோடு வந்துவிட்டது என்றால் இன்னொரு யானை போலத்தான் கடவுளை வைத்துப் பார்க்கும். குதிரை போலவோ குரங்கு போலவோ வைத்துப் பார்க்காது.

★★★★★★★

ஒவ்வொரு கூட்டத்தாரும், இனத்தாரும் மக்கள் எல்லோருமே பக்தி உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். எல்லாம் அவன் செயல். நம் செயல் ஒன்றும் இல்லை என்கிற உணர்வுதான் - மெய்யுணர்வுதான் அவர்கள் பக்தி. அதனால் கடவுள் பற்றியோ - பக்தி பற்றியோ அலட்டிக் கொள்வதில்லை மக்கள்.

பக்தியில் தோய்கிறார்கள். அழுந்துகிறார்கள், கரைகிறார்கள். கரைந்து கரைந்து காட்சியை, தோற்றத்தை, உருவத்தையே உருவகம் பண்ணிக் கொள்கிறார்கள். ஓவியம், சிற்பம், கவி எல்லாவற்றிலும் வைத்து வைத்துப் பார்க்கிறார்கள். அனுபவிக்கிறார்கள் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள்.

கடவுள் அப்படி இருப்பாரா இப்படி இருப்பாரா என்று அலட்டிக் கொள்வதில்லை. இது அல்ல அது. அது அல்ல இது என்று கலங்கிக் குழம்புவதும் இல்லை அவர்கள்.

கலக்கம் எல்லாம் படித்தவர்களுக்குத்தான். அது இது என்று படித்துவிட்டால் பிறகு மனுசனாக இருக்கமாட்டான். மனுசனோடு ஒட்டமாட்டான்.

எல்லாம் படிப்பில் விளைகிற கொடுமை. அதுவும் கடவுளைப் பற்றி ஆராய்ச்சியில் இறங்கிப் படிக்கிறவன் கொடுமையைத் தாங்க முடியாது.

கடவுளைப் பற்றிப் படிப்பு எதற்கு. ஆராய்ச்சி என்னத்துக்கு. நம்பிக்கை வேண்டும். பக்தி வேண்டும். அவை இருந்தால் கடவுள் கருப்பா சிவப்பா என்று தர்க்கம் வருமா.

வேண்டாத படிப்பில் சிக்காதவர்களுக்குத் தெரியும் கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். எல்லாமாய் இருக்கிறார் என்று.

அவருக்கு உருவம் இல்லை. நிறம் இல்லை, 'இதுதான் அவர்' என்று ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கும் இல்லை.

கருணையே வடிவாக - அதாவது அன்னபூரணி உமாதேவி சகிதமாக இருக்கிறார் கடவுள். அவரே மதுரைச் சொக்கநாதர், சிதம்பரம் நடராஜர், திருவாரூர் தியாகராஜர், கச்சி ஏகம்பநாதர் என்று நினைக்க வேண்டும், உருக வேண்டும். உருகி உருகி அழைக்க வேண்டும் இறைவனை.

*மைப்படிந்த கண்ணாளும்*
*தானும்கச் சி*
*மயானந்தான், வார்சடையான்*
*என்னில்அல் லால்*
*ஒப்புடையன் அல்லன்,*
*ஒருவன்அல் லன்*
*ஓர் ஊரன் அல்லன்ஓர்*
*உவமன்இல் லி*

எல்லாம் ஒரே கடவுள் தத்துவந்தான் அப்படியிருக்க எதைக் கொண்டு ஒப்புச் சொல்வது? பொன்னும் அவன், இரும்பும் அவன் என்கிறபொழுது பொன்னை ஒத்தவன் இறைவன் என்றால் இரும்பை ஒத்தவன் இல்லையா அவன்.

கடவுள்த் தத்துவம் ஒன்றுதான். இன்னொன்று இருந்தால் அல்லவா உவமானம் உவமேயம் என்று வரும்.

ஒப்பு உவமை எல்லாவற்றையும் தாண்டியவன் இறைவன்.

பக்தி இருந்தால் - உண்மையான பக்தி இருந்தால் பக்தனுக்கு உகந்தபடி ஒரு உருவத்தில் வெளிப்படுவான் இறைவன் உருவத்துக்கு ஏற்ற மூக்கு, விழி, முகம் முதலிய அங்கங்களோடு காட்சி கொடுப்பாள். அப்பொழுதுதான் தெரியும். அவனுடைய மேனி. சிருஷ்டித் தத்துவமே அவனுக்கு மேனி என்று.

ஒரு பெண். பெண்ணை குழந்தையோடு சேர்த்துத் தாயாகவே பார்க்கிறோம். அது போதுமே - குழந்தைக்கு அவள் பால் ஊட்டுவது, சீராட்டுவது, ஓராட்டுவது எல்லாம் படலம் படலமாக மனக்கண் முன் விரியத்தானே செய்யும்.

அதுபோலத்தான் சிருஷ்டி அதன் அற்புதம் தெரிந்தால் போதும். கடவுள் தத்துவத்தின் வண்ணம் (கனபரிமாணம்) முழுவதும் காட்சி கொடுக்கும். திருவருள் - லீலா விநோதம் எல்லாம் சுருள் சுருளாய் ஓடும் மனத் திரையில்.

நம்பிக்கை வேண்டும். ஒரே நம்பிக்கை - அவனே கதி என்கிற நம்பிக்கைதான் அதற்கு வழி.

இனிப்பாடலின் முழுஉருவம்.

*மைப்படிந்த கண்ணாளும்*
*தானும்கச் சி*
*மயானத்தான் வார்சடையான்*
*என்னின்அல் லால்*
*ஒப்புடையன் அல்லன்,*
*ஒருவன்அல் லன்,*
*ஓர்ஊரன் அல்லன்,ஓர்*
*உவமன்இல் லி,*
*அப்படியும் அந்நிறமும்*
*அவ்வண்ண மும்*
*அவன் அருளே கண்ணாகக்*
*காணின்அல் லால்*
*இப்படியன் இந்நிறத்தன்*
*இவ்வண்ணத் தன்*
*இவன் இறைவன் என்றெழுதிக்*
*காட்டொணா தே.* *(60)*

---

மைப்படிந்த கண்ணாள் - உமை அன்னை. இறை ஒரு பாகமாய் எழுந்தருளிய அன்னபூரணி. மைதீட்டப்பட்ட நீண்ட அழகிய கண்களை உடைய உமையாள். கச்சிமயானம் - காஞ்சீபுரத்தில் உள்ள மயானம் என்னும் கோயில். மயானத்தில் நடக்கிறதை உணர்ந்து பார்த்தால் போதும் ஞானம் வந்துவிடும். தியானமே வந்துவிடும்.

வார் சடை - நீண்ட சடை. என்னின் அல்லால் - எல்லாம் இறைவன் செயலே என்று நினைந்து உருகுவதுதான் பக்தி, ஈடுபாடு, நம்பிக்கை, அதை விட்டுவிட்டு அப்படி இப்படி என்று இலக்கணம் கற்பிப்பது பொருந்தாது. காரணம் அளவுகோலுக்கு உட்பட்டவன் இல்லை இறைவன்.

ஏதோ ஒரு குறிப்பிட்ட வஷ்து என்றால் தானே அதற்கு அளவு, வரம்பு, இலக்கணம். எல்லாம் உண்டு. இனி, கடவுள் தத்துவத்துள் சகலமும் அடக்கம் என்றால் எதை வைத்து அதை அளப்பது? எங்கே இருக்கிறது அளவுகோல்?

இனி, கண்ணுக்குத் தெரியாத நுட்பமான வஷ்து உயிர். அது ஒன்றுதான்.

ஒரே தத்துவந்தான். அது காலதத்துவத்தோடு உருண்டு, புரண்டு, முட்டி, மோதி பல்வேறு நிலைகளைப் பெற்றது. அந்நத்ந நிலைகளுக்கு உரிய உருவத்தை (தேக தத்துவத்தை)ப் பெற்று மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது. கப்பும் கவருமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

உயிர்த் தத்துவத்தின் இந்த நீண்ட நெடும் பயணம் பற்றி வரலாறு எழுதியவர் டார்வின்.

எல்லாம் இயற்கை என்பது அவர் கொள்கை. கடவள் நம்பிக்கை இல்லை அவரிடம்.

ஒருநாள் நண்பர் ஒருவர் டார்வினைப் பார்க்க வந்தார். நண்பரின் கையில் சிறுபுத்தகம். அதை வாங்கிப் படித்தார் டார்வின். கண்ணைப் பற்றிய நுட்பமான விபரங்கள் அதில் இருந்தன.

படித்து முடித்த டார்வின் நண்பரிடம் சொன்னார், ''இதுவரை கடவுள் இல்லை என்று சொல்லி வந்தேன். இனி இல்லவே இல்லை கடவுள் என்று சொல்லப்போகிறேன்'' என்று.

திகைத்துவிட்டார் நண்பர். என்ன சொல்லித் தேற்றினார் டார்வின் நண்பரை.

''கடவுரைத் தவிர வேறு என்ன இருக்கிறது. எல்லாமே கடவுள்தான். அப்படி என்றால் கடவுள் தனியாக எப்படி இருப்பார். நம்முடைய கண்ணும் அவர்தான், கையும் அவர்தான், வயிறும் அவர்தான், நெஞ்சும் அவர்தான். நாமே அவர்தான். கடவள் தானே செயல்படுகிறார் எல்லாவற்றிலும். கண்ணா பார்க்கிறது? கடவுள் தான் பார்க்கிறார்'' என்று சொல்லி முடித்தார் டார்வன்.

உண்மை இப்படி இருந்தும் கடவுளின் தோற்றம் இப்படி, நடை இப்படி, பார்வை இப்படி, பேச்சு இப்படி, நிறம் இப்படி என்று சொல்வதும், அது அப்படி இல்லை இப்படித்தான் என்று எதிர்ப்பதும் வேடிக்கைதான். அதுவும் அவன் திருவிளையாடலேதான்.

*''இப்படியன் இந்நிறத்தன்*
*இவ்வண்ணதி தன்*
*இவன் இறைவன் என்றெழுதிக்*
*காட்டொணா தே''*

இப்படியன் - படி - உருவம். அங்கங்களோடு கூடிய மேனி. நிறம் - நவநவமான சிருஷ்டி. வண்ணம் - பருமன்.

குறிப்பு: கோடான கோடி தத்துவங்கள் அவ்வளவும் (பிரபஞ்சமே) கடவுள்தான். அவரிடமிருந்தே உண்டாகின்றன எல்லாம். உண்டாகும் அவ்வளவையும் ஊட்டி வளர்க்கிறார் உமையாள். கருணையே வடிவான தாய். அம்மனும் சாமியும் சேர்ந்தே இருக்கிறார்கள். அம்மையப்பனாகவே இருக்கிறார்கள்.

தாய்தான் ஆதிமூலம். தாய் வழிபாடுதான் ஆதியில். தாயோடு சேர்ந்தே இருப்பார் பெருமான், சேர்ந்தே காட்சி கொடுப்பார். ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டார்கள்.

''மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான் வார்சடையான்''

★★★★★★★

# என்ன பேதைமை இது

61. கடலில் வாழ்கிற ஆமை ஒன்று கடலைவிட்டு ஊருக்குள் வந்துவிட்டது. ஊரில் உள்ள ஒரு கிணற்றில் இறங்கிவிட்டது.

கிணற்றிலும் ஆமை உண்டுதான். கிணற்றாமை கடலாமையைப் பார்த்துக் கேட்கிறது, ''எவ்வளவு விசாலமாய் இருக்கிறது பார் கிணறு. கடலில் இவ்வளவு விசாலம் உண்டா? உல்லாசமாய் சுற்றிச் சுற்றி வருகிறோமே கிணற்றில், இந்த வசதி கடலில் உண்டா? என்று.

இப்படிக் கிணற்றாமை கேட்டவுடன் விழுந்து விழுந்து சிரிக்கத்தானே செய்யும் கடலாமை.

சரி சரி இந்த ஜென்மத்தில் இந்தக் கிணற்றாமைக்கு விமோசனம் இல்லை என்று.

பக்தி இல்லை. ஆனால் வேண்டாதவற்றை எல்லாம் படித்துவிட்டார்கள். சும்மா இருப்பார்களா அவர்கள். கிணற்று ஆமை போலக் கேள்வி மேல் கேள்வியாகப் போடுவார்கள்.

''இராவணனுக்குத் தலை பத்து. கடவுளுக்கு உண்டா அத்தனை தலை'' இப்படி வரும் கேள்வி. இரணியன் மலைமலையாக வைத்திருந்தான் பொன். கடவுளிடம் உண்டா அப்படிப் பொன். இருந்தால் எலும்பு மாலையும் எருக்கலை மாலையுமா அணிவார் கடவுள் என்றும் கேட்பார்கள்.

அவர்களுக்கு ஏது விமோசனம். தரிசனம் கிடைக்குமா அவர்களுக்கு.

இனிப்பாட்டு,

*கூவல் ஆமை*
*குரைகடல் ஆமையைக்*
*கூவ லோடொக்கு*
*மோகடல் என்றல்போல்*
*பாவ காரிகள்*
*பார்ப்பரி(து) என்பரால்;*
*தேவ தேவன்*
*சிவன்பெருந் தன்மையே (61)*

62. நீதி நூல்களைக் கற்றவன்தான். மனப்பாடமே ஆகி இருக்கிறது அவனிடம் சாஷ்திரங்கள். அப்படியே சமய நூல்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் எல்லாவற்றிலும் நல்ல பயிற்சி. பொருள் தெரிந்து உணர்ந்தே படித்திருக்கிறான்.

அடக்கம் என்பது பற்றிப் பேச்சை எடுத்தால் போதும். அதுபற்றிப் பல நூல்களிலிருந்து பலபல மேற்கோள் காட்டி வகைவகையாக விளக்கம் கொடுப்பான். கேட்கிறவர்கள் சொக்கிவிடுவார்கள்.

இப்படி எத்தனையோ துறைகள் பற்றிப் படித்தவன்தான். ஆனால் பொறுமையே இல்லை அவனிடம். சீறிச் சீறி விழுவான்.

உப்புக் கல் பெறாத விஷயத்துக்குக் கூட திம் திம் என்று குதிப்பான்.

படித்து என்ன பிரயோசனம். செயலோடு ஒட்ட வேண்டும் கல்வி. பேச்சிலும், எழுத்திலும் இருந்தால் மட்டும் போதாது கல்வி. இது சம்பந்தமாகக் குறளாசிரியர் என்ன சொல்கிறார்?

*ஓதி உணர்ந்தும்*
*பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
*பேதையில் பேதையார்*
*இல்*

---

கூவல் - கிணறு. குரைகடல் - ஓ என்று சத்தம் போடும் கடல். பாவகாரிகள் - மனச்சாட்சி இல்லாதவர்கள். பார்ப்ப அரிது என்பர் - உண்மையைப் பார்க்க முடியாது அவர்களால் என்று சொல்வார்கள். சமுதாயமே அப்படித்தான் சொல்லும்.

சரியான பேதையடா நீ. படித்த முட்டாள் என்றால் நீ தான் என்கிறார்.

* * * * * * *

பக்தி இல்லை, உண்மை இல்லை, உணர்ச்சி இல்லை என்றால் தவம், யோகம், அனுஷ்டானும் ஒன்றும் பிரயோசனப்படாது.

ஓட்டைக்குடத்தில் நீரை ஊற்றினால் நிற்குமா? அப்படித்தான் பக்தி இல்லாதவனிடம் நிற்காது அருள்.

கைலாயம் போய் வந்தேன். ஆகாய கங்கையிலேயே குளித்தேன் என்பதெல்லாம் எதற்கு உதவும்? இதோ அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு அது பற்றி.

*கோடி தீர்த்தம்*
*கலந்து குளித்தவை*
*ஆடி னாலும்*
*அரனுக்கன்(பு) இல்லையேல்*
*ஓடும் நீரினை*
*ஓட்டக் குடத்(து)அட்டி*
*மூடி வைத்திட்ட*
*மூர்க்கனோ(டு) ஒக்குமே* (62)

63. மேலே எறிந்த கல் கீழே விழும். மேலே நிற்காது, நாம் செய்த (ஏவிய) செயல் நம்மைத் தேடி நம்மிடமே வரும். நேராகவும் வரும். மறைமுகமாகவும் - அதாவது முகத்தை மறைத்துக் கொண்டும் வரும். எப்படியும் செய்தது வீண் போகாது.

அன்புக்கு அன்பு, பகைக்குப் பகை, வெறுப்புக்கு வெறுப்பு, மரியாதைக்கு மரியாதை, இப்படி எதை எதைப் போடுகிறோமோ அது அது வரும்.

தினை (யைப் போட்டால்) விதைத்தால் தினை வரும். நெல் போட்டால் நெல் வரும். எதை எதை விதைத்தோமோ அது அது வீட்டின் முன் உணங்கும். அதாவது வெயிலில் காயும்.

---

ஆடினாலும் - நீராடினாலும். ஓடும்நீர் - நீரின் இயல்பே நெளிகிறதும், சுழிக்கிறதும், நகர்வதும், ஒழுகுகிறதுமாக ஓடுவதுதான். அட்டி - அடைத்து.

*"தினை விதைத்தார் முன்றில்*
*தினை உணங்கும்:- செந்நெல்*
*தனை விதைத்தார் முன்றி(ல்) அது*
*தானாம்"*

தெய்வ சிந்தனை, கோயில், வழிபாடு, உத்சவம், அடியார் திருக்கூட்டம், தேவார திருவாசகம், தொண்டு, என்றால் மனசுக்கு நிம்மதிதான். அதுபோலவே சமுதாயப்பணி, அன்பு, ஆதரவு, பொறுமை, இன்சொல் என்றால் அதுவும் அப்படித்தான். நிம்மதி தான், ஆனந்தந்தான்.

இதற்கு மாறாக சமுதாயம் வேண்டாம், பண்பாடு வேண்டாம். உண்மை, உணர்ச்சி, கலை, நட்பு ஒன்றுமே வேண்டாம் பணம் ஒன்று தான் வேண்டும் என்று செயல்பட்டால் நிம்மதி எப்படி இருக்கும்.

தன்னலம் வெறி பிடித்து ஆடும். ஆணவம் அதன் குடுமியைப் பிடித்து ஆட்டும். பணத்துக்காக மனிதர்களையே பலி கொடுப்பான் பண வெறியன்.

கொடுமை செய்கிறவன் மனமே - உள்ளுணர்வே அவனை அரி அரி என்று அரித்துத் தின்னும்.

'எப்பொழுது ஒழிவான் இவன்' என்று மற்றவர்கள் இவன் முடிவை எதிர்பார்ப்பார்கள்.

இவன் கதை முடிந்தபின் அவர்கள் எல்லோருமே சேர்ந்து ஒரே குரலில் சொல்லுவார்கள், 'எத்தனை குடும்பங்களைக் கொதிக்கக் கொதிக்க வைத்தான் பாவி! இப்பொழுது சத்தம் இல்லாமல் வெந்து புழுங்குகிறான் தீயில்' என்று நிம்மதி அடைவார்கள்.

★★★★★★★

"இப்படி எல்லாம் ஏற்படுவதற்கு முன்பே வாருங்கள் தில்லைக்கு. ஒப்படையுங்கள் உங்களை நடராஜ மூர்த்தியிடம்" என்று மன்றாடுகிறார் அப்பர் சுவாமிகள்.

*தான தன்னன*
*தானன தன்னன*

*"அரிச்சுற் றவினை*
*யால்அடர்ப் புண்டுநீர்*
*எரிச்சுற் றக்கிடந்*
*தீர்"என்(று) அயலவர்*
*சிரிச்சுற் றுப்பல*
*பேசப் படாமுனம்*
*திருச்சிற் றம்பலம்*
*சென்றடைந்(து) உய்ம்மினே* *(63)*

64. திருச்சிற்றம்பலம் போவது, நடராஜமூர்த்தியை வணங்கி வழிபடுவது எல்லாம் நம்மை அவனிடம் ஒப்படைக்கத்தான. ஆணவம், அறியாமை, பாவம், புண்ணியம் இருந்தால் அதையும் சேர்த்துத்தான், எல்லாம் உனக்கே தஞ்சம் என்று கொடுத்துவிடத்தான்.

அவனிடமிருந்து ஒன்றை தட்டிக் கொண்டு வருவதற்காக இல்லை.

---

அரிச்சு உற்றவினை - நமநம என்று நமட்டும் - குத்திக் குதறும் தீவினைப்பயன். அடர்ப்புண்டு - அதன் பிடியில் சிக்கி. எரி - தீ, மயானத் தீ. சிரிச்சுற்று - ஒழிந்தான் சண்டாளன் என்று. பேசப் படாமுனம் - அவர்கள் பெரு மூச்சு விடுவதற்கு முன்பே.

உய்ம்மின் - நீங்கள் நிம்மதிபெறுங்கள். உங்களுடைய அறியாமை ஆணவம் இவைகளை எல்லாம் பெருமானிடம் காணிக்கையாக ஒப்படைத்துவிட்டு விடுதலை பெறுங்கள். வாருங்கள் திருச்சிற்றம்பலத்துக்கு. நடராஜப் பெருமானிடம்.

குறிப்பு: நெல்லுக்கு அரி என்று பெயர். நெல்லைக் குவித்து அதன்மேல் படுத்தால் உடம்பு எரியும். நெல்லோடு சேர்ந்த கதிர், கதிரோடு சேர்ந்த வைக்கோல் எல்லாம் அப்படித்தான். எரிச்சல் கொடுக்கும், அரிக்கும். அரிப்பைக் கொடுப்பதால் நெல்லுக்கு அரி என்று பெயர். நெல்லுள் இருக்கும் மணிக்கோ அரிசி என்று பெயர். இனி வைக்கோலை வைத்துப் பின்னி பின்னி வடம் - பிரி பண்ணுவார்கள். தீவினைப் பலனும் சுற்றிச் சுற்றி பிரி பணணுகிறது. அரிச்சுற்ற - வினை. என்பது அதுதான்.

"எனக்குப் போட்டியாக இருந்த ஐந்துபேரை அடக்கி ஒடுக்கிவிட்டேன். ஆறாவதாக ஒரு ஆள் தற்பொழுது எழுந்து வருகிறான். அவனை வசக்க வழி தெரியவில்லை இறைவா! அதற்கு வேண்டியதைக் கொடு" இப்படி ஒன்றை வேண்டி, நச்சரித்துப் பெறுவதற்காக வழிபட்டால் அது விபரீதம்.

ஐந்து மாளிகை கட்டிவிட்டேன். ஆறாவது மாளிகை கட்டப்பணம் வேண்டும். அதைக் கொடும் என்று கேட்பதா வழிபாடு, பக்தி? அதுவா தொண்டு? பகல் கொள்ளை அது.

*******

எல்லாம் உன்னுடையவை. உனக்கே காணிக்கை என்று ஒப்படைப்பதல்லவா பக்தி. ஒப்படைத்து விடுதலை அடைவதல்லவா நிம்மதி.

அப்பர் சுவாமிகள் கண்ட அனுபவம் இது. அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து தமிழை எப்படி உல்லாசப்படுத்துகின்றன என்று பாருங்கள்.

*நன்று நோற்கில் என்,*
*பட்டினி யாகில்என்,*
*குன்றம் ஏறி*
*இருந்தவம் செய்யில்என்,*
*சென்று நீரில்க்*
*குளித்துத் திரியில்என்?:-*
*என்றும் ஈசன்என் -*
*பார்க்கன்றி இல்லையே.* (64)

---

நன்று நோற்கில் என் - ஆகார அனுஷ்டான விதிபிசகாமல் எத்தனை நோன்பு (விரதம்) இருந்தாலும் (பக்தி இல்லை என்றால்) பயன் ஒன்றும் இல்லைதான். குன்றம் ஏறி - மலை ஏறி, கைலாச பருவத்துக்கே போய். நீரில் குளித்துத் திரியில்என் - கன்யா குமரி, ராமேஷ்வரம், குற்றாலம், பாபநாசம் என்றெல்லாம் தீர்த்தம் ஆடினால் மட்டும் போதுமா. பக்தி அல்லவா வேண்டும். என்றென்றும், எங்குமாய், எல்லாமாய் இருக்கிறவன் பரம்பொருள் ஒருவனே என்னும் உண்மை இல்லை. உண்மையோடு ஒட்டுகிற உணர்ச்சி இல்லை என்றால் வீண்தான். வெறும் உல்லாசப் பிரயாணந்தான். கோவில், மூர்த்தி, கோபுரம் எல்லாமே அருங்காட்சியகந்தான் பக்தி இல்லை என்றால்.

# காதலே பக்தி மயந்தான்

65. பணத்தைச் சேர்த்து வைப்பதற்கென்றே - அதைக் கட்டிக் காப்பதற்கென்றே பிறந்திருக்கிறேன். அதுதான் பிறவிப்பயன் என்கிற ஆவேசத்தில் ஒவ்வொரு மனிதனும் பணத்தைத் தேடி ஓடுகிறான்.

பலர் சம்பாதிக்கிறார்கள். நன்செய், தோப்பு, மாடமாளிகை, வெள்ளிப் பாத்திரம், தங்கநகை, ரொக்கம் என்றெல்லாம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி எல்லாம் கேட்கிறது பணம். கட்டில் பீரோ, மெத்தை, பசு, வேலைக்காரன் என்று புதிது புதிதாய்க் கொடுக்கிறது பணம்.

*******

இவ்வளவையும் சம்பாதிக்க மனிதன் பட்ட கஷ்டம், நோவு கொஞ்சமல்ல. மனைவி, மக்கள் என்று பாராமல் எல்லோரையும் ஒறுத்து, தன்னையே ஒறுத்து, வருத்தி சக்கையாய்ப் பிழிந்துதான் வந்தது பணம்.

*******

பணமே எல்லாம் என்கிற நினைப்பில் இருக்கிறவன் மனிதனை மதிக்க மாட்டான். மனிதர்களையே பணமாகத்தான் பார்ப்பான். தெய்வத்தையும் பணமாகத்தான் பார்ப்பான்.

நடராஜ மூர்த்தியின் விக்ரகத்தைக் கூட எவ்வளவு தங்கம், எவ்வளவு வெள்ளி இதில் தேறும் என்று தான் பார்ப்பான்.

*******

தன்னைப் போலவே மற்றவர்களையும் பார்க்க வேண்டும். அன்போடு பார்க்க வேண்டும். நட்போடு பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறவர்கள் எளிமையாக இருப்பார்கள். சுத்தமாக இருப்பார்கள். உபயோகம் இல்லாமல் குவிந்து கிடக்கும் பணத்தை - அல்லது வருமானத்தை தேவைப்படுகிறவர் களுக்குக் கொடுக்க வேண்டும் என்று துடிப்பார்கள். கொடுத்துக் கொடுத்து பழகினால் மக்கள்மேல் - சமுதாயத்தின்மேல் ஏன்

ஊர்மேல், நாட்டன்மேல் பிரியம் உண்டாகும். மரியாதை வரும். ஆர்வம் மேலும் மேலும் பெருகும்.

மக்கள் பணமாகத் தெரிவதற்குப் பதில் பணமே மக்களாகத் தெரியும். அப்பொழுது தான் பணத்துக்குத் தெய்வாம்சம் ஏற்படும்.

கொடையில் அப்படி எல்லாம் அற்புத சக்தி இருக்கிறது.

உப்பு, புளி, மிளகு, வற்றல் போன்ற பண்டங்களையோ அவற்றை வாங்குவதற்குரிய பணத்தையோ நம்மை ஒத்த மனிதர்களுக்குக் கொடுப்பதிலேயே இப்படி ஒரு சக்தி இருந்தால் நம்மையே இறைவனிடம் ஒப்படைப்பதில் எவ்வளவு சக்தி இருக்கும். கணக்கிட முடியுமா அதை?

எல்லாம் உன் செயலே என்று நம்முடைய ஆணவம், அறியாமை, பாவ, புண்ணியம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டால் போதும். பக்தி பெருகும். வெள்ளமாகவே பெருகும்.

காதலாகவே கசியும் அந்த பக்தி.

காதல் வந்துவிட்டால் மனம் கனவு காணும். தன்னை மறந்து பகல்க் கனவு கண்டு கொண்டே இருக்கும் மனம்.

கனவில் சில விளையாட்டுகளும் வரும். கூடியே இருந்த நாயகன் காணாமல் போனது போல - வேண்டுமென்றெ மறைந்து ஒளிந்து திரிவது போலத் தோன்றும்.

தாகம் ஏற்படும், விரகதாபமே உண்டாகும். விரகதாபம் ஏறஏற குயில், வண்டு முதலியவற்றிடம் கெஞ்சிக் கூத்தாடி 'அவரிடம் விபரம் சொல்லுங்கள்' என்று முறையிட வைக்கும். அவைகளின் நாடியைத் தொட்டும், காலைத் தொட்டும் கும்பிட்டுக் கூட தூதனுப்ப வைக்கும்.

எல்லாம் காதல் வெறி. பகல்க் கனவில் வருகிற நாடகக் காட்சிகள்.

*******

கடவுள்த் தத்துவத்தில் ஈடுபட்டு, உருகிக் கரைந்து இறைவனுடன் ஒன்றி நிற்கும் பக்தர்தான். தன்னையே இறைவனிடம் ஒப்படைத்த மெய்யடியார்தான். அப்பர் சுவாமிகள்.

கூடவே இருந்த இறைவனைக் காணவில்லையே என்று பதைக்கிறார். நேரம் ஆக ஆகத் தாங்கமுடியவில்லை. அப்படி எல்லாம் படுத்துகிறது பரிவாற்றாமை.

குயிலைப் பார்த்து அதனிடம் முறையிடுவதாகப் பாடல்.

திருப்பழனத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மேல்தான் காதல் - தூதும் அவருக்குத்தான்.

*தானான தானான*
*தன்னான தன்னான*

*சொல்மாலை பயில்கின்ற*
*குயிலினங்காள் சொல்லீரே!*
*பல்மாலை வரிவண்டு*
*பண்மிழற்றும் பழனத்தான்*
*முன்மாலை நகுதிங்கள்*
*முகிழ்விளங்கு முடிச்சென்னி*
*பொன்மாலை மார்பன்என்*
*புதுநலம்உண்(டு) இகழ்வானோ (65)*

---

சொல் மாலை பயில்கின்ற குயில் இனங்கால் - கவியைப்பாடி அனுபவிப்பதுபோல் மதுரம் சொட்டச் சொட்டக் கூவும் குயில்களே. சொல் மாலை - கவி. பன்மாலை - வரிவண்டு. தொடர் வண்டுகள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் கூட இருக்கலாம். ஆனால் அவை பறந்துபோகும்பொழுது ஒரே தொடரில் - ஒரே போக்கில் ஒன்று போலவே ஒரு நேர்கோடாகவே போகும். மலர் பல வைத்து கட்டிய மாலைபோல் இருக்கும் அது. பண்மிழற்றும்பழனத்தான் - வண்டிள் ஓசையில் ஒரு சுதி இருக்கிறது. சுதி பிறழாத ராகமே இருக்கிறது. வண்டுகள் பண்பாடும் திருப்பழனத்தில் கொலுவிருக்கும் நாயகன். முன்மாலை நகுதிங்கள் - சாயங்காலத்தில் - அந்திக் கருக்கில் பிரகாசிக்கும் பிறைச் சந்திரன். முடி - சடை. செஞ்சடையே மார்பில் புரண்டு தங்க மாலை போல் பிரகாசம் தருகிறது. புதுநலம் உண்டு இகழ்வானோ - உறவை மறந்துவிட்டாளா? ஏன் இந்தப் பாரா முகம்? குயில்களே சொல்லுங்கள்.

66. என் சாண் உடம்போடு பிறந்த எல்லா மனிதர்களுக்கும் ஆணவம் உண்டு. தேளுக்கு கொடுக்கு எப்படியோ அப்படித்தான். ஆணவம் மனிதனிடம்.

ஆணவம் மனிதர்களின் பொது உடைமை என்றாலும் பெண்களிடம் அது குறைவு. ஆண்களிடம் உள்ள ஆணவத்தில் நூற்றில் ஒரு பங்கு கூட இருக்காது பெண்களிடம் ஆணவம்.

ஏதோ பெயருக்குத் தான் பெண்களிடம் ஆணவம். அது காரணமாகவே பெண்களின் உள்ளம் இளகிய நிலையிலேயே இருக்கும். கருணை, பொறுமை, உண்மையான அன்பு ஆகிய மூன்றும் சேர்ந்தெடுத்த அவதாரமாகவே இருப்பார்கள் பெண்கள்.

உறுதியான தெளிவான உள்ளம் ஆண்களிடம் இல்லை, பெண்களிடந்தான் உண்டு. மனச்சாட்சி என்றால் அதுதானே! பெண்களின் மனச்சாட்சி எப்பொழுதும் கூர்மையாக இருக்கும். மனச்சாட்சியின் குரல் - தெய்வத்தின் குரலாகவே அவர்கள் செவியில் விழும்.

மெய்யுணர்வு பெற்ற ஞானிகள், 'அது இது' என்று படித்து அதையே கட்டிப் பிடித்து முட்டி மோதி அழுது தொலைக்காதவர்கள் இவர்கள் மட்டும் ஆண்களில் விதிவிலக்கு. இவர்களிடம் மனச்சாட்சி உண்டு. அதன் குரலும் உண்டு.

*******

பெண்பாலார்க்கு மட்டும் ஏன் அப்படி என்று கேட்கத் தோன்றும். காரணம் இதுதான். எப்பொழுதும் தனியாகவே இல்லை பெண்கள். இன்னொன்றும் சேர்ந்தே இருக்கும் பெண்ணுடன்.

குழந்தையாக இருக்கும்பொழுது பெண்ணின் இதயத்தில் ஒரு குழந்தை இருக்கும். அந்த இதயக் குழந்தையையே பொம்மையாக வைத்து உறவாடுவாள் குழந்தைப் பெண்.

பருவம் அடைந்தபின் குழந்தைக்குப் பதில் காதலன் ஒருவன் - கற்பனைக் காதலன் ஒருவன் பெண்ணின் இதயத்தில் அமர்வான். அவனோடு சதா சேர்ந்திருப்பாள். கற்பனைக் காதலனே நாயகனாக ஆவான். பெற்ற தாய், தந்தை, அண்ணன்,

அக்கா, தங்கை, தம்பி, தோழி, வீடு, பொம்மை, கிளி எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவனோடு போவாள். அவனோடேயே இருப்பாள்.

அப்படியே குழந்தைக்குத் தாயாவாள். கணவனையே குழந்தையாக ஏற்று வயிற்றுள் வைத்துச் சுமப்பாள். கணவனையே குழந்தையாகப் பெற்றெடுத்துக் கொஞ்சுவாள்.

கணவன் குழந்தை என்று சேர்ந்தே வாழ்வாள் பெண். வாழ்நாள் முழுவதும் சேர்ந்தே இருப்பாள். தனியாக ஒருபோதும் இல்லை பெண். அதனால் 'நான்' என்னும் ஆணவத்துக்கும் அங்கு அதிகாரம் இல்லை.

கணவன், குழந்தை, குடும்பம், குடும்பநலம் இவற்றுக்கு தன்னையே அர்ப்பணம் செய்து விடுகிறாள் பெண். அப்படி அர்ப்பணிப்பதில்தான், தியாகம் பண்ணுவதில் தான் பெண்மை இருக்கிறது. தாய்மையே இருக்கிறது.

அதனால் ஆணவம் படத்தைக் கீழே போட்டுவிடுகிறது பெண்ணிடம்.

*******

மாசறு காட்சி பெற்ற ஞானிகள் கூட மெய்யடியார் கூட தங்களைப் பெண்ணாகவே பாவிக்கிறார்கள். தங்கள் உள்ளத்தில் ஊறும் பக்தியானது வெள்ளப் பெருக்கெடுத்துப் பொங்க வேண்டும் என்றால் - அதை அப்படியே இறைவனுடைய திருப்பாதத்தில் கொட்ட வேண்டுமென்றால் அதற்கு பெண்ணின் ஒருமை உணர்ச்சிதான் ஏற்றது. பெண்ணின் காதல் நோக்குத்தான் ஏற்றவழி என்று அவர்கள் காண்கிறார்கள். பெண்ணாகவே பாவனை கொண்டு பக்திக்கு உருவம் கொடுக்கிறார்கள் ஞானிகள்.

*******

திருக்கழுக்குன்றத்தில் உத்சவம். ராஜதோரணையோடு வீதி உலா வருகிறார் இறைவன். அலங்கரித்த தேரில் காளை வாகனத்தில் அமர்ந்தபடியே ஒய்யாரமாய் வருகிறார் பெருமான்.

பக்தர் பார்க்கிறார். உள்ளம் உருகுகிறது அவருக்கு. ''ஏன் இவ்வளவு அவசரம். வீட்டு முற்றத்தில் சாவதானமாக நின்று

போகக் கூடாதா பெருமான்? அவசரம் அவசரமாக நகர்ந்தால் எப்படி?'' என்று கரைகிறார். பெண்ணாக மாறியே கரைகிறார்.

உருக்கத்தை அப்படியே கையில் எடுத்தக் காட்டுகிறது தமிழ் - கவி.

*பெற்றத்தி லேவரு*
*கோலமும் தானும் என்*
*பெண்மைஉய் ய*
*முற்றத்தி லேவந்து*
*முன்னிற்கு மோ?முது*
*வானவர் தம்*
*சுற்றத்தி லே,கதிர்*
*வட்டத்தி லே,தொல்லை*
*நான்மறை யின்*
*அற்றத்தி லே,கழுக்*
*குன்றத்தி லேநிற்கும்*
*அற்புத னே!*

இனி, அப்பர் சுவாமிகள் திருவாரூர் வந்தார், கோவிலுக்குப் போனார். தரிசனம் கொடுத்தார் பெருமாள். சுவாமியைப் பார்க்கப் பார்க்க - உச்சியிலிரந்து திருப்பாதம் வரை அணு அணுவாய்ப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. பார்த்துக் கொண்டே இருந்தார். நேரம் போவதே தெரியவில்லை. தன்னையே மறந்துவிட்டார். அப்படியே இறைவனிடம் தன்னை ஒப்படைத்துவிட்டார்.

எங்கு கிடைக்கும் இப்படி ஒரு பரவச நிலை. யாருக்குக் கிடைக்கும்.

---

பெற்றம் - காளை. உய்ய - வாழ. முதுவானவர் சுற்றம் - அடியார் திருக்கூட்டம். கதிர்வட்டம் - நட்சத்திர மண்டலங்கள். நான் மறையின் அற்றம் - கவி. நாலாவிதமான பாடல். பண்ணும் பாவமும் நிறைந்த பாடல்.

இறைவன் எப்படி அற்புதமோ, அப்படியே கவியும். கவியைப் போலவே பெண்ணும்.

காதலே பேசுகிறது கவியில்.

அப்பர் பெருமான் கரைந்துவிடுகிறார். பக்தி பேசுகிறது. காதலாய்க் கசிந்து பேசுகிறது பக்தி.

*தான தானன*
*தானன தன்*

*முன்னம் அவனுடைய*
*நாமம்கேட் டாள்,*
*மூர்த்தி அவன் இருக்கும்*
*வண்ணம்கேட் டாள்,*
*பின்னை அவனுடைய*
*ஆரூர்கேட் டாள்,*
*பெம்மான் அவனுக்கே*
*பிச்சிஆ னாள்,*
*அன்னையையும் அத்தனையும்*
*அன்றேநீத் தாள்,*
*அகன்றாள் அகலிடத்தார்*
*ஆசாரத் தை,*
*தன்னை மறந்தாள்தன்*
*நாமம்கெட் டாள்*
*தலைப்பட்டாள் நங்கை*
*தலைவன்தா ளே* *(66)*

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் - ஏற்கனவே பெருமானுடைய பெயர், பட்டம், கொலு, தோரணை இவைகளை பிறர் சொல்லக் கேட்டிருக்கிறாள். கேட்கக் கேட்க ஆசை பெருகிவிட்டது பெண்ணுக்கு. மூர்த்தி - இறைவனுடைய திருமேனி. இருக்கும் வண்ணம் - எடுப்பான தோற்றம். மிடுக்கான பார்வை. பிச்சி ஆனாள் - ஆசைப் பெருக்கில் காதலுக்கே ஆளாகிவிட்டாள். காதல் பைத்தியமே வந்துவிட்டது பெண்ணுக்கு. அன்னை - தாய். அத்தன் - தந்தை. நீத்தாள் - தந்தை, தாய், பழக்கவழக்கம் எல்லாவற்றையும் விட்டுவிட்டாள். பெருமானை நம்பி விரும்பி வந்துவிட்டாள். அவனுடைய விருப்பத்துக்கு உகந்தபடியே பழக்கவழக்கத்தை - ஆசாரத்தை ஏற்றுக் கொண்டாள். தன் நாமம் கெட்டாள் - இன்னார் மகள் இன்னார் என்கிற விலாசமே இல்லை. எல்லாம் இறைவன் மயம் என்கிற ஒரே நிலைதான்.

குறிப்பு: பெண்ணின் மனப் பக்குவம் தன்னிடம் வர வேண்டும் என்பதற்காக ராமகிருஷ்ண பரமஹம்சர் சேலை கட்டினார். வளையல் அணிந்தார். ரவிக்கை கூடப் போட்டுக் கொண்டார். பெண்ணின் சாயல் ஒன்றிரண்டு வந்தன. அவ்வளவுதான். பெண்மையோ, தாய்மையோ வரவில்லை. பெண் போல வேஷம் போட்டால் மாத்திரம் புண்ணியம் இல்லை பெண்ணின் இதயத்தோடு ஒட்ட வேண்டும். கூடு விட்டுக் கூடு பாய்தல் என்பது அதுதான். அப்பர் சுவாமிகள் அப்படி ஒட்டி நிற்கிறார். அந்த நிலையில் நின்று பேசுகிறது கவி. பிரிந்துபோன பெண்ணின் பிரிவாற்றாமையில் வருந்தும் தாயாக தாயின் உள்ளத்தோடேயே ஒட்டிவிடுகிறது அப்பர் சுவாமிகளின் உள்ளம் - திருவுள்ளம்.

தமிழும் தமிழ்ப் பண்பும் ஒட்டி நின்று பக்திக்குக் காதல் உருவம் கொடுக்கின்றன.

வீட்டையும் வீட்டில் உள்ள பொருள்களையும் பெற்றோர் உற்றார்களையும் உயிருக்குயிராக மதித்தாள் பெண். அன்போடும் ஆர்வத்தோடும் உறவாடினாள். அந்த உறவு வளர வளரப் பெண்ணும் வளர்ந்தாள். உடலை விட்டு உயிரைப் பிரிக்க முடியுமா? முடியாது. சேர்ந்து தான் இருக்க வேண்டும். அப்படிச் சேர்ந்தே இருந்தாள் பெண்.

இப்படி இருந்த பெண் - குழந்தை நிலைமாறி பருவம் அடைந்தாள். மங்கை ஆனாள். அழகிய நங்கையே ஆனாள். வேறென்ன? விடுதலை பெற்றாள். சுதந்திரமான ஆளாகிவிட்டாள் பெண்.

இதயத்தில் - காதல் வளர்ந்தது. காதலனே வந்தமர்ந்தான். அவனே நாயகனாக வந்தான். அவ்வளவுதான் எல்லாவற்றையும் போட்டுவிட்டு அவன் பின்னே போய்விட்டாள். அவனே தஞ்சம் என்று போய் விட்டாள்.

உற்றார், பெற்றோர்மேல் வருத்தம் இல்லை, பகை இல்லை அன்புதான், மரியாதைதான். அன்பும் மரியாதையும் முன்னிலும் இப்பொழுது அதிகம் தான். ஆனாலும் அவன் தான் நாயகன். அவனுக்கே உடல் பொருள் ஆவி எல்லாம். எதை விட வேண்டும். எதைத் தொட வேண்டும் என்பதை நங்கை காட்டுகிறாள். ஞானிகளுக்கே காட்டுகிறாள். அதுதான் பக்தி. அதுதான் முக்தி.

★★★★★★★

67. இறைவன் நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார். விடாமல் தொடர்ச்சியாக ஆடிக் கொண்டிருக்கிறார். எங்கும் ஆடிக் கொண்டிருக்கிறார். எப்பொழுதும் ஆடிக் கொண்டிருக்கிறார். அதனால் இறைவனுக்கு நடராஜர் என்று பெயர். கூத்தன் என்றே பெயர்.

பக்தர்கள், ஞானிகள், பெரியவர்கள் எல்லோரும் மேலே கண்டபடி தான் சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்வது உண்மைதான்.

அண்டபிண்ட சராசரம் எல்லாம் ஆடுகிறது. எல்லாம் ஈசன்தான். அப்படியானால் ஈசன் ஆடுகிறான் என்று சொல்வது நேரான சொல்தான்.

நாம் ஆடுகிறோம். உடம்பு ஆடுகிறது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை உடம்பில் நூற்றுக்கணக்கான - ஏன் ஆயிரக்கணக்கான தத்துவங்கள். அத்தனையும் துள்ளிக் குதித்து ஆடுகின்றன. உணர்ச்சியில் தான் எத்தனை ஆட்டம்.

சமுத்திரம் ஆடுகிறது. அருவி குதித்துக் கும்மாளம் போட்டு ஆடுகிறது. உலகம் ஆடுகிறது. சூரியன், நட்சத்திரம், அண்டம், அகண்டம் எல்லாம் திம் திம் என்று கூத்தாடுகின்றன.

அணுவும் ஆடுகிறது. அணுவுக்குள் அணுவும், பரமாணுவும் ஆடுகிறது.

நாட்டு வைத்தியர் கையைப் பிடித்துப் பார்ப்பார். நாடித் துடிப்பைக் கணக்குப் போட்டுப் பார்க்கத்தான்.

இங்கிலீஷ் வைத்தியரிடம் போனால் ஸ்டெதஸ்கோப்பை வைத்து அதைக் காதில் சொருகிக் கொள்கிறார். இதயத் துடிப்பைக் கணக்கிட்டுப் பார்க்கத்தான்.

உடம்பு முழுவதும் அணுவுக்கு அணு துடிப்பு இருக்கிறத. அண்டம், பேரண்டம் முழுவதும் அந்தத் துடிப்புத்தான். அதுதான் நடனம். ஆனந்த நடனம்.

இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம். அதுதான் திருவருள். கோடான கோடி வடிவங்களில் தோன்றுவதும், நிற்பதும், மறைவதுமாக ஆடிக் கொண்டே இருக்கிறது திருவருள். அதுதான் சிருஷ்டி. நடனம்.

திருமூலர் சொல்கிறார்.

"சக்தி மயமான இறைவன் ஆடிக் கொண்டே இருக்கிறான். பரமாணுவிலிருந்து பேரண்டம் முடிய ஒவ்வொன்றும் ஆடுகின்றன. எல்லாம் இறைவனுடைய திருநடனத்துக்கு அரங்குதான்" என்று

*இடம் கொண்ட சக்தியும்*
*எந்தை பிரானும்*
*நடம்கொண்டு நின்றமை*
*நானும் அறிந்தேன்*
*படம்கொண்டு நின்றஇப்*
*பல்லுயிர்க்(கு) எல்லாம்*
*அடங்கலும் தானாய்*
*ஆடுகின் றானே*

(இடம் கொண்ட சக்தி - இறைவனின் ஒரு பாகமாய் இடம்பிடித்திருக்கிறாள் உமையம்மை. சகல சக்திகளுக்கும் ஆதாரம் உமையம்மை. நடம் - நடனம். படம் கொண்டு நின்ற இப்பல் உயிர் - மனிதன், விலங்கு, பறவை, பாம்பு, பல்லி, புழுபூச்சி, மரம், செடி எல்லாமே இறைவனின் ஆனந்தக் கனவில் வெளிப்படும் தோற்றம்தான். படம் தான். வேஷந்தான். அடங்கலும் - அண்டம், பேரண்டம் உள்ளிட்ட எல்லாம் அப்படி அப்படியே)

அந்த நடனம் இல்லாதது எது? ஒன்றும் இல்லை, எல்லாம் நடனந்தான். எங்கும் நடனந்தான்.

இந்த உண்மையை எப்படித் தெளிவுபடுத்துகிறார் திருமூலர்.

*அண்டம் எழுகோடி,*
*பிண்டம் எழுகோடி,*
*தெண்திரை சூழ்ந்த*
*திசைகள் எழுகோடி,*
*எண்திசை சூழ்ந்த*
*இரங்கம் எழுகோடி*
*அண்டன் நடம்செயும்*
*ஆலயம் தானே*

தெண்திரை சூழ்ந்த - தெளிந்த (உல்லாசமாய்த் தாவிக் குதித்து விளையாடும்) அலையை உடைய சமுத்திரம் - சமுத்திரத்தையே சுற்றி வளைத்து விரிந்து பரந்தோடும் திசை. எண்திசை - தெற்கு, வடக்கு, தென்மேற்கு, வடகிழக்கு என்று வருகிற கோணம் எட்டு. இரங்கம் - நட்சத்திரம். அண்டன் - இறைவன். நடம் செயும் ஆலயம் - ஆடலரங்கு.

*******

அருள் என்றும், நீதி என்றும் இறைவனைச் சொல்வார்கள். திருவடி என்றும், நடனம் என்றும் சொல்கிறதெல்லாம் அருள்பழுத்த (அந்த) நீதியைத்தான்.

இனி அப்பர் சுவாமிகளை ஆனந்த நடனம் ஆடும் இறைவனின் முகமும் கண்ணும் எப்படி எல்லாம் குழைத்து பிசைகின்றன என்று பார்க்கலாம்.

*தெரித்த கணையால்*
*திரிபுரம் மூன்றும் செந்-*
*தீயில்மூழ் க*
*எரித்த இறைவன்,*
*இமையவர் கோமான்,*
*இணையடி கள்*
*தரித்த மனத்தவர்*
*வாழ்கின்ற தில்லைச்சிற்-*
*றம்பலத் தே*
*சிரித்த முகம்கண்ட*
*கண்கொண்டு மற்றினிக்*
*காண்பதென் னே* (67)

68. பக்தி இருந்தால் போதும். பாட்டுக் குதித்தோடி வரும். மகாத்மா காந்தி பரம பக்தர். பக்தியின் அவதாரம் அவர். ஆனால் பாட்டு வரவில்லை. அவரிடமிருந்து. ஆனாலும் பக்தி என்றால் காந்தி தான். காந்தி என்றால் பக்திதான்.

பாட்டு வரவில்லை காந்திக்கு என்பது உண்மைதான். அதனால் பக்தி வீண்போகிவிடுமோ? நல்ல பாடலைக் கேட்டால் போதும். அதுவும் பக்தி சம்பந்தமான பாடல்கள் காதில் விழுந்தால் போதும். அப்படியே ஆட்டம் வந்துவிடும் காந்திக்கு. தாளம் போட்டே ஆடுவார் காந்தி மகான்.

பாடலை வெறும் பாடலாகப் பார்க்கவில்லை காந்தி. பாடலை ராமனாகவே பார்த்தார். கருணையே வடிவான நீதியாக - பரம்பொருளாகவே பார்த்தார் காந்தி மகான்.

அப்படிப் பார்க்கிறவர் அப்படித்தானே அனுபவிப்பார். காந்தி மகான் பாடலை அனுபவிக்கிற அழகை மக்கள் பார்ப்பார்கள். ஆயிரக்கணக்கில் பல ஆயிரம் பேர் கூடி திரண்டு நின்று பார்ப்பார்கள். பார்க்கிறவர்கள் ஆடவர் - பெண்டிர் எல்லோருமே உருகிவிடுவார்கள். பாடலோடு பாடலாய் உருண்டு புரள்வார்கள். தாளம் போடுவார்கள். ஆடவே செய்வார்கள்.

ஆனால் அங்கு ஆரவாரம் இருக்காது, மௌனமாகவே இருக்கும். தெய்வீக மௌனந்தான். மௌனமே தவம் செய்து பெற்ற மௌனந்தான் அங்கு நிறைந்திருக்கும்.

பக்திக்கும் பாட்டுக்கும் அப்படி இருக்கிறது உறவு.

★★★★★★★

---

தெரித்த கணையால் - தேர்ந்தெடுத்த அம்பால். புன்முறுவல் என்னும் தீக்கணையால்தானே. இணை அடிகள் - திருவடிகள் இரண்டையும். தரித்தமனத்தவர் - பார்த்துப் பார்த்து, உணர்ந்து உணர்ந்து பரவசப்படும் ஞானிகள்; சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிவநேசச் செல்வர்கள். வாழ்தில்லை - வழிபாடு செய்து வாழ்கின்ற தில்லை மாநகரில். சிற்றம்பலவன் - நடனமாடும் பெருமானின் சிரித்த முகம் - தன்னை மறந்து ஆடுகிற ஆட்டத்திலும் அடியார்களை வருக வருக என்று வரவேற்க ஆனந்தமாய்ச் சிரிக்கிறானே பெருமான் - அடடா அந்தச் சிரிப்பை எப்படி மறக்க முடியும். மறந்து வேறொன்றைப் பார்க்குமா கண்!

மகாத்மா 'காந்தி போன்ற ஞானிகள் எப்பொழுதும் கடவுள் தத்துவத்துடன் ஒன்றி இருப்பவர்கள். இறைவனுடைய திருவருளைக் கண்டு கண்டு ஆனந்தத்தில் திளைக்கிறவர்கள்.

ஆனால் சாதாரண மக்கள் அப்படி இல்லை. பிழைப்புக்கு வழி பற்றிய யோசனைதான் அவர்களுக்கு. ஆனாலும் அவர்களிடமும் பக்தி உண்டு. அவர்களுடைய உள்ளுணர் வோடும் கலந்து மருவி நிறைந்திருக்கிறது பக்தி.

கோவிலுக்குப் போவார்கள். மூர்த்தியை வழிபடுவார்கள். மூர்த்தியிடம் பேசுவார்கள். தங்களுடைய அன்பையும், ஆர்வத்தையும் ஆனந்தக் கண்ணீராய்க் கொட்டுவார்கள். அவ்வளவுதான் ஒரு புத்துணர்ச்சி பிறக்கும் அவர்களிடம். எழுச்சி பெறுவார்கள். உத்சாகமாக இருப்பார்கள். நிம்மதி இருக்கும் அவர்களிடம்.

அவர்கள் பக்தி எளிமையானது இனிமையானது. அந்தப் பக்தியைப் பார்க்கிறார் அப்பர் பெருமான்.

சிற்றம்பலத்தில் நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தைப் பார்த்து உருகுகிறார். அப்பர் சுவாமிகள். நடராஜப் பெருமானுடைய தூக்கிய திருவடியைக் கண்டு கரைந்து கண்ணீர் உகுக்கிறார்.

அந்த நிலையில் அந்தச் சாதாரண மக்களையும் அவர்கள் பக்தியையும் பார்க்கிறார். ஆனந்தக் கண்ணீர் வழியாகவே பார்க்கிறார்.

பார்வையில் என்ன தெரிகிறது. நடராஜப் பெருமானிடமே சொல்கிறார்.

*பக்தனாய்ப் பாடமாட் டேன்*
*பரமனே! பரமயோ கீ!*
*எத்தினால்ப் பக்திசெய் கேன்*
*என்னைநீ இகழவேண் டாம்;*
*முத்தனே! முதல்வா!தில் லை*
*அம்பலத்(து) ஆடுகின் ற*
*அத்தனே! ஆடல்காண் பான்*
*அடியனேன் வந்தவா றே* 68)

69. பத்துப் பன்னிரெண்டு புரோகிதர்கள். அரசர் அவர்களுக்கு வகை வகையான பதார்த்தங்களுடன் சாப்பாடு போட்டார்.

வயிறு வெடித்துவிடும் அளவுக்கு நிறையவே சாப்பிட்டார்கள். அதற்குமேல் ஒன்றையும் சாப்பிட முடியாத அளவுக்குச் சாப்பிட்டார்கள் புரோகிதர்கள்.

சாப்பாட்டை முடித்த புரோகிதர்கள் எழுந்திருக்கும் நேரம் கல்கண்டு சாதம் வந்தது.

வயிற்றில் இடம் இல்லை, வேண்டாம் என்றார்கள் புரோகிதர்கள். சிறிது சாப்பிட்டுப் பாருங்கள் ருசியாக இருக்கும் என்றார் அரசர். சிறிதென்ன, வந்தது முழுவதையும் சாப்பிட்டு விட்டார்கள் புரோகிதர்கள்.

---

பக்தர்கள் - உண்மையான பக்தர்கள் கடவுளோடு நேரடியாக ஒட்டுவார்கள். தத்துவப் பயிற்சி, சாஷ்திரப் பயிற்சி பற்றி எல்லாம் கவலை இல்லை அவர்களுக்கு. பாடல் வராவிட்டாலும் கவலைப்பட மாட்டார்கள். 'எனக்கு ஒன்றும் தெரியாது. உன்னைத்தான் தெரியும். நீதான் கதி' என்று ஒட்டி விடுவார்கள். ''பக்தனாய்ப் பாடமாட்டேன் பரனே''.

எத்தினால் - வேறு எதன் மூலம். பக்தி செய்கேன் - உனக்கு அடியவன் ஆவேன்நான். ஆனாலும் என்னைக் கைவிடக் கூடாது. ஆடல் காண்பான் - நடனத்தைப் பார்க்க வேண்டும் - பார்த்தே ஆகவேண்டும் என்கிற ஆசை காரணமாக. அடியனேன் வந்தவாறு - இந்த அடிமை உன் முன்வந்து நிற்கிறேன். என்னை நீ தடுக்கக் கூடாது.

''தொண்டையைத் தாண்டி மூக்கு வரை வந்துவிட்டது சாப்பாடு. இனி, தண்ணீர் கூட உள்ளே இறங்காது என்றார்கள் புரோகிதர்கள். அவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே வெள்ளிப் பாத்திரத்தில் தேனில் ஊறப்போட்ட உயர்ந்த வகைப் பலாச்சுளை வந்தது.

முடியவே முடியாது என்றார்கள் புரோகிதர்கள். அரசர் வற்புறுத்தி ஆளுக்கு ஒரு சுளையாவது சாப்பிட்டுப் பார்க்க வேண்டும்'' என்றார் அரசர். ''பேஷ் பேஷ், அமிர்தம், தேவாமிர்தம் என்றால் இதுதான்'' என்று எல்லாச் சுளைகளையும் தின்றுவிட்டார்கள் புரோகிதர்கள்.

உண்மையாகவே திக்கு முக்காடி விட்டார்கள் புரோகிதர்கள். மூச்சுவிடவே சிரமப்பட்டார்கள். எழுந்திருக்க முடியவில்லை. இடது கையைத் தரையில் ஊன்றி உன்ன ஆரம்பித்தார்கள். அந்த நேரம் பார்த்து இரண்டு பெரிய வெள்ளிப் பானை வந்தன.

எது வந்தாலும் தேவை இல்லை என்ற எண்ணத்தில் எழுந்திருக்க முயற்சிக்கிறார்கள் புரோகிதர்கள்.

அப்பொழுது பணியாளர்களிடம் கேட்டார் அரசர். ''இந்தப் பானையில் என்ன இருக்கிறது'' என்று.

பால்ப் பாயசம் என்றார்கள் பணியாளர்கள்.

அப்படியே உட்கார்ந்து விட்டார்கள் புரோகிதர்கள்! பாயசம் அவ்வளவும் காலி!!

புரோகிதர்களிடம் அரசர் கேட்டார். ''வயிற்றில் இடமே இல்லை. மூக்கு வரை முட்டி நிற்கிறது உணவு. காற்று - மூச்சுக் காற்றுக்கூட திணறுகிறது. இழுக்கவும் முடியவில்லை விடவும் முடியவில்லை மூச்சை என்று சொன்னீர்கள். அப்படி இருக்க பால்ப் பாயசத்துக்கு எப்படி இடம் கிடைத்தது'' என்று.

புரோகிதர்களில் வாத்தியார் என்று ஒருவர் உண்டு. அவர்தான் மற்றவர்களை வழி நடத்திச் செல்லும் சட்டாம்பிள்ளை.

வாத்தியார் சொன்னார், ''மகாராஜா!! ஒரு மண்டபத்தில் நடனம் ஆடுகிறாள் ஒரு பெண். அற்புதமாய் ஆடுகிறாள்.

தேவலோகத்து நடன மணி என்று சொல்லும்படி இருக்கிறாள் நடிகை. ஆயிரம் பேர்தான் இருக்கலாம் மண்டபத்தில், ஆனால் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கும் மேலே முண்டியடித்து நெருக்கித் தள்ளிப் புகுந்துவிட்டார்கள். ஈ, கொசு கூட உள்ளே போக முடியாது. அப்படி ஒரு நெரிசல். அப்பொழுது மகாராஜா அங்கு வருகிறீர்கள். கூட்டம் வழி விட்டு இடம் கொடுக்கத்தானே செய்யும் மகாராஜாவுக்கு'' இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மகாராஜா சிரித்துவிட்டார். புரோகிதர்களும் சிரித்து விட்டார்கள். அரச பரிவாரமும் விழுந்து விழுந்து சிரித்தது.

★★★★★★★

பக்தருடைய உள்ளத்தில் பொய் இருக்காது. கவலை இருக்காது. ஆணவம் இருக்காது. அழுக்கில்லாமல் சுத்தமாகப் பளிங்குபோல் இருக்கும் பக்தரின் உள்ளம். ஆனாலும் நிறைந்தே இருக்கும். அநாவசியமான ஒன்றும் உள்ளே போக முடியாது. அப்படி நிறைந்திருக்கும் பக்தர் மனம்.

அதில் கோவில் இருக்கும், கோபுரம் இருக்கும். கொடி மரம், நந்தி, உள் மண்டபம், வெளி மண்டபம் அத்தனையும் இருக்கும். மூர்த்தியே எழுந்தருளிக் கொலுவிருப்பார் பக்தரின் உள்ளத்தில். மூர்த்தி வழியாகக் பெருமானே உள்ளத்துள் வந்து நிறைந்து நிற்பார்.

சடைமுடி, அதில் ஊமத்தம்பூ, நெற்றிக் கண், உடுக்கை, அதை அடித்துத் தாண்டவமாடும் கை, உமையம்மை இப்படி நிறைந்து நிற்பார் பெருமான். பிறகு எப்படி உள்ளே இடம் இருக்கும்.

ஆனாலும் பெருமானுடைய ஆனந்தத் தாண்டவத்தை நினைத்தால் போதும். அப்படியே நடனமும், ஆடிய திருவடியும் உள்ளே வந்துவிடும். அத்தனையும் இடம் கொடுத்து உபசரிக்கும்.

அப்பர் சுவாமிகள் பெற்ற பெறும் பேறு இப்படி,

*முடிகொண்ட மத்தமும்,*
*முக்கண்ணும், நோக்கும்,*
*முறுவலிப் பும்,*
*துடிகொண்ட கையும்,*
*துதைந்தவெண் ணீறும்,*
*சுரிகுழ லாள்*
*படிகொண்ட பாகமும்,*
*பாய்புலித் தோலும்*
*படிந்தநெஞ் சில்க்*
*குடிகொண்ட வாதில்லை*
*அம்பலக் கூத்தன்*
*குரைகழ லே!* *(69)*

*70.* இனி, கடவுள் தத்துவம் இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்தது. அதுவே அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் என்று கோடி கோடியாய்த் தோன்றுகின்றது. அப்படியும் இப்படியுமாய் ஆடுகின்றன தோற்றம். அப்படியே மறைந்தும் விடுகின்றன தோற்றம்.

எல்லாம் கடவுள் தத்துவத்தில் தான். அலையும் குமிழும் நீரில் தோன்றி நீரிலேயே கலந்துவிடுவது போலத்தான்.

★★★★★★★

கடலில் அலை தோன்றுகின்றன. உருண்டு புரள்கின்றன. மேலே மேலே எவ்வுகின்றன. கரையைத் தாக்கித் தகர்த்துவிட ஓடி வருகின்றன. மோதுகின்றன. முடிவில் கடலோடு கடலாய் ஆகிவிடுகின்றன அலைகள்.

குமிழிகளும் அப்படித்தான். மளமள என்று தோன்றுகின்றன. சிமிட்டுகின்றன. போய் விடுகின்றன. நீரோடு நீராய்ப் போய்விடுகின்றன குமிழிகள்.

---

முடி - தலைமுடி. மத்தம் - ஊமத்தம்பூ. முறுவல் - மகிழ்ச்சியைக் காட்டும் அடக்கமான சிரிப்பு. துடி - உடுக்கை. சுரி சுழலாள். உமை. சுருண்டு சுருண்டு நீண்ட கூந்தல். சுரிகுழல். படிகொண்டபாகம் - அளந்து எடுத்துக் கொண்ட. பாகம் - சரிபாதி. குரைகழல் - சப்திக்கும் தண்டை கட்டிய திருவடி.

தோன்றுகின்றன. நிற்கின்றன. மறைகின்றன. ஒன்றா இரண்டா? அத்தனையுந்தான். எங்குந்தான். எப்பொழுதுந்தான். இவ்வளவும் நடக்கின்றன - நடந்துக் கொண்டே இருக்கின்றன. சொல்லி வைத்ததுபோல தொடர்ந்து நடக்கின்றன. அதுவும் ஒரே வஷ்துவில் என்றால் அற்புதம் இல்லையா அது?

அற்புதம் இருந்தால்போதுமா? அதை அனுபவிக்க நாதி வேண்டாமா? அதற்காகவே படைத்தார் மனிதனைக் கடவுள். யானை, பூனை, மான், மயில், சூரியன், சந்திரன், காடு, மலை, கடல் என்று படைத்தார் கடவுள். உண்மையை உணர்ந்து அனுபவிக்கவோ அனுபவத்தை வெளிப்படுத்தவோ முடியவில்லை அவற்றால்.

அனுபவிக்கவும், ஆனந்தத்தில் திளைக்கவும், ஆனந்தத்தை வெளிப்படுத்தவும் ஒன்று வேண்டுமே என்னும் ஆர்வத்தில் மனிதனை உண்டாக்கினார் கடவுள். கருங்கல்லைச் சிற்பம் ஆக்கியது போலவே உண்டாக்கிவிட்டார் மனிதனைக் கடவுள்.

சும்மா சொல்லக் கூடாது மனிதனை. கடவுள் நினைத்ததை நிறைவேற்றிவிட்டான் மனிதன். தன்னை வைத்தே கடவுளை கண்டுவிட்டான். ''என்னிடம் மனம் இருக்கிறது. அப்படியே இறைவனிடமும் இருக்கிறது உள்ளம் - அதாவது பேருள்ளம்''.

''என் மனம் கனவு காண்கிறது. கனவில் என்னென்னவோ வருகிறது, போகிறது. அப்படியே இறைவனுடைய பேருள்ளமும் கனவு காண்கிறது. ஆனந்தக் கனவே காண்கிறது. அதில் சூரியன் வருகிறான். பூமி வருகிறது. நட்சத்திரங்கள் என்ன, காற்றென்ன, நெருப்பென்ன, ஆகாயம் என்ன, மலை என்ன, கடலென்ன, திமிங்கலம் என்ன, யானை என்ன, எறும்பென்ன, பூ என்ன எல்லாம் வருகின்றன''

என்னிடம் வந்த கனவு கலைந்து போவதுபோல இறைவனிடமும் வருகிறது கனவு. போகிறது கனவு. கலைந்தே போய்விடுகிறது கனவு.

''இறைவனுடைய பேருள்ளமும் ஆனந்தக் கனவுமே அண்ட பிண்ட சராசரம்'' இப்படிக் கண்டு கொண்டான் மனிதன்.

★★★★★★★

சிருஷ்டிதான் இறைவனுக்குத் திருமேனி என்றும், அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாம் ஒரு நியதிப்படியே நடக்கின்றதென்றும், அந்த நியதியே நீதி என்றும் அருள் என்றும் திருவருள் என்றும் கண்டார்கள் முன்னோர்.

திருவருளையே சிருஷ்டியையே திருவடி என்று கொண்டார்கள். பேரண்டம் முழுதும் ஒரு இயக்கம், ஓட்டம் இருக்கிறது. அதை ஆட்டம் அதாவது நடனம் என்றே தெளிந்தார்கள்.

நியதியே நடனம் என்றால் நடனம் ஆடும் திருவடி தானே சிருஷ்டி, அதாவது திருவருள்.

இப்படியும் பார்த்து அனுபவித்தார்கள் முன்னோர்.

★★★★★★★

ஆற்று நீரில் ஒர மரக்கட்டை ஓடுகிறது, சுழல்கிறது, அசைந்து நடக்கிறது. கரையில் உள்ள மருத மரத்து நிழலில் ஒதுங்குகிறது. நிற்கிறது, நடக்கிறது, போகிறது, போய்க் கொண்டே இருக்கிறது.

எல்லாம் ஆற்று நீரில்தான். ஆற்றுநீரை விட்டு வெளியில் இல்லை. ஆற்று நீரின் செயல்தான் கட்டையின் செயல்.

அப்படித்தான் பேரண்டம் முடிய எல்லாம். இறைவன் செயலாகவே உள்ளன. இது சம்பந்தமாகப் புறநானூற்றுப்பாடலே சொல்கிறது.

*"நீர்வழிப் படூஉம்*
*புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம்"*

★★★★★★★

எங்கும் நடனந்தான். எல்லாம் நடனந்தான். ஆனந்த நடனமேதான்.

---

புணை - கட்டை. முறைவழி - கடவுளின் திருஉளப்பாங்கின்படியே, நியதிப்படியே. படூஉம் - செயல்படும்.

திருமூலர் சொல்கிறதைப் பார்க்கலாம்.

*ஆனந்தம் ஆக*
*அகில சராசரம்*
*ஆனந்தம் ஆனந்தக்*
*கூத்(து) உகந் தானுக்கே.*

புல்லிலிருந்து பெரிய பெரிய நட்சத்திரம் உள்ளிட்ட சகலமும் நடனந்தான். ஆனந்த நடனமேதான். நடன அரங்குகள் தான்.

மேள தாள முழக்கத்தோடு நடக்கிறது நடனம். அப்படி என்றால் ஒரே ஆனந்தத்தான். நடனமே ஆனந்த நடனந்தான்.

*ஆனந்தம் ஆடரங்கு,*
*ஆனந்தம் பாடல்கள்,*
*ஆனந்தம் வாச்சியம்,*
*ஆனந்தம் பல்லியம்,*
*ஆனந்த(ம்) மாக*
*அகில சராசரம்*
*ஆனந்தம் ஆனந்தக்*
*கூத்துகந் தானுக்கே*

நமக்குள்ளும் அந்த நடனம்தான். புல், பூண்டு, வானம், பூமி முழுவதும் அதே நடனந்தான்.

நடனத்தைக் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்பு மனிதர்களுக்குத்தான். பதினாறடி வேங்கையோ, காட்டுப் பன்றியோ நடனத்தைப் பார்த்து பரவசப்படுமா என்ன? மனிதர்கள் தாம் பரவசப்படுவார்கள்.

உச்சி முதல் உள்ளங்கால் வரை உடம்பையே உணர்ச்சிமயம் ஆக்கத்தான் இந்த நடனம் என்று சொல்லத் தோன்றுகிறது. அடடா? நடனம் ஆடும் திருவடிகள் தான் என்ன அழகு. நடனம், நடன பாதம் ஆக இரண்டும் நம்மை அப்படியே தன்வயப்படுத்திவிடுகின்றன.

அப்பர் சுவாமிகள் ஆனந்த நடனத்தில், திருவருள் நிழலில் வசம் அழிந்திருக்கிறார். எப்படித் தெரிகிறது அது.

---

வாச்சியம் - குழல் (நாதசுரம்) முதலிய இசைக் கருவிகள். பல்லியம் - கடம், மிருதங்கம், கஞ்சரா முதலிய தாளக் கருவிகள்.

*சாட எடுத்தது*
*தக்கன் தன் வேள்வியில்*
*சந்திர னை,*
*வீட எடுத்தது*
*காலனை- நாரணன்*
*நான்முக னும்*
*தேட எடுத்தது-*
*தில்லையுள் சிற்றம்*
*பலத்துநட் டம்*
*ஆட எடுத்திட்ட*
*பாதம் அன் றோநமை*
*ஆட்கொண் டதே* *(70)*

பேரண்டத்துக்கே மணி மகுடமாக விளங்குகிறான் மனிதன். சிருஷ்டி தத்துவத்துக்கே அரிய ரத்தினம் மனிதன் தான். தெய்வ ஒளி வீசும் அரிய ரத்தினம் ஒன்று உண்டென்றால் அது மனிதன்தான்.

அப்படி ஒரு அழகு மனிதனிடம். அவனுடைய செயல் திறமையைப் பற்றிச் சொல்ல வேண்டாம். கடவுளுக்கு அடுத்தபடி மனிதன் தான்.

தன்னிகரற்று ஓங்கி உல்லாசமாய்த் தலை நிமிர்ந்து நிற்கிறான் மனிதன். அப்படி நிற்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்.

உடலமைப்பு, உள்ளம். உள்ளத்தில் தெளிவு, எண்ணங் களாக உள்ளத்தில் பொங்கும் ஒளி ஊற்று. அதன் செயல்திறன், உழவு, வணிகம், தொழில், மொழி, கலை, குடும்பம் என்று அவன் படைத்த படைப்புகள். அன்பு, பொறுமை, கொடை,

---

சாட எடுத்தது - நொறுக்கி அடித்தது. வீட - உயிரே போய்விட்டது என்று சொல்லும்படி மண்ணில் விழுந்து உருள. காலன் - எமன். நாரணன் - திருமால். நான்முகன் - பிரமன். இருவரும் தேடிக்காண முடியாதது - அரியதில் அரியது கடவுள் தத்துவம். ஆட எடுத்திட்ட பாதம் - நடன பாதம். ஆடிய திருவடி. அதுதான் இறைவனின் நியதி தத்துவம், திருவருள்.

வீரம், மானம், தியாகம், உல்லாசம், மகிழ்ச்சி என்னும் உணர்ச்சிகள். இப்படி எத்தனையோ காரணங்கள் உண்டுதான்.

மற்றக் காரணங்களை விட உன்னதமான காரணம் நேர்மையான காரணம் ஒன்றிருக்கிறது. ஒன்றே ஒன்றிருக்கிறது.

அதுதான் பக்தி.

வசதி, வாய்ப்பு, எண்ணம், சிருஷ்டி இவ்வளவிருந்தும் அவ்வளவும் கடவுளின் செயல் என்று, உண்மையைக் கண்டிருக்கிறான் மனிதன். கண்டு அதில் ஒன்றி இருக்கிறான். தன்னையே அர்ப்பணித்திருக்கிறான். அதில் எவ்வளவோ ஆனந்தம் மனிதனுக்கு. எங்கும் கிடைக்காத பேரின்பம் அது. மனிதனுக்குத்தான் அது. மனிதனைத் தவிர ஏனைய பிராணிகளுக்கு அந்தப் பேரின்பம் இல்லை.

★★★★★★★

இனி, மனிதன் இல்லை என்றால் கடவுள் காரியம் வெறிச்சோடிப் போகும். கொஞ்சி மகிழ்வதற்கு ஏற்ற செல்லக் குழந்தையாக இருக்கிறான் கடவுளுக்கு மனிதன்.

உண்மையை அனுபவிக்கவும் எடுத்துச் சொல்லவும் மனிதனைத் தவிர்த்து வேறு யார் அதிகாரி.

எளிதில் கிடைக்கக் கூடியதா மனிதப்பிறவி.

இதோ வருகிறார் அப்பர் சுவாமிகள். மனிதப் பிறவியே எடுத்து வருகிறார். எப்படி அலங்காரமாய் வருகிறார் என்று பாருங்கள்.

*பனித்த சடையும்,*
*பவளம்போல் மேனியும்,*
*பால்வெண்ணீ றும்*
*குனித்த புருவமும்*
*கொவ்வைச்செவ் வாயும்,*
*குமிண்சிரிப் பும்,*
*இனித்தம் கசிய*
*எடுத்தபொற் பாதமும்*
*காணப்பெற் றால்:-*
*மனித்தப் பிறவியும்*
*வேண்டுவ தே இந்த*
*மாநிலத் தே* *(71)*

---

பனித்த சடை - ஈரம் கசியும் சடை. கங்கை பொங்கித் ததும்புகிறது சடையில். எப்பொழுதும் குளுகுளு என்றிருக்கிறது சடை. குனித்தபுருவம் வளையும் புருவம் - நடனத்தில் ஒரு ஒடுக்கம் உண்டு. மேனி முழுதும் அங்கங்கள் எல்லாவற்றிலும் அந்த ஒடுக்கம் நெளிவு, சுழிவாகப் பரவி ஓடும். குனிவது போல வளைந்து காட்டும் புருவம். கொவ்வை - செக்கச் சிவந்த ஒரு பழம். வாய் - இதழ். குமிண் சிரிப்பு - வளைந்து நெளியும் முறுவல். ரகஷ்யமான சிரிப்பு. நீர்க்குமிழ் போன்ற சிரிப்பு.

இனித்தம் - தேனூறுவதுபோல் - இன்பம் ஊறும். கல்கண்டாய் கரைய வைக்கும். எடுத்த பொற்பாதம் - தூக்கிய திருவடி. தாளத்தில் வைத்து வைத்து எடுக்கும் திருவடி. மனிதப் பிறவியின் மாண்பை அழுத்தி அழுத்திக் காட்டுகிறது தமிழ். மனிதப்பிறவியை நடனத்தில் வைத்தே காட்டுகிறது தாளம். எப்படி? மனித்தப் பிறவி என்றே. இந்த மாநிலத்தே - எங்கே, தமிழ்நாட்டில் தான்.

குறிப்பு : தமிழ்நாட்டில் தான் கோவில், மூர்த்தி, தேவாரம், திருவாசகம், நடனம், தேர், திருவிழா, உற்றார், உறவினருடன் சேவிக்க வரும் அன்பர்களை எதிர்பார்த்து இறைவனே நிற்கிற அற்புதம் எல்லாம் இங்குதான். குடும்பமே கோயில் என்பதும் தமிழ்நாட்டில் தான்.

ஞான சம்பந்தர் பாடல் ஒன்று போதும். பாடி அனுபவிக்கிறவர்களின் உள்ளம் தூய்மை பெறும். ஒரு குறையும் இருக்காது அங்கு. வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும். அமைதியும், நிம்மதியும் பூத்துக் குலுங்கும் வாழ்க்கையில்.

ஞான சம்பந்தர், பக்தி, தியாகம், கடவுள் எல்லோரும் பாடலை அனுபவிக்கிறவர்களின் கூடவே இருப்பார்கள்.

அது வேண்டும் இது வேண்டும் என்கிற வேட்கையோ, அவர் தயவு வேண்டும், இவர் தயவு வேண்டும் என்கிற முனைப்போ இருக்காது. விடுதலை பெற்றவர் (ஜீவன் முக்தர்) என்பவர் பாடலை அனுபவிக்கிறவர்தான்.

*கருவாச லில்ப், புலக்*
*கள்வர்தம் வாசலில்க்,*
*கட்டறை யன்*
*பெருவாச லில், மற்றைப்*
*பேதையர் வாசலில்ப்*
*பின்செல்வ ரோ?*
*மருவாசம் வீசு*
*மதுரையில்ச் சம்பந்தன்*
*வாழ்மடத் துத்*
*தெருவாச லில்ச் செல்லும்*
*செல்வர்தம் வாசலிச்*
*செல்வ ரே!*

# ஞான சம்பந்தப் பெருமான்
# ஆளுடைய பிள்ளையார்

# கடவுளே மாப்பிள்ளை தான்

1. சமுதாய நலனுக்காக தன்னையே அர்ப்பணிக்கிறவர் வீரர், தியாக மூர்த்தி.

ஞானம், பக்தி என்பதெல்லாம் தியாகத்தில் தான் இருக்கிறது. தியாக உணர்வைத் தூண்டும் வீரத்தில் தான் இருக்கிறது.

பிறர் நலம் கண்டு இன்புறுவதில் எல்லையற்ற பேரானந்தம். அந்த ஆனந்தந்தான் மோட்சம்.

சிரஞ்சீவித்வம் அதில்தான். இறந்த பின்பும் மக்கள் நெஞ்சில் வாழ்வதுதான் சிரஞ்சீவித்வம். மரணமிலாப் பெருவாழ்வு.

குழந்தைகள் நன்றாக இருக்கவேண்டும், மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். திடமாக இருக்க வேண்டும். கலகலப்பாக இருக்க வேண்டும் என்று தாய் விரும்புவாள். தந்தையும் அப்படியே விரும்புவார்.

அண்ணன், தம்பி, அக்கா, தங்கை இவர்களுடன் குழந்தை சிரித்து மகிழ்வதையும் பெற்றோர் பார்த்து பரவசப்படுவர். கோபித்துக் கொள்வதும், சண்டை போடுவதும் கூட பெற்றோர்களுக்கு ஆசையாகத்தான் இருக்கும்.

மரப்பாச்சிகளை வைத்து குழந்தைகள் வீடு கட்டும். புளியங்கொட்டை, கல் இவைகளை மாப்பிள்ளை பெண்ணாக ஜோடிக்கும். கல்யாணம் நடக்கும். விருந்து நடக்கும். பட்டினப்பிரவேசம் கூட நடக்கும். குழந்தைகள் நடத்துகிற இந்தக் காரியங்கள் பெற்றோர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

கோபம் வந்தால் கட்டிய வீட்டையே காலால் எற்றும் குழந்தை. பெண்ணு மாப்பிள்ளை, விருந்து, ஊர்வலம், தாம்பூலத்தட்டு எல்லாம் அப்படி அப்படியே சிதறும்.

குழந்தைகளின் கோபமும் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியையே கொடுக்கும்.

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் குழந்தை. அதன் ஆட்டம், பாட்டம் இவைகளைப் பார்க்க வேண்டும். பார்த்து மகிழ வேண்டும் இதுதான் பெற்றோர்களுக்கு ஆறுதல் - நிம்மதி.

★★★★★★★

இனி, உலகம் முழுவதுக்கும், உலகில் உள்ள எல்லோருக்கும் தாயும் தந்தையும் இறைவன்தான். அவன் ஒருவன்தான். அவன் தான் அம்மையப்பன்.

தன் குழந்தைகள் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். திடமாக இருக்க வேண்டும். ஆரோக்கியமாக இருக்க வேண்டும். வீடு, வாசல், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் என்று சேர்ந்து இருக்க வேண்டும். குடும்பமாக இருக்க வேண்டும். அதில் ஊடல் வரும், கூடல் வரும் எப்படி ஆனாலும் வீட்டை விட்டு யாரும் ஓடி விடக் கூடாது. காட்டுக்குப் போய்விடக் கூடாது. மனைவி, மக்களை கைவிடக் கூடாது. கூடிக் குலாவி ஆனந்தமாக இருக்க வேண்டும் மக்கள். என்பது தான் கடவுளின் ஆசை.

★★★★★★★

என்னதான் கடவுள் ஆசைப்பட்டாலும் மெத்தப்படித்தவர்கள் சிலர் உண்டுதானே. நான் கெட்டிக்காரன், நானே கெட்டிக்காரன் என்கிற தடபுடல் ஆசாமிகளும் உண்டுதான்.

உண்மையைப் பற்றி அவர்களுக்கு நினைப்பு வராது. தங்கள் கெட்டிக்காரத்தனத்தை - ஏறுக்கு மாறாக ஒன்றைச் சொல்வது, அதை வற்புறுத்துவது, அது தான் சரி என்று தர்க்கம் பண்ணுவது இதிலேயே குறியாக இருப்பார்கள் அவர்கள்.

★★★★★★★

மனைவி பொய், மக்கள் பொய், கடவுள் ஒருவரே மெய். அவரை அடைவதே பேரின்பம். மற்றைய எல்லாம் சிற்றின்பம். கடவுளை அடைய ஒரே வழி காடுதான். தாடி, மீசை தான், திருவோடுதான், காவிதான். இல்லறத்திலிருந்து ஓடி விடுவதுதான் என்று வாணவேடிக்கையை விட்டபடியே திரிவார்கள் அவர்கள்.

அவர்கள் சொல்வதை நம்பி அவர்கள் பின்னால் சுற்றுகிற கூட்டமும் உருவாகத்தானே செய்யும்.

*******

மகாமட்டமான வழி இது. இந்த வழி நாட்டில் காலூன்றி விடக் கூடாதே என்று கடவுளுக்கே பயம்.

''போலிச்சாமியார்கள், சொல்வது பொய். இல்லறந்தான் உண்மையான இன்பம். அதை அலட்சியப்படுத்தக் கூடாது. அதுதான் மனிதப் பிறவிக்கு லட்சியம், துறவறத்தை நம்ப வேண்டாம். நம்பி மோசம் போய் விடாதீர்கள்'' என்று கடவுளே மக்களிடம் மன்றாடுகிறார்.

*******

சொன்னால் புரியாது. வாழ்ந்தே காட்ட வேண்டும் உண்மையை. அப்பொழுதுதான் புரியும் மனிதர்களுக்கு என்று தீர்மானித்தார் பெருமான்.

உமாதேவியை தன்கூடவே, உடலிலிலேயே சரிபாதியைக் கொடுத்து சேர்த்தே வைத்திருக்கிறார் பெருமாள். 'பார் என்னைப் பார்! எப்படிக் குடும்பம் நடத்துகிறேன் என்று பார். அவன் சொன்னான். இவன் சொன்னான் என்று ஓடி விடாதே. நான் செய்கிறபடியே செய்' என்று காட்சி கொடுக்கிறார் பெருமான்.

வீடுபேறு என்கிற மோட்சமே வீட்டில் தான். அதாவது குடும்பத்தில் தான் இருக்கிறது. காட்டில் இல்லை என்பதை உமையொரு பாகனாய் இருந்தே காட்டுகிறார் பெருமாள்.

கருணாகரமூர்த்தியல்லவா பெருமாள். மாப்பிள்ளை பெண்ணாய்க் காட்சி கொடுத்தால் மட்டும் காணாது என்று கோயில் தோறும் திருக்கல்யாணம், ஊஞ்சல், நலுங்கு, பள்ளியறை, ஊடல், கூடல், திருப்பள்ளி எழுச்சி என்றெல்லாம் இல்லற நலத்தை மேளதாள முழக்கத்தோடு காலையும் மாலையும் என்று தினந்தோறும் வாழ்ந்து காட்டுகிறார் பெருமாள்.

கருணையே பழுத்துக் கனிந்து தேன் சொட்டும் நீதிதான் இறைவன்.

ஞானசம்பந்தப் பெருமான் கடவுளைக் காணும் காட்சி இப்படி.

*சந்தம்*

*தானான தானான*
*தானான தானான*
*தானன தன்*

*வேந்தாகி விண்ணவர்க்கும்*
*மண்ணவர்க்கும் நெறிகாட்டும்*
*விகிர்தன் ஆ கி,*
*பூந்தாம நறுங்கொன்றைச்*
*சடைக்கணிந்த புண்ணியனார்*
*நண்ணும்கோ யில்;*

*காந்தாரம் இசையமைத்துக்*
*காரிகையார் பண்பாடக்*
*கவினார்வீ தித்*

*தேந்தாம் என்(று) அரங்கேறிச்*
*சேயிழையார் நடமாடும்*
*திருவையா றே.* (72)

---

வேந்து ஆகி - வழிகாட்டும் ஒளி விளக்காய் தலைமை. தாங்கி. விண்ணவர்க்கும் - மெய்யுணர்வாளர்களுக்கும். மண்ணவர்க்கும் - சாதாரண அறிவு அதாவது பிழைப்புக்கு ஆதாரமான அறிவு மாத்திரமே உடையவர்களுக்கும். நெறிகாட்டும் விகிர்தன் - எப்படி வாழ வேண்டும் என்கிற வழிமுறை களைக் காட்ட உமையொரு பாகனாய் நின்று. விகிர்தன் - ஆண் பெண் என்னும் ஈருரு. தாமம் - மாலை. காரிகையார் - அழகிய பெண்கள். கவின் - அழகு, அலங்காரம். அரங்கு - நடனம் நடைபெறும் மேடை.

குறிப்பு : ஒரு சாதாரண ஏழைக் குடியானவன். சொற்ப நிலம். அதை வைத்து விவசாயம் செய்து வந்தான். அவனுக்கு ஏழு பெண் குழந்தைகள். அவர்களை வளர்த்து ஆளாக்கிக் குடும்பம் நடத்தத் திணறிப் போனான். இந்தப் பெண்களின் கதி என்ன, எதிர்காலம் என்ன? இப்படி ஒரே கவலை குடியானவனுக்கு. அவள் மனைவிக்கும் அதே கவலைதான். ஏன் குழந்தைகளுக்கும் வயதாக ஆக அந்தக் கவலைதான்.

ஏழு பெண்களில் மூன்றாவது பெண் எப்படியோ படித்து ஒரு குமாஸ்தா வேலை வாங்கி விட்டாள். தன் வருமானத்தை சேமித்துச் சேமித்து இரண்டு தமக்கைகளின் திருமணத்துக்கு உதவினாள்.

2. வேதம் என்றால் அறிவு என்று பொருள். வித்து ஒன்று. உருவில் சிறியதுதான் வித்து. அதனுள்ளிருந்து செடி வருகிறது. கொடி வருகிறது. வேரும், தூரும் பிர்மாண்டமான கிளைகளு மாய் மரமே வந்து விடுகிறது வித்திலிருந்து.

வந்து என்ன செய்கிறது? பூக்கிறது மலர்களாய். காய்க்கிறது காய்களாய். கனிகிறது பழங்களாய். கனியிலிருந்து தேனாய் இறங்குகிறது.

இத்தனையும் வித்தில் நடக்கிற காரியந்தான். ஒரு பெரிய விஞ்ஞான கூடம் அல்லவா இருக்கிறது வித்தில்.

அறிவு மயமாக இருக்கிறது வித்து. அது காரணமாகவே கல்விக்கு வித்தை என்று பெயர். வேதம் என்கிற பெயரும் அப்படியே.

வித்துக்குள் நடக்கிற விந்தைகள் சாதாரண அறிவுக்குப் புலனாவதில்லை. மெய்யுணர்வு பெற்ற காட்சியர் - மாசறு காட்சியர் என்று சொல்கிறோமே அந்த ஞானிகளின் ஞான அறிவு (கண்களு)க்குத்தான் புலனாகும். அப்படி மறைவாய் நடக்கின்றன நவநவமான விளைச்சல். அதனால் மறை என்றும் அறிவுக்குப் பெயர்.

---

அதன் பின்பும் உழைத்து உழைத்துச் சேமிக்கிற பணத்தைக் கொண்டு தங்கைமார் நால்வருக்கும் திருமணம் செய்து வைத்தாள். அவர்கள் ஆறுபேரும் கணவன், குழந்தை, குடும்பம் என்று கலகலப்பாய் இருக்கிறார்கள்.

இவள் மட்டும் திருமணம் செய்து கொள்ளவில்லை. இது தியாகம். பலர் இன்பமாக (நலமாக) இருக்க ஒருவர் தன் நலத்தை (இன்பத்தை) விட்டுக் கொடுக்கிறது தியாகம்.

அதுபோலவே சமுதாயத்துக்கு ஒரு நெருக்கடி, பண்பாட்டுக்கு ஒரு ஆபத்து, நாட்டுக்கு, நாட்டு மக்களின் உரிமைக்கு ஒரு கேடு. வழிபாட்டு முறைக்கு, கலைக்கு மக்களின் வாழ்க்கைக்கு ஒரு இடையூறு என்று ஏற்பட்டால் (அடிமை நிலைக்கு நாடும் சமுதாயமும் தள்ளப்பட்டால்) விடுதலைக்காக, லட்சோபலட்சம் மக்களின் விடுதலைக்காக ஒரு சிலர் தங்கள் உடல் பொருள் ஆவியையே தத்தம் செய்வார்கள். பல குடும்பங்கள் மங்களமாக இருக்கவே ஒன்றிரண்டு பேர்துறவு நிலை மேற்கொள் கிறார்கள். அந்த அளவுக்குத்தான் இடம் உண்டு துறவுக்கு. அதற்காக எல்லோருமே துறவிகள் ஆகிவிட வேண்டும் என்றால் பிறகு நாடேது, சமுதாயம் ஏது, பண்பாடு ஏது, கலை ஏது? பக்திதான் ஏது?

அப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்று கடவுள் விழிப்பாகவே இருக்கிறார்.

வித்துக்குள் இவ்வளவும் விளைகின்றன என்றால் அதற்கு அதிகாரி அந்த வித்தா? இல்லையே! வித்துக்கே தெரியாது விளையும் விளைச்சல். அவ்வளவும் இறைவனுடைய காரியந் தான். அப்படி அறிவுக்கு அறிவாய் நின்று விளையாடுகிறான் இறைவன்.

அவன் காரியமே விளையாட்டுத்தான். அப்படியானால் அவளை மறையான் என்றுதானே சொல்ல வேண்டும்.

மறையவன் என்றும் சொல்லலாம். வேதியன் என்றும் சொல்லலாம்.

*******

மறையான், வேதியன், இறைவன், பெருமான் என்றெல்லாம் ஆண்பாலில் வைத்தே சொல்கிறோம். எல்லாம் நம்முடைய சௌகர்யத்தைக் கருதித்தான்.

உண்மையில் ஆணும் இல்லை கடவுள். பெண்ணும் இல்லை கடவுள்.

அப்படியானால் ஆணும் பெண்ணுமாய் ஒன்றாய் - ஒரு தன்மைத்தாய் ஒன்றி நிற்கும் ஒருமையே கடவுள்.

*தானான தானன*
*தன்ன தன்னதன்*

*மறையானை, மாசிலாப்*
*பொன்சடை மல்குவெண்*
*பிறையானைப் பெண்ணொ(டு)ஆண்*
*ஆகிய பெம்மானை,*
*இறையானை ஏர்கொள்கச்*
*சித்திரு ஏகம்பத்(து)*
*உறைவானை அல்ல(து) உள்*
*காதென(து) உள்ளமே.* (73)

---

மாசு இலா பொன்சடை - ஆயிரம் மாற்றுப் பசும் பொன்னாய் - தங்கத் தகடாய் தகதக என்று ஜொலிக்கும் சடை. அழுக்கு (மாசு) ஒட்டுமா அதில். மாசுஇலா. மல்கு வெண்பிறை - பொங்கிப் பூரித்து நிலவாய்ச் சிரிக்கும் பிறை மதி. ஏர்கொள்- அழகு நிரம்பிய - ஏரியும் குளமுமாய் நிறைந்து வயலும் தோப்புமாய்ப் பார்க்கிற கண்ணைப் பரவசப்படுத்தும் அழகு. உள்காது - நினைக்காது. உள்ளம் - மனம்.

3. பட்டிணத்தைப் பார்த்து வியக்கிறார் ஒருவர். அவர் பக்கத்தில் ஒருவர் வந்து நிற்கிறார். கடவுள் தான் அப்படி வழிப்போக்கர் போல் வந்து நிற்கிறார்.

எங்கேயோ பார்த்த ஆள் மாதிரி இருக்கிறார் கடவுள். ''உங்கள் ஊர்... என்கிறார் பட்டிணத்தைப் பார்த்து அதிசயிக் கிறவர். 'யாது நும் ஊர்'.

என்னுடைய ஊரா? யாதும் ஊரே, யாவரும் கேளிர். உண்மையான தமிழ்ப் பாட்டென்றால் அதுதான் என் குடி இருப்பு என்கிறார் புது ஆள். மாமறையம் என்றார்''.

சிரிப்பு வந்து விட்டது கேட்டவருக்கு. சொன்னவரும் சேர்ந்து சிரித்தார். ஒரே சிரிப்புத்தான். பிறகு கேட்டார் பார்வையாளர்! ''உங்களை திருவலஞ்சுழியில் பார்த்த மாதிரி இருக்கிறே'' என்று.

ஓ, அதுவா? அது நம் பண்ணை வீடு (கெஸ்ட் ஹவுஸ்) அங்கும் வந்து தங்குவதுண்டு.

'வலஞ்சுழி நம் வாழ்வென்றார்'. இப்படிச் சொல்கிறது வேறுயாரும் இல்லை, கடவுள்தான்.

★★★★★★★

---

குறிப்பு : பேரண்டம் முழுவதும் இறைவன்தான். பேரண்டமே இறைவனுக்கு உள்ளேதான். அப்படி இருக்க எங்கு போய் இவன்தான் பெம்மான் என்று அடையாளம் கண்டுபிடிப்பது. முடியாதுதான்.

ஆனாலும் அவனை நம்பி காஞ்சிபுரம் (கச்சி) போனால் ஏகம்பரநாதர் கோயிலுக்குப் போனால் அவனே எதிர் வந்து 'வாய்யா வா! இப்பொழுதுதான் வழி தெரிந்ததா. எவ்வளவு நேரமாக உன்னை. எதிர்பார்த்து நிற்கிறேன் தெரியுமா'' என்று நம் தோள் மேல் கை போட்டு ஆசையோடு பார்ப்பான்.

அப்படி அரவணைத்து ஆசையோடு பார்த்தவனை மறக்குமா நெஞ்சம். இல்லை 'நா'தான் மறக்குமா.

வித்துக்குள் இருந்து செயல்படும் இறைவன்தான் பாடலுக்குள்ளும் இருந்து செயல்படுகிறான். இல்லை என்றால் உள்ளத்தை உருக்குமா? கல்லைப் பிசைந்து களியாக்குவது போல உணர்ச்சியைக் குழைத்துப் பிசைந்து வேறொரு வஷ்துவாக மாற்றுமா கவி? இனி, உணர்ச்சியையும் அனுபவத்தையும் ஆனந்தமாய் - பாடலாய் நெய்கிறது இசை ஊடும் பாவுமாய் நெய்கிறது இசை. மனிதனை மனிதனாக்கும் ஆடையாகவே பாடலை நெய்கிறது இசை.

அப்படியானால் இசையாக இருந்து பாடலாக உருவெடுக்கிறது இறைவன்தான். இறைவனுடைய கடாட்சமே தான்.

★★★★★★★

இசையோடு உள்ளம் இசைய இசைய அது தோடி, பைரவி, சகானா, வசந்தா; நாட்டை, சங்கராபரணம், நாதநாமக்கிரியை என்று பண்பண்ணாக அதாவது தனித் தனி ராகங்களாக உருவெடுத்து வரும்.

ஒவ்வொரு பண்ணையும் சுதி வழுவாமல் ராகங்களாக உருவாக்கிக் கொடுக்கிறது இசை.

இதோ பார் சங்கராபரணத்தை இதோ பார் வசந்தாவை என்று இனம் காட்டுகிறது இசை.

எல்லாம் அவனுடைய திருவிளையாடல்தான் 'பண் காட்டும் இசையானும்.'

இனி, திருவெண்காடு அருமையான ஷ்தலம். நீர்வளமும் நில வளமும் மிக்கது.

வயலில் எப்பொழுதும் ஒரு அடி அளவுக்கு நீர் நிறைந்திருக்கும். அதற்கும் மேலே தலை நீட்டி ஆடும் நெற்பயிர்.

அங்கு எழுந்தருளிய இறைவனோ நெற்றிக் கண்ணும், நெருப்பேந்திய கையுமாக இருக்கிறான். அவ்வளவுதானா.

*தானான தானனன*
*தானனன தன்னனன*

*கண்காட்டும் நுதலானும்*
*கனல்காட்டும் கையானும்*
*பெண்காட்டும் உருவானும்*
*பிறைகாட்டும் சடையானும்*
*பண்காட்டும் இசையானும்*
*பயிர்காட்டும் புனல்நின்ற*
*வெண்காட்டில் உறைவானும்*
*மெய்காட்டி அருள்வானே.* (74)

4. கோயில், மூர்த்தி, கொடிமரம், நந்தி, சிற்பம், கோபுரம், தேரோட்டம், திருவிழா, பாடல், ஆடல், அபிஷேகம், அலங்காரம், வழிபாடு எல்லாம் சேர்ந்ததுதான் சமயப் பண்பாடு.

பக்தியை வளர்க்கும் சாதனம் மேலே குறிப்பிட்டவை. பக்தி என்றால் இந்தச் சாதனந்தான்.

---

நுதல்-நெற்றி. கனல்-தீ. 'போடு என் கையில் உன் ஆணவத்தை. சுட்டுப் பொசுக்கி விடுகிறேன் ஆணவத்தை'' என்று கனன்று எரியும் நெருப்பைக் காட்டுகிறது பெருமானுடைய அபயகரம். பெண்ணின் பெருமையை - ஆன்ம தத்துவத்தின் தீபஒளியாய்த் திகழும் பெண்ணை எப்படி மதிக்க வேண்டும் என்பதை அப்படியே காட்டுகிறது இறைவனுடைய திருமேனி. பெண் காட்டும் உரு. திருவெண்காட்டைப் பார்த்தாரோ இல்லையோ பெருமான். இதுபோதும் என்று அங்கேயே தங்கி விட்டார். பாலில் மோர் சேர்ந்து தயிராய் உறைவது போல கோயில் கொண்டு உறைந்து விட்டார். வெண்காட்டில் உறைவார்.

குறிப்பு : பெண்மையை - தாய்மையை - ஏன், பெண்ணையே எந்த அளவுக்கு மதித்தாரோ பெருமான் அந்த அளவிலிருந்து இம்மி அளவு கூடக் குறையாமல் ஒரு ராசி அதிகமாகவே மதித்தவர்தான் சம்பந்தர். அதுதானே சம்பந்தம், ஞான சம்பந்தம். 'பெண்காட்டும் உருவான் பெருமான்' என்னும் பாடலே நேர் சாட்சி.

★★★★★★★

இவ்வளவும் சேர்ந்து பக்தியை எப்படி வளர்த்தனவோ அப்படியே பக்தியை வளர்த்தது மகேஸ்வர பூசை. சிவ ஆலயந்தோறும் இருந்தது மகேஸ்வர பூஜை.

*******

பக்தர் என்றால் போதும். பக்தி ஒன்று போதும். உண்மை உணர்ச்சி இருந்தால் போதும். அவர் யாராக இருந்தாலும் அடியார் தான் மெய்யடியார்தான். சாதி வேற்றுமை மறைந்து விடும். இன வேறுபாடு தொலைந்து போகும். ஏழை, பணக்காரன், அரசன், ஆண்டி, மேதை, பாமரன் எல்லோரும் மனிதர்கள் ஆகி விடுவார்கள். ஒருவரை ஒருவர் உபசரிப்பார்கள். மதிப்பார்கள். அன்பில் கரைவார்கள். பணிவிடை செய்வார்கள். காதல் உணர்வோடு தங்களை அடியார்களிடம் ஒப்படைப்பார்கள். கடவுளிடம் தங்களை ஒப்படைப்பது போலவே ஒப்படைப்பார்கள். மகேஸ்வர பூசையில் தான்.

கோயில்கள் பலவற்றில் சேவைக்காக யானை உண்டு. யானைப் பாகன் உண்டு. யானைப் பாகன் புற மதத்தவராகத்தான் இருப்பார்.

அடியார்கள் திருக்கூட்டமாய் கூடி சிவபூஜை பண்ணி 'உண்ண அழைப்பித்தாரே' என்று கனிந்து பாடி ஒன்றாய் இருந்து அறுசுவை அமுது உண்பார்கள்.

பந்தி போஜனத்தில் யானைப் பாகனும் உடனமர்ந்து உண்பார். இஸ்லாமியர் அல்லவா. யானைப் பாகர் என்று விலக்கி வைக்க மாட்டார்கள்.

பல்வேறு வகைப்பட்ட ஆன்மாக்களும் ஒரே ஆன்மாவாய்ப் பரிமளிக்கிறது தான் மகேஸ்வர பூஜை.

அப்படிப் பரிமளிப்பதுதானே ஈஸ்வர சாநித்யம்.

இறைவனே நேரில் வந்து காட்சி கொடுக்கும் இடம் அல்லவா அது;

அதனால் தான் அதற்கு மகேஸ்வர (மகா+ஈஸ்வர=மகேஸ்வர) பூஜை என்று பெயர்.

பக்தகோடிகளின் மனசை விட்டுப் போகவே போகாது மகேஸ்வர பூஜை - ஆனந்தம்.

கோவிலில் நடக்கும் மகேஸ்வர பூஜையை முன்னோர்கள் நன்றாக அனுபவித்திருக்கிறார்கள். ஆனந்தம் பெற்றிருக் கிறார்கள். அந்த ஆனந்தம் வீண் போகவில்லை.

மடங்களிலும் மகேஸ்வர பூஜையை நடத்தி இருக்கிறார்கள். கோவிலுக்குரிய மகேஸ்வர பூஜையை ஸ்நான கட்டம், படித்துறை என்று பக்தர் கூடும் இடங்களிலும் நடத்தி இருக்கிறார்கள்.

இவை எல்லாம் இருக்க சிவனடியார்கள் - சிவநேசச் செல்வார்கள் தங்கள் தங்கள் வீடுகளினும் மகேஸ்வர பூஜையை நடத்தி வந்தார்கள்.

இன்றும் அங்கங்கே நடைபெற்று வரத்தான் செய்கிறது மகேஸ்வர பூஜை.

★★★★★★★

ஒரு வீட்டில் மகேஸ்வர பூஜை நடக்கிறது என்றால் அந்த வீடு மட்டுமல்ல அந்தத் தெருவே அன்பில் கரையும். ஆனந்தத்தில் மிதக்கும்.

வீட்டில் உள்ள எல்லோரும் கணவன், மனைவி, தாய், தந்தை, உற்றார், உறவினர். நண்பர் எல்லோருமே இன்பத்தில் திளைப்பார்கள். எல்லோரையும் விட இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் அளவிட முடியாத உத்ஸாகம். அதுவும் பெண் குழந்தைகளுக்கு கேட்கவே வேண்டாம். உத்சாகத்தில் அவர்கள் மேனி எல்லாம் சிரித்து மகிழும். புன்முறுவல் பூக்கும். உல்லாசமும் எக்களிப்பும் அவர்களுடைய தோற்றத்தையும் எடுப்பையும் ஒன்றுக்குப் பத்து மடங்காக - பத்துக்கு நூறு மடங்காக பெருக்கிக் காட்டும்.

அடியார் ஒவ்வொருவரையும் உபசரித்துப் பணிவிடை செய்வார்கள். நான்முந்தி, நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு பந்தி விசாரிப்பார்கள். பண்டங்களையும், பணியாரங்களையும் படைப்பார்கள். மேலும் மேலும் படைத்த வண்ணமாகவே இருப்பார்கள். பெண் குழந்தைகளுமே தான்.

★★★★★★★

இப்படி எல்லாம் அடியார் கூட்டத்தை - மகேஸ்வர பூஜையை உபசரித்த ஒரு இளம் பெண். பருவநங்கை.

போன ஆண்டு போலவே இந்த ஆண்டும், மகேஸ்வர அங்கு நடக்கத் திட்டம் இருந்தது.

ஆனால் என்ன நடந்தது.

மகேஸ்வர பூஜை நடைபெறுவதற்கு ஒரு வாரத்து முன்பே காதலனுடன் போய் விட்டாள். ஓடியே போய் விட்டாள் பெண்

எப்படி இருக்கும் அந்த வீடு?

எப்படி அலறித் துடிப்பாள் தாய்? தூக்கம் வருமா? சாப்பாடு இறங்குமா? மனம் ஒருநிலையில் நிற்குமா?

புழுவாய்த் துடிக்கிறாள் தாய். தந்தை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை எல்லோர் நிலையும் அப்படி அப்படியே.

★★★★★★★

ரத்னாபரணங்களை நிறைத்து வைத்த தங்கப் பேழை மாதிரி பெண். அன்னநடை நடந்து சின்னச் சின்ன எட்டு வைத்து அவள் ஒசிந்து ஒசிந்து நடக்கிறதைப் பார்த்தால். தோகையை விரித்தபடியே வனப்புமிக்க வளமயில் ஒன்று அசைந்து அசைந்து வருவது போல இருக்கும்.

ஒவ்வொருவரும் தம்மை நோக்கியே அது வருகிறது என்று மயங்குவார்கள்.

*"மட்டிட்ட புன்னை*
*அம் கான வனமயில்"*

★★★★★★★

இந்த வளமயிலைக் கடத்திக் கொண்டு போனது வேறு யாரும் இல்லை. சாட்சாத் சிவபெருமானேதான். சென்னை மயிலாப்பூரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறானே கபாலீச்சுரன். அவன்தான் இந்தத் திருவிளையாடல் பண்ணி விட்டான். கட்டிட்டம் கொண்டான் கபாலீச் சுரம் அமர்ந்தான்.

மகேஸ்வர பூஜை நெருங்க நெருங்க மகளை எண்ணி ஏங்குகிறாள் தாய். புலம்புகிறாள். விண்ணுக்கும் மண்ணுக்குமாய் எதிரொலிக்கின்றன அவள் துயரமும் பெருமூச்சும்.

*தானான தானான*
*தான தன்னதன்*

*மட்டிட்ட புன்னையங்*
*கானல் வளமயிலைக்*
*கட்டிட்டம் கொண்டான்*
*கபாலீச் சுரம் அமர்ந்தான்;*
*ஒட்டிட்ட பண்பின்*
*உருத்திர பல்கணத்தார்க்(கு)*
*அட்டிட்டல் காணாதே*
*போதியோ பூம்பாவாய்.* *(75)*

---

மட்டு-மணம், கட்டிட்டம் கொண்டான்-கண்பார்வையிலேயே வசியப்படுத்தி விட்டான். அப்படியே கைக்குள் போட்டுக் கொண்டான் பெண்ணை. வளமயில் போன்ற மங்கையை - பூப்பாவையைத்தான் ஒட்டிட்ட பண்பின் - ஒத்த உணர்வு (பக்தி) கொண்ட. ருத்திரபல் கணத்தார் - பலதரப்பட்ட சிவனடியார். அட்டிட்டல்- சமைத்துப் படைத்தல்.

''காணாதே போதியோ''-மகேஸ்வர பூஜையில் மகிழ்ச்சியோடு வந்து செயல்படுவாயே. அதில் எவ்வளவு திருப்தி உனக்கு. வருகிற மகேஸ்வர பூஜையை எப்படி மறந்தாய்? மறந்து அவன் பின் நடக்க எப்படி முடிந்தது உனக்கு. பூம்பாவாய் - பூம்பாவையே! என் கண்ணே.

குறிப்பு : கடவுள் தத்துவத்தோடு சதா ஒன்றியிருக்கிறார்கள். ஞானிகள். கடவுள் தத்துவத்தில் எத்தனையோ அற்புதங்கள். அவற்றிலிருந்து ஒன்று வந்தால் போதும். அது எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போகும். மனம் அதன் பின்னால் ஓடும்.

பருவ மங்கை, இளைஞன், காதல், உடன்போக்கு, நற்றாய் இரங்கல், என்றெல்லாம் கூடுவிட்டுக் கூடுபாயும்.

# அடையாளத்தின் ஆதிக்கம்

5. பத்து மாதம் வயிற்றில் வைத்துக் குழந்தையைச் சுமக்கிறாள் பெண். பிறகு பையனையோ பெண்ணையோ குழந்தையாகப் பெற்றெடுக்கிறாள்.

தாயாகி விடுகிறாள் பெண்.

தாய் என்பது ஒரு தத்துவம் ஆகிறது. உலகம் முழுவதும் தாய் தான். எத்தனை கோடி தாய் என்று கணக்கு உண்டா?

தாய்மார் கோடான கோடி என்றாலும் பெயர் ஒன்றுதான்.

அம்மா என்றுதான் பெயர். அத்தனை தாய்களுக்கும் அது ஒன்றே பெயர். அதுதான் நாமம் - தாயின் திருநாமம் 'அம்மா' என்னும் அது ஒன்றே தான்.

★★★★★★★

அம்மா என்கிற சொல் காதில் விழுந்த மாத்திரத்தில் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி உண்டாகிறது. பரபரப்பே உண்டாகிறது. உணர்ச்சியைப் பிசைந்து குழைக்கிறது. ஏதோ ஒன்று, அது எது என்ற தெரியவில்லை.

பேரன், பேத்தி எடுத்த தொண்டு கிழங்களைக் கூட ஆட்டு ஆட்டென்று ஆட்டுகிறது 'அம்மா' எனும் சொல். அம்மா எனும் மந்திரச் சொல்.

★★★★★★★

அ-ம்-மா என்று மூன்று ஒலி - மூன்று சத்தத்தின் கூட்டுத்தான் அம்மா என்பது. ஆனால் அம்மா என்கிற சொல்லில் இந்த மூன்று சத்தங்களையா பார்க்கிறோம்.

அம்மாவையே பார்க்கிறோம். அம்மாவைத் தவிர என்ன இருக்கிறது 'அம்மா' என்கிற சொல்லில்.

★★★★★★★

இனி, நமசிவாய என்னும் சொல்லும் அப்படித்தான் வெறும் ஒலி (எழுத்து) மட்டும் இல்லை. 'நாம் அவன் மயம்' என்னும் அர்த்தம் (பொருள்) மட்டும் இல்லை அதில்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் எல்லாம் அவனே, அவன் செயலே' என்னும் பொருளில் மட்டும் நிற்கவில்லை நமசிவாய என்பது.

அதுவே பரம்பொருள். அதுவே கடவுள்த் தத்துவம் கங்கையும் பிறையும் புனைந்த சடை முடியோடு கூடிய சிவபெருமானே தான். 'நமசிவாய' என்பது.

பரம் பொருளின் திருவருள், திருவிளையாடல், ஆனந்த நடனம் எல்லாம் அது தான்.

யாராலும் காண முடியாத இறைவனே 'நமசிவாய' என்பதில் காட்சி தருகிறான்.

பரம் பொருளின் திருமேனிதான் 'நமசிவாய'. இறைவனுக்கு உருவம் என்பது 'நமசிவாய' என்னும் மந்திரந்தான்.

★★★★★★★

இறைவனையே நேருக்கு நேராகப் பார்க்கிறதென்றால் உள்ளம் உருகத்தானே செய்யும் - உருகி உருகிக் கரையத்தானே செய்யும். ஆனந்தக் கண்ணீர் பெருகுவது இயல்புதான். ஆளுடையபிள்ளையார் அப்படியே பார்த்துப் பரவசப்படுகிறார்.

*தான தான*
*தன்னன தன்னன*

*காத லாகிக்*
*கசிந்துகண் ணீர் மல்கி*
*ஓது வார்தமை*
*நன்னெறிக்(கு) உய்ப்பது;*
*வேதம் நான்கினும்*
*மெய்ப்பொருள் ஆவது*
*நாதன் நாமம்*
*நமச்சி வாயவே!* *(76)*

6. பக்தி இருந்தால் நம்பிக்கை இருந்தால் ஆசை வரும். கண்ணாரக் கண்டு களிக்க ஆர்வம் பெருகும்.

நமச்சிவாய என்று அவனிடம் தன்னை ஒப்படைக்கவே தோன்றும்.

நமசிவாய, நமசிவாய என்று ஓத ஓத அவன் எதிரில் வந்து நிற்பான். மனம் தெளியும். எல்லாம் சிவமயந்தான்.

அறிவு, ஆராய்ச்சி, தர்க்கம், வியாகரணம் ஒன்றும் பிரயோசனப்படாது. உற்றதுணை அவன்தான். அவன் திருநாமம் தான்.

''நம்பாதவர்களுக்கு அவன் இல்லை. நாமும் இல்லை தான் அவர்களுக்கு'' என்கிறார் ஆளுடையபிள்ளையார்.

கல்லா நெஞ்சின்
நில்லான் நாமம்
சொல்லா தாரொ(டு)
இல்லோம் நாமே (77)

---

காதல் - ஆர்வம். நல்நெறி - நிம்மதி, அமைதி. பக்தி என்றால் நம்பிக்கைதான். கணவனை எப்படி நம்புகிறாள் மனையாள். அப்படிப்பட்ட நம்பிக்கை. இனி, கடவுளை நம்புவதற்கு - மனம் தெளிந்து உறுதிப்பட வேண்டும் அதற்கு கவி ஒரு சாதனம். இனி இயல்பாகவே கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பலர். அவர்கள் பாடலில் தோய்ந்து - மருவினால் நல்லது தான். அப்படி மருவாவிட்டாலும் குறை ஒன்றும் இல்லை. ஏன் வேதம் நான்கிலும் மெய்பொருளாகிய நாதனே நமசிவாய வடிவத்தில் அவர்களிடம் இருக்கத்தானே செய்கிறான்.

குறிப்பு: வாலியும் சுக்ரீவனும் அண்ணன் தம்பிகள். ஆனாலும் சண்டை போட்டார்கள். பயங்கரமான போர் அது. ஒரு கட்டத்தில் சுக்ரீவனுக்கு உயிர் போகும் ஆபத்து நேர்ந்தது. அப்படித் துவைத்தெடுத்தான் சுக்ரீவனை வாலி. ஆபத்துக்குப் பாவம் இல்லை என்று வாலி மேல் அம்பை விட்டான் ராமன். அது வாலியின் நெஞ்சைக் குடைந்து துளைத்தது. வீராதி வீரனாகிய வாலியே பதறிப் போனான். யார்விட்ட அம்பு என்று பார்த்தான். ராமன் எனற பெயர் இருந்தது அதில். தியாக மூர்த்தியாகிய ராமனா இது செய்தது என்று நடுங்கினான் வாலி.

7. ருத்திராட்சம், விபூதி, பஞ்சாட்சரம் ஆக மூன்றும் சிவ சின்னங்கள். பிறவிப் பிணியிலிருந்து விடுவிக்கும் ருத்திராட்சமே மணி, நமசிவாய என்னும் ஐந்தெழுத்தே (பஞ்சாட்சரமே) மந்திரம். வெண்ணீறு, திருவெண்ணீறு என்று போற்றப்படும் விபூதியே மருந்து - நோய் தீர்க்கும் ஔடதம். 'மணி மந்திர ஔடதம்'.

★★★★★★★

பக்தர்கள் இந்த மூன்றையும் கடவுள் தத்துவமாகவே - சிவபெருமானாகவே பார்ப்பார்கள். பாவிப்பார்கள். வழிபடுவார்கள்.

★★★★★★★

திருநீற்றை வெறும் சாம்பலாகவா பார்ப்பார்கள் அடியார்கள் - அதாவது மெய்த் தொண்டர்கள். எல்லாம் வல்ல இறைவனாக - சிவபெருமானாகவே பார்ப்பார்கள் திருநீற்றை.

★★★★★★★

ஆணவம் நீங்கியதன் அடையாளந்தான் திருநீறு. குறை இல்லாத தூய ஆன்மா அது. பரிபூரணம் அது.

அதனால்தான் ஆசையோடு அள்ளி அள்ளித் திருநீற்றை மேனி முழுவதும் பூசிக் கொள்கிறான் பெருமான்.

---

அந்த நாமம் ராமநாமம் எப்படித் தெரிந்தது வாலிக்கு,

*மும்மைசால் உலகுக்கெல்லாம்*
*மூலமந் திரத்தை, முற்றும்.:*
*தம்மையே தமர்க்குநல் கும்*
*தனிப்பெரும் பதத்தை, மாயத்(து)*
*இம்மையே எழுமை நோய்க்கும்*
*மருந்தினை, இராமன் என்னும்*
*செம்மைசேர் நாமம் தன்னை*
*கண்களில்த் தெரியக்கண்டான்*

ராமன் என்னும் சொல்லிலேயே ராமனை - கருணையை - நீதியை தியாகத்தையே பார்த்தான் வாலி.

தீவண்ணம் மறைய வெண்ணீறு பூசிக் கொள்வதில் அப்படி ஒரு ஆசை பெருமானுக்கு.

பேராசை என்றுதான் சொல்ல வேண்டும் அதை.

*******

இறைவனாகவே காட்சி கொடுக்கிறது வெண்ணீறு. இறைவனையே திருவெண்ணீற்றில் பார்க்கிறார் ஞானசம்பந்தர்.

பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கிறது சம்பந்தருக்கு. அடக்க முடியவில்லை ஆனந்தத்தை. குதிக்கிறார், துள்ளுகிறார், பார்க்கிறார். ஆசையோடு வெறித்துப் பார்க்கிறார். பார்த்துக் கொண்டே இருக்கிறார்.

'ஆலவாயா, அம்பலக்கூத்தா' என்று அரற்றுகிறார். ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாய்க் கொட்டுகிறது.

திருநீற்றை அள்ளி மேலெல்லாம் பூசுகிறார். அடடா என்று விம்முகிறார். அற்புதம் அற்புதம் என்று சத்தம் போடுகிறார்.

''வெண்ணீறு வெண்ணீறு என்று கூப்பிடுங்கள். ஓடி வருவான்'' இறைவன் என்று எல்லோரையும் நோக்கிச் சொல்கிறார்.

ஞான சம்பந்தரை அப்படியே நமக்குக் காட்டுகிறது தமிழ். பாருங்கள் பாருங்கள் என்று சம்பந்தரைப் பார்க்க வைக்கிறது தமிழ். பரவசப்பட வைக்கிறது கவி - தமிழ்க் கவி

*தானன தானன தன்ன*
*தானன தானன தன்ன*

*வேதத்தில் உள்ளது நீறு;*
*வெம்துயர் தீர்ப்பது நீறு;*
*போதம் தருவது நீறு;*
*புன்மை தவிர்ப்பது நீறு;*
*ஓதத் தகுவது நீறு;*
*உண்மையில் உள்ளது நீறு;*
*சீதப் புனல்வயல் சூழ்ந்த*
*திருவால வாயன்திரு நீறே!* *(78)*

வேதம் - ஞானம். குழப்பம், பயம் இவை மனதை விட்டுப்போய் விட்டால் தொல்லைக்கு இடமே இல்லை. நம்பிக்கையோடும் பக்தியோடும் திருநீறு தரித்தால் பயம் ஓடிவிடும். குழப்பம் நீங்கிவிடும். நிம்மதிதான் மனதுக்கு. ''வெம்துயர் தீர்ப்பது நீறு''

போதம் - மெய்யுணர்வு. திருவருளில் ஒன்றி நிற்கும் ஒடுக்கம். ஓதத்தகுவது - திருநீறு இன்னது என்று தெரிந்துவிட்டால் - உண்மை கண்முன் வந்து தோன்றிவிட்டால் மறக்க முடியுமா மனிதனால்? திருநீறு, திருநீறு என்று சொல்லிக் கொண்டே இருக்கும் 'நா'.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், உலகத்தார் எல்லோரையும் பார்த்து சொல்லுங்கள் திருநீறு - திருநீறு என்று சொல்லுங்கள் என்று வேண்டுகிறார் சம்பந்தப் பெருமான். சீதப்புனல் - குளிர்ந்த நீர்.

திருவாலவாயன் தான் திருநீறு. திருநீறுதான் திருவாலவாயன்.

இது உண்மை. இதை எல்லோருக்கும் சொல்லும் நா. சொல்லிக் கொண்டே இருக்கும் நா.

குறிப்பு: ஒரு மனிதர் ஏழைதான் ஆனால் யோக்கியர். மனச்சாட்சி உள்ளவர். மானம், மரியாதை தான் அவருக்கு உயிர். அவருக்கு ஒரு மகன். அவன் தடம்புரண்டு நடக்கிறான். தகாத செயல்களை எல்லாம் செய்கிறான். ஒரே வீட்டில் தான் தந்தையும் இருக்கிறார். மகனும் இருக்கிறான். ஆனாலும் மகனோடு ஒட்டவில்லை தந்தையின் உள்ளம். அவன் வேறு இவர் வேறு என்கிற நிலைதான்.

சில ஆண்டுகள் கழிந்தன. திருந்திவிட்டான் பையன். செம்மை நலம் மிக்க சீலனாகவே திருந்திவிட்டான். இப்பொழுது ஆசையோடு மகனைப் பார்க்கிறார். அள்ளிப் பருகுவது போல ஆசையோடு பார்க்கிறார். அரவணைக்கிறார். என் பையன் என்கிறார். காந்தமும் காந்தமும் ஒட்டுவது போல் தந்தையும் மகனும் ஒட்டுகிறார்கள். இறைவனும் அப்படித்தான். ஆணவம் இருக்கிறவரை ஒட்டமாட்டான். அது போனவுடனே அள்ளி அணைப்பான். ஆணவம் நீங்கிய ஆன்மாவைத் தன் மேனியோடு மேனியாய்ச் சேர்த்து வைத்துக் கொள்வான். ஆணவம் அற்றநிலை நீறு - விபூதி. அதுதான் இறைவன் பூசும் சந்தனம்.

★★★★★★★

# கிளியே சொல்லமாட்டாயா

8. கடவுள்த் தத்துவத்தில் சதா ஒன்றி இருக்கிறவர் சம்பந்தர். தனக்குத் துணையாக தன்னுடனேயே கடவுள் இருக்கிறார் என்கிற நம்பிக்கை சம்பந்தருக்கு. சிலசமயம் கடவுள் எங்கோ போய்விட்டார். தன்னை விட்டுப் போய்விட்டார் என்றும் தோன்றும். அது காரணமாக - பிரிவாற்றாமை காரணமாக தவிப்பு வரும், ஏக்கம் வரும், காதல் வெறியே வரும் சம்பந்தருக்கு. காதல் வெறி ஏற ஏற தூது அனுப்பவே தோன்றும். காதல் வேகத்தில் காதலியாகவே மாறி கிளியிடமே பேசுகிறார் சம்பந்தர்.

மரம், செடி, மேகம், வண்டு, பூ, கிளி, குயில், அன்னம், அன்றில் எது அகப்பட்டதோ அதனிடம் மனம் திறந்து கொட்டுவார் சம்பந்தர். காதல் வேகம் அதில் அலை அலையாக எழுந்து வரும்.

மருத மரத்தின் கிளையில் இருக்கிறது கிளி. பெண் கிளியும், ஆண் கிளியும் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருக்கின்றன. பெண் கிளியைப் பார்த்தே சொல்கிறார் சம்பந்தர்.

''சிறையாரும் மடக்கிளியே இங்கே வா'' என்று கூப்பிடுகிறார். கிளியும் சிறகடித்தபடியே பறந்து வந்து சம்பந்தரின் மடியில் அமர்கிறது.

அழகான கிளி. பார்க்கப் பார்க்க ஆசையை உண்டாக்குகிறது அழகு.

கிளியைத் தடவிக் கொடுக்கிறார். பட்டுப் போன்ற அதன் இறகை வருடிக் கொடுக்கிறார். மூக்கில்தான் எத்தனை அழகு கிளிக்கு. மரகதத்தில் ஒரு செம்பவளம் முளைத்த மாதிரி அமைந்த வாயை, - இசையே நடம் பயிலும் அதன் வாயைத் தொட்டுப் பார்க்கிறார். பார்த்தபடியே,

தேனொடு பால்
முறையாலே உணத்தருவேன்

என்று கொஞ்சுகிறார்.

கிளிக்கு ஒரே சந்தோசம். புளகாங்கிதந்தான் கிளிக்கு. அப்படியே மெய்மறந்து கிடக்கிறது கிளி.

சீர்காழி அழகான ஷ்தலம். கடலும்,காடும், ஆறும், வயலுமாய் நிறைந்த ஊர்.

அங்கு கோயில் கொண்டு அருள் பாலிக்கிறான் பெருமான். தோணியப்பர் என்னும் திருநாமத்தோடு.

செம்பவளத்தையும் வெண் முத்தையும் அலைக்கரங்களால் (பெருமானின் கோயில்) முற்றத்தில் கொண்டு வந்து கொட்டுகிறது கடல்.

அதைப் பார்த்த பெருமானுக்குச் சிரிப்பே வந்துவிட்டது. பக்கத்தில் அமர்ந்திருக்கும் உமையாளிடம் 'பார் உல்லாசத்தை - கடலின் உல்லாசத்தை' என்று சுட்டிக் காட்டுகிறார் பெருமான்.

உமையாளுக்கும் ஒரே சிரிப்பு. இருவரும் சேர்ந்து சிரிக்கிறார்கள்.

மனசில் உள்ளதை அப்படியே சொல்லி விடுகிறார் சம்பந்தர் கிளியிடம். இனிப்பாடல்,

*தானான தானான*
*தானான தன்னதன்*

*சிறையாரும் மடக்கிளியே*
*இங்கேவா! தேனொடுபால்*
*முறையாலே உணத்தருவேன்:-*
*மொய்பவளத் தொடுதரளம்*
*துறையாரும் கடல்த்தோணி*
*புரத்தீசன் துளங்கு இளம்*
*பிறையாளன் திருநாமம்*
*எனக்கொருகால்ப் பேசாயோ?* (79)

---

சிறையாரும் - அழகு நிறைந்த சிறகு. முறையால் - நேரம் தவறாமல், வேளா வேளைக்கு. மொய் பவளம் - கொடியாய்ப் பிணைந்த பவளம். தரளம் - முத்து. துளங்கும் இளம்பிறையான் - சிவபெருமான். ஒளிரும் பிறைச் சந்திரனைச் சடையில் தரித்த பெருமான். என்னென்னவோ சொல்கிறாய். ஒருமுறையாவது அவன் திருநாமத்தைச் சொல்லக் கூடாதா கிளியே? சொல், வாய் திறந்து சொல். என்று கிளியிடம் சம்பந்தர் கெஞ்சுகிறார். அதைக் கையில் எடுத்துக் காட்டுகிறது கவி.

# கண்ணைத் திறந்து பார்க்க வேண்டாமா?

9. எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது ஆன்ம தத்துவம்.

புல்லும் அதுதான். பூனையும் அதுதான். மரமும் அதுதான். மனிதனும் அதுதான். எல்லாம் ஒரே ஆன்ம தத்துவந்தான்.

வானம் பூமி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது ஆன்மா.

ஆன்மா ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான். குழந்தை என்றும், சிறுவன் என்றும், இளைஞன் என்றும், விடலை என்றும், கிழவன் என்றும் பலபடியாகத் தெரிகிறது அது.

கருப்பன், சிவப்பன், நெட்டையன், குட்டையன், தடியன், ஒல்லியன் என்றெல்லாம் வேஷம் போடுகிறது அது.

பசு என்றும், புலி என்றும், மீன் என்றும், அணில் என்றும், யானை என்றும், எறும்பென்றும் எத்தனை காட்சிகளில் நடிக்கிறது அது.

வேப்ப மரமும் அதுதான், சந்தன மரமும் அதுதான், ஆணும் அதுதான், பெண்ணும் அதுதான், தாயும் அதுதான், பிள்ளையும் அதுதான். எல்லாம் ஆன்மாதான். ஒரே ஆன்மா தான்.

★★★★★★★

எப்படிப் புதுப்புது வேஷம் போடுகிறது ஆன்மா? எப்படி ஒரே நேரத்தில் பலவேஷம் போடுகிறது அது?

விதவிதமாக உடம்பை உண்டாக்கிக் கொள்கிறது ஆன்மா. நினைத்தவுடன் நினைத்தபடி எல்லாம் உண்டாகிறது.

உடம்புதான் ஆன்மாவை அது, இது என்று பிரிக்கிறது. பேதப்படுத்துகிறது.

★★★★★★★

உடம்பு தான் சுவர். ஆன்மாவின் கண்ணை மறைக்கும் சுவர். இரும்புத் திரை என்றுதான் சொல்ல வேண்டும் உடம்பை.

'ஊனத்து இருள்' என்றே சொல்லி இருக்கிறது உடம்பை. (ஊன் - உடம்பு) ஊனமாகிய இருட்டுக்கு மாயை என்று பெயர். அந்த மாயையின் அட்டகாசந்தான் ஆணவம். அதன் வீக்கந்தான் கன்மம். நல்லது, கெட்டது, வெற்றி, தோல்வி, வாழ்வு, சாவு எல்லாக் காரியங்களும் கன்மந்தான். ஆணவத்தின் வீக்கந்தான்.

★★★★★★★

உடம்பு என்னும் கோட்டைச் சுவரை இடித்துத் தரைமட்டம் ஆக்கினால் தான் ஆன்மாவைத் தரிசிக்க முடியும். கடவுள் அங்கு கொலுவீற்றிப்பார்.

கண்ணாரக் கண்டுகளிக்கலாம் அந்த அற்புதத்தை.

ஆனால் எப்படி இடிப்பது இந்தச் சுவரை. வலுவான கோட்டைச் சுவரல்லவா இது என்று மயக்கம் வரும். ஆனால் மயங்கக் கூடாது.

கடப்பாறை கொண்டு இடித்து நொறுக்க முடியாது இந்தச் சுவரை.

பிறகு எப்படித் தட்டி நொறுக்குவது சுவரை?

நமக்கும் கடவுளுக்கும் இடையில் சுவர் ஒன்றல்லவா எழுந்து நிற்கிறது. உண்மையை எவ்வளவு தந்திரமாக மறைக்கிறது இந்தச் சுவர் (நிழல்) என்று உணர்ந்தால் போதும்.

சட சட என்று இடிந்துவிழுந்து விடும் சுவர். இது தான் அதை வெல்லும் வழி என்பதை முன்னோர் தெரிந்திருந்தார்கள். அதை ஒரு அழகிய கதை மூலமே சொல்லி இருக்கிறார்கள்.

ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்றும் மூன்று அரக்கர்கள். இவர்கள் ஆகாயத்திலேயே கோட்டை கட்டினார்கள். தொங்கும் கோட்டை அவை. விண்ணுக்கும் மண்ணுக்குமாய் உயர்ந்து தொங்கும் கோட்டை அவை.

கடவுளையே மறைத்த மாயக் கோட்டை அவை.

★★★★★★★

சிவபெருமான் பார்த்தார். எப்படியும் இதை அப்புறப் படுத்தியாக வேண்டும் என்கிற எண்ணம் உதயமாகிவிட்டது அவருக்கு.

ஏதோ யத்த சன்னத்தராய் - பூமியே தேர், வேதமே குதிரை, பிரம்மாவே சாரதி, இமயமலையே வில், ஆதிசேசனே அம்பு என்கிற தோரணையில் புறப்பட்டார் கோட்டையை நோக்கி.

கோட்டைப் பக்கமே வந்துவிட்டார். ஆனால் சண்டை போடவில்லை. ''அடடா, என்ன தந்திரம், என்ன விசித்திரம், என்ன அதிசயம் இந்தக் கோட்டையில்'' என்று ஆச்சரியப்பட்டார் பெருமான்.

ஆச்சர்யத்தில் சிரித்தேவிட்டார் பெருமான். சிரிப்பென்றால் கட கட என்று பெரிய சிரிப்பில்லை. புன்முறவல்தான், அவ்வளவுதான்.

அப்படியே தீப்பற்றி எரிந்தன கோட்டைகள். மாயக்கோட்டைகள் மூன்றும் சாம்பலாகிவிட்டன.

*கல்லுளி மங்கன் போனவழி*
*காடும் மேடும் தவிடு பொடி!*

நாமும் இப்படித்தான் அப்புறப்படுத்த வேண்டும் சுவரை. அதற்கு இறைவன் திருவருள் வேண்டும். மயிலாடு துறையில் எழுந்தருளி இருக்கிறானே பெருமான். பார்க்கப் பார்க்கத் தேனாய்த் தித்திக்கும் பெருமான். அவன் அருள் பாலிப்பான். மனம் இருந்தால் இடம் உண்டு.

*தானன தன்ன*
*தன்னன தன்ன*

*ஊனத்(து) இருள்*
*நீங்கிட வேண்டில்,*
*ஞானப் பொருள்*
*கொண்டிட வேண்டில்,*
*தேன்ஒத் தினி*
*யான்அம ரும்சீர்*
*வானின் மயி*
*லாடுது றையே* (80)

*10. கோட்டைச் சுவரானது இருக்கட்டும். அதுபாட்டுக்கு இருக் கட்டும். நாம் ஏன் அதனிடம் போக வேண்டும். நமக்குள்ளேயே பார்க்க வேண்டியவை இருக்கத்தானே செய்கின்றன. ஆன்மா, இறைவன், நாம் எல்லாம் சேர்ந்து தானே இருக்கிறோம்.*

*நம்மைப் பார்த்தால் அவன்தானே தெரிவான்.*

*அப்படியே பார்ப்போம் என்று விட்டுவிட வேண்டும் சுவரை.*

*தானாகவே நொறுங்கி விழுந்துவிடும் சுவர். ஜகஜோதியாய் எழுந்து நிற்பான் பெருமான். எப்படி நிற்பான் அவன்?*

*போர் வீரன் கண்ணுக்கப் போர் வீரனாக எழுந்து நிற்பான் அரசனுடைய கண்ணுக்கோ மணிமுடி தரித்து செங்கோலேந்திய மன்னனாகவே தோன்றுவான்.*

*நக்கீரர் போன்ற சங்கப் புலவருக்கோ, ஜரிகைத் தலைப்பாகை, அங்கவஸ்திரம், டாணாக் கம்பு, ஏடு, எழுத்தாணியோடு தருமிக்காகச் சங்கத்தை நோக்கி வீறுநடை போட்டு வரும் கவிஞராகவே தெரிவான்.*

*குழந்தைக்கோ கருணையும் பொறுமையும் பூத்துக் குலுங்கும் தாயாகவும், காட்சி தருவான். தன்னொத்த பாப்பாவாகவும் காட்சி கொடுப்பான்.*

★★★★★★★

*சுவரை ஒதுக்கிவிட்டு இறைவனை நேருக்கு நேராகப் பார்த்தவர் சம்பந்தர். பார்த்தது மட்டுமா? இறைவனோடு நெருங்கிப் பழகியவர், உரையாடியவர், சண்டை போட்டவர். சமாதானம் ஆனவர்.*

---

ஞானப்பொருள் - உண்மை. கடவுள்த் தத்துவம். மெய்ப்பொருள். வானின் - மேகத்தைப் பார்த்து.

*குறிப்பு: மகான் மாதிரித்தான் மகானின் இடமும். மக்கள் உள்ளத்தை மகானைப் போலவே புனிதப்படுத்தும் மகான் தங்கும் இடமும். தற்காலத்திலும் இந்த அனுபவத்தை பார்க்கிறோம். ஜவஹர்லால் நேரு சொல்கிறார், ''இந்தியா முழுவதையும் காந்தி (பாபுஜி) சுற்றிச் சுற்றி வந்தார். அவர் காலடி படாத இடம் இல்லை என்றே சொல்லாம். அவர் பாதம் பட்ட ஒவ்வொரு இடமும் மக்கள் வழிபடும் புனித ஷ்தலங்களாகிவிட்டன'' என்று. அப்படியானால் இறைவன் அமர்ந்தருள் பாலிக்கும் மயிலாடுதுறை!*

*அளவிட முடியுமா அதன் அருமையை! அதிசய பாவம் செய்யுளின் ஓசையில் அப்படியே கிடக்கிறது.*

***''வானின் மயி லாடுதுறையே''***

அவர் கண்ணுக்கு எப்படித் தெரிகிறான் பெருமான். விபரம் தெரியாத கோமாளியாகவே தெரிகிறான் இறைவன்.

இனி, எல்லையற்ற அழகும் தூய அன்பும் நிறைந்தது சைவ சமயப் பண்பாடு. பாம்பின் வாய்ப்பட்ட தேரை போல, சமண-பௌத்த மதங்களால் குரல்வளை நெறிக்கப்பட்டு கண்விழி பிதுங்கி உயிருக்குப் போராடியது சமயப் பண்பாடு.

அதை மீட்கவும், அநீதியைத் தொலைத்துக் கட்டவும் கட்டிய வேட்டியோடு ஓடிவந்தவர் ஞானசம்பந்தர்.

வீடு வேண்டாம், வாசல் வேண்டாம், நன்செய் வேண்டாம், புன்செய் வேண்டாம், பாலும் வேண்டாம், பழமும் வேண்டாம், யாகம், மந்திரம், தவம், ஜபம் ஒன்றும் வேண்டாம் என்று புறப்பட்டவர் சம்பந்தர்.

கையில் தாளக் கட்டையோடு தமிழகம் முழுவதும் கோயில்தோறும் சென்று விளக்கேற்றி வைத்தவர் அவர்.

நீதிதான் வேண்டும். அநீதியை ஒழித்தாக வேண்டும் என்ற வீராவேசத்தோடு தன்னையே தியாகம் பண்ணியவர் சம்பந்தர். அவர் முன் இறைவனும் கோவணாண்டி போலத்தானே காட்சி தருவான.

வயிரக்கடுக்கன், மாணிக்க மாலை, நவரத்தின கிரீடம், பொன் கழல் என்று ஆடம்பரமாகவா நிற்பான் பெருமான்.

உடம்பெல்லாம் சாம்பல் பூச்சு. தலையிலோ சிக்குவிழுந்த சடை. அதில் பிறைச்சந்திரன் வேறு. அரையிலோ கோவணம்.

இப்படி வந்து காட்சி தருகிறான் பெருமான். அவர் விரும்பியதும் அப்படி ஆளைத்தானே.

அந்தப் பெருமானிடமே கொஞ்சம் இடக்காகவே கேட்கிறார் பெருமான்.

எப்படி,

"இங்கே (கோலக்கா என்னும் ஷ்தலத்தில்) பொய்கையில் வயதுக்கு வந்த பெண்கள் உல்லாசமாய் முங்கி முங்கி நீராடுகிறார்கள்.

அவர்கள் நீராடும் ஏரிக்கரையில் அப்படியும் இப்படியும் உலாவுகிறீரே! இந்தக் கோலத்தில் வெட்கமாக இல்லை உமக்கு?

சின்னஞ்சிறுசுகள் பதறத்தானே செய்யும்?

கொஞ்சம் இப்படி வாரும். அவர்கள் உல்லாசமாய் குளிக்கட்டும். அப்புறம் போகலாம் அங்கு'' என்கிறார் ஞானசம்பந்தர்.

எல்லாம் பகல்க் கனவில்தான். அப்படி உணர்ச்சியோடு உணர்ச்சியாய் ஒட்டிக் கிடக்கிறான் கோலக்காவுளான் - இறைவன். எல்லாம் சம்பந்தப் பெருமானுக்குத்தான்.

இனிப்பாடல்,

*தான தான*
*தானன தான*
*தன்*
*மடையில் வாளை*
*பாய மாத*
*மார்*
*குடையும் பொய்கைக்*
*கோலக் காவு*
*ளான்;-*
*சடையும், திங்களும்,*
*சாம்பல்ப் பூச்சும்,*
*கீழ்*
*உடையும் கொண்ட*
*உருவம் என்கொ*
*லோ! (81)*

---

வாளை - வளமான கொழுத்த வாளை மீன்கள். குடையும் - முங்கி முங்கி மகிழ்ந்து நீராடும். திங்கள் - பிறைச்சந்திரன். கீழ்உடை - கௌபீனம் - கோவணம். உருவம் என்கொல் - இது என்ன கூத்து. அங்குபோய் நடமாடுகிற நடமாட்டம்!

*11. உலகிலேயே உயர்ந்தவன் மனிதன். மனிதனுக்கு நிகராக உலகில் ஒன்றும் இல்லை. ஆனாலும் ஆடு, மாடு போலத்தான் முதலில் இருந்தான். படிப்படியாக மனிதனாக உயர்ந்துவிட்டான்.*

★★★★★★★

*தனக்கு வேண்டிய உணவை - தவசங்களை உண்டு பண்ணினான். சமைத்தான். சாப்பிட்டான். அப்படியே உழுது பயிரிட்டு ஒன்றை உண்டாக்கிவிட்டான். பருத்தியிலிருந்து நூல் நூற்று, நெய்து ஆடையாக செய்து கொண்டான். அதைக் கட்டியும் கொண்டான்.*

*ஆடு, மாடுகளை விட்டு விலகிவிட்டான். கையால் வேலை செய்வதால் அது என்ன, இது என்ன என்று யோசிக்க நேர்ந்தது. யோசனை உள்ளே, உள்ளே போனது. ஞாபகம், அடையாளம், சிந்தனை, எல்லாம் விரிவடைந்தன.*

*வாழ வழி கண்டதால் புருஷன் பெண்டாட்டி ஆனார்கள். தாய், தந்தையர், குழந்தை குட்டிகள் என்று குடும்பம் உண்டா கியது. கல்யாணம் என்கிற ஒன்றையே கண்டுபிடித்துவிட்டான் மனிதன்.*

*கூட்டம் பெருகப் பெருக வார்த்தை, மொழி, எழுத்து, ஆடல், பாடல் என்று வந்துகிவிட்டன.*

*தெரு, ஊர், நாடு என்றெல்லாம் வளர்ந்து, அரசியல், செல்வம், சமயம், வழிபாடு கலை பெருகி, மனித சமுதாயம் தனி உலகமாக இருக்கிறது.*

★★★★★★★

*இப்படி ஒரு தனி நிலையை உருவாக்கிக் கொடுத்தது அறிவு. அதாவது ஞான ஒளி.*

*நேற்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி அறிவு என்கிற ஒளி - ஞான ஒளி இல்லை என்றால் ஆடு, மாடு போலத்தான் மனிதன். ஆனாலும் ஒன்று. மனிதனால் மனிதனாகவும் இருக்க முடியும், விலங்காகவும் வாழ முடியும். வேறு எந்தப் பிராணியாலும் அப்படி முடியாது. அதனதன் நிலையில்தான் நிற்க முடியும், அப்படி இப்படி என்று மாறமுடியாது. நிச்சயமாக எந்த ஒரு பிராணியும் மனிதனாக முடியாது. யானை*

யானையாகத்தான் இருக்கும். அதனால் குதிரையாகவும் முடியாது. மனிதனாகவும் முடியாது. மனிதனோ மனிதனாகவும் இருப்பான். அப்படியே குதிரையாகவும் இறங்குவான், தெய்வமாகவும் உயர்வான்.

இவ்வளவுக்கும் காரணம் அறிவு.

*******

அறிவைக் கொடுக்கிறது கல்வி. அறிவுக்காகவே கல்வி. வெளிச்சத்துக்காகவே கல்வி. ஆனால் இன்றையக் கல்வி மூடத்தனத்தை வளர்க்கிறது. இருட்டுக்குள் தள்ளி விடுகிறது. காரணம் என்ன

சொல்லிக் கொடுப்பதை - அதாவது பாடம் நடத்துவதையே, அதைப் படிப்பதையே, மனனம் பண்ணுவதையே கல்வி என்று ஏமாந்ததுதான்.

அதுவும் வார்த்தைகள் மூலம், வார்த்தைகளையே மென்று அசை போடுவதன் மூலந்தான் படிக்கிறது என்று ஆகி விட்டது.

உண்மையைக் கண்ணுக்குக் காட்டாமலே வெறும் வார்த்தைகளையே அளந்து அளந்து கொட்டினால் வெளிச்சம் எங்கிருந்து வரும்.

உண்மையைப் பார்ப்பதுதான் கல்வி. முதலில் கண்ணால் பார்க்க வேண்டும். பிறகு மனக்கண்ணால் பார்க்க வேண்டும் உண்மையை.

மனக்கண்ணில் நிற்கிற எதுவும் வீண் போகாது. உணர்ச்சியை அது கிளறிக் கொடுக்கும். புஷ்பத்தை வண்டு கிளறிக் கொடுப்பது போலக் கிளறிக் கொடுக்கும்.

*******

மருத்துவம், பொறிஇயல், ஓவியம், நடனம், வணிகம், உழவு, முதலிய விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பங்களைச் செயல் மூலம் காட்ட வேண்டும். செயல் மூலம் கற்கிற ஒருவன் அதுபற்றி விசாரிக்கும் விபரங்களைத் தான் வார்த்தைகளில் காட்ட வேண்டும்.

ஒழுக்கம், பண்பாடு முதலியவற்றை பெற்றோர் மூலம், ஆன்றோர் சான்றோர் மூலம், முக்கியமாகக் குடும்பம், சமுதாயம் இவைகளின் மூலம் உணர்த்த வேண்டும்.

புத்தகங்கள் மூலம் தெரிய என்ன இருக்கிறது.

பாடப்புத்தகம், பாடம், பரீட்சை இவைகள் மூலம் கற்பதெல்லாம் வெறும் வார்த்தைகளைத் தான். உணர்ச்சியோ, ஒளியோ இல்லாத சக்கைகளைத்தான்.

*******

பாலையும் காட்டாமல் மோரையும் காட்டாமல் 'உறை தயிர்' பற்றி விரிவுரை ஆற்றினால் என்ன தெரிய முடியும்.

பாலை இத்தனை டிகிரிக்குச் சூடு பண்ணி இவ்வளவு நேரம் குளிர வைக்க வேண்டும். சூடு தணிந்து பால் ஆறும். ஆறிய பாலில் இத்தனை துளி மோர் விட வேண்டும். பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும். இவ்வளவு நேரம் ஆனபின் தயிர் ஆகும் அது'' என்று பாடமே நடத்தி அதில் பரீட்சையும் நடக்கிறது அந்த, பரீட்சையில் தேறியும் விட்டான் ஒருவன்.

பல வருடங்களான பிறகும் இதுதான் பால் என்று தெரியாது. மோரும் தெரியாது அவனுக்கு.

மேற்படி பரீட்சையில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றவனிடம், பாலையும் மோரையும் கொடுத்து, இதைத் தயிராக்கு என்றால் ஆக்க முடியுமா அவளால்.

தயிரைக் கடை, வெண்ணெய் எடு, நெய்யை உருக்கு என்றால் என்ன செய்வாள் அவள். பரக்கப் பரக்க விழிப்பாள்.

ஆனால் தயிரின் வரலாறு, தயிரைக் கடையும் முறை, நெய்யுருக்கும் வழி என்று பிரசங்கப் பண்ணச் சொன்னால் மணிக்கணக்கில் பேருரையாற்றுவாள். ஆயிரத்தெட்டு மேற்கோள்களை அதில் போட்டுக் காட்டுவாள். டாக்டரேட்டுக்காக 'நான் கண்ட புதுவழி' இது என்று ஆராய்ச்சியை எடுத்து விடுவாள்.

எல்லாம் வார்த்தைகள். வார்த்தைகள், ஒரே வார்த்தை மயம்.

தயிரும் இல்லை, மோரும் இல்லை, நெய்யும் இல்லை. மேற்கோள், ஆராய்ச்சி, சொல்லடுக்கு இவைதான்.

இப்படிப்பட்ட கல்வி அறியாமையை மட்டும் உண்டாக்குவதில்லை. தடித்தனம், சோம்பல், பித்தலாட்டம்,

கொடுமை, திருட்டுத்தனம், அடிமை மோகம், சுயநலம், பகட்டு, ஆடம்பரம் என்று பலபல நோய்களை உண்டாக்குகிறது. சமுதாயத்தையே நஞ்சாக்கி விடுகிறது.

★★★★★★★

மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், ரசிகமணி டி.கே.சி. ஜார்ஜ்பெர்னாட்சா, மகாள் ராமானுஜர் போன்ற உத்தமர்கள் எல்லோரும் மனுசனை இருட்டுக்குள் தள்ளி விடுகிறதே இந்த வார்த்தைப் பந்தல் - அதாவது புத்தகப் படிப்பு என்று வருந்தினார்கள். அதன் தீமையை எடுத்துரைத்தார்கள்.

உண்மைக்கல்வியே வேண்டும். பொய்யான கல்வி தேவை இல்லை என்றார்கள். படிப்பை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. படிக்க வேண்டியதைப் படி, மனுசனாகப் படி என்றுதான் சொன்னார்கள்.

கல்வியைத் தெய்வமாக மதித்தவர்கள் அவர்கள். இல்லை என்றால் அப்படி வருமா சொல். உண்மையே வேண்டும். பொய் வேண்டாம் என்று.

எத்தனையோ பேர் இப்படி எல்லாம் சொன்னார்கள். ஆனாலும் போலிக் கல்வியை ஒழிக்க முடியவில்லை.

எல்லாம்வல்ல சிவபெருமானே வெறும் புத்தகப் படிப்பு மூளையைக் குழப்பி விடும் என்றார். அதனால் கிறுக்கு உண்டாகும் என்றும் சொன்னார். ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது. பள்ளிக் கணக்கு புள்ளிக்கு ஆகாது என்பதை விளக்கிக் காட்டினார். ஆனாலும் ஆராய்ச்சியாளர்களை, புத்தகப் பேய்களை வழிக்குக் கொண்டு வர முடியவில்லை.

சிவபெருமானே திணறித் தான் போனார். ஆராய்ச்சியாளர்களை அதாவது புத்தகப் பூச்சிகளை வழிக்குக் கொண்டு வர முடியவில்லையே என்று!

★★★★★★★

இது சம்பந்தமாக ஒரு கதை, புராணக் கதை

ஜனகாதி முனிவர்கள் நால்வர்கள். நான்கு பேரும் ஒரே மாதிரிதான். ஐந்து தலைநாகத்தில் எப்படி ஒன்றாய் இருக்கின்றனவோ படங்கள் (தலைகள்) அப்படி ஒரே நினைப்பு, ஒரே ஆராய்ச்சி, ஒரே முடிவு அவர்களுக்கு.

ஆன்ம தத்துவம், கடவுள்த் தத்துவம் பற்றி அளவுக்கு மீறி ஆராய்ந்தவர்கள் அவர்கள், பல விளக்கங்களைக் கண்டவர்கள். விளக்கம் ஒவ்வொன்றுக்கும் சூத்திரம் உண்டாக்கியவர்கள்.

சூத்திரம் ஒவ்வொன்றிலும் முடிச்சுகள் பல இருக்கும். அவர்கள்தான் அவிழ்க்க வேண்டும் முடிச்சை. சில சமயம் எப்படி அவிழ்ப்பது முடிச்சை என்பதை மறந்து விடுவார்கள். அப்பொழுது முடுச்சு ஒன்று பத்தாகிவிடும்!

ஆண்டவனாகப் பார்த்து இரக்கப்பட்டு பிய்த்து உதறி உருவி எடுத்தால் தான் உண்டு. அல்லாதபட்சம் முடிச்சு படுமுடிச்சுத்தான். அது காரணமாகவே அவர்கள் ஞானக்குன்றுகளாகி விட்டார்கள். ஆராய்ச்சிக் கடலாகி விட்டார்கள்.

*******

நெருப்புச் சுடும் என்பது தெரிந்த விஷயந்தான். நெருப்பைக் கொண்டு பால் காய்ச்சுவோம். பண்டம் பணியாரம் செய்வோம், சாதம், குழம்பு, அவியல், பொரியல் வைப்போம்.

இவ்வளவு போதும் என்று நிறுத்திக் கொண்டு விட்டோம் நாம். ஆனால் அவர்கள் எதையும் அப்படி நிறுத்தி வைக்கமாட்டார்கள்.

நெருப்பில் நூற்றெட்டு வகை என்பார்கள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உடம்பு என்பார்கள். தேவ நெருப்பு, மனுச நெருப்பு, ராட்சத நெருப்பு, காட்டு நெருப்பு, வீட்டு நெருப்பு, உடல் நெருப்பு, உயிர் நெருப்பு என்று பெயர் சூட்டுவார்கள். ஒவ்வொன்றுக்கும் விதி வகுத்து சூத்திரம் பண்ணியும் விடுவார்கள்.

பிறகு எப்படி இருக்கும் நிம்மதி? அவர்களிடம்? ஒரே குழப்பம் மண்டைக்குள். வெடித்து விடும் போல ஆகி விட்டது மண்டை அவர்களுக்கு.

சிவபெருமானிடம் வந்தார்கள். முறையிட்டார்கள். மனம் அமைதி பட வழிகாட்ட வேண்டும் என்று மன்றாடினார்கள்.

சிவபெருமானுக்குத் தெரியும். பேச்சுக் கொடுத்தால் இவர்களிடம் ஆபத்தாய் போய் விடும் என்று.

அப்படியே கோவிலை ஒட்டி இருக்கிற பெரிய ஆலமர நிழலுக்கு முனிவர்களை அழைத்துப் போனார் பெருமான்.

ஆலிலை, பூ, காய், பழம், குச்சி என்று அவர்கள் முன் போட்டார் பெருமான். பார்ப்பதற்குத்தான்.

முனிவர்களும் பார்த்தார்கள். பார்த்துக் கொண்டே இருந்தார்கள். "அடடா! என்ன பச்சை இதில். எத்தனை கோடி வருஷமா இந்தப் பச்சை நிறம் ஆலிலையோடு தொடர்ந்து வருகிறது என்று அதிசயப்பட்டார்கள்.

பூ ஒரு நிறம், காய் ஒரு நிறம், பழம் ஒரு நிறம், எல்லாம் ஒரே அதிசயம்.

இந்தச் சின்னஞ்சிறு விதைக்குள்ளே இவ்வளவு பெரிய ஆலமரம்? அப்படி எத்தனை ஆலமரம் இந்த வித்துக்குள். முன் எத்தனை? பின் எத்தனை?

ஆலமரம் என்கிற தத்துவமே கடுகளவு வித்துக்குள் எப்படிச் சப்பணம் போட்டு உட்கார்ந்திருக்கிறது என்று ஒரே வியப்பு அவர்களுக்கு. அற்புதத்தையே கண்ணால் கண்டார்கள்.

அற்புதம் தேனாய் இறங்க இறங்க மண்டைக்குள் கிடந்த நூலாம் படை, வலைப் பின்னலாய் மண்டிக் கிடந்த நூலாம்படையே கலைய ஆரம்பித்தது.

நிம்மதி கிடைத்து விட்டது முனிவர்களுக்கு.

*******

சேய்ஞலூர் என்னும் ஷ்தலத்துக்கு வந்தார் சம்பந்தர். பெருமானை வழிபட்டார் சம்பந்தர். ஒரே ஆனந்தம் சம்பந்தருக்கு. இதுவரை காணாத ஒன்றைக் கண்டதுபோல் இருந்தது ஞானசம்பந்தப் பெருமானுக்கு.

இப்படித்தானே சனகாதி முனிவர்களும் ஆனந்த பரவசத்தில் திளைத்திருப்பார்கள் என்று மின்வெட்டுப் போல தட்டியது ஒரு பொறி. ஞானசம்பந்தருக்குத்தான்.

ஊனை, உயிரை, உணர்ச்சியையே குழைத்துப் பிசைகிறது அந்த ஒளி. பாடலாகவே எழுந்து ஒளிவீசுகிறது அந்த ஒளி.

தான தான
தான தான
தன்ன தன்ன
தன்
நூல்அ டைந்த
கொள்கை யாலே
நுன்அடி கூடுதற்
கு
மால் அ டைந்த
நால்வர் கேட்க,
மாற்றமே சொல்லிடா
மல்
ஆல் அ டைந்த
நீழல் மேவி,
அருமறை சொன்னதென்
னே
சேல்அ டைந்த
தண்க ழனிச்
சேய்ஞ்ஞலூர் மேயவ
னே! (82)

---

நூல் அடைந்த கொள்கையால் - வெறும் நூலறிவு - சாஷ்திர ஆராய்ச்சி நூலாம்படை போலச் சுற்றி உணர்ச்சியை மூடி விட்டது. உண்மையை அமிழ்த்தி விட்டது. அதனால் நிம்மதியும் போய் விட்டது. மாலடைந்த நால்வர் - மயக்கத்துக்கும் குழப்பத்துக்கும் இரையான சனகாதி முனிவர் நால்வரும். நுன் அடி கூடுதற்கு கேட்க - உண்மையைக் கண்டு தெளிந்து அமைதி பெற உன்னிடம் வேண்டினர். 'பெருமானே நீர்' என்ன செய்தீர்? நீழல் - நிழல். அருமறை சொன்னதென்ன - உண்மை ஒளியை நேருக்கு நேராகக் காட்டி விட்டீரே, பேச்சே இல்லாமல் காட்டி விட்டீரே அது எப்படி. சேல் - கெண்டை மீன். தண்கழனி - குளிர்ந்த நீர்வளம் கொண்ட வயல். நன்செய் - சேய்ஞ்ஞலூர் மேயவனே - சேய்யநனூரில் எழுந்தருளி அருள் பாலிக்கும் வள்ளலே! எப்படித் தெளிய வைத்தீர் அவர்களை?

குறிப்பு - ரசிகமணி, டி.கே.சி.யிடம் ஒருவர் வந்தார். இளைஞர் அவர். ரசிகமணி அவரிடம் 'என்ன செய்கிறீர்கள்' என்றார்கள். அண்ணாமலைப்

*நண்பர் ஒருவருக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் ரசிகமணி எழுதிய கடிதத்தில் ஏட்டுக்கல்வி பற்றி ஒரு பகுதி.*

*ரசாயனக் கலையை எவ்வளவெல்லாமோ கஷ்டப்பட்டு மாணவர்கள் கற்கிறார்கள். கூறை நாட்டுச் சேலைகளுக்கும், காஞ்சிபுரம் சேலைகளுக்கும் உபயோகப்படுத்துகிற நூலில் ஏற்றும் சாயம் எப்படிச் செய்யப்படுகிறது என்று அக்காள் தங்கைக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? சொன்னால் அவர்கள் எவ்வளவோ ரசிப்பார்களே!*

*சென்னையில் குழாய்களில் தண்ணீர் வரத்துக் குறைந்து விட்ட காரணமாக பம்புகள் வைத்து தண்ணீரை இறைத்துக் கொள்கிறார்கள். சயின்ஸ் படித்தவர்கள் பம்பு அடிக்கிறதிலுள்ள ரகசியத்தை தங்கள் அக்காள் தங்கைகளுக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? ரொம்ப கஷ்டம். முடியாதுதான்.*

★★★★★★★

*இன்னொரு கடிதத்தில் ''டெக்ஸ்ட் புத்தகங்கள் சயின்ஸைச் சொல்லிக் கொடுத்து விடுமா? இதுவரையும் அவைகள் ஒன்றையும் சொல்லிக் கொடுக்கவில்லை என்றால் மிகையல்ல. டார்வின், எடிசன் முதலியவர்கள் நம்முடைய மாணவர்கள் மாதிரி டெக்ஸ்ட் புத்தகங்களையா கட்டிக் கொண்டு அழுதார்கள். விஷயங்களோடு நேர் நேராகக் கலந்தார்கள். அந்தச் சன்னிதியில் நின்றே தியானித்தார்கள். ஒளி பிறந்தது. ஒளியைப் பிறக்க ஒட்டாமல் அமிழ்த்தி விட அல்லவா செய்து விடுகின்றன டெக்ஸ்புக்குகள்.*

★★★★★★★

---

***பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. தமிழ் படித்து முடித்திருக்கிறேன் என்றார் இளைஞர். உடனே ரசிகமணி சொன்னார்கள். ''படிப்பை முடித்து விட்டீர்கள் அல்லவா, அப்படியானால் தமிழை - பாட்டைச் சொல்லலாம். உணர்ச்சிக்குள் போய் தமிழ் எளிதில் கலந்து விடும். தடை ஒன்றும் இல்லை. எல்லாம் விலகி விட்டது'' என்று.***

***உண்மையைப் பார்க்க விடாமல் திரை போட்டு விடுகிறது ஏட்டுக்கல்வி. கண்ணில்க் கண்டு கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு நேராகப் பார்த்தால் அல்லவா தெளிவு வரும். நம்பிக்கை வரும். உணர்ச்சி ஊறும். உண்மையானது தீபச் சுடராய் ஒளிவிடும். அப்படிப் பார்க்க விடாமல்த் தடுக்கிறது வார்த்தை - வெற்றுகை***

சனகாதி முனிவர்களுக்கு உண்மையை விளக்கினாரே பெருமான். அப்படியல்லவா கையில் எடுத்துக் கொடுக்கிறார். உண்மையை டி.கே.சி.

அடடா! என்ன அற்புதம் என்று வியந்து பரவசப்பட்டார் ஞானசம்பந்தர். இப்பொழுது அப்படி ஒரு ஞானசம்பந்தர் இல்லையே.

★★★★★★★

விஷயத்தைப் பர்க்க வேண்டும்.தொட்டுப் பார்ப்பது போல ஒட்டி நின்று பார்க்க வேண்டும். அப்பொழுது உண்மை வெளிப்படும். உணர்ச்சி ஊறும். ஆனந்தமாய்ப் பொங்கும் அந்த உணர்ச்சி.

பக்தியாக மலரும். காதலாக மணக்கும். கமகம என்று அரை மைல், ஒரு மைல், பல மைல் தூரத்துக்கே மணக்கும் அந்த வாசனை.

கால வரையறை இல்லை. இடவரையறை இல்லை. எங்கும், எப்பொழுதும் மணக்கும். மணந்தவண்ணமாக மலரும்.

★★★★★★★

விஷயத்தோடு ஒட்டவில்லை மனம் என்றால் வார்த்தைதான் இருக்கும். இலக்கணம், விதி, சூத்திரம், ஆராய்ச்சி என்று கூத்தாடும் வார்த்தை. பேய்க்கூத்தே ஆடி விடும் வார்த்தை - வெறும் வார்த்தை.

★★★★★★★

நம்பியாண்டார் நம்பிகள் பக்தர். உண்மையான பக்தர். பண்டிதர், சாஷ்திரி, வித்வான், தர்க்கக்கடல், வியாகரண பூஷணங்களோடெல்லாம் பேச்சுக் கொடுத்துப் படாதபாடு பட்டிருக்கிறார் அவர். தொட்டாலும் விடாது தொட்டியப் பிசாசு என்பார்களே அதுபோல விரட்டி விரட்டி தொடர்ந்து வந்து பரண்டும் அந்தச் பிசாசுகளின் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்.

நம்பியாண்டார் நம்பிகளின் அனுபவம் எப்படி வருகிறது என்று பாருங்கள்.

*வித்தகச் செஞ்சடை*
*மேயானைச், சிற்றம்*
*பலவன்தன் னைச்*
*சித்தகக் கோயில்*
*இருத்தும் திறத்துமிக்*
*கார்க்கேஅல் லால்;*
*புத்தகப் பேய்களுக்(கு)*
*எங்கித்த தோஅரன்*
*பொன்அடி யே.*

---

வித்தகம் - பெருமை. எங்குதல் - எட்டுதல். பொன் அடி - திருவருள். புத்தகப் பூச்சுகளுக்குத் தெரியுமா உண்மை. வார்த்தை வரும். பொருள் வராது அவர்களிடம்

# அன்னங்காள் அன்றில் 'காள்'! உங்களைத் தான் நம்பி இருக்கிறேன்

12. உணர்ச்சி இல்லை என்றால் அங்கு அறிவு முளைக்காது. முளைப்பது போலத் தெரியும். அப்படித் தெரிவது அறிவு இல்லை. அது புல்லறிவு. மலட்டு அறிவு.

அது எப்படிப் பக்தியாகப் பழுக்கும். காதல் அதில் கனியவா செய்யும்.

★★★★★★★

உணர்ச்சி மயமானவர் சம்பந்தர் உண்மையான ஞானி, பரம ஞானி அவர். கடவுள் தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கிறவர் சம்பந்தர். அதுவே பக்தியாகப் பூத்தது. காதலாய்க் கசிந்து தேன் சொரிகிறது.

எப்படி என்று பாருங்கள். ''தன்மடியிலேயே தூக்கி வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான் பெருமான் என்னை. இப்பொழுது காணவில்லை அவனை! எங்கே ஒளிந்து நிற்கிறான்? தவியாய் தவிக்கிறது உள்ளம். அன்னங்களே! அன்றில்களே! அவளிடம் போய் எனக்காகச் சொல்ல மாட்டீர்களா? அங்கே இங்கே என்று உலாவிக் கொண்டுதானே இருக்கிறீர்கள். எனக்காக ஒரு தடவை...''

பொன்னம்பூம் கழிக்கானல்
புணர்துணையோ(டு) உடன் வாழும்
அன்னங்காள்! அன்றில்காள்!!
அகன்றுபோய் வருவீர்கள்,-
கல்நவில் தோள்/சிறுத்தொண்டன்
கணபதீச் சுரமேய
இன்அமுதன் இணை அடிக்கீழ்
எனதல்லல் உரையீரே? (83)

பொன்னம்பூகழிக்கானல் - நெடுஞ்கழி குறுங்ககழி என்று பல முகத்துவாரங்களோடு கூடிய கடல்ப் பகுதி. கானல் - கடற்கரை - உப்பங்கழி கொண்ட கடல் முற்றம். பொன்னம்பூ - தங்கம் போல் மஞ்சள் நிறத்தில் பூத்த புஷ்பங்கள். புணர்துணை - கணவன் மனைவி என்று ஜோடி ஜோடியாக நடமாடும். கல் நவில் தோள் - கருங்கல் பாறையே. தன்னில் ஒரு சிலையை - தோளை - வீரத் தோளையே வரைந்தபின், சிறுத் தொண்டன் தோள் இப்படித்தான் இருக்கும் என்று காட்டினால் எப்படி இருக்குமோ. அப்படியே இருக்கும் சிறுத்தொண்டநாயனார் தோள்.

குறிப்பு : சிறுத்தொண்டநாயனார் (பரஞ்சோதியார்) அவதரித்த புண்ணிய ஷ்தலம் கணபதீச்சுரம் (செங்காட்டாங்குடி) போரின் கொடுமையைக் கண்டு மனம் நொந்து தாம் வகித்து வந்த சேனாதிபதி உத்யோகத்தையே உதறி எறிந்தவர் சிறுத்தொண்டர்.

செங்காட்டாங் குடியில் கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கு தொண்டு செய்து வந்தார் பரஞ்சோதியார். ஆடம்பரமும் அதிகாரமும் மிக்க சேனாபதி பதவி எங்கே, அடியார்க்கு அடியராய் பணிவிடை செய்யும் தொண்டின் எளிமை எங்கே.

தியாகம் என்றால் அதுவல்லவா தியாகம். பக்தி என்றால் அதுவல்லவா பக்தி.

★★★★★★★

ஞானசம்பந்தர் கணபதீச்சுரம் வந்தார். சிறுத் தொண்டர் அவதரித்த இடம் அல்லவா என்கிற நினைப்புவந்தது. நினைக்க நினைக்க சம்பந்தரின் உள்ளம் குழைந்தது. ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கோவிலுக்கு வந்தார். செங்காட்டாங்குடி உடையாரை வணங்கி வழிபட்டார். எப்பொழுதும் தன் இதயத்தில் குடிகொண்டிருக்கும் பெருமானே தன் எதிரில் நின்று காட்சி கொடுக்கிறதாகத் தெரிந்தது ஞானசம்பந்தருக்கு.

'என்ன இது' என்கிற படபடப்பில் நெஞ்சைத் தடவிப் பார்க்கிறார் சம்பந்தர். 'இதோ ஆஜர்' என்கிறார் இறைவன். சம்பந்தரின் உள்ளத்தில் அமர்ந்தபடியே தான்.

வணங்கி வழிபட்ட ஆனந்தப் பெருக்கோடு வந்தார் சம்பந்தர். வழக்கமாகத் தங்கும் மடத்துக்கே வந்து சேர்ந்தார்.

என்ன அதிசயம்! சம்பந்தர் உள்ளம் செங்காட்டாங்குடிக் கோவிலை நோக்கியே போகிறது. அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை சம்பந்தரால். என்ன படுகிறது சம்பந்தருக்கு. "இதயத்தில் இருந்த பெருமான், நம் பெருமான், எப்படியோ நழுவி இறங்கி கோயிலிலேயே தங்கிவிட்டான். ஏமாற்றிவிட்டான் என்னை. பிரிந்துவிட்டான் என்னை" என்றே படுகிறது.

தாங்க முடியுமா ஆற்றாமையை. அன்னப் பறவை, அன்றில்ப் பறவை இவற்றை அழைத்து ஆற்றாமையைக் கொட்டித் தீர்க்கிறார் ஞானசம்பந்தர். வேறு வழி---?

கணபதிச்சுரம் அதாவது திருச்செங்காட்டாங்குடி திருவாரூர் மாயவரம் வழியில் நன்னிலத்தை ஒட்டி ஏழு மைல் தொலைவில் இருக்கிறது. திருப்புகலூர், திருமருகல் முதலிய ஷ்தலங்களை ஒட்டி இருக்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து பாடினால் போதும். ஆட்டமே வந்துவிடும் இறைவனுக்கு. பசி, தாகம் எல்லாம் மறந்துவிடும். சுந்தரர் பாடலின் வரிக்கு வரி, சீருக்குச் சீர் அபிநயம் பிடித்து ஆனந்த நடனம் ஆடுவார் பெருமான். அப்படியானால் என்னதான் ஞாபகத்தில் இருக்கும்.

இனி, எதிர்பார்த்துக் காத்திருக்கும் கழற்றறிவார் நாயனாரிடம் இந்த உண்மையை எப்படி ஒப்புக் கொள்கிறார் பெருமாள் என்று பாருங்கள்.

*என்ற பொழுதில்*
*இறைவர்தாம் எதிர்நின்(று)*
*அருளா எழும்ஒலியால்*
*"மன்றின் இடைநம்*
*கூத்தாடல் வந்துவணங்கி*
*வன்தொண் டன்*
*ஒன்றும் உணர்வால்*
*நமைப்போற்றி உரைசேர்*
*பதிகம் பாடுதலால்*
*நின்று கேட்டு*
*வரத் தாழ்ந்தோம் என்றார்*
*அவரை நினைப்பிப்பார்.*

என்ற போழ்தில் - சிவபெருமானின் ஆனந்த நடனம் ஏன் இல்லை இன்று என்று கழற்றறிவார் திகைத்தார். அப்படி அவர் திகைத்ததும், எதிர் நின்று அருளாது - நேருக்கு நேர் நின்று பதில் சொல்லாமல். எழும் ஒலியால் - அசரீரி மூலம். வன்தொண்டன் - சுந்தரமூர்த்தி. ஒன்றும் உணர்வால் - பக்தி மேலிட பாடிய பாடலைக் கேட்ட ஆனந்தத்தில் தாமதம் ஆகி விட்டது.

# சுந்தரமூர்த்தி நாயனார்

# சும்மாவா கிடைத்தது கண்

1. மனிதன் என்றால் பிரச்சனை இருக்கும். ஒன்றா இரண்டா? எத்தனையோ பிரச்சனைகள்.

எப்படி விடுபடுவது இவற்றிலிருந்து என ஒவ்வொருவனும் தவிக்கிறான். அதுவும் ஒரு பிரச்சனை ஆகி விடுகிறது.

யோசனை, ஆராய்ச்சி, திட்டம், வழிதேடல் எதுவும் தேவை இல்லை. நம்மை நாம் கொஞ்சம் மறந்து விட வேண்டும். இன்னொன்றைப் பார்க்க வேண்டும். ஆசையோடு பார்க்க வேண்டும். பரிவோடு பார்க்க வேண்டும்.

மற்றொன்றில் மனம் ஊன்றி நிற்க நிற்க பிரச்சினைகள், கவலைகள் ஒவ்வொன்றாய் கழலும். கழன்று ஓடி விடும்.

அப்பொழுதுதான் நாம் யார் என்பது தெரியும்.

அடடா! என்னுடைய ஏதிலர் (பகைவர்)களை — (கவலைகளை) இறைவனல்லவா விரட்டி விரட்டி அடிக்கிறான். ஓட ஓட அவற்றை விரட்டுகிறான். என்ன கருணை, என்ன பரிவு என்மீது அவனுக்கு என்பது நன்றாகத் துலங்கும்.

மாயவரம் சிதம்பரம் புகைவண்டி வழியில் இருக்கிறது நீடூர் புகைவண்டி நிலையம். அங்கிருந்து வடக்கே ஒன்றரை மைல் தொலைவில் இருக்கிறது நீடூர் கோவில். தமிழகம் முழுவதும் கோயில் வழிபாடு, மூர்த்தி வழிபாடு செய்து வரும் வழியில் நீடூர் வந்தார் சுந்தரர். கோவிலக்குப் போனார். மூர்த்தியை வழிபட்டார். அப்படியே பரதத்துவத்தோடு ஈடுபட்டுத் திளைத்தார். என்ன ஆனந்தம் அது. மறக்க முடியுமா அந்த ஆனந்தத்தை.

*தான தன்னன*
*தன்ன தன்னை*
*தான தன்னை*
*தான தன்*

*துன்னு வார்சடைத்*
*தூமதி யானைத்,*
*துயர்உ றாவகை*
*தோன்றுவிப் பானைப்,*
*பன்னும் நான்மறை*
*பாடவல் லானைப்*
*பார்த்த னுக்கருள்*
*செய்தபி ரானை!*
*என்னை இன்னருள்*
*எய்துவிப் பானை,*
*ஏதிலார் தமக்(கு)*
*ஏதிலன் தன்னை*
*புன்னை மாதவி*
*போதலர் நீடூர்ப்*
*புனித னைப்பணி*
*யாவிடல் ஆமோ.* *(84)*

2. குழந்தை என்றால் அடம் பிடிக்கத்தான் செய்யும். வம்பு பண்ணத்தான் செய்யும்.

பருப்பும் நெய்யும் போட்டுப் பிசைந்த சாதத்தை வைத்துக் கொண்டு எத்தனை தடவை தான் கூப்பிடுவாள் தாய். அசைந்து கொடுக்க மாட்டேன் என்கிறது குழந்தை. பொம்மையில், அவ்வளவு ஈடுபாடு குழந்தைக்கு.

---

துன்னுாவர் சடை - அவிழ்க்க முடியாதபடி பின்னிப் பிணைந்த நீண்ட சடை. தூமதி - பிறைமதி. பன்னும் நான்மறை - பாடப்பாடத் தெளிவு கொடுக்கும் பாடல். இசையோடு கூடிய நானாவிதமான பாடல். ஏதிலார் - பகைவர். மனிதனுக்குப் பகை பிரச்சனையும் கவலையுந்தான். மாதவி - குருக்கத்தி. போதலர் - மொட்டவிழும் பூ.

தரதர என்று இழுத்து வருகிறாள் குழந்தையைத் தாய். உட்கார வைக்கிறாள். உருட்டி உருட்டிச் சாதத்தை கொடுக்கிறாள்.

சாப்பிடுவது போலப் பாசாங்கு பண்ணுகிறது குழந்தை. ஆனால் உள்ளே இறங்க மாட்டேன் என்கிறது சாதம்.

எப்படியும் போய்த் தொலை என்று விட்டுவிடுகிறாள் குழந்தையை.

*******

அப்படியே கையைக் கழுவியாவிடுகிறாள் குழந்தையைத் தாய். அன்பாலும், அருளாலும், அரவணைப்பாலும் சொக்கத் தங்கமே ஆக்கி விடுகிறாள் குழந்தையைத் தாய்.

குற்றம் பொறுக்கும் பொறையுடைமை தான் குற்றத்தைக் கழுவும் நன்னீர். கழுவித் தூய்மைப்படுத்தும் அருள்மழை.

தாயிடம் எப்படி அருளும் அன்பும் பொறையுடைமையாய் நின்று காப்பாற்றுகிறதோ அப்படியே இறைவனிடமும் நின்று காப்பாற்றுகிறது. உலகம் முழுவதையுமே - பேரண்டத்தையே காக்கிறது அது.

இனிப் பாடல்

குற்றம் ஒன்(று) அடி
    யார்உளர் ஆனால்க்
கூடு மா(று) அத
    னைக்கெடுப் பானை,
கற்ற கல்வியி
    னும்இனி யானைக்
காணப் பேணும்
    அவர்க்கெளி யானை
முற்ற அஞ்சும்
    துறந்திருப் பானை

கல்வி - கலை, கவி. காணப்பேணும் அவர் - உண்மையைக் கண்டு களிக்கத் துடிக்கிறவர்கள். ஞானிகள். முற்ற அஞ்சும் துறந்திருப்பான் - பசுவை எடுத்துக் கொண்டால் பாலும் அவன்தான். தயிர், நெய், கோமயம், சாணம் ஆக ஐந்தும் அவன்தான் - இறைவன்தான்.

*முவ ரில்முதல்*
*ஆயவன் தன்னைச்*
*சுற்றும் நீள் வயல்*
*சூழ்திரு நீடூர்த்*
*தோன்ற லைப் பணி*
*யாவிடல் ஆமோ? (85)*

3. வீட்டில் உள்கட்டு அறை ஒன்றில் இருக்கிறோம். கிழக்கு பார்த்த வீடு. அறை சிறிது ஒடுக்கமானது. அறையின் கீழைச் சுவரில் சிறிய சாளரம் ஒன்று. காலை வேளை, ஆனாலும் கோடைகாலம் ஆனதால் ஒரே புழுக்கம்.

கீழ்புறச் சாளரத்தின் கதவுகளை விரியத் திறந்து விட்டோம். காலைச் சூரியனின் ஒளிக்கற்றை சாளர வழியாகப் புகுந்து சுவரில் விழுந்து சிதறுகிறது. சிதறிய ஒளித்துகள்கள் அப்படியே அந்த ஒளிக்கற்றையில் மொய்த்து ஆய்கிறது. ஆயிரம் ஆயிரமாய் பதினாயிரக் கணக்கில் மொய்த்து ஆய்கிறது ஒளித்துகள்கள்.

பார்த்துக் கொண்டே இருக்கலாம். அப்படி ஒரு அதிசயம் அதில்.

*******

இதுபோன்ற ஒரு ஒளிக்கு ப்பைபை - அதாவது ஒளி சிதறி மொய்க்கிற விந்தை, பசுவின் மடிக்குள்ளும் இருக்கிறது. ரத்தத்தோடு ஒட்டிய திரவம் அணு அணுவாய் இந்த ஒளிச் சிதளலில் விழுகிறது. விழுந்த மாத்திரத்திலேயே பால் ஆகி விடுகிறது.

பாலில் ஒரு சூடு, ஒரு சுவை, ஒரு மணம்! பாலில் தானே தயிர், நெய் எல்லாம்.

இந்த ஒளிக்கற்றையில் விழுந்து பிரிந்து போகிற ஒரு திரவம் சேர்ந்துதான் கோமயம் ஆகிறது. சாணமும் உருவாகிறது.

---

ஆனாலும் அந்த ஐந்தையும் பசுவுக்குள்ளிருந்தே திருமஞ்சனம் ஆடுகிறான் இறைவன். ஏதோ தான் தனி என்பது போல ஒரு மயக்கு மயக்குகிறான் பெருமான்.

இதைவிட வேறு என்ன அதிசயம் வேண்டும். இவ்வள வையும் பசுவா செய்கிறது. பசுவுக்குள்ளிருந்து கடவுள் நடத்துகிற காரியம் இது.

பசுவின் ஐந்து தத்துவங்களையும் - பஞ்ச கவ்வியங் களையும் மஞ்சனம் ஆடுகிறான், இறைவன் என்றால், அது வல்லவா அற்புதமான விளக்கம்.

*பாலோ(டு) ஆன்அஞ்சும்*
*ஆட்டுகந் தானை.*

இனி, சக்தி (உமாதேவி) பெருமானுடன் சேர்ந்தே இருக்கிறாள். சிவப்பரம்பொருளோடு ஊழி ஊழிகாலமாகச் சேர்ந்தே இருப்பதால் பெருமானின் அருமை சக்திக்கு மறந்தே போய் விட்டது.

பழையபடி ஞாபகத்துக்குக் கொண்டு வந்து பார்த்தும் மதித்தும் வழிபட வேண்டும். அதற்காகப் பிரிய வேண்டியதாயிற்று. பிரிந்து வந்த உமையம்மை காஞ்சி மாநகர் வந்தாள். தவம் செய்தாள். பலன் கிடைத்தது.

*அந்தம் இல்புக*
*ழாள்உமை நங்கை*
*ஆதரித்து வழிபடப் பெற்ற*
*கந்தவார்சடைக் கம்பன்*
*எம்மானை.*

எவ்வளவு பெரிய உண்மையைச் சிறிய கதைக்குள் கட்டி விடுகிறார்கள் முன்னோர்கள். இப்படிப்பட்ட கதைகள் முற்றி விளைந்து பழுத்துக் கனியக் கனியத்தான் கவி என்கிற தேன் சொட்டுச் சொட்டாகச் சொட்டும்.

கவியில் பண்பாடு வேண்டும். மெருகு வேண்டும். பழுப்பு வேண்டும் என்றால் வானத்தையும், பூமியையும் சேர்த்து ஒக்கலில் வைக்கும் கதைகள் சமுதாயத்தில் உருவாக வேண்டும்.

தமிழில் கதைவளமாக உண்டு. கதையைக் கவியாக உருவாக்கும் கலைப்பாங்கும் பூரணமாக உண்டு.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பக்தி எப்படிக் கதையைக் கவியாய் கனியச் செய்கிறது என்று பார்க்கலாம்.

*தான தன்னை*
*தன்னன தன்ன*
*தன்ன தான*
*தன் னன் ன*

*சிந்தித் தென்றும்*
*நினைந்தெழு வார்கள்*
*சிந்தையில்த் திகழும்*
*சிவன்தன் னைப்,*
*பந்தித் தவினைப்*
*பற்றறுப் பானை*
*பாலோ(டு) ஆனைஞ்சும்*
*ஆட்டுகந் தானை,*
*அந்தம் இல்புக*
*ழாள்உமை நங்கை*
*ஆத ரித்து*
*வழிபடப் பெற்ற*
*கந்த வார்சடைக்*
*கம்பன்எம் மானைக்*
*காணக் கண்அடி*
*யேன்பெற்ற வாறே!* *(86)*

---

எல்லாம் இறைவனின் அருள் என்று நினைத்தால் போதும். உத்சாகம் வந்து விடும். தைர்யமே வந்து விடும். நினைந்த உடனே நிமிர்ந்து அல்லவா நிற்கிறார்கள் அடியார்கள். எங்கிருந்து வந்தது அந்த ஊக்கம். அவனை நினைத்த மாத்திரத்திலேயே இதோ வந்து விட்டேன் என்கிறான். அப்படியா என்று பார்ப்பதற்குள் என்னுடன் அவன் நிறைந்து விடுகிறான். யார்? சிந்தையில் திகழும் சிவன். பந்தித்தவினை - பந்தி பந்தியாய் கட்டி முடிச்சுப் போட்டிருக்கிற வினைப்பயன். ஆன்அஞ்சு - பால், தயிர், நெய், கோமயம், சாணம் எனும் ஐந்து. ஆன் - பசு, கந்தம் - மணம், வார்சடை - நீண்டு பரந்த சடை. கம்பன் - கச்சி ஏம்பநாதன். கண்பெற்ற ஆறு - எத்தனை கோடி யுகங்களாய் தவம் செய்து கண்ணை முகத்தில் வைத்து அழகு பார்க்கிறது ஆன்மதத்துவம் ஏன்? அம்மையப்பனாகிய இறைவனைக் கண்டு களிப்பதற்குத்தான்.

*"காணக் கண் அடி யேன்பெற்ற வாறே"*

# அழியாத செல்வம் அல்லவா இறைவன்?

4. கடவுள் தத்துவத்தோடு சதா ஒன்றி நிற்கிறவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அதனால் தன்னை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். தன்னுடைய பிரச்சனைகள் பற்றியே யோசித்துக் கொண்டிருக்க மாட்டார்.

மற்றவர்களையும் பார்ப்பார். பசு, பூனை, வாழை, பூ, புல், வானம், சந்திரன், இருள், பகல், மழை எல்லாவற்றையும் பார்ப்பார்.

★★★★★★★

கடவுள்த் தத்துவம் ஒன்றுதான். ஒளிமயமானது. ஞானமயமானது அது. அதுதான் தனித்தனி உயிராகிறது. அந்த உயிரே தனக்கு வேண்டிய ஜடத்தை - உடம்பை எடுத்துக் கொள்கிறது. கோபம், மகிழ்ச்சி, வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம் என்றெல்லாம் நடமாடகிறது. எல்லாம் சுந்தரருக்கு நேருக்கு நேராகத் தெரியும்.

அந்த அதிசயத்தில் அப்படியே மூழ்கி விடுவார் சுந்தரர். கரைந்தே விடுவார். புதுப்பிறவியே எடுத்து வருவார்.

அப்பொழுதெல்லாம் என்ன படுகிறது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ''எங்கும் நிறைந்த இறைவனே அணுவுக்கு அணுவாக உருக்கொண்டு,' எனக்குள் புகுகின்றான். புகுந்து என்னைச் சிந்திக்க வைக்கிறான். பாட வைக்கிறாள், நடமாட வைக்கிறாள்'' என்று.

இப்படிப் படுகிறது சுந்தரருக்கு

''அணுவாகி ஓர் தீஉருக் கொண்டு

ஊனுடை இவ்வுட லம் ஒடுங்கிப் புகுந்தான்'' என்று அது தாளம் போடவே செய்கிறது.

இனிப் பாடலின் முழு உருவம்

*தான தன்னை*
*தன்னை தன்னை*
*தன்னை தன்*

*வானுடை யான்பெரி*
*யான், மனத் தானும்*
*நினைப்பரி யான்,*
*ஆனிடை ஐந்தமர்ந்*
*தான்,அணு வாகிஓர்*
*தீஉருக் கொண்(டு)*
*ஊனுடை இவ்வுட*
*லம்ஒடுங் கிப்புகுந்*
*தான்பரந் தான்;*
*நானுடைய மாடெம்பி*
*ரான்நண்ணும் ஊர்நனிப்*
*பள்ளி யே!* *(87)*

**5.** பேச்சுக்கொடுத்தால் போதும் விட மாட்டார் பெருமான். சுற்றிச் சுற்றி வருவார் நம்மை. நமக்கே தெரியாது என்னென்ன வேண்டும், தேவை என்னென்ன நமக்கு என்று. ஆனால் அவருக்கு தெரியும் நமது தேவை.

எப்பொழுது என்ன தேவையோ, அப்பொழுது அதை அதை அவரே செய்து விடுவார்.

அதற்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அவருக்கு சலாம் போடவும் வேண்டாம். லஞ்சம் கொடுக்கவும் வேண்டாம்.

---

ஆன் - பசு, அஞ்சு - பால், தயிர், நெய், கோமயம், சாணம். மாடு - செல்வம். ''யார் என் அப்பன், என் சாமி, என் செல்வம்'' - நானுடை மாடு எம்பிரான். இவ்வளவும் யார்? நம் ஊர்க்காரர்தான் - நம்ம ஆள்தான் - நம்ம திருநனி பள்ளிக்காரரேதான் கூச்சமே வேண்டாம். தாராளமாய்ப் பழகலாம், பேசலாம், நம்மைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம். அப்படிக் கவனித்துக் கொள்வார் நம்மை அவர். நனி பள்ளி இது மாயவரம் பக்கம் இருக்கிறது. ஞானசம்பந்தரின் தாயார் பிறந்த ஊர்.

''என்னுடைய செயல் ஒன்றும் இல்லை'' என்று நினைத்தால் போதும். உண்மையை உணர்ந்தால் போதும்.

உண்மையை மறந்து விடக்கூடாது. மறந்து விடாதபடி ஞாபகத்தோடு இருப்பதற்குத்தான் கோவிலுக்குப் போவது. மூர்த்தியை வழிபடுவது. அடியார்களை உபசரிப்பது.

அறுகம்புல் போதும். இல்லை ஒரு பச்சிலை போதும். அவனை நினைத்து அவன் முன் அதை வைத்து வந்தாலே போதும். மனதை விட்டு அகலாது உண்மை. உணர்சசியைப் பிசையும், குழைக்கும். நம்மை வேறொரு வஷ்துவாகவே மாற்றி விடும் அந்த உண்மை.

''எல்லாம் அவன் செயலே'' என்கின்ற உண்மை.

திருச்சோற்றுத்துறை என்னும் ஷ்தலத்துக்கு வந்தார் சுந்தரர். வழிப் பயணத்தில் - நடைப்பயணத்தில் பட்ட சிரமம் அதிகம். ஆனாலும் கோயிலை மறைத்து விடக்கூடாதே. மூர்த்தியை மறந்து விடக் கூடாதே என்ற ஆத்திரத்தில் கோவிலுக்கு வந்தார். பெருமானை வழிபட்டார். பக்தியோடு வழிபட்டார்.

கள்ளம் படம் இல்லாத பக்தியைக் கண்டு பெருமானுக்கும் ஒரே புளகாங்கிதம். அடக்க முடியவில்லை ஆனந்தச் சிரிப்பை, பெருமானால்!

அந்தச் சிரிப்பை பார்த்தால் எப்படி இருக்கும்

*இலையால் அன்பால்*
*ஏத்தும் அவர்க்குத்*
*தொலையாச் செல்வம்*
*சோற்றுத் துறையே* *(88)*

என்று பாடல் வரத்தானே செய்யும். தானாகவே வரும் பாட்டு.

---

ஒரு சிறு இலை போதும். ஆணவத்தை மடக்குவதற்கு. உணவை அது தயாரிக்கிற விந்தையும். தாவரம் முழுவதுக்கும் அது ஊட்டுகிற தாய்மையும், ஆபத்துக் காலத்துக்கு வேண்டுமே என்று உணவைச் சேமித்து வைக்கிற ஆர்வமும் நம் ஆணவத்தைக் குழைத்துப் பிசைந்து விடும். ஒவ்வொரு இலையும் பெருமானின் - சன்னிதி என்று தெரியும். அதை அவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். அதுபோதும். வேறு என்ன இருக்கிறது. கொடுப்பதற்கு நம்மிடம்!

6. தெளிவு பிறந்து விட்டால், அது உறுதிப்பட்டு விட்டால் ஒரே உல்லாசந்தான். விளையாட்டுத்தான்.

விளையாட்டென்றால் சாதாரண விளையாட்டா? கிண்டலும் கேலியுமாக வரும் விளையாட்டு. குத்தலும் பக்கவெட்டுமாய் இருக்கும் விளையாட்டு.

★★★★★★★

நான் இல்லை. எல்லாம் இறைவன்தான் என்று தெளிந்த பிறகு எப்படிச் சும்மா இருக்க முடியும். இறைவனோடு கட்டிப் புரண்டு விளையாட வேண்டியது தான். மல்லுக் கட்ட வேண்டும் என்றாலும் கட்ட வேண்டியதுதான்.

★★★★★★★

கச்சித்தளி - ஓணகாந்தன் கச்சித்தளி என்பது பூர்வமான ஸ்தலம். அங்கு வந்து இறைவனை வழிபடுகிறார் சுந்தரர். நெருக்கம் ஆகி விடுகிறது. இருவருக்கும், நெருக்கம் இறுக இறுக பக்தரின் உடைமை ஆகி விடுகிறார் கடவுள்.

கர்வமும் தைர்யமும் வரத்தானே செய்யும் பக்தருக்கு. என்ன சொல்கிறார் பக்தர் இறைவனிடம் ''அவசியம் ஏற்பட்டால் உம்மை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். செய்ய முடியும். திமிர முடியாது உம்மால். என்னை விட்டு ஒரு அங்குலம் கூட நகர முடியாது உம்மால்''

இப்படி வருகிறது உல்லாசம். எக்களிப்பு எல்லாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத்தான்.

---

குறிப்பு : ''தொலையாச் செல்வம் சோற்றுத்துறையே'' என்பதில் என்ன கர்வம், என்ன தைர்யம்? உண்மை நிமிர்ந்து நிற்கிறது அதில். சுந்தரருடைய கர்வத்தையும் தைர்யத்தையும் எடுத்துக் காட்டுகிறது தமிழ். கவியில் வைத்தே காட்டுகிறது தமிழ். திருச்சோற்றுத் துறை திருவையாறு பக்கம் உள்ளது.

*தான தன்னன*
*தன்னன தன்ன*
*தான தன்ன*
*தன்ன தன்ன*

*அற்ற போழ்தும், அ*
*லந்த போழ்தும்,*
*ஆபத் காலத்(து)அ*
*டிகேள்! உம்மை*
*ஒற்றி வைத்திங்கு*
*உண்ண லாமே*
*ஓண காந்தன்*
*தளியு ளீரே!*
*(அற்ற போழ்தும்அ)* *(89)*

---

ஒற்றி வைத்து - ஈடாக வைத்து. உண்ணலாம் - அனுபவிக்கலாம்.

நட்பு என்றால் விட்டுக் கொடுப்பதுதான். நம்மை இறைவனிடம் கொடுத்தால், இறைவன் தன்னை நம்மிடம் கொடுத்து விடுகிறான். இந்த உண்மையே கவிக்கு உருவம் கொடுக்கிறது.

# எனக்குள்தானே இருக்கிறீர்

7. மலைப்பிரதேசம், அதில் ஏராளமான காடுகள், காட்டில் அங்கங்கே நீரோடைகள். இறங்கி நீர் அருந்தி ஏறி வருவதற்கு வாய்ப்பான நீர்த்துறைகள். ஏதோ படித்துறை அமைத்து விட்டது போல் இயல்பாக அமைந்திருக்கும் ஒன்றிரண்டு நீர்த்துறை.

நீர்த்துறையை ஒட்டி அடர்ந்த புதர். புதரில் பதியம் போட்டு இருககிறது புலி. தாகம் எடுத்த மானுக்கு இது விபரம் தெரியாது. ஆவலோடு ஓடி வந்தது. நீர்த்துறையில் இறங்கியது. நீர் அருந்தியது. சுகமாக இருந்தது அப்பொழுது.

வாய்ப்பாய் மான் நிற்கிற வரை பார்த்துக் கொண்டிருந்தது புலி. வசமாய் மாட்டிக் கொண்டது மான் என்கிற நிலை ஏற்பட்ட உடனேயே புலி பாய்ந்தது மான் மேல். அப்படியே கழுத்தைக் கவ்வியது மானை. தரதர என்று இழுத்துக் கொண்டு போய் விட்டது மானை. புலிதான் - பதினாறடி பாயும் வேங்கைப் புலிதான்.

★★★★★★★

மனிதர்களுடைய செயல் - செயலின் பலன் புதரில் புலி பம்முவது போலப் பம்மிக் கிடக்கும். பூர்வ புண்ணியம், அதன் பலன் இருக்கிறவரைக்கும் பம்மியே கிடக்கும் தீவினைப்பலன்.

சரக்குத் தீர்ந்ததும் புலிப்பாய்ச்சலில் வந்து மோதும் வினைப்பயன். குத்திக் குதறி ரத்தக் காடாக்கி விடும் வினைப்பயன்.

சத்தம் கித்தம் கேட்கக் கூடாது என்று அரட்டி விடும். ஏன், குரல் வளையையே நெறிக்கும் தீவினை - தீவினைப் பலன்.

★★★★★★★

அதை யார் தடுக்க முடியும். யாருடைய ஜம்பமும் அதனிடம் செல்லாது. ஆனாலும் ஆபத்தில் சிக்காமலிருக்க வழி ஒன்று இருக்கிறது. ஒரே வழிதான். வேறு வழியே இல்லை.

*அந்த வழி எது?*

*தானன தானன*
*தான தானன*
*தன்*

*முந்திள மும்பழைய*
*வல்வினை மூடா*
*முன்*
*எந்தைபி ரானாரை*
*என்றுகொல் எய்து*
*வதே.* *(90)*

உண்மையை உணர்வதில் சிரமம் என்ன இருக்கிறது. உண்மை ஒன்று கிடைத்து விட்டால் அதை நினைத்துக் கொண்டே இருக்கலாமே.

நடக்கும் போதும் அதுதான் வரும். நிற்கும் போதும் அதுவே வரும். உட்காரும் போதும் அப்படித்தான்.

ஆனந்தமயம் என்றால் அதுதானே.

★★★★★★★

திருப்பூவணம் என்னும் ஸ்தலத்துக்கு ஒரு முறை போய் வந்தால் போதும். கோவிலுக்குப் போய் அம்பாளோடு சுவாமியைத் தரிசனம் பண்ணினால் போதும்.

கொட்டு முழக்கத்தோடு அவன் (பெருமாள்). ஆடுவது தெரியும். பக்தர்கள் பாடும் பாட்டிலும், இசையிலும் அவன் ஆடுகிற ஆட்டம் தெரியும்.

---

நாமாகவே நமக்குப் போட்டு வைத்திருக்கிறோமே ஒரு வேலி - முள்வேலி, அதைத் தாண்டி அவன் பக்கம் வந்து விட வேண்டும். அவன் கையைப் பிடிக்க வேண்டும். இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். முடிந்தால் அவன் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம். அதுதான் வழி. வேறு வழியே இல்லை. தீவினை வந்து பாயும் வரை விட்டு வைக்கக் கூடாது. அது எழுந்து பாய்வதற்கு முன்பே நம்மை அவனிடம் ஒப்படைத்து விட வேண்டம். ''எல்லாம் அவன் செயலே, நானோ, என் செயலோ என்று எதுவும் இல்லை'' என்று தெளிய வேண்டும். அப்புறம் கவலைப்பட என்ன இருக்கிறது.

பழவினையை அவன் பார்த்துக் கொள்வான். எமனையே ஒரு கை பார்த்தவன்தானே அவன்.

எல்லாம் அவன் செயல் என்கிற நினைப்பு வர மாட்டேன் என்கிறவர்கள் ஒருமுறை திருப்பூவணம் போய் வந்தால் போதும். தெளிவு தானே தேடி வரும் அவர்களை.

*தானன தானன*
*தானன தன்ன*

*எண்ணிஇ ருந்தும்*
*கிடந்தும்ந டந்தும்*
*அண்ணல்எ னாநினை*
*வார்வினை தீர்ப்பார்;*
*பண்இசை சேர்மொழி*
*யார்பலர் பாடப்*
*புண்ணிய னார்உறை*
*பூவணம் ஈதோ.* *(91)*

9. யாரோ ஒருவர் வா அங்கே என்று அழைப்பது போல மனசில் தோன்றியது சுந்தரருக்கு. கண்ணைத் திறந்து சுற்று முற்றும் பார்த்தால் ஒரு ஆள் சிட்ட நின்று 'வா என் பின்' என்று கைகாட்டிக் கூப்பிடுவது போலத் தெரிந்தது.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே அந்த ஆள் முன்னே நடந்து போவது தெரிகிறது. சுந்தரருக்கு இருப்புக் கொள்ள

---

அண்ணல் ஏனா நினைவார் - எங்கள் நாயகனே நீதான் கதி என்று உணர்பவர். உணர்ந்து ஒன்றுபவர். பூவணம் - திருப்பூவணம். பண் இசை சேர் மொழியார் பலர் பாட. உள்ளம் உருகி அடியவர்கள் பாட.

திருப்பூவணம் இது பாண்டி நாட்டில் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. பழம்பெரும் கோயில் மதுரைக்குக் கிழக்கே பன்னிரண்டு மைல் திருப்பூவணம்.

சங்கீதம் என்றால் அடியார் பலர் கனிந்துருகிப் பாடும் பாடல்தான். பாடலின் ஒவ்வொரு அசையும் ராகந்தான். தோடி, சங்கராபரணம் போன்ற ராகங்கள்தான்.

குறிப்பு:- சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பூவணம் வந்தார். பூவண்ணநாதரையும் பொன்னனை யாளையும் வணங்கினார். உள்ளத்தில் ஒரு தெளிவு பிறந்தது. மிக்க பிரகாசமாய் இருந்தது. ''அடடா, என்னுள்தானே இருக்கிறார் பெருமான். அப்படி இருந்தும் சில சமயம் அது இது என்று பிரித்துப் பார்க்கத் தோன்றுகிறதே அது ஏன்? அவரைச் சேர்த்து வைத்துக் கொண்டே ''ஒற்றைக் கட்டையாய் நிற்பது போல் தோன்றுகிறதே அது ஏன்? எல்லாம் பூவண்ணநாதர் விளையாட்டுத்தான்'' என்று சிரிப்பே வந்து விட்டது சுந்தரருக்கு. 'பூவணம் ஈதோ' என்று கையில் எடுத்துக் காட்டுகிறது அந்தச் சிரிப்பு.

வில்லை. என்னதான் நடக்கும் பார்த்து விடுவோம் என்று பின் தொடர்ந்தார் சுந்தரர்.

திருவாரூருக்கே வந்து விட்டார் சுந்தரர். அந்த ஆளும் கோவிலுக்குள் நுழைந்து போகிற மாதிரி தெரிந்தது.

அப்படியே வந்தார் சுந்தரர். ஆரூரானைப் பார்த்தார். அடடா என்ன அழகு, என்ன எடுப்பு, என்ன ஒய்யாரம்.

கண்கள் இரண்டும் மூடி இருக்கின்றன. உள்ளமோ ஆனந்தத் தேனாய் பொங்குகிறது. தன்னை மறந்து திளைக்கிறார் சுந்தரர். அப்பொழுது மூடிய கண்ணுக்குள் அந்த ஆள் - வழிகாட்டி அழைத்து வந்து கோவிலுக்குள் புகுந்த அதே ஆள் அப்படியே தெரிகிறார்.

தாங்க முடியாத வியப்பு சுந்தரருக்கு, கண்ணைத் திறந்து பார்க்கிறார் சுந்தரர். சிரித்து மயக்குகிறார் ஆரூர்ப் பெருமாள். இப்பொழுது பார்த்தால் சிரித்து மயக்குவதே அந்த ஆளாகத்தான் தெரிகிறது.

என்ன கருணை, என்ன பரிவு. எவ்வளவு ஆசை என்மேல் அவனுக்கு என்று உருகுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*தான தன்னை தன்னை தான*
*தான தன்னை தன்னன தன்ன*

*"இன்ன தன்மையன்*
*என்றறி யொண்ணா*
*எம்மா னை,எளி*
*வந்தபி ரானை;*
*அன்னம் வைகும்*
*வயற்பழ னம் சூழ்*
*ஆரூ ரானை*
*மறக்கலும் ஆமோ"* *(92)*

---

*அரியதில் அரியவன்தான் அவன். ஆனாலும் அடியவர்களுக்கு எளியதில் எளியதாக வல்லவா இருக்கிறான்.*

குறிப்பு : கொஞ்சம் பின்னோக்கி நம்மை நாம் பார்க்க வேண்டும். பார்த்தால் பாறையில் முட்டாதபடி அவன் நம்மை விலக்கியதும், படுகுழியில் கிடந்த நம்மை அவன் தூக்கி விட்டதும், ஒரு தடவை இல்லை. பல தடவை என்பது தெரியும். பார்ப்பவர்களுக்குத்தான்.

*10.* திருக்கழிப்பாலை அழகான புண்ணிய ஸ்தலம். சுந்தரர் அங்கு வந்தார். மூர்த்தியை வழிபட்டார். பெருமானே மூர்த்திக் குள்ளிருந்து எழுந்து ''ஐயா வா, இப்பொழுதாவது வழி தெரிந்ததா'' என்று வரவேற்கிற மாதிரியே தெரிந்தது.

உருகிப் போனார் சுந்தரர். குழறிக் குழறிச் சொல்கிறார் சுந்தரர். பெருமானிடந்தான்.

''என் பிறவிப் பலனே மறதி ஒன்றுதான். மடியிலிருப்பதும் மறந்து விடும். கையில் இருப்பதும் மறந்து விடும். கண்ணா டியைக் கண்ணுக்குப் போட்டபடியே அதை எங்கே எங்கே என்று தேடுவேன்.

மறந்ததனால் தானே நினைப்பு வருகிறது. பெருமானே! உம்மையும் நான் மறந்து விடுவேன். பிறகு தேடுவதும் உண்டு. இது என்னோடு ஒட்டிப் பிறந்தது. அதுபோகட்டும். பெருமானே, நீர் என்ன செய்ய வேண்டும்

பாடலிலேயே பார்க்கலாம்

*தான தன்னை*
*தன்னன தன்னை*
*தன் னன் ன*

*எங்கே னும்இருந்(து)*
*உன்அடி யேன் உ*
*னைநினைந் தால்*
*அங்கே வந்தென்*
*னொடும்உடன் ஆகிநின்(று)*
*அருள் வாய்;*
*இங்கே என்வினை*
*யைஅறுத் திட்டு*
*எனையா ளும்*
*கங்கா! நாயக*
*னே!கழிப் பாஅலை*
*மேயா னே!* *(93)*

எங்கே இருந்து அடியேன் உனை நினைந்தால் - இந்திரலோகம், குபேரலோகம் என்று போக நேரிட்டாலும் அதனால் ஒன்றும்

பழுதுபடாது. உம்மை நினைத்தால் போதும். எங்கிருந்து நினைத்தாலும், எமனின் பாசக் கயிற்றில் சிக்கிய நிலையினும் மார்க்கண்டன் நினைக்கவில்லையா பெருமானே! உம்மை? அருள் புரியவில்லையா நீர்? மார்க்கண்டனுக்காக மார்க்கண்டனோடு சேர்ந்து செயல்படத் தானே செய்தீர்.

அங்கே வந்து என்னுடன் ஆகி அருள்வாய். அப்படியே என்னோடு வந்து நிற்பாய். இங்கே என் வினையை. அறுத்திட்டு எனை ஆளும் நாயகனே - ஏற்கனவே என்னை என் வல்வினையிலிருந்து (ஆணவ வெறியிலிருந்து) விடுவித்து என்னை ஆதரித்தவர்தான் நீர். அடியேனுக்கு உதவிய பழக்கம் இருக்கத்தானே செய்கிறது. ஆனாலும் விண்ணப்பம் ஒன்று. கண்காணாத இடத்திலிருந்து கூப்பிட்டாலும் வந்து விட வேண்டும். நீர் மறந்து விடக்கூடாது. திருக்கழிப்பாலை ஸ்தலத்துக்கு அலங்காரம் கொடுக்கும் பெருமாளே! மறந்து விடக்கூடாது.

திருக்கழிப்பாலைப் பிரானை விட்டு பிரிந்து வர மனம் இடம் கொடுக்கவில்லை. திருக்கழிப்பாலையிலேயே பல நாள் தங்கினார். எப்பொழுதும் கழிப்பாலைப் பிரான் ஞாபகந்தான் சுந்தரருக்கு. நினைத்த நேரம் எல்லாம் கோவிலுக்குப் போவார். மூர்த்தியை வழிபடுவார். பச்சிலை சாத்துவார் மூர்த்திக்கு. மலர்களைச் சொரிவார். குழந்தை போலப் பார்த்துக் கொண்டே இருப்பார் சுந்தரர். கழிப்பாலை நாயகன் தரிசனம் மனசுக்கு எவ்வளவோ நிம்மதி, ஆனந்தம் சுந்தரருக்கு. வேறு ஞாபகமே இல்லை சுந்தரரிடம்.

சுந்தரரின் நிம்மதி, அமைதி அப்படியே பாடலின் ஓசையில் கிடக்கிறது.

# இப்பொழுதுதான் வழி தெரிந்ததா?

*11.* ஒருநாள் திடுதிப்பென்று திருக்கடவூர் - வீரட்டானம் ஞாபகத்துக்கு வந்தது. யாரோ முதுகில் ஒரு தட்டித் தட்டி ''வா அங்கே போகலாம் - திருக்கடவூர் வீரட்டானம் போகலாம்'' என்று சொல்வது போல் இருந்தது சுந்தரருக்கு.

அப்படியே புறப்பட்டு வந்து விட்டார். சுந்தரர் திருக்கடவூர் வீரட்டானத்துக்கு.

ராஜகம்பீரத்தோடு மிக்க தோரணையோடு வீற்றிருக்கிறார் பெருமான். வீரத்தை வெளிப்படுத்திய - பிரகடனம் செய்த இடம் அல்லவா வீரட்டானம்?

கழுத்தில் ஆலகால நஞ்சு. போர்வையோ மதயானையை வீழ்த்தி உரித்தெடுத்த தோல். கையில் குலுங்கும் காப்போ ஆயிரந்தலை (நட்சத்திரத்தொகுதி) -நாகம் இப்படி போர்க் கோலத்தில் ஆனால் அமைதியே உருவாகி ஆனந்தமாய் காட்சி அளிக்கிறார். திருக்கடவூர்ப் பெருமான்.

அவரையே கண்கொட்டாமல் பார்க்கிறார் சுந்தரர். தாகத்துக்கு ஆளானவன் தெள்ளிய நீரை அள்ளி அள்ளிப் பருகுவது போல அனுபவிக்கிறார் சுந்தரர் பெருமானை.

★★★★★★★

எங்கும் இல்லாத ஒளி ஒன்று சுந்தரர் மேல் விழுகிறது. திருக்கடவூர் நாதனே சுந்தரரின் இதயத்துள் புகுந்து சென்று அமர்ந்திருப்பது போல இருக்கிறது. அப்படி ஒரு தெளிவு.

★★★★★★★

அப்படி ஒரு தெளிவு வந்தால் கிண்டலும் கேலியுமாகத் தானே வரும் பேச்சு. ''பெருமானே, இப்பொழுதுதான் உமக்கு வழி தெரிந்ததா? முன்னமே தெரியவில்லையா வழி'' என்று கணீர் என்று வருகிறது பேச்சு.

*தான தன்னன தன் - தன*
*தான தானன தன்*

*மையார் கண்டத்தி னாய் - மத*
*மாவுரி போத்தவ னே!*
*பொய்யா(து) என் உயிரில் - புகுந்*
*தாய்முன்னம் போந்தறி - யாய்!*
*கையார் ஆடர வா - கட*
*வூர்தனுள் வீரட்டத் தெம்*
*ஐயா என்அமுதே - எனக்(கு)*
*ஆர்துணை நீயல - தே.* *(94)*

*12.* கடவுள்த் தத்துவம் என்றால் ஒரே விளையாட்டுத்தான். விளையாட்டுமயந்தான். எண்ணில் அடங்கா அவ் விளையாட்டு. (அலகிலா விளையாட்டு.)

ஒவ்வொரு சிருஷ்டியும் ஒவ்வொரு விளையாட்டு. ஒவ்வொரு விளையாட்டும் தனி. ஒன்றுபோல் இன்னொன்றிருக்காது.

★★★★★★★

இத்தனை விளையாட்டையும் விட இன்னொரு விளையாட்டும் இருக்கிறது அவரிடம்.

அணுவிலிருந்து அண்டம் பேரண்டம் அத்தனையுமாக விளைகிற பெருமான். அத்தனை அத்தனையுமாகவே இருக்கிறார். ஆனாலும் பக்தர்களுக்காக அவர்கள் விருப்பப்படி உருவம் தாங்குகிறார். கோயில் கொண்டு எழுந்தருள்கிறார். பக்தர் உள்ளங்களிலும் - உணர்ச்சியிலும் அப்படியே குடி ஏறுகிறார்.

அவரவர்க்கு ஏற்ற உருவத்தில் வந்து உறவாடுகிறார்.

---

மையார் கண்டம் - ஆலகால விஷம் தங்கி. நிறைந்த தொண்டை; கழுத்து மதமா - மூர்க்கமான போர்யானை. உரி-உரித்தெடுத்த தோல். பொய்யாது என் உயிருள் புகுந்தாய் - நான்கண்ணால் பார்த்தேன். நீர் என் இதயத்தோடு சேர்ந்து நிற்பதை - பிரகாசிப்பதை. முன்னம் போந்தறியாய் - இதற்கு முன் இப்படி நீர் வரவில்லைதான். ஏனோ ஞாபகம் இல்லை உமக்கு. ஆடரவு - நட்சத்திரமாகிய பாம்பு. அதுதான் இறைவனுக்கு காப்பு. அடியார் களின் பாதுகாப்பே அந்தக் கையில் தான்.

உருவமே இல்லாதவர் - பெயரே இல்லாதவர் உருவம் ஏற்று, பெயரும் வைத்துக் கொண்டு உறவாடுகிறார் - திளைக்கிறார் என்றால் இந்த அற்புதத்தை எப்படிச் சொல்ல.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்கிறார். பெருமானைப் பார்த்தே - நேருக்கு நேர் நின்றே சொல்கிறார், இதற்கு என்ன ஐயா .பதில் என்று கொஞ்சம் தோரணையோடேயே கேட்கிறார் சுந்தரர். திருவெண்காடு என்னும் பதியில் எழுந்தருளிய வெண்காடரிடமே கேட்கிறார்.

*தான தான*
*தான தான*
*தனன தன்ன*
*தன்ன தன்னதன்*

*பண்ணு ளீராய்ப்*
*பாட்டும் ஆனீர்*
*பத்தர் சித்தம்*
*பரவிக் கொண்டீர்;*
*கண்ணு(ள்) ளீராய்க்*
*கருத்தில் உம்மைக்*
*கருது வார்கள்*
*காணும் வண்ணம்*
*மண்ணு ளீராய்*
*மதியம் வைத்தீர்;*
*வான நாடர்*
*மருவி ஏத்த*
*விண்ணு ளீராய்*
*நிற்ப தென்னே*
*வேலை சூழ்வெண்*
*காட ரே! (95)*

---

பண்-இசை, இசையும் இறைவன்தான். இசையின் உருவமாகிய பாட்டும் இறைவன்தான். மண்ணுள்ளீராய் மதியம் வைத்தீர் - உம்மை தியானிக்கிறவர்கள் கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு நேருக்கு நேர் முன் வந்து நிற்கிறீர். என்னை நன்றாகப் பார்'' என்று காட்டுகிறீர். அதற்காகச் சந்திரனையே தலையில் வைத்திருக்கிறீர். விண் - ஆகாயம், ஞானம், உணர்ச்சி, ஒளி என்கிற பொருளிலும் வரும் விண் என்கிற சொல்.

குறிப்பு : மண்ணுள்ளீராய் மதியம் வைத்தீர்- விண்ணுள்ளீராய் நிற்பதென்னே என்று தாளம் போட்டபடியே இசையிலும் நடனத்திலும் ஜொலிக்கிறது. அதிசயம்.

பூர்வமான பாடல் ஒன்று

"ஒருவான் யாறு
ஒருசடா டவி
பெருநா கமே
பூணும் பெருமான்;
அருவா யினான்
ஆயினும் அன்பர்க்(கு)
உருவா யினான்
உள்ளத்தின் உள்ளே"

சுந்தரர் பாசுரத்துக்கு விளக்கம் போல் இருக்கிறது.

வான் யாறு - ஆகாய கங்கை. சடா டவி - சடைக்காடு. பெருநாகம் - நட்சத்திரப்பாம்பு

அடியவர்களுக்காக மண்ணுலகம் வந்து சடையில் மதி

சூடி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறநீர். விண்ணுள்ளீராய் நிற்பது என்னே. பக்தர்களின் கண்ணுக்கு உருவமாகவும் மூர்த்தியாகவும், ஞானிகளின் மெய்யுணர்வுக்கு விஞ்ஞான மெய்ஞ்ஞானமாகவும் அதாவது உருவம் இல்லாமலும் இருக்கிறீரே, அது எப்படி? அதிசயமாக இருக்கிறதே.

பாடலைப் படிக்கப் படிக்க அதிசயம் கவியாய் உருவெடுப்பது தெரியும்.

# என்ன தெரியும் எனக்கு

*13.* சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஒரே வியப்பு. கடவுள் ஒருவர்தான். ஒரே ஒருவர்தான். ஆனாலும் கோடானுகோடி தத்துவங்களாக விளைகிறார். விளைந்த வண்ணமாகவே இருக்கிறார்.

அப்படி விளைகிற விளைச்சல்தான் கடவுளின் திருமேனி.

கோடானுகோடி தத்துவங்களாய் விளைகிறது மட்டுமல்ல ஒன்றுக்கொன்று உறவே இல்லாத - நேர்மாறான காரியங்களாகவும் உருவெடுக்கிறார் கடவுள். தங்கத்துக்கும் இரும்புக்கும் சம்பந்தம் உண்டா. நெருப்பு வேறு, நீர் வேறுதான். நட்சத்திரம் எங்கே? சின்னஞ்சிறிய தும்பை மலர் எங்கே? இப்படி ஒவ்வொன்றிலும் எட்டாத தூரம். ஒன்றுக்கொன்று எத்தனை எத்தனையோ வேறுபாடு.

ஆனாலும் கடவுள் விளைந்தவண்ணமாகவே இருக்கிறார். கணக்கு வழக்கில்லாமல் விளைந்து கொண்டே இருக்கிறார்.

★★★★★★★

பருத்தி என்று ஒரு உண்மை. ஒரு தத்துவம். அது வேர் போடுகிறது. செடியாகிறது. பூப்பூக்கிறது. காய்க்கிறது. சுளை சுளையாய் வெடிக்கிறது. பருத்தி என்ற பெயரோடேயே வெடிக்கிறது.

பருத்தி எங்கே இருக்கிறது என்றால், வேரிலிருக்கிறது. செடியில் இருக்கிறது. இலை, காய், நெற்று, சுளை எல்லா வற்றிலுந்தான் இருக்கிறது. இவ்வளவிலுந்தான் பருத்தி (பருத்தி என்னும் உண்மை)யைப் பார்க்கிறோம். இவ்வளவையும் விட்டு விட்டுத் தனியாகப் பார்க்க முடியாது பருத்தியை. பருத்தி என்னும் தத்துவத்தை.

★★★★★★★

கடவுளும் அப்படித்தான். அவர் அண்டபிண்ட சராசரம் அவ்வளவாகவும் விளைகிறார். அவ்வளவிலும் இருக்கிறார். இவ்வளவையும் உதறி எறிந்து விட்டுத் தனியாக இல்லை கடவுள்.

இந்த அற்புதத்தை ஞானிகள் அனுபவிக்கிறார்கள். ஆனந்த பரவசம் அடைகிறார்கள். சுந்தரரும் பரமஞானி தானே.

★★★★★★★

இனி, சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனசைப் பார்த்துச் சொல்கிறார். மனதிடமே கேட்கிறார்.

பேரண்டந்தான் இறைவன் - இறைவன்தான் பேரண்டம். ஆனாலும் மாசறு காட்சியவர். ஞானியர்களிடம் உற்ற துணையாய் உறவாடுகிறான் பெருமான். அதற்கென்று ஒரு உருவெடுத்து வந்தே உறவாடுகிறான்.

மனமே! சுந்தரமூர்த்தியாகிய என்னை உனக்குத் தெரியாதா என்ன? மகாமூடன் நான். மூடன் மட்டுமல்ல, வம்பு தும்பு பண்ணுகிற போக்கிரியும் ஆவான் இந்தச் சுந்தரமூர்த்தி. அப்படியிருக்க பரம ஞானியர்க்கு எப்படி ஒரு புது அவதாரம் எடுத்து வருகிறானோ அதே போல இந்தச் சுந்தரமூர்த்திக்கும் - உற்றத் தோழனாக அவதாரம் எடுத்து அருள் பாலிக்கிறானே இறைவன் அது ஏன்? விந்தையினும் விந்தையாக இருக்கிறதே இது.

மனமே, நீ ஏதோ சொக்குப் பொடி தூவி இருக்கிறாய் அவன்மேல். உனக்காகத்தான் அவர் அர்ச்சாவதாரம் எடுத்து காட்சி கொடுக்கிறார். எங்கெங்கு போனாலும் எனக்காக அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளிக் கொலுவிருக்கிறான். ஏன்? மனமே நீ கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

உன் புண்ணியத்தில் நானும் கண்டுகளிக்கிறேன். ஆனந்த பரவசத்தையே கண்டுகளிக்கிறேன்.

இப்படியல்லவா யோசிக்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அதை எப்படிப் பக்குவமாய்ச் சொல்கிறது தமிழ் என்று பாருங்கள்.

*தானன தானன தன் - தன*
*தானன தன்னன தன்.*

*மந்திரம் ஒன்றறி யேன் - மயல்*
*வாழ்க்கை மகிழ்ந்தடி யேன்;*
*சுந்தர வேடங்க ளால்த் - துரி*
*சேசெயும் தொண்டன்எ னை:-*
*அந்தர மால்விசும் பில் - அம*
*ராதேஅ ருள்புரிந் த(து)*
*உன்தர மே நெஞ்ச மே - நொடித்*
*தான்மலை உத்தம னே!* *(96)*

*14.* போகிற போகிற இடம் எல்லாம் கோவில் கொண்டு கொலுவீற்று எழுந்தருளிக் காட்சி கொடுப்பது மட்டுமா அவர் காரியம் - அதாவது இறைவனுடைய திருவருள்.

ஒன்றுக்கும் ஆகாமல் துருப்பிடித்து உளுத்துப் போன என்னை அன்போடு பார்த்தார். ஆர்வத்தோடு நோக்கினார்.

---

மயல் வாழ்க்கை மகிழ்ந்து அடியேன் - அறியாமைக்கும் பகட்டுக்கும் இரையாகி இதுதான் வாழ்க்கை என்று செருக்கில் மிதந்தவன் நான். சுந்தர வேடங்களால் - சமயச் சின்னங்களை அலங்காரமாய்த் தரித்தபடி. துரிசேசெயும் தொண்டன் - பொய்த் தொண்டன். எனை அருள்புரிந்தது - பொய்த் தொண்டனாகிய என்னைத் தேடிவந்து நான் போகும் இடம் எல்லாம் மூர்த்தியாய் எழுந்தருளி அருள்பாலிக்கிறானே பெருமான். அது எனக்காகவா? உன் தரமே நெஞ்சமே - என் உற்றத்துணையே / அருமை மனமே! எல்லாம் உன்னை உத்தேசித்துத்தான். இல்லையென்றால் - அந்தரமால் விசும்பில் அமராது - ஞானிகளின் உணர்ச்சியுள் புகுந்து ஆனந்தமாய் (அந்தர்யாமியாய்) அவர்களோடு உறவாடித் திளைக்கிறவன். வெறும் களிமண்ணாலாகிய இந்த மூடத்தின் முன் வந்து நிற்க வேண்டிய அவசியம் என்ன?

அந்தர மால் விசும்பு - மேலே மேலே போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிற பெருவெளி - பொன்னம்பலம். ஆணவம் இல்லாத தூய உணர்வு - அதாவது ஞானியர் குழாம். அவர்களுக்காக ஒரு அவதாரம் எடுத்து அவர்களுடன் இறைவன் உறவாடுவது ஒருவகையில் சரிதான். ஆனால் எனக்காக...

குறிப்பு: உல்லாசத்திலிருந்தும் எக்களிப்பிலிருந்தும் வரும் ஹாஷ்யம். அந்த ஹாஷ்யம் எப்படி இருக்கும் என்றால் ''அந்தர மால் விசும்பில் அமராதே எனை அருள் புரிந்தது உன் தரமே நெஞ்சமே'' என்றபடி தான் இருக்கும். நொடித்தான் மலை இது இமயமலை - திருக்கைலாயமலை.

என் உடம்பெல்லாம் - உள்ளம் எல்லாம் உருகி உருகிக் கரையும்படி ஒரு கேள்வி கேட்டார் ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்'' என்றே கேட்டார். அதுமட்டுமா, ''கவலையை விடு. நான் இருக்கிறேன். எதற்காக இருக்கிறேன் நான்'', என்று ஆசையோடு சொன்னார். கட்டிப் பிடித்தார் முத்தம் கொடுத்தார். தட்டிக் கொடுத்தபடியே சொன்னார், இங்கேயே இரு, வேறு எங்கும் போகவேண்டாம். என்னோடேயே இரு, என்று.

*''உன்னுடைய துன்பம் என்னுடைய துன்பம்*
*என்னுடைய இன்பம் உன்னுடைய இன்பம்''*

பிறகு ஏன் அலட்டிக் கொள்கிறாய் தைரியமாக இரு என்றும் சொன்னார்.

*******

இந்த உலகில் - விரிந்து பரந்த உலகம் முழுவதிலுமே ஒருவராவது என் கவலையைக் கண்டதுண்டா, அனுதாபப் பட்டதுண்டா? ஏதோ பேச்சுக்கு அனுதாபப்படுவது போல் காட்டிக் கொண்டாலும் ஒருநாள் ஒருபொழுதாவது என்னைத் தன்னோடு வைத்து ஆதரித்ததுண்டா?

வலிவலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் அல்லவா வலியவந்து என்னை ஆதரித்தான். அரவணைத்தான். மனுசனாக்கிவிட்டானே என்னை,

*தானன தான*
*தனனன தான*
*தானன தான*
*தனனன தான*

*பாடுமா பாடிப்*
*பணியுமா(று) அறியேன்*
*தேடுமா தேடித்*
*திருந்துமா(று) அறியேன்;*

---

பாடுமா பாடி பணியும் ஆற அறியேன் - பாடி அனுபவிக்கிறவனிடத்தில் அல்லவா பணிவு (பக்தி) வருமட. எனக்கோ அதுவம் இல்லை. இதுவும் இல்லை. தேடுமா தேடி திருந்தும் ஆறு அறியேன் - நம்மிடம் உன்ன கோளாறு என்ன என்று பார்த்தால் அல்லவா வாழ்த்தி வழிபடப் புத்தி வரும். என் ஜாதகம் இதிலும் அப்படித்தான்.

"கூடுமா எங்ங
 னோ" என்று கூற:-
குறித்துக் காட்டிக்
 கொணர்ந்தெனை ஆண்டு
"வாடிநீ வாளா
 வருந்தல்"என் பானை
வலிவலம் தன்னில்
 வந்துகண் டேனே" (97)

51. "சென்றேன் - கண்டேன் - வலிவலம் போனேன். நடந்தே போனேன். மனத்துணைநாதரைக் கண்டேன். கண்ணாரக் கண்டுகளித்தேன். ஆனந்தமாக இருந்தது. ஒரே ஆனந்தமயந்தான்" இப்படி எல்லாம் சொன்னால் போதுமா?

அவ்வளவு எளிதாய் முடிந்துவிடுகிற காரியமா மனத்துணை நாதர் காரியம். அவர் மனத்துணை நாதர் மட்டுமல்ல, மனைத்துணைவர். நம் குடும்பத்துக்கே அவர்தான் நாயகர். ஏழேழு பிறவிக்கும் இனிவரும் எத்தனையோ பிறவிகளுக்கும் அவர் தான் தலைவர். நாம்தான் அவருக்கு உற்ற துணை. மனக்கினிய மணாட்டியே நாம்தான் அவருக்கு.

*******

இப்படிப் பார்க்கிற பொழுதுதான் போனது. வந்தது எல்லாம் தெரியும்.

---

இந்த நிலையில் எல்லோரும் என்ன சொன்னார்கள்? கூடுமா எங்ஙனோ - "சுந்தர மூர்த்தியாவது உருப்படவாவது. தள்ளுகுப்பையை" என்று எனை அநாதையாக்கி விட்டார்கள். அந்த நிலையில்தான் பரிவோடு என்னைத் தேடிவந்தான் இறைவன் வலிவலநாதன். அவன் வரும்பொழுது நான் தூங்கிக் கொண்டிருந்தேன். குறட்டைவிட்டபடியே தூங்கிக் கொண்டிருந் தேன். என் தூக்கம் கலையும்வரை என் பக்கத்திலேயே இருந்து. வாடி நீ வாளாவருந்தல் - ஏன் இப்படிச் சோர்கிறாய். ஏன் இப்படிக் கலங்குகிறாய். அநாவசியமாக மனசைப் போட்டு அலட்டிக் கொள்ளாதே - தைரியமாக இரு. நான் இருக்கிறேன். கவலைப்படாதே என்றல்லவா உற்சாகப்படுத்தி னான். உயிரும் உணர்ச்சியும் கொடுத்தல்லவா ஆளாக்கினான் என்னை? எப்படி மறப்பேன் அவனை.

வலிவலம் - திருவாரூர்ப் பக்கம் இருக்கிறது.

அத்துடன் அவரு (கடவுளின்)டைய ஜாதகத்தையும் புரட்டிப் பார்க்க வேண்டும்.

கணித்துப் பார்த்தால் என்ன சொல்கிறது ஜாதகப்பலன். அவர் ஒருவர் தான் வேறு ஒன்றும் இல்லை. வானில் பூத்த நட்சத்திரங்கள் போலத்தான் அவர் மேனியில் அண்டம், பேரண்டம், பிரபஞ்சம் பூத்தன என்றே சொல்கிறது.

அப்படியானால் எப்படி இருப்பார் பெருமான்? எப்படி யிருப்பார் என்றால் நம்போல் எண் சாண் உடம்பா அவருக்கு.

உருவம் ஏது கடவுளுக்கு. ஆனாலும் ஒரு வடிவத்தைக் கொடுத்தே பார்க்க வேண்டி இருக்கிறது உண்மையை.

ஆகாயமே மேனி, திசைகளே கை, உலகமே திருவடி, சமுத்திரமே உடை, (உடுக்கை) சூரிய சந்திரர்களே கண், இப்படி அமைத்து ஒரு உருவத்தையே கற்பனை செய்து, அதையே காமா சோமா என்று படம் போட்டுத்தான் பார்க்க வேண்டி இருக்கிறது. முன்னோர்களும் அப்படியே பார்த்தார்கள்.

*மாநிலம் சேவடி*
*யாகத், தூநீர்*
*வளைநரல் பௌவம்*
*உடுக்கை யாக,*
*விசும்புமெய் யாகத்,*
*திசைகை யாக,*
*பசுங்கதிர் மதியமொரு*
*சுடர்கண் ணாக,*
*இயன்ற எல்லாம்*
*பயின்றகத்(து) அடக்கிய*
*வேத முதல்வன்*
*என்ப:-*
*தீதற விளங்கிய*
*திகிரி யோனே*
*(நற்றிணை கடவுள் வாழ்த்துச் செய்யுள்)*

---

வளைநரல் பௌவம் - சங்கு முழங்கும் கடல். விசும்பு - ஆகாயம். சுடர் - நெருப்பு, ஒளி. தீதற விளங்கிய திகிரியோன் - ஒரே பிரகாசமாயிருக்கிற சக்கரப் படையுடைய திருமால். அவரே வேத முதல்வன் - கடவுள்.

கடவுள்த் தத்துவத்தோடு உருண்டு உருண்டு புரண்டவர்கள் நம் முன்னோர்கள். இல்லை என்றால் இப்படிச் சொல்ல முடியாது. வேறு யாராலும் சொல்ல முடியாது.

உலகில் வேறு எங்கும் இப்படிச் சொல்லி இருக்கிறதாகத் தெரியவில்லை.

இறைவன் வானைப் படைத்தார், பூமியைப் படைத்தார், அதை உண்டாக்கினானர், இதை உண்டாக்கினார் என்றுதான் சொல்கிறார்கள். பல இனத்தாரும் - சமயத்தாரும். கடவுள் வேறு மற்றவை வேறு என்றே பார்க்கிறார்கள் அவர்கள்.

நம் முன்னோர் காரியம் ஒன்றாகப் பார்ப்பது தான்.

அவர் ஒருவர்தான். ஒரே ஒருவர் தான், எல்லாம் அவர்தான். அவருடைய விஸ்வரூபம் தான் அண்ட பிண்டசராசரம் என்று சொல்வது நம் முன்னோர் மட்டுமே.

அப்படியானால் நாமும் கடவுளின் அம்சந்தான். பிறகு எப்படி அவர் அங்கே நாம் இங்கே என்று எட்டி நிற்க முடியும்.

தாயாக, தந்தையாக, சகோதர சகோதரிகளாக, மனைவியாக, குழந்தையாக, ஏன் நாயகனாவும் அல்லவா இருக்கிறார் கடவுள்.

நண்பர், உற்றார், உறவினர் என்றெல்லாம் காட்சி கொடுக்கிறதே கடவுள் தான்.

இவை எல்லாம் நம் முன்னோர் தேடி அனுபவித்த செல்வம் அதை நமக்கு வழங்கிப் போயிருக்கிறார்கள்.

★★★★★★★

இரண்டாயிரம் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பே ''எல்லாம் கடவுள் மயம்'' என்னும் உண்மைக்கு உருவம் கொடுத்திருக்கிறார்கள். சங்கப் புலவராகிய பெருந்தேவனாரே இறைவனுக்கு ஆகாயமே மேனி, பூமியே திருவடி, திசைகளே கை என்று ஓவியம் தீட்டுகிறார்.

சுந்தரமூர்த்தி நாயனாரோ, ''விண்ணின் மாமதி சூடி விலையில் கலன் அணி விமலன்'' என்கிறார். விலையில் கலன் - நட்சத்திரம்.

கவிஞர்களும் கடவுளுக்கு நெருக்கந்தான். பக்தர்களும் நெருக்கந்தான். என்ன இருந்தாலும் பக்தர்களுக்கு உரிமை அதிகம். கவிஞர்களை விடக் கொஞ்சம் அவர்களுக்குக் கூடுதல் உரிமை. இறைவனுடைய வியாபகம் இன்னும் தெளிவாய் வெளிப்படுகிறது. பக்தர்களுக்கு.

வான், திசை முதலியவற்றை அதாவது சர்வ வியாபகத்தை சடை, பிறை, கொன்றை, கங்கை என்கிற குறியீடாக அடையாளச் சின்னங்களாகவே வைத்துப் பார்க்கிறவர்கள் பக்தர்கள். அப்படி ஒன்றாக (அடையாளம் - பொருள் இரண்டையும் ஒன்றாக) வைத்துப் பார்க்கிறபொழுது தான் வியாபகம் - சர்வ வியாகமாய் பூரணத்துவம் பெறுகிறது.

★★★★★★★

நட்சத்திரங்களே இறைவனுடைய ஆபரணத்தில் பதித்து வைக்கும் பணிக்கற்கள். கொன்றைன மலர்களும் அப்படியே. லட்சோபலட்சம் நட்சத்திரங்கள் செறிந்து கிடக்கும் பாலாறு (மில்க்கிவே) தான் அவனுக்கு ரத்னாபரணம். திசைகளே சடை. மேகமும் சடையே. ஆகாய கங்கையே அந்தச் சடையில் உள்ள நீர். சகல சக்திகளுக்கும் ஆதாரமான மாசக்தியே அவன் வாகனம் அதாவது காளை.

இறைவன் தன் சடையில் ஒரு மூலையில் - ஓரத்தில் சொருகி வைக்கும் ஒரு சிறுமலர்தான் சந்திரன், சிருஷ்டி தத்துவமே அவன் திருமேனி. ஊட்டி வளர்க்கும் தாயே, இறைவனின் ஒருபாகம். அருள் நாடகமே திருவடி.

சடை, கங்கை, மாலை, திங்கள், காளை, இடப்பாகம், மூர்த்தி (திருவடி), நடனம், எல்லாம் சர்வ வியாபகத்தைச் சுட்டும் சின்னங்களாகின்றன. அடையாளங்களாகின்றன. அதுபற்றி எத்தனையோ பக்தர்கள் எத்தனையோ பாடல்கள் பாடி இருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒருபாடல்.

பட்டிணத்தடிகள் வாக்கு

*"திங்கள் சூடிய*
*செஞ்சடை போற்றி,*
*கடவுள் இருவர்*
*அடியும் முடியும்*
*காண்டல் வேண்டக்*
*கனல்ப்பிழம் பாகி,*
*நீண்டு நின்ற*
*நீளம் போற்றி;*
*ஏக வெற்பன்*
*மகிழும் மகட்கிடம்*
*பாகம் கொடுத்த*
*பண்பு போற்றி;*
*தில்லை மாநகர்*
*போற்றி, தில்லையுள்*
*செம்பொன் அம்பலம்*
*போற்றி, அம்பலத்(து)*
*ஆடும், நாடகம்*
*போற்றி போற்றி:-*
*என்று போற்றடும்*
*என்தனுக்(கு) இறைவா!*
*ஆற்றல் இல்லை*
*ஆயினும்*
*போற்றி போற்றி நின்*
*பொலன்பூ அடியே"*

மேலும் சொல்கிறார் பட்டிணத்துப் பிள்ளையார்

---

'விலையில் கலனணி விமலன்' என்பதற்கு விளக்கந்தான் பட்டிணத்தார் பாடல்.

கடவுள் இருவர் - பிரம்மா, விஷ்ணு. கனல் பிழம்பு - ஒளிமலை, அண்ணாமலை. ஏகவெற்பன் மகள் - உமாதேவி. பர்வத ராஜகுமாரி பார்வதி. பொலன் பூ - பொன் மலர்.

*"மின்னின் பிறக்கம்*
*துன்னும்நின் சடையே;*
*மன்னிய அண்டம்நின்*
*சென்னியின் வடிவே,*
*தண்ணொளி ஆரம்*
*தாரா கணமே;*
*வானவர் முதலா*
*மன்னுயிர் பரந்த*
*ஊனமில் ஞானத்*
*தொகுதிநின் உணர்வே*

இவ்வளவையும் வைத்துப் பார்க்கிறபொழுது தான்

*விண்ணின் மாமதி*
*சூ டி*
*விலையில் கலன் அணி*
*விம லன்*

என்கிற சுந்தரர் வாக்கின் பொருள் தெரியும். இறைவனுடைய சர்வ வியாபகத்தை எப்படிக் கண்கொட்டாமல் பார்க்கிறார் சுந்தரர் என்பது விளங்கும்.

நட்சத்திரங்களையே மாலையாக (விலைமதிக்க முடியாத ரத்ன கண்டியாக)க் கோத்துப் போட்டிருக்கிறவன் எப்படி இருப்பான். அவனை அளவிட முடியுமா?

அப்படி எல்லாம் ஆராய்ச்சி ஒன்றும் வேண்டியதில்லை. எல்லாம் இறைவன் அருள். அவனுடைய நாடகமே எல்லாம் என்று உணர்ந்தால், அந்த உணர்ச்சியில் நின்றால் போதும்.

அப்படி நிற்பவர்கள் ஞானிகள், வானவர்கள். அவர்களே கண்கண்ட தெய்வங்கள்.

*"எண்ணும் ஆறுவல்லார்கள்*
*எம்மையும் ஆளுடையாரே"*

---

மின்னன் பிறக்கம் - மேகம். மேகந்தான் சடை. அதுதான் சிருஷ்டியின் மூலாதாரமாகிய நீரூற்று. அண்டம் - நட்சத்திர மண்டலங்கள் பல கொண்ட வான் முகடு. ஆரம் - மாலை. தாரா கணம் - நட்சத்திரம் - பால்வீதி (மில்க்கிவே). ஞானத்தொகுதி - பேருணர்வு. ஊனம் இல் - குற்றமற்ற. உணர்வு - ஆனந்தக் கனவு.

*தான தானன - தன் ன*
*தன்ன தானன - தா ன*

*விண்ணின் மாமதி*
*சூ டி*
*விலையில் கலன் அணி*
*விம லன்,*
*பண்ணின் நேர்மொழி*
*மங் கை*
*பங்கிளன் பசுஉகந்-*
*தே றி*
*அண்ணல் ஆகிய*
*ஆ னைக்-*
*காவுடை ஆதியை*
*நா ளும்*
*எண்ணும் ஆறுவல்*
*லார் கள்*
*எம்மையும் ஆளுடை*
*யா ரே* *(98)*

விண் - வான். பெருவெளி - அப்பாலுக்கப்பால். மதி - சந்திரன். விலையில் கலன் - நட்சத்திரம். விலை மதிப்பற்ற வான்மணிகள். பண்ணின் நேர்மொழி மங்கை - உமையம்மை. அன்னையின் பேச்சு சங்கீதந்தான். மதுர கானந்தான். பண் - இசை. பசு உகந்துஏறி - பால், தயிர், நெய், கோமயம், சாணம் ஐந்தாய் நிறைந்திருக்கிறான் இறைவன். பசுவோடு பசுவாய் இருக்கிறான் புண்ணியமூர்த்தி. ஆனைக்கா - திருவானைக்கா. ஆதியை - அநாதியான தத்துவம், உண்மையை உணர்ந்து பார்க்கிறவர்கள் என் கண்கண்ட தெய்வம். எண்ணும் ஆறு வல்லாகள் எம்மையும் ஆளுடையாரே.

இறையருளை உணர்வோடு ஒன்றித் தியானிக்கிறது எவ்வளவு பெரிய யோகம். எல்லோருக்கும் கிடைக்குமா அந்த யோகம்.

குறிப்பு : பக்தி, ஆனந்தம், தமிழ் மூன்றும் இசையோடு நடனம் ஆடுகிறது கவியில், கவியின் தெய்வப் பண்பு. பாடலைப் பாடப்பாடத் தெரியும்.

திரிச்சிராப்பள்ளி, திருவரங்கம் இவற்றின் இடையில் உள்ள புண்ணிய திருப்பதியே திருவானைக்கா. இறைவர். நீர்த்திரள் நாதர்.

# எப்படி மறக்கும் நா

16. ஐம்பத்து நான்கு வருஷம் ஆகிவிட்டது. ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளி. ஆண் பாலர், பெண் பாலர் சேர்ந்து படிக்கும் பள்ளி. அதில் தமிழாசிரியராகப் பணியாற்றுகிறேன். பிற்பகல் இரண்டே முக்கால் மணி. அந்த (எஸ்.எஸ்.எல்.சி.) வகுப்பை நோக்கி வருகிறேன். நான் அங்கு வருவதற்குள் தலைமையாசிரியர் வந்திருக்கிறார். வகுப்பில் மாணவர்கள் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆத்திரத்தோடு வந்த தலைமை ஆசிரியர் இரண்டு மாணவிகளைப் பெஞ்சின்மேல் நிற்க வைத்துப் போகிறார். வகுப்புக்கு வந்த நான் இரண்டு மாணவிகளையும் விசாரித்தேன் பிறகு பெஞ்சை விட்டு இறங்கும்படி சொன்னேன்.

தலைமை ஆசிரியர் உத்தரவை எப்படி மீறுவது என்று மாணவிகளுக்குப் பயம். ஆனால் நான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். பெஞ்சின் மேல் நிற்கக் கூடாதென்று.

காரணம் அந்த இரண்டு பெண்களும் என்னை விட உயரமானவர்கள். பெரிய பெண்கள்.

உறுதிபட நான் சொன்னதால் பெஞ்சிலிருந்து இறங்கினார்கள். உட்கார்ந்து கொண்டார்கள். ஐந்து நிமிடம் கூட ஆகி இருக்காது. தலைமை ஆசிரியர் மறுபடியும் வந்தார்.

இவர்களை யார் உட்காரச் சொன்னது என்றார். நான் தான் என்றேன். ஏன் என்று அதட்டலாகக் கேட்டார் தலைமை ஆசிரியர்.

பெரிய பெண்கள். வயதான பெண்கள், அவர்கள் பெஞ்சின் மேல் நின்றால் என்னை விட உயரம் இரண்டு மடங்கு இருக்கிறது. அவ்வளவு உயரத்திலிருக்கிறவர்களிடம் எப்படிக் கேள்வி கேட்பது, எப்படிப் பாடம் சொல்லிக் கொடுப்பது அவர்களுக்கு? இது என் பதில்.

சுட்டெரிப்பது போல் என்னை ஒரு பார்வை பார்த்தார் தலைமையாசிரியர். நறநற என்று பல்லைக் கடித்தார்.

தொடர்ந்து நான் சொன்னேன், ''வயதுக்குவந்த பெரிய பெண் பிள்ளைகளை பெஞ்சின்மேல் நிற்க வைக்கிறது கொடுமை. அதை விடக் கொடுமை வயதுவந்த பையன்கள் பலருக்கு மத்தியில் பெண்களை நிற்க வைப்பது'' என்று.

இப்படி நான் சொன்னது அவரை என்னவோ பண்ணி இருக்கிறது. ஆனால் தவறை ஒப்புக் கொள்ளவில்லை அவர். ''சரி சரி, வகுப்பு முடிந்த பின் என்னை வந்து பாருங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் தலைமை ஆசிரியர்.

தலைமை ஆசிரியர் நகர்ந்தாரோ இல்லையோ மாணவ மாணவிகள் எல்லோரும் குபீர் என்று சிரித்துவிட்டார்கள். ஒரே உத்சாகம் அவர்களுக்கு, மேசையைத் தட்டினார்கள். மகிழ்ந் தார்கள். பெருமிதம் கொண்டார்கள். நிமிர்ந்தே நடந்தார்கள்.

★★★★★★★

இனி, 2004-ம் வருடம் ஜுலை மாதம் சென்னையில் ஒரு திருமண வீட்டில் பிரமுகர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. நிதித்துறையில் உயர்ந்த பதவியை அலங்கரித்தவர். ஓய்வு பெற்றபின் உலகப் புகழ் பெற்ற ஒரு பெரிய நிறுவனத்தில் இயக்குனராகப் பணியாற்றுகிறவர்.

நாற்பது வருடங்களுக்குப் பின் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தோம். திருமண விழா முடிந்தபின் மிக்க அன்போடும் உபசரிப்போடும் அவர் மாளிகைக்கு என்னை அழைத்துப் போனார். மனைவி, மக்கள் எல்லோரையும் கூப்பிட்டார். ''இவர்கள் யார் தெரியுமா, என் குருநாதர். இவர்களிடம் படித்த பாக்கியந்தான் என் வாழ்க்கை'' என்றெல்லாம் என்னைப் பலபடப் பாராட்டினார்.

எனக்கும் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருந்தது. பாராட்டோடு பாராட்டாகச் சொன்னார் ''நான் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போது ஐயா அவர்கள் இப்படிச் செய்தார்கள். தலைமை ஆசிரியர் கொடுத்த தண்டனையைத் தள்ளிவிட்டு பெஞ்சின் மேல் ஏறி நின்ற இரண்டு பெண்களை இறங்கி உட்காரவைத்தார்கள்''

நாதழுதழுக்க இப்படிச் சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து, 'ஐயா, உங்களை அடிக்கடி நினைப்பேன். உங்கள் நினைப்பு

வரும்போதெல்லாம் அந்தக் காட்சி அப்படியே என் முன் வரும். மறக்க முடியவில்லை என்னால். வகுப்பறை, பெஞ்சு, அதன்மேல் நின்ற பெண்கள், அவர்கள் விட்ட கண்ணீர், மற்ற மாணவ மாணவியரின் பரிதாபம், தலைமை ஆசிரியரின் அதிகார வெறி, நீங்கள் செய்த உபகாரம் எல்லாம் அப்படி அப்படியே கண்முன் வந்து நிற்கும். மறக்க முடியவில்லை என்னால்'' என்றெல்லாம் உணர்ச்சிவசப்பட்டார் பிரமுகர்.

அப்பொழுது அந்த வகுப்பில் இருந்து படித்திருக்கிறார். அவர் மாணவராக இருந்ததால் இந்தச் சம்பவம் அவர் உள்ளத்தைத் தாக்கி இருக்கிறது. உணர்ச்சியை முறுக்கிப் பிழிந்திருக்கிறது. ஒரு வேகத்தையே, ஆத்திரத்தையே தேனாய் வடித்திருக்கிறது உள்ளத்தில்.

உள்ளத்தோடு ஒட்டிய விஷயம் சிறிதோ, பெரிதோ அது மனசை விட்டுப் போகாது.

ஆனால் இந்தச் சம்பவத்தை நான் மறந்துவிட்டேன். மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகுமே உரம் அப்படிப் போயே போய்விட்டது. அந்த நிகழ்ச்சி. ஞாபகத்தை விட்டே போய்விட்டது. காரணம் அந்தச் சம்பவம் என் உணர்ச்சியைத் தாக்கவில்லை. வெற்றியா தோல்வியா என்கிற பிரச்சினைதான் என் முன் நின்றது. நான் ஆசிரியர்தானே, மாணவன் இல்லையே.

★★★★★★★

இனி, மனசை விட்டுப் போகாத விஷயங்கள் பல. அதில் காதல் ஒன்று. அதுதான் பிரதானம். இரண்டு உள்ளங்கள் ஒன்றுபடத் துடிக்கிற துடிப்பல்லவா காதல்.

உணர்ச்சி மயமானது காதல். உண்மையே உணர்ச்சியாகச் செயல்படுகிறது காதலில்.

★★★★★★★

ஒருநாளில் ஒருதடவையேனும் பார்த்துக் கொள்ள வேண்டுமே என்று தவிக்கிறார்கள் காதலர்கள். அதற்காக எத்தனை ஆபத்தான காரியங்களில் இறங்குகிறார்கள் அவர்கள். வருவது வரட்டும் என்று தியாகத்துக்கே தயாராகவல்லவா இருக்கிறார்கள். அதில்தான் எவ்வளவு தைரியம்? எவ்வளவு சந்தோசம்?

இப்படிப்பட்டகாதலர் தானே ஒருவரை ஒருவர் மதிக்க முடியும்.

*******

இரண்டு நாட்களாய் இளைஞனைச் சந்திக்கவில்லை பெண். வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏக்கமும் தவிப்பும் பெண்ணைத் தாக்கிவிட்டன. தவிக்கிறாள் பெண். வீட்டினுள் இருக்கமுடியவில்லை பெண்ணால். தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாரோடும் கலந்து உறவாட முடியவில்லை பெண்ணால்.

வீட்டைச்சுற்றி ஒரு பெரிய தோட்டம். பின்புறமாய் தோட்டத்தில் ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தாள் பெண்.

இரண்டு நாட்களுக்கு முன் இளைஞனோடு பேசிக் கொண்டிருந்த உல்லாசமும் எக்களிப்பும் அப்படியே கண்முன் வருகின்றன பெண்ணிடம்.

வண்டுகளையும், குயில்களையும், அன்னங்களையும் கூப்பிடுகிறாள் பெண்.

''திருவாரூர்ப் பெருமானிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்கிறாள்.

விண்ணப்பம் எப்படி வருகிறது பெண்ணிடமிருந்து?

''ஊஞ்சலில் வைத்து அவரை ஆட்டவேண்டும். பாடிக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சிக் குலாவ வேண்டும். என்னை அவர் கொஞ்ச நெருங்கும்போது அவரை ஒரு தட்டுத்தட்டி ஊட வேண்டும். ஊடிப் பின் வாங்க வேண்டும்'' என் ஆசையை அவரிடம் சொல்லுங்கள்.

*பாடுமா றும், பணிந்(து)*
*ஏத்துமா றும், கூடி*
*ஊடுமா றும் இவை*
*உணர்த்தவல் லீர்களோ!*

மனசில் நிற்கிறது உணர்ச்சி. ஆற்றாமை என்னும் உணர்ச்சி அது வார்த்தையாய் வருகின்றது. தாளம் போட்டுக் கொண்டே வருகிறது.

பாடலின் முழு உருவம்.

*தானான தானான*
*தானன தன்னதன்*

*கூடும்பேட் டன்னங்காள்,*
*குயில்காள், வண்டுகாள்!*
*ஆடும்அம் பொற்கழல்*
*அடிகள்ஆ ரூரரைப்*
*பாடுமா றும், பணிந்(து)*
*ஏத்துமா றும், கூடி*
*ஊடுமா றும் இவை*
*உணர்த்தவல் லீர்களோ! (99)*

17. பக்தியோ, கோபமோ, சோகமோ, மகிழ்ச்சியோ எதற்கும் உண்மை தான் உயிர். உணர்ச்சிமயமாய்ப் பொங்கும் உண்மை.

ஆயுள் நாள் முழுவதும் சேர்ந்தே இருக்கும் உண்மை. அதாவது உண்மை உணர்ச்சி.

உண்மையையும் உணர்ச்சியையும் எப்படி ஆசையோடு சுந்தர மூர்த்தி சுவாமிகள் பார்க்கிறார் என்று பாருங்கள்.

*நற்ற வா உன்னை*
*நான்ம றக்கினும்*
*சொல்லும் நாநமச்*
*சிவாய வே*

சுந்தரருடைய ஆர்வம் வேகம் எல்லாம் நம் கண்ணில் விழத்தானே செய்கின்றன. மறக்க முடியுமா அந்த வேகத்தை - இதயத்துடிப்போடு வெளிப்படுகிற அந்த நயத்தை.

இனிப்பாடல்,

---

கூடும்பேடு - கணவன், மனைவி என்று காதல் ஜோடியாய் சேர்ந்து நடமாடும். அடிகள் - இறைவன் - தியாகேசன். உணர்த்தவல்லீர்களோ - என் துயரத்தை அவரிடம் சொல்லி வருவீர்களா? பக்குவமாக எடுத்துச் சொல்வீர்களா எனக்காக.

*தான தன்னன*
*தன்ன தன்னன*
*தான தன்னன*
*தான தன்*

*மற்றுப் பற்றெனக்(கு)*
*இன்றி நின்திருப்*
*பாத மேமனம்*
*பாவித் தேன்:-*
*பெற்ற லும்பிறந்*
*தேன்,இ னிப்பிற*
*வாத தன்மைவந்(து)*
*எய்தி னேன்;*
*கற்ற வர்தொழு(து)*
*ஏத்தும் சீர்க்கறை*
*யூரில்ப் பாண்டிக்கொ-*
*டுமு டி*
*நற்ற வா! உன்னை*
*நான்ம றக் கினும்*
*சொல்லும் நாநமச்-*
*சிவாய வே.* (100)

---

மற்று பற்று எனக்கு இன்றி - எத்தனையோ காரியங்களில் பற்றுடையவன் தான் நான். ஆனால் அத்தனை பற்றும் இப்பொழுது ஒழிந்து போயிற்று. காரணம் என்ன? நின் திருத் திருப்பாதமே. மனம் பாவித்தேன் - சிருஷ்டித் தத்துவமான, திருவருள் மயமான உன் திருவடிகளைக் கண்டேன். அப்படியே ஈடுபட்டுவிட்டேன். என்னை ஒப்படைத்துவிட்டேன் அதனிடம். பெற்றதும் பிறந்தேன். அவ்வளவுதான் புதுப்பிறவியே கிடைத்துவிட்டது. பிறகு விடுவேனா உன்னை? உன் திருவடியே தஞ்சம். உன்னோடு இருக்கிறபொழுது எமன் வருவானா என் பக்கம். இறப்பில்லை அதனால். பிறப்பும் இல்லை எனக்கு பெருமானே, உன் கூடவே இருப்பேன். பிறகு எப்படி மறக்கும் மனம் உன்னை. மனம் மறந்தாலும் வாய் மறக்குமா? உன்னை ஐயா, அரசே என்று கூப்பிடுவதைத் தவிர அதற்கு வேறு என்ன வேலை?

*18. எங்கும் சக்தி, ஒரே சக்தி. காலம், இடம் எல்லாவற்றையும் தாண்டியது சக்தி. காலம், இடம் எல்லாம் சக்திக்கு உள்ளேதான். அதாவது சக்தியின் வெளிப்பாடுதான். காலம், இடம் எல்லாம்.*

*காலத்தையும் தாண்டியது, இடத்தையும் தாண்டியது சக்தி என்றால் மனதால் அதை நெருங்க முடியுமா? வாக்கால்தான் நெருங்க முடியுமா அதை?*

*மனதையும் வாக்கையும் கடந்த ஒன்றைப் பார்க்க வேண்டும், உறவாட வேண்டும் என்றால் அதற்கு ஒரு உருவம் வேண்டுமே. கற்பனைக்காகவாவது ஒரு உருவத்தை நாம் கொடுத்துத்தானே ஆக வேண்டும்.*

*நாம் கொடுக்கிறோமோ இல்லையோ சக்திக்கு ஒரு உருவம் உண்டு. (பரம்) பொருள் என்பதுதான் அதன் உருவம்.*

★★★★★★★

*அப்படியானால் (பரம்) பொருளே சக்தி மயமாக இருக்கிறது. அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் எல்லாமே சக்தியில் தோன்றும் தோற்றம்தான்.*

★★★★★★★

*பரம்பொருளாகிய சிவபெருமான் சக்தியை தன்னுள் வைத்திருக்கிறான். இதை எப்படித் தெளிவுபடுத்துகிறார்கள் முன்னோர்கள்?*

*''சக்தியாகிய தேவி சிவப் பரம்பொருளின் பாகமாக இருக்கிறாள். நாயகி நாயகனாக அமர்ந்தபடி இருக்கிறது சக்தியும்*

---

*குறிப்பு : மூர்த்தி, தீர்தம், தலம் எல்லாம் சாதாரணம். யாருக்கு? பூமி சாஸ்திரம் என்ற பெயரில் மேல்நாடு கீழ்நாடு என்று படித்தவர்களுக்கு ''ஓ, பாண்டிக் கொடுமுடியா'' என்று ஒதுங்கப் பார்ப்பார்கள் அவர்கள்.*

*ஆனால் உண்மையை உணர்ந்து கற்றவர்கள் காரியம் அப்படி இல்லை. கற்றவர்கள் என்றால் யார்? உண்மையைப் பார்க்கிறவர்கள். உணர்ச்சி மயமாய்ப் பார்க்கிறவர்கள். பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறவர்கள். அவர்களுக்குத் திருப்பாண்டிக் கொடுமுடியின் அருமை, மூர்த்தியின் கருணை இவற்றை நினைத்தாலே போதும் உருகி விடுவார்கள். கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறை ஊரில்ப் ''பாண்டிக் கொடுமுடி நன்றவா'' என்று உருகுவார்கள். கரைந்து கரைந்து உருகுவார்கள்.*

*பாண்டிக் கொடிமுடி கொங்கு நாட்டில் ஈரோட்டுக்கு தென்கிழக்கே இருபத்து மூன்று மைல் தொலைவில் இருக்கிறது.*

பொருளும்'' என்று அழகொழுகச் சொல்கிறார்கள். அணுவி லிருந்து அண்டம் வரை சகலமும் சக்தி - பொருள் என்று சேர்ந்த கோலம் தானே.

★★★★★★★

இந்த உண்மையை அம்மையப்பனாகக் காட்டுகிறது ஒரு நயம். இனி சக்தியைக் காளையாக உருவகம் பண்ணி அதை வாகனமாக்கி ஓட்டுகிறார் (பரம்) பொருளாகிய இறைவன் என்று சொல்கிறதும் ஒரு தனி நயந்தான்.

★★★★★★★

சக்திதான் பொருள். பொருள்தான் சக்தி. இந்த உண்மையை அனுபவிக்க அனுபவிக்க அப்படி வருகிறது கற்பனை.

சுந்தரரும் ''பெற்றம் ஏறும் பிரான்'' என்று காளையின் மேல் ஏற்றி வைத்தே அவன் அலங்காரத்தைப் பார்க்கிறார்.

★★★★★★★

இனி, காளையானது ஒரு பேருண்மையை முத்திரை பிடித்தபடி ஒரு ஆட்டம் ஆடிவிட்டுப் போகிறது, இசையோடு கூடிய தமிழில்.

இந்த ஆட்டத்தைப் பார்க்க வேண்டாமா? பாட்டைக் கேட்டு உருக வேண்டாமா? அம்மையப்பா, உமையொருபாகா, நந்தி நாயகா என்றெல்லாம் கூவி அழைக்க வேண்டாமா

அது பற்றிய சூடு சுரணையே இல்லாமல் சோற்றுக்குப் பின்னும் துணிக்குப் பின்னுமாக எங்கெங்கோ ஓடி ஊர்வம்பு பேசுகிறார்கள் சிலர் அல்லது பலர் என்றால் அவர்களுக்காக இரக்கப்படலாம் அது ஞாயம். ஆனால், ஏன் இப்படி அலைகிறார்கள் இவர்கள் என்று அவர்களை ஆராய்ச்சி செய்து வீண்பொழுது போக்கக் கூடாது.

அவர்கள் தலை எழுத்து அப்படி என்று விட்டுவிட வேண்டும். ''பெற்றம் ஏறும் பிரானைப் பேசார் பேச் சென்ன பேச்சே'' என்று விட்டுவிட வேண்டும் அவர்களை.

இனிப்பாடல்,

*தன்னான தன்னான தன்*
*தன்னான தன்னான தன்*

*நெற்றிக்கண் உடையா னை,*
*நீறேறும் திருமே னிக்*
*குற்றம்இல் குணத்தா னைக்,*
*கோணாதார் மனத்தா னைப்,*
*பற்றிப்பாம்(பு) ஆர்த்தா னைப்:-*
*பண்உலவு பனங்காட் டூர்*
*பெற்றம்ஏ றும்பிரா னைப்*
*பேசார்பேச் சென்னபேச் சே!* (101)

உள்ளான அன்பு (பக்தி) இருந்தால் போதும். பெருமானின் அருமை பெருமைகளை உள்ளத்துள் வைத்து அனுபவித்தால் போதும். உள்ளத்தில் ஆனந்தம் ஊறும். பேரானந்தமாகவே ஊறும் அது. காதல் வெள்ளமாய்ப் பெருகும் அந்த உணர்ச்சி. ஆனந்த வெள்ளம் அப்படிப் பொங்குகிறது சுந்தரருக்கு. அதுதான் பாடல். பனங்காட்டூர் திருக்கோவில் காஞ்சிபுரத்தில் உள்ளது.

திருவலஞ்சுழி நாதர் மேல் ஒரு பெண்ணுக்குக் காதல். அவள் சொல்கிறாள்.

''இவருடைய வாகனமாகிய காளையை (பெற்றத்தை)க் கண்டேனா நான்? இல்லை சடையைச் சுற்றித் தொங்கவிட்டிருக்கிறாரே கொன்றைப் பூமாலை, அதைத்தான் பார்த்தேனா.

''நானுண்டு, என் வேலை உண்டு என்றிருக்கிறேன். அப்படி இருக்க என்னை ஏன் இவர் இப்படி உருக்குகிறார். காதல்

---

நீறு - திருநீறு. கோணாதார் - எல்லாம் சிவமயம் என்கிற நேர்பார்வை யாளர், சிவனடியார். பற்றி பாம்பு ஆர்த்தான் - பூமிக்கும் வானத்துக்கு மாகத் தொங்கும் பாம்பு போல் தெரிகிறதே நட்சத்திரக் கூட்டம் அதையே அள்ளி எடுத்து கையில் காப்பாகவும், கழுத்தில் மாலையாகவும், காதில் குண்டலமாகவும் மாட்டிக் கொள்கிறான் இறைவன். சர்வ வியாபகத்தையே ஒரு பொட்டு வைத்துக் காட்டுகிற மாதிரி தான் அது. பண் - இசை. பெற்றம் - காளை. சக்தியின் அடையாளம் காளை.

குறிப்பு: பெருமானுடைய அருமை பெருமை மனசில் படவில்லை ஒருவருக்கு என்றால், பட்டு அவர் நெஞ்சம் உருகவில்லை. என்றால் அவரை விட்டு ஒதுங்கிவிட வேண்டியதுதான்.

வயப்பட்ட பெண்களை உருக்குவதுபோல் என்னை ஏன் உருக்குகிறார்.

என் கை வளையல்களை உருவிக் கொண்டு போகிறாரே அது ஏன்.'' இப்படி வருகிறது பெண்ணின் வியப்பு.

*தானேறும் ஆன்ஏறு*
*கைதொழேன், தண்சடைமேல்*
*தேன்ஏறு கொன்றைத்*
*திறம்பேசேன்:- வான்ஏறு*
*மையாறும் சோலை*
*வலஞ்சுழியான் என்கொல்என்*
*கையார் வளைகவர்ந்த*
*ஆறு (102)*
*(திருவலஞ்சுழிமும் மணிக்கோவை)*

திருவலஞ்சுழி மும்மணிக்கோவைப் பாடலை - தானேறும் ஆனேறு என்றும் வெண்பாவை பாடி அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க அனுபவிக்க 'பெற்றம் ஏறும்பிரான்' என்னும் சுந்தரர் வாக்கு விளங்கும். சுந்தரரின் உள்ளுணர்ச்சியே விளங்கும்.

*''பக்தியானது காதல் வெறிகொண்டு*
*பெற்றம்ஏ றும்பி ரானைப்*
*பேசார்பேச் சென்னபேச் சே''*

முழங்குகிற முழக்கம் செவியில் விழும்.

---

ஆனேறு - காளை. வான் ஏறு மை ஆறும் சோலை - வானில் (ஆகாயத்தில்) தாவி ஏறுகின்ற மேகம் தவிக்கும் நேரத்தில் இளைப்பாறுவது சோலையில், மரத்தில் தான். வலஞ்சுழியை சுற்றி இருக்கிற மரங்களின் உயரம் அப்படி. மை - மேகம். ஆறுதல் - இளைப்பாறுதல்.

# வேறு வேலை இல்லையா உங்களுக்கு?

*19. பொதுவாக செல்வந்தர்கள் நல்லவர்கள் தான். கொடுக்கும் உணர்வு உள்ளவர்கள் தான். ஆனால் எதற்குக் கொடுக்க வேண்டும் - தாராளமாக எதற்குக் கொடுக்க வேண்டும். எதை எதைத் தவிர்க்க வேண்டும் என்கிற விபரம் அவர்களிடம் இல்லை. விபரம் தெரியவேண்டிய ஆர்வமும் அவர்களிடம் இல்லை.*

★★★★★★★

*ஒரு தொழிலதிபர் - பெருவணிகர், நிலச்சுவான்தார் ஒரு வருடத்தில் எத்தனை விருந்து வைக்கிறார் பிரமுகர்களுக்கு. இனி, அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், இவர்களுக்கு விருந்து என்ற பெயரால் அள்ளி இறைக்கிற பணம் எவ்வளவு? மேலும் கம்பெனியின் பெயரில் அங்கங்கே விருந்தினர் மாளிகைகள் கட்டி அவற்றைப் பராமரிக்க எவ்வளவு செலவழிக்கிறார்.*

*இந்தத் தொகையைக் கூட்டிக் கணக்கிட்டால் கலை, பண்பாடு, சமயம், வழிபாடு, சுத்தம், சுகாதாரம் என்கிற சமுதாய நலனுக்கு அவர் கொடுக்கிறது குறைவுதான்.*

*அரசியல் தலைவர்களுக்கு பெருந்தனக்காரர் ஓடி ஓடிச் செய்கிறார். வலியச் சென்று செய்கிறார். ஆனால் கவிஞர், அறிஞர், கலைஞர், ஏன் ஆன்றோர் சான்றோர்களைக் கூட நிற்க வைத்து ஒன்றுக்கு நான்குமுறை அலையவைத்து, முற்றத்தில் காக்க வைத்தே கொடுக்கிறார்.*

*அதிகாரிகளிடம் பணிந்து பரிமாறுகிறார் பணத்தை. பண்புடையார்களையோ அலட்சியப்படுத்திக் கொடுக்கிறார்.*

*இது செல்வத்தின் குற்றம் இல்லை. செல்வத்தின் அருமை பெருமை தெரியாத மூடத்தனத்தின் குற்றம்.*

★★★★★★★

செல்வர்கள் எல்லோரும் அப்படி இல்லை. செல்வத்தின் தெய்வ மணத்தை நுகர்ந்த அருளாளர்களும் அருட் செல்வர்களும் சிலர் இருக்கிறார்கள்.

ஆனாலும் என்ன செய்ய முடியும் இவர்களால். இலக்கியத்தை, கவியை, கலையை, பக்தியை உண்டாக்கிவிட முடியுமா? இல்லை தூக்கி நிறுத்தி நிற்க வைத்திடத்தான் முடியுமா? ஒன்றும் முடியாது பணத்தால். பணத்தைக் கொண்டு கொஞ்சம் விளம்பரப்படுத்தலாம். அந்த விளம்பரத்தில் தம்மையும் விலாசப்படுத்திக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

கொஞ்சம் ஆடம்பரமாக, படாடோபமாக, பணத்தைப் பணம் என்று பாராமல் ஒரு சில நாட்கள் செலவழிக்க முடியும். எல்லாம் கனவு காண்கிற கணக்காகவே போய் முடியும்.

இது ஒரு கோமாளித்தனம். இந்தக் கோமாளித்தனம் அருளாளர்களுக்குத் தேவை இல்லைதானே. அடியார்களைப் பார்த்துச் சுந்தரர் சொல்கிறார்.

★★★★★★★

''இதற்காகவா பணக்காரன் வீடுதோறும் படி ஏறி இறங்குவது? நாம் வருவது தெரிந்தாலே வீட்டுக்கு உள்ளே போய் ஒளிகிறான். இல்லை என்றால் வேலைக்காரனிடம் ''ஐயா வெளியே போயிருக்கிறார் என்று சொல் என்கிறான். அந்த ஆளைப் போகச் சொல்'' என்கிறான்.

அப்படி இருக்க மதியாதார் தலைவாசலை ஏன் மிதிக்க வேண்டும்.'' இப்படிச் சொல்வது யார்?

சுந்தர மூர்த்தி நாயனார் தான் சொல்கிறார், ''இதோ பாருங்கள் புலவர் பெருமக்களே! திருப்புகலூரில் இறைவனே நம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். மாலை வேண்டாம், சால்வை வேண்டாம், வாழ்த்து மடல் ஒன்றும் வேண்டாம். போகிறவழியில் செடிகொடிகளுக்கா பஞ்சம்? இரண்டு மலர்கள் இல்லை என்றால் இரண்டு இலைகளைப் பறித்துக் கொண்டால் போதும். ஒரு குவளைத் தண்ணீர் போதும்.

பெருமானைத் திருமஞ்சனம் ஆட்ட வேண்டியது. பூவை அவன் மேல் சார்த்த வேண்டியது. பார்த்தால் அப்படியே புன்முறுவல் பூப்பான். அந்த அருள் முறுவல் நம்மை அப்படியே அணைக்கும்

*இம்மை யேநறும்*
*பூவும் நீரும் கொண்(டு)*
*ஏத்தலாம்*

இப்படி எல்லாம் இருக்கத்தானே செய்கிறது வசதி. பிறகு ஏன், பணக்காரன் பணக்காரன் என்று அவனை நாடியே ஓடுகிறீர்களே ஏன்? புலவர் குல திலகங்களே, அது ஏன்?

*தம்மையே புகழ்ந்து*
*இச்சை பேசினும்*
*சார்வினும், ஒன்றும்*
*தருகி லாப்*
*பொய்ம்மை யாளரைப்*
*பாடா தே,எந்தை*
*புகலூர் பாடுமின்*
*புலவீர் காள்*

சரி, அது போகட்டும். என்னதான் அவன் - அதாவது பணக்காரன் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் அது உங்களுக்குப் பயன்படுமா. உங்களுடைய தேவை என்ன?

நிம்மதி, அமைதி, ஆனந்தம், எல்லாம் அவன் செயலே என்கிற உண்மை உணர்வு, உறுதிப்பாடு, அச்சம் இன்மை இவைதானே! இவற்றை எந்த ஒரு தனவந்தனாலும் தர முடியுமா உங்களுக்கு?

புகலூர் பிரான்தான் இவற்றைக் கொடுப்பான். இவற்றைப் பெற்றவனுக்கு என்ன குறை இருக்கும் வாழ்க்கையில்

இப்படியாக இக பர. இன்பம் இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து வழங்குகிறான் புகலூர்ப் பிரான். வாருங்கள் அங்கே என்கிறார் சுந்தரர்

பாடல்.

*தான தானன*
*தான தானன*
*தான தானன*
*தன்ன தன்*

*தம்மை யேபுகழ்ந்(து)*
*இச்சை பேசினும்*
*சார்வினும், ஒன்றும்*
*தருகி லாப்*
*பொய்ம்மை யாளரைப்*
*பாடா தே,எந்தை*
*புகலூர் பாடுமின்*
*புலவீர் காள்!*
*இம்மை யேநறும்*
*பூவும் நீரும்கொண்(டு)*
*ஏத்த லாம்இடர்*
*கெடலும் ஆம்;*
*அம்மை யேசிவ*
*லோகம் ஆள்வதற்(கு)*
*யாதும் ஐயுற(வு)*
*இல்லை யே!* *(102)*

*20.* நமக்கு எது' எது தேவை என்பதை கணக்கிட்டு அதை அதை நம்மிடம் அன்போடு கொடுக்கிறான் இறைவன். குழந்தைக்கு அமுதூட்டும் தாய் போல - மார்போடணைத்து அமுதூட்டுகிறாளே தாய் - ஈன்றெடுத்த அன்னை. அவள் மாதிரியல்லவா நம்மை அரவணைத்து அருள் பாலிக்கிறான் பெருமான்!

பழகக் கொடுத்தவன், உறவாடக் கொடுத்து வைத்தவன், மனதுக்கு உகந்தவன் என்றால் அது அவனல்லவா? அவனைத் தவிர வேறுயார் நமக்குத் துணை - உற்ற துணை.

---

பொய்ம்மையாளர் - செல்வத்தை ஒளித்து வைத்திருக்கிற திருடர். புகலூர் - புகலூர்ப் பிரான். இடர் - துன்பம். அம்மை - மறுமை.

திருப்புகலூரில் மட்டுமா இருக்கிறான் அவன். நாம் போகிற இடம் எல்லாம் அவன்தான். போகாத இடம் எல்லாம் அவன்தான்.

இதோ வலம்புரம்.

அழகான கடற்கரை. கரை எல்லாம் பனங்காடு. நுங்கும், பதனீருமாய் இருக்கிறது பனை.

வாருங்கள் அங்கே. வலம் வந்து வழிபடுவோம் எம்மானை - நம்மவனை.

இப்படி ஆர்வத்தோடு கூவி அழைக்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

எப்படி,

*தன்னன தானன*
*தானன தனன*

*பனைக்கனி பழம்படு*
*பரவையின் கரைமேல்*
*மனக்கினி யவன் தன(து)*
*இடம்வலம் புர மே* *(103)*

---

பனைக்கனி - பதநீர். (பனம்) பழம் - நுங்கு. பரவை - பரந்து விரிந்த கடல். மனக்கு இனியவள் - எம்பெருமான், இறைவன். இடம் - கோயில் கொண்டு கொலுவீற்றிருக்கும் ஸ்தலம்.

குறிப்பு: இடம் வலம் என்கிற முரணில் தனியான ஒரு ரசம்.

# என்னைத் தெரியவில்லையா உமக்கு?

21. திருவெண்ணெய் நல்லூர் ஒரு புண்ணிய ஸ்தலம். பெண்ணையாற்றின் தென் கரையில் இருக்கிறது வெண்ணெய் நல்லூர்.

பாலாறு, நெய்யாறு போல வெண்ணெய் ஆறு என்று தான் பெயர். அது மருவிமருவி பெண்ணையாறு - பெண்ணாறு என்று வந்துவிட்டது என்பார்கள் அறிஞர்கள் சிலர்.

அது எப்படியோ நமக்குத் தெரியாது. ஆனாலும் ஒரு ஊருக்கு வெண்ணெயூர், வெண்ணெய் நல்லூர், திருவெண் ணெய் நல்லூர் என்று பெயர் வைத்திருக்கிறதே அது ஒன்று போதாதா.

வெண்ணெய் நல்லூர் வெண்ணெய் நல்லூர் என்று சொல்லிக் கொண்டே இருக்கலாமே. சொல்லச் சொல்ல நாவில் தேனூறத் தானே செய்யும்.

*******

திருவெண்ணெய் நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார் பெருமான். அருள்த்துறை நாதர் என்ற பெயர்.

கோவிலுக்கே அருள்த்துறை என்றுதான் பெயர்.

வெண்ணெய் நல்லூர் அருள்த் துறைக்குப் போக வேண்டும். அருள்த்துறை நாதரைக் கண்டுகளிக்க வேண்டும் என்று நினைப்பு வந்துவிட்டது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு.

புறப்பட்டு விட்டார். அருள்துறை நாதரே நேரில் வந்து தன்னை அழைத்துப் போகிறதாகத் தெரிகிறது சுந்தரருக்கு.

நடக்கும் வழி எல்லாம் இறைவனே 'வருக வருக' என்று வரவேற்பது போலவும் தெரிகிறது.

*******

அருள்துறைக்கே வந்தார். அருள்துறை நாதரைப் பார்த்தாரோ இல்லையோ:- பெருமான் பாய்ந்தோடி வந்து

ஆவியோடு சேர்த்துக் கட்டிப் பிடித்து உருகுவது போலவே இருக்கிறது சுந்தரருக்கு.

அப்பொழுது படுகிறது சுந்தரருக்கு, உள்ளத்தில் உள்ளவர் தான் அருள்த்துறை நாதர் "அவர் பாதம் பட்ட இடமாயிற்றே என்று இங்கு வந்தோம். வந்த உடனே எப்படி குதித்து வெளியில் வந்துவிட்டார். நம் உள்ளத்திலிருந்தவர் குதித்து வந்தது மட்டுமா? நின்று வரவேற்கவும் செய்கிறாரே நம்மை" என்று.

*"மனத்துன்னை வைத்தாய்"*

சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு ஒரு உறுதி, தன்னோடு சேர்ந்தே இருக்கிறார் இறைவன் என்று. அவர் தன்னை வரவேற்க வெளியயே வந்தது போலவும், வரவேற்றுவிட்டு பழையபடி உள்ளே புகுந்தது போலவும் இருக்கிறது. அப்படியானால் எப்படி இருக்கும் அதிசயம்.

*"எத்தால்மற வாதே நினைக்கின்றேன்"*

இறைவனின் திருமேனியாய் - ஒரு புது அவதாரமாய் இருக்கிற மூர்த்தியிடம் சொல்கிறார். வேடிக்கையும் வின்யாச முமாகவே சொல்கிறார் சுந்தரர்.

அருட்துறை நாதரே "எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். வீடு வாசல் என்று ஒன்று பாக்கி இல்லை. எல்லாம் போய்விட்டது என்னைவிட்டு. உன் பெயர் என்ன என்று கேட்டால் அது கூட என் நினைவில் இல்லை. ஒன்றுமே இல்லை நினைவில். ஆனால் உம்மை மட்டும் மறக்க முடியவில்லையே ஏன்" இப்படிக் கேட்டுவிட்டு திகைக்கிறார் சுந்தரர். சட்டென்று ஒரு பொறி தட்டுகிறது. 'ஓகோ, அப்படியா சங்கதி. நீர்தானே என்னுள் புகுந்து நிறைந்திருப்பது. பிறகு எப்படி மறக்க'.

*"உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமோ"*

நான் உம்மை மறக்கக் கூடாது என்பதற்காகவே நீர் என் உள் புகுந்தீர்.

சரியான ஆளையா நீர். அன்பில் இவ்வளவு பித்தா (பைத்தியமா) உமக்கு. பேஷ், பேஷ்.

பாடல்,

*தான தன தான தன*
*தான தன தன ன.*

*பித்தா பிறை*
*சூடி, பெரு*
*மானே, அருள்*
*ஆ ளா!*
*எத்தால் மற*
*வாதே நினைக்*
*கின்றேன்; மனத்(து)*
*உன் னை*
*வைத்தாய்! பெண்ணைத்*
*தென்பால் வெண்ணெய்*
*நல்லூர் அருள்த்*
*துறை யுள்*
*அத்தா! உனக்(கு)*
*ஆளாய் இனி*
*அல்லேன் எனல்*
*ஆ மோ* *(104)*

எத்தால் எதனால், எப்படி. பெண்ணை - பெண்ணையாறு. அத்தா - அப்பனே. ஆளாய் அல்லேன் எனல் ஆமோ? விட முடியுமா உம்மை!

# எனக்காகத்தானே நீ கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறாய்

22. உலகம் முழுவதும் - எல்லா இனத்தாரிடமும் இசை உண்டு. இசைதான் மனிதனின் ஆதிமொழி.

பலநாட்டு இசை அப்படி அப்படியே நிற்கின்றன. ஒரு சில இடங்களில் அந்த இசை எழுந்து, நின்று, கையைக் காலை வீசி அப்படியும் இப்படியுமாக நடமாடுகின்றன. ஒன்றிரண்டு இடங்களில் தனக்கென்று ஒரு உருவம் பெற்று, பாட்டோடும், கூத்தோடும் சேர்ந்து கும்மாளம் போடுகின்றன.

★★★★★★★

உலகிலேயே தமிழிசை தனி. அதற்கு நிகர் அதுதான். காரணம் இரண்டு? முதல் காரணம் தமிழே, தமிழ் மொழியே இசைமயமாக இருக்கிறது. இரண்டாவது காரணம் இசைதான் உணர்ச்சிபாவங்களுக்கு உருவம் கொடுக்கிறதோ? கவியாக உருவெடுக்கிறதோ? என்று சொல்லும்படி உள்ளது, அதாவது விஷயம், உணர்ச்சி இரண்டையும் குழைத்துப் பிசைந்து கவி உருவம் கொடுக்கிறது இசை தமிழிசை.

நடனத்தை இயக்குவதே இசைதான். அப்படிப் பாட்டோடு பாட்டாய் நிறைந்திருக்கிறது இசை.

கடவுளும் அப்படித்தானே நிறைந்திருக்கிறார் பிரபஞ்சம் முழுவதும்.

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்.

★★★★★★★

பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கிறான் இறைவன். அவனைத் தவிர ஒன்றும் இல்லைதான். ஆனாலும் அடியார்களின் உணர்வில் - உணர்ச்சியில் அவர்கள் வேண்டும் உருவில் தனியாக இருக்கிறான் பெருமான்.

அடியார்களின் ஈடுபாடு, தியானம், தவம், யோகம் இவற்றுக்கு ஞானம் என்று பெயர். வானம் என்பதுதான் ஞானம் என உருமாறியது.

வானம் என்றால் விண் (ஆகாயம்) என்றும் பொருள்தானே.

சுந்தரர் கேட்கிறார் பெருமானிடம் "என்னையா நீர், விண்ணிலேயே நடமாடிக் கொண்டிருக்கிற நீர். அதை விட்டுவிட்டு எனக்காக இங்கே (பூமிக்கு) இறங்கிவந்து விட்டீர். அதுமட்டுமா நான் எங்கெங்கு போகிறேனோ அங்கெல்லாம் உடன் வருகிறீர். என் கால்வலி, மேல்வலி, சோர்வு, மயக்கம் எல்லாவற்றையும் போக்குகிறீர்! அங்கங்கே கோயில் கொண்டும் எழுந்தருள்கிறீர். அங்கே வா, இங்கே வா என்று என்னைக் கூப்பிடுகிறீர். கொஞ்சம் தாமதித்தால் என் கையைப் பிடித்தே இழுத்துக் கொண்டு போகிறீர்.

திருவெள்ளடை என்னும் ஸ்தலத்துக்கு நான் வருவதற்கு முன்கூட்டியே நீர் வந்து குடிபுகுந்தது மட்டுமல்ல, வருக வருக என்று வரவேற்றும் உபசரிக்கிறீரே? என்ன கூத்து இது.

*மண்ணிடை அடியார்கள்*
*மனத்துயர் வாராமே*
*விண்ணடை புகுதாதெம்*
*வெள்ளடை வந்தாயே!*

எங்கே இருக்க வேண்டிய நீர். எனக்காக இங்கே (திருவெள்ளடைக்கே வந்து) சுற்றிச் சுற்றி அலைகிறீரே. உம்மை என்ன சொல்ல.

*பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்*
*பழத்தினில் சுவை ஒப்பாய்*
*கண்ணிடை மணிஒப்பாய்*
*கடுஇருட் சுடர் ஒப்பாய்*
*மண்ணிடை அடியார்கள்*
*மனத்துயர் வாராமே*
*விண்ணிடை புகுதா(து)எம்*
*வெள்ளடை வந்தாயே* *(105)*

---

*பண் - இசை, தமிழ் - பாடல் பழத்தினில் சுவை - சுவை நிரம்பிய மதுரமான கனி. கண்ணிடை மணி - கண்ணே அழகு. அதிலும் வெள்விழி, அதனுள்ளே கருவிழி. அதன் நடுவில் சிறுஓட்டை. ஊசி கூட நுழைய முடியாத ஓட்டை. அதில் ஒரு பாப்பா. என்ன அலங்காரம் அந்தப் பாப்பாவுக்கு.*

குறிப்பு : பெரிய மலைகள், சமுத்திரங்கள், நட்சத்திரங்களைக் கூட இந்தச் சின்னஞ்சிறு பாப்பா அந்தப் பொடி ஓட்டை வழியே இழுத்துக் கொண்டுபோகிறது. கொண்டு போய் இது இது இன்னின்ன என்று பிரித்தும் வைத்து விடுகிறது. எல்லாம் வல்ல இறைவனல்லவா கண்ணில் நின்று காட்சி கொடுக்கிறான். ''கண்ணிடை மணி ஒப்பாய்.'' கடு இருள்சுடர் - இரவும் முழுநிலாவும் சேர்ந்தால் என்ன இதம், என்ன சுகம். அப்படிச் சுகமாய் இருக்கிறான் பெருமான். மண்ணிடை - பூமியில். அடியார்கள் - அடியவர்களுக்கு. மனத்துயர் - மயக்கம், மறதி அது எவ்வளவு பெரிய குழப்பம். அதை உடனுக்குடன் தவிர்க்கவே கூடவே இருக்கிறான் இறைவன். உணர்வில் நிற்பதைப் போலவே உடம்போடு ஒட்டி நிற்பதும், தனி ஒரு இன்பந்தான் இறைவனுக்கு. ''விண்ணிடை புகுதாமே வெள்ளடை வந்தாயே''

குறிப்பு : இறுதி இல்லாதபடி எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக் கிறது கடவுள்த் தத்துவம். சமுத்திரமானது அலைகளாக உருவெடுப்பது போல் அண்டங்களாகவும் - அகண்டங்களாகவும் சகல கோடி ஜீவராசிகளாகவும் விளைகிறது கடவுள்த் தத்துவம்.

இந்த உண்மையை ஞானிகள் உணர்ந்து அனுபவிக்கிறார்கள். அவர்களை விட்டுப் பிரியாமல் அவர்களின் உணர்ச்சியோடு உணர்ச்சியாய் நிறைந்திருக்கிறது இந்த அனுபவம்.

அனுபவம் முற்றி விளைந்து, பழுத்து கனியக் கனிய சிவன், முருகன், ராமன் என்று உருவம் எடுக்கிறது உண்மை. கோயில், மூர்த்தி, வழிபாடு என்றெல்லாம் நம்மோடு ஒட்டி உறவாடுகிறது அனுபவம். ஆனந்தமயமான அனுபவம்.

★★★★★★★

எல்லாம் இறைவன் செயல் என்பது தான் உண்மை. இந்த உண்மை உணர்ச்சியாய் விளைய வேண்டும். சுந்தரரிடம் உண்மையானது உணர்ச்சிமயமாய்ப் பொங்கியது. இறைவனும் ''இதோ பார் என்னை'' என்று திருவெள்ளடையில் வந்தே நிற்கிறான் சுந்தரர் முன்.

*''விண்ணிடை புகுதாமே*
*வெள்ளடை வந்தாயே''*

என்ற எப்படிப் பரவசப்படுகிறார் சுந்தரர்.

*''நெய்யொடு திரிஒக்கச்*
*செய்யானைச் சேர்வார்க்குப்*
*பொய்யாத உள்ளமே*
*மெய்யாதல் வேண்டுமே''*

சுந்தரர் போன்ற மகான்களை நோக்கிய இத்தகைய பாடல்கள் எழுந்துள்ளன.

23. பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றுவிட்டது. ஐம்பத்து ஏழு வருஷங்கள் முடிந்துவிட்டன இந்தியா விடுதலை பெற்று - சுதந்திரம் பெற்று.

ஐம்பத்து ஏழு வருஷத்தில் ஒரு புது இந்தியாவையே உருவாக்கிவிட்டோம். மண்ணாய்க் கிடந்ததை எல்லாம் பொன்னாய்ப் பொலிய வைத்துவிட்டோம். அதையும் விடப் பெரிய காரியம் நாம் எல்லோரும். நூறு கோடி மக்களும் மனிதர்களாகவே ஆகிவிட்டோம்.

★★★★★★★

விவசாயம் வணிகம், தொழில், விஞ்ஞானம், போக்கு வரத்து எல்லாவற்றிலும் முன்னேற்றம். உல்லாசம், களியாட்டம், கொடை, புகழ் எல்லாவற்றிலும் செழிப்பு - ஒரே செழிப்பு.

எங்கு பார்த்தாலும் பணம் - ஒரே பணம், வரவும் அப்படி, செலவும் அப்படி. போடு போடு என்று போடுகிறது வாழ்க்கை. ஒரே கும்மாளந்தான் வாழ்க்கை.

★★★★★★★

இவ்வளவிருந்தும் ஒன்று மட்டும் இல்லை. ஏழை இடமும் இல்லை, பணக்காரனிடமும் இல்லை. அறிஞனிடமும் இல்லை, முட்டாளிடமும் இல்லை. அரசனிடமும் இல்லை, ஆண்டியிடமும் இல்லை. வீரனிடமும் இல்லை. கோழையிடமும் இல்லை அது.

அது என்னது? நிம்மதி அதாவது அமைதி. அச்சம் இல்லாத ஆனந்தம். அது யாரிடமும் இல்லை. ஆண், பெண், குழந்தை எல்லோரிடமும் கலக்கந்தான், பயந்தான். இருப்பது அதுதான்.

இன்றையப் பொழுது எப்படிப் போகுமோ என்கிற பயம். நாளையப் பொழுது எப்படி விடியுமோ என்கிற அச்சம்.

★★★★★★★

அச்சமும் குழப்பமும் பெருகப் பெருக ஒரே குழப்பம், ஒரே தொல்லை. ஏகப்பட்ட பிரச்சனை. எதை எடுத்தாலும் முடிச்சு.

முடிச்சுக்குமேல் முடிச்சு. பிறகு எப்படி இருக்கும் நிம்மதி.

நிம்மதி இல்லாதபோது எது இருந்து என்ன பலன். இப்படி ஒரு மயக்கம், சோர்வு வந்து கொண்டே இருக்கிறது. பொழுது விடிஞ்சா, பொழுது அடைந்தா கவலைதான். மயக்கந்தான், பயந்தான்.

அப்பொழுதெல்லாம் யாரை நினைக்கிறோம் நாம். இந்தியர்களாகிய நாம். மகாத்மா காந்தியடிகளையே நினைக்கிறோம். "நீர்தான் தஞ்சம், நீர்தான் வழி, உம்மை விட்டால் வேறு ஏது எங்களுக்குப் புகலிடம்" என்று அவர் காலில் விழுகிறோம்.

"அன்னே உன்னை அல் லால் இனி
யாரை நினைக்கே னே"

அப்போதைக்கப்போது அமைதி கிடைக்கத்தான் செய்கிறது.

கடவுளின் அம்சந்தானே காந்தி. கடவளின் நேர்சாயல் காந்தி. எப்பொழுதும் கடவுள்த் தத்துவத்திலேயே ஒன்றி நிற்கிற ஞானி அல்லவா அவர்.

அவர் காலில் விழுவது கடவுளின் காலில் விழுவது போலத்தான். அப்படியானால் கடவுளின் காலிலேயே விழுவது?

கேட்கவா வேண்டும் அந்த அற்புதத்தை. இதோ பாருங்கள் சுந்தரரை.

அன்னே உன்னை அல் லால் - இனி
ஆரை நினைக் கேனோ

எப்படி விழுகிறார் இறைவனுடைய திருவடிகளில் சுந்தரர். சாஷ்டாங்கமாக விழுகிறார். விழுந்து அவன் திருப்பாதங் களையே பற்றுகிறார். "உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்" என்று உரிமையோடேயே கேட்கிறார்.

பாடலின் முழு உருவம்

*தான தானன தன் - தன*
*தான தானன தன்.*

*பொன்னார் மேனிய னே - புலித்*
*தோலைஅ ரைக்கிசைத் து*
*மின்னார் செஞ்சடை மேல் - மிளிர்*
*கொன்றைஅ ணிந்தவ னே,*
*மன்னே மாமணி யே - மழ*
*பாடியுள் மாணிக்க மே*
*அன்னே! உன்னைஅல் லால் - இனி*
*ஆரைநி னைக்கே னே* (106)

25. எல்லையற்ற ஞானமும் தெளிவும் நிறைந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ''எல்லாம் அவனருளே'' என்னும் உண்மை உணர்ச்சி தான் சுந்தரர்.

கடவுள்த் தத்துவத்தோடு அப்படி இரண்டறக் கலந்து நிற்கும் யோகக் களிறு சுந்தரர்.

ஞானம் எப்படியோ அப்படியே பக்தியும் சுந்தரரிடம். இரண்டும் கைகோர்த்தபடியே களி நடம்புரியும் சுந்தர மூர்த்தி சுவாமிகளிடம்.

இனி பரிவு - அதாவது கருணையை எடுத்துக் கொண்டால் கருணைக் கடல் என்று தான் சொல்ல வேண்டும் சுந்தரரை.

ஜாதி, மத, இன பேதம் இல்லாமல் எல்லா மக்களுக்காகவும் இரக்கப்படுகிறவர் சுந்தரர். அதாவது மக்களின் அறியாமையை நினைத்தும், வழி தெரியாமல் அவர்கள் சுற்றிச் சுற்றி வருகிற குருட்டுத்தனத்துக்கு நொந்தும், திமிர் பிடித்த ஆணவத்தைப் பார்த்துப் பதறியும் கதறிக் கதறி வருந்தினார்.

---

மிளிர் கொன்றை - பளபள என்று ஒளிவிடும் கொன்றை மலர்களை. மன் - அரசர்க்கரசர். அன்னே - அன்னையே, பெற்றெத்த தாயே. ஆரை - நினைக்கேன் - உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள். இருந்தால் அல்லாவ வேறொருவரை நான் நினைப்பேன்.

மழபாடி - திருமழபாடி திருவையாற்றுக்கு வட மேற்கே நான்கு மைல் தொலைவில் இருக்கிறது. இது அரியலூர் வட்டத்தைச் சேர்ந்தது. இறைவன் திருநாமம் வயிரத்தூண் நாதர். தல விருட்சம் பனை. பனைக்கு உள்ளே நடுநாயகமாக வயிரம் பாய்ந்திருப்பது இயல்புதான்.

''வாருங்கள் என் பக்கம் என்றார் மக்களிடம் சுந்தரர். பயப்படாதீர்கள் என்றார். நானிருக்கிறேன்'' என்றார். இதோ பாருங்கள் உண்மையை என்று சுட்டிக் காட்டினார். அதற்காகவே பாடினார். இசையோடு தாளம் போட்டே பாடினார். பட்டி, தொட்டி, சந்து, பொந்து என்று பார்க்காமல் நடந்தார் கோவிலுக்குக் கூட்டிப் போனார். மக்களை. குளிக்கச் சொன்னார். சிரிக்கச் சொன்னார். கவலையை விடுங்கள் என்றார். மக்களிடத்து அப்படி ஒரு கழிவிரக்கம் சுந்தரருக்கு.

மெள்ள மெள்ள மனுசனானார்கள் மனிதர்கள். பக்தி வந்தது. தைர்யம் வந்தது. நாம் மனிதர்கள் என்னும் பெருமிதம் வந்தது. சோம்பல் ஓடியது. சுறுசுறுப்பு வந்தது மக்களிடம்.

சிரிப்பும் கும்மாளியுமாக இருந்தது வாழ்க்கை. சண்டை சச்சரவுகளில் கூட உற்சாகம் குறையவில்லை, உணர்வு தேயவில்லை மக்களுக்கு.

பளபளவென்று கூர்மையாகவே இருந்தது உணர்ச்சி. ஆனாலும் எதைத் தெரிய வேண்டுமோ அதைத் தெரிய வழி பிறக்கவில்லை மக்களுக்கு. எதைக்கொண்டு எதை எதைத் தெரிய வேண்டுமோ. அதைக் காண நினைப்பே இல்லை மக்களுக்கு.

கடவுள் தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கிறவர்கள் ஞானிகள். அவர்களுக்குத் தெரியும் நாம் என்பதாக ஒன்று இல்லை என்று. எல்லாம் கடவளின் கற்பனைதான், கனவுதான், அவர் போடும் வேஷந்தான் என்று. சாதாரண மக்களால் அப்படி ஒன்றி நிற்க முடியாது. அவர்கள் கோயிலுக்குப் போகிறார்கள். மூர்த்தியைத் தரிசிக்கிறார்கள். ஈடுபாட்டோடு வழிபடுகிறார்கள்.

மூர்த்திக்குள்ளிருந்தே - மூர்த்தியே பரம்பொருளாய் காட்சி கொடுக்கிறார். அதைக் கண்டுகளிக்கிறார்கள். அந்தக் காட்சியில் ஈடுபட்டு உருக உருக கடவுள் தத்துவத்திலிருந்துதான் பூமி, வானம், காற்று, தீ, நீர், நாம் எல்லாம் தோன்றியது என்று தெரிகிறது அவர்களுக்கு. எல்லாம் உள்ளுணர்வில்தான்.

*******

தோற்றத்தின் தொடர்ச்சிதான் வளர்ச்சி. வளர்ச்சியின் தொடர்ச்சிதான் மறைவு.

இது அவன் அருள். நாடகமாய் நடக்கிறது அருள். யாராக

இருந்தாலும் எதாக இருந்தாலும் தோன்றினால் மறைய வேண்டியதுதான்.

★★★★★★★

மறைவதற்கு (ஒதுங்குவதற்கு) ஏன் கலங்க வேண்டும் மக்கள். அது பற்றிய நினைப்பே இல்லாமல் காலைத் தரையில் அழுத்தி அழுத்தி ஏன் ஊன்ற வேண்டும் மக்கள். இது ஒன்றுதான் விளங்கமாட்டேன் என்கிறது அவர்களுக்கு. பொதுவாக எல்லோருக்குமே.

நான் மட்டும் போகிறேன்; துணைக்கு ஆள் இல்லையே என்னும் பயமே காரணம். கலக்கத்துக்கு அதுவே காரணம்.

பயத்துக்குக் காரணமே 'நான்' என்கிற தனி உணர்ச்சிதான். கடவுள் இருக்கிறார் துணைக்கு என்பது மறந்து போகிறது.

துணை என்று ஒன்று உண்டென்றால் அது கடவுள்தான். ஆகா, ஓகோ என்று பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தவர்களோ, இந்திரனே, சந்திரனே என்று போற்றிப் புகழ்ந்தவர்களோ, பொன்னாடை போர்த்திப் பூமாலை போட்டவர்களோ ஒருவரும் துணைக்கு வரமாட்டார்கள். நமக்கு நாமே துணை - அதாவது கடவுள் ஒருவரே துணை. எல்லாவற்றுக்கும் அவர் ஒருவரே துணை.

★★★★★★★

இதை மனதில் வைக்க வேண்டும். மறந்துவிடக் கூடாது. ஞாபகத்தில் இருக்க வேண்டியது இதுதான்.

அப்படி இப்படி என்று மனம் புரண்டு கொடுக்கக் கூடாது.

நினைவில் இது நின்றால் எமனாவது, பாசக் கயிறாவது, எருமைக் கடாவாவது, நாமாவது, பயப்படுவதாவது?

★★★★★★★

வாருங்கள். என்னோடு சேர்ந்து வாருங்கள். இந்த நினைப்புடனேயே கோயிலுக்குப் போகலாம். நம்மை எதிர் கொண்டு வரவேற்கக் கோயில் வாசலிலேயே காத்து நிற்கிறார் பெருமான். எங்கே? எதிர்கொள் பாடி என்னும் கோவில் வாசலில் தான்!

துணை என்றால் அவரல்லவா துணை. புகலிடம் என்றால் அவன் காட்சி கொடுக்கும் கோயில் அல்லவா புகலிடம்.

"அதோ தெரிகிறது எதிர் கொள்பாடி. அவன் நிற்கிறதும் தெரிகிறது" இப்படிக் கூப்பிடுகிறார் சுந்தரர் நம்மை. இன்னும் ஏன் தயங்க வேண்டும் நாம்.

இனிப் பாடல்,

*தான தான*
*தான தான*
*தான தான*
*தான தன்*

*மத்த யானை*
*ஏறி மன்னர்*
*சூழ வரு*
*வீர் காள்!*
*செத்த போதில்*
*ஆரும் இல்லை*
*சிந்தையுள் வைம்*
*மின் கள்:-*
*வைத்த உள்ளம்*
*மாற்ற வேண்டாம்*
*வம்மின் மனத்-*
*தீ ராய்*
*அத்தர் கோயில்*
*எதிர்கொள் பாடி*
*என்ப(து) அடை*
*வோ மே!* *(107)*

---

- மத்த யானை - கம்பீரமான முரட்டு யானை. வைம்மின்கள் - பொதிந்து வைத்துக் கொள்ளுங்கள். நழுவ விடாதீர்கள். வைத்த உள்ளம் மாற்ற வேண்டாம் - அப்படியும் இப்படியும் முகத்தைத் திருப்புவது போல் மனத்தைத் திருப்பாதீர்கள். வம்மின் - ஒரே நினைப்பில் வாருங்கள். அத்தர் - அத்தன், இறைவன். மத்தம் - மதம்.

தஞ்சை மாயவரம் வழியில் குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது எதிர் கொள்பாடி.

குறிப்பு: இயல்பான இசை - தமிழிசைதான். அது இயல்பான தாளத்தோடு சேர்ந்து பக்திக்கு வேகம் கொடுக்கின்றது. உருவமே கொடுத்து விடுகின்றது. செய்யுள் உருவம் என்பது அதுதான்.

பாடலைப் பாடப் பாட கவி உருவத்தைக் கண்ணாரக் காணலாம். கண்டுகளிக்கலாம்.

அற்புதமான பாவ உருவம் பெற்ற கவி.

யுத்த சன்னத்தனாய் பட்டத்து யானை கொம்பன் (குலயானை) மேலமர்ந்து போர்களத்துள் ஆடம்பரமாய் வருகிறான் அரசன். வீராதி வீரன்தான் அவன்.

''மூவேழ் உலகுடையான் வாழ்க, முடிமன்னர் போற்றும் பேரரசன் வாழ்க. வீர வேந்தன் வாழ்க, வெற்றி வேந்தன் வாழ்க'' என்று அரசர்கள் பலர் வந்து போற்றுகிறார்கள். அவர்களும் யானையில் அமர்ந்தபடியே போற்றுகிறார்கள். மன்னனுக்கு முன்னும் பின்னும், இடமும் வலமும் புடை சூழ வந்து போற்றுகிறார்கள் அரசர்கள்.

*******

எங்கிருந்தோ வேல் ஒன்று வந்தது. கண்ணைப் பறிக்கும் மின்னல் போல வந்தது வேல். மன்னவன் - மன்னர் மன்னவன் மார்பைக் குறிப்பார்த்து அடித்தது வேல். நெஞ்சுக்கு உள்ளேயே இறங்கிவிட்டது வேல்.

யானை மேல்வைத்த அம்பாரியிலேயே சாய்ந்தான் மன்னன். போய்விட்டான், போயே போய்விட்டான் மன்னாதி மன்னன்.

*குலயானை மேலே*
*குலாவி அமர்ந்து*
*பலயானை மன்னர்*
*பலர்போற்ற வந்தான்:-*
*மலைஆகம் போழ*
*வடிவேலின் வீழ்ந்தான்;*
*நிலையாமை சால*
*நிலைபெற்ற தன்றே!* (சூளாமணி)

---

மலை ஆகம் - கருங்கல் போன்ற நெஞ்சு. ஆகம் - நெஞ்சு. சால - உறுதியாக. எதைக் காட்டுகிறது இது மக்களுக்கு? நிலையாமை என்று ஒன்று இருக்கிறது. எல்லாவற்றோடும் சேர்ந்தே இருக்கிறது. அது ஒன்றுதான் நிலைத்து நிற்பது! கண்ணைத் திறந்துப் பாருங்கள்! பாருங்கள்! பாருங்கள்! என்று தெளிவாய்க் காட்டுகிறது அது. ஆனால் புத்தியில் பட வேண்டுமே!

அடடா! நிலைத்து நிற்பதே நிலையாமை என்கிற ஒன்றுதானா?

மரணத்தைக் கண்டு ஒருவரும் பயப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் மரணம் என்கிற ஒன்று கிளப்பி விடுகிறதே புரளியை - புழுதியை. அந்த அட்டகாசமே பயமுறுத்துகிறது.

பிறந்து வந்தது அதாவது பிறவி எடுத்தது நாம் அல்ல. இறைவன் தான் பிறந்தான். அவன் அவதாரந்தான் நாம் என்பது புலனாக வேண்டும். பிறகு ஏது பயம்.

# மரணம் உறுதி என்று தெரிந்தால் போதும். மரண பயம் ஓடிவிடும்

25. மரண பயத்தை ஒழித்துக் கட்ட கடவுள் தான் கைகொடுக்க வேண்டும். கை கொடுப்பதற்காகவே அங்கங்கே நாடு முழுவதும் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார் பெருமான்.

காஞ்சி மாநகரில் கச்சி கெம்பத்தில், கம்பன் ஏகம்பன் என்று கொலுவிருக்கிறார் பெருமான்.

காலனுக்குக் காலன்தான் அவர். காலகாலன்தான் அவர்.

★★★★★★★

*கால காலனைக்*
*கம்பன் எம் மானைக்*
*காணக் கண் அடி*
*யேன்பெற்ற வாறே*

கோவிலுக்குப் போய் மூர்த்தியை வழிபட்டு வணங்கினால் போதும். பெருமான் கூடவே வருவார். அவர் மட்டுமா? கோவில், கோபுரம், நந்தி, கொடிமரம், அலங்காரம், அபிஷேகம், எல்லாம் சேர்ந்தே வரும். எப்படி இருக்கும் ஆனந்தம்.

இவ்வளவும் இந்தச் சின்னஞ்சிறு கண்ணின் உபகாரந்தான்.

முகத்தோடு முகமாய் நம் கூடவே சேர்ந்திருக்கிறது கண். புண்ணியம் எவ்வளவோ செய்திருக்கிறோம். சாமான்யப்பட்ட சரக்கா கண்?

''காணக் கண்அடி யேன் பெற்ற வாறே''

★★★★★★★

கடவுளே பகல்க் கனவு தான் கண்டு கொண்டிருக்கிறார். ஆனந்தமாய் வந்து கொண்டே இருக்கிறது கனவு. உலகம், மக்கள் என்று வந்து கொண்டே இருக்கிறது கனவு.

ஆனாலும் கனவில் சிருஷ்டியானது தொடர்ந்து வர வர கடவுளுக்கே தனிமை உணர்வு வருகிறது. எப்படி? நாம் படைக்கிறோம், வளர்க்கிறோம், பாதுகாக்கிறோம் என்று வருகிறது நினைப்பு. அது ஆணவந்தானே. அந்த ஆணவந்தானே நஞ்சு. கொடிய நஞ்சு.

ஆனாலும் நஞ்சை அடக்கி வைத்துக் கொண்டார். கண்டத்திலேயே வைத்து அடக்கிக் கொண்டார். யார்? காலனுக்கே காலனாகிய ஏகம்பநாதன் தான்.

பக்குவமாக ஆணவத்தைத் தட்டிக் கொடுத்து வசப்படுத்தினார். அதனால் அது ஒன்றும் இறைவனிடம் வாலாட்டவில்லை. உதவியாகவே இருந்தது. வெயிலில் களைத்துப் போனவருக்கு எலுமிச்சப் பழச்சாறு எப்படி அமுதாக இருக்கும். அப்படி அவருக்கு உத்சாகத்தைக் கொடுத்தது. மேலும் மேலும் பெருகியது கனவு, ஆனந்தக் கனவு.

''ஆலம்தான் உகந்(து) அமுதுசெய்தானை''

இந்த அற்புதத்தைக் உணர்ந்து அனுபவிக்கிறவர் யாராக இருந்தாலும் சரி அவர்களது நினைவோடு நினைவாய் சேர்ந்தே இருப்பான் இறைவன்.

''சிந்திப்பார் அவர் சிந்தையுளானை''

இனி, உமாதேவி தவம் செய்து வழிப்பட்ட புண்ணிய ஸ்தலம் காஞ்சி ஏகம்பம்.

அங்கு யார் வேண்டுமானாலும் போகலாம். பெருமானைக் கண்கொண்டு பார்க்கலாம். பார்க்கப் பார்க்க நினைவு எப்படி வரும்.

*"ஏல வார்குழ லாள்உமை நங்கை*
*ஆதரித்து வழிபடப் பெற்ற*
*கால காலன்" என்றே வரும் நினைப்பு.*

*தான தானன*
*தன்னன தான*
*தான தானன*
*தன்னை தன்ன*

*ஆலந் தான்உகந்(து)*
*அமுதுசெய் தானை,*
*ஆதி யைஅம*
*ரர்தொழு தேத்தும்*
*சீலந் தான்பெரி*
*தும்முடை யானை,*
*சிந்திப் பார் அவர்*
*சிந்தையு ளானை,*
*ஏல வார்குழ*
*லாள்உமை நங்கை*
*ஆத ரித்து*
*வழிபடப் பெற்ற*
*கால காலனைக்*
*கம்பன்எம் மானைக்*
*காணக் கண்அடி*
*யேன்பெற்ற வாறே* *(108)*

27. உணர்ச்சி இருந்தால் போதும். உணர்ச்சி உள்ளவன் ஒரு அறுகம் புல்லுக்குள்ளேயே கடவுளைக் காண்பான்.

உணர்ச்சி இல்லாதவன் காரியம் வேறு. எதிரில் வந்து இறைவன் நின்றாலும் குருட்டு முழிதான் முழிப்பான்.

---

ஆலம் - ஆலகால விஷம். உகந்து - விரும்பி, வெறுப்புக் காட்டாமல். சிந்திப்பார் - உணர்ந்து அனுபவித்து நோக்கும் பக்தர். ஏலவார்குழல் - ஏலக்காய் அரிசிபோல் மணக்கும் கூந்தல், ஏலவார்குழலாள் உமை. கம்பன் - திருவேகம்பன்.

உணர்ச்சி இருந்து கடவுள்க் காட்சி பெற்ற அடியார்கள் அடடா, நம்மோடல்லவா, நம் மனத்தோடல்லவா நிறைந்திருக் கிறான். இறைவன் என்பதை உணர்வார்கள். நாம் தான் அவன். அவன் தான் நாம் என்று தெரிந்துவிடும் அவர்களுக்கு.

விஷயம் விளங்கியபின் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கத் தோன்றுமா? குற்றாலம், பாவநாசம், மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி என்று பார்க்கச் சொல்லும். கோவில், மூர்த்தி என்று வழிபாட்டில் திளைக்கச் செய்யும்.

★★★★★★★

இனி, திருக்காளத்தி என்னும் புண்ணிய ஷ்தலம் திருத்தணிகையை ஒட்டி சித்தூர் மாவட்டத்தில் (ஆந்திர மாநிலத்தில்) இருக்கிறது. பெரிய மிகப்பெரிய கோயில்.

பக்தியே உருவெடுத்து அவதரித்த கண்ணப்ப நாயனார் பிறந்து நடமாடிய இடம் திருக்காளத்தி.

ஊரை ஒட்டி பொன்முகலி ஆறு என்று ஆழமான பெரிய நதி. அதன் கரையில் பெரிய குன்று. சிறியமலை என்றே சொல்லலாம் அதை.

காளத்தி நாதர் கோயிலே ஊர்போல இருக்கும். குட்டி நாடு போலவே மக்கள் நடமாட்டம் இருக்கும் அங்கு.

பக்தர் குழாம் அலைமோதும் அங்கு. கோயில், மூர்த்தி, அடியார் கூட்டம் இவற்றிலேயே குறிவைத்து நிற்பார்கள் மெய்த் தொண்டர்கள் - ஞானிகள். சுந்தரரும் அப்படியே.

*நெறியே நின்றடி யார் - நினைக்*
*கும் திருக் காளத்தி யுள்*
*அறிவே உன்னையல்லால் - அறிந்*
*தேத்த மாட்டே னே.*

காளத்திநாதர் கோயில் வாசலில் வந்து நின்ற உடனேயே இப்படிக் கேட்கிறார் சுந்தரர் இறைவனிடமே!

★★★★★★★

உடம்பு, உயிர், மனம் சகலமும் இறைவன் என்றான பிறகு வேறு என்ன இருக்கிறது நினைக்க.

வாழ்த்தி, வணங்கி, போற்றிப் பரவி புளகாங்கித மடைகிறார் சுந்தரர். ஆனாலும் மனதில் ஏதோ ஒரு கறை.

கோயில் முற்றத்தை நீர் தெளித்துப் பெருக்க வேண்டும். பக்தர் நடக்கும் படிக்கட்டில் எல்லாம் நீர் விட்டு அலம்ப வேண்டும். பெருமானையும் நீர்விட்டு நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும்.

மலர் பறித்து மாலை கட்ட வேண்டும். அதை அவனுக்குச் சார்த்த வேண்டும். இப்படி எல்லாம் தொண்டு செய்து அவன் அழகைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறது சுந்தரர் மனம்.

இதை அவனிடமே சொல்லி விண்ணப்பிக்கிறார் சுந்தரர்.

''குருவே உன் குற்றே வல்செய்வேன்'' என்றே விண்ணப் பிக்கிறார்.

*தான தன்னன தன் - தன*
*தான தன்னன தன்*

*மறிசேர் கையின னே - மத*
*மாவுரி போர்த்த னே!*
*குறியே என்னுடைய - குரு*
*வேயுன் குற்றேவல் செய் வேன்*
*நெறியே நின்னடி யார் - நினைக்*
*கும்திருக் காளத்தி யுள்*
*அறிவே உன்னை யல் லால் - அறிந்*
*தேத்த மாட்டே னே!* *(109)*

---

மறி சேர்கையினன் - மானைக் கையில் தூக்கி வைத்திருக்கிறான் இறைவன். தோலை உரிக்கத்தான். மானோ குட்டி (மறி) உரிக்க மனம் வரமாட்டேன் என்கிறது பெருமானுக்கு. மதமா உரி போர்த்தவனே - மதம் பிடித்த முரட்டு யானையைத் தோலை உரித்தாள் பெருமான். போர்வையைப் போர்த்துவது போல் யானைத் தோலைப் போர்த்திக் கொண்டான். மறி - ஆணவத்தின் தளிர். மதமா - ஆணவத்தின் கொழுப்பு. குறி - லட்சியம். நெறி - வாழும் நெறி.

அறிந்து ஏத்தமாட்டேன் - உன் பெருமை தெரியாதவன் நான். பாராட்டவும் தெரியாது.

அழகான இசைப்பாடல். நடனத்துக்கும் நாட்டியத்துக்கும் உகந்த அற்புதமான இசைவடிவம்.

# உண்மை தான் உணர்ச்சி அதுதான் கடவுள்

27. பொதுவாக மக்கள் எல்லோருமே அறிவுள்ளவர்கள் தான். கருவளர்ச்சியில் கோளாறு ஏற்பட்டு ஒன்றிரண்டு பேர் விபரம் தெரியாதவர்களாக இருக்கலாம்.

அவர்களும் லட்சத்தில் ஒருவர், பத்து லட்சத்தில் ஒருவர், கோடியில் ஒருவர் என்கிற கணக்கில்தான்.

அவர்களுக்கும் ஓரளவு விஷயம் தெரியும். வீடு, வாசல், மாடு, கன்று, நன்செய், புன்செய், நெல், வைக்கோல், தீ, நீர் என்று தெரியத்தான் செய்யும்.

மெத்தப் படித்தவர்கள் போன்று அது அப்படி, இது இப்படி என்று வியாக்யானம் பண்ணத் தெரியாது இவர்களுக்கு. ஒன்றை உதறி உதறி எடுத்து பத்தாக, நூறாக சொல்வத் தெரியாது இவர்களுக்கு.

★★★★★★★

பள்ளிக்கூடம், கல்லூரி என்று போய் வேண்டா தனவற்றைத் தலையில் அள்ளிக் கொட்டி கொண்டவர்கள் காரியம் வேறு. தேவை இல்லாதவற்றைப் படித்து அவற்றை மூளையில் செலுத்தியவர்கள் அவர்கள். அவர்கள் தான் இப்பொழுது எங்கும் பெருகி இருக்கிறார்கள். இவர்களுக்குப் பெயர் படித்தவர்கள் என்று.

இவர்கள் கையில்தான் இப்பொழுது அதிகாரம் தொழில், பொருளாதாரம், அரசியல் எல்லாம். உலகமே இவர்கள் கையில்தான்.

உழுது, பயிரிட்டு, தொழில் பல செய்து விற்று முதலாக்கி உலகை வாழ்விக்கிறவர்கள் கோடான கோடி. வேண்டாதனவற்றைப் படிக்கவில்லை இவர்கள். அந்தக் கலாசாலை இந்தக் கலாசாலை என்று ஏறி இறங்கவில்லை அவர்கள். ஆனால் உண்மையான அறிஞர்கள் இவர்கள் தான்.

படியாதவர்கள் என்று இவர்களைப் பொறுப்பற்றுப் பேசுகிறார்கள் பலர். இப்படிப் பேசுகிறவர்களுக்கும் உண்மைக்கும் தூரம் அதிகம்.

பருவ நிலை, பயிர் நிலை, மண் நிலை, உரவகை, விளைச்சல், பசு, கலப்பை, தவசம், பருத்தி, உணவு, வணிகம், தொழில், குடும்பம், பண்பாடு, உணர்ச்சி, அன்பு, பொறுமை, மனச்சாட்சி முதலிய சகலவிபரங்களும் சாதாரண மக்களிடந்தான்.

இவர்களுக்கு உண்மைதான் தெரியும். பொய் தெரியாது. எது தேவையோ அது தெரியும். எது தேவை இல்லையோ அது தெரியாது.

பண்பாடு தெரியும் இவர்களுக்கு. ஆனால் எந்தெந்த நாட்டில் எப்படி எப்படி உண்டானது பண்பாடு என்பது தெரியாது. அங்கெல்லாம் எப்படி எப்படி வளர்ந்தது பண்பாடு, எந்தெந்தக் காலத்தில் சோதனை ஏற்பட்டது பண்பாட்டுக்கு. எப்படி எப்படி அதிலிருந்து விடுபட்டது அது என்பன போன்ற விபரங்கள் தெரியாது இவர்களுக்கு.

மேலும் (பொருளாதாரக்) கடன் எவ்வளவு கொடியது என்று இவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால் கடன் வாங்கப் பயப்படுவார்கள். வாங்கினாலும் உடனுக்குடன் வட்டியும் முதலுமாகக் கட்டி விடுவார்கள் கடனை. ஆனால் எந்தெந்த நாடு எந்தெந்த நாட்டிடம் எவ்வளவு தொகை கடன் பட்டிருக்கிறது? வட்டி எவ்வளவு, வட்டியும் முதலும் எவ்வளவு என்கிற புள்ளிவிபரம் தெரியாது இவர்களுக்கு.

புள்ளிவிபரம் தெரிந்தவர்கள் பெரும்பாலும் கடன்காரர் களாகவே இருப்பார்கள். நேரடியாகவோ, மறைமுகமாகவோ செலுத்த வேண்டிய தொகை தலைக்கு மேலே இருக்கும் அவர்களுக்கு.

பருவமழை பெய்யத் தொடங்கிய உடனேயே இந்த மழை எத்தனை நாளைக்கு இருக்கும் என்பதைச் சொல்லிவிடுவார்கள். இந்தப் பருவத்தில் விட்டு விட்டு மழை பெய்யும் வாய்ப்பையும் சொல்லிவிடுவார்கள். வேளாண்மைக்கு எவ்வளவு ஈடுகட்டும் தண்ணீர் என்பதையும் சொல்லிவிடுவார்கள்.

*யார் சாதாரண மக்கள்தான்*

ஒரு பூவுக்குக்தான் நெல் வரும். மறு பூவில் நெல்லைத் தவிர்த்து வேறு பயிர் - பருத்தி, வாழை, கடலை போன்ற வற்றைப் பயிரிடத் தான் தண்ணீர் உதவும் என்று சொல்வார்கள்.

அவர்கள் சொல்வது நூற்றுக் நூறு சரியாக இருக்கும்.

எத்தனை இஞ்ச் மழை, எத்தனை சென்டிமீட்டர் மழை என்றெல்லாம் அவர்களுக்கு சவடாலடிக்க முடியாது. உலகில் எங்கெங்கு எவ்வளவு எவ்வளவு மழை என்று கணக்கெடுக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அப்படி ஒரு கணக்கை எடுத்து அதைக் கட்டி அழவும் மாட்டார்கள் அவர்கள்.

அப்படி என்றால்தானே தண்ணீரைத் தாயாகப் பார்க்க முடியும். தந்தையாகப் பார்க்க முடியும். ஏன் தெய்வமாகவே பார்க்க முடியும்.

★★★★★★★

சவடால் பேர்வழிகள் ஒன்றையும் அனுபவிக்க மாட்டார்கள். பிறரையும் அனுபவிக்க விடமாட்டார்கள்.

உறக்கம் கண்ணைக் கட்டுகிறது. உறங்கப்போகிறேன் என்றால் போதும், ''உடனே ஐந்து கண்டத்தில் உள்ளவர்களும் உறக்கம் பற்றி எழுதிய அத்தனை குப்பைகளையும் அலசு வார்கள். புடைப்பார்கள்.

இதற்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை இது, வேற்றுமை எது என்று வியாக்கியானம் பண்ணுவார்கள். வாதம், எதிர்வாதம், இலக்கணம், ஒப்புநோக்கு, ஆராய்ச்சி என்று போய்க் கொண்டே இருக்கும்.

கடவுளையே அப்படிக் கூறு போட்டுக் காட்டுவார்கள். இந்தப் புத்தகப் புழுக்கள். மூடர்கள் என்றால் யார்? இந்தப் பூச்சிகள் தான். அஞ்ஞானி என்கிற சொல் இவர்களை நோக்கியே எழுந்து வந்தது.

இறைவனுடைய நடன சபையையே செங்கல் செங்கலாய் உருவி ஆராய்கிறவர்கள் யார்? பண்டிதர், வித்வான், சாஷ்திரி, பிரசங்க பூஷணம், ஆராய்ச்சிக் கடல். என்னும் இவர்களே.

★★★★★★★

சுந்தர மூர்த்தி சுவாமிகள் கொஞ்சம் கோபக்காரர். படக்கென்று சொல்லிவிடுவார். மனசில் போட்டு உருட்டிக் கொண்டிருக்க மாட்டார் எதையும்.

அவரே வித்வத் சிரோன்மணிகளிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். எப்படி?

''நீங்கள் பலதுறை நூல்களையும் எழுத்தெண்ணிப் படித்தவர்கள். உட் பொருள், வெளிப் பொருள் இரண்டும் கண்டவர்கள். நான் அப்படி ஒன்றும் படிக்கவில்லை. படியாதவன்தான் நான். ஆனாலும் ஒரு சந்தேகம் அடியேனுக்கு,

''நீங்கள் எவ்வளவு விரிவாய் ஒவ்வொன்றையும் எப்படி எப்படி எடுத்து விளக்குகிறீர்கள். ஆனாலும் நீங்கள் விளக்குகிறதில் ஒன்றும் விளங்க மாட்டேன் என்கிறதே எனக்கு. அது ஏன்''.

''எனக்கே விளங்கவில்லை உங்கள் தெளிவுரை என்றால், பெருமானுக்கு எப்படி விளங்கும் அது. ''வந்த சாயின அறிவரோ'' விபரம் தெரிய வேண்டும். சொல்லுங்கள்.''

வந்து சொல்லுமின்
மூட னேனுக்கு
வல்ல வாறினைந்(து)
ஏத்து வீர்!-
வந்த சாயின
அறிவ ரோ,

தொடர்ந்து கேட்கிறார் சுந்தரர்

''பொருளே விளங்கவில்லை என்றால் உணர்ச்சி எப்படி வரும். அடுக்குச் சொல்லிலும் மிடுக்கு. நடையிலும் வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுத்துவிட்டால் போதுமா? விளங்க வேண்டாமா அது? விளங்குகிறதோ விளங்கவில்லையோ? ஜோடித்துப் புகழ்ந்தால் போதும். ஏதும் கையில் திணிக்காமல் விடமாட்டார் இறைவன். வெறுங்கையை வீசியபடி போக விடமாட்டார். இறைவன் என்கிற நினைப்பா உங்களுக்கு

*தமை - வாழ்த்தி னார்கட்கு*
*நல்ல ரோ*

மேலும் கேட்கிறார் சுந்தரர்

''உண்மை வேண்டாம், உணர்ச்சி வேண்டாம். கெட்டிக்காரத்தனத்தால் வார்த்தைகளைப் போட்டு உழப்பினால் போதும். காரியம் நடந்துவிடும் என்கிற நினைப்புத்தானே உங்களிடம்? அந்த அசட்டுத்தனம் எடுபடுமா பெருமானிடம்.

*புந்தியால் உரை*
*கொள்வ ரோ*

இன்னும் ஒரு சந்தேகம் என்று தொடர்கிறார் சுந்தரர்.

''அது போகட்டும் இடைஇடையே உண்மையைச் சொல்வது போல் போக்குக் காட்டி பொய்யை வைத்தே மூடி விடுகிறீர்களே.

இது பொய் இது மெய் என்று பிரித்தெடுக்க மாட்டாரா பெருமான்? பிரித்தெடுத்தபின் ''இது பொய்யோடு மிடைந்த சொல் - குப்பை, தள்ளு'' என்று உதறி விடமாட்டாரா?

*பொய்யில் மெய்யுரை*
*கொள்வ ரோ*

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. அருளே வடிவானவர் பெருமான். அவருக்குப் பொய்யாவது மெய்யாவது? எல்லாம் ஒன்றுதான் என்கிற நினைப்புத்தானே உங்களுக்கு!

''கேட்டால் கொடுத்துவிடுவார் 'அதுதான் அவர் காரியம்' (அன்றியே மிக அறவரோ) என்கிற முடிவா, உங்கள் முடிவு.

''திருநாவலூர் பெருமானை என்னை தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள். விளக்கமாய்ச் சொல்லுங்கள். மகா பெரிய வித்வத்பூஷணங்களே! சொல்லுங்கள்!! நான் மூடன் தான். ஒன்றும் தெரியாதவன் தான் நான். ஆனபடியினாலே கொஞ்சம் விளக்கமாகவே சொல்லுங்கள்!''

தான தன்னன
　　தான தன்னன
தான தானன
　　தான தன்

வந்து சொல்லுமின்
　　மூட னேனுக்கு,
வல்ல வாநினைந்(து)
　　ஏத்து வீர்:-
வந்த சாயினை
　　அறிவ ரோ தம்மை
வாழ்த்தி னார்கட்கு
　　நல்ல ரோ;
புந்தி யால்உரை
　　கொள்வ ரோ மற்றும்
பொய்யில் மெய்யுரைத்(து)
　　ஆள்வ ரோ;
அன்றி யேமிக
　　அறவ ரோநமக்(கு)
அடிக ளாகிய
　　அடிக ளே　　(110)

---

வந்து சொல்லுமின் - காது கேட்கும்படி ஒட்டி நின்று சொல்லுங்கள். வல்லவா நினைந்து ஏத்துவீர் - நமக்கு நிகர் நாமே. வல்லுநர் வேறு யார் இந்த வையகத்தில் நமக்கு என்கிற செருக்குடையவர்கள் நீங்கள். சரி அது கிடக்கட்டும்.

வந்து அசாயினை அறிவரோ - நீங்கள் தேடிவந்த காரியம் இன்னதென்று முன்கூட்டியே தெரியுமா பெருமானுக்கு. புந்தி - புத்தி. உணர்வோடு ஒட்டாத வெறும் புள்ளிவிபரம், ஆராய்ச்சி, வெற்றுரை.

குறிப்பு: இசையும், நடனமும் சேர்ந்தெடுத்த தமிழின் அவதாரம் பாடல். பாடலைப் பாடவேண்டும். பாடியே அனுபவிக்க வேண்டும். பாடப்பாட அறியாமை இழை இழையாகப் பிரியும். அப்படியே பூட்டுக்கழன்று விடும். ஓடியே விடும் மனசை விட்டு.

28. இது இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு. கம்ப்யூட்டர், சூப்பர் கம்ப்யூட்டர், ராக்கெட், ஸ்கேன், குளோனிங், சாட்லைட், செல் போன் இப்படி வைத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறான் மனிதன். வானத்துக்கும் பூமிக்குமாய் நிற்கிறான் மனிதன்.

வானுக்கும் பூமிக்கும் இடையே ஆகாயத்தில்தான் நடக்கிறான் மனிதன். அங்குதான் ஓடுகிறான். ஓடிக் கொண்டே இருக்கிறான்.

ஆனாலும் ஒரு பாட்டைச் சொன்னால்ப் போதும். அப்படியே நிற்கிறான். கேட்கிறான். உணர்ச்சி வசப்படுகிறான். உருகியே விடுகிறான் மனிதன்.

ஆனால் பாட்டு உண்மையான கவியாக இருக்க வேண்டும்.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் மனிதன் மனித னாகவே இருக்கிறான் என்றால், மனிதனை மனிதனாக வைத்திருக்கிறது பாட்டு. என்றால் அது அற்புதம் இல்லையா.

*******

இரண்டு பேர் ஒத்த உணர்ச்சியோடு உறவாடுகிறார்கள். கணவன் மனைவி போலவே நெருங்கிப் பழகுகிறார்கள். நாளாக நாளாக நட்பில் வயிரம் பிடிக்கிறதே தவிர உளுத்துப் போகிறதில்லை உறவு. அதாவது நட்பு.

அப்படிப்பட்ட நட்பு ஐம்பது வருஷம், அறுபது வருஷம் என்று தொடர்கிறது. ஆயுள் நாள் முழுவதுமே நிலைத்து நிற்கிறது என்றால் நட்பின் நயத்தை என்னென்று சொல்ல! தெய்வாம்சம் பொருந்தியது என்றுதானே சொல்ல வேண்டும் நட்பை.

*******

இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்தார் ஒரு கவிஞர். அவருக்கும் சேர நாட்டு அரசனுக்கும் நட்பு. ஆழமான நட்பு. வளமான நட்பு. நாளும் பொழுதும் புதுப்புதுப் பொலிவோடு, எழுந்து ஒளி வீசுகிறது நட்பு.

அதன் அற்புதம் கவிஞரை உருக்குகிறது. சொல்கிறார்

*நிலத்தினும் பெரிதே,*
*வானினும் உயர்ந்தன்று,*
*நீரினும் ஆழ்அள(வு)*
*இன்றே; சாரல்க*
*கருங்கோல் குறிஞ்சிப்*
*பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும்*
*நாடனொடு நட்பே''*

அமெரிக்கா போகிறவன் எத்தனை கோட்டைகளை, எத்தனை கொத்தளங்களை மனதில் வைத்துக் கொண்டு போவான்? அவ்வளவையும் இறக்கி வைத்து விட்டு அவனே பாடலைக் கேட்கிறான். இதயத்தைக் கொடுத்தே கேட்டு அனுபவிக்கிறாள் பாடலை.

ஆகாய விமானத்தில் ஏறி அமெரிக்கா போகிறவனிடம் இந்தப் பாடலைச் சொன்னாலும் அப்படியா என்று அவன் காது கொடுத்துக் கேட்கிறான் பாடலை.

*******

இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முந்தின பாட்டு, மாட்டு வண்டிக்காலத்தில் உள்ள பாட்டுத்தான். ஆனாலும் ஆகாய விமானத்துக்காரன் இதயத்தையே தாக்கி உணர்ச்சிமய மாக்கி விடுகிறது, அது எப்படி.

*******

இனி ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளவர் பட்டிணத்தார். ''எல்லாம் இறைவன் செயலே, நாமோ, நம் செயல் என்றோ எதுவும் இல்லை'' என்பதைக் கண்டவர். அந்த உணர்ச்சியிலேயே நிற்கிறவர் அவர்.

இந்த அனுபவத்தை,

---

நிலம் - பூமி. வான் - ஆகாயம். நீர் - கடல்

*ஊட்டுவிப் பானும்*
*உறங்குவிப் பானும்இங்(கு)*
*ஒன்றோ டொன்றை*
*மூட்டுவிப் பானும்,*
*முயக்குவிப் பானும்,*
*முயன்ற வினை*
*காட்டுவிட் பானும்*
*இருவினைப் பாசக்*
*கயிற்றின்வ ழி*
*ஆட்டுவிப் பானும்*
*ஒருவன்உண் டேதில்லை*
*அம்பலத் தே!*

என்று பாடலாய்க் கொட்டுகிறார்.

★★★★★★★

ஆயிரம் இரண்டாயிரம் பேர் கூடி இருக்கிற சபையில் பட்டிணத்தார் பாடல் வருகிறது. அப்படியே அத்தனை பேரும் ஒருவராகி விடுகிறார்கள். ஒத்த உணர்ச்சியோடு அனுபவிக்கிறார்கள் பாடலை.

அனுபவிக்கிறார்கள், உருகுகிறார்கள். ஆயிரம் வருஷம் கழித்தும் ஆயிரம் ஆயிரம் பேர்களை வசமாக்குகிறது பாட்டு. பட்டிணத்தார் அனுபவமும், ஆனந்தமும் அத்தனை பேருக்கும் ஏற்படுகிறது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலேதான்.

★★★★★★★

இனி ஒழுங்கான வழியில் உழைத்துப் பணத்தைச் சேர்க்க வேண்டும். அதைக் கொண்டு எளிமையாய் இனிமையாய் வாழ வேண்டும். பிறரையும் வாழ விட வேண்டும் அந்தப் பணத்தைக் கொண்டு. ஊதாரித்தனமாய் செலவு செய்யக் கூடாது பணத்தை. தானும் அனுபவித்து பிறரையும் அனுபவிக்கச் செய்ய வேண்டும். அவற்றையும் தாண்டி மிஞ்சுகிற பணத்தைச் சிந்தாமல் சிதறாமல் சேர்த்து வைக்க வேண்டும். ஏன்? நாட்டுக்கு, சமுதாயத்துக்குப் பயன்படும் நல்ல காரியங்களுக்கு உதவத்தான்.

இதுதான் வாழ்க்கை. இப்படி ஒருவன் வாழ்கிறான் என்றால் அவனுக்கு பகைவர் யார்? ஒன்றிரண்டு பேர் பொறாமைப்பட்டு உறுமினாலும் அவர்கள் காரியம் எடுபடாது.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் குறளாசிரியர் கண்ட உண்மை இது. அடிக்கடி இந்த உண்மை அவர் ஞாபகத்துக்கு வரும். ஒரே ஆனந்தந்தான் அவருக்கு. அந்த ஆனந்தமே.

*செய்க பொருளை;*
*செறுநர் செறுக்கறுக்கும்*
*எ:கதனில் கூரிய(து)*
*இல்''*

என்று பாடலாய் - குறளாய் உருவெடுக்கிறது.

இரண்டாயிரம் வருஷம் ஆகிய பின்னும் குறளாசிரிய ருடைய அனுபவமும் ஆனந்தமும் ஊசிப் போகவில்லையே. இன்றைக்கும் கமகம என்று மணக்கத்தானே செய்கிறது.

★★★★★★★

கவிக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது. மந்திரசக்தியை விடப் பெரிய சக்தி அது. தெய்வசக்தியே இருக்கிறது. கவியில் அப்படி இருப்பது தான் கவி. அதனால் தான் காலம் கடந்து கடவுள் போலவே நிற்கிறது கவி.

★★★★★★★

திருவாரூர் வீதி விடங்கப்பெருமானிடம் ஒரே ஈடுபாடு சுந்தரருக்கு. கோயில்தான் அவருக்கு வீடு. இறைவனுடைய அலங்காரம். அபிஷேகம் எல்லாம் அப்படி அப்படியே அவர் கண்முன் நிற்கும். பார்த்துப் பார்த்து உருகுவார் சுந்தரர்.

★★★★★★★

எப்பொழுதும் பெருமானின் அழகையே அனுபவிக்கிறவர் சுந்தரர். அதிலேயே ஒரு பகல்க் கனவு. நாடகமாய் வருகிறது கனவு. எப்படி?

''தாயும் குழந்தையும் கோயிலுக்கு வருகிறார்கள். அலங்காரம் பண்ணி அபிஷேகம் நடக்கிறது மூர்த்திக்கு. குழந்தையின் மனதை உருக்குகிறது பெருமானின் அழகு.

தரிசனம் முடிந்து தாயோடு வீட்டுக்கு வருகிறாள் பெண். கோயில், மூர்த்தி, அலங்காரம், அபிஷேகம் எல்லாம் கூடவே வருகின்றன குழந்தையுடன்.

தாயோடு சேர்ந்துதான் படுத்திருக்கிறாள் குழந்தை. தாய் தூங்கி விட்டாள். குறட்டை விட்டே தூங்குகிறாள். ஆனால் மகள் தூங்கவில்லை.

கண்ணை மூடிக் கொண்டாலும் பெருமான்தான். விழித்துப் பார்த்தாலும் பெருமான்தான். அப்படியே அள்ளி அள்ளிப் பருகத் தோன்றுகிறது பெருமானின் அழகு. ஆராதனை வெளிச்சத்தில் பளபள என்று பிரகாசித்ததே பெருமானின் முகம்? முகமா அது? கருணையும், நீதியும் சேர்ந்தெடுத்த அழகல்லவா அந்த முகம்.

"அறக்கண் எனத்தகும் அடிகள்"

என்ன பரிவு, என்ன பாசம், என்ன கனிவு அவர் கண்களில்.

எப்படி மறக்கும் மனம். தூக்கந்தான் எப்படி வரும்?

''மறக்க இல்லாமையும், உறக்கம் இல்லாமையும்''.

பெருமானைப் பார்த்துப் பார்த்து இப்படி அனுபவிக்கிறாள் பெண். தூக்கம் இல்லைதான். ஆனாலும் தூங்காத களைப்போ, சோர்வோ இல்லை பெண்ணிடம்.

அதிகாலை ஐந்து ஐந்தரை மணிக்கு மேல்தான் கண்ணைத் தழுவியது உறக்கம். உறக்கத்திலும் விடுகிறாரா பெருமான். கண்முன் நின்று சிரிக்கிறார். ஆசையோடு பார்க்கிறார். அரைமணி நேரம் கூட இருக்காது.

இரண்டு மூன்று தடவை தேடி வந்து விட்டார் கனவில் பெருமான்.

படுக்கையை விட்டு எழுந்தாள் பெண். தோட்டத்துக்கு வந்தாள். கிளியும் மைனாவும் சிறகடித்துப் பறக்கின்றன. அவைகளிடம் சொல்கிறாள் பெண்.

*தானனதன் தானனதன்*
*தானனதன் தன்னன தன்*

*பறக்கும்எம் கிள்ளை காள்!*
*பாடும்எம் பூவை காள்!*
*அறக்கண்எ னத்த கும்*
*அடிகள்ஆ ரூர ரை,*
*மறக்ககில் லாமை யும்,*
*வளைகள்நில் லாமை யும்*
*உறக்கம்இல் லாமையும்*
*உணர்த்தவல் லீர்க ளோ-* *(111)*

29. ரசிகமணி, டி.கே. சிதம்பரநாத முதலியார் ஒரு பெரிய ஞானி, உத்தம ஞானி. கவி, கலை, பண்பாடு, அறவுணர்வு, சமயப்பண்பு, கருணை, நீதி, உண்மை, உணர்ச்சி, ஆனந்தம் இவைகளின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார்கள். ரசிகமணி டி.கே.சி. எல்லோரும் கவிகளை அனுபவித்து ஆனந்தம் பெற வேண்டும் என்பதற்காகவே வாழ்ந்தவர் டி.கே.சி.

நீண்ட நெடுங்காலமாய்ப் பற்றி நின்று அரித்துத் தின்று கொண்டிருக்கிற அறியாமை என்கிற நோயிலிருந்து சமுதாயத்தை விடுவித்தவர் அவர். அன்பாய், பண்பாய் சமுதாயம் வாழ அருளுரை வழங்கி வந்தார் ரசிகமணி.

பூர்வமான கவிகளைச் சொல்லியே சமுதாயத்துக்கு வழிகாட்டினார். டி.கே.சி. அந்த அனுபவத்திலேயே சமுதாயத்தின் நோய் நீங்கியது. ஆரோக்கியம் பெருகியது.

கவியைக் கேட்க வருகிறவர்கள், அனுபவிக்கிறவர்கள் எல்லோரையும் வரவேற்று உபசரித்தார் டி.கே.சி. சொந்த வீடு போல் டி.கே.சியுடன் தங்கிப் பாடல்களை அனுபவித்தவர்கள் பலர்.

---

கிள்ளை - கிளி, பூவை - நாகணவாய்ப்புள், மைனா. அறக்கண் - ஆதரவு காட்டும் அருள் நோக்கு, அருள்தாள் கண்ணாக இருந்து பார்க்கிறது. அப்படி இருக்கிறது பார்வை. மறக்க கில்லாமை - மறக்க முடியவில்லை. நெஞ்சில் அப்படியே நிற்கிறது. கண்ணிலும் அப்படியே. வளைகள் நில்லாமை - தவிப்பிலும் ஏக்கத்திலும் வருகிறது சோர்வு. உடல் மெலிகிறது. தானாகக் கழன்று ஓடுகின்றது வளையல்.

காலையில் காபி, பலகாரம், மத்தியானம் அறுசுவை உணவு, மாலையில் காபி, டிபன், இரவில் பாலும் பழமும் சேர்ந்த உணவு இப்படியாக உண்டுகளித்து டி.கே.சியோடு கலை உறவு கொண்டவர்கள் பலர். காபி, பலகாரம், சாதம், குழம்பு, காய், கனி எல்லாமே அன்பின் அவதாரம்தான்.

எல்லோரும் கவி, கலை, பண்பாடு, சமயம் முதலிய துறைகளை அனுபவிக்கவே செய்தனர். நன்றாகவே உணர்ந்து அனுபவித்து ஆனந்தத்தில் திளைத்தனர்.

அப்படி ஆனந்தபரவசத்தில் திளைத்து கலைத்தெய்வத்தை வழிப்பட்டவர்களையும் ஒன்று விடவில்லை. அப்படி ஒரு பிடியில் சிக்கியவர்கள் சிலர்தான். அவர்களை அப்படிப் பிடித்த பிடி என்ன?

"டி.கே.சி. வீட்டுத் தோசைதான்"

"டி.கே.சி. வீட்டுத் தோசைக்கு மட்டும் இப்படி ஒரு ருசி எங்கிருந்து வந்தது, எப்படி வந்தது? அது அரிசியின் மூலம் வந்ததா? உளுந்தின் மூலம் வந்ததா? இல்லை மாவை அரைக்கிற அறைவையிலிருந்து வந்ததா? இல்லை விசேஷமான தோசைக்கல் ஏதாவது உண்டா" இப்படி எல்லாம் ஓடியது யோசனை.

யோசனை ஓடஓட அவர்களும் தொடர்ந்து ஓடினார்கள். தமிழ், கவி, பண்பாடு, கம்பர், வள்ளுவர், பட்டிணத்தார் எல்லோரையும் விட்டுவிட்டே ஓடினார்கள். தோசையின் பின்னாலேயே ஓடினார்கள்.

*******

அனுபவமும், ஆனந்தமும் உள்ளத்தில் வந்து நிறைந்தாலும் என்னவோ ஒரு குறை இருக்கவே செய்கிறது மனதில். அது ஏதாவது ஒன்றைப் பிடித்துக் கொள்கிறது. இறுகப் பற்றித் தொங்கவே செய்கிறது. ஊஞ்சலே ஆடுகிறது அதில்.

குரங்கு மனம் என்பதே அதனால் தானே.

தோசை மட்டுமா? தேங்காய்ச் சட்டினி,எள்ளுப்பொடி, நல்லெண்ணெய், தயிர் இப்படிப் படை பட்டாளத்தோடு அல்லவா எழுந்து வருகிறது அது. தோசை பற்றிய யோசனை.

*******

இனி, நண்பர் ஒருவர். நீதித்துறையில் மேலான பதவி வகித்தவர். சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவே பணி ஆற்றியவர். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் அறிஞர். கவிஞர், கட்டுரையாளர், கதை ஆசிரியர், சிறந்த பேச்சாளர். எல்லாவற்றிற்கும் மேல் கவியில் திளைத்து அனுபவிக்கிறவர். அதற்கும் மேலே அவர் ஒரு மனிதர். பண்பட்ட சிறந்த மனிதர்.

★★★★★★★

அவருடைய உள்ளத்தையும் விட்டு வைக்கவில்லை. அந்த ஏதோ ஒன்று. ஆழத்தில் போய் சப்பணம் போட்டு உட்கார்ந்து கொண்டது அது.

★★★★★★★

குகைக்குள் இருந்து சிங்கம் புறப்பட்டு வருவது போல் வீரமாக வெளியே வந்தது ஒருநாள். எப்படி? ''நான்கு, ஐந்து வயதுக்குழந்தையை வைத்து கவிஞர்கள், ஏன், அப்பர் சுந்தரர் போன்ற மகான்களே காதல்த் துறையில் பாடுகிறார்களே. அந்தச் சிறு குழந்தைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? சிறுபிள்ளைகளிடம் அப்படி எல்லாம் உண்டா காதல்?'' இப்படி வீராவேசமாய் எழுந்து வந்தது.

''காதலைத் தவிர வேறு என்ன இருக்கிறது குழந்தையிடம் என்று பதில் சொல்ல நேர்ந்தது. திகைத்தார் நண்பர். ஆனாலும் தோரணனையை விடாமல்'' அதெப்படி இருக்கும்'' என்றார்.

''குழந்தையிடந்தான் காதல். காரணம் அதனிடம் வேறு ஒன்றும் இல்லை. பொறாமை இல்லை. கொடுமை இல்லை, வேற்றுமை இல்லை, ஆணவம் இல்லை, பிறரை மட்டந்தட்டுவது எப்படி என்று யோசிக்கிறதில்லை குழந்தை. அன்பு ஒன்றே இருக்கிறது குழந்தையிடம். அதனால் யாரிடமும் ஒட்டிக் கொள்கிறது குழந்தை.

அன்பு காட்டுகிறவர் யாராக இருந்தாலும் சரி ஜாதி, மதம், இனம் என்று பார்க்காது குழந்தை. ஏழை, பணக்காரன் என்றும் பார்க்காது குழந்தை. படித்தவன், படியாதவன் என்றும் பார்க்காது குழந்தை.

அன்பு காட்டினால் போதும் ஒட்டிக் கொள்ளும். பிறகு விடவே விடாது. சுற்றிச் சுற்றி வரும். குழந்தையின் மனசில் உண்டான அன்புக்குத் தடை போட்டால் குழந்தைக்கு சாப்பாடு இறங்காது. தூக்கம் வராது. அழும். ஏன் நோய் வாய்ப்பட்டுக் கூட உருகிக் கரையும் குழந்தை.

அதனால்தான் பக்தியை, அதன் வெறியை, காதல் வெறியைக் கூட குழந்தையை வைத்தே சொல்கிறார்கள். அதுவும் பெண் குழந்தையை வைத்தே சொல்கிறார்கள். அந்தப் பார்வைதானே கவியாக வருகிறது'' இப்படி ஒரு நீண்ட விளக்கம் கொடுக்க நேர்ந்தது.

*******

மெள்ள மெள்ள நீதிபதியின் கலக்கம் தெளிந்தது. பிறகு அது சம்பந்தமான பாடல்களை மிக்க பக்தியோடு அனுபவிக்க முடிந்தது. நீதிபதியால்.

அப்படி அவர்கள் அன்று அனுபவித்த பாடல்கள் இரண்டு. ஒன்று பறக்கும் எனத் தொடங்கும் பாடல். மற்றொரு பாடல் இதோ.

*******

இனி, திருவாரூரை ஒட்டி ஒரு ஊர். அந்த ஊரில் ஒரு தாயும் மகளும்.

திருவாரூர்க் கோவிலில் திருவிழா, தேரோட்டம். சாயங்கால நேரம். குழந்தையைக் கூட்டிக் கொண்டு வருகிறாள் தாய். வரும் வழியில் எல்லாம் நீர்வளம் மிக்க நன்செய். வயல்களில் முற்றி விளைந்து நிற்கின்றன கரும்பு.

நாரைகள் கூட்டம் கூட்டமாய் சிறகடித்து ஓடுகின்றன. அவை போகிற வேகத்தில் சில நாரைகளின் காலடிபட்டு கரும்பு முறிகின்றன. வழியும் சாறோ வயலில் பாய்கிறது, அத்தனை வளம் திருவாரூரைச் சுற்றி.

*குருகுபா யக்கொ ழும்*
*கரும்புகள் நெரிந்த சா(று)*
*அருகுபா யும்வ யல்*

குழந்தையின் மனசை விட்டு அகலுமா இந்தக் காட்சி. அப்படியே நிற்கிறது குழந்தையின் மனதில் கரும்பும், சாறும்.

* * * * * * *

இனி, திருவாரூருக்கே வந்து சேர்ந்தார்கள் தாயும் மகளும். கோயிலுக்குப் போகும் வழியிலேயே சுவாமி தேரேறி வீதி உலா வரும் காட்சி. மேளதாள முழக்கத்தோடு பெருமான் அமர்ந்து அருள் பாலிக்கிறார். விளக்கு வெளிச்சத்தில் பெருமானின் அழகு கோடி சூரியப் பிரகாசமாய் ஜொலிக்கிறது. பெருமான் பார்க்கிற பார்வை / அடடா / அதில் மனதே பறி போய்விட்டது பெண்ணுக்கு.

காதல் வெறியே வந்து விட்டது. உறக்கம் இல்லை. காலையில் எழுந்து கிளியிடமும் பூவையிடமும் கெஞ்சுகிறாள் பெண். குழந்தைப் பெண்.

*குருகுபா யக்கொ ழுங்*
*கரும்புகள் நெரிந்த சா(று)*
*அருகு பாயும்வ யல்*
*அந்தண்ஆ ரூர ரைப்*
*பருகுமா றும்ப ணிந்(து)*
*ஏத்துமா றும்நி னைந்(து)*
*உருகுமா றும்இ வை*
*உணர்த்தவல் லீர்க ளோ.* *(112)*

*(பறக்கும்எம்)*

---

குருகு - நாரை. கொழும் கரும்பு - கொழுகொழுவென்று முற்றி விளைந்த கரும்பு. பருகும் ஆறும் - அப்படியே அள்ளி எடுத்து விழுங்கலாம் போல இருக்கிறது அழகு. பணிந்து ஏத்துமாறும் - ஆடிப்பாடவே தூண்டுகிறது அந்த அழகு. அப்படியே உருகி உருகிக் கரையவும் வைக்கிறது. பெருமானின் பார்வையும் பரிவும்.

# பின் குறிப்பு

பாடல் என்றால் அதைப்பாட வேண்டும். பாடிப் பாடியே பார்க்க வேண்டும் பாடலை, பாடினால் தான் கவிஞரின் உணர்ச்சி, அனுபவம், கவி உருவம், சிருஷ்டி எல்லாம் தெரியும்.

வசனத்தை வாசிக்கிறது போல் பாடலை வாசித்தால் விஷயம் மட்டும் தெரியும். கவிஞர் கண்ட ஒரு பொருள் அல்லது சம்பவம் இது ஒன்றே தெரியும். கலைப்பண்போ சிருஷ்டியோ தெரிய வாய்ப்பில்லை.

பாடலுக்கு விஷயம் இன்னதுதான் என்று இல்லை. எதுவும் இருக்கலாம். கத்திரிக்காயும் பாடலுக்கு விஷயமாக வரலாம். செக்கச் சிவந்து கனன்று ஒளிரும். அந்தி வானமும் விஷயமாக வரலாம். காதல், வெட்கம், சோகம், சிரிப்பு, பக்தி, வீரம், பொறுமை, எரிச்சல், நாணம், அச்சம், வியப்பு என்று எல்லாமே கவிக்கு விஷயமாக அமையும்.

ஆனால் விஷயம் ஒன்றுமட்டும் கவியாகிவிட முடியாது.

விஷயத்தைச் சொல்வதுதான் கவி என்றால் அதை வசனத்திலேயே சொல்லி விடலாமே. வசனத்தில் சொல்ல முடியாததுக்குத் தானே கவி?

கவிஞரின் அனுபவம் ஆனந்தம், இந்த இரண்டுக்கும் கலை உருவம் கொடுக்கிற சிருஷ்டிதான் கவி.

இயல்பான இசை, தாளம், நடனம் இவை எல்லாம் அனுபவத்துக்கு ஒளி கொடுக்க வேண்டும். ஆனந்தத்துக்கும் ஒளி கொடுக்க வேண்டும்.

யாப்பியலில் அசை, சீர், அடி என்னும் அங்கங்கள் செய்யுளுறுப்புக்கள் இசையையும் நடனத்தையுமே உணர்த்துகின்றன.

சீர் என்றால் தாளம் என்று பொருள். அடி என்றால் நடனத்துக்குரிய நடை, பாதம் என்று பொருள். உணர்ச்சியை பிடித்து (அசைத்து)க் காட்டுகிற நடனக்குறிப்பே அசை என்பது.

கவி என்று சொல்கிறபொழுது விஷயம் மட்டுமல்ல உணர்ச்சி, அனுபவம், இசை, தாளம், சிருஷ்டி இவைகளின்

மொத்த உருவம் என்று பார்க்க வேண்டும். அவைகள் ஒன்றுபட்டுச் சேர்ந்தெடுத்த அவதாரமே கவி.

அப்படி என்றால் கவியைப் பாடத்தான் வேண்டும்.

★★★★★★★

பாடத்தான் வேண்டும் பாடலை என்று முதல் முதல் சொன்ன ரசிகமணி டி.கே.சி. தான். விடாமல் தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் சொன்னார்கள். ஒவ்வொரு பாடலையும் அவர்கள் பாடிப்பாடியே அனுபவித்தார்கள். அந்த அனுபவமும் ஆனந்தமும் உடனிருந்து கேட்டவர்களுக்குக் கிடைத்தது. டி.கே.சி. பெற்ற ஆனந்தத்தையே அவர்களிடம் பாடலைக் கேட்டவர்களும் பெற்றார்கள்.

உண்மையான கவியை எடுத்து அதற்கு மெய்யான விளக்கம் கொடுத்து வளைத்து வளைத்துப் பாடலை டி.கே.சி. பாடி அனுபவித்ததைப் பார்த்த பின்புதான் தெரிந்தது கவி என்பது தனி என்று. வசனத்துக்கும் கவிக்கும் சம்பந்தம் இல்லை என்று.

★★★★★★★

தமிழ்க் கவி என்றால் - உண்மையான தமிழ்க் கவி என்றால் அது பாடு பாடு என்று தூண்டவே செய்யும். அதனால் தான் பாட்டு என்று பெயர். பாடல் என்றும் பெயர்.

இயல்பான இசை, தாளம், நடனம், எதுகை, மோனை என்று உருவெடுத்தது தமிழ்ப்பாட்டு.

ஆனால் எப்படிப் பாடுவது பாட்டை? இதற்கும் டி.கே.சி. தெளிவான விளக்கம் தருகிறார்கள்.

''சங்கீதத்துக்குள் பாடலை அமிழ்த்தி விடக்கூடாது. தாளத்தை மேலே மேலே போட்டு பொருளைப் பிய்த்து எறிந்து விடக்கூடாது. அவசரப்படாமல் இயல்பான இசையில், அவரவர்க்கு வருகிற இசையில் நிறுத்திப் பாட வேண்டும்.

இரண்டு இரண்டு சீர்களாக எடுத்து நிறுத்திப் பாட வேண்டும்'' என்று அழுத்தம் கொடுத்தே சொல்வார்கள் ரசிகமணி.

★★★★★★★★

''வானம் சேர்மதி'' என்று நிறுத்தி, பிறகு ''சூடிய மைந்தனை'' என்று முடிக்க வேண்டும். 'வானஞ்சேர்மதி சூடிய மைந்தனை' என்று ஒரே மூச்சில் பாடக் கூடாது. இரண்டிரண்டு சீர்களாக வைத்துப் பிரித்துப் பாடும்பொழுது கடைசி அசை மதி என்பதும் ('னை' என்பதும்) தனித்து விழ வேண்டும்.

*வானம் சேர் மதி*
*சூ டிய மைந்த னை*

என்று பாடப் பாட இசை, தாளம், நடனம் எல்லாம் பாட்டில் இருப்பது தெரியும். அவை எழுந்து வருவதும் தெரியும்.

முன் சீரின் கடைசி அசையும் பின் சீரின் முதலசையும் ஒட்டுகிறபொழுது தான் தாளம் (தளை) பிறக்கும்.

கண், கண் என்று தனித்து விழுந்தால் தான் நட்டுவனார் உள்ளே இருந்து தாளம் போடுகிறாரோ என்று நினைக்கத் தோன்றும்.

இரண்டிரண்டு சீர் கொண்ட தொகுதிக்கு தூக்கு என்று பெயர். ஒவ்வொரு தூக்கிலும் உள்ள கடைசி அசையைத் தூக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்துகிறபொழுது எழும் ஓசை பாட்டுக்குள், இசைக்குள், பாட்டின் சிருஷ்டி தத்துவத்துக்குள்ளேயே நம் கையைப் பற்றி அழைத்துப் போகிறது தெரியும்.

எந்தப் பாட்டை எப்படிப் பாட வேண்டுமோ அந்தப் பாட்டுக்குரிய இசை அந்தப் பாட்டுக்குள்ளே இருக்கிறது. பாட வேண்டும் என்று நினைத்தால் போதும். பாட வந்துவிடும். எல்லோருக்கும் வந்துவிடும். இயல்பாகவே வந்துவிடும். ஆனால் பாட வேண்டும் என்கிற நினைப்பு வர வேண்டும்.

*வானஞ்சேர்மதி சூடிய மைந்தனை*
*நீ நெஞ்சே கெடுவாய் நினைகிற்கிலை*
*ஆனஞ்சாடியை அன்பிலாலந்துறை*
*கோனெஞ் செல்வனைக் கூறிட கிற்றியே*

இப்படிக் குழைத்துப் பிசைந்துப் பாட்டை வைத்தால் யாருக்கத்தான் பாட வரும்.

*வானம் சேர்மதி*
*சூடிய மைந்தனை*
*நீ நெஞ் சே/கெடு*
*வாய்நினை கிற்கிலை;*
*ஆல்நஞ் சாடியை,*
*அன்பில்ஆ லந்து றைக்*
*கோன்எம் செல்வனைக்*
*கூறிட கிற்றி யே*

என்று துண்டு துண்டாய் (தூக்காய்) எடுத்து வைத்தாலே போதும். பாடித்தான் பார்ப்போமே என்னும் எண்ணம எல்லோருக்கும் வரும்.

வந்த நினைப்பை மாற்ற முடியமா? பாடிப் பாடிப் பரவசப்பட வேண்டியதுதான்.

★★★★★★★

கவி என்றால் தமிழ்க் கவிதான் கவி. அது போலத்தான் இசை என்றால் அது தமிழிசை தான். அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவர் பாடலிலும் பூர்வமான தமிழிசை பொங்கித் ததும்புகிறது.

தேவாரப் பண் என்றே பெயர்.

தேவாரப் பண்ணிசை தான் அருணாசலக் கவிராயர் முத்துத்தாண்டவர் போன்றவர்களின் சாகித்யங்களில் நிரம்பி நிற்கிறது. தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஷ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் முதலியவர்களின் கீர்த்தனைகளில் உள்ள ராகங்களும் தேவாரப் பண்ணிசையே தான்.

இன்றளவும் உள்ள பதசாகித்யங்கள், கீர்த்தனைகள், இசைப் பாடல்கள், கவிகள் எல்லாவற்றிலும் அதே தேவாரப் பண்ணிசைதான். பூர்வமான தமிழிசையே தான்.

பாடலைப் பாடி அனுபவிக்கிற எல்லோருக்குமே இந்த உண்மை தெளிவாய்த் துலங்கும்.

பிரித்துக் காட்டி இருக்கிறது ஒவ்வொரு பாடலையும். அங்கங்கே சந்தமும் கொடுத்திருக்கிறது. அந்த முறையில் பாடினால்ப் போதும் கவியோடு கவியாய் ஒன்றிவிடுவோம் நாம்.

# பாட்டு முதற்குறிப்பு


| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| அ | | |
| அடியார் சிலம்பொலிகள் | 119 | திருநாவுக்கரசர் |
| அரிச்சுற்றவினை | 197 | திருநாவுக்கரசர் |
| அல்லல் என்செயும் | 93 | திருநாவுக்கரசர் |
| அற்றபோழ்தும் | 277 | சுந்தரர் |
| ஆ | | |
| ஆட்டுவித்தால் | 156 | திருநாவுக்கரசர் |
| ஆயிரம் தாமரை | 50 | திருநாவுக்கரசர் |
| ஆலந்தானுகந்து | 330 | சுந்தரர் |
| ஆறாடு சடை | 86 | திருநாவுக்கரசர் |
| இ | | |
| இல்லக விளக்கது | 174 | திருநாவுக்கரசர் |
| இலையால் அன்பால் | 276 | சுந்தரர் |
| இவர் தேவர் | 89 | திருநாவுக்கரசர் |
| இன்னதன்மை | 281 | சுந்தரர் |
| உ | | |
| உள்குவார் | 149 | திருநாவுக்கரசர் |
| உள்ளம் உள்கி | 184 | திருநாவுக்கரசர் |
| உற்றார் யாருளரோ | 161 | திருநாவுக்கரசர் |
| ஊ | | |
| ஊனத்திருள் | 248 | சம்பந்தர் |
| ஊனவன் காண் | 161 | திருநாவுக்கரசர் |
| எ | | |
| எங்கேனும் இருந்து | 282 | சுந்தரர் |
| எண்ணி இருந்தும் | 280 | சுந்தரர் |
| எண்ணுகேன் | 177 | திருநாவுக்கரசர் |

| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| என் கடன் | 104 | திருநாவுக்கரசர் |
| என்பலால் | 62 | திருநாவுக்கரசர் |
| என்னை ஏதும் | 102 | திருநாவுக்கரசர் |
| ஏ | | |
| ஏதும் ஒன்று | 106 | திருநாவுக்கரசர் |
| ஏறனார் ஏறு | 63 | திருநாவுக்கரசர் |
| ஒ | | |
| ஒண்ணுளே | 176 | திருநாவுக்கரசர் |
| ஒன்றி இருந்து | 137 | திருநாவுக்கரசர் |
| க | | |
| கங்கை ஆடில் என் | 120 | திருநாவுக்கரசர் |
| கண் காட்டும் | 233 | சம்பந்தர் |
| கரவாடும் வன் | 78 | திருநாவுக்கரசர் |
| கருடத் தனிப்பாகன் | 59 | திருநாவுக்கரசர் |
| கருவுற்ற நாள் | 69 | திருநாவுக்கரசர் |
| கல்லா நெஞ்சின் | 240 | சம்பந்தர் |
| கற்றுக் கொள்வன | 94 | திருநாவுக்கரசர் |
| கனியினும் கட்டி | 73 | திருநாவுக்கரசர் |
| கா | | |
| காதலாகிக் | 239 | சம்பந்தர் |
| கு | | |
| குருகுபாயக் | 348 | சுந்தரர் |
| குற்றம் ஒன்றடி | 269 | சுந்தரர் |
| குனித்த புருவமும் | 221 | திருநாவுக்கரசர் |
| கூ | | |
| கூட வேடத்தர் | 144 | திருநாவுக்கரசர் |
| கூடும் பேட்டன்னங்காள் | 303 | சுந்தரர் |
| கூவல் ஆமை | 194 | திருநாவுக்கரசர் |

| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| **கோ** | | |
| கோடி தீர்த்தம் | 195 | திருநாவுக்கரசர் |
| **ச** | | |
| சங்கொத்தமேனி | 130 | திருநாவுக்கரசர் |
| **சா** | | |
| சாட எடுத்தது | 219 | திருநாவுக்கரசர் |
| **சி** | | |
| சிந்தித்தென்றும் | 272 | சுந்தரர் |
| சிந்திப்பரியன | 66 | திருநாவுக்கரசர் |
| சிறையாறும் மடக் | 245 | சம்பந்தர் |
| **சொ** | | |
| சொல்மாலை | 201 | திருநாவுக்கரசர் |
| சொற்றுணைவேதியன் | 169 | திருநாவுக்கரசர் |
| **த** | | |
| தஞ்சே கண்டேன் | 114 | திருநாவுக்கரசர் |
| தம்மையே புகழ்ந்து | 312 | சுந்தரர் |
| தலையே நீ வணங்காய் | 163 | திருநாவுக்கரசர் |
| தீர்த்தனைச் சிவ | 152 | திருநாவுக்கரசர் |
| **து** | | |
| துஞ்சும் போதும் | 47 | திருநாவுக்கரசர் |
| துன்னுவார் சடை | 268 | சுந்தரர். |
| **தெ** | | |
| தெரித்த கணையால் | 209 | திருநாவுக்கரசர் |
| தெள்ளத் தேறி | 52 | திருநாவுக்கரசர் |
| **தே** | | |
| தேடிக்கண்டு கொண்டேன் | 158 | திருநாவுக்கரசர் |

| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| தொ | | |
| தொழுது தூமலர் | 76 | திருநாவுக்கரசர் |
| ந | | |
| நடலை வாழ்வு | 180 | திருநாவுக்கரசர் |
| நன்று நோக்கில் என் | 198 | திருநாவுக்கரசர் |
| நி | | |
| நில்லாத நீர் சடை | 128 | திருநாவுக்கரசர் |
| நின்னாவார் | 124 | திருநாவுக்கரசர் |
| நூ | | |
| நூல் அடைந்த | 258 | சம்பந்தர் |
| நெ | | |
| நெக்கு நெக்கு | 82 | திருநாவுக்கரசர் |
| நெற்றிக் கண் | 307 | சுந்தரர் |
| ப | | |
| பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் | 318 | சுந்தரர் |
| பண்ணுள்ளீராய்ப் பாட்டும் | 286 | சுந்தரர் |
| பத்தனாய்ப் பாட மாட்டேன் | 212 | திருநாவுக்கரசர் |
| பழிஇலான் புகழுடையான் | 68 | திருநாவுக்கரசர் |
| பற்றற்றார் சேர் | 65 | திருநாவுக்கரசர் |
| பறக்கும் எம் கிள்ளைகாள் | 344 | சுந்தரர் |
| பற்றி நின்ற பாவங்கள் | 92 | திருநாவுக்கரசர் |
| பனக்கனிப்பழம் | 313 | சுந்தரர் |
| பனைக்கை மும்மத | 108 | திருநாவுக்கரசர் |
| பா | | |
| பாடு மா பாடி | 291 | சுந்தரர் |
| பாரவன் காண் | 122 | திருநாவுக்கரசர் |

| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| பி | | |
| பித்தா பிறைசூடி | 316 | சுந்தரர் |
| பித்தனைப் பெரும் | 74 | திருநாவுக்கரசர் |
| பூ | | |
| பூக்கைக் கொண்டரன் | 133 | திருநாவுக்கரசர் |
| பெ | | |
| பெருகலாம் தவம் | 110 | திருநாவுக்கரசர் |
| பே | | |
| பேராயிரம் | 126 | திருநாவுக்கரசர் |
| பொ | | |
| பொன்னம்பூம் கழிக் கானல் | 262 | சம்பந்தர் |
| பொன்னார் மேனியனே | 322 | சுந்தரர் |
| பொன்னுளவார் சடை | 91 | திருநாவுக்கரசர் |
| ம | | |
| மட்டிட்ட புன்னை | 237 | சம்பந்தர் |
| மடையில் வாளை | 251 | சம்பந்தர் |
| மத்த யானை | 325 | சுந்தரர் |
| மந்திரம் ஒன்றறியேன் | 290 | சுந்தரர் |
| மற்றுப் பற்றெனக்கு | 304 | சுந்தரர் |
| மறிசேர் கையினனே | 332 | சுந்தரர் |
| மறையானை | 230 | சம்பந்தர் |
| மனத் தகத்தான் | 55 | திருநாவுக்கரசர் |
| மனிதர்காள் இங்கே | 96 | திருநாவுக்கரசர் |
| மா | | |
| மாசில் வீணையும் | 70 | திருநாவுக்கரசர் |
| மி | | |
| மிக்கானைக் குறை | 148 | திருநாவுக்கரசர் |

| பாட்டு | பக்கம் எண் | ஆசிரியர் |
|---|---|---|
| மு | | |
| முடிகொண்ட மத்தமும் | 215 | திருநாவுக்கரசர் |
| முந்தி எழும் | 279 | சுந்தரர் |
| முன்னம் அவனுடைய | 205 | திருநாவுக்கரசர் |
| மெ | | |
| மெய்த்தவன் காண் | 84 | திருநாவுக்கரசர் |
| மை | | |
| மைப்படிந்த கண்ணாளும் | 190 | திருநாவுக்கரசர் |
| மையார் கண்டத்தினாய் | 285 | சுந்தரர் |
| வ | | |
| வந்து கேண்மின் | 109 | திருநாவுக்கரசர் |
| வந்து சொல்லுமின் | 338 | சுந்தரர் |
| வா | | |
| வாழ்த்தவாயும் | 183 | திருநாவுக்கரசர் |
| வானம் சேர்மதி | 131 | திருநாவுக்கரசர் |
| வானுடையான் | 274 | சுந்தரர் |
| வி | | |
| விண்ணில் மாமதி சூடி | 298 | சுந்தரர் |
| விறகில்த் தீயினன் | 81 | திருநாவுக்கரசர் |
| வெ | | |
| வெள்ள நீர்ச்சடை | 99 | திருநாவுக்கரசர் |
| வெள்ளம் உள்ள | 185 | திருநாவுக்கரசர் |
| வே | | |
| வேதத்தில் உள்ளது | 242 | சம்பந்தர் |
| வேந்தாகி | 228 | சம்பந்தர் |